Die Vier E v a n g e l i e n

T a m u l i s c h

gedruckt in Tranquebar

mit Buchstaben
in Deutschland gegossen.

உலக
ரட்சகராகிய யேசுகிறிஸ்து
உண்டுபண்ணின

புதுஉடன்படிக்கை

யின்

ஆகமங்கள்

இதிலே

யேசுவினுடைய அப்போஸ்தலரு
டையநடபடிகளும், இவர்கள
அந்தந்த சபையாருக்கெழுதி
ய நிருபங்களும்,
யோவானுக்குண்டான ரகசிய
அறிவிப்பும் அடங்கியிருக்குது.

Christian Christopher: Eilye
födt. i Sÿhn i Danmark d. 10 Aug: 17..
Kaldet til Lærer ved danske Mission i
Trannebar 13de Septbr: 1828. —

இது

கிறிஸ்துபிறந்து ௲௮௱. [illegible] தரங்
கம்பாடியிலே நாலாம் விசை அச்சடிக்கப்பட்டது.

உமருசெயபசிஷப அப்போஸ்த தலருடைய நடபடிகள்.

௧. அதிகாரம்.

இதில. ௩. காரியங்களடங்கியிருக்குது.

௧. நேசுவேசாசமத்தையெழுதின லூக்காசுவிசேஷ கனுடைய பிரசுவுரை. ௧. ௨.

௨. கிறிஸ்துபரமண்டலத்துக்கேறின சேதி. ௩ — ௰௪.

௩. மத்தியா அப்போஸ்தலனானது. ௰௫ — ௨௬

தெயோப்பிலுவே யேசுவானவர் செய்யவும் உபதே சிக்கவுந் தொடங்கினதெல்லாத்தின் பேரில முதலாம் புஸ்தகத்தை யெழுதினேன்,

௨. தாந்தெரிந்துகொண்ட அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவியினாலே கட்டளைபண்ணினபின்பு ஏறெடுத்துக்கொள்ளப்பட்ட நாள்மட்டுந்தானே.

௩. அல்லாமல அவர் பாடுபட்டபின்பு அவர்களுக்கு மெய்மெய்யென்று பல அடையாளங்களினாலே உயிரோடிருக்கிறவராகத் தம்மைக்காட்டி நாற்பது நாளாக அவர்களுக்குத் தெரிசனையாகி * பராபரனுடைய ராச்சியத்துக்கடுத்தவைகளைச் சொன்னார்.

* லூக். ௰௭: ௨௰. ௨௧.

௪. பின்பு அவர் அவர்களைக் கூட்டி யெருசலேமை விட்டுப்போகாமல * நம்மாலே கேட்ட பிதாவின் வாக்குத்தத்தத்துக்குக் காத்திருக்கவேணுமென் றவர்களுக்குக் கற்பித்தார்.

* யோவா. ௰௪: ௰௬. ௰௫: ௨௬.

௫. அதேதென்றால * யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் பண்ணிவித்தான் நீங்களோ இந்நாள் முதலாய் அநேக நாட்களுக்குப் பின்பல்ல பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பண்ணப்படுவீர்களென்றார்.

* ௰௧: அதி. ௰௬. மத்தே. ௩: ௰௧.

௬. ஆகையால் கூடிவந்தவர்கள் அவரைப் பார்த்து ஆண்டவரே இக்காலத்திலேயோ * இஸ்றவேலுக்கு ராச்சியத்தை யெடுத்து நிறுத்துகிறீரென்று சொல்லிக் கேட்டார்கள். * லூக். ௨௪: ௨௧.

௭. அதற்கவர்: பிதாவானவர் தம்முடைய சுயவல்லமையினாலே ஏற்படுத்தின காலங்களையும் சமயங்களையும் அறிகிறது உங்களுக்கடுத்ததல்ல.

௮. உங்கள்மேலே * பரிசுத்த ஆவி வந்தபோது நீங்கள் வேண்டிய பெலத்தைப் பெறுவீர்கள்; பின்பு எருசலேமிலேயும் யூதேயா எங்கும் சமாரியாவிலேயும் பூமியின் கடைசிபரியந்தமும் நீங்கள் எனக்கு ** சாட்சிகளாயிருப்பீர்களென்றார். * ௨: அதி. ௨. ** யோவா. ௰௫: ௨௭.

௯. அவர் இதுகளைச் சொன்னபின் * அவர்கள் காணவே எடுத்துக்கொள்ளப்பட்டார்: ஒருமேகம் அவரை அவர்கள் கண்களை விட்டு எடுத்துக்கொண்டது.

* லூக. ௨௪: ௫௧.

௰. அவர் போகையிலே அவர்கள் பரமண்டலத்தைத் அண்ணாந்து பார்த்திருக்கும்போது இதோ வெண்வஸ்திரந்தரித்த இரண்டுபேர் அவர்களண்டையிலே நின்றார்கள்.

௰௧. அவர்களுக்குச் சொன்னது: கலிலேயா மனுஷரே! நீங்கள் பரமண்டலங்களை நோக்கிப் பார்த்து நிற்பானென்ன? உங்களை விட்டுப் பரமண்டலத்துக்கேற்றெடுத்துக்கொள்ளப்பட்ட இந்த யேசுவே பரமண்டலத்துக்குப் போகிறதை நீங்கள் எப்படிக் கண்டீர்களோ * அந்தப் பிரகாரமாக அவர் வருவாரென்றார்கள்.

* லூக. ௨௧: ௨௭.

௰௨. அப்போ * ஒலிவமலையென்னப்பட்ட மலையைவிட்டு எருசலேமுக்குத் திரும்பினார்கள் அது எருசலேமுக்கு அருகாக ஒரு சாபத்து வழித்தூரமாயிருக்கிறது.

* லூக. ௨௪: ௫௦—௫௨.

௰௩. அவர்கள் உள்ளே பிரவேசித்தபோது மேலவீட்டுக்கேறினார்கள் அங்கே * பேதுருவும் யாக்கோபும் யோவானும் அந்திரேயாவும் பிலிப்பும் தோமாவும் பற்தொலொமேயும் மத்தேயும் அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபும் சீமோன் செலோத்தேயும் யாக்கோபின் சகோதரனாகிய யூதாவும் தரித்திருந்தார்கள். * மத்தே. ௰: ௨.

௰௪. இவர்களெல்லாரும் ஸ்திரீகளோடும் யேசுவின் மாதா மரியாளோடும் அவர் சகோதரர்களோடும் * ஒருமனப்பட்டு செபத்திலும் வேண்டுதலிலும் இடைவிடாமல் நடத்தையாயிருந்தார்கள்.

* ௨: அதி. ௧. ௪௨.

௰௫. ஏகமாகக்கூடியிருந்த சனமோ நூற்றிருபது பேர்போலிருந்தார்கள் அந்நாட்களிலே பேதுரு சீஷர்கள் நடுவே எழுந்திருந்து சொன்னது:

௰௬. சகோதரரான பேர்களே யேசுவைப்பிடித்தவர்களுக்கு வழிகாட்டியான யூதாவின் பேரிலே பரிசுத்த ஆவியானவர் தாவீதின் வாக்கினாலே முன்சொன்ன * இந்த வாசகம் நிறைவேற வேண்டியிருந்தது.

* சங்கீ. ௪௧. ௰. ௯.

௰௭. அதே

௰௭. அதேதென்றால் * அவன் எங்களோடேகூட எண்ணப்பட்டு இந்த ஊழியத்தின் பேறுபெற்றிருந்தான். * லூக். ௬: ௰௬.

௰௮. இவன் துரோகத்தினுடைய கூலியினாலே நிலத்தைச் சம்பாதித்து * குப்புற விழுந்து நடுவே வெடிப்புண்டான், அவனுடைய குடல்களெல்லாஞ் சிந்திப்போச்சுது. * மத்தே. ௨௭: ௫. ௨ சாமு. ௰௭: ௨௩.

௰௯. அந்த நிலந்தாங்கள் நாட்டுமொழியிலே * இரத்தநிலமென்று அருத்தங்கொள்ளும் அக்கெல்தமா என்னப்படத்தக்கதாய், அது யெருசலேமிலே குடியிருக்கிற எல்லாருக்குந் தெரியவாச்சுது.

* மத்தே. ௨௭: ௭. ௮. ௯.

௨௰. ஏனென்றாற் சங்கீதபுஸ்தகத்திலே * அவனுடைய வாசஸ்தலம் பாழாய்க் குடியிருக்க ஒருவனும் இல்லாமற்போவதாக, ** அவனுடைய கண்காணிப்பை வேறொருத்தன் எடுத்துக்கொள்ளக் கடவானென்றும் எழுதியிருக்குது.

* சங்கீ. ௬௯: ௨௬. ** ௱௯: ௮.

௨௧. ஆகையினாலே கர்த்தராகிய யேசு யோவானுடைய ஸ்நானந்துவக்கித் தாமெங்களைவிட்டு ஏறெடுத்துக்கொள்ளப்பட்ட நாள்மட்டாக எங்களிடத்திலே உட்பட்டுப் போய்வந்த காலத்திலெல்லாம்

௨௨. எங்களோடேகூடச் சஞ்சரித்த இந்த மனுஷர்களிலே ஒருத்தன் எங்களோடேகூட அவருடைய உயிர்த்தெழுதலுக்குச் சாட்சிக்காரனாக வேணுமென்றான்.

௨௩. அப்போ ரெண்டுபேராகிய யுஸ்து என்கிற மறுநாமமுள்ள பர்சபா என்னப்பட்ட யோசேப்பையும் மத்தியாவையும் நிறுத்தினார்கள்.

௨௪. பின்பவர்கள் ஜெபம்பண்ணிச் சொன்னது: * எல்லாருடைய இருதயங்களையும் அறிந்தோரே. தேவரீர் இவ்விருவரிலே தெரிந்துகொண்டொருத்தனைக் காண்பியும். * சங்கீ. ௭: ௰.

௨௫. யூதாஸ் தன் சொந்த இடத்துக்குச் செல்ல அவன் விட்டுப்போன ஊழியமாகிய அப்போஸ்தலப் பட்டத்தின் பேறை இவன் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகக் காட்டும்.

௨௬. * அப்போ அவர்கள் பேரிலே சீட்டுகளைப் போட்டதாம் மத்தியாவின்பேரிலே விழுந்தது; அவன் பதினொரு அப்போஸ்தலர்களுடைய கூட்டத்துக்குள்ளே சேர்த்துக்கொள்ளப்பட்டான். * வாக்கி. ௰௬: ௩௩.

௨. அதிகாரம்.

இதிலே ௩. காரியங்களடங்கியிருக்குது.

௧. பரிசுத்தஆவி சீஷர்மேலே இறங்கினது. ௧—௰௩.
௨. பேதுருவுடைய பிரசங்கம். ௰௪—௩௬.
௩. இந்தப் பிரசங்கத்தினாலே உண்டான பலன்.
௩௭—௪௭.

பின்னையும் பெந்தெகொஸ்தே நாள் நிறைவேறுகையில் எல்லாரும் * ஒருமனப்பட்டு ஏகமாக்கூடியிருந்தார்கள். * ௧: அதி. ௰௪.

௨. அப்போது அடிக்கக் கொண்டுவருகிற பெலத்த காத்தைப்போல உசட்டிலே வானத்திலிருந்தொரு முழக்கமுண்டாகி யவர்களிருந்த வீட்டை முழுதும் நிரப்பிற்று.

௩. இதன்றியும் அக்கினிபோல பகிர்ந்த நாக்குகள் அவர்களுக்குக் காணப்பட்டு அவர்களில் ஒவ்வொருத்தன் மேலே வந்திருந்தது.

௪. அப்படி * எல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்கு உரைக்கக் கட்டளையிட்டபடி ** மறுபாஷைகளிலே பேசத்துவக்கினார்கள். * ௧: அதி. ௫. ௰: அதி. ௪௪ ௰௧: அதி. ௰௫. ௰௯: அதி. ௬. ௧கொரி. ௰௨: ௰. ** மாற். ௰௬: ௰௭.

௫. ஆனால் வானத்தின் கீழிருக்கிற சகல சாதியிலுமுள்ள * பயபத்தியான யூதர்கள் எருசலேமிலே குடியிருந்தார்கள். * ௰௩: அதி. ௨௬.

௬. இந்தச் சத்தமுண்டானபோது திரளாய்க்கூடி வந்து கலங்கித்தது; ஏனெனில் ஒவ்வொருத்தனவர்களைத் தன்தன் பாஷையிலே பேசக்கேட்டார்கள்.

௭. ஆனால் எல்லாரும் விஸ்மயித்து ஆச்சரியப்பட்டு ஒருவரோடொருவர் சொன்னதாவது: இதோ பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயராயிருக்கிறார்களல்லவோ.

௮. பின்னெப்படி அவனவன் நாம் பிறந்த நம்முடைய பாஷையிலே பேசுகிறதைக் கேட்கிறோம்.

௯. பார்த்தரும், மேதரும், எலாமீத்தரும், மெசொப்பொத்தாமியாவிலும், யூதேயாவிலும், கப்பதோசியாவிலும், பொந்துவிலும், ஆசியாவிலும்,

௰. பிரிகியாவிலும், பம்பிலியாவிலும், எகிப்த்திலும், சிரேனே பக்கத்திலிருக்கும் லீபியாவின் புறங்களிலும் குடியிருக்கிறவர்களும் ரோமாபுரி பரதேசத்தாரும் யூதரும் யூதமார்க்கத்தமைந்தவர்களும்,

௰௧. கிரேத்தரும் அறபியருமாகிய நாம் அவர்கள் நம்முடைய பாஷைகளிலே பராபரனுடைய மகத்துவங்களைப் பேசக்கேட்கிறோமென்றார்கள்.

௰௨. அப்படி எல்லாரும் விஸ்மயித்து சந்தேகப்பட்டு ஒருத்தரோடொருத்தன் இதென்னமாயப்போமோவென்றார்கள்.

௰௩. வேறேபேர்களோவென்றால் மதுபானத்தினாலே நிறையப்பட்டிருக்கிறார்களென்று நகைத்தார்கள்.

௰௪. ஆனால் பேதுரு பதினொருவரோடுங்கூட நின்றுகொண்டு தன் சத்தத்தை உயர்த்தி அவர்களுக்கு உரைத்ததாவது: யூதரான பேர்களே எருசலேமிலே குடியிருக்கிற சகலரே இது உங்களுக்குத் தெரிந்திருக்கக்கட

வர்களானவர்களுக்குள்ளாக காது கொடுத்துக் கேளுங்
கோள்.

௧௫. ஏனென்னில் நீங்கள் யோசிக்கிறதுபோலே
இவர்கள் வெறியாயிருக்கவில்லை ஏனென்னிலப்பக
லின் மூன்றாம் வேளையாயிருக்குது.

௧௬. இது யோவேலென்கிற * தீர்க்கதரிசி
யினாலே சொல்லப்பட்டது. * யோவேல். ௩: ௧—௫.

௧௭. பராபரன் சொல்லுகிறதாவது: கடைசிநாள்
களிலே வருகுதென்னவென்றால் நாமெல்லா மாங்கிஷத்தின்
மேலும் நம்முடைய ஆவியை யூற்றுவோம் அப்போ
உங்கள் குமாரர்களும் * உங்கள் குமாரத்திகளுந் தீர்க்க
தரிசனஞ் சொல்லுவார்கள் உங்கள் வாலிபர்
கள் தரிசனங்களைக் காண்பார்கள் உங்கள் மூப்பானவர்
கள் சொப்பனங்களைச் சொப்பனிப்பார்கள்.

* ௨௧: அதி. ௯.

௧௮. அல்லாமல் நம்முடைய ஊழியக்காரர் மேலும்
நம்முடைய ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்
களிலே நம்முடைய ஆவியை யூற்றுவோம் அப்போ தீர்க்க
தரிசனஞ் சொல்லுவார்கள்.

௧௯. உயரவானத்திலே அதிசயங்களையுங் கீழே பூமி
யிலே இரத்தமும் அக்கினியும் புகைக்காடுமான அடை
யாளங்களையுங் காட்டுவோம்.

௨௰. கர்த்தருடைய பெரியதும் பிரகாசமுமான
நாள் வருமுன்னே * சூரியன் இருளாகவுஞ் சந்திரன்
இரத்தமாகவும் மாறப்படும். * மத்தே. ௨௪: ௨௯.

௨௧. அப்போதாவதேதென்றால் * கர்த்தருடைய
நாமத்தை நோக்கிக் கூப்பிட்டவனெவனோ அவன்
இரட்சிக்கப்படுவானென்றான். * றோமர். ௰: ௰௩.

௨௨. இஸ்றயேலித்தாராகிய பேர்களே இந்த வச
னங்களைக் கேளுங்கோள் நீங்கள் தாமறிந்திருக்
கிறபோலே * யேசு நசரேயனாயிருந்தாரே பரா
பரன் அவரைக் கொண்டு உங்களுக்குள்ளே நடப்பித்த
வல்லமைகளினாலும் அதிசயங்களினாலும் அடையா
ளங்களினாலும் உங்களிடமாகப் பராபரனாலே ருசுப்பிக்
கப்பட்ட மனுஷனாயிருந்தவர். * ௰: அதி. ௩௮.

௨௩. பராபரன் * தீர்மானித்த ஆலோசனையின்படி
யேயும் முன்னறிந்தபடியேயும் ஒப்புக்கொடுக்
கப்பட்டவரைப் பிடித்து அக்கிரமக்காரருடைய கைகளி
னாலே ஆணிகடாவிக் கொன்றுபோட்டீர்கள்.

* லூக். ௨௨: ௨௨.

௨௪. அவரை * பராபரன் மரணத்தின் வேதனைகளை
குலைத்து எழுப்பினார் ஏனென்னில் அவரதினாலே பிடிக்
கப்படக்கூடாததாயிருந்தது. * ௩: அதி. ௰௫.

௨௫. அதேதென்னில் * தாவீது அவரைக் குறித்துச்
சொல்லுகிறதாவது கர்த்தரை எப்போதும் என்னுடைய
முன்பாக நோக்கிக்கொண்டிருக்கிறேன் ஏனென்னில்
நான் அசைக்கப்படாதபடிக்கு அவர் என் வலதுபாரிசத்தி
லேயிருக்கிறார். * சங்கீதம். ௰௬: ௮.

௨௬. அதுகொண்டு என்னிருதயம் மகிழ்ச்சியாகி என் நாவு களிகூர்ந்தது; அன்றியும் என் மாம்சமும் நம்பிக்கையாய் வாசம்பண்ணும்.

௨௭. ஏனென்றால் என் ஆத்துமாவைப் பாதாளத்திலே கைவிடமாட்டீர் உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டக் கொடுக்கவுமாட்டீர்.

௨௮. சீவனுடைய வழிகளை எனக்கு அறிவித்தீர் உம்முடைய சமுகத்திலே மகிழ்ச்சியினாலே என்னை நிரப்புவீர் என்கிறான்.

௨௯. சகோதரரான பேர்களே கோத்திரத் தலைவனாகிய தாவீதைக் குறித்து நான் உங்களுடனே தயிரியமாய்ச் சொல்ல உத்தரவுண்டாவதாக அவன் இறந்துபோனான் * மரணமும் அடைந்தான் அடக்கம்பண்ணப்பட்டான் அவன் கல்லறையும் இந்நாள்வரைக்கும் நம்மிடத்திலேயிருக்குது. * ௰௩: அதி. ௩௬.

௧. ராசா. ௨: ௰.

௩௰. பின்பு அவன் தீர்க்கதரிசியானபடியினாலும் அவனுக்குப் பராபரன் ஆணையினாலே * அவன் ஆசனத்திலே உட்காரத்தக்கதாக * அவனுடைய இடுப்பின் கனியிலே மாம்சத்தின்படியே கிறிஸ்துவை யெழும்பப்பண்ணுவேனென்று சத்தியம்பண்ணினதையறிந்தபடியினாலும் * ௨. சாமு. ௭: ௰௨. ௰௩.

சங்கீதம். ௮௯: ௩. ௫.

௩௧. அவன் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து * அவருடைய ஆத்துமா பாதாளத்திலே கைவிடப்படுவதில்லையென்றும் அவர் மாம்சம் அழிவைக் காண்பதில்லையென்றும் முன்னறிந்து பேசினான் * ௰௩: அதி. ௩௫.

௩௨. இந்த யேசுவை * பராபரன் எழுப்பினார் அதற்கு நாங்களெல்லாரும் சாட்சிக்காரராயிருக்கிறோம். * ௩: அதி. ௰௫.

௩௩. பின்பு அவர் பராபரனுடைய வலதுகையினாலே * உயர்த்தப்பட்டுப் பரிசுத்த ஆவியின் வாக்குத்தத்தத்தைப் பிதாவினாலே அடைந்து நீங்கள் இப்போது காண்கிறதுங் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார். * ௫: அதி. ௩௧. பிலிப். ௨: ௯. ௰௪.

௩௪. ஏனென்றால் தாவீது பரமண்டலங்களுக்கு ஏறிப்போகவில்லை ஆகிலும் அவன் சொல்லுகிறது கர்த்தர் நம்முடைய கர்த்தருடனே நம்முடைய வலதுபாரிசத்திலே உட்காரும். * மத்தே. ௨௨: ௪௪.

௩௫. நாம் உம்முடைய சத்துருக்களை உம்முடைய பாதங்களுக்குப் படியாகப்போடுமட்டுமென்றாரென்னார்.

௩௬. ஆகையினாலே நீங்கள் சிலுவையிலே அறைந்த இந்த யேசுவையே பராபரன் கர்த்தாவாகவுங் கிறிஸ்துவாகவும் பண்ணினாரென்று இஸ்ரவேலின் வீட்டாரெல்லாம் நிச்சயமாய் அறியக்கடவதென்றான்.

௩௭. அவர்கள் இதைக் கேட்டபோது இருதயத்திலே குத்தப்பட்டுப் பேதுருவையும் மற்ற அப்

போஸ

போஸ்தலருடனே யுத சகோதரராகிய புருஷர்களே *
நாங்கள் என்ன செய்யவேண்டுமென்றார்கள்.

* ௯: அதி. ௬.

௩௮ அதற்குப்பேதுரு அவர்களுடனே சொன்னது *
பாவப்பொறுதிக்கென்று மனஸ்தாபப்பட்டு உங்களில்
அவனவன் யேசுக்கிறிஸ்துவினுடைய நாமத்தினா
லே ஞானஸ்நானம் பெறக்கடவான் அப்போ
பரிசுத்த ஆவியின் வரப்பிரசாதத்தை அடைவீர்கள்.

* மத்தே. ௩: ௨.

௩௯ ஏனென்னில் இவ்வாக்குப்பாடு உங்களுக்கும்
உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய பராபரனாகிய
கர்த்தா * வரவழைக்கப்போற தூரத்திலுள்ள யாவ
ருக்குமுண்டானதென்றான். * யோவா. ௰: ௰௬.

௪௰. வேறே அதிக வார்த்தைகளாலும் இந்த மாறு
பாட்டான சந்ததியைவிட்டு ரட்சிக்கப்படுங்கோ
ளென்று சொல்லிச் சாட்சியிட்டுப் புத்திசொன்னான்.

௪௧. ஆகையினாலே அவனுடைய வார்த்தையைச் சந்தோஷ
மாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம்
பெற்றார்கள் ஏறக்குறைய மூவாயிரம் ஆத்துமாக்கள்
அந்தநாளிலே சேர்த்துக்கொள்ளப்பட்டது.

௪௨. அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்
திலும் அன்னியோன்னியத்திலும் அப்பம்பிட்கிறதிலும்
செபங்களிலும் நிலைவிடாமல் உறுதியாயிருந்
தார்கள்.

௪௩. ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் பயமு
ண்டாச்சுது அநேகம் அதிசயங்களும் அடையாளங்
களும் அப்போஸ்தலராலே உண்டாச்சுது.

௪௪. ஆனால் விசுவாசிக்கிறவர்கள் எல்லாரும் ஏக
மாகக்கூடியிருந்து * எல்லாத்தையும் பொதுவாய்
அனுபவித்து; * ௪: அதி. ௩௨.

௪௫. ஆஸ்திகளையும் உடைமைகளையும் விற்றுப்
பண்ணி அதுகளை எல்லாருக்கும் அவனவனுக்குத்
தேவையானதுக்குத்தக்கதாய் பங்கிட்டுக்கொடுத்
தார்கள்.

௪௬. அவர்கள் ஒருமனப்பட்டு அனுதினமுந் தேவா
லயத்திலே நடந்தவர்களாயிருந்து வீடுகளில் அப்பம்
பிட்டு அகளிப்புடனேயும் இருதயத்தின் கபடமில்லாக்
குணத்துடனேயும் போசனங்கொண்டார்கள்.

௪௭. பராபரனைத் துதித்துக்கொண்டு எல்லாச்சனத்
தினிடத்திலுங் கிருபையடைந்திருந்தார்கள். ஆனால் *
கர்த்தா அனுதினமும் ரட்சிக்கப்படுவோரைத் திருச்சபை
யோடே சேர்த்துக்கொண்டார்.

* ௪: அதி. ௪. ௫: அதி. ௰௪. ௰௧: அதி. ௨௧.

௩. அதிகாரம்.

பேதுரு பிறவிச்சப்பாணி ஒருத்தனுக்கு ஸ்வஸ்தப்படுத்தின அதிசயம் அடங்கியிருக்குது. அதிகாரமுழுதும்.

ஆனால் ஜெபவேளையாகிய ஒன்பதாந் தாசுவேளையிலே பேதுருவும் யோவானும் ஒருமித்துத் தேவாலயத்துக்கு ஏறிப்போனார்கள்.

௨. அப்போது தன் தாயின் கெற்பத்திலிருந்து * சப்பாணியாயிருக்கிற ஒரு மனுஷனைச் சுமந்துகொண்டு வரப்பட்டான்; அவன் தேவாலயத்துக்குள்ளே பிரவேசிக்கிறவர்களிடத்திலே பிச்சைகேட்கிறதுக்காக அவனை நித்தமும் அலங்காரவாசல் என்னப்படுகிற தேவாலயவாசலண்டையிலே வைப்பார்கள்.

* ௪: அதி. ௭. ௰௪: அதி. ௮.

௩. அவன் தேவாலயத்துக்குள்ளே பிரவேசிக்கப்போகிற பேதுருவையும் யோவானையுங் கண்டு பிச்சையேற்கக் கேட்டான்.

௪. அப்பொழுது பேதுரு யோவானுடனே கூட அவன் மேலே கண்ணோக்க எங்களையேறிட்டுப்பாரென்றான்.

௫. அவன் அவர்களிடத்திலே ஏதாகிலும் வாங்கக் காத்து அவர்களைக் கவனித்துப் பார்த்தான்.

௬. பேதுருவோ வெள்ளியும் பொன்னுமெனக்கில்லையானாலும் எனக்குண்டானதை உனக்குத் தாரேன் நசரேயனாகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே * எழுந்து நடவென்று சொன்னான்.

* ௰௪: அதி. ௬. ௰.

௭. அப்போது * அவனை வலதுகையினாலே பிடித்துத் தூக்கிவிட்டான் உடனே அவனுடைய காலுகளுங் கணுக்கால்களும் பெலன் கொண்டது * மத்தே. ௮: ௰௫.

௬: அதி. ௨௫.

௮. அல்லாமலும் அவன் * குதித்தெழும்பிநின்று நடந்து அவர்களுடனே கூடத் தேவாலயத்துக்குள்ளே பிரவேசித்து நடந்து குதித்துச் சர்வேசுரனைத் துதித்துக்கொண்டான். * ஏசயி. ௩௫: ௬.

௯. சனமெல்லாம் அவன் நடக்கவும் பராபரனைத் துதிக்கவும் கண்டு,

௰. தேவாலயத்தின் அலங்காரவாசலண்டையிலே பிச்சைக்கு உட்கார்ந்திருந்தவன் இவன்தானென்றவனையறிந்து அவனுக்கு வந்த சம்பவிக்கினாலாகத்தக்க பிரமிப்பும் விஸ்மயமும் நிறையப்பட்டார்கள்.

௰௧. சொஸ்தமடைந்த சப்பாணி யோவானையும் பேதுருவையும் விடாமலிருக்கையில் சனமெல்லாமவர்களண்டைக்குச் சாலோமோனுடையதென்னப்படுகிற அந்த மண்டபத்திலே திகைத்துப்போய் ஓடிவந்து கூடிக்கொண்டது. * ௫: அதி. ௰௨.

௰௨. பேதுரு அதைக்கண்டு சனத்துடனே மொழிந்த

தாவது

ளாவது இஸ்ரவேலத்தாராகிய பேர்களே நீங்கள் இதற்கு ஏன் ஆச்சரியப்படுகிறீர்கள் அல்லது நாங்கள் சுயவல்லமையினாலேயாகிலும் பக்தியினாலேயாகிலும் அவனை நடக்கப்பண்ணினோமென்கிறதாய நீங்கள் எங்கள்மேலே கண்ணோக்கிப்பார்க்கிறதென்ன.

௰௩. * ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபுடைய பராபரனும் நம்முடைய பிதாக்களுடைய பராபரனும் தம்முடைய பிள்ளையாகிய யேசுவை மகிமைப்படுத்தினார் அவரை நீங்கள் ஒப்புக்கொடுத்துப் பிலாத்து அவரை விடுதலைபண்ணத் தீர்மானிக்கும்போது அவனுக்கு முன்பாக அவரை மறுதலித்தீர்கள். * ௨. மோசே. ௩: ௬. ௰௫.

அப்போஸ். ௫: ௩௰.

௰௪. நீங்களோ * பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை மறுதலித்துக் கொலைபாதகனான ஒரு மனுஷனை உங்களுக்கு விடுவித்துவிடவேண்டுமென்று மன்றாடினீர்கள்.

* மத்தே. ௨௭: ௨௰. ௨௬.

௰௫. ஜீவனுடைய பிரபுவைக் கொன்றுபோட்டீர்கள் அவரைப் பராபரன் மரித்தோரிலிருந்தெழுப்பினார் அதற்கு நாங்கள் சாட்சிக்காராயிருக்கிறோம்.

* ௨: அதி. ௨௪. ௩௨. ௪: அதி. ௰. ௰: அதி. ௪௰.

௰௩: அதி. ௩௰. ௩௪. ௰௭: அதி. ௩௧.

௰௬. அவர் நாமத்தைப் பற்றின விசுவாசத்தினாலே அவருடைய நாமமானது நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது அவராலேயுண்டான விசுவாசமானது அவனுக்கிந்தச் சவுக்கியத்தை உங்களெல்லாருக்கு முன்பாகக் கொடுத்தது.

௰௭. இப்போதும் சகோதரரே உங்கள் தலைவரைப் போலே நீங்களும் * அறியாமையினாலே அதைச் செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன். * ௰௩: அதி. ௨௭.

௧. கொரிந். ௨: ௮.

௰௮. பராபரனோவெனில் * தம்முடைய தீர்க்கதரிசிகளெல்லாரின் வாக்கினாலே கிறிஸ்து பாடுபடுவாரென்று முன் அறிவித்ததுகளை இப்படி நிறைவேற்றினார். * லூக். ௨௪: ௪௪.

௰௯. ஆனபடியினாலே உங்கள் பாவங்கள் நிவாரணமாய்ப் பண்ணப்படுகிறதற்கும் கர்த்தருடைய சமுகத்தினின்று குளிர்த்தியாகுங்காலங்கள் வருகிறதற்கும் நீங்கள் * குணப்பட்டு மனந்திரும்புங்கோள். * அப்போ. ௨: ௩௮.

௨௰. அவர் உங்களுக்கு முன்பிரசங்கிக்கப்பட்ட யேசுகிறிஸ்துவையனுப்புகிறதற்குமாகத்தானே.

௨௧. பராபரன் பூர்வத்தொட்டுத் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாரின் வாக்கினாலே உரைத்ததுகளெல்லாவற்றையும் சீர்ப்படுத்துங் காலங்கள்மட்டாக அவர் பரமண்டலத்திலே தங்கிக்கொள்ளவேண்டியது.

௨௨. ஏனென்றால் மோசே பிதாக்களோடே: * உங்கள் பராபரனாகிய கர்த்தர் உங்கள் சகோதரரில் உங்க

ளுக்கென்னைப்போலொத்த தீர்க்கதரிசியை யெழுப்புவார் அவர் உங்களுடனே பேசப்போறதெல்லாத்தின்படியே யவரைக் கேட்பீர்களாக.

* ௫. மோசே. ௰௮: ௰௫. ௴.

௨௩. அப்போதாவதென்னவென்றால் அந்தத் தீர்க்கதரிசி சொல்லுப்படிக் கேளாதாந்த ஆத்துமா வெகுஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுமென்று சொன்னார்.

௨௪. இன்னஞ் சாமுவேல் முதற்கொண்டு பாரம்பரையாயிருந்த எத்தனை தீர்க்கதரிசிகள் பேசினார்களோ அவர்களெல்லாரும் இந்தநாட்களை முன்னறிவித்தார்கள்.

௨௫. நீங்களோ தீர்க்கதரிசிகளுக்கும் பராபரன் எங்களுடைய பிதாக்களுடனே பண்ணின உடன்படிக்கைக்கும் பிள்ளைகளாயிருக்கிறீர்கள் அவர் ஆபிரகாமுடனே சொன்னது: * உன் வித்திலே பூமியிலுள்ள வங்கிஷங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படுமென்றார்.

* ௧. மோசே. ௰௨: ௩. ௴.

௨௬. * உங்களுக்கே முந்தப் பராபரன் தம்முடைய பிள்ளையாகிய யேசுவையெழுப்பி உங்களில் அவனவன் தங்கள் பொல்லாங்குகளை விட்டுத் திரும்புகையிலே உங்களை ஆசீர்வதிக்கிறவராக அவரையனுப்பினாரென்றான். * ௰௩: ௪௬.

௪. அதிகாரம்.

இதிலே ௩. காரியங்களடங்கியிருக்குது.

௧. பேதுருவும் யோவானும் பிடிக்கப்பட்டு யூதர்சங்கத்திலே நியாயங்கேட்கப்பட்டது. ௧—௨௨.

௨. விசுவாசிகளின ஜெபமும் பண்ணியமைந்திடம். ௨௩—௩௧.

௩. விசுவாசிகளுடைய சபையின் வடிவப்பமான உவாச சீர். ௩௨—௩௭.

ஆனால் அவர்கள் சனத்துடனே பேசிக்கொண்டிருக்கையிலே ஆசாரியர்களும் தேவாலயத்துச் சேர்வைகாரனும் சதுசேயரும் அவர்கள் மேலே வந்தார்கள்.

௨. அவர்கள் சனத்தை உபதேசிக்கிறதினாலேயும் யேசுவின் இடத்திலே மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததையுண்டென்று அறிவிக்கிறதினாலேயும் மனவடிவாயிருந்தார்கள்.

௩. அவர்கள் மேலே * கைகளைப் போட்டு மறுநாள் மட்டுங் காவலிலே வைத்தார்கள் ஏனெனில் அது சாயுங்காலமாயிருந்தது. * ௫: அதி. ௰௮.

௪. * ஆனால் வசனத்தைக் கேட்டவர்களில் அனேகர் விசுவாசமாயப்போனார்கள் அந்த ஆண் பிள்ளைகளுடைய தொகை ஐயாயிரம் பேரோளுண்டாயிருந்தது.

* ௨: அதி. ௪௧. ௴.

௫. மறுநாளிலே சம்பவித்ததேதென்றால் அவர்களு
டைய அதிகாரிகளும் மூப்பரானவர்களும் வேதபாரி
கரும்

௬. பிறகு ஆசாரியன் * அன்னாவும் காய்பாவும்
யோவானும் அலெக்சாந்தரும் பிரதான ஆசாரியவமி
சத்தார் யாவரும் யெருசலேமிலே கூடினார்கள்.

* லூக. ௩: ௨.

௭. அவர்களை நடுவே நிறுத்தி * நீங்கள் எந்த வல்ல
மையினாலே அல்லது எந்த நாமத்தினாலே இதைச் செய்
தீர்களென்று கேட்டார்கள்.

* மத்தே. ௨௧: ௨௩.

௮. அப்பொழுது பேதுரு பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்
பட்டு அவர்களை நோக்கி ஜனத்தின் தலை
வர்மாரே இஸ்ரவேலின் மூப்பரானவர்களே:

லூக. ௰௨: ௰௧.

௯. * நொந்தப் பிணியாளியான மனுஷனுக்குச் செய்யப்
பட்ட உபகாரத்துக்காக நாங்கள் இன்று அவனாலே
ஆரோக்கியமானானென்று நாங்கள் இன்று கேட்கப்
படுகிறபடியினாலே: யோவா. ௰: ௩௨.

௰. நீங்கள் சிலுவையில் அறைந்தவரும் * மரித்
தோரிலிருந்தெழுப்பின நசரேயனாகிய இயேசுகிறிஸ்து
வின் நாமத்தினாலேதானே இவன் உங்களுக்கு முன்பாகச்
சொஸ்தமாயிருக்கிறானென்று உங்களெல்லாருக்
கும் இஸ்ரவேல் ஜனத்துக்கெல்லாம் தெரிந்திருக்கக்
கடவது. * ௩: அதி. ௰௫. ஷ.

௰௧. சிற்பாசாரிகளாகிய உங்களாலே அற்பமாய்
எண்ணப்பட்ட கல்லாயிருந்து * கோடிக்கல்லான
வர் இவர்தானே. * மத்தே. ௨௧: ௪௨.

௰௨. வேறொருவனிடத்திலும் இரட்சிப்பில்லை
ஏனென்றால் நாங்கள் * இரட்சிக்கப்படவேணுமென்று
வானத்தின் கீழே மனுஷருக்குள்ளே கொடுக்கப்பட்ட வேறே
நாமமுமில்லையென்றான். * மத்தே. ௧: ௨௧.

௰௩. ஆனால் அவர்கள் பேதுருவுக்கும் யோவானுக்
குமுண்டான தைரியத்தைக் கண்டு அவர்கள் படிப்
பில்லாத மனுஷரும் கல்லாதவர்களுமாயிருக்கிறார்
களென்று அறிந்தபடியினாலே ஆச்சரியப்
பட்டார்கள் அவர்கள் இயேசுவோடே கூடயிருந்தார்க
ளென்றும் அறிந்திருந்தார்கள்.

௰௪. ஆனால் அவர்கள் குணமாக்கப்பட்ட மனுஷனை
யிவர்களண்டையிலே நிற்கக் கண்டபடியினாலே எதிர்ப்
பேச ஒன்றுமில்லாமற்போனார்கள்.

௰௫. அப்போ அவர்களைச் சங்கத்துக்குப் புறம்
பாகப் போகக் கட்டளையிட்டுத் தங்களுக்குள்ளே உசாவிக்
கொண்டு சொன்னதாவது:

௰௬. இந்த மனுஷரை * என்ன செய்வோம் அதேதென்
றால் அறியப்பட்ட அடையாளம் அவர்களாலே செய்
யப்பட்டதென்று யெருசலேமிலே குடியிருக்கிற அவர்
களெல்லாருக்கும் வெளியரங்கமாயிருக்கிறது அதை
நாம் மறுதலிக்கக் கூடாது. * யோவா. ௰௧: ௪௭.

௰௭. ஆகிலும்

௰௭. ஆகிலும் அது அதிகமாய்ச் சனத்துக்குள்ளே பர ந்து போகாதபடிக்கினிமேலவர்கள் ஆருடனேயும் இந்த நாமத்தினாலே பேசாமலிருக்க அவர்களைத் தாக்கி தையாய்ப் பயமுறுத்துவோமென்றார்கள்.

௰௮. அப்போ அவர்களையழைத்து யேசுவினுடைய நாமத் தினாலே பரிச்சேதமாய் உரைச்சாமலும் போதியா மலுமிருக்க அவர்களுக்குக் கற்பித்தார்கள்.

௰௯. ஆனாலே பேதுருவும் யோவானுமவர்களுக்குப் புறத்தியுத்தாரமாக ⁂ நாங்கள் பராபரனுக்குக் கீழ்ப் படிகிறதைப் பார்க்க உங்களுக்கதிகமாய்க் கீழ்ப் படிகிறது ஞாயமாயிருக்குதோவென்று நடுத்தீருங் கோள். ௫: அதி. ௨௯.

௨௰. ஏனென்னில் கண்டதுகளையுங் கேட்டதுகளை யும் நாங்கள் பேசாமலிருக்கக்கூடாதென்றார்கள்.

௨௧. ஆனாலவர்களை எப்படி ஆக்கினையிடுகிறது என்று சனத்தினிமித்தம் ஒன்றுங் காணாமல் அவர்க ளை அதிகமாய்ப் பயமுறுத்தி அனுப்பிவிட்டார்கள் ஏனென்னில் சம்பவித்ததுக்காக எல்லாரும் பரா பரனை மகிமைப்படுத்தினார்கள்.

௨௨. அந்தக் கெளுக்குணமாகத்தக்கதாய் இந்தப் புதுமை செய்யப்பட்ட மனுஷன் நாற்பது வயதுக்கதிக மாயிருந்தான்,

௨௩. அவர்களோவெனில் அனுப்பிவிடப்பட்டுத் தங் களுடையவர்களண்டையிலே வந்து பிறதான ஆசாரி யர்களும் மூப்பானவர்களும் தங்களுடனே சொன்ன தெல்லாத்தையும் அறிவித்தார்கள்.

௨௪. இவர்கள் அதைக் கேட்டு ஒருமனப்பட்டுப் பரா பரனைப் பார்த்துச் சத்தமுசத்திச் சொன்னதாவது: ஆண் டவரே ⁂ தேவரீர் வானத்தையும் பூமியையுஞ் சமுத்திர த்தையும் அதுகளிலுள்ள எல்லாத்தையும் உண்டாக் கின பராபரனாயிருக்கிறீர். ⁂ ௨. மோசே. ௨௰: ௧௧. ஏசயி. ௩௭: ௰௬.

௨௫. நீர் உம்முடைய தாசனாகிய தாவீதினுடைய வாக்கினாலே சொன்னதாவது ⁂ புறசாதிகள் கொந்தளித்துச் சனங் கள் விருதாக்காரியங்களைச் சிந்திப்பானேன்.

⁂ சங்கீ. ௨: ௧.

௨௬. கர்த்தருக்கு விரோதமாகவும் அவருடைய கிறி ஸ்துவுக்கு விரோதமாகவும் பூமியின் ராசாக்கள் எழுந்து நின்று தலைவர்கள் ஏகமாய்க் கூடினார் களென்றீரே.

௨௭. அதேதென்னில் மெய்யாகத்தானே நீர் அபிஷேகம் பண்ணின உம்முடைய பரிசுத்தமுள்ள பிள்ளையாகிய யேசுவின் மேலே ஏரோதேயும் போஞ்சுப்பிலாத்தும் புறசாதிகளோடும் இஸ்ரவேல் சனங்களோடுங் கூடினார்கள்.

௨௮. ஏதுக்கென்றால் உம்மிடைய கையும் உம்மு டைய ஆலோசனையுந் தாம் பூர்விக்க வேணுமென்று ⁂ முன் குறித்ததுகளெல்லாத்தையுஞ் செய்கிறதுக்குத்தானே.

⁂ ௨: அதி. ௨௩.

௨௯. இப்போதும் ஆண்டவரே அவர்கள் பயமுறுத்த

தல்களை

கிலக்கமாத் தேவரீர் நோக்கிப்பார்த்து உம்முடைய வசனத்
[illegible] * அடியார்களுக்குத் தந்தருளும் உம்முடைய ஊழிய
க்காரருக்குக் கட்டளையிட்டருளும். * ௰௩: அதி ௪௭.
௰௪: ௨௧. ௩.

௩௰. தேவரீர் குணமாக்குகிறதற்கு உம்முடைய கையை நீட்டுகையில் உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் செய்யப் [illegible].

௩௧. அவர்கள் ஜெபம்பண்ணினபோது அவர்கள் கூடியிருந்த ஸ்தலம் அசைக்கப்பட்டது எல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு தேவனுடைய வசனத்தை மகா தைரியத்தோடே பேசினார்கள்.
* ௰௬: அதி. ௨௬.

௩௨. விசுவாசிகளுடைய திரள் * ஒரே இருதயமும் ஒரே ஆத்துமாவுமாயிருந்தது ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லாமல் எல்லாம் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது * ௨: அதி. ௪௪.

௩௩. அப்போஸ்தலர் மகா பெலத்துடனே கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுந்ததுக்கு * சாட்சி கொடுத்தார்கள் அவர்களெல்லாரின் பேரிலும் மகா கிருபையுண்டாயிருந்தது. * ௧: அதி: ௨௨.

௨: அதி. ௨௪.

௩௪. அன்றியும் அவர்களில் ஒருவனுக்காகிலும் குறைவில்லை ஏனென்றால் நிலங்களும் வீடுகளும் உடையவர்கள் எவர்களோ அவர்கள் * விற்று விற்கப்பட்டவைகளுடைய கிரயங்களைக் கொண்டுவந்து! * ௨: அதி. ௪௫.

௩௫. அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள் அதிலே * அவனவனுக்குத் தேவையானதுக்குத் தக்கதாய்ப் பங்கிடப்பட்டது.
* ௫: மோசே. ௰௫: ௰௧. ஏசயி. ௫௮: ௭.

௩௬. ஆறுதலின் மகனென்று அர்த்தங்கொள்ளும் பர்னபா என்று அப்போஸ்தலராலே பேரிடப்பட்டவனும் லேவியனும் சீப்பிருதீவிலே பிறந்தவனுமான யோசே!

௩௭. தனக்கிருந்த நிலத்தை விற்று அந்தப் பணத்தைக் கொண்டுவந்து அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்தான்.

௫. அதிகாரம்.

இதிலே ௩. காரியங்கள் அடங்கியிருக்குது.

௧. அனனியா சப்பீராளும் பண்ணின மாயத்துக்கு வந்த சிக்ஷை ௧—௰௧.

௨. அப்போஸ்தலர் பண்ணின அற்புதங்கள்.
௰௨—௰௬.

௩. அப்போஸ்தலர் காவலிலே வைக்கப்பட்டு விடுதலையாகித் தைரியசாட்சி பகர்ந்தது. ௰௭—௪௨.

ஆனால் அனனியா என்கிற நாமமுள்ள ஒருத்தன் தன்
பெண்சாதியான சப்பீறாளுடனே கூடத் தன் காணியாட்சியை விற்றுப்
போட்டான்.

௨. அவன் தன் பெண்சாதியும் அறியவிலைக்கிரயத்தி
லொரு பங்கைக் குறைத்து ஒரு பங்கைக் கொண்டு
வந்து * அப்போஸ்தலருடைய பாதங்களிலே
வைத்தான். * ௪: ௩௪. ௩௭.

௩. அப்பொழுது பேதுரு சொன்னது: அனனியாவே
நீ பரிசுத்த ஆவிக்குப் பொய்சொல்லவும் நிலத்தின் விலை
க்கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்துக்கொள்ளவும்
* சாத்தானானவன் உன் இருதயத்தை நிரப்பினதென்ன
* லூக்கா. ௨௨: ௩.

௪. அது இருந்தபோது உன்னுடையதாயிருக்கவில்லை
யோ? விற்கப்பட்டபின்பும் உன் வசமாயிருக்கவில்
லையோ? இந்தக் காரியத்தை நீ உன் இருதயத்
திலே வைத்ததென்ன? மனுஷருக்கல்ல தேவனுக்
கே பொய் சொன்னாய் என்றான்.

௫. அனனியா இந்த வார்த்தைகளைக் கேட்ட
போது விழுந்து சீவனை விட்டான்; இவைகளைக் கேட்ட
அனைவர்க்கும் மகா பயம் வந்தது.

௬. வாலிபர் எழுந்திருந்து அவனை எடுத்து
வெளியே கொண்டுபோய் அடக்கம் பண்ணினார்கள்.
* ௩. மோசே. ௰: ௪. ௫.

௭. ஏறக்குறைய மூன்று மணி நேரத்துக்குப் பின்பு
நடந்ததை அறியாமல் அவன் பெண்
சாதி உள்ளே வந்தாள்.

௮. அப்பொழுது பேதுரு அவளுடனே நீங்கள் நிலத்தை
இம்மாத்திரத்துக்கா கொடுத்துவிட்டீர்க
ளென்று எனக்குச் சொல்லென்றான். அவள் ஆம் இம்மாத்திரத்துக்குத்தானென்
றாள்.

௯. பேதுரு அவளுடனே நீங்கள் கர்த்தருடைய
ஆவியைச் சோதிக்கிறதற்கு ஒருமனப்பட்ட
தென்ன? இதோ உன் புருஷனை அடக்கம் பண்ணினவர்களுடைய
பாதங்கள் வாசலருகே இருக்கிறது; அவர்கள்
உன்னை வெளியே கொண்டுபோவார்களென்றான்.

௰. உடனே அவள் அவனுடைய பாதத்திலே விழு
ந்து சீவனை விட்டாள். வாலிபர் உள்ளே வந்து
அவள் மரித்ததைக் கண்டு வெளியே கொண்டுபோய்
அவளுடைய புருஷனண்டையிலே அடக்கம் பண்ணி
னார்கள்.

௧௧. சபையனைத்திலும் இவைகளைக் கேட்ட
எல்லாரிலேயும் மகா பயமுண்டாயிற்று.

* ஊரக. ௮: ௰௬.

௰௨. அப்போஸ்தலருடைய கைகளினாலே ஜ
னங்களுக்குள்ளே அநேக அற்புதங்களும் அடை
யாளங்களும் உண்டாயிற்று; அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு
* சாலமோனுடைய மண்டபத்திலே சேர்ந்திருந்தார்கள்.

* ௩: ௧௧.

யங. ஆனால் மற்றவர்களிலொருத்தனும் அவர்களோ டேகூடிக்கொண்டிருக்கத் துணியவில்லை. சனமோ அவர்களைமகிமைப்படுத்தினது.

யச. ஆனால் அதிகம் அதிகமாகக் கர்த்தரை * விசுவாசிக்கிறபுருஷரும் ஸ்திரீகளுமான கூட்டங்களாகச் சேர்க்கப்பட்டார்கள். * உ: அதி. சா.

யரு. அப்படியே தெருக்களிலே பிணியாளிகளை யெடுத்துவந்து பேதுரு வருகையில் * அவனுடைய நிழலாகிலுமவர்களில் யாதொருத்தன் மேலே படும்படிக்குக் கட்டில்களிலும் படுக்கைகளின் மேலேயுங் கிடத்திவைத்தார்கள். * யசு: அதி. யக. யஉ.

யசா. அல்லாமலுஞ் சுற்றுப்பட்டணங்களிலிருந்து திரள் கூட்டமாய் யெருசலேமுக்குக் கூடிவந்து பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையுங் கொண்டுவந்தார்கள்; அவர்களெல்லாருஞ் சொஸ்தமாக்கப்பட்டார்கள்.

யஎ. ஆனால் பிரதான ஆசாரியனும் அவனோடேகூடயிருந்த * சதுசேயர்களின் மதத்தாராகிய யாவருமெழுந்திருந்து எரிச்சலால் நிரப்பப்பட்டார்கள். * ச: க.

யஅ. அவர்கள் அப்போஸ்தலர் பேரிலே தங்கள் கைகளைப்போட்டு அவர்களைப் பொதுக்காவலிலே வைத்தார்கள்.

யசு. ஆனால் * கர்த்தருடைய தூதனானவர் இராத்திரியிலே சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்து அவர்களை வெளியே அழைத்துவந்து சொன்னது: * யஉ: அதி. எ.

உய. போங்கோ நின்று இந்த ஜீவனுடைய வார்த்தைகளையெல்லாந் தேவாலயத்திலே ஜனத்துக்குக் கொண்டுச் சனத்தோடே பேசுங்கோளென்றான்.

உக. அவர்கள் அதைக்கேட்டு விடியற்காலமே தேவாலயத்துக்குட்பட்டு போதகம்பண்ணினார்கள். ஆனால் * பிரதான ஆசாரியனும் அவனோடே கூடியிருந்தவர்களும் வந்து சங்கத்தையும் இஸ்ரவேல்புத்திரருடைய எல்லா மூப்பரானவர்களையுங் கூட்டிவைத்து அவர்களைக் கொண்டுவரச்சிறைச்சாலைக்குஆள் அனுப்பினார்கள். ச: ரு.

உஉ. சேவகரோ அங்கே வந்தபோது அவர்களைச் சிறைச்சாலையிலே காணாமல் திரும்பிப்போய் அறிவித்துச்சொன்னதாவது:

உங. நாங்கள் சிறைச்சாலையை எல்லாப்பத்திரத்துடனேயும் பூட்டியிருக்கக் காவலாளர்கள் வெளியிலேகதவுகளுக்குமுன்னே நிற்கவுங்கண்டோம். ஆனாலுந்திறந்தபோது உள்ளே ஒருத்தனையுங் காணோம் என்றார்கள்.

உச. ஆனால் இந்த வார்த்தைகளை ஆசாரியனுந் தேவாலயத்துச்சேர்வைக்காரனும் பிரதான ஆசாரியருங் கேட்டபோது இதென்னமாயிருக்குமோவென்று அவர்கள் பேரிலே சந்தேகப்பட்டார்கள்.

உரு. ஆனால் ஒருத்தன் வந்து அவர்களோடே: இதோ நீங்கள் சிறைச்சாலையிலே வைத்த மனுஷர் தேவாலயத்

திலே

த்திலே நின்றுகொண்டு சனத்துக்குபதேசித்துக்கொண்
டிருக்கிறார்களென்று சொல்லி அறிவித்தான்.

௨௬. அப்போ சேர்வைக்காறனே சேவகரோடேகூட
போய் அவர்களை யழைத்துவந்தான் பலவந்தமா
காயல்லாமற்றானேன்றால் சனங்களாலே கல்லாலெறியப்படுவோ
மென்று சனத்துக்குப் பயந்திருந்தார்கள்.

௨௭. ஆனாலவர்களை யழைத்துவந்து சங்கத்திலே
நிறுத்தினார்கள் அப்போ பிரதான ஆசாரியன் அவர்க
ளைக் கேட்டதாவது.

௨௮. நீங்களந்த நாமத்திலே போதிக்கப்படாதென்று
இத்தனை நாங்களுங்களுக்குக் கட்டளையாய்க் கற்பி
லியோ ஆயினுமிதோ எருசலேமை உங்களு
டைய போதகத்தினாலே நிரப்பினீர்கள் அந்த மனுஷனுடைய
இரத்தத்தை எங்கள்மேல் சுமத்தவும் மனதாயிருக்கிறீர்
களென்றான். * ௪: அதி. ௰௮.

௨௯. ஆனாலப் பேதுருவும் அப்போஸ்தலரும் பிரதி
யுத்தரமாகச் சொன்னதாவது மனுஷருக்குக் கீழ்ப்
படிகிறதைப் பார்க்கிலும் பராபரனுக்குக் கீழ்ப்
படியவேண்டும். * ௪: அதி. ௰௯. தானி. ௩: ௰.

௩௰. நீங்கள் மரத்திலே தூக்கிக் கொன்ற யேசு
வை நம்முடைய பிதாக்களின் பராபரனெழுப்பி
னார். * ௩: அதி. ௰௫. [illegible].

௩௧. இவரைப் பராபரன் * தம்முடைய வலதுகையினாலே
பிரபுவாகவும் இரட்சகராகவுமுயர்த்தினார் இஸ்ர
வேலுக்கு குணப்படுதலையும் பாவபொறுதலை
யுங்கொடுக்கத்தக்கதாகவே. ௨: அதி. ௩௩. * நூக. ௨௪: ௪௭.

௩௨. இந்த வசனங்களுக்கு * நாங்களும் பராப
ரன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குக் கொடுக்கிற பரி
சுத்த ஆவியானவரும் சாட்சிக்காரராயிருக்கிறோ
மென்றார்கள். * லூக. ௨௪: ௪௮. யோவா. ௰௫: ௨௬.

௩௩. அவர்களதைக் கேட்டு மனதிலே பிளக்
கப்பட்டு அவர்களைக் கொன்றுபோடயோசனையா
யிருந்தார்கள்.

௩௪. ஆனாலச் சங்கத்தார் சகலருக்கும் மரியாதையுள்ள
வேதபாரகன் * காமாலியேலென்னும் பேருள்ளவனொரு
பரிசேயன் சங்கத்திலே யெழுந்திருந்து அப்போஸ்தல
ரைச் சற்றுநேரம் வெளியே கொண்டுபோகச்சொன்னான்

* ௨௨: அதி. ௩.

௩௫. பின்பு அவர்களைப் பார்த்துச் சொன்னதாவது
இஸ்ரவேலித்தாராகிய பேர்களே இந்த மனுஷருக்கு என்ன
செய்யப்போகிறீர்களென்று உங்களுக்குள்ளே எச
ரிக்கையாயிருங்கோள்.

௩௬. ஏனென்றால் இந்நாளுக்குமுன்னே தெயு
தாஸென்பவன் தான் பெரியவனென்று சொல்லியெழு
ம்பினான் அவனோடே ஏறக்குறைய நானூறுபேர்களுடை
ய கூட்டமெழும்பிக்கொண்டது அவன் கொல்லப்
பட்டான் அவனுக்கிசைந்திருந்தவர்களெல்லாரும் கலைந்து
போயொன்றுமில்லாமல் போனார்கள்.

௩௭. வே

௩௭. இவனுக்குப்பிறகு * குடிமதிப்பின் நாட்களிலே கலிலேயனாகிய யூதாஸ் எழும்பி வெகுசனங்களைத் தன்னைப் பின்பற்றும்படிக்கு இழுத்தான்; அவனும் அழிந்தான், அவனை நம்பியிருந்த யாவரும் சிதறடிக்கப்பட்டார்கள். * லூக. ௨: ௧. ௨.

௩௮. இப்போதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்: இந்த மனுஷரைவிட்டு விலகி அவர்களைப் போகவிடுங்கள்; ஏனென்றால் * இந்த ஆலோசனையாகிலும் இந்தக் கிரியையாகிலும் மனுஷராலுண்டாயிருந்தால் அது ஒழிந்துபோம். * மத்தே. ௧௫: ௰௩.

௩௯. அதுவோ தேவனாலுண்டாயிருந்தால் அதை நீங்கள் கெடுக்கக்கூடாமலிருக்கும்; நீங்கள் * பராபரனோடே யுத்தம்பண்ணுகிறவர்களாகக் காணப்படாமலிருக்கத்தக்கதாகவே என்றான்.

* ௯: அதி. ௫.

௪௰. அப்போது அவர்கள் அவனுக்குச் சம்மதப்பட்டு அப்போஸ்தலரை வரவழைத்து * அடித்து யேசுவின் நாமத்திலே பேசாதிருக்கக் கற்பித்து அவர்களை விட்டுவிட்டார்கள். * ௨௨: அதி. ௰௯.

மாற்கு. ௰௩: ௯.

௪௧. ஆகையால் அவர்கள் அவருடைய நாமத்துக்காகச் சங்கையீனம் அடையத்தக்க பாத்திரவான்களாகக் காணப்பட்டதற்கு * சந்தோஷப்படுகிறவர்களாய் சங்கத்தைவிட்டுப்போனார்கள்.

* மத்தே. ௫: ௰. ௰௨.

௪௨. எந்நாளுந் தேவாலயத்திலும் வீடுவீடாகவும் போதகம்பண்ணவும் யேசுக்கிறீஸ்துவைச் சுவிசேஷமாயறிவிக்கவும் ஓயாதிருந்தார்கள்.

௬. அதிகாரம்.

இதிலே ௨. காரியங்களடங்கியிருக்கிறது.

௧. தருமவிசாரிப்புக்கு ஏழுபேர் வைக்கப்பட்டது. ௧—௭.

௨. ஸ்தேவான் மேலே குற்றஞ்சுமத்தப்பட்டது. ௮—௰௫.

பின்னந்தநாட்களிலே சீஷர் பெருகினபோது எபிரேயர்பேரில் கிரேக்கருக்குள் முறுமுறுப்புண்டாச்சுது; ஏனென்றால் அவர்களுடைய கைம்பெண்டுகள் அன்றாடக விசாரிப்பிலே பாராமுகமாய்ப் பார்க்கப்பட்டார்கள்.

௨. அப்போது பன்னிருவர் சீஷருடைய கூட்டத்தை வரவழைப்பித்துச் சொன்னதாவது: நாங்கள் பராபரனுடைய வசனத்தை விட்டுவைத்துப் பந்திகளுக்கு ஊழியஞ் செய்யலாகாது.

௩. ஆனபடியினாலே சகோதரரே நாங்கள் இந்த அவசரத்துக்கு வைக்கத்தக்கதாகப் பரிசுத்தஆவியும் ஞானமும் நிறைந்து * நற்சாட்சிபெற்றிருக்கிற ஏழு

பேரை உங்களுக்குள்ளே தெரிந்துகொள்ளுங்கள்.

* ௧. தீமோ: ௩: ௭. ௮:

௪. நாங்களோவென்றால் ஜெபத்திலும் வசனத்தினுடைய ஊழியத்திலும் இடைவிடாமல் நிலைத்திருப்போமென்றார்கள்.

௫. இந்த வார்த்தை சபையார் எல்லாருக்கும் பிரியமாயிருந்தது. அப்பொழுது விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்தவனாயிருக்கிற ஸ்தேவானையும் * பிலிப்புவையும் பிரொகோருவையும் நிக்கானோரையும் தீமோனையும் பர்மேனாவையும் யூதமார்க்கத்துக்குச் சேர்ந்த அந்தியோகியா பட்டணத்தானாகிய நிக்கொலாவையுந் தெரிந்தெடுத்தார்கள். * ௮. அதி. ௫.

௬. அவர்களை அப்போஸ்தலருக்கு முன்பாக நிறுத்தினார்கள் * இவர்கள் ஜெபம்பண்ணி அவர்கள் மேலே கைகளை வைத்தார்கள். * ௧: அதி. ௨௪.

௭. பராபரனுடைய வசனம் பரம்பலமாகச் சீஷருடைய தொகை யெருசலேமிலே மிகவும் பெருகிற்று ஆசாரியருடைய வெகுசனமும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தது. ௰௬ அதி. ௨௰

௮. ஸ்தேவானென்பவன் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்து பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் சனத்துக்குள்ளே செய்தான்.

௯. அப்பொழுது லிபர்த்தீனர் சிரேனேயர் அலெக்சந்திரியர் சிலிசியர் ஆசியா தேசத்தாருடையதென்னச் சொல்லப்பட்ட ஆலயத்தில் இருந்தவர்களில் சிலர் எழும்பி ஸ்தேவானோடே தர்க்கித்தார்கள்.

௰. ஆகிலும் அவன் பேசின * ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்து நிற்கமாட்டாதே போனார்கள்.

* லூக். ௨௧: ௰௫:

௰௧. அப்போ அவன் மோசேக்கும் பராபரனுக்கும் விரோதமான தூஷண வார்த்தைகளைப் பேசக் கேட்டோமென்று சொல்லத்தக்க பேர்களை அவர்கள் ஏவிவித்தார்கள்.

௰௨. சனத்தையும் மூப்பர்களையும் வேதபாரகரையும் எழுப்பிவிட்டு அவன் மேலே வந்து அவனைச் சங்கத்துக்கு இழுத்துக்கொண்டுபோனார்கள்.

௰௩. அல்லாமலும் * பொய்ச்சாட்சிக்காரரை நிறுத்தினார்கள் இவர்கள் சொன்னது இந்த மனுஷன் இந்தப் பரிசுத்த ஸ்தலத்துக்கும் வேதத்துக்கும் விரோதமாய்த் தூஷண வார்த்தைகளைப் பேசுகிறதை விடவில்லை.

* ௧. ராசா. ௨௧: ௰௩.

௰௪. அதென்னவென்றால் இந்த யேசு நசரேயனென்பவன் இந்த ஸ்தலத்தை இடித்துப்போட்டு மோசே நமக்குக் கொடுத்த முறைமைகளை மாற்றுவானென்று அவன் சொல்லக் கேட்டோமென்றார்கள்.

௰௫. சங்கத்தில் உட்கார்ந்திருக்கிற யாவரும் அவன் மேலே கண்ணோக்கியிருந்து அவன் முகந் தேவதூதனுடைய முகம் போலிருக்கக் கண்டார்கள்.

௭. அதிகா

எ. அதிகாரம்.

இதிலே ௨. காரியங்களடங்கியிருக்கிறது.

௧. ஸ்தேவானுக்குத் தன் முன்பாக உத்தரஞ் சொல்லிவந்தது. ௧—௫௩.

௨. அவனைக் கல்லெறிந்து கொன்றது. ௫௪—௬௰.

௧. அப்போ பிரதானாசாரியன் இதுகள் இப்படியிருக்குமோ என்றான்.

௨. அவன் சொன்னது: சகோதரரே பிதாக்களே கேளுங்கள்: நம்முடைய பிதாவாகிய அப்பிரகாம் காரானிலே குடியிருக்கிறதற்கு முன்னே மெசொபொத்தாமியா தேசத்திலிருக்கையிலே மகிமையின் தேவன் அவனுக்குத் தெரிசனமானார்.

௩. அவருக்குச் சொன்னது: * உன் தேசத்தையும் உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கப்போற தேசத்துக்கு வாவென்றார்.

* ௧. மோசே. ௰௨: ௧.

௪. அப்போ கல்தேயர் தேசத்தைவிட்டுப் புறப்பட்டுக் காரானிலே குடியிருந்தான்: * அவனுடைய தகப்பன் மரித்தபின்பு அவர் அவனை அவ்விடத்திலிருந்து நீங்கள் இப்போ குடியிருக்கிற இந்தத் தேசத்துக்குக் குடியேற்றினார். * ௧. மோசே. ௰௨: ௫.

௫. அவனுக்கு அதிலே ஒரு அடியிடமாகிலும் காணியாட்சியாகக் கொடாமல் அவனுக்குப் பிள்ளையில்லாதபோதும் அவனுக்கும் அவனுக்குப்பின்பு அவன் சந்ததிக்கும் அதைக் காணியாட்சியாகக் கொடுப்பேனென்று வாக்குத்தத்தம் பண்ணினார். * ௧. மோசே. ௰௨: ௭.

௬. ஆனாலும் பராபரன் சொன்னபடி * அவனுடைய சந்ததியார் அந்நியதேசத்திலே பரதேசியாயிருக்கும் அவர்களை நானூறு வருஷமளவும் அடிமைப்படுத்தி உபத்திரவப்படுத்துவார்கள். * ௧. மோசே. ௰௫: ௰௩.

எ. அவர்களை அடிமையாக்கப்போற சனத்தை நான் நியாயந்தீர்ப்பேனென்றும் அதற்குப்பின்பு அவர்கள் புறப்பட்டு இவ்விடத்திலே எனக்கு ஆராதனை பண்ணுவார்களென்றும் பராபரன் சொன்னார்.

௮. அப்பால் விருத்தசேதனம் பண்ணுதலின் உடன்படிக்கையை அவனுக்குக் * கொடுத்தார்: அப்படியே அவன் ** ஈசாக்கைப் பெற்று எட்டாம் நாளிலே அவனை விருத்தசேதனம் பண்ணினான்: ஈசாக்கு யாக்கோபையும் யாக்கோபு பன்னிரண்டு கோத்திரத்தலைவமாரையும் பெற்றார்கள்.

* ௧. மோசே. ௰௭: ௰. ** ௨௧: அதி. ௨.

௯. கோத்திரத்தலைவமார் எரிச்சலாகி யோசேப்பை எகிப்துக்குக் கொண்டுபோகும்படிக்கு விற்றுப்போட்டார்கள்: ஆனால் பராபரன் அவனுடனே கூடயிருந்தார்.

௰. அவர் அவனை அவனுடைய துக்கங்களிலெல்லாமிருந்து விடுவித்து எகிப்துதேசத்து ராசாவாகிய பாற

வேதனைகளுக்கு முன்பாக அவனுக்குக் கிருபையையும்
ஞானத்தையுங்கொடுத்தார்; பராவோன் அவனை எகிப்தின்
மேலும் தன் வீடனைத்தின்மேலும் தேசமெல்லாத்தின்மேலும்
மந்திரியாக வைத்தான். * ௧. மோசே. ௪௧: ௪௰. முத.

௰௧. ஆனால் எகிப்துதேசமெல்லாத்தின்பேரிலும்
கானானின்மேலும் பஞ்சமும் மகாஉபத்திரமும் வந்தது;
அப்போ நம்முடைய பிதாக்களுக்கு ஆகாரங்கள் அகப்
படாமற்போச்சுது.

௰௨. யாக்கோபோவெனில் எகிப்திலே தானியமுண்
டென்று கேட்டு நம்முடைய பிதாக்களை முந்த
லாம்விசையனுப்பினான்.

௰௩. இரண்டாம்விசை யோசேப்புத்தன் * சகோத
ரருக்கு அறியப்பட்டான்; யோசேப்புடைய வம்சமும் பார
வோனுக்கு வெளியாச்சுது.
* ௧. மோசே. ௪௫: ௪.

௰௪. யோசேப்போவெனில் தன் தகப்பன் யாக்
கோபையும் தன் முன்பாக எழுபத்தைந்து பேரான தன்
னுடைய உறவின்முறையெல்லாத்தையும் அழைப்பித்தனுப்
பினான்.

௰௫. அப்போ யாக்கோபு எகிப்துக்கு இறங்கிப்
போய் அங்கே அவனும் நம்முடைய பிதாக்களுமரித்தார்கள்.
* ௧. மோசே. ௪௬: ௫. முத.

௰௬. அங்கேயிருந்து சீகேமுக்குக் கொண்டுபோகப்
பட்டு ஆபிரகாம் சீகேமுடைய தகப்பனாகிய எமோ
ருடைய புத்திரர் கையிலே வெள்ளிக்காசுக்குக்கொண்ட
கல்லறைக்குள்ளே வைக்கப்பட்டார்கள்.

௰௭. ஆனால் ஆபிரகாமுக்கு ஆணையிட்ட
படி பண்ணின வாக்குத்தத்தத்தின் காலஞ் சமீபித்
தபோது ஜனமெல்லாம் எகிப்திலே பெருகிப்போச்
சுது.

௰௮. யோசேப்பை அறியாத வேறே ராசா எழும்பு
மட்டாகுந்தான்.

௰௯. இவன் நம்முடைய வம்சத்தைச் சாமர்த்தியாய்ச் செய்து
நம்முடைய பிதாக்களின் குழந்தைகள் பிழையாதப
டிக்கு அவர்கள் அதைப்போட்டுவிடத்தக்கதாக
அவர்களுக்குப் பொல்லாப்புச் செய்தான்.

௨௰. அக்காலத்திலே மோசே பிறந்து * பரமபரனுக்
குச் சவுந்தரியமுள்ளவனாயிருந்தான்; அவன் மூன்று மா
தந்தன் தகப்பன் வீட்டிலே வளர்க்கப்பட்டான்.
* எபி. ௰௧: ௨௩.

௨௰௧. ஆனால் அவன் எறிந்துபோடப்பட்டபோது பா
ரவோனுடைய குமாரத்தி அவனை எடுத்துக்கொண்டு
தனக்குக் குமாரனாக அவனை வளர்த்தாள்.
* ௨. மோசே. ௨: ௰.

௨௰௨. அப்போ மோசே எகிப்தாருடைய எல்லா
ஞானமுங் கற்பிக்கப்பட்டான்; ஆனால் வார்த்தைகளி
லுங் கிரிகைகளிலும் வல்லமையுடைத்தானவனா
யிருந்தான்.

௨௩. அவனுக்கு நாற்பது வயதானபோது இஸ்ரவேல் புத்திரராகிய தன் சகோதரரை விசாரிக்கும்படிக்கு அவனுடைய மனதிலே எண்ணமுண்டாயிற்று.

௨௪. அங்கே ஒருவனுக்கு அநியாயஞ் செய்யப்படுகிறதை அவன் கண்டு, அவனுக்கு உதவியாக நின்று, எகிப்தியனை வெட்டிப்போட்டு, ஒடுக்கப்பட்டவனுக்காகப் பழிவாங்கினான்.

௨௫. தன் கையினாலே தேவன் தன் சகோதரருக்கு இரட்சிப்பைக் கொடுப்பாரென்று அவர்கள் அறிந்து கொள்ளுவார்களென்று அவன் நினைத்தான்; அவர்களோ அதை அறியவில்லை.

௨௬. மறுநாளிலே அவர்கள் சண்டைபண்ணுகையில் அவன் அவர்களுக்குக் காணப்பட்டு: மனுஷரே, நீங்கள் சகோதரராயிருக்க ஒருவருக்கொருவர் ஏன் அநியாயஞ் செய்கிறீர்களென்று சொல்லி அவர்களைச் சமாதானப்படுத்தப் பார்த்தான்.

௨௭. அப்பொழுது பிறனுக்கு அநியாயஞ் செய்தவன் அவனைத் தள்ளி: எங்கள்மேல் அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் உன்னை ஏற்படுத்தினவன் யார்?

௨௮. நேற்று எகிப்தியனைக் கொன்றுபோட்டதுபோல என்னையுங் கொன்றுபோட மனதாயிருக்கிறாயோ என்றான்.

௨௯. அந்த வார்த்தையைக் கேட்டபோது * மோசே ஓடிப்போய் மீதியான் தேசத்திலே பரதேசியாயிருந்து அவ்விடத்திலே இரண்டு குமாரரைப் பெற்றான்.

* ௨. மோசே. ௨: ௰௫.

௩௰. நாற்பது வருஷம் நிறைவேறினபின்பு சீனாய் மலையின் வனாந்தரத்திலே கர்த்தருடைய தூதனானவர் முட்செடியின் அக்கினிஜுவாலையிலே அவனுக்குத் தரிசனமானார்.

௩௧. மோசே அந்தத் தரிசனத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டான்; அதை உற்றுப்பார்க்கும்படி கிட்டவருகையில் கர்த்தருடைய சத்தம் அவனுக்கு உண்டாகி:

௩௨. அதாவது: * நான் ஆபிரகாமுடைய தேவனும் ஈசாக்குடைய தேவனும் யாக்கோபுடைய தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்றுரைத்தது. அப்பொழுது மோசே நடுநடுங்கி, உற்றுப்பார்க்கத் துணியாமலிருந்தான்.

* ௨. மோசே. ௩: ௬. ௰௫. ௰௬.

௩௩. அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: உன் கால்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமியாயிருக்கிறது.

௩௪. எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்த்துப் பார்த்து, அவர்களுடைய பெருமூச்சைக் கேட்டு, அவர்களை விடுதலையாக்க இறங்கினேன்; இப்பொழுது நீ வா, உன்னை எகிப்துக்கு அனுப்புவேன் என்றார்.

௩௫. * உன்னை அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் ஏற்படுத்தினவன் யார் என்று அவர்கள் மறுதலித்திருந்த

ஜெகதேமோசேயைபெத்தனே பாரவோனா ஞானஜெலதுயில
அவனுக்குதெரிந்தவளாயானதுராகுறுள வேர்ஆகயிது ஸாக்தி
யலவனுமயிட்டபடியாகவும் படிநர்
உா. ஐசனம.

கசா. ஜெனசுவர்களைப்பறப்பட்டப்பண்ணலவகை
க குருசகுத்துருத்சவந்தசுமுகுதாத்துயுமகைநூதகதகுடைய
அடைத்தலகளையும அகடெயாகமநளையமநாகடிது
லெநுகடிமாயச்செய்தான. உ. மோசே. ா: ய. மஅ.

கஎ. ஜெலுஜேவலப்புதத்தாகுடெஜா * உடீகைமருசகுல
காா.ரசபாஜாகமககருருஉலகாசுகேஅரகீலகுகதுக
ளைபுடுோகோரகதிலசேரதிசஅ குப்பு .ராஅவர்
சிராலயபடிடிகெழுபடிசஅஜாசசாளலகுசோஜானமே
சேகிவனதான. * ரு. மோசே யசு: யரு.

கஅ. வெறுந்திராத்திஅசசடையிலே யீகுகையையகுதிஜைய
பபப்பதத்த்லகுளகுடகுமயகீதராஜ..யகு
ளையுலதமுடபிதாககிடகுளாருஜ கடபுமிநதய
ாமகேவளதாளதெவளநடயகுககுதாககககுகச
சிலவளாளவைாக பேயககளபடுபடுத்தான.

ககூ. ஜெவுதகுநமமுடையிதாககளகுழபடியநதுக
குமளதயரசமலவகளதகுளலயிடமுகுலகளசு
குடிலகளிலா டைகதுகுகுததுமயிருர்கள.

உய. அவர்களகுட்டுருளுடையொனு * எலு
லதககுமுமாதடகுகுதடகயயயகளஎககளகுடபுள
ஜெரான்லள மகளஎக்கிகுதேகசகதல்நுநு வுதி
துவந்தநேதமோசேகுளாளசயபுபிதப்சுகாசுஅடி
யாகுமேஜஆர்கள. * உ. மோசே. கஉ: க.

உக. அளஜளகளிலகுதுகளஅகுபடிகைபுளடாக
கிநேதவீககிறசகததுசகுப்பெலயிடகுககலளஜைககேநி
ஜககளிலேயமகிடசியவீருதாரக ள.

உஉ. ஆறுமைபடமரபாரனதிருபடீசகோணடு * அவர்க
ளாஜனசேதளாகக்குஆாதுகளமுசயபடபுகடுகோடுக
குவிடரிஅப்பபுடய * * ஜிசகெதிகளிளஆசும
திடீலாசுதுககுஜுலசவோஷவிடாராககளள
வெறுநதககல்நுததநதறபகுவெஷமாய நெயநேவதி
யஙக ளையுமபெலிகளையும நமககுசசெஅருநர்க
ளோ. * யேசு. யகு: யக. * * ஆமோ. ரு: உரு உஎ.

உங. ஜெதுவிடநீஙகளகுஜைடளபளனஉளடாக
கினநுபரகளாய மேமோஜாள குடயசபருககுதி
யமசஙகள கெருஜியசேமபாஜைடயநடசெகுதாததுகு
யும எழுநதகுள பணணின்ர்கள ஆகைபாலைஜ
சளைய பரபிலாடுககபடாடுலகுடி யெருசவிய
போமேனஆர்.

உச. சாட்சியின்கூடாரா மோவெனஅல மோசே
கணடமாதிரியயி. யாமாசுயவெதுடனே பேசினவர்
அதைகுப்பணணககலபிததுபடிநமமுடைய. பிதாககளுக
குளளேவெறுந்தாகக்கெலயிருநதது.

உ. மோசே. உரு: சா.

உரு அதைநமமுடபிதாககளளபபுககொணடுபோா
பரனநமமுட பிதாககளுககுமுனபாகதுரதகவிட
பறசாதிகளை ககபடிககொளளுகையிலயோசுவா

வுடனே

வுடனே கொண்டுவந்து தாவீதினாட்கள்மட்டுக்கு
மிருந்துவந்தார்கள்.

௪௬. தேவபராபரனுக்கு முன்பாகக் கிருபை பெற்றுக்
கொண்டெடுத்து † யாக்கோபுடைய பராபரனுக்கு ஒரு வா
சஸ்தலத்தைத் தனக்குத் தேடவேணுமென்று ஆடி
னான். † சங்கீ. ௱௩௨. ௨–௫.

௪௭. ஆனால் சாலமோன் அவருக்கு ஒருவீட்டை
எடுப்பித்தான். † ௧. ராசா. ௬: ௧.

௪௮. ஆகிலும் † தீர்க்கதரிசி சொல்லுகிறபிரகாரமா
க உன்னதமானவர் கைகளாலே செய்யப்பட்ட ஆலயங்
களில் வாசமாயிரார். † ஏசாயா. ௬௬: ௧, ௨.

௪௯. வானம் நமக்கு ஆசனமாயும் பூமியோ நம்முடை
ய பாதப்படியாயிருக்குது எப்படிப்பட்ட வீட்டை
நமக்கு எடுப்பிப்பீர்கள் அல்லது நம்முடைய இளைப்பாறுதலுக்கு ஸ்தலம்
ஏது;

௫௰. நம்முடைய கையிதுகளெல்லாவற்றையும் உண்டாக்க
வில்லையோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.

௫௧. † முரட்டுக் கழுத்துள்ளவர்களே இருதயத்தி
லுஞ் செவிகளிலுஞ் சுன்னத்துப்பண்ணப்படாதவர்
களே நீங்கள் எப்பொழுதும் பரிசுத்த ஆவிக்கு எதிர்த்
துநிற்கிறீர்கள் உங்கள் பிதாக்களைப் போலே நீங்க
ளுஞ் செய்கிறீர்கள். † ௨. மோசே. ௩௨: ௯.

௫௨. † தீர்க்கதரிசிகளில் ஆரை உங்கள் பிதாக்கள்
துன்பப்படுத்தாமலிருந்தார்கள் நீதிபரருடைய
வருகையை முன் அறிவித்தவர்களை அவர்கள் கொன்
றுபோட்டார்கள் அவருக்கு இப்போ நீங்கள் துரோகி
களுங் கொலைபாதகருமானீர்கள்.

† மத்தே. ௨௩: ௩௧.

௫௩. நீங்கள் † தேவதூதர்களுடைய அணிவகுப்புக
ளுக்குள்ளே வேதத்தை வாங்கிக்கொண்டீர்கள் ஆகி
லும் அதைக் கைக்கொள்ளாமலிருந்தீர்கள்.

† கலா. ௩: ௰௯.

௫௪. ஆனால் அவர்கள் இவைகளைக் கேட்டபோது
அவர்களின் இருதயங்கள் பிளக்கப்பட்டு அவன்பே
ரிலே பல்லைக் கடித்தார்கள். † ௫. அதி. ௩௩.

௫௫. ஆனால் அவன் பரிசுத்த ஆவியினாலே நிறைந்திருந்து
வானத்தை அண்ணார்ந்து பார்த்து பராபரனுடைய
மகிமையையும் பராபரனுடைய வலதுபாரிசத்திலே
நிற்கிற யேசுவையுங் கண்டான்,

௫௬. அவன் சொன்னது: இதோ திறந்திருக்கிற வானங்
களையும் பராபரனுடைய வலதுபாரிசத்தில் நிற்கி
ற மனுஷனுடைய குமாரனையுங் காண்கிறேன் என்றான்

௫௭. ஆனால் அவர்கள் மகாசத்தத்துடனே கூப்பிட்டு
தங்கள் காதுகளை அடைத்துக்கொண்டு ஒருமனப்ப
ட்டு அவன்மேலே பாய்ந்து விழுந்தார்கள்.

௫௮. அவனைப் பட்டணத்துக்குப் புறம்பாகத் தள்ளிக்
கல்லெறிந்தார்கள் † சாட்சிக்காரரோ தங்கள் வஸ்தி
ரங்களைச் சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனுடை

காலகளண்டையிலே போட்டுவைத்தார்கள்.

* ௨௨. அதி. ௨௰.

௫௯. அப்படி அவர்கள் ஸ்தேவானை * கல்லெறிகிறபோது அவன் கர்த்தராகிய யேசுவே என்னுடைய ஆவியை ஏற்றுக்கொள்ளுமென்று சொன்னான்.

௬௰. அவன் முழங்கால் ஊன்றி மகா சத்தமிட்டுக் கர்த்தரே இவர்களுக்கு இந்தப் பாவத்தைச் சுமத்தாதேயுமென்று சொல்லி இப்படிச் சொன்னபின்பு நித்திரையடைந்தான். * லூக். ௨௩: ௩௪.

௮. அதிகாரம்.

இதிலே ௩. காரியங்கள் அடங்கியிருக்கிறது.

௧. விசுவாசிகளின் சபை துன்பப்பட்டது. ௧—௪.

௨. சமாரியா தேசத்திலே விசுவாசிகளின் சபை உண்டானது. ௫—௨௫.

௩. எத்தியோப்பிய தேசத்து ராசாத்தியின் மந்திரி ஞானஸ்நானம் பெற்றது. ௨௬—௪௰.

சவுல் அவனைக் கொலைசெய்யப்பட்டதற்குச் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே யெருசலேமிலே யிருக்கிற சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாகி அப்போஸ்தலரொழிய மற்ற எல்லாரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறிப்போனார்கள்.

* ௭. அதி. ௫௮.

௨. தேவபக்தியுள்ள மனுஷர் ஸ்தேவானை எடுத்து * அடக்கம்பண்ணி அவனைக்குறித்து மிகவும் புலம்பினார்கள். மத்தே. ௰௪: ௰௨.

௩. சவுலோவென்றால் * சபையைப் பாழாக்கி வீடுகள்தோறும் நுழைந்து புருஷரையும் ஸ்திரீகளையும் பிடித்திழுத்துச் சிறைச்சாலையிலே ஒப்புவித்தான். * ௯. அதி. ௧. ௰௩. ௨௧. ௨௨. அதி. ௪.

௨௬. அதி. ௰. ௧௧. கலா. ௧: ௰௩. பிலி. ௩: ௬.

௧. தீமோ. ௧: ௰௩.

௪. சிதறிப்போனவர்கள் எங்குந் திரிந்து வசனத்தைச் சுவிசேஷமாய் அறிவித்தார்கள்:

௰௧. அதி. ௰௯.

௫. * பிலிப்பு என்பவன் சமாரியா தேசத்திலே ஒரு பட்டணத்துக்குப் போய் அவர்களுக்குக் கிறிஸ்துவைப் பிரசங்கித்தான். * ௬. அதி. ௫.

௬. ஜனங்கள் பிலிப்புச்செய்த அடையாளங்களைக் கேட்டுக்காண்கையில் அவனாலே சொல்லப்பட்டவைகளுக்கு ஒருமனப்பட்டுச் செவிகொடுத்தார்கள்.

௭. எப்படியென்றால் அசுத்த ஆவிகள் அநேகரிடத்திலே

யிருந்து

யிருந்து அநேகமாகச் சத்தத்துடனே கூப்பிட்டுப் புறப்பட்டுது; அல்லாமல் அனேகந்திமிர் வாதக்காரருஞ் சப்பாணிகளுங் குணமாக்கப்பட்டார்கள்.

௮. அப்போ அந்தப் பட்டணத்திலே மகா சந்தோஷம் உண்டாச்சுது. * யோவா. ௪: ௪௰.

௯. ஆனால் சீமோன் என்னும் பேருள்ள ஒரு மனுஷன் அந்தப் பட்டணத்திலே முன்னே சூனியஞ் செய்து சமாரியா ஜனத்தைப் பிரமிக்கப் பண்ணினதுமல்லாமல் தான் ஒரு பெரியவனென்று சொல்லிக்கொண்டிருந்தான்.

௰. எல்லாருஞ் சிறியவன்முதல் பெரியவன்மட்டுமே இவன் பராபரனுடைய பெரிய சத்தியாயிருக்கிறானென்று அவனைப் பேர்போலே நோக்கமாயிருந்தார்கள்.

௰௧. ஆனால் அவன் அநேககாலமாய் அவர்களைச் சூனியங்களினாலே பிரமிக்கப்பண்ணினபடியினாலே அவனைப் பேர்போலே நோக்கமாயிருந்தார்கள்.

௰௨. ஆனால் பராபரனுடைய ராஜ்ஜியத்தையும் யேசு கிறீஸ்துவினுடைய நாமத்தையுங் குறித்துச் சுவிசேஷமாய் அறிவிக்கிற பிலிப்புவை அவர்கள் நம்பினபோது புருஷர்களுஞ் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள். மத்தே. ௨௮: ௰௯.

௰௩. அப்போ சீமோன் தானும் நம்பிக்கை கொண்டு ஞானஸ்நானம் பெற்றுப் பிலிப்புவை விடாமற் கொண்டிருந்து அடையாளங்களையுஞ் செய்யப்பட்ட பெரிய வல்லமைகளையுங் கண்டு பிரமித்தான்.

௰௪. ஆனால் சமாரியா பராபரனுடைய வசனத்தை ஏற்றுக்கொண்டார்களென்று எருசலேமிலிருந்த அப்போஸ்தலர் கேட்டபோது பேதுருவையும் யோவானையும் அவர்களிடத்துக்கு அனுப்பினார்கள்.

௰௫. இவர்கள் இறங்கி அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெறும்படிக்கு அவர்களுக்காகச் செபம்பண்ணினார்கள்.

௰௬. ஏனென்றால் அவர்களில் ஒருத்தன்மேலும் இன்னம் அவர் இறங்கவில்லை; அவர்கள் கர்த்தராகிய யேசுவினுடைய நாமத்திலே மாத்திரம் ஞானஸ்நானம் பெற்றிருந்தார்கள். * ௰௯: அதி. ௫.

௰௭. அப்போது அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள் அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்.
௬: அதி. ௬.

௰௮. ஆனால் சீமோன் அப்போஸ்தலர் கைகளை வைக்கிறதினாலே பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டதைக் கண்டு அவர்களுக்குப் பணங்களைக் கொண்டுவந்தான்.

௰௯. எனக்கும் இந்த வல்லமையைக் கொடுங்கோள் நான் எவன்மேல் கைகளை வைக்கிறேனோ அவன் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக என்றான்.

௨௰. ஆனால் பேதுரு அவனுக்குச் சொன்னது: பராபரனுடைய வரப்பிரசாதத்தைப் பணத்தினாலே சம்பாதிக்கலாமென்று நினைத்தபடியினாலே உன் பணம் உன்னுடனே கூடக் கெட்டுப்போகக்கடவது.

௨௧. உனக்கு இந்தக் காரியத்திலே பங்கும் பலசோத

தையுமில்லை ஏனென்றால் உன்னிருதயம் பராபரனுக்கு முன்பாகச்செம்மையாயிராது.

௨௨. ஆகையினாலே நீயிந்த உன்னுடைய ஆகாத்தியத்தைவிட்டுக்குணப்பட்டு உன்னிதயத்தினுள்ள சிந்தையுனக்குப் பொறுக்கப்படுமோவென்று பராபரனை வேண்டிக்கொள்.

௨௩. நானுன்னிலே * கசப்புள்ள பிச்சிலும் அக்கிரமத்தினுடைய கட்டிலுமிருக்கக்காண்கிறேனென்றான்.

* ௫. ஆகம. ௨௯: ௰௮.

௨௪. ஆனாலசீமோன் பிரத்தியுத்தரமாக நீங்கள் சொல்லியவைகளிலொன்றுமெனக்குவராதபடிக்கு நீங்கள் எனக்காகக் கர்த்தரை வேண்டிக்கொள்ளுங்கோளென்றான்.

௨௫. அவர்களோவென்றால் கர்த்தருடைய வசனத்தைத் திட்டமாய்ச் சாட்சிகளாயிருந்து பிரசங்கித்தபின்பு எருசலேமுக்குத் திரும்பிச் சமாரியருடைய அநேக ஊர்களிலே சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள்.

௨௬. ஆனாலகர்த்தருடைய தூதன் பிலிப்புவுடனே நீயெழுந்து தெக்கே எருசலேமிலிருந்து காசாவுக்கிறங்கிற வழியிலே வனாந்தரமாய்ப்போகிற பாதையிலே போவென்று சொல்லிப்பேசினான்.

௨௭. அவனெழுந்து பயணமாய்ப்போனானே, தோ எத்தியோப்பியருடைய ராசாத்தியாகிய கந்தாசியினுடைய பிரதானியும் அவளுடைய எல்லாப்பொக்கிஷத்தின்மேலும் வைக்கப்பட்டவனுமாயிருக்கிற சேவிக்கிறதற்கெருசலேமுக்கு வந்திருந்தவனுமான ஒரு எத்தியோப்பியா மனுஷன்:

௨௮. திரும்பிப்போகிறவனாகத் தன்னுடைய வண்டியிலே உட்கார்ந்திருந்து ஏசாயியாதீர்க்கதரிசியைக்கொண்டு வாசித்துக்கொண்டிருந்தான்.

௨௯. ஆனாலஆவியானவர் பிலிப்புவுடனே நீ கிட்டப்போய் இந்த வண்டியிலே சேர்ந்திருவென்றார்.

௩௰. ஆனாலபிலிப்புவோடிவந்து அவன் ஏசாயியாதீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கக்கேட்டு நீர் வாசிக்கிறதுகளை அறிகிறீரோவென்றான்.

௩௧. ஆனாலவன் சொன்னது ஒருத்தனெனக்கு வழிகாட்டாதிருந்தாலெப்படி நானறியக்கூடுமென்று சொல்லிப் பிலிப்புவை ஏறிவந்து தன்னுடனே கூட உட்காரும்படி வேண்டிக்கொண்டான்.

௩௨. அவன் வாசித்த வாக்கத்தினுடைய வாக்கியமாவது * ஒரு ஆடு அடிக்கப்படுகிறதற்குக்கொண்டு போகப்பட்டதைப்போலும் மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமற்ற ஆட்டுக்குட்டியைப்போலே தம்முடைய வாயைத் திறக்கவில்லை.

* ஏசாயி. ௫௩: ௭. ௮.

௩௩. அவருடைய தாழ்மையிலே அவருடைய வழக்குத் தீர்க்கப்பட்டுது ஆனால் அவருடைய சந்ததியாரைச் சொல்லிவிடுவனாரென்றால் அவருடைய சீவன்பூமி

யிலிரு

யிலிருந்து பேசுகிறது என்கிறதுதானே.

௩௪. பிரதானியோவெனில் பிலிப்புவை நோக்கி: தீர்க்கதரிசி ஆரைப்பற்றி இதைச் சொல்லுகிறான்? தன்னைப்பற்றியோ, அல்லது வேறொருவனைப்பற்றியோ? சொல்லும், உம்மை வேண்டிக்கொள்ளுகிறேனென்றான்.

௩௫. ஆனால் பிலிப்பு தன் வாயைத் திறந்து இந்த வாக்கியத்தில் துவக்கி அவனுக்கு யேசுவைச் சுவிசேஷமாகப் பிரசங்கித்தான்.

௩௬. ஆனால் அவர்கள் வழிநடந்துபோகச்சே தண்ணீருள்ள ஒரு இடத்துக்கு வந்தார்கள்; அப்பொழுது பிரதானி: *இதோ தண்ணீர் இருக்கிறதே, நான் ஸ்நானம் பெறுகிறதுக்கு என்னைத் தடுக்கிறதென்னவென்றான். * ௰: அதி. ௪௭.

௩௭. பிலிப்புவோ: நீர் முழு இருதயத்தோடே விசுவாசித்தால் உத்தாரமுண்டென்றான்; அதற்கு அவன்: *யேசுக்கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று நான் விசுவாசிக்கிறேனென்றான். * மத்தே. ௰௬: ௰௬.

௩௮. அப்போ வண்டியை நிறுத்தச் சொல்லி பிலிப்புவும் பிரதானியும் இருவருந் தண்ணீரிலே இறங்கினார்கள்; அவன் அவனுக்கு ஞானஸ்நானம் பண்ணுவித்தான்.

௩௯. ஆனால் அவர்கள் தண்ணீரிலிருந்து ஏறினபோது *கர்த்தருடைய ஆவி பிலிப்புவை எடுத்துக்கொண்டுபோனார்; பிரதானியோ அப்புறம் அவனைக் காணவில்லை, சந்தோஷத்தோடே தன் வழியே போனான். * ௧. இராசாக். ௰௮. ௰௨.

௪௰. ஆனால் பிலிப்பு அசோத்திலே காணப்பட்டு தான் செசரேயாவுக்கு வருமட்டாகச் சகல ஊர்களுக்குஞ் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துச் சுற்றித்திரிந்தான்.

௨௧: அதி. ௮.

௯. அதிகாரம்.

இதிலே ௨. காரியங்களடங்கியிருக்கிறது.

௧. சவுல் மனந்திரும்பினதும் விசுவாசிகளிடத்தில் சேர்க்கப்பட்டதும். ௧—௩௧.

௨. பேதுரு செய்த இரண்டு அற்புதங்கள். ௩௨—௪௩.

*சவுலோவென்னவென்றால் கர்த்தருடைய சீஷருக்கு விரோதமாய்ப் பயமுறுத்தலையும் கொலையையுஞ் செய்யுறதினாலே சீறிப் பிரதான ஆசாரியனிடத்துக்குப் போய்:

* ௮: அதி. ௩. ௨௬: அதி. ௯.

௨. தான் இந்த மார்க்கத்துள்ளவர்களில் ஆண்பிள்ளைகளையும் பெண்பிள்ளைகளையுங் கண்டுபிடித்தால் தான் அவர்களைக் கட்டுண்டவர்களாக எருசலேமுக்குக் கொண்டுபோக உத்தாரமுண்டாகத் தம

ஸ்குக்கு

மஹருகுவிலிருந்து ஒக்கூலை [illegible] அவனிடத்திலே இருப்பவர்களைக் கட்டிக்கொண்டார்.

௩. ஆனாலும் அவனைப் பயமாய் [illegible] யத்துமலருக்குவெக்குச சமீபிக்க வந்து [illegible] சமயுவித்தவுக்கு [illegible] ஆல் வசுட பிடிலேயானத்திலிருந்து [illegible] சமயமுவமென் சுத்தப்படுகாச்சுத்து. * உ: அத். ௬.

௪. அப்போ அவனைத் [illegible] விடுத்துசவெட்டு [illegible] [illegible] மையை அது [illegible] பருக்கு [illegible] அதன் னேட்டுக்கோலமுக்குறாரூசகுக்குத்தக்கோட்டான.

௫. அவமுந்திர் பூர்க்கதுக்கோன [illegible] ஆறுலக்குதா ணையிருதமந்து [illegible] அத்துக்கு [illegible] யவாயந்தக்க [illegible] த்தாருக்கோலகருகுக்கத்தா கட்டுக்கத்து [illegible] குத்தக்கட்டு ணமையமன்னாறு. * ௫: அத். ௰௭.

௬. அவான நடுவேக்குத்திறக்கது குறுக்குக்கு நோன என்ன செயந்தென்ன [illegible] அந்துக்கு அர் என்னறு [illegible] குறுதர் அவ வுபடுக்னாறி [illegible] முந்தருந்த [illegible] த்திலே உனப்பிற வேச் அபடுபாந் * செய்ய [illegible] உண்டுயது உனதேறும் பேசப்படுமானாறு. * ௰: அத். ௫. ௬.

௭. ஆறுலகவெண்டுக்கொடுகூட வெழுப்ப யுணம பணவு [illegible] போர்க்கா மரத்து நினமுசத்துக்குத்து கேட்டபோனும் ஏருத்தராயுகூகாணவில்லை.

௮. [illegible] லாவெண்லத்தையிலிருந்தேழுந்து அவன கண்களைத் திறந்தபோது ஏருவரையுல் காணவில்லை அப்போ அவனைக் கைப்பிடித்துத்தமஸ்குவுக்குவழைத்துக்கொண்டுபோனார்கள்.

௯. அவன் மூன்றுநாளாக கண் தெரியாமலிருந்து புசிக்கவுமில்லை குடிக்கவுமில்லை.

௰. ஆறுலதமஸ்குவிலே அனனியா என்னும்பேருள்ள ஒரு சீஷன் இருந்தான் அவனுடனே கருத்தர் தெரிசனத்திலே அனனியாவே என்றார் அவன் இதோ அடியேனிருக்கிறேன் கருத்தரே என்றான்.

௰௧. ஆறுலகருத்தர் அவனுடனே நீ எழுந்து செவ்வையான [illegible] வீதியிலேபோய் யூதாவின்வீட்டிலே தார்சுவான சவுல் என்கிற பேர்பட்டவனைத் தேடு [illegible] அவன் இப்போ ஜெபம்பண்ணுகிறான்.

௰௨. அவன் தெரிசனத்திலே அனனியா என்கிறபேருள்ள ஒருமனுஷன் உள்ளேவரவும் தான் பார்வையடையத்தக்கதாகத் தன்மேலே கையை வைக்கவும் கண்டான் என்றார்.

௰௩. அதற்கு அனனியா கருத்தரே இந்தமனுஷன் எருசலேமிலே உம்முடைய பரிசுத்தவான்களுக்குச் செய்த [illegible] பொல்லாப்புகளைக் குறித்து அநேகரால் கேள்விப்பட்டிருக்கிறேன்.

௰௪. [illegible] ம்முடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற யாவரையுங் கட்டிப்பிடிக்கும்படி பிரதான ஆசாரியர்களிடத்திலே அதிகாரம்பெற்று இங்கேயும் வந்திருக்கிறான் என்று பிரதியுத்தரஞ்சொன்னான்.

௰௫. அதற்குக் கருத்தர் அவனை நோக்கி நீ போ அவன் என் நாமத்தைப் புறஜாதிகளுக்கு ராசாக்

ராசாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் முன்பாக என் நாமத்தைச் சுமக்கத் தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரமாயிருக்கிறான்.

௰௬. ஏனென்றால் என் நாமத்துக்காக அவன் எவ்வளவு பாடுபட வேண்டியதென்று நான் அவனுக்குக் காண்பிப்பேனென்றார். * ௨௰. அதி. ௨௩.
௨௧. அதி. ௰௧. ௨. கொரி. ௰௧: ௨௩: மு

௰௭. ஆனால் அனனியாப்போய் வீட்டுக்குள் பிரவேசித்து அவன் மேலே கைகளை வைத்து: சகோதரனாகிய சவுலே, நீ வருகையில் வழியிலே உனக்குத் தரிசனமாயிருந்த கர்த்தராகிய யேசுவானவர் நீ பார்வையடையவும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படவுமாக என்னையனுப்பினாரென்றான்.

௰௮. உடனே தானே அவனுடைய கண்களிலிருந்து செதிள்கள் போலே விழுந்தது; உடனே பார்வையடைந்தான், அவன் எழுந்திருந்து ஞானஸ்நானம் பெற்றான்.

௰௯. பிற்பாடு போசனம் பண்ணித் திடப்பட்டான். ஆனால் சவுல் தமஸ்குவிலிருந்த சீஷருடனே சில நாளிருந்தான்.

௨௰. உடனே தானே ஆலயங்களிலே கிறிஸ்துவை அவரே தேவனுடைய குமாரனென்று பிரசங்கித்தான்.

௨௧. ஆனால் கேட்டவர்களெல்லாரும் விஸ்மயித்துச் சொல்லுகிறதாவது: இவன் எருசலேமிலே இந்த நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவர்களை * சங்காரம் பண்ணினவனல்லவா? இங்கேயும் அவர்களைக் கட்டி ஆசாரியர்களண்டைக்குக் கொண்டுபோகும்படிக்கு இங்கே வந்ததில்லையோ என்றார்கள்.
* கலா. ௧. ௰௩. அப். ௮. அதி. ௩. ௨௬: ௰.

௨௨. சவுலோவெனில் அதிகமாய்ப் பலப்படுத்தப்பட்டு இவரே கிறிஸ்துவென்று ருசுப்பித்துத் தமஸ்குவிலே குடியிருந்த யூதரைக் கலங்கப் பண்ணினான்.

௨௩. ஆனால் அனேக நாள் சென்றபிற்பாடு * யூதர்கள் அவனைக் கொல்லும்படிக்கு ஆலோசனை பண்ணினார்கள். * ௨. கொரி. ௰௧: ௩௨.

௨௪. ஆனால் அவர்களின் கட்டுப்பாடு சவுலுக்கு அறியப்பட்டது; அவர்கள் அவனைக் கொல்லும்படிக்கு ராவும் பகலும் கோட்டை வாசல்களைக் காத்திருந்தார்கள்.

௨௫. சீஷரோவெனில் அவனை ராத்திரியிலே எடுத்து மதிலின் வழியாய்க் கூடையிலே வைத்து இறக்கிவிட்டார்கள்.

௨௬. ஆனால் சவுல் யெருசலேமிலே வந்தபோது சீஷரோடே கூடிக்கொள்ளப் பார்த்தான்; ஆனாலெல்லாரும் அவன் சீஷனென்று நம்பாமல் அவனுக்குப் பயந்திருந்தார்கள்.

௨௭. பறனபாவோவெனில் அவனைச் சேர்த்து அப்போஸ்தலரண்டைக்கு அழைத்துக் கொண்டுவந்து அவனை

இவன் எப்படி வழியிலே கர்த்தரைக் கண்டானென்கி
றதையும், அவர் அவனோடே பேசினாரென்கிறதையும்
இவன் எப்படி தமஸ்குவிலே யேசுவின் நாமத்தி
னாலே * தைரியமாய்ப் பிரசங்கித்தானென்கிறதை
யும் அவர்களுக்கு விவரமாய்ச் சொன்னான்.

* ௨ கொ. ௧௧. ௨௨. ௨௩.

௨௮. அப்போதவன் அவர்களோடேகூட எருசலே
மிலே உள்ப்புகுகிறதும் வெளிப்புறப்படுகிறதுமாயிருந்து
கர்த்தராகிய யேசுவின் நாமத்தினாலே தைரியமாய்ப்
பிரசங்கித்தான்.

௨௯. அவன் கிரேக்கரோடே பேசித் தர்க்கித்
தான்; அவர்களோ அவனைக் கொன்றுபோடவகை
தேடினார்கள்.

௩௰. சகோதரர் அதை அறிந்தபோது அவனை
செசரியாவுக்குக் கூட்டிக்கொண்டுபோய் அவனைத் தர்சுக்கு
அனுப்பிவிட்டார்கள்.

௩௰௧. அதுகையால் யூதேயா கலிலேயா சமாரியா
முழுதிலுஞ் சபைகளுக்குச் சமாதானமுண்டாயிருந்து அவை
கள் ஸ்தாபிக்கப்பட்டுக் கர்த்தருக்குப் பயப்படுகிறதிலே நடந்து
பரிசுத்த ஆவியினுடைய ஆறுதலினாலே பெருகிற்று.

௩௰௨. பேதுரு எங்குஞ் சுற்றித்திரிகிறபோது சமஸ்தத்
தேசங்களிலுமுள்ள லித்தாவிலே குடியிருந்த பரிசுத்
வான்களண்டைக்கும் வந்தான்.

௩௰௩. அங்கே எட்டு வருஷமாகக் கட்டிலின்
மேலே கிடந்த திமிர்வாதக்காரனாகிய ஐனேயா என்னு
ம் பேருள்ள ஒருவனைக் கண்டுபிடித்தான்.

௩௰௪. அவனோடே பேதுரு: ஐனேயாவே, யேசுக்
கிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார்; நீ எழுந்தி
ருந்து உன் படுக்கையைப் போட்டுக்கொள் என்றான்;
உடனே அவன் எழுந்திருந்தான்.

௩௰௫. அப்பொழுது லித்தாவிலும் சாரோனிலும் குடியிருந்
தவர்களெல்லாரும் அதைக் கண்டு கர்த்தரண்டைக்குத் திரு
ம்பினார்கள்.

௩௰௬. யோப்பேயிலே வென்றால் மான் என்னு
ம் அர்த்தங்கொண்டு சொல்லப்படுகிற தபீத்தாள் என்கிற
பேருள்ள சீஷியிருந்தாள்; அவள் செய்துவந்த நல்
கிரியைகளினாலும் தருமங்களினாலும் நிறைந்தவளா
யிருந்தாள்.

௩௰௭. அந்த நாட்களிலேதானே சம்பவித்த
தென்னவென்றால் அவள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள்;
அவளைக் குளிப்பாட்டி மேல்வீட்டிலே கிடத்திவைத்
தார்கள்.

௩௰௮. அதுவுமல்லாமல் லித்தா யோப்பேக்குச் சமீபமானபடியி
னாலே பேதுரு அவ்விடத்திலிருக்கிறானென்று சீஷர்கள்
கேட்டு இரண்டுபேர்களை அவனண்டைக்கு அனுப்பித்
தாங்களிடத்துக்குத் தாமதமில்லாமல் வரவேண்டிக்
கொண்டார்கள்.

௩௰௯. பேதுரு எழுந்திருந்து அவர்க
ளோடே கூடவந்தான்; வந்திருந்தவனை மேல்வீட்டி

லேயழை

ழுந்து அழுதுகொண்டு பேதுருவைச் சூழ்ந்து நின்று, தொற்காள் தங்களோடே கூடயிருக்கையிலே பண்ணின அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்துக் கொண்டிருந்தார்கள்.

௪௰. அப்பொழுது பேதுரு எல்லாரையும் வெளியே போகப்பண்ணி முழங்காலூன்றி ஜெபம்பண்ணி, பிரேதத்தின் பக்கமாய்த் திரும்பி * தபீத்தாளே எழுந்திரு என்றான்; அவள் தன் கண்களைத் திறந்து பேதுருவைக் கண்டு உட்கார்ந்தாள். * மாற்கு. ரு: ௪௧.

லூக். ௭: ௰௫.

௪௧. அவன் அவளுக்குக் கைகொடுத்து அவளைத் தூக்கி, பரிசுத்தவான்களையும் விதவைகளையும் அழைத்து அவளை ஜீவனுள்ளவளாக அவர்களுக்கு முன்னிறுத்தினான்.

௪௨. இது யோப்பா எங்குமறியப்பட்டதினாலே அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமாயினார்கள். * யோவா. ௧௧: ௪௫.

௪௩. அப்போது அவன் யோப்பா பட்டணத்திலே தோல்பதனிடுகிற சீமோனென்கிறவனிடத்திலே அநேகநாள் இருந்தான்.

௰. அதிகாரம்.

கொர்நேலியு சேர்க்கைக்குப் பேதுரு அழைக்கப்பட்டு வந்ததும் அவன் பிரசங்கத்தினாலே அந்நியஜாதி ஜனங்களுக்குப் பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டது. க—௪௮.

செசரியாவிலே இத்தாலியா பட்டாளமென்னப்பட்ட சேனையில் * சேர்வைகாரனாகிய கொர்நேலியு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் சேசரேயாவிலே இருந்தான். * மத்தே. ௮: ௫.

௨. அவன் தன் வீட்டாரெல்லாரோடுங்கூடத் தேவபத்தியுள்ளவனும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து * ஜனத்துக்கு வெகு பிச்சைகொடுத்து எப்போதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான். * தானி. ௪: ௨௭.

௩. அவன் பகலில் ஒன்பதாம் மணிநேரத்தில் தேவனுடைய தூதன் ஒருவன் தன்னிடத்தில் பிரவேசித்து கொர்நேலியுவே என்று சொல்லுகிறதைத் தெளிவாய்க் கண்டான்.

௪. அவன் அவனை உற்றுப்பார்த்துப் பயந்து ஆண்டவரே என்னவென்றான்; அவன் அவனை நோக்கி: உன் ஜெபங்களும் உன் பிச்சைகளும் பராபரனுக்கு முன்பாக நினைப்பாக வந்தது.

௫. இப்போதும் நீ யோப்பாவுக்கு மனுஷரை அனுப்பிப் பேதுருவென்னும் மறுபேர்கொண்ட சீமோனை அழைப்பி.

௬. வே

௬. இவன் * தோல்பதனிடுகிறவனாகிய சீமோனென்னு
மொருவனிடத்தில் விருந்தாயிருக்கிறான். அவனுக்குக்
கடலோரத்திலே வீடிருக்கிறது; நீ செய்
யவேண்டுமென்றதை உனக்கவனே சொல்லுவான் என்றான்.

* ௯: அதி. ௪௩.

௭. ஆனால் கொர்நேலியுவுடனே பேசின தேவதூ
தன் போனபின்பு அவன் தன் வீட்டு மனுஷரிலிரண்
டு பேரையும் தன்னிடத்திற் காத்திருந்தவர்களில் தேவப
க்தியுள்ள ஒரு சேவகனையும் அழைத்தான்.

௮. அவன் அவர்களுக்கு எல்லாவற்றையும் விவரித்துச்
சொல்லி அவர்களை யோப்பாவுக்கு அனுப்பினான்.

௯. மறுநாளிலே அவர்கள் பயணம் பண்ணி
அந்தப் பட்டணத்துக்குச் சமீபித்து வருகையிற் பேதுரு ஆறாந்
மணிவேளையிலே மேல்வீட்டின் மேல் செபம்பண்ண
ஏறினான்.

௰. ஆனால் அவன் மிகுந்த பசியடைந்து சாப்பிட மனதா
யிருந்தான்; அதுக்கவர்கள் ஆயத்தம் பண்ணுகையில
அவன்மேலே பரவசமாகுதல் விழுந்தது.

௰௧. வானந்திறந்திருக்கிறதையும் * நாலு கோணங்
களுங் கட்டப்பட்டிருந்த பெரிய துப்பட்டியைப்போல
ஒரு பாத்திரந் தன்னிடத்தில் இறங்கிப் பூமியின் மேல்
விடப்பட்டதையுங் கண்டான். * ஹாக. ௰௩: ௨௬.

௰௨. அதிலே பூமியிலுள்ள சகல விதமான நாலு
காற்சீவன்களும் மிருகங்களும் ஊர்வனங்களும்
ஆகாசத்துப் பறவைகளும் இருந்தது.

௰௩. அப்பொழுது பேதுருவே அடித்துப் போசி
என்றொரு சத்தமவனுக்குண்டாச்சுது.

௰௪. பேதுருவோ வேண்டாம் ஆண்டவே கர்த்தரே
நானொருக்காலும் * தீட்டும் அசுத்தமுமா
யிருக்கிறதொன்றையும் போசித்ததில்லையென்றான்.

* யெசேக். ௪: ௰௪.

௰௫. சத்தம் மறுபடியும் இரண்டாம் விசை அவனு
டனே பராபரன் சுத்தமாக்கினதுகளை நீ தீட்டாகஎண்
ணாதேயென்று சொல்லிற்று. * மத்தே. ௰௫: ௰௧.

௰௬. இதுவோ மூன்றுதரஞ் சம்பவித்தது; திரும்பப்
பாத்திரம் வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுது.

௰௭. ஆனால் பேதுரு தனக்குள்ளே தான் கண்ட தரி
சனம் என்னமோ என்று சந்தேகப்படுகையிலே
கொர்நேலியுவால் அனுப்பப்பட்ட மனுஷர் சீமோ
னுடைய வீட்டைத் தேடிக் கேட்டறிந்து வாசற்
படியிலே நின்றார்கள்.

௰௮. பேதுருவென்னும் மறுபேர் கொண்ட சீமோன்
இங்கே விருந்தாயிருக்கிறானோ என்று கூப்பிட்டு விசாரித்
தார்கள்.

௰௯. பேதுருவோ வெளிப்பட்ட தரிசனத்தின் மேலே
சிந்தனையாயிருந்தபோது ஆவியானவர் அவனுடனே
இதோ மூன்று பேர் உன்னைத் தேடுகிறார்களென்றார்.

௨௰. ஆகையால் நீ எழுந்து இறங்கி ஒன்றுக்குஞ் சந்தேகப்

படா

படாமல் அவர்களுடனே கூடப்போ; ஏனென்றால் நாம் அவர்களை அனுப்பினேனென்றார்.

௨௧. அப்பொழுது பேதுரு கொர்னேலியுவினால் தன்னண்டைக்கு அனுப்பப்பட்ட மனுஷரண்டைக்கு இறங்கிப் போய்: இதோ நீங்கள் தேடுகிறவன் நான்தான்; நீங்கள் வந்திருக்கிற காரணமென்னவென்றான்.

௨௨. அப்பொழுது அவர்கள்: நீதிமானும் பராபரனுக்குப் பயந்தவனும், யூதருடைய சாதியினால் எல்லாம் நல்லவனென்று சாட்சி பெற்றவனுமாகிய கொர்னேலியுவென்கிற நூற்றுக்கதிபதி உம்மைத் தன் வீட்டுக்கழைப்பிக்கவும் உம்மாலே வார்த்தைகளைக் கேட்கவுந் தேவதத்தமாய்ப் பரிசுத்த தூதனாலே கற்பிக்கப்பட்டானென்றார்கள்.

௨௩. அப்பொழுது அவர்களை உள்ளே அழைத்து விருந்து கொடுத்தான். மறுநாளிலே பேதுரு அவர்களுடனே கூடப் புறப்பட்டான்; யொப்பேயூராரான சகோதரரில் சிலரும் அவனுடனே கூட வந்தார்கள்.

௨௪. மறுநாளிலே கெசாரியாவுக்குள்ளே பிரவேசித்தார்கள். கொர்னேலியுவோ தன் உறவின்முறையாரையுஞ் சேர்ந்த சிநேகிதரையுங்கூட வரவழைத்து அவர்களுக்குக் காத்திருந்தான்.

௨௫. பேதுரு உள்ளே பிரவேசிக்கிறபோதே கொர்னேலியு அவனுக்கெதிர்கொண்டுபோய் அவன் பாதத்திலே விழுந்து பணிந்து கொண்டான்.

௨௬. ஆனாலே பேதுரு அவனை எடுத்து: எழுந்திரும் நானும் ஒரு மனுஷன்தானென்றான்.

௨௭. அவனுடனே சம்பாஷித்துப் பிறபாடு உள்ளே போய் அநேகர் கூடி வந்திருக்கிறதைக் கண்டான்.

௨௮. அப்பொழுதவன் அவர்களுடனே சொன்னதாவது: அன்னியசாதியானண்டை ஒட்டிக்கொள்ளுகிறதோ வருகிறதோ யூதமனுஷனுக்குத் தகாத காரியமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்; ஆனால் ஒருமனுஷனையுந் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றுஞ் சொல்லாதிருக்கப் பராபரன் எனக்குக் காண்பித்தார்.

௨௯. ஆகையால் அழைத்தனுப்பப்பட்ட நான் எதிர்ப் பேசாமலும் வந்தேன். இப்போதும் என்ன காரியத்துக்காக என்னை அழைத்தனுப்பினீர்களென்று கேட்கிறேனென்றான்.

௩௰. கொர்னேலியு சொன்னதாவது: நாலுநாளைக்கு முன்னே இந்நேரமட்டுக்கும் நான் உபவாசித்து ஒன்பதாம்மணிவேளையிலே என் வீட்டிலே செபம் பண்ணிக்கொண்டிருந்தேன்; அப்பொழுது இதோ! பிரகாசமுள்ள உடையுடனே ஒருபுருஷன் என் முன்பாக வந்து நின்று:

௩௧. கொர்னேலியுவே! * உன் செபம் கேட்கப்பட்டு, உன் தருமங்கள் பராபரனுக்கு முன்பாக ஞாபகமாச்சுது. * ஞா. ௩: ௰௩.

௩௨. இப்போதும் நீ யொப்பேக்கு மனுஷரை அனுப்பி

பேதுருவென்று மறுபேர்கொண்ட சீமோனை வர
வழைப்பி; அவன் கடலண்டைத் தோல் பதமிடுகிறவனாகிய
சீமோனுடைய வீட்டிலே தங்கியிருக்கிறான்; அவன்
வந்தபோது உனக்குச் சொல்லுவானென்றார்.

௩௩. ஆகையால் அந்நேரமே உம்மண்டைக்கு
மனுஷரை அனுப்பினேன்; நீர் வந்தது நல்ல காரியம்
இப்போது பராபரனாலே உமக்குக் கற்பிக்கப்பட்டது
களெல்லாவற்றையுங் கேட்க நாங்களனைவரும் இங்கே
பராபரனுக்கு முன்பாக இருக்கிறோமென்றான்.

௩௪. பேதுருவென்பவன் தன் வாயைத் திறந்து
சொன்னதாவது: * பராபரன் முகதாட்சணியமுள்ளவ
ரல்லவென்றும்; * ரோம. ௨: ௰௧.

௩௫. எந்தச் சாதியிலும் அவருக்குப் பயந்து
நீதியைச் செய்கிறவன் அவருக்கு உகந்தவனென்றும்
மெய்யாய் உணர்ந்துகொள்ளுகிறேன்.

* ஏசா. ௫௭: ௯. எ. அதி. ௭: ௯.

௩௬. அவர் எல்லாருக்குங் கர்த்தராயிருக்கிற யேசு
கிறிஸ்துவைக்கொண்டு சமாதானத்தைச் சுவிசேஷ
மாய் அறிவித்து, இஸ்றவேல் புத்திரருக்கு அனுப்பின
வார்த்தையானது உங்களுக்குத் தெரியாததல்ல.

* மத். ௨௮: ௰௮.

௩௭. நாசரேத்தூரானாகிய யேசுவை பராபரன் * பரி
சுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் எப்படி அபி
ஷேகம்பண்ணினாரென்றும்; பராபரன் அவரோடே
கூடயிருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராக
வும் பிசாசின் வல்லமையால் ஒடுக்கப்பட்ட யாவரையுங்
குணமாக்குகிறவராகவும் சுற்றித்திரிந்தாரென்றும்;

* சங்கீ. ௪௫: ௮.

௩௮. யோவான் பிரசங்கித்த ஞானஸ்நானத்துக்குப்
பிற்பாடு * கலிலேயா துவக்கி யூதேயா முழுதும் நடந்த
வர்த்தமானத்தை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

* மத். ௪: ௰௨. மாற்.

௩௯. அவர் யூதருடைய தேசத்திலும் யெருசலேமி
லுஞ் செய்தவைகளுக்கெல்லாம் நாங்கள் சாட்சிகளா
யிருக்கிறோம்; அவரை ஒரு மரத்திலே தூக்கிக் கொலை
செய்தார்கள்.

௪௰. அவரைப் பராபரன் மூன்றாநாளிலே எழுப்பி
பிரசன்னமாய்க் காணப்படப்பண்ணினார்.

௪௧. எல்லாச் சனத்துக்குமல்ல; அவர் மரித்தோரி
லிருந்தெழுந்த பிற்பாடு அவரோடே போசித்துக்
குடித்தவர்களும் பராபரனால் முன் நேமிக்கப்பட்
டிருந்த சாட்சிகளுமாகிய எங்களுக்குத்தானே.

௪௨. சனத்துக்குப் பிரசங்கிக்கவும்; * தாம் உயிரோ
டிருக்கிறவர்களுக்கும் மரித்தோருக்கும் பராபரனால்
குறிக்கப்பட்ட நியாயாதிபதியென்று திடசாட்சியாக
ஒப்பிக்கவும் அவர் எங்களுக்குக் கற்பித்தார்.

* மத். ௨௫: ௩௧. ௨. திமோ. ௪: ௧. ௨.

௪௩. அவர்

௪௩. இவர்பேரிலே விசுவாசிக்கிறவனெல்லாம் இவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப்பெறுகிறானென்று * தீர்க்கதரிசிகளெல்லாரும் இவருக்குச் சாட்சிகொடுக்கிறார்களென்றான். * ௩: ௨௪.

௪௪. பேதுரு இந்த வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருக்கையிலே, வசனத்தைக் கேட்டவர்களெல்லார்மேலும் பரிசுத்தஆவி இறங்கினார்.

௪௫. அப்போ பேதுருவுடனே கூடவந்திருந்த சுன்னத்துள்ள விசுவாசிகள், பரிசுத்தஆவியின் வரம் அஞ்ஞானசாதியார்மேலும் ஊற்றப்பட்டதென்று விஸ்மயப்பட்டார்கள்.

௪௬. ஏனென்றால் அவர்கள் பாஷைகளைப் பேசுகிறதையும் பராபரனை மகிமைப்படுத்துகிறதையும் கேட்டார்கள். அப்போ பேதுரு பிரத்தியுத்தரமாக:

௪௭. நம்மைப்போலே பரிசுத்தஆவியைப் பெற்ற இவர்கள் ஞானஸ்நானம்பெறாதபடிக்கு யாரேகிலுந் தண்ணீரைத் தடைபண்ணலாமோ வென்று சொல்லி,

௪௮. அவர்கள் கர்த்தருடைய நாமத்திலே ஞானஸ்நானம் பெறக்கற்பித்தான். அப்போ அவனைச் சிலநாளைக்கிருக்கவேண்டிக்கொண்டார்கள்.

யக. அதிகாரம்.

பேதுரு சுன்னத்தில்லாதவர்களுடனே தான் கலந்ததுக்குக் காரணத்தைச் சொன்னது.

அஞ்ஞானசாதியாரும் பராபரனுடைய வசனத்தை ஏற்றுக்கொண்டதை யூதேயாவிலிருக்கிற அப்போஸ்தலரும் சகோதரருங் கேட்டார்கள்.

௨. பேதுரு எருசலேமுக்கு வந்தபோது சுன்னத்துள்ளவர்கள் அவனுடனே:

௩. நீர் சுன்னத்தோலுள்ள மனுஷருடைய கிருகத்திற் பிரவேசித்து அவர்களோடே போசித்தீரென்று குறையாய்ப்பேசினார்கள்.

௪. அப்போ பேதுரு வரிசையாய் அவர்களுக்கு விபரிக்கத் தொடங்கிச்சொன்னதாவது:

௫. நான் யொப்பேயூரிலே செபம்பண்ணிக்கொண்டிருந்தேன்; அப்போது ஞானப்பரவசமாய் ஒரு தரிசனங்கண்டேன்; பெரிய துப்பட்டியைப்போலொரு கூடு வானத்திலிருந்து நாலுமூலைகளிலும் கட்டப்பட்டிறங்கி என்னிடத்திலே வந்தது. * ய: ௯. ௱௨.

௬. அதிலே நான் கண்ணோக்கிப்பார்த்தபோது பூமியிலுள்ள நாலுகால் சீவசெந்துக்களையும், காட்டுமிருகங்களையும், ஊரும்பிராணிகளையும், ஆகாசத்துப்பறவைகளையுங் கண்டேன்.

௭. அப்பொழுது என்னுடனே: பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசியென்றுரைக்கிற ஒரு சத்தத்தைக் கேட்டேன்.

௮. நானோவெனில்: அப்படியல்ல, ஆண்டவரே, ஏனெனில் தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற தொன்றும் ஒருக்காலும் என் வாய்க்குள் போனதில்லையென்றேன்.

௯. ஆனாலச்சத்தமானது இரண்டாம் விசை வானத்திலிருந்துண்டாய், எனக்குப் பிறத்தியுத்தரமாக: பராபரன் சுத்தமாக்கினதுகளை நீ தீட்டாக எண்ணாதேயென்று சொல்லிற்று.

௰. இப்படி மூன்றுதரஞ் சம்பவித்தது, மறுபடியும் எல்லாம் வானத்துக்குத் தூக்கிக்கொள்ளப்பட்டுது.

௰௧. இதோ உடனே செசாரியாவிலிருந்து என்னண்டைக்கனுப்பப்பட்ட மூன்று மனுஷர் நானிருந்த வீட்டுக்கு முன்னே வந்து நின்றார்கள்.

௰௨. ஆவியோவெனில் என்னுடனே: நீ ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல் அவர்களுடனே கூடப்போவென்றார். ஆதலால் இந்த ஆறு சகோதரரும் என்னுடனே கூட வந்து, அந்த மனுஷனுடைய வீட்டுக்குள் பிரவேசித்தோம்.

௰௩. அப்போ அவன் தன்னுடைய வீட்டிலே தானொரு தேவதூதன் நிற்கக் கண்டதையும்: நீ யோப்பேக்கு மனுஷரை அனுப்பி, பேதுருவென்று மறுபேர் கொண்ட சீமோனை அழைப்பி,

௰௪. அவன் நீயும் உன் வீட்டார் அனைவரும் இரட்சிக்கப்படும் வார்த்தைகளை உன்னுடனே சொல்லுவானென்று அவன் தன்னுடனே சொன்னதையும் எங்களுக்கறிவித்தான்.

௰௫. ஆனால் நான் பேசத் துவக்குகையில், பரிசுத்த ஆவி ஆதியிலே நம்முடைய மேலிறங்கினது போல அவர்கள் மேலுமிறங்கினார்.

௰௬. அப்போ. யோவான் தண்ணீரினாலே ஞானஸ்நானம் பண்ணுவித்தான், நீங்களோவெனில் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பண்ணப்படுவீர்களென்று கர்த்தர் சொன்ன வார்த்தையை நினைவு கூர்ந்தேன். * ௧: ௫.

௰௭. இப்போதாகையால் கர்த்தராகிய யேசு கிறிஸ்துவின் பேரிலே விசுவாசித்த அவர்களுக்கு பராபரன் நமக்குக் கொடுத்ததுக்குச் சரியான ஈவைக் கொடுத்திருக்கக்கொள்ள, பராபரனைத் தடைபண்ண நானெம்மாத்திரம் பெலவானாயிருந்தேனென்றான்.

௰௮. அவர்கள் இதுகளைக் கேட்டபோது, அமர்ந்து: அப்படியானால் புறசாதியாருக்கும் பராபரன் சீவனுண்டாகிறதுக்கு மனந்திரும்புதலைக் கட்டளையிட்டாரென்று பராபரனை மகிமைப்படுத்தினார்கள்.

அந்தியோகியா பட்டணத்துப் புறசாதி
யாருக்குள்ளே கிறிஸ்துவசங்கோரு
சபையுண்டானது.

௰௬. ஜேஸுத்

௰௯. ஸ்தேவானிமித்தியமாய் * எழும்பின உபத்திரத்தினாலே சிதறிப்போனவர்களோ பெனிக்கே தேசம், சீப்பிருதீவு, அந்தியோக்கியா பட்டணம் மட்டுக்கும் நடந்து, வசனத்தை யூதருக்குமாத்திரமேயல்லாமல் மற்றொருத்தருக்குஞ் சொல்லாதிருந்தார்கள். * அ: ௧.

௨௰. ஆனாலவர்களில் சீப்பிருதீவாருங் கிரேனே பட்டணத்தாருஞ் சிலரிருந்தார்கள், அவர்கள் அந்தியோக்கியாவுக்குள் பிரவேசித்து, கிரேக்கருடனே பேசி, கர்த்தராகிய யேசுவைச் சுவிசேஷமாய் அறிவித்தார்கள்.

௨௧. அவர்களுடனே கூடக் கர்த்தருடைய கையிருந்ததினாலே திரளான கூட்டம் விசுவாசித்து, கர்த்தரண்டைக்கு மனந்திரும்பினார்கள்.

௨௨. அவர்களுடைய செய்தி யெருசலேமிலிருக்கிற சபையின் செவிகளுக்குக் கேழ்வியாய், அவர்கள் பர்னபாவை அந்தியோக்கியா மட்டுக்கும் போக அனுப்பினார்கள்.

௨௩. அவன் வந்து சேர்ந்து, பராபரனுடைய கிருபையைக் கண்டபோது சந்தோஷப்பட்டு, கர்த்தரண்டையிலே மனநிறைவாய் * நிலைகொண்டிருக்க எல்லாருக்கும் புத்தி சொன்னான். * ௰௩: ௪௩.

௨௪. ஏனெனில் அவன் நல்லமனுஷனும் பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாயிருந்தான்; வெகுசனங் கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்பட்டது.

௨௫. ஆனால் பர்னபா சவுலைத் தேட, தர்சுவுக்குப் புறப்பட்டுப்போய், அவனைக் கண்டுபிடித்து அந்தியோக்கியாவுக்கு அழைத்துக்கொண்டுவந்தான்.

௨௬. அப்போ சம்பவித்ததேதென்றால், அவர்கள் ஒரு வருஷகாலமாய்ச் சபையிலே கூடியிருந்து வெகுசனத்தைப் போதிவித்தார்கள். முதல் முதல் அந்தியோக்கியாவிலேதானே சீஷர் கிறிஸ்தவர்களென்றழைக்கப்பட்டார்கள்.

பஞ்சத்திலே கிறிஸ்தவர்கள் யூதேயா
விலுள்ள சபைக்குத் தர்மசகாயம்
பண்ணி அனுப்பினது.

௨௭. அந்நாட்களிலே யெருசலேமிலிருந்து தீர்க்கதரிசிகள் அந்தியோக்கியாவுக்கு வந்தார்கள்.

௨௮. அவர்களில் * ஆகாபு என்று பேர்கொண்ட ஒருத்தன் எழுந்திருந்து, பூச்சக்கரமெங்கும் மகா பஞ்சம் வருமென்று ஆவியினாலே குறிப்பாய்க் காட்டினான். அது அப்படியே கிலவுதியு ராயனுடைய நாட்களிலே வந்து சம்பவித்தது. * ௨௧: ௰.

௨௯. ஆனால் * சீஷரில் அவரவர் தங்களாலியன்றமாத்திரம் யூதேயாவிலே குடியிருக்குஞ் சகோதரருக்குத் தர்மசகாயம் பண்ணியனுப்ப நிர்ணயித்துக்கொண்டார்கள். * ரோமர். ௰௫: ௨௬. ௨௭.

௩௰. அப்படியே அவர்கள் செய்து, பர்னபா சவுலென்கிறவர்கள் கையிலே கொடுத்து மூப்பரண்டைக்கனுப்பினார்கள்.

௧௨. அதிகாரம்.

யாக்கோபு கொலைப்பட்டதும்
பேதுரு க்ஷேமமாய்த்
தப்பினதும்.

அந்தக்காலத்திலே ஏரோதென்ற ராசா சபையிலே சிலர்மேலே தீங்குசெய்யக் கைபோட்டு,

௨. யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலைசெய்தான்.

௩. இது யூதருக்கு இதமானதென்று கண்டு பேதுருவையும் பிடிக்க அப்புறந்தொடர்ந்தான். அப்போ புளிப்பில்லா அப்பங்களின் நாட்களாயிருந்தது.

௪. அவனைப்பிடித்துக் காவலிலே வைத்து நாலு நாலு சேவகர் வசமாய் அவனைக் காக்கும்படி ஒப்புவித்துப் பஸ்காவுக்குப் பிற்பாடு அவனைச் சனத்துக்கு முன்பாகக் கொண்டுவர மனதாயிருந்தான்.

௫. அப்படியே பேதுரு காவலிலே காக்கப்பட்டான். ஆனால் சபையினாலே அவனுக்காகப் பராபரனை நோக்கிக் கருத்தான செபம் பண்ணப்பட்டது.

௬. ஏரோது அவனை வெளியே கொண்டுவரப்போற அந்த ராத்திரியிலோவென்றால் பேதுரு ரெண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு ரெண்டு சேவகர் நடுவே நித்திரைபண்ணிக்கொண்டிருந்தான். கதவுக்கு முன்னிருந்த காவலாளிகளோவெனில் காவலைக் காத்தார்கள்.

௭. அப்போ கர்த்தருடைய தூதன் அங்கே வந்து நின்றான். அறையிலே வெளிச்சம் பிரகாசித்தது. அவன் பேதுருவை விலாவிலே தட்டி எழுப்பி: சீக்கிரமாய் எழுந்திரு என்றான். அப்போ சங்கிலிகள் அவனுடைய கைகளை விட்டு விழுந்தது. * ௫: ௰௯.

௮. தூதன் அவனுடனே: அரையைக்கட்டி உன் பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள் என்றான். அவன் அந்தப்படி செய்தான். அப்போ அவனுடனே: உன் வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு என்னைப் பின்செல்லென்றான்.

௯. அவன் புறப்பட்டு அவனைப் பின்சென்று தூதனாலே செய்யப்பட்டது மெய்யென்று அறியாமல், தான் தரிசனங்காண்கிறதாய் நினைத்தான்.

௰. முதலாம் ரெண்டாங் காவல்களைக் கடந்தபிறபாடோவெனில், பட்டணத்துக்குப் போற இருப்புக்கதவண்டைக்கு வந்தார்கள்; அது தானாய் அவர்களுக்குத் திறவுண்டது. அவர்கள் புறப்பட்டு ஒரு வீதிநெடுக நடந்துபோனார்கள்; உடனே தூதன் அவனை விட்டகன்றான்.

௰௧. பேதுருவுக்குத் தெளிவுவந்தபோது கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பி என்னை ஏரோதேயினுடைய கைக்கும் யூதருடைய சனத்தின் எதிர்பார்க்குதல் எல்லாத்துக்கும் நீங்கலாக்கிவிட்டாரென்று இப்போ மெய்யாய் அறிந்திருக்கிறேனென்றான்.

௧௨. இபபடி அவனுககு அறிவுணடானபோது மற
குஎனனறுபேர்கொணடயோவானுடையதாயாகியம
ரியாளவீட்டுக்குவநதான, அவவிடத்திலே அனேகர்
கூடிசெபமபணணிகொணடிருநதார்கள.

௧௩. பேதுருவாசலக்கதவைதடடினபோதோ வெ
ளிலறோதேனனறுபேர்கொணட ஒருவேலைக்காரி
ஒட்டுக்கேடக வநதாள.

௧௪. அவள பேதுருவினசததததை அறிநதுகொணடு
சநதோஷததினாலேவாசலை திறவாமல, உளளே
ஓடிப்பேதுருவாசலுககுமுனனேநிறகிறதை அறிவித
தாள.

௧௫. அவர்கள அவளுடனே: பீததுககிறுயானனறார்
கள. ஆனால அவள அதுமெயயதானனறுதிடடபபடுததி
னாள. அவர்களோவெனில: அதுஅவனுடையதூதன
எனறார்கள.

௧௬. ஆனாலபேதுருபினனையுநதடடிககொணடி
ருநதான. அவர்களதிறநதபோது அவனைககணடுவிய
மீததார்கள.

௧௭. அவனோவெனிலஅவர்களை சராசசலபபணணா
திருககககையமததகாதர்தனனை காவலிலிருநது
எபபடிஅழைததுவநதாரெனறதை அவர்களுககுவி
ரிதது, இதுகளையாககோபுககுஞசகோதரருககுமஅறி
வியுஙகோளெனறுசொலலி புறப்பட்டு, வேறேரு
இடததுககுபபயணமபோனான.

௧௮. * பொழுதுவிடிநதபோதுபேதுருஎனனமானா
னெனறுச்சேவகருககுளளேயுணடானகலககங
கொஞசமாயிருநததிலலை. * ரு: ௨௨. ௨௩.

௧௯. ஏரோதேதேயோவெனில அவனைததேடி, கா
ணாமறபோனபோது, காவலாளிகளை குசாசல
கேட்டுஅவர்களைக்கொணடுபோககசசொலலியூதே
யாவிலிருநது கேசாரியாவுககிறஙகிபோய அஙகே
சஞசரிததான.

ஏரோதேசுககுவநதசாககிணை.

௨௰. ஆனாலஏரோதேதீருயர்பேர்ஙகுசீதோனியரி
பேரிலே பொஙககேறறனமாயிருநதான. அவர்க
ளோவெனிலஏகமனபபடடு அவனிடததுககுவநது
ராசாவினபிறதானியாகியபலஸததுவை சசமமதபப
டுததிதஙகள தேசமராசாவினதேசததினாலே பிழைககு
தெனறுசமாதானஙகேடடார்கள.

௨௧. ஆனாலகுறிததநாளிலேஏரோதேராசவஸதிரத
தை உடுததிகொணடு, ஙாயாசனததினமேலே உடகா
ர்நது அவர்களுககுவாககு பிரசஙகமபணணினான.

௨௨. குமபோவெனில: இதுதேவசததமமனுஷசத
தமலலவெனறு ஆரபரிததார்கள.

௨௩. ஆனாலஅவனபராபரனுககுமகிமையைசசெலுத
தாதபடியினாலே, உடனேகர்ததனுடைய தூதனஅவ
னையடிததான, அதினாலஅவனபுழுபபுழுததுமாநதான.

௨௪. ஆனாலபராபரனுடையவசனமவளர்நதுபெரு கிறறு.

௨௫. பரனபாவுஞசவுலுமோவெனறால, தஙகள ஊழியததைநிறைவேறறினபிறபாடு, மாறகுவெனறு மறுபெயர்கொணடயோவானைககூடடிககொணடு யெருசலேமைவிடடுததிருமபினார்கள.

௰௧: ௨௯. ௩௰.

௰௩. அதிகாரம.

பரனபாவுமபவுலுமதெயவகற
பிணையினாலேயனுபபபபடடு
பிறதீவுகளுக்குவநதுசெயத
காரியஙகள.

அநதியோகியாசபையிலேயேவெனறால பரனபாவும நீகெரெனனபபடடசீமேயோனும, கிரேனேஊராகியலூசியும, நாலதேசாதிபதியாகியஏரோதேயுடனேகூடவளர்நதமானாயெனும, சவுலுமெனகிற சில * தீர்ககததெரிசிகளும போதகருமிருநதார்கள.

* ௰௧: ௨௭.

௨. அவர்களசபையிலே கர்ததருககுஆராதனைசெயது உபவாசிககிறபோது, பரிசுததஆவியானவர்: * பரனபாவையும ** சவுலையுமநான அழைததவேலைககு அவர்களைநமககுபபிரிததுககொளளுஙகோளெனறார்.

* ௪: ௩௬. ௩௭. ௰௧: ௨௪. ** ௯: ௰௫.

௩. அபபோதுஉபவாசிததுஜெபமபணணி, ** அவர்கள மேலேகைகளைவைதது, அனுபபிவிடடார்கள.

* ௰௪: ௨௩. ** ௬: ௬.

௪. அபபடியேஅவர்கள பரிசுததஆவியினால அனுப பபபடடு செலெஊககியபபடடணததுககுவநது, அஙகேயிருநதுகப பலேறிசசீபபிறுதீவுககுபபோனார்கள.

௫. சாலமிபபடடணததுககுவநதபோது, யூதருடைய ஆலயஙகளிலேபராபரனுடைய வசனததைஅறிவித தார்கள. * யோவானும அவர்களுடையஊழியக காறனாயிருநதான. * ௰௨: ௰௨. ௨௫.

௬. அவர்கள பாபபோபபடடணமடடுககும தீவைக கடநதுவநதபோது, பர்யேசுவெனறுபேர்கொணட யூததமாயககாறனுஙகளளததீர்ககததெரிசியுமானஒ ருயூதனைககணடார்கள.

௭. அவனவிவேகமுளள மனுஷனாகியசெர்கியுப வுலுவெனகிறபிரதிநிதியுடனேகூடயிருநதான; இவன பரனபாவையுஞசவுலையுமவரவழைதது, பராபரனு டையவசனததைககேடகவாஞசையாயிருநதான.

௮. ஆனல * யூததமபனககாறனெனறு அர்ததங் கொளளுமபேராயிஎலிமாஎனனபபடடவன பிறதி துரையைவிசுவாசததுககுவிலககபபிரயாசபபடடு அவர்களோடெதிர்ததுநினறான.

௨. மோசே. ௭: ௰௧.

௯. பவுலு

௯. பவுலென்று சொல்லப்பட்ட சவுலோவென்றால, பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய் அவனமீதில கண்வைத்தான்:

௰. எல்லாக்கபடமும எல்லாப்பொல்லாப்புமா நிறைந்தவனே, பிசாசின மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே, நீ கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுகிறாயோ, யோவ. ௮: ௪௪.

௧௧. இப்போதும கர்த்தருடைய கை உனமீதில வருவதினால நீ கொஞ்சகாலத்து சூரியனைக காணாமல இருட்டுயிருப்பாயென்றான. உடனே அந்தகாரமும இருளும அவனமீதில விழுந்தது. அவன திரிந்து தனக்குக்கை கொடுக்கிறவர்களைத்தேடினான.

௧௨. அப்போ பிரதிதானுசமபு நிகழ்ந்ததைக் கண்டு கர்த்தருடைய போதகத்துக்காக அதிசயப்பட்டு விசுவாசித்தான.

௧௩. ஆனால பவுலும அவனைக்கூடிருந்தவர்களும பாப்போவை விட்டுக்கப்பலேறிப்பம்பிலியாவிலிருக்கும பெர்கேபட்டணத்துக்கு வந்தார்கள. யோவானோவென்றால அவர்களைவிட்டுப்பிரிந்து யெருசலேமுக்குத்திரும்பினான.

அவர்கள பிசிதியா தேசத்திலுள்ள அந்
தியோகியாவிலே சுவிசேஷத்
தை அறிவித்தது.

௧௪. அவர்களோவென்றால பெர்கேயிலிருந்து புறப்பட்டுப்போய், பிசிதியா தேசத்திலுள்ள அந்தியோகியாவுக்குவந்து, ஓய்வுநாளிலே ஆலயத்துக்குள்ளே பிரவேசித்து உட்கார்ந்தார்கள.

௧௫. ஆனால நியாயப்பிரமாணமும தீர்க்கதரிசிகளும வாசிக்கப்பட்டுத் தீர்ந்தபிறபாடு ஆலயத்தலைவர்கள அவர்களைக்கண்டு: சகோதரரானபுருஷரே, ஜனத்துக்குப்புத்தியான வார்த்தைகளுங்களிடத்திலுண்டானால வசனியுங்கோவென்று சொல்லச்சொன்னார்கள.

௧௬. அப்போ பவுலெழுந்து கையமர்த்தி, சொன்னதாவது: இஸ்ரவேல மனுஷருமபராபரனுக்குப்பயந்தவர்களுமான சனங்களே, கேளுங்கோள.

௧௭. இந்த இஸ்ரவேல சனத்தினுடைய பராபரன நம்முடைய பிதாக்களைத் தெரிந்துகொண்டு, சனத்தை எகிப்துவென்கிற பரதேசத்திலே உயர்த்தி, அதிலிருந்து அவர்களை உயர்ந்த புயத்தினாலே புறப்படப்பண்ணி,

௧௮. நாற்பது வருஷகாலமாய் வனாந்தரத்திலே அவர்கள நடக்கையைப் பொறுத்திருந்து,

௧௯. கானான தேசத்திலே ஏழு சாதிகளை அழித்து, அவர்கள தேசத்தை அவர்களுக்குச் சுதந்தரமாகப் பங்கிட்டு,

௨௰ அதற்குப்பிறபாடு ஏறக்குறைய நானூற்றைம்பது வருஷத்துக்குப்பின்பு, ஞாயாதிபதிகளைச் சாமுவேல தீர்க்கதரிசிமட்டுஞ்சனங்களையாளப்பண்ணிவந்தார்.

உக. அதுமுதல் ராசாவைக் கட்டளையிடக் கேட்டார்கள். அப்போ பராபரன் அவர்களுக்கு நாற்பது வருஷமாக கீசுடைய குமாரனாகிய சவுலென்கிற பென்யமீன் கோத்திரபுருஷனைக் கொடுத்தார்.

உஉ. அவனை விலக்கிவிட்டபின்பு தாவீதை அவர்களுக்கு ராசாவாக எழுப்பி: * நம்முடைய இருதயத்துக்கேற்ற மனுஷனாகிய ஈசாயின் குமாரனாகிய தாவீதைக் கண்டுபிடித்தோம், அவன் நம்முடைய சித்தமான காரியங்களை எல்லாஞ் செய்வானென்று அவனைக்குறித்துச் சாட்சியுங் கொடுத்தார்.
* க. சாமு. யங: யச. யசு: யஉ.

உங. இவனுடைய * வித்திலே பராபரன் தம்முடைய வாக்குத்தத்தத்தின்படியே இஸ்றவேலுக்கு யேசுவை ரட்சகராக எழுப்பினார்.
* உ. சாமு. எ: யஉ. மத. க: க.

உச. இவருடைய பிரவேசத்துக்கு முன்னே யோவான் இஸ்றவேல் சனத்துக் கெல்லாங் குணப்படுதலின் ஞானஸ்நானத்தைப் பிரசங்கித்தான்.

உரு. ஆனாலே யோவான் தன ஓட்டத்தை நிறைவேற்றுகிறபோது நீங்கள் என்னை ஆரென்று நினைவுகொள்ளுகிறீர்கள்! * நானவரல்ல, இதோ ** எனக்குப் பின்னே வருகிறார், அவருடைய பாதரட்சையை அவிழ்க்கத் தான் பாத்திரவானல்லவென்றான்.
* யோவா. க: உய. ** லூ. ங: யசு.

உசா. ஆபிரகாமுடைய வங்கிஷ பிள்ளைகளாகிய சகோதரரான மனுஷரே! உங்களில் பராபரனுக்குப் பயந்திருக்கிறவர்களுமானவர்களே! உங்களுக்கிந்த ரட்சிப்பின் வார்த்தை அனுப்பப்பட்டது.

உஎ. எருசலேமிலே குடியிருக்கிறவர்களும் அவர்கள் தலைவரும் அவரையும் ஓய்வுநாள்தோறும் வாசிக்கப்படுகிற தீர்க்கதரிசிகளின் சத்தங்களையும் அறியாதே போய் அவரை ஆக்கினைக்குள்ளாக்கித் தீர்க்கத்திலே அதுகளை நிறைவேற்றி,

உஅ. மரணத்துக்கு முகாந்திரமொன்றுங் காணாதிருந்தும் அவரைக் கொலைசெய்யப் பிலாத்துவை வேண்டிக்கொண்டார்கள்.

உகூ. அவரைக் குறித்தெழுதியிருக்கிறதுகளையெல்லாம் அவர்கள் முடித்தபிறபாடே அவரை மரத்திலிருந்திறக்கிக் கல்லறையிலே வைத்தார்கள்.

ஙய. ஆனாலே பராபரன் அவரை மரித்தோரிலிருந்தெழுப்பினார்.

ஙக. அவர் தம்முடனே கூடக் கலிலேயாவிலிருந்து எருசலேமுக்கு வந்தவர்களுக்கு அனேக நாளமட்டாகத் தோற்றினார். அவர்கள் சனத்துக்கு அவருடைய சாட்சிகளாயிருக்கிறார்கள்.

ஙஉ. யேசுவை எழுப்பினதினாலே பராபரன் பிதாக்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த வாக்குத்தத்தத்தை அவர்கள் பிள்ளைகளாகிய நமக்கு நிறைவேற்றினாரென்று நாங்களும் உங்களுக்குச் சுவிசேஷமாக அறிவிக்கிறோம்.

௩௩. அப்படி * இரண்டாஞ் சங்கீதத்திலும்: நீர் நம்முடைய குமாரனாயிருக்கிறீர்; இன்று நாம் உம்மைச் ஜெனிப்பித்தோமென்றெழுதியிருக்குது. * சங்கீ. ௨: ௭.

௩௪. இனி அழிவுக்குச் சேரும்படாதபடிக்கு அவரை மரித்தோரிலிருந்தெழுப்பினதைக் குறித்து: * தாவீதுக்கு உண்டான மெய்யான தயவுகளை உங்களுக்குக் கட்டளையிடுவேனென்கிறபிரகாரமாய்ச் சொன்னார்.
* ஏசா. ௫௫: ௩.

௩௫. ஆகையால் வேறேயிடத்திலும்: * உம்முடைய பரிசுத்தவானை அழிவைப் பார்க்க ஒட்டீரென்று சொல்லியிருக்குது. * சங்கீ. ௰௬: ௰.

௩௬. * தாவீதோவென்றால் தன் காலத்திலே பராபரனுடைய சித்தத்துக்கு ஊழியஞ் செய்த பிற்பாடு நித்திரை அடைந்து, தன் பிதாக்களிடத்திலே சேர்க்கப்பட்டு அழிவைக் கண்டான். * ௨. ௨௯.

௩௭. பராபரன் எழுப்பினவரோ அழிவைக் கண்டதில்லை.

௩௮. ஆகையால் சகோதரராகிய மனுஷரே! இவர் மூலமாய் உங்களுக்கு * பாவமன்னிப்பு அறிவிக்கப்படுகிறதென்று உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது.
* லூக. ௨௪: ௪௭.

௩௯. நீங்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே எதுகளுக்கு நீங்கி நீதிமான்களாகக் கூடாதிருந்ததோ அதுகளெல்லாத்துக்கும் விசுவாசிக்கிறவனெவனும் இவராலே நீங்கி * நீதியாகிறான். * ஏசா. ௫௩: ௬. ௰௧.

௪௰. ஆகையால் * தீர்க்கதரிசிகளின் புஸ்தகத்திலே: * ஆப. ௧: ௫.

௪௧. அசட்டைக்காரரே! நீங்கள் பார்த்து * ஆச்சரியமாய் அழியுங்கோளென்னில்; ஏனென்றால் உங்களுக்கு விவரித்துச் சொன்னாலும் நீங்கள் விசுவாசியாத கிரியை ஒன்றை யான் உங்கள் நாட்களிலே நடப்பிப்பேனென்றுரைக்கப்பட்டது உங்கள் மீதில் வராதபடிக்குப் பாருங்கோளென்றான்.

* ஏசா. ௨௯: ௯.

௪௨. அவர்கள் யூதருடைய ஆலயத்திலிருந்து புறப்பட்டுப் போகிறபோதோவென்றால், இந்த வார்த்தைகளை அடுத்த ஓய்வுநாளில் ஜனங்களுக்குச் சொல்லப்பட, புறஜாதியார் வேண்டிக்கொண்டார்கள்.

௪௩. ஆலயச் சபைக்கு விடை கொடுபட்டபின் யூதரிலேயும் யூதமார்க்கத்தமைந்த பக்தியுள்ள பேர்களிலும் அநேகர் பவுலையும் பர்னபாவையும் பின்சென்றார்கள்; அவர்களுடனே பேசி; பராபரனுடைய கிருபையிலே * நிலைகொண்டிருக்க அவர்களைப் போதித்தார்கள். * ௰௧: ௨௩. ௰௪: ௨௨.

௪௪. பின்வரும் ஓய்வுநாளிலேயோவென்றால் கொஞ்சங்குறையப் பட்டணத்தாரெல்லாம் பராபரனுடைய வசனத்தைக் கேட்கக் கூடிவந்தார்கள்.

௪௫. யூதரோவென்றால் ஜனக்கூட்டங்களைக் கண்டபோது

பொறாமை

பொறாமையினாலே நிறையப்பட்டு, பவுலினாலே சொல்லப்பட்டவைகளுக்கு விரோதமாய்ப் பேசி, தூஷணித்தெதிர்த்தார்கள்.

௪௬. ஆனாலப்பவுலும் பறனபாவுந் தயிரியங்கொண்டு, சொன்னதாவது: முந்தி உங்களுக்குப் பராபரனுடைய வசனஞ்சொல்லப்படவேண்டியதாயிருந்தது, நீங்களோவெனில் அதைத் தள்ளிவிட்டு, உங்களை நீங்களே நித்தியசீவனுக்குப் பாத்திரராகத் தீர்த்துக்கொள்ளுகிறபடியினாலே, இதோ புறசாதியாரண்டைக்குத் திரும்புகிறோம்.

௪௭. ஏனெனில்: * நீர் பூமியினுடைய கடைசிபரியந்தமும் ரெட்சிப்பாகயிருக்கத்தக்கதாக உம்மைச் சாதிகளின் வெளிச்சமாக வைத்தேனென்னப்பட்டபடியாய்க் கற்த்தர் எங்களுக்குக் கற்பித்தாரென்றார்கள். * யெச. ௪௯: ௬.

௪௮. புறசாதியார் அதைக்கேட்டுச் சந்தோஷப்பட்டு, கற்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தி, நித்தியசீவனுடைய ஒழுங்குக்குக் கேணங்கின யாவரும் விசுவாசித்தார்கள்.

௪௯. ஆனாலே கற்த்தருடைய வசனமந்தத் தேசமெங்கும் பிரபலியமாக்கப்பட்டது.

௫௰. யூதரோவெனில் பத்தியுங்கனமுமுள்ள ஸ்திரீகளையும் பட்டணத்து முதலாளிகளையுமெழுப்பிவிட்டு, பவுலுமீதும் பறனபாமீதுந் துன்பம் எழுப்பி, அவர்களைத் தங்களெல்லைகளுக்குப் புறம்பாகத் துரத்திவிட்டார்கள்.

௫௧. ஆனாலவர்கள் * தங்கள் கால்களுடைய தூளை அவர்கள் மேலசாட்சியாக உதறிப்போட்டு, இக்கோனியப்பட்டணத்துக்கு வந்தார்கள். * மத். ௰: ௰௪.

௫௨. சீஷரோவெனில் சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிறையப்பட்டார்கள்.

௰௪. அதிகாரம்.

அவர்கள் இக்கோனி, லீஸ்திரா, தெர்பே
என்கிறபட்டணங்களிலே சுவிசே
ஷத்தைப் பிரசங்கித்து, அந்தியோகி
யாவுக்குத் திரும்பினது.

இக்கோனியிலே சம்பவித்ததேதென்றாலே அவர்கள் ஒருமித்து யூதருடைய ஆலயத்துக்குள்ளே பிரவேசித்து, யூதரிலுங் கிரேக்கரிலுந் திரளான கூட்டம் விசுவாசிக்கத்தக்கதனமாய்ப் பேசினார்கள்.

௨. விசுவாசியாத யூதரோவெனில் சகோதரருக்கு விரோதமாய்ப் புறசாதியாருடைய ஆத்துமாக்களை எழுப்பிவிட்டுப் பகையுண்டுபண்ணினார்கள்.

௩. ஆனாலவர்கள் அங்கே வெகுகாலஞ் சஞ்சரித்துக் கற்த்தர் மீதிலே தயிரியமுள்ளவர்களாய்ப் போதகம்பண்ணினார்கள். அவர் தம்முடைய கிருபையின் வசனத்துக்குச் சாட்சிகொடுத்து, * அடையாளங்களும் அற்புதங்க

னும் அவர்கள் கைகளால் செய்யப்படும்படி வரமளித்தார்.
* ௫: ௰௨.

௪. பட்டணத்தின் ஜனங்கள் பிரிந்து / சிலர் யூதரோடுஞ் சிலர் அப்போஸ்தலரோடுஞ் சேர்ந்திருந்தார்கள்.

௫. ஆனால் அவர்களை நிந்திக்கவுங் கல்லெறியவும் புறசாதியாராலும் யூதராலும் அவர்கள் தலைவராலுங் கூட்டமுண்டான போது /

௬. அவர்கள் அதை அறிந்து / லிக்கவோனியாவின் பட்டணங்களாகிய லிஸ்திராவுக்குந் தெர்பேக்கும் அதுகளின் சுற்றுப்புறத்துக்கும் * ஓடிப்போய் /
* மத். ௰: ௨௩.

௭. அங்கே சுவிசேஷத்தை அறிவிக்கக் கொண்டிருந்தார்கள்.

௮. ஆனால் லிஸ்திராவிலே / * தன் தாயின் கெற்பத்திலிருந்து சப்பாணியாய்ப் பிறந்து ஒருக்காலும் நடவாதிருந்த காலுகள் வழங்காத ஒரு மனுஷன் உட்கார்ந்திருந்தான். * ௩: ௨.

௯. அவன் பவுல் பேசுகிறதைக் கேட்டான். இவன் அவனை உற்றுக் கண்ணோக்கி / ரெட்சிக்கப்படுவதற்கான விசுவாசம் அவனுக்குண்டென்று கண்டு /

௰. மகா சத்தத்தோடே: * உன் காலுகளை ஊன்றி செவ்வையாய் எழுந்து நில்லென்றான். அப்போது அவன் குதித்தெழுந்து நடந்தான். * ஏச. ௩௫: ௬.

௰௧. ஜனங்களோவென்றால் பவுல் செய்ததைக் கண்டு தங்கள் சத்தத்தை உயர்த்தி / லிக்கவோனியா பாஷையிலே: * தேவர்கள் மனுஷ ரூபமாக நம்மண்டைக்கு இறங்கி வந்தார்களென்று சொல்லி / * ௨௮: ௬.

௰௨. பர்னபாவை யூபித்தரென்றும் பவுலையோ / அவன் வார்த்தையை நடத்தினபடியினாலே மெர்க்கூரியுசென்றும் அழைத்தார்கள்.

௰௩. அவர்களுடைய பட்டணத்திலிருந்த யூபித்தருடைய பூசாரியோ எருதுகளையும் பூமாலைகளையும் வாசலண்டையிலே கொண்டுவந்து / ஜனங்களோடே கூடப் பலியிட மனதாயிருந்தான்.

௰௪. அப்போஸ்தலராகிய பர்னபாவும் பவுலும் அதைக் கேட்டபோது / தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு / ஜனங்களுக்குள்ளே ஓடி / கூக்குரலிட்டுச் சொன்னதாவது:

௰௫. மனுஷரே / ஏன் இதுகளைச் செய்கிறீர்கள் / நாங்களும் உங்களோடொத்தபாடுள்ள மனுஷராயிருந்து / நீங்கள் இந்த வீண் தேவர்களை விட்டு / * வானத்தையும் பூமியையுஞ் சமுத்திரத்தையும் அதுகளிலுள்ள சகலத்தையும் உண்டாக்கின சீவனுள்ள பராபரனண்டைக்குத் திரும்பவேணுமென்று உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கிறோமே. * சங். ௱௪௬: ௬. அபி. ௰௪: ௭.

௰௬. * சென்ற காலங்களிலே அவர் எல்லாச் சாதிக

ளையும

ளாயும் * தங்கள் தங்கள் வழிகளிலே நடக்க விட்டிருந்
தும் * யஎ: ஙய. ** சங்கீ. அஎ: யஅ.

யஎ. அவர் நன்மை செய்து வானத்திலிருந்து நமக்
கு மழைகளையும் செழிப்புக் காலங்களையும் அருளிக் கொடுத்து
ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய இரு
தயங்களை நிரப்பினதினாலே தம்மைச் சாட்சியில்லாமல் விடாதிருந்
தாரென்றார்கள்.

யஅ. இவைகளை அவர்கள் சொல்லியும் ஜனங்க
ள் தங்களுக்குப் பலியிடாதபடிக்கு அமர்த்துவது வெகு
அரிதாயிருந்தது.

யகூ. ஆனால் அந்தியோகியாவிலும் இக்கோனியாவிலு
மிருந்து யூதர்கள் வந்து ஜனங்களை ஏவிவிட்டு * பவுலை
கல்லெறிந்து அவன் செத்துப்போனானென்று நினைத்து
பட்டணத்துக்குப் புறம்பே இழுத்துக்கொண்டுபோனார்கள்.

* உ. கொரி. யக: உரு.

உய. ஆனால் சீஷர் அவனைச் சூழ்ந்து நிற்கையிலே அவ
ன் எழுந்து பட்டணத்துக்குள் பிரவேசி
த்து மறுநாள் பர்னபாவுடனே கூடத் தெர்பைக்
குப் புறப்பட்டுப்போனான்.

உக. அந்தப் பட்டணத்துக்கு அவர்கள் சுவிசேஷத்தை
அறிவித்து அநேகரைச் சீஷராக்கின பின்பு அவர்கள்
லீஸ்த்திராவுக்கும் இக்கோனியாவுக்கும் அந்தியோகியாவுக்
குந் திரும்பி,

உஉ. சீஷருடைய ஆத்துமாக்களைத் திடப்படுத்தி விசு
வாசத்திலே நிலைத்திருக்கும்படி புத்திசொல்லி * நா
ம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராச்சி
யத்துக்குள் பிரவேசிக்கவேண்டியதென்று அவர்களுக்குச்
சொன்னார்கள். * மத். யசா: உச.

உங. அந்தந்தச் சபைகளிலே அவர்களுக்கு மூப்பரை
த் தெரிந்துவைத்து உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்
கள் விசுவாசித்துப் பற்றின கர்த்தருக்கு அவர்
களை ஒப்புவித்தார்.

உச. பிசீதியாவைக் கடந்து பம்பிலியாவிலே
வந்து,

உரு. பெர்கேயிலே வசனத்தைச் சொல்லி, அத்தா
லியாப் பட்டணத்துக்குப் போய்,

உசா. அங்கே கப்பலேறி, தாங்கள் நிறைவேற்றின
கிரியைக்காகத் தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்
கப்பட்டு * புறப்பட்ட இடமாகிய அந்தியோகியாவுக்
கு வந்தார்கள். * யங: ங.

உஎ. வந்து சேர்ந்து சபையைக் கூட்டி, பராபரனானவர்
தங்களோடேகூட இருந்து செய்த யாவற்றையும்,
அவர் புறஜாதிகளுக்கு
விசுவாசத்தின் கதவைத் திறந்ததையும் அறி
வித்தார்கள்.

உஅ. அங்கே சீஷருடனே கூட வெகுகாலம் சஞ்சரித்தி
ருந்தார்கள்.

௰௫. அதிகாரம்.

அப்போஸ்தலரும் மூப்பரும் எருசலேமிலே யோசனைசங்கங் கூடினது.

சிலர் யூதேயாவிலிருந்து இறங்கிவந்து: * நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே சுன்னத்தையடையாவிட்டால், இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்று சகோதரரைப் போதகம்பண்ணினார்கள்.

* கலா. ௫: ௨—௪.

௨. அவர்களுடனே பவுலுக்கும் பற்னபாவுக்கும் வெகு வாக்குவாதமுண்டானபோது, இந்தச் சங்கதியினிமித்தியமாகப் பவுலும் பற்னபாவும் அவர்களில் வேறே சிலரும் யெருசலேமிலிருக்கிற அப்போஸ்தலரண்டைக்கும் மூப்பரண்டைக்கும் போகவேண்டுமென்று தீர்த்துக்கொண்டார்கள்.

௩. அப்படியே அவர்கள் சபையினாலே வழியனுப்பப்பட்டு, பெனிக்கேயையுஞ் சமாரியாவையும் ஊடேபோய், புறசாதியாரின் மனந்திரும்புதலை யறிவித்து, சகோதரரெல்லாருக்கும் மகா சந்தோஷத்தையுண்டாக்கினார்கள்.

௪. யெருசலேமுக்கு வந்துசேர்ந்தபோது அவர்கள் சபையினாலும் அப்போஸ்தலராலும் மூப்பராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பராபரன் தங்களுடனே கூடியிருந்து எத்தனை பெரிய காரியங்களைச் செய்தாரென்றதையும் அறிவித்தார்கள்.

௫. ஆனால் பரிசேயர் சமயக்காரரில் விசுவாசிகளான சிலர் எழுந்திருந்து, அவர்களைச் சுன்னத்துப்பண்ணவும் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவுங் கற்பிக்கவேணுமென்றார்கள்.

௬. ஆனால் அப்போஸ்தலரும் மூப்பரும் இந்தக் காரியத்தைச் சந்தித்துப் பார்க்கக் கூடினார்கள்.

௭. வெகுதர்க்கம் உண்டானபோது பேதுரு எழுந்திருந்து அவர்களுடனே சொன்னதாவது: சகோதரராகிய புருஷரே, வெகுநாட்களுக்கு முன்னே உங்களில் [illegible] * என்னுடைய வாயினாலே புறசாதியார் சுவிசேஷத்தின் வார்த்தையைக் கேட்கவும் விசுவாசிக்கவுமாகப் பராபரன் என்னைத் தெரிந்துகொண்டிருக்கிறாரென்கிறதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். * ௰: ௪௪—௪௮.

௮. * இருதயங்களை அறிந்திருக்கிற பராபரன் அவர்களுக்குச் சாட்சி தந்து, நமக்கும் அவர்களுக்கும் ** ஏது வித்தியாசமும் பண்ணாமல், நமக்குக் கொடுத்ததுபோல அவர்களுக்கும் பரிசுத்த ஆவியைக் கொடுத்து,

* சங்கீ. ௭: ௰. ** ௰: ௩௪. ௩௫.

௯. விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களைச் சுத்தமாக்கினார்.

௰. ஏ

௰. இப்போது நம்முடைய பிதாக்களாலும் நாமளாலும் சுமக்கக்கூடாதிருந்த நுகத்தடியைச் சீஷர் கழுத்தின்மீதில் வைக்கிறதினாலே நீங்கள் பராபரனைச் சோதிப்பானேன்.

௰௧. கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவின் * கிருபையினாலே ரெட்சிக்கப்படுவோமென்று விசுவாசிக்கிறோம்; அவர்களும் அந்தப்படி ரெட்சிக்கப்படுவார்களென்றான். * எபே. ௨: ௮. ௯.

௰௨. அப்போ திரள் எல்லாம் அமர்ந்திருந்து, பர்னபாவும் பவுலும் தங்களைக் கொண்டு பராபரன் எத்தனை பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் புறசாதிகளிடத்திலே செய்தாரென்று விபரித்துச் சொல்லுகிறதைக் கேட்டார்கள்.

௰௩. அவர்கள் பேசி அமர்ந்தபின்பு யாக்கோபுவென்பவன் உத்தாரஞ் சொல்லி உரைத்ததாவது: சகோதரராம் புருஷரே, என்னைக் கேளுங்கோள்.

௰௪. பராபரன் முந்திப் புறசாதியாரிலிருந்து ஜனத்தைத் தம்முடைய நாமத்துக்காகத் தெரிந்துகொள்ள நோக்கிப் பார்த்தருளினதைச் சீமோன் சொன்னானே.

௰௫. இதற்குத் தீர்க்கதரிசிகளுடைய வசனங்களும் ஒத்திருக்குது.

௰௬. மறுமனுஷரும் நம்முடைய நாமம் விளங்கிய சகல சாதிகளுங் கர்த்தரைத் தேடும்படிக்கு,

௰௭. நாம் இதற்குப்பின்பு திரும்பி வந்து, விழுந்த தாவீதினுடைய கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதின் இடிந்தவைகளைத் திரும்பக் கட்டி, அதைத் திரும்பச் செவ்வையாய் நிறுத்துவோமென்று, இவைகளெல்லாஞ் செய்கிற கர்த்தர் சொல்லுகிறாரென்றதாய் * எழுதியிருக்குது. * ஆமோ. ௯: ௰௧. ௰௨.

௰௮. அநாதிகாலமுதலாய்ப் பராபரனுக்கு அவருடைய கிரியைகளெல்லாந் தெரிந்திருக்குது.

௰௯. ஆகையினாலே புறசாதிகளிலே பராபரனிடத்துக்கு மனந்திரும்புகிறவர்களைக் கலங்கப்பண்ணாமல்,

௨௰. விக்கிரகங்களுடைய அசுசங்களுக்கும் வேசித்தனத்துக்கும், நெருக்குண்டு செத்ததுக்கும், இரத்தத்துக்கும் விலகியிருக்கக் கோளென்று அவர்களுக்கு எழுதவேணுமென்று நான் தீர்க்கிறேன்.

௨௧. ஏனென்றால் பூர்வகாலங்கள் தொட்டுச் சகல பட்டணங்களில் மோசேயின் ஆகமம் பிரசங்கிக்கும் அவர்களுண்டு; ஓய்வுநாள்தோறும் அது ஜெபஆலயங்களில் வாசிக்கப்படுமென்றான்.

௨௨. அப்போ தங்களில் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுஞ் சகோதரருக்குள் நாயகமுள்ளவர்களுமான பர்சபா என்னும் பேர் கொண்ட யூதாவையுஞ் சீலாவையும் பவுலோடும் பர்னபாவோடுங் கூட அந்தியோகியாவுக்கு அனுப்ப அப்போஸ்தலருக்கும் மூப்பருக்கும் சபையனைத்துக்கும் நன்றாய்க் கண்டுது.

௨௩. அவ

௨௩. அவர்கள இவர்கள கையில எழுதியனுபபினதா வது: அநதியோகியாவிலும சீரியாவிலும சிலிசியாவி லுமிருககும புறசாதியாரான சகோதரருககு அப போஸதலரும மூபபரும சகோதரருமாகிய நாஙகள சநதோஷமுணடாகவாழததுகிறோம.

௨௪. நாஙகள கறபியாதிருககிற சிலர எஙக ளிடததிலிருநது புறபபடடு உஙகளை வாரததைக ளாலேகலககி சுனனததிடவும நியாயபபிரமா ணததைககைககொளளவுஞசொலலி உஙகள ஆதது மாககளைக குழபபிபபணணினாரகளெனறு நாங கள கேளவிபபடடபடியினாலே,

௨௫. நாஙகள தஙகள ஆததுமாககளை நமமுடைய கற ததராகிய யேசுகிறிஸதுவின நாமததுககாக ஒபபுக கொடுததமனுஷருமாய எஙகளுககுப பிரியருமானபற நபாவோடும பவுலோடுங்கூட,

௨௬. தெரிநதுகொளளபபடட பேர்களை உஙக ளிடததுககனுபப, ஒருமனபபடடுக கூடினஎஙக ளுககு நனறாயககணடது.

௨௭. ஆகையினாலே யூதாவையுஞசீலாவையும அனுப பினோம அவர்கள வாயமொழியாகவும உரைப பார்கள.

௨௮. ஏதெனனில, விககிரகஙகளுககுப படைததது களும இரததமும நெருககுணடுசெததும வேசித்தனமு மாகிய இவைகளை விலகியிருககவேணடியதுதான. இதுக ளொழியவேறே அதிகமான பாரம ஒனறும உஙகள மேலே போடாதிருகக, பரிசுத்த ஆவிககும எஙகளுக குமநனறாயககணடது.

௨௯. இதுகளுககு நீஙகள உஙகளைவிலககமாயக காததால நனறு செயவீர்கள. சுகமாயிருஙகோ ளெனறெழுதினார்கள.

௩௰. அபபோ அவர்கள அனுபபிவிடபபடடு, அநதி யோகியாவுககுவநது, தரளாககூடடிநிருபததை ஒபபி விததார்கள.

௩௧. அவர்களதை வாசிதது அநதத தேறறரவுக காகச்சநதோஷபபடடார்கள.

௩௨. ஆனாலயூதாவுஞ சீலாவுந தாஙகளுநதீரக்கத தரிசிகளாயிருநத படியினாலே, வெகுவசனததினாலே சகோதரருககுப்புததிசொலலி, அவர்களைத திடபபடுததி,

௩௩. சிலகாலம அஙகேயிருநது, பிறபாடு சகோதர ராலசமாதானததுடனே அபபோஸதலரணடைக கனுபபிவிடபபடடார்கள.

௩௪. ஆனாலசீலாவுககு அஙகே தரிததிருககிறதுநன றாயககணடது.

௩௫. பவுலுமபறனபாவுமோவெனறால அநதி யோகியாவிலே சஞசரிதது, வேறே அநேகரோடுங கூடகறததருடைய வசனததை உபதேசிதது, சுவிசேஷ மாயபபிறசஙகிததுககொணடிருநதார்கள.

பவுலுககுமபறனபாவுககும
வநதபிரிவினை.

௩௬. சிலநாளைக்குப் பிற்பாடு பவுலு பர்னபாவை நோக்கி: நாம் கர்த்தருடைய வசனத்தைப் பிரசங்கித்த சகல பட்டணங்களிலுமுள்ள சகோதரரெப்படியிருக்கிறார்களென்று திரும்பிப் போய்க் கண்டுசந்திப்போமென்றான்.

௩௭. அப்போ பர்னபா * மாற்கு என்னப்பட்ட யோவானைக் கூட அழைத்துக்கொண்டுபோகவேணுமென்றான். * ௧௨: ௧௨. ௧௩: ௫.

௩௮. பவுலோவென்றால்: * பம்பிலியாவிலே தங்களை விட்டுப்பிரிந்து தங்களோடே கூடக் கிரியைக்கு வராமல்போனவனை அழைத்துக்கொண்டுபோகாதிருக்கிறது ஞாயமென்றெண்ணினான். * ௧௩: ௧௩.

௩௯. அப்போ அவர்களுக்குள்ளே ஒருத்தரொருத்தர் விட்டுப் பிரியவும் பர்னபா மாற்கைக் கூட்டிக்கொண்டு சீப்புருதீவுக்குப் படவேறிப்போகவுந்தக்கதாய கடுங்கோபமுண்டாச்சுது.

௪௰. பவுலுவோவென்றால் சீலாவைத் தெரிந்துகொண்டு சகோதரராலே பராபரனுடைய கிருபைக்கொப்புவிக்கப்பட்டுப் புறப்பட்டு,

௪௧. சூரியாவையுங் கிலிக்கியாவையுஞ் சுற்றிநடந்து சபைகளைத் திடப்படுத்தினான்.

௧௬. அதிகாரம்.

பவுலுமப்படியே சீலாவும் ஆசியா
விலே பயணம்பண்ணினது.

பிற்பாடு தெர்பேக்கும் லீஸ்திராவுக்கும் வந்தான்; அங்கே விசுவாசியான ஒரு யூதஸ்திரீக்குங் கிரேக்கத் தகப்பனுக்குங் குமாரனுந் திமோத்தேயு என்னும் பேர் கொண்ட ஒரு சீஷன் அங்கேயிருந்தான்.

* ௧. திமோ. ௧: ௨.

௨. இவன் லீஸ்திராவிலும் இக்கோனியிலுமிருந்த சகோதரராலே நற்சாட்சிகொண்டவன்.

௩. இவனைத் தன்னுடனே புறப்படுவிக்கப் பவுலு மனதாயிருந்து, அவனைச் சேர்த்துக்கொண்டு, அவ்விடங்களிலிருக்கும் யூதர்நிமித்தமாய்ச் சுன்னத்துப்பண்ணினான்; ஏனென்றால் அவனுடைய தகப்பன் கிரேக்கனாயிருந்தானென்று எல்லாரும் அறிந்திருந்தார்கள்.

௪. அவர்கள் பட்டணங்களிலே நடந்துபோகையிலே, யெருசலேமிலிருக்கும் அப்போஸ்தலராலும் மூப்பராலுந் தீர்ந்த சட்டங்களைக் கைக்கொள்ளும்படிக்கு அவர்களுக்கு ஒப்புவித்தார்கள். * ௧௫: ௨௰.

௫. ஆகையால் சபைகள் விசுவாசத்தில் திடப்பட்டு, தினந்தினங் கணக்குக்குப் பெருகிற்று.

௬. அவர்கள் பிரிகியா கலாத்தியா தேசங்களிலே நடந்துபோகிறபோதோவென்றால், ஆசியாவிலே வசனத்தைச் சொல்லப் பரிசுத்த ஆவியாலே தடைபண்ணப்பட்டு

௭. மீசியதேசததுககுவநதுபீததினியதேசததுககுப போகபபாாததாாகள; ஆனாலும ஆவியானவர் அவர் களைபபோகவொடடாதிருநதார்.

௮. அபபொழுதுமீசியாவைக கடநதுபோய, துரோவா வுககுவநதார்கள.

மககெதோனியதேசததுபிலிபபட் டணததிலநடநத செயதிகள.

௯. ராததிரியிலெபவுலுவுககொருதெரிசனஙகாணப பட்டுது; எனனவெனில, மககெதோனியமனுஷன ஒருததனவநதுநினறு: நீமககெதோனியா விலெவநதுஎஙகளுககுசசகாயஞசெயயெனறு அவ னைவெணடிககொளளுகிறதாயிருநதது.

௰. அவன அநதத தெரிசனததைக கணடபோதெ வெனறால,கரததர் அஙகெயுளள அவர்களுககுச சுவிசெஷத தைப பிரசஙகிககவெணடுமெனறு நாஙகளநிசசே யிததுககொணடு உடனெ மககெதோனியாவுககுப பு றபபடடுபபோகபபாரததொம.

௰௧. அபபடியெதுரோவாவைவிடடு கபபலெறி சாமொததிரககெககெ நெராக மறுநாளிலெநெயாப பொலிககுமநெராயஓடி,

௰௨. அஙகெயிருநதுமககெதோனியதேசததின தலை யானதுமரோமர்குடியெறினதுமான பிலிபபிபபட டணததுககுவநதோம. அநதபபடடணததிலெசிலநாள சஞசரிததிருநதொம.

௰௩. ஓயவுநாளிலெபபடடணததுககு வெளியெபுறப படடுபபொனொம; அவவிடததிலெ செபமபணணப பழககமாயிருநதது. அஙகெநாஙகள உடகாரநதுவந துகூடினஸதிரீகளுடனெபெசினொம.

௰௪. அபபோதியாததிரஊராளுமரெததாமபரமவிற றவளுமாகிய லீதியாளெனறுபெர்கொணட தெய வபததியுளள ஒருஸதிரீ கெடடுககொணடிருந தாள; அவள இருதயததைககரததர் பவுலினால சொல லபபடடதுகளைககவனிபபதறகுததிறநதார்.

௰௫. அவளும அவள வீடடாருமஞானஸநானமபெற றபிறபாடு அவள: நீஙகளஎனனைக கரததருககுவிசு வாசியானவளெனறெணணினால, எனவீடடிலெவந துதஙகியிருஙகெனறு எஙகளை வருநதிககொண டிருககிறாள.

௰௬. அநநாஙகள செபததுககுப போகையில சமபவிததெதெனறால, பீதொனெனனுடைய ஆவி யைககொணடிருநது, குறிசொலலுகிறதினாலெதனனெச மானனகளுககு* வெகுஆதாயததைஉணடாககின ஒரு வெலைககாறிஎஙகளுககெதிர்பபடடாள. * ௰௯: ௨௪.

௰௭. அவள பவுலையுமஎஙகளையும பினசென று:* இநதமனுஷர் உஙகளுககு ரடசிபபின வழியை அ றிவிககிறவர்களாகிய உனனதமான பராபரனுடைய ஊழியககாரரெனறு கூபபிடடாள.

* மாறகு. ௧: ௨௪. ௨௫.

௰௮. இப்படி அனேகநாளாய்ச்செய்தாள். பவுல் சலிப்படைந்தவனாகி, திரும்பிப்பார்த்து, ஆவியிடத்தே: நீ இவளை விட்டுப் புறப்படும்படிக்கு இயேசுக்கிறிஸ்துவினுடைய நாமத்தினாலே கற்பிக்கிறேனென்றான். அந்நேரமே அது புறப்பட்டுப்போச்சுது.

௰௯. அவளுடைய எஜமானர்கள் தங்கள் ஆதாயத்தின் நம்பிக்கை போச்சுதென்று கண்டு, பவுலையுஞ் சீலாவையும் பிடித்து, சந்தைவெளிக்கு தலைவரண்டையிலே இழுத்து,

௨௰. அவர்களை அதிகாரிகளண்டைக்குக் கொண்டுவந்துவிட்டு: இந்த மனுஷர் யூதராயிருந்து நம்முடைய பட்டணத்தைக் கலங்கப்பண்ணி,

௨௧. ரோமாக்கியராகிய நாம் ஏற்றுக்கொள்ளவுஞ் செய்யவுந்தகாத முறைமைகளை அறிவிக்கிறார்களென்றார்கள்.

௨௨. அப்போதும் அவர்களுக்கு விரோதமாய்க்கூட்டமெழும்பிற்று, அதிகாரிகளோவென்றால் அவர்களுடைய வஸ்திரங்களைக் கிழித்துப்போட்டு, அவர்களை அடிக்கச்சொன்னார்கள்.

௨௩. வெகு அடிகளாய் அவர்களை அடித்தபிற்பாடு சிறைச்சாலையிலே வைத்து, அவர்களை பத்திரமாய்க் காக்கச் சிறைச்சாலைக்காரனுக்குக் கற்பித்தார்கள்.

௨௪. அவன் அப்படிப்பட்ட கற்பனையை அடைந்த பிற்பாடு, அவர்களை உள்ளுக்குள்ளான காவலறையிலே போட்டு, அவர்கள் கால்களைத் தொழுவடித்து வைத்தான்.

௨௫. நடுச்சாமத்திலே பவுலுஞ்சீலாவுஞ்செபம் பண்ணி * பராபரனைத் துதித்துப் பாடினார்கள், கட்டுண்டிருக்கிறவர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள். * ௫: ௪௧.

௨௬. அசுப்பிலே சிறைச்சாலையின் அஸ்திவாரங்கள் அசையும்படியாக மகா பூமியதிர்ச்சல் உண்டாய் உடனே * கதவுகளெல்லாந் திறவுண்டு, எல்லாருடைய கட்டுகளும் அவிழ்ந்துபோச்சுது. * ௫: ௰௯.

௨௭. சிறைச்சாலைக்காரன் நித்திரைதெளிந்து, சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக் கண்டு, கட்டுண்டவர்கள் ஓடிப்போனார்களென்று நினைத்து, பட்டயத்தை உருவி, தன்னைக் கொலைசெய்யப்போனான்.

௨௮. பவுலோ மகாசத்தத்துடனே: நீ உனக்குக் கேடொன்றுஞ் செய்யாதே, ஏனென்றால் எல்லாரும் இங்கேயிருக்கிறோமென்று கூப்பிட்டான்.

௨௯. அப்போதவன் வெளிச்சங்களை அழைப்பித்து, உள்ளேஓடி நடுக்கமடைந்தவனாய்ப் பவுலுக்குஞ் சீலாவுக்கும் முன்பாக விழுந்து,

௩௰. அவர்களை வெளியே அழைத்துவந்து: ஆண்டவமாரே, நான் இரட்சிக்கப்படுவதற்குச் செய்யவேண்டியதென்னவென்றான்.

௩௧. அவர்களோவென்றால்: கர்த்தராகிய இயேசுக்

கிறிஸ்து

கிறிஸ்துவின் பேரிலே விசுவாசி, அப்போ நீயும் உன் வீட்டாரும் ரட்சிக்கப்படுவீர்களென்று சொல்லி,

* யோவா. ங: யசா.

ஙஉ. அவனுக்கும் அவன் வீட்டிலிருந்தவர்களெல்லாருக்குங் கர்த்தருடைய வசனத்தைச் சொன்னார்கள்.

ஙங. அவன் அவர்களை அந்நேரத்திலே சேர்த்துக் கொண்டு, அடிகளைக் கழுவி, அவனும் அவனுடையவர்களனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்று,

ஙச. அவர்களைத் தன் வீட்டுக்குள் அழைத்துப்போய், பந்தியமர்த்தி, தன் வீட்டாரெல்லாரோடுங் கூடப் பரமனை விசுவாசித்துப் பூரித்தான்.

ஙரு. பொழுதுவிடிந்தபோது, அதிகாரிகள் தலையாரிகளை அனுப்பி: அந்த மனுஷரை விட்டுவிடென்று சொல்லச் சொன்னார்கள்.

ஙசா. அப்போ சிறைச்சாலைக்காரன் இந்த வார்த்தைகளைப் பவுலுக்குச் சொல்லி: நீங்கள் விடுதலையாகும்படி அதிகாரிகள் சொல்லியனுப்பினார்கள்; ஆகையால் நீங்கள் இப்போ புறப்பட்டு, சமாதானத்துடனே போங்கோளென்றான்.

ஙஎ. ஆனால் பவுல் அவர்களுடனே: நாயமவிசாரிக்கப்படாதவர்களும் * ரோமமனுஷருமான எங்களை வெளியரங்கமாயடித்துச் சிறைச்சாலையிலே போட்டார்கள்; இப்போ எங்களை ரகசியமாய்த் துரத்திவிடுகிறார்களோ, அப்படியல்ல, அவர்களே வந்து எங்களை வெளியே அழைத்துப் போய்விடட்டுமென்றான்.

* உஉ: உரு.

ஙஅ. அப்போ தலையாரிகள் இந்த வார்த்தைகளை அதிகாரிகளுக்கு அறிவித்தார்கள். ரோமராயிருக்கிறார்களென்று அவர்கள் கேட்டபோது பயந்து,

ஙகூ. வந்து அவர்களுடனே பேசி, அவர்களை வெளியே அழைத்து வந்து, * பட்டணத்தை விட்டுப் புறப்பட்டுப் போகவேண்டிக் கொண்டார்கள்.

மத. அ: ஙச.

சய. ஆனால் அவர்கள் சிறைச்சாலையிலிருந்து புறப்பட்டு லீதியாளண்டைக்குப் போய்ச் சகோதரரைக் கண்டு அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, புறப்பட்டுப் போனார்கள்.

யஎ. அதிகாரம்.

தெசலோனிக்கேபட்டணத்தில் நடந்த காரியம்.

அவர்கள் அம்பிப்போலிபட்டணத்தையும் அப்பொலோனியபட்டணத்தையும் கடந்துபோய், யூதருடைய ஆலயமிருக்கும் * தெசலோனிக்கேக்கு வந்தார்கள்.

* க. தெச. உ: க. உ.

௨. பவுலுந் தன் வழக்கத்தின்படியே அவர்களண்டைக்குள் பிரவேசித்து, மூன்று ஓய்வுநாட்களிலே வேதவாக்கியங்களை எடுத்து அவர்களுடனே சம்பாஷித்து,

௩. * கிறிஸ்து பாடுபட்டு மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவேண்டியதாயிருந்ததென்றும், நான் உங்களுக்கறிவிக்கிற இந்த யேசுவே கிறிஸ்துவென்றுந் திருஷ்டாந்தஞ் சொல்லி ரூபித்தான். * லூ. ௨௪: ௨௬. ௪௬.

௪. அவர்களில் சிலரும் பக்தியுள்ள கிரேக்கருடைய வெகுதிரளும் அநேகம் பிரதான ஸ்திரீகளும் விசுவாசமடைந்து, பவுலோடுஞ் சீலாவோடுஞ் சேர்த்துக்கொண்டார்கள்.

௫. ஆனால் விசுவாசியாத யூதர் வயிராக்கியங் கொண்டு, வீணரில் சில பொல்லாத மனுஷரைச் சேர்த்துக்கொண்டு, கூட்டங்கூடிப் பட்டணத்தைக் கலகப்படுத்தி, யாசோனுடைய வீட்டுக்கு முன்பாக வந்து நின்று, அவர்களைக் கும்புக்குள் கொண்டுவர வகைதேடினார்கள்.

௬. அவர்களைக் காணாமல் போனபோதோ, யாசோனையுஞ் சில சகோதரரையும் பட்டணத்துத் தலைவரண்டைக்கிழுத்துவந்து: லோகத்தைக் * கலக்கிறவர்கள் அவர்கள்தான்; இங்கேயும் வந்திருக்கிறார்கள். * ௰௬: ௨௰.

௭. அவர்களை யாசோன் ஏற்றுக்கொண்டான். இவர்களெல்லாரும் யேசுவென்கிற வேறொரு ராசாவுண்டென்று சொல்லி, இராயனுடைய கட்டளைகளுக்கு விரோதமாய்ச் செய்கிறார்களென்று கூப்பிட்டு,

௮. இதுகளைக் கேழ்விப்பட்டிருக்கிறதையும் பட்டணத்துத் தலைவரையுங் கலங்கப்பண்ணினார்கள்.

௯. இவர்கள் யாசோன் கையிலும் மற்றவர்கள் கையிலும் ஜாமீன் வாங்கிக்கொண்டு, அவர்களை விட்டுவிட்டார்கள்.

பெரேயாப்பட்டணத்திலே நடந்த காரியம்.

௰. ஆனால் சகோதரர் உடனே ராத்திரியிலே பவுலையுஞ் சீலாவையும் பெரேயாவுக்கனுப்பிவிட்டார்கள்; அவர்கள் அங்கே வந்து சேர்ந்து யூதருடைய ஆலயத்துக்குப் போனார்கள்.

௰௧. இவர்கள் தெசலோனிக்கேயிலுள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்து, எல்லாம் மனப்பூர்வத்தோடும் வசனத்தை ஏற்றுக்கொண்டு, தினம் வேத எழுத்துக்களை யிதுகள் அப்படியிருக்குமோவென்று * ஆராய்ந்தார்கள்.

* யோவா. ௫: ௩௯.

௰௨. அப்படியே அவர்களில் வெகுபேரும், கனமுள்ள அநேக கிரேக்க ஸ்திரீகளும் புருஷரும் விசுவாசித்தார்கள்.

௰௩. ஆனால் பெரேயாவிலும் பவுலாலுடைய வச

னம்

ணம் பவுலினாலே அறிவிக்கப்படுகிறதைத் தெசலோ
னிக்கேயரான யூதர் அறிந்தபோது அங்கேயும் வந்து
கும்புகளை எழுப்பிவிட்டார்கள்.

௰௪. அப்போ உடனே சகோதரர் பவுலைச் சமுத்
திரத்தின்மேலே போகிறவனைப் போலே காணப்பட
அனுப்பிவிட்டார்கள். ஆனாலும் சீலாவுந் தீமோத்தேயும்
அங்கேயிருந்துவிட்டார்கள்.

அத்தேனே பட்டணத்திலே நடந்த காரியம்.

௰௫. பவுலை வழிவிட அழைத்துப்போனவர்க
ளோ அவனை அத்தேனே மட்டும் அழைத்துப்
போய் சீலாவுந் தீமோத்தேயும் அதிசீக்கிரத்தில் தன்னி
டத்தில் வரவேணுமென்று அவர்களுக்குச் சொல்லக்
கட்டளை பெற்றுப் புறப்பட்டுப்போனார்கள்.

௰௬. அத்தேனேயிலே பவுல் அவர்களுக்குக் காத்
திருக்கும்போது அந்தப் பட்டணம் விக்கிரகங்க
ளால் நிறைந்திருக்கிறதைக் கண்டதினாலே அவனு
டைய ஆவி அவனுக்குள் கடுங்கோபமடைந்தது.

௰௭. ஆகையால் ஆலயத்தில் யூதரோடும் பக்தியுள்
ளபேர்களோடும் சந்தைவெளியிலே எதிர்ப்பட்டவர்க
ளோடும் தினந்தினம் சம்பாஷித்தான்.

௰௮. ஆனால் எப்பிக்கூரரும் ஸ்தோயிக்கருமான
ஞானிகளில் சிலர் அவனுடனே வாக்குவாதம் பண்ணினா
ர்; இந்த வாயாடி என்ன பேசப்போகிறானென்றார்
கள். சிலரோ அந்நிய தேவர்களை அறிவிக்கிறவனாகக்
காணப்படுகிறானென்றார்கள். ஏனெனில் யேசுவையும் உயிர்த்
தெழுந்ததையும் அவர்களுக்குச் சுவிசேஷமாய் அறிவித்
தான்.

௰௯. அவனை மார்ஸ் தேவனுடைய மேட்டுக்கு
அழைத்துக்கொண்டுபோய்: உன்னாலே சொல்லப்படும்
இந்தப் புதிதான உபதேசம் ஏதென்று நாங்கள் அறிய
லாமோ!

௨௰. ஏனெனில் நீ சில நவமான காரியங்களை எங்
கள் செவிகளில் விழப்பண்ணுகிறாய்; ஆகையால் அது
களென்னவென்கிறதை அறியமனதா யிருக்கிறோ
மென்றார்கள்.

௨௰௧. ஏனெனில் அத்தேனேயர் ஜனங்களும் அங்கே
வந்து தங்கின பரதேசத்தாரும் நவமான யாதொரு காரி
யத்தைச் சொல்லுகிறதிலும் கேழ்க்கிறதிலுமே ஒழி
ய வேறொன்றிலும் பொழுதுபோக்க அவர்களுக்கும்
மனதுவராதிருக்கும்.

௨௰௨. பவுல் மார்ஸ் மேட்டின் நடு
வே நின்று சொன்னதாவது: அத்தேனே மனுஷரே
எல்லாக் காரியங்களிலும் உங்களுக்குத் தேவபத்
தி மெத்தவுள்ளதென்று காண்கிறேன்.

௨௰௩. ஏனெனில் நான் சுற்றி நடந்துவந்து உங்கள்
ஆராதனைகளை நோக்கிப் பார்த்தபோது ஒரு பீடத்

ஒத்தக்கண்டேன், அதின்மேல்: அறியாத தேவனுக்கென்றெழுதியிருந்தது, நீங்கள் அறியாமல் பணிகிறவரை நான் உங்களுக்கறிவிக்கிறேன்.

௨௪. லோகத்தையும் அதிலுள்ள சகலத்தையும் உண்டாக்கின பராபரனானவர், தாமே வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கக்கொள்ள, கைவேலைகளான கோவில்களில் வாசமாயிருக்கிறதில்லை.

௨௫. எல்லாருக்குஞ் சீவனையும் சுவாசத்தையுஞ் சகலத்தையுங் கொடுக்கிறவர், * தமக்கு யாதொன்று தேவையானதுபோல், மனுஷர் கைகளாலே பணிவிடைகொள்ளுகிறதுமில்லை. * சங்கீ. ௫௰: ௮—௰௩.

௨௬. அவர் ஒரே இரத்தத்தினாலே மனுஷசாதியை எல்லாம் பூமியின்மீதில் குடியிருக்கப்பண்ணி,

௨௭. அவர்கள் கர்த்தாவைத் தேடி, தடவியாகிலும் பிடிக்கத்தக்கதாக, முன் நிறுணிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையுங் குறித்தார். அவரோவென்றால் நம்மில் ஒருவருக்குந் தூரமானவரல்ல.

௨௮. ஏனெனில் அவருக்குள் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்; உங்களில் சில வித்துவான்களும்: அவருடைய வங்கிஷமாயிருக்கிறோமென்கிறதாகச் சொன்னார்களே,

௨௯. இப்போதும் நாம் பராபரனுடைய வங்கிஷமாயிருக்கக்கொள்ள, * தெய்வமானது மனுஷனுடைய சித்திரவேலையுந் தோற்றமுமான பொன்னுக்காகிலும் வெள்ளிக்காகிலுங் கல்லுக்காகிலும் ஒப்பானதென்று நாம் நினைக்கலாகாது. * ஏசா. ௪௰: ௰௮.

௩௰. * அறியாமையின் காலங்களிலே பராபரன் கண்சாடையாயிருந்தார், இப்போதோவென்றால் குணப்படவேணுமென்று எங்கும் எல்லா மனுஷருக்கும் ** கற்பிக்கிறார். * ௰௪: ௰௬. ௰௭. ** லூ. ௨௪: ௪௭.

௩௧. ஏனெனில் தாம் நேமித்த புருஷனைக்கொண்டு பூச்சக்கரத்தை நீதியாய் நியாயந்தீர்க்கப்போகிற ஒரு நாளை அவர் குறித்திருந்து, அதின் நிச்சயத்தை அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே எல்லாருக்கும் விளங்கப்பண்ணுகிறாரென்றான்.

௩௨. அவர்கள் மரித்தோருடைய உயிர்த்தெழுதலைச் சொல்லக்கேட்டபோதோவென்றால் சிலர் உதடுபிதுக்கினார்கள், சிலரோவென்றால்: பின்னொருவேளை இதைக்குறித்து உன்னைக் கேட்கப்போமென்றார்கள்.

௩௩. இப்படியே பவுலு அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப்போனான்.

௩௪. ஆனாலும் சில மனுஷர் அவனுக்குச் சேர்ந்துகொண்டு விசுவாசித்தார்கள், அவர்களில் தியோனீசியுஸென்ற ஒரு அதிகார புருஷனும், தாமாரி என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீயும், அவர்களுடனே கூட வேறே சிலரும் இருந்தார்கள்.

௰௮. அதிகாரம.

கொரிநதுபபட்டணததிலநடநத செயதிகள.

இதறகு பிறபாடேயெனிலோ பவுலு அததேனேயை விட்டுக கொரிநதுவுக்குவநது,

௨. கலவுதியுயூத ரெல்லோரையும ரோமாவைவிட்டுப்போகக கறபிக்கபபடியினாலே, இததாலியாவிலிருநதுபுதிதாய வநதிருநத அக்கிலா என்று நாமமுள்ள பொந்து தேசததானாகிய ஒருயூதனையும அவன பெணசாதியாகியபிரிஸகில்லாளையும அஙகேகணடு, அவரகளண்டைக்குப்போய,

௩. தான அவர்களோடொத்த தொழிலாளியானபடியினாலே அவர்களிடத்திலே தங்கி * வேலைசெயதான, ஏனெனில கூடாரம பணணுகிற தொழிலாளிகளாயிருநதார்கள. * ௧. கொ. ௪: ௰௨.

௪. ஆனால ஓயவு நாளதோறும ஆலயததிலே சமபாஷிததுயூதரையுங கிரேக்கரையுமபோதிததான.

௫. மககேதோனியாவிலிருநது, * சீலாவுந்தீமோததேயும வநதபோதோவெனில, பவுலு ஆவியிலே நெருக்கப்பட்டு யேசுவேகிறிஸது என்று யூதருக்குததிடசாடசியாயஒப்பிவிததான. * ௰எ: ௰௪. ௰௫.

௬. ஆனால அவர்கள எதிர்த்து நின்று, தூஷணிததபோது, * அவன தன வஸதிரஙகளை உதறி, அவர்களுடனே: உஙகள இரததப்பழி உஙகள தலையின்மேலிருக்கும, நான சுததமாயிருக்கிறேனென்றும, இதுமுதல புறசாதியாரண்டையிலே போறேனென்றுஞ்சொல்லி, * நெகே. ௫: ௰௩.

௭. அவவிடததைவிட்டு யுஸது என்கிறநாமமுடையதேவபத்தியுள்ள ஒருததனுடையவீட்டிலே வநதான, அவன வீடு ஆலயததுடனே சேர்நதாயிருநதது.

௮. ஆலயததலைவனாகிய * கிரிஸபுவோவெனிலதன வீட்டார் அனைவரோடுங் கூடக்கர்ததரைவிசுவாசிததான, கொரிநதியரில அநேகருங்கேட்டுவிசுவாசிததுஞானஸநானமபெற்றார்கள. * ௧. கொ. ௧: ௰௪.

௯. ராததிரியிலே கர்ததர் ஒருதெரிசனததிலே பவுலுவுடனே: * நீபயபபடாதே பேசு, அமநதிராதே,
* உ௩: ௰௧.

௰. ஏனெனிலநான உன்னுடனே கூடஇருக்கிறேன, ஒருததனும உனக்குததீஙகுசெயய உனமேலகைபோடுவதிலலை, ஏனென்றால இநதபபட்டணததிலெனக்கு வெகுசனம உணடென்றார்.

௰௧. அவன ஒருவருஷமும ஆறுமாதமும அஙகேயிருநது, பராபரனுடைய வசனததை அவர்களுக்குள்ளே உபதேசிததான,

௰௨. கல்லியோன அகாயாவிலே பிறதுரையான

தியாயிருக்கையிலே/ யூதர் ஏகமனப்பட்டு பவுலுவுக்கு விரோதமாய் எழும்பி/ அவனை நியாயாசனத்துக்கு முன்பாகக் கொண்டுவந்து:

௰௩. இவன் மனுஷரை நியாயப்பிரமாணத்துக்கு விரோதமான படியாய்ப் பராபரனைச் சேவிக்கப் போதிக்கிறானென்றார்கள்.

௰௪. ஆனால் பவுலு வாய் திறக்கப் போகையிலே/ கல்லியோன் யூதரை நோக்கி: யூதர்களே/ இதொரு அநியாயம் அல்லது பொல்லாத அக்கிரமமாயிருந்தால் உங்களை நான் பொறுத்துக் கேட்கிறது நியாயமாயிருக்கும்.

௰௫. இதுவோ வேண்டுமானால் ஒரு வசனத்துக்கும்/ நாமங்களுக்கும் உங்களுடைய நியாயப்பிரமாணத்துக்கும் அடுத்த தர்க்கமான படியினாலே/ நீங்களே பாருங்கோள்/ ஏனென்றால் இதுகளுக்கு நான் நியாயாதிபதியாயிருக்க எனக்கு மனதில்லையென்று சொல்லி/

௰௬. அவர்களை நியாயாசனத்தைவிட்டுத் துரத்தினான்.

௰௭. ஆனால் கிரேக்கரெல்லாரும் ஆலயத்தலைவனாகிய சொஸ்தேனேயைப் பிடித்து நியாயாசனத்துக்கு முன்பாக அடித்தார்கள். இதுகளிலொன்றையுங் கல்லியோன் விசாரியாதிருந்தான்.

பவுலு யெருசலேமுக்குப் போய
அங்கேயிருந்து அந்தியோ
கியாவுக்கு வந்து பண்ணின பய
ணங்கள்.

௰௮. பவுலு இன்னும் அநேகநாள் அங்கே தரித்திருந்து பிற்பாடு சகோதரர்களையும் விட்டுப் பிரிந்துக்கொண்டு/ தனக்கொரு * பொருத்தனை உண்டாயிருந்தபடியினாலே கெங்கிரெயாவிலே சிரசைச் சவரம்பண்ணிக்கொண்டு சீரியாவுக்குப் போகக் கப்பலேறினான்/ பிரிஸ்கில்லாளும் அக்கில்லாவும் அவனுடனே கூடப் போனார்கள். * ௪. மோ. ௬: ௫.

௰௯. அவன் எபேசுப்பட்டணத்துக்கு வந்து/ அவர்களை அங்கேவிட்டான்/ அவனோவென்றால் ஆலயத்துக்குள்ளே பிரவேசித்து/ யூதரோடே சம்பாஷித்தான்.

௨௰. ஆனால் அவர்கள் அவனை இன்னுஞ் சிலகாலந் தங்களுடனே தங்கவேண்டிக் கொண்டபோது/ அவன் சம்மதியாமல்/

௨௰௧. அவர்களை வழியனுப்பிவித்துக்கொண்டு: வரப்போற பண்டிகையிலே நான் எப்படியும் யெருசலேமிலிருக்கவேணும்/ பராபரனுக்குச் சித்தமேயானால் * திரும்ப உங்களண்டைக்கு வருவேனென்று சொல்லிவிட்டுக் கப்பலேறிப்போய்/ * ௰௯: ௧.

௨௰௨. செசாரியாவுக்கு வந்து/ யெருசலேமுக்குப் போய்ச் சபையை வினவி/ அந்தியோகியாவுக்குப் போனான்.

௨௰௩. அங்கே கொஞ்சகாலஞ் சஞ்சரித்த பிற்பாடு/ அவன் புறப்பட்டு/ வரிசையாய்க் கலாத்தியா தேசத்தையும் பிரிகியா தேசத்தையும் சுற்றி நடந்து/ சீஷரெல்லாரையுந் திடப்படுத்தினான்.

அப்பொல்லோவின் செய்தி.

௨௪. ஆனால் அலெக்சந்திரியபட்டணத்திலே பிறந்தவ
னுஞ் சாதுரியமனுஷனும் வேதவாக்கியங்களிலே வல்ல
வனுமான அப்பொல்லோ என்னும்பேர்கொண்ட ஒரு
யூதன் எபேசுக்கு வந்தான்.

௨௫. இவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்
பட்டவனாயிருந்து, கர்த்தருக்கடுத்தவைகளை அனலான
ஆவியாய்ப் பேசி, திட்டமாய்ப் போதகம்பண்ணி, யோவா
னுடைய ஞானஸ்நானத்தைமாத்திரம் அறிந்திருந்தான்.

௨௬. இவன் ஆலயத்திலே தைரியமாய்ப் பேசத்துவக்கி
னான்; ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன்
பேசினதைக் கேட்டபோது, அவனைச் சேர்த்துக்கொண்
டு, பராபரனுடைய வழியைப் பின்னுந் திட்டமாய்
அவனுக்கு விவரித்தார்கள்.

௨௭. அவன் ஆகாயாவிலே போகவேண்டுமென்றி
ருக்கையில், அவனை ஏற்றுக்கொள்ளத்தக்கதாகச்ச
கோதரர் சீஷருக்கு எழுதினார்கள்; அவன் அங்கே வந்து
கிருபையினாலே விசுவாசியானபேர்களுக்கு
* மிகவும் உதவியாயிருந்தான். * ௧ கொ. ௩: ௬.

௨௮. ஏனென்றால் இயேசுவே கிறிஸ்துவென்று வேத
வாக்கியங்களிலே வெளியரங்கமாக ரூபித்து,
யூதருக்குப் பெலனாய்த் தர்க்கமாடிக்கொண்டிருந்தான்.

௰௯. அதிகாரம்.

பவுல் எபேசுபட்டணத்தில் வந்திருக்கையில் நடந்தது.

அப்பொல்லோ கொரிந்துவிலே இருக்கையில் சம்பு
வித்ததென்னவென்றால், பவுல் மேலான தேசங்களை உருவப்
போய், எபேசுக்கு வந்து, சில சீஷரைக் கண்டான்.

௨. அவர்களுடனே: நீங்கள் விசுவாசிகளானபோ
து, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களோ என்றான்: ஆ
னால் அவர்கள் அவனுடனே: பரிசுத்த ஆவி உண்டென்
கிறதை நாங்கள் கேட்டதேயில்லை என்றார்கள்.

௩. அப்போ அவர்களுடனே: நீங்கள் எது மூலமா
க ஞானஸ்நானம் பெற்றீர்களென்றான். அவர்கள்: *
யோவானுடைய ஞானஸ்நான மூலமாக என்றார்கள்.

* ௰௮: ௨௫.

௪. ஆனால் பவுல் சொன்னதாவது: யோவானே த
னக்குப் பிற்பாடு வருகிறவராகிய கிறிஸ்துயேசுவின்
பேரில் விசுவாசிக்க வேண்டியதென்று ஜனத்துக்குச்ச
சொல்லி, குணப்படுதலுக்கான ஸ்நானங் கொடுத்தான்.

௫. ஆனால் அதைக் கேட்டவர்கள் கர்த்தராகிய யேசுவி
னுடைய நாமமூலமாக ஞானஸ்நானம் பெற்றார்களே
என்றான்.

௬. அவர்கள்மீதில் பவுல் கைகளை வைக்கப்போது
பரிசுத்த ஆவி அவர்கள்மீதில் வந்ததினாலே, அவர்கள்

பா

பாஷைகளைப் பேசி, தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள். * ௨: ௪.

௭. அந்த மனுஷரெல்லாரும் ஏறக்குறையப் பன்னிரண்டு பேராயிருந்தார்கள்.

௮. அவன் ஜெப ஆலயத்துக்குள் பிரவேசித்து, தைரியமாய்ப் பிரசங்கித்து, மூன்று மாதமாகப் பராபரனுடைய ராட்சியத்துக்கடுத்தவைகளைப் பேசி, போதித்துக்கொண்டிருந்தான்.

௯. ஆனால் சிலர் கடினமனதுள்ளவர்களும் அவிசுவாசிகளுமாயிருந்து, திரளுக்கு முன்பாக இந்த மார்க்கத்தை நிந்தித்தபோது, அவன் அவர்களை விட்டு விலகி, சீஷரைப் பிரித்துக்கொண்டு, அநுதினமும் திறன்னு என்கிற ஒருவனுடைய பள்ளிக்கூடத்திலே சம்பாஷித்துக்கொண்டிருந்தான்.

௰. ஆசியாவிலே குடியிருந்த யூதர் கிரேக்கர் அனைவருங் கர்த்தராகிய யேசுவின் வசனத்தைக் கேட்கத்தக்கதாக, இரண்டு வருஷமாய் இப்படி நடந்தது.

௰௧. பவுலின் கைகளினாலே பராபரன் * செய்த வல்லமைகள் கொஞ்சமானதுகளல்ல. * ௰௪: ௩.

௰௨. * அவனுடைய சரீரத்திலிருந்து வேர்வைச் சீலைகளையுங் கச்சைகளையும் முதலாய் வியாதிக்காரர்மேல் கொண்டுவந்து போட, வியாதிகள் அவர்களை விட்டு நீங்கி, பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டுப் புறப்பட்டது. * ௫: ௰௫. ௰௬.

௰௩. அப்பொழுது தேசாந்திரிகளாய்த் திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரிற் சிலர் பொல்லாத ஆவிகள் பிடித்தவர்கள் மேல் கர்த்தராகிய யேசுவின் நாமத்தைச் சொல்லத் துடங்கி: பவுல் பிரசங்கிக்கிற யேசுவின் பேரிலே உங்களை ஆணையிடுகிறோமென்றார்கள்.

௰௪. பிரதான ஆசாரியனாகிய ஸ்கேவா என்கிற யூதனுடைய குமாரர்கள் ஏழுபேர் இதைச் செய்தவர்கள்.

௰௫. ஆனால் பொல்லாத ஆவி பிரதியுத்தரமாக: யேசுவை அறிந்திருக்கிறேன், பவுலையும் அறிவேன், ஆனால் நீங்கள் ஆரென்று சொல்லி,

௰௬. பொல்லாத ஆவியிருந்த மனுஷன் அவர்கள் மீதிலே பாய்ந்து, அவர்களை மேற்கொண்டு, அவர்கள் அம்மணமாகவுங் காயம்பட்டவர்களாகவும் அந்த வீட்டை விட்டோடிப்போகும்படியாய் அவர்கள் பேரிலே பெலஞ்செய்தான்.

௰௭. இது எபேசிலே குடியிருந்த யூதர் கிரேக்கர் அனைவருக்கும் அறியப்பட்டு, அவர்களெல்லார்மேலும் பயம் விழுந்தது; கர்த்தராகிய யேசுவின் நாமம் மகிமைப்பட்டுது.

௰௮. விசுவாசித்தவர்களில் அநேகர் வந்து, தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிட்டார்கள்.

௰௯. வீண் வித்தைக்காரராயிருந்தவர்களில் வெகு பேர்கள் [illegible] பொஸ்தகங்களைக் கொண்டுவந்து சேர்த்து, எல்லார் முன்பாகவுஞ் சுட்டெரித்து,

து,

து/ அதுகளின் விலையைக்கணக்குப்பார்த்து/ ஐம்பதினா யிரம் வெள்ளிக்காசாகக் கண்டார்கள்.

௨௰. அத்தனை பெலனாய் * கர்த்தருடைய வசனம் வ ளர்ந்து திடப்பட்டது. * மத். ௰௩: ௩௧. ௩௨.

௨௧. இதுகள் முடிந்தபிறபாடே பவுலு மக்கெதோனியாவையும் அகாயாவையும் கடந்து யெருசலேமுக்குப் போகத் தன் ஆவியிலே நிர்ணயித்துக் கொண்டு: நான் அங்கே போயிருந்தபிற்பாடு * ரோமாபுரியையும் பார்க்கவேண்டுமென்றான்.

* ரோ. ௰௫: ௨௪. ௨௫.

௨௨. அவன் தனக்கு ஊழியஞ்செய்தவர்களிலிரண்டு பேராகிய தீமோத்தேயுவையும் எராஸ்துவையும் மக்கெதோனியாவுக்கனுப்பி/ ஆசியாவிலே தா ன் சிலகாலமிருந்தான்.

௨௩. அக்காலத்திலே அந்த மார்க்கத்துக் காக * பெரிய கலகமுண்டாச்சுது.

* ௨. கொரிந். ௧: ௮.

௨௪. ஏனென்றால் தெமேத்திரியுவென்னு நாமமுள்ள ஒ ருதட்டான் தியானாளுக்கு கோவில்களை வெள்ளியினா லே பண்ணி/ தொழிலாளிகளுக்கு * அனேகம் ஆதா யம் வருத்திவிருந்தான். * ௰௬: ௰௯.

௨௫. அவர்களையும் அப்படிக்கொத்த வேலைக் கருடைய வேலையாளர்களையும் அவன் கூட்டி/ சொன் னதாவது: மனுஷரே/ நமக்கு அந்த நல்ல பிழைப்பு இந்த வேலையினாலே உண்டாயிருக்கிறதென்றறிவீர் கள்.

௨௬. ஆனால் கைகளினால் உண்டாக்கப்பட்டவைகள் தேவர்களல்லவென்று இந்தப் பவுலு சொல்லி/ எபே சிலே மாத்திரமல்ல/ கொஞ்சந்தட்டிய ஆசியாவெங் கும் வெகு ஜனங்களைப் போதித்து மாறுபாடாக்கினு னென்று கண்டுங் கேட்டுமிருக்கிறீர்கள்.

௨௭. இதுவேயன்றி நமக்குச் சத்துருவுண்டா க மோசமாயிருக்கிறதுந்தவிர/ மகா தேவியாகிய தியா னாளுடைய கோவிலும் எண்ணமற்றுப்போய்/ ஆசி யா முழுதும் பூச்சக்கரமுஞ் சேவிக்கிற அவளுடைய மகி மையும் அழிந்துபோகவும் மோசமாயிருக்கிறதென்றான்.

௨௮. அவர்கள் இதைக்கேட்டு/ கோபத்தினாலே நிறை யப்பட்டு: எபேசியருடைய தியானாளே பெரியவளென்று கூப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்.

௨௯. பட்டணமுழுதுங் கலகத்தினால் நிறைந்தது/. அவர்கள் பவுலுக்கு வழித்துணைவர்களாயிருந்த மக் கெதோனியராகிய காயுவையும் அரிஸ்தர்க்குவையும் பிடித்துப்போய்/ ஏகமனப்பட்டு அரங்கத்துக்குப் பாய்ந்தோடினார்கள்.

௩௰. பவுலும் ஜனங்களுக்குள்ளே போகமனதா யிருந்தபோ தோவென்றால்/ சீஷர் அவனைப் போகவொட்டாதிருந்தார் கள்.

௩௧. அவனுக்குச் சிநேகிதராகிய ஆசியதேசத்து மேலவ ரில் சிலரும் அவனண்டைக்கு ஆளனுப்பி/ அரங்கத் துக்குட் போகவேண்டாமென்றெச்சரித்தார்கள்.

௩௨. சிலரிப்படியுஞ்சிலரப்படியுமாய்க்கூப்பிட்
டார்கள்; ஏனென்றால் சபை கலக்கமாயிருந்தது; அனே
கர் தாங்கள் எதுக்காகக் கூடிவந்தோமென்று அறி
யாதிருந்தார்கள்.

௩௩. ஆனாலும் யூதர் அலெக்சந்தரை முன்னிறுத்துகி
றதுகையிலே கூட்டத்திலே சிலர் அவனைப் போத்தார்கள்;
அலெக்சந்தர் கையமர்த்தி, சனத்துக்கு உத்தரவுசொல்ல
மனதாயிருந்தான்.

௩௪. அவன் யூதனென்று அவர்கள் அறிந்தபோதோ
வெல்லாரு மொருமிக்கமாய் ஏறக்குறைய இரண்டு மணித்தியால
மட்டும் எபேசியாருடைய தியானாள் பெரியவளென்
று கூப்பிட்டுச் சத்தமிட்டார்கள்.

௩௫. ஆனாலும் பிரதியானவன் சனத்தை அமர்த்திச்சொன்
னது என்னவெனில்: எபேசு மனுஷரே, எபேசியாருடைய பட்
டணம் மகா தேவியாகிய தியானாளுக்கும் வானத்தில்
ருந்து விழுந்த சிலைக்கும் கோவிற்பரிசாலகியாயிருக்
கிறதை அறியாத மனுஷனார்.

௩௬. இதுகள் எதிர்ச்சொல்லப்படக்கூடாதகாரி
யங்களாயிருக்கக்கொள்ள, நீங்கள் ஒன்றும் பதறிச்
செய்யாமல் அமர்ந்திருக்கவேண்டியது.

௩௭. ஏனென்றால் கோவிற்கொள்ளைக்காரரல்லா
தவர்களும் உங்கள் தேவியைத் தூஷணியாதவர்
களுமான இந்த மனுஷரை இங்கே கொண்டுவந்தீர்கள்.

௩௮. தேமேத்திரியுக்கும் அவனைச் சேர்ந்திருக்கிற
தொழிலாளிகளுக்கும் ஒருத்தன் மேல் காரியமுண்டா
யிருந்தால் தேசாதிபதிகளுமுண்டு, நியாயநாளுமுண்டு,
துரைகளுமிருக்கிறார்கள்; ஒருத்தரை ஒருத்தர் வழக்குக்
கழைக்கட்டும்.

௩௯. வேறொரு காரியத்தைக் கேட்டீர்க
ளானால் அது நியாயசங்கத்திலே தீர்க்கப்படும்.

௪௰. ஏனென்றால் இந்த அமளிக்கு நாம் கணக்கொப்
பிவிக்கக் காரியம் ஒன்றுமில்லாதிருந்தும், இன்
று நடந்த கலகத்துக்காக நாம் குற்றஞ்சாட்டப்படுமோச
மாயிருக்குதென்று சொல்லி, சபையை அனுப்பிவிட்டான்.

௨௰. அதிகாரம்.

பவுலுடைய பயணங்களும் துரோவா
வுக்கு வந்தபோது நடந்த காரியம்.

அமளியமர்ந்தபிற்பாடோவெனில், பவுல் சீஷர்
களை அழைத்து முத்தமிட்டுக்கொண்டு * மக்கெ
தோனியாவுக்குப் போகப்புறப்பட்டான்.

* க. தீமோ. க: ௩.

௨. அவன் அந்தப் பட்டணங்களை உருவப்போய் அவர்க
ளுக்கு வெகுவார்த்தைகளினாலே புத்திசொல்லி, கிரேக்
கதேசத்திலே வந்தான்.

௩. மூணுமாதம் அங்கே சஞ்சரித்தபிற்பாடு, சீரியா
வுக்குக் கப்பலேறிப்போகமனதாயிருந்த அவன்மே

லே

சீரியாவுக்கு ஏகிப்போகப் பின்னே யோசனை பண்ணப்பட்ட டியால் மக்கெதோனியா தேசவழியாய்த் திரும்பிப் போகத் தீர்மானித்துக்கொண்டான்.

௪. ஆனால் பெரேயா ஊர் சோப்பத்தரும், தெசலோனிக்கேயரில் அரிஸ்தர்க்கும் செக்குந்தும், தெர்பையூர் காயுவும் தீமோத்தேயும், ஆசியா தேசத்தாராகிய தீகிக்குந் திரோப்பீமும் ஆசியா தேசமட்டாக அவனுக்கு வழித்துணையாய் வந்தார்கள்.

௫. இவர்கள் முன்னுக்கப்போய் துரோவாவிலே எங்களுக்குக் காத்திருந்தார்கள்.

௬. நாங்களோவென்றால் புளிப்பில்லாத அப்பங்களின் நாட்களுக்குப் பிறகு பிலிப்பிப்பட்டணத்திலே கப்பலேறி, ஐந்து நாளைக்குள்ளே துரோவாவுக்கு அவர்களண்டையிலே வந்து, அங்கே ஏழுநாள் சஞ்சரித்தோம்.

௭. ஆதிவாரத்து முதல் நாளிலே சீஷர் அப்பம் பிட்கக்கூடி வந்தபோது, பவுல் மறுநாள் புறப்பட வேணுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்துப் பாதிராத்திரி மட்டும் வசனத்தை நீட்டினான்.

௧ கொ: ௰௬. ௨.

௮. அவர்கள் கூடியிருந்த மேல்வீட்டிலே வேணுமென்கிறதற்கு விளக்குகளிருந்தது.

௯. ஆனாலும் ஐத்திகுவென்கிற ஒரு வாலிபனானவன் பலகணியிலே உட்கார்ந்திருந்து, பவுல் வெகுநேரமாய்ச் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் நித்திரையினால் மயக்கப்பட்டு நித்திரைமயக்கத்திலே சாய்ந்து மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து மரித்தவனாய் எடுக்கப்பட்டான்.

௰. பவுலோவென்றால் இறங்கிப்போய் அவன்மேல் விழுந்து அவனைத் தழுவிக்கொண்டு: நீங்கள் சந்தடி பண்ணாதேயுங்கோள், ஏனென்றால் அவனுடைய உயிர் அவனுக்குள் இருக்குதென்றான்.

௩ ராச. ௰௭: ௨௧.

௰௧. பின்பு அவன் மேலேபோய் அப்பத்தைப் பிட்டுப் புசித்து வெகுநேரம் விடியுமட்டும் பேசிக்கொண்டிருந்து புறப்பட்டுப்போனான்.

௰௨. வாலிபனாகிறவனையோவென்றால் உயிருள்ளவனாய்க் கொண்டுவந்து மட்டற்ற ஆறுதலடைந்தார்கள்.

மீலேத்துவிலே பவுலானவர் எபேசை
யின் மூப்பர்களை அழைப்பித்துக்
கொண்டு பண்ணின பிரசங்கம்.

௰௩. நாங்களோவென்றால் முன்னாகக் கப்பலேறி ஆசோ பட்டணத்துக்கு அங்கே பவுலை ஏற்றிக்கொள்ளவேணுமென்று போனோம்; ஏனென்றால் அவன் காலாலே நடந்து போக மனதாயிருந்து இப்படித் திட்டம் பண்ணிக்கொண்டிருந்தான்.

௰௪. அவன் ஆசோவிலே எங்களோடே கூடினபோது நாங்கள் அவனை ஏற்றிக்கொண்டு மித்திலேனுக்கு வந்தோம்.

௰௫. அவ

௰௫. அவ்விடம்விட்டோடி மறுநாள் கீயுதீவுக்கெதிராக வந்து சேர்ந்து மறுநாள் சாமுதீவு பிடித்துத் துரோகில்லியோனிலே தங்கி மறுநாள் மிலேத்துப்பட்டணத்துக்கு வந்தோம்.

௰௬. ஏனெனில் பவுல் ஆசியாவிலே காலம்போக்காதபடிக்கு எபேசுவைக் கடந்தோடத் தீர்த்துக்கொண்டிருந்தான்; அத்தெனில் கூடுமானால் பெந்தெகொஸ்தே நாளிலே யெருசலேமிலிருக்கத் தீவிரித்தான்.

௰௭. ஆனால் அவன் மிலேத்துவிலிருந்து எபேசுவுக்கு ஆளனுப்பிச் சபையின் மூப்பரை வரவழைத்தான்.

௰௮. அவர்கள் அவனண்டையிலே வந்துசேர்ந்தபோது அவன் அவர்களுக்குச் சொன்னதாவது:

௰௯. நான் ஆசியாவுக்கு வந்த முதல்நாள் துவக்கிச் சகல மனத்தாழ்மையோடும் வெகு கண்ணீரோடும் யூதருடைய சதிவினைகளால் எனக்குவந்த சோதனைகளோடுங் கூடக் கர்த்தருக்கூழியஞ்செய்து;

௨௰. பிரயோசனமானதுகளில் ஒன்றையும் உங்களுக்கு அறிவியாதபடிக்கு உங்களுக்கு வெளியாகவும் வீடுகளிலும் போதியாதபடிக்கும் மறைத்துவைக்காமல்;

௨௧. பராபரனிடத்துக்கு மனந்திரும்புதலையும் நம்முடைய கர்த்தராகிய யேசுகிறீஸ்துவைப் பற்றும் விசுவாசத்தையும் யூதருக்குங் கிரேக்கருக்குஞ் சாட்சியாய்ப் பிரசங்கித்து எல்லாக் காலத்திலும் உங்களிடத்தில் நான் எந்தப்பிரகாரமாயிருந்தேனென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். மறு. ௧: ௰௫.

௨௨. இப்போதும் இதோ நான் ஆவியிலே கட்டுண்டு யெருசலேமுக்குப் போகிறேன்; அங்கே எனக்கு எதிர்ப்படுங் காரியங்களை அறியாமற் போகிறேன்.

௨௩. ஆனால் கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்குக் காத்திருக்குமென்று பரிசுத்த ஆவி பட்டணந்தோறுஞ் சாட்சியாய் அறிவிக்கிறதைமாத்திரம் அறிவேன்.

௨௪. ஆகிலும் நானென் ஓட்டத்தையும் பராபரனுடைய கிருபையின் சுவிசேஷத்தைச் சாட்சியாய் அறிவிக்கும்படிக்கு நான் கர்த்தராகிய யேசுவினிடத்திலே பெற்ற ஊழியத்தையும் சந்தோஷத்துடனே முடிக்கும்படியாய் எதற்குங் கவலைப்படேன்; என் பிராணனையும் எனக்கருமையாக எண்ணேன். ௨௧: ௰௩.

௨௫. இப்போதும் இதோ நான் சுற்றித்திரிந்து பராபரனுடைய இராட்சியத்தைப் பிரசங்கம்பண்ணின நீங்களெல்லாரும் இனி என் முகத்தைப் பார்ப்பதில்லையென்று அறிவேன்.

௨௬. ஆனபடியினாலே நான் எல்லாருடைய இரத்தப்பழிக்கும் சுத்தமானவனென்கிறதை இன்றையத்தினம் உங்களுக்குச் சாட்சியாய் அறிவிக்கிறேன்.

௨௭. ஏனெனில் நான் பராபரனுடைய ஆலோசனையெல்லாம் உங்களுக்கு அறிவியாதபடிக்கு ஒன்றையும் மறைத்துவைத்ததில்லை.

௨௮. ஆகை

௨௮. ஆகையாலே நீங்கள் உங்களையும், பராபரன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட அவருடைய சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக்கின மந்தையனைத்தையுங் குறித்தும் மேலுங் கவனிப்பாயிருங்கள்.

௨௯. ஏனென்றால் நான் போனபிற்பாடு மந்தையைத் தப்பவிடாத* கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வருமென்கிறதை நானறிவேன். * மத். ௭: ௰௫.

௩௰. * உங்களிலேதானும் தங்களைப் பின்செல்லச் சீஷரைப்போதிக்கிறதுக்குக் கோணலானதுகளைப் பேசுகிற மனுஷர் எழும்புவார்கள்.

சங்கீ. ௪௧: ௰.

௩௧. ஆனபடியினாலே நீங்கள் முழித்திருந்து, நான் மூன்று வருஷகாலம் இரவும் பகலும் அவனவனுக்குக் கண்ணீர்களோடே புத்திசொல்லவோயாதிருந்தேனென்றதை நினைவுகூர்ந்திருங்கோள்.

௩௨. இப்போதும் சகோதரரே! உங்களை எவ்விடவும் பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்திரங்கொடுக்கவும் வல்லமையுள்ள பராபரனுக்கும் அவருடைய கிருபையின் வசனத்துக்கும் உங்களை ஒப்புவிக்கிறேன்.

௩௩. * ஒருத்தனுடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் உடுமானத்தையாகிலும் நான் இச்சித்ததில்லை. * க. சாமு. ௰௨: ௩.

௩௪. எனக்குத் தேவையாயிருந்ததுக்கும், என்னுடனே கூடயிருந்தவர்களுக்குமாக, * இந்தக் கைகளே ஊழியஞ்செய்ததென்கிறதை நீங்களே அறிவீர்கள்.

* க. கொரி. ௪: ௰௨.

௩௫. இப்படி வேலைசெய்து, பெலயீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப்பார்க்கக் கொடுக்கிறது பாக்கியமென்று கர்த்தராகிய யேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டியதென்கிறதை எல்லாம் உங்களுக்குக் காண்பித்தேனென்றான்.

௩௬. இதுகளைச் சொன்னபிற்பாடு அவன் * முழங்காலிட்டு, அவர்களெல்லாரோடுங்கூட ஜெபம்பண்ணினான். * ௨௧: ௫.

௩௭. ஆதலால் எல்லாரிடத்திலும் வெகு அழுகையுண்டாச்சுது.

௩௮. நாங்களினிமேல் அவன் முகத்தைப் பார்ப்பதில்லையென்று அவன் சொன்ன வார்த்தைக்காக விசேஷமாய் அவர்கள் துக்கப்பட்டு, பவுலின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அவனை முத்தஞ்செய்து, அவனைக் கப்பல்மட்டும் வழிவிட்டார்கள்.

௨௧. அதிகாரம்.

பவுலு யெருசலேமுக்குப் பண்ணின
பயணம்.

நாங்கள் அவர்களை விட்டுப் பிரிந்து, கப்பலேறிப் போனோமல்லோ, நேராயோடி, கோஸ்தீவுக்கும் மறுநாளிலே ரோதுதீவுக்கும், அவ்விடம் விட்டோடி பத்தாராபட்டணத்துக்கும் வந்தோம்.

௨. அங்கே பெனிக்கே தேசத்துக்குப் போகிற கப்பலைக் கண்டு அதிலேறிப் போனோம்.

௩. எங்களுக்குச் சீப்புருதீவு தென்பட்டபோதோ வென்றால், அதை இடதுபுறமாக விட்டு, சூரியாவுக்கோடித் தீருபட்டணத்துறையிலேயிறங்கினோம், ஏனென்றால் அவ்விடத்திலே கப்பலின் சரக்கிறக்க வேண்டியதாயிருந்தது.

௪. நாங்கள் சீஷரைக் கண்டு அங்கே ஏழுநாளிருந்தோம் * யெருசலேமுக்குப் போய் ஏறவேண்டாமென்று அவர்கள் பவுலுக்கு ஆவியினாலே சொன்னார்கள். * ௨௰: ௨௩.

௫. ஆனாலும் நாங்கள் அந்த நாட்களை முடித்தப்பிறபாடு புறப்பட்டுப் போனோம், அவர்களெல்லாரும் பெண்சாதிகளோடும் பிள்ளைகளோடுங் கூடவந்து எங்களைப் பட்டணத்துக்கு வெளியே விட்டார்கள், அப்போது கடற்கரையிலே * முழங்கால் படியிட்டு செபம் பண்ணினோம். * ௨௰: ௩௬.

௬. ஒருத்தரொருத்தர் மினவிக்கொண்டபின்பு, நாங்கள் கப்பலேறினோம், அவர்களோ வீட்டுக்குத் திரும்பினார்கள்.

௭. நாங்கள் தீருவிலிருந்து ஓடி யாத்திரையை முடித்து பித்தோலேமாயிப் பட்டணத்துக்கு வந்து, சகோதரரை வினவி, அவர்களிடத்திலே ஒரு நாளிருந்தோம்.

௮. மறுநாளிலே பவுலின் கூடமாகிய நாங்கள் புறப்பட்டு, செசாரியாவுக்கு வந்து, * ஏழுபேரில் ஒருத்தனாகிய பிலிப்பு சுவிசேஷகனுடைய வீட்டுக்குள்ளே பிரவேசித்து, அவனிடத்திலே தங்கியிருந்தோம்.

* ௬: ௫. ௮: ௫. ௨௬: ௪௰.

௯. தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற கன்னியாஸ்திரீகளாகிய நாலு குமாரத்திகள் அவனுக்கிருந்தார்கள்.

* யோவே. ௩: ௧.

௰. நாங்கள் அநேக நாள் அங்கேயிருக்கையிலே * அகாபு என்னும் பேர்கொண்ட ஒரு தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து இறங்கி, * ௰௧: ௨௮.

௰௧. எங்களண்டைக்கு வந்து, பவுலின் கச்சையையெடுத்து, தன்னுடைய கைகளையுங் கால்களையுங் கட்டிக்கொண்டு: இந்தக் கச்சையையுடைய புருஷனை யெருசலேமிலே யூதர் இப்படிக் கட்டி, புறசாதியாரின் கைகளிலே ஒப்புக்கொடுப்பார்களென்கிறதை * பரிசுத்த ஆவி சொல்லுகிறாரென்றான். ௨௰: ௨௩.

௰௨. இதைக் கேட்டபோதோ வென்றால் அவன் யெருசலேமுக்குப் போகாதபடிக்கு நாங்களும் அத்தலத்தாரும் வேண்டிக்கொண்டோம்.

௰௩. அதற்குப் பவுல் பிரதியுத்தரமாக: நீங்கள்

அழு

அழுதென்றென் இருதயத்தை நொறுக்கிப்பண்ணுகிறது என்னசெய்வீர்? நானே யெருசலேமிலே கர்த்தராகிய யேசுவின் நாமத்துக்காகக் கட்டுண்கமாத்திரமல்ல மரிக்கவும் ஆயத்தமாயிருக்கிறேனென்றான். ௨௰: ௨௪.

௰௪. அவன் மனது ஒப்பாதபடியினாலே நாங்கள் கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவதென்று அமர்ந்திருந்தோம்.

௰௫. இந்த நாட்களுக்குப்பிறகு நாங்கள் பயணமேற்படுத்திக்கொண்டு யெருசலேமுக்குப் போயிருந்தோம்.

௰௬. ஆனாலுங் கெசாரியாவிலிருந்து சில சீஷரும் எங்களுடனேகூட வந்து, சீப்பிருதீவானாகிய மினசோனென்கிற பழைய சீஷனை, நாங்கள் அவனிடத்திலே தங்கியிருக்க அழைத்துவந்தார்கள்.

அவனுக்கு யெருசலேமிலே சம்பவித்த துன்பம்.

௰௭. நாங்கள் யெருசலேமுக்கு வந்தபோது சகோதரர் எங்களைச் சந்தோஷத்துடனே ஏற்றுக்கொண்டார்கள்.

௰௮. மறுநாளிலே பவுலு எங்களுடனேகூட யாக்கோபண்டைக்குள் பிரவேசித்தான், மூப்பரெல்லாரும் வந்தார்கள். * ௰௫: ௰௩.

௰௯. அவன் அவர்களை வினவி, பராபரன் தன்னூழியத்தினாலே புறசாதிகளிடத்திலே செய்ததுகளை ஒவ்வொன்றாய் விபரித்துச்சொன்னான்.

௨௰. அவர்கள் கேட்டு கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள். அவர்கள் அவனுடனே சொன்னதாவது: சகோதரனே விசுவாசித்த யூதரிலே எத்தனை ஆயிரம் பேரென்று காண்கிறாய், அவர்களெல்லாரும் நியாயப்பிரமாணத்துக்காகப் பக்திவைராக்கியகாரராயிருக்கிறார்கள்.

௨௧. நீயோவென்றால் புறசாதிகளிடத்திலிருக்கிற யூதரெல்லாம் பிள்ளைகளுக்குச் சுன்னத்துப்பண்ணாமலும் முறைமைகளின்படியே நடவாமலுமிருக்கச் சொல்லி, மோசேயை விட்டு மருளவிழப்பேசுகிறாயென்று அவர்கள் உன்னைக்குறித்துப் போதிக்கப்பட்டார்கள்.

௨௨. இப்போதும் செய்யவேண்டியதென்ன? திரளாய்க் கூடுவது நிச்சயமாமே, ஏனெனில் நீ வந்ததைக் கேழ்வியாவார்கள்.

௨௩. ஆகையால் நாங்கள் உனக்குச் சொல்லுகிறதைச் செய்; பொருத்தனைபண்ணிக்கொண்டிருக்கிற நாலுமனுஷர் எங்களண்டையிலிருக்கிறார்கள்.

௨௪. இவர்களை நீ சேர்த்து, உன்பேரிலே தாங்கள் போதிக்கப்பட்ட காரியங்கள் ஒன்றுமல்லவென்றும், நீயும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு நடக்கிறாயென்றும் எல்லாரும் அறியத்தக்கதாக நீ அவர்களுடனே கூடச்சுத்தம்பண்ணிக்கொண்டு, அவர்கள் சிரச்சவரம்பண்ணிக்கொள்ளுவதற்கு அவர்களுக்காகச் செலவுபண்ணு.

௨௫. விசுவாசித்த புறசாதியாரோவென்றால் அப்படிக்கொத்ததொன்றையும் அவர்கள் கைக்கொள்ளாமல், விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதுக்கும், இரத்தத்துக்கும், நெருக்குண்டு செத்ததுக்கும், வேசித்தனத்துக்குங் காத்துக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் தீர்த்து அவர்களுக்கு எழுதி அனுப்பினோமென்றார்கள். * ௰௫: ௨௰. ௨௯.

௨௬. அப்பொழுது பவுல் அந்த மனுஷரைச் சேர்த்துக்கொண்டு, மறுநாளிலவர்களோடேகூடச் சுத்திபண்ணிக்கொண்டு, தேவாலயத்துக்குள் பிரவேசித்து, அவர்களிலொவ்வொருத்தனுக்காகப் பலிசெலுத்தப்படும் பரியந்தம் சுத்திகரித்தலுடைய நாட்களின் நிறைவேறுதலை நாளாநாளாய் அறிவித்தான்.

௨௭. ஆனால் அந்த ஏழுநாட்கள் நிறைவேறுகிறதுக்கையிலே ஆசியா தேசத்து யூதர் அவனைத் தேவாலயத்திலே கண்டு, ஜனங்களெல்லாமெழுப்பிவிட்டு, அவன்மேல் கைகளைப் போட்டு,

௨௮. இஸ்ரவேல் மனுஷரே, உதவிசெய்யுங்கோள், சனத்துக்கும் நியாயப்பிரமாணத்துக்கும் இந்த ஸ்தலத்துக்கும் விரோதமாக எங்குமெல்லாரையும் போதிக்கிற மனுஷனிவன்தான்; கிரேக்கரையுந் தேவாலயத்துக்குள் அழைத்து வந்து, இந்தப் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினான் என்று கூப்பிட்டார்கள்.

௨௯. ஏனென்றால் எபேசியனாகிய * துரோப்பீமுவை முந்தி அவனோடே கூடப் பட்டணத்திலே கண்டிருந்தார்கள்; அவனைப் பவுல் தேவாலயத்துக்குள் அழைத்து வந்ததாக நினைத்தார்கள். * ௨௰: ௪.

௩௰. பட்டணமுழுதும் அமளிப்பட்டு, சனங்கள் ஓடிவந்து கூடலாச்சுது; பவுலைப் பிடித்து, அவனைத் தேவாலயத்துக்குப் புறம்பாக இழுத்தார்கள்; உடனே வாசல்கள் பூட்டப்பட்டது.

௩௧. ஆனால் அவர்கள் அவனைக் கொல்லவேணுமென்றிருக்கையில், எருசலேம் முழுதுங் கலக்கமாயிருக்கிறதென்று சேனையினுடைய ஆயிரத்துச் சேர்வைக்காரனுக்குச் செய்தியெட்டிற்று.

௩௨. உடனே அவன் சேவகரையும் நூற்றுக்குச் சேர்வைக்காரரையுஞ் சேர்த்துக்கொண்டு அவர்களண்டைக்கோடினான்; அவர்கள் ஆயிரத்துச் சேர்வைக்காரனையுஞ் சேவகரையுங் கண்டபோது, பவுலை அடித்தோய்ந்தார்கள்.

௩௩. அப்போ ஆயிரத்துச் சேர்வைக்காரன் கிட்டவந்து அவனைப் பிடித்து, இரண்டு சங்கிலிகளினாலே கட்டச் சொல்லி, இவன் ஆரென்றும் என்ன செய்தானென்றும் விசாரித்தான்.

௩௪. ஆனால் கும்பிலே பலவிதமாய்க் கூப்பிட்டார்கள்; அமளியினாலே அவன் நிச்சயத்தை அறியக்கூடாதேபோய், அவனைக் காவலத்தலத்துக்குள்ளே கொண்டுபோகச் சொன்னான்.

௩௫. அவன் படிகள்மேலே வந்தபோது, கும்பினு

துர்க்

துரிதமித்தியமாய அவனை சேவகராலே சுமக்கப்படலாச்சுது.

௩௬. ஏனென்றால் சனத்திரளுடைய திரள் கூப்பிட்டுப் பின்சென்று: அவனை அகற்றும் என்று கூப்பிட்டுக்கொண்டிருந்தது. * யோவா. ௧௯: ௧௫.

௩௭. பவுலரானவை ஸதலத்துக்குள்ளே கொண்டுபோகப்படுகிறதாயிருக்கையில், அவன் ஆயிரத்துச்சேர்வைகாரனுடனே: உம்முடனே ஏதுகொஞ்சம் பேச எனக்குத் தாருமென்றான். அவன் சொன்னதாவது: உனக்குக் கிரேக்கப்பாஷை தெரியுமோ?

௩௮. இந்தநாளுக்கு முன்னே கலகமுண்டாக்கி நாலாயிரங்கொலைபாதகரை வனாந்திரத்திலே கொண்டுபோன எகிப்துத்தான் நீயல்லவோ என்றான்.

௩௯. பவுலுவோ சொன்னது: நானாக்கிலிக்கியதேசத்து அற்பமல்லாத பட்டணமாயிராத * தர்சுபட்டணத்தானாகிய யூதமனுஷன்; சனத்துடனே பேசுகிறதுக்குத் தாரவு கொடுக்க உம்மை வேண்டிக்கொள்ளுகிறேனென்றான். * ௯: ௰௧. ௨௨: ௩.

௪௰. அவன் உத்தாரங்கொடுத்தபோது பவுலு படிகளின்மேல் நின்று சனத்துக்குக் கையமர்த்தினான்; மெத்த அமைச்சலுண்டானபோது அவன் எபிரேயப்பாஷையிலே சத்தமிட்டுச் சொன்னதாவது:

௨௨. அதிகாரம்.

பவுலு தனக்காகச் சனத்துக்குச் சொன்ன உத்தரம்.

சகோதரரும் பிதாக்களுமாகிய மனுஷரே, உங்களுடனே நானிப்போ சொல்லப்போகிறவென்னுடைய உத்தரத்துக்குக் கேளுங்கோளென்றான்.

௨. எபிரேயப்பாஷையாய் அவன் தங்களுடனே பேசுகிறதை அவர்கள் கேட்டபோதோவென்றால் அதிக அமைச்சலானார்கள். அவன் சொன்னதாவது:

௩. நானாக்கிலிக்கியதேசத்து தர்சுபட்டணத்திலே பிறந்த யூதமனுஷனாயிருக்கிறேன்; ஆனால் நானிந்தப்பட்டணத்திலே * கமாலியேலின் பாதத்தண்டையிலே வளர்ந்து, பிதாக்களுடைய வேதப்பிரமாணத்தின்படியே உபதேசிக்கப்பட்டு, இன்றைக்கு நீங்களெல்லாரும் இருக்கிறதுபோல பராபரன் காரியத்திலே பக்திவயிராக்கியமாயிருந்தேன். * ௫: ௩௪.

௪. நான் இந்தமார்க்கத்தை மரணபரியந்தம் துன்பப்படுத்தி, புருஷரையும் ஸ்திரீகளையும் கட்டிச் சிறைச்சாலைகளுக்கு ஒப்புவித்தேன். * ௮: ௩.

௫. இதற்குப் பிரதான ஆசாரியனும் மூப்பரின் சங்கமனைத்தும் எனக்குச் சாட்சி; * அவர்கள் கையிலே நான் சகோதரருக்குத் திருமுகங்களை வாங்கிக்கொண்டு, தமஸ்குவிலிருக்கிறவர்களும் ஆக்கினைப்படும்படிக்கு

அவர்

அவர்களைக் கட்டுண்டவர்களாக யெருசலேமுக்குக் கொண்டுவர அங்கே போனேன்.

௬. அப்படி நான் பயணம்பண்ணி, தமஸ்குவுக்குச் சமீபித்துவந்த எனக்குச் சம்பவித்ததேதென்றால், மத்தியான வேளையிலே அசப்பிலே பெரிய வெளிச்சம் வானத்திலிருந்துண்டாகி என்னைச் சுத்திப் பிரகாசித்தது.

* ௯: ௩—௰௪.

௭. நான் தரையிலே விழுந்து: சவுலே, சவுலே, நீ நம்மைத் துன்பப்படுத்துவானேனென்று என்னுடனே சொல்லுகிற சத்தத்தைக் கேட்டேன்.

௮. அப்போ நான் புறத்தியுத்தாரமாக: நீர் ஆர், ஆண்டவரே என்றேன். அவர் என்னுடனே: நாம் நீ துன்பப் படுத்துகிற நாசரேத்தூர் யேசுவாயிருக்கிறோமென்றார்.

௯. என்னுடனேகூட இருந்தவர்களோவென்றால் வெளிச்சத்தைக் கண்டு பயமடைந்தவர்களாகியும், என்னுடனே பேசுகிறவருடைய சத்தத்தைக் கேட்டதில்லை.

௰. நானோவென்றால்: ஆண்டவரே, நான் செய்யவேண்டியதென்னவென்றேன். அப்போ கர்த்தர் என்னுடனே: எழுந்து தமஸ்குவுக்குப்போ; நீ செய்யும்படிக்குக் கட்டளையிடப்பட்டதெல்லாம் அங்கே உனக்குச் சொல்லப்படுமென்றார்.

௰௧. அந்த வெளிச்சத்தின் மகிமையினாலே நான் பார்வையற்றுப் போனபடியினாலே, என்னோடிருந்தவர்களால் கைலாகு கொடுத்தழைக்கப்பட்டுத் தமஸ்குவுக்கு வந்தேன்.

௰௨. ஆனால் நியாயப்பிரமாணத்தின்படியே பத்தியுள்ளவனும் அங்கே குடியிருக்கிற சகல யூதராலும் நல்லவனென்று சாட்சி பெற்றவனுமாகிய அனனியா என்கிற ஒருத்தன்,

௰௩. என்னண்டைக்கு வந்துநின்று, என்னுடனே: சகோதரனாகிய சவுலே, பார்வையடையென்றான். அந்நேரமே அவனை நோக்கிப் பார்த்தேன்.

௰௪. அப்போ அவன் சொன்னதாவது: நம்முடைய பிதாக்களுடைய பராபரன் தம்முடைய சித்தத்தை நீ அறியவும், நீதிபரனானவரைக் காணவும், அவர் வாக்கினாலே சத்தங் கேட்கவும் உன்னை முன்னறிந்து குறித்திருக்கிறார்.

௰௫. ஏனென்றால் நீ கண்டதுகளுக்கும் கேட்டதுகளுக்கும் அவருக்குச் சகல மனுஷர் முன்பாகச் சாட்சியாயிருப்பாய்.

௰௬. இப்போதும் நீ தாமதிப்பானேன், எழுந்திருந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்களைப் போக்கக் கழுவப்படு என்றான்.

௰௭. நான் யெருசலேமுக்குத் திரும்பவந்து தேவாலயத்திலே செபம்பண்ணுகிற போதோவென்றால், எனக்குச் சம்பவித்ததாவது: நான் ஞானதிஷ்டியடைந்து அவரைத் தெரிசித்தேன்.

௰௮. அப்போ அவர் என்னுடனே: நீ தீவிரித்துச் சீக்கிரத்திலே எருசலேமை விட்டுப் புறப்பட்டுப் போ; ஏனென்றால் நீ என்னைக் குறித்துச் சொல்லுஞ் சாட்சியை ஏற்றுக் கொள்ளாதே போவார்களென்றார்.

௰௯. அப்போ நான் சொன்னதாவது: ஆண்டவரே உம்முடபேரிலே விசுவாசிக்கிறவர்களை நான் காவலிலே வைப்பித்து, அங்கங்கே உள்ள ஸபைகளிலே அடித்திருக்கிற செய்தியை அவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

௨௰. உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தஞ் சிந்தப்பட்டபோது நானும் அண்டையிலே நின்று அவனைக் கொலைசெய்யப்படுவதற்கு கூட ஏகமித்து, அவனைக் கொலைசெய்கிறவர்களின் வஸ்திரங்களைக் காத்துக்கொண்டிருந்தேனென்றேன். * ௭: ௫௮. ௫௯. ௮: ௧.

௨௧. ஆனால் அவர் என்னுடனே: நீ போ; ஏனென்றால் நான் உன்னைத் தூரமாயப் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேனென்று சவிஸ்தாரமாய்ச் சொன்னார்.

௨௨. அவர்கள் இந்த வார்த்தைமட்டும் அவனுக்குச் செவிகொடுத்துக் கேட்டு, தங்கள் சத்தத்தை உயர்த்தி: இப்படிக்கொத்தவனைப் பூமியிலே ஸ வைக்காமல் அறுத்துப்போடு; ஏனென்றால் அவன் உயிரோடிருக்கிறது ஞாயமல்லவென்றார்கள்.

அவனை ராணுவஸ்தலத்துக்குக் கொண்டுபோகப்பட்டது.

௨௩. ஆனால் அவர்கள் கூப்பிட்டுக்கொண்டு வஸ்திரங்களை எறிந்துபோட்டு, ஆகாசத்திலே தூளைத் தூற்றிக்கொண்டிருக்கிறபோது,

௨௪. ஆயிரத்துச்சேர்வைக்காறன் அவனை ராணுவஸ்தலத்துக்குள்ளே கொண்டுபோகக் கற்பித்து, எந்த முகாந்தரத்தினாலே அவன்மேலே இப்படிக் கூப்பிடுகிறார்களென்றறிய, அவனைச் சவுக்காலே அடித்துக் கேட்கச் சொன்னான்.

௨௫. அவர்கள் அவனை வார்களினாலே அழுந்தக் கட்டும்போதோவென்றால், அண்டையிலே நின்ற நூற்றுக்குச்சேர்வைக்காறனுடனே பவுல்: * ரோமனும் ஞாயம் விசாரிக்கப்படாதவனுமான மனுஷனைச் சவுக்காலே அடிக்க உங்களுக்கு ஞாயமோ என்றான். * ௰௬: ௩௭.

௨௬. நூற்றுக்குச்சேர்வைக்காறன் இதைக் கேட்டபோது, ஆயிரத்துச்சேர்வைக்காறனண்டைக்குப் போய்: நீ செய்யப்போறதுக்கு எச்சரிக்கையாயிரு; ஏனென்றால் இந்த மனுஷன் ரோமனாயிருக்கிறானென்றறிவித்தான்.

௨௭. அப்போ ஆயிரத்துச்சேர்வைக்காறன் சேர்ந்து வந்து, அவனுடனே: நீ ரோமனோ, எனக்குச் சொல்லென்றான். அவன் ஆமென்றான்.

௨௮. ஆயிரத்துச்சேர்வைக்காறன் பிரதியுத்தாரமாக நான் பெருத்த திரவியத்தினாலே இந்த ரோமசுகந்திரத்தைச் சம்பாதித்தேனென்றான். அதற்குப் பவுல்: நானோவெனில் அப்படிப்பட்டவனாய்ப் பிறந்தேனென்றான்.

உ௯. உடனே அவனை அடித்துக் கேட்கிறதுக்கிருந்தவர்கள் அவனை விட்டு விலகிப்போனார்கள். ஆயிரத்துச் சேர்வைக்காரனும் அவன் ரோமனென்றறிந்தபோது, அவனைக் கட்டிவைத்ததுக்காகப் பயந்தான்.

௩௰. ஆகை யூதராலே அவன் குற்றஞ்சாட்டப்பட்டா னென்கிறதை நிச்சயமாய் அறியமனதாய் அவனைக் கட்டவிழ்த்து, பிரதான ஆசாரியர்களையும் அவர்களு டைய சங்கத்தார் யாவரையும் வரச்சொல்லி, பவுலைத் தாழக் கொண்டுபோய் அவர்களுக்கு முன் நிறுத்தினான்.

உ௩. அதிகாரம்.

பவுல் தன்னைக் காத்து ஆலோசனைச்
சங்கத்துக்குச் சொன்ன
உத்தரம்.

ஆனால் பவுலு ஆலோசனைச் சங்கத்தை உற்றுப்பார்த்து: சகோதரராயிருக்கிற புருஷரே, நானின்னாள் மட்டும் எல்லா நன்மனச்சாட்சியோடும் பராபரனுக்கு முன்பாக நடந்தேனென்றான்.

உ. பிரதான ஆசாரியனாகிய அனனியா என்கிறவனோவென்றால் அவனண்டையிலே நிற்கிறவர்களுக்கு * அவனை அவன் வாயிலே அடிக்கக் கற்பித்தான். * யோவான். ௰௮: உஉ.

௩. அப்போது பவுல் அவனோடே: பராபரன் உம்மை அடிக்கப்போகிறார், * சாந்துபூசப்பட்ட சுவரே; நியாயப் பிரமாணத்தின்படி என்னை நியாயம் விசாரிக்கிறவராய் உட்கார்ந்திருக்கிற நீர் நியாயப்பிரமாணத்துக்கு விரோதமாய் என்னை அடிக்கச் சொல்லுகிறீரோவென்றான்.

* மத். உ௩: உ௭. உ௮.

௪. ஆனால் அண்டையிலே நிற்கிறவர்கள்: பராபரனுடைய பிரதான ஆசாரியனை வைகிறாயோவென்றார்கள்.

௫. அதற்குப் பவுலு: சகோதரரே, இவர் பிரதான ஆசாரியனென்று நான் அறிந்ததில்லை, ஏனென்றால்: * உன் ஜனத்தின் தலைவனைத் தீது சொல்லாயாக என்றெழுதியிருக்குதென்றான். * உ மோசே. உஉ: உ௮.

௬. ஆனாலுஞ் சதுசேயர் ஒருபங்கும் பரிசேயர் ஒருபங்குமாயிருக்கிறார்களென்று பவுலு அறிந்து: சகோதரரான மனுஷரே, நான் பரிசேயனும் * பரிசேயனுடைய மகனுமாயிருக்கிறேன்; நம்பிக்கைக்காகவும் மரித்தோருடைய உயிர்த்தெழுதலுக்காகவும் நான் நியாயம் விசாரிக்கப்படுகிறேனென்று ஆலோசனைச் சங்கத்திலே கூப்பிட்டான்.

* உ௬: ௫. பிலி. ௩: ௫.

௭. அவனிதைச் சொன்னபோது, பரிசேயருக்குஞ் சதுசேயருக்குங் கலகமுண்டாயது, திரள் பிரிந்தது.

௮. ஏனென்றால் * சதுசேயர் உயிர்த்தெழுதலுமில்லை தூதனுமில்லை ஆவியுமில்லையென்கிறார்கள்; பரிசேயரோவென்றால் இரண்டையும் உண்டென்று அறிக்கைபண்ணுகிறார்கள். * மத். உஉ: உ௩.

௯. மகாகூக்குரலுண்டாச்சுது. பரிசேயர்களையத் தாரான வேதபாரகர்களெழுந்து: இந்த மனுஷனிடத்தில் ஒருதீமையுங் காணோம், ஒரு ஆவி, அல்லது ஒரு தூதன் இவனுடனே பேசினதுண்டேயானால், நாம் தேவனோடே போர் செய்யாதிருப்போமாக என்று வாதாடினார்கள்.

௰. வெகு கலகமுண்டான போதோவெனில், ஆயிரத்துச் சேர்வைக்காறன் பவுலவர்களாலே பீறுண்டுபோவானென்று பயந்து, சேனைவந்தாழவிறங்கி அவனை அவர்கள் நடுவிலிருந்து பறித்து, கோட்டைக்குக்கொண்டு போகவுங் கட்டளையிட்டான்.

கர்த்தராகிய யேசு பவுலுக்குத் திடன
சொன்னதும், யூதர் அவனைக்
கொல்ல ஒப்பந்தமானதும்.

௰௧. அன்று ராத்திரியிலே கர்த்தர் அவனண்டை நின்று: பவுலே, திடன்கொள், ஏனென்றா னம்முடை விசேஷங்களை நீ யெருசலேமிலே திடசாட்சியாயொப்பித்தது போல, ரோமாவிலும் நீ யொப்பிக்க வேண்டியதென்றார். ✝ ௰௯: ௨௧.

௰௨. விடியக்காலமான போதோவெனில், யூதரிலே சிலர்தங்களுக்குள்ளே கட்டுப்பண்ணிக்கொண்டு, தாங்கள் பவுலைக் கொன்றுபோடுமட்டும் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லையென்று ஆணையிட்டுக் கொண்டார்கள்.

௰௩. இப்படிக் கட்டுப் பண்ணிக்கொண்டவர்கள் நாற்பதுபேருக்கதிகமாயிருந்தார்கள்.

௰௪. அவர்கள் பிரதான ஆசாரியர்களண்டைக்கும் மூப்பரண்டைக்கும் போய், சொன்னது: நாங்கள் பவுலைக் கொன்றுபோடுமட்டும் ஒன்றையும் ருசிபாரோமென்று கடும் ஆணையிட்டுக்கொண்டோம்.

௰௫. இப்போது நீங்களும் ஆலோசனைச் சங்கத்தோடேகூட அவனுடைய செய்திகளை இன்னந் திடமாய் விசாரிக்கவுள்ளவர்களைப் போல, ஆயிரத்துச் சேர்வைக்காறனுக்கு அவனை நாளை உங்களண்டைக்கு அழைத்துக்கொண்டு வரச்சொல்லுங்கோள். நாங்களோவென்றால் அவன் சமீபிக்குமுன்னே அவனைக் கொல்லச் சாயத்தமாயிருக்கிறோமென்றார்கள்.

௰௬. ஆனால் பவுலினுடைய சகோதரியின் குமாரன் இந்தச் சர்ப்பனையைக் கேள்விப்பட்டு வந்து, கோட்டைக்குள்ளே பிரவேசித்து பவுலுக்கு அறிவித்தான்.

௰௭. அப்போ பவுல் நூற்றுக்குச் சேர்வைக்காறரில் ஒருத்தனை அழைத்து: இந்த வாலிபனை ஆயிரத்துச் சேர்வைக்காறனண்டைக்குக் கொண்டு போம், இவன் அவருக்கறிவிக்கவேண்டிய ஒரு காரியமிருக்குதென்றான்.

௰௮. அப்போ இவன் அவனைச் சேர்த்துக் கொண்டு ஆயிரத்துச் சேர்வைக்காறனண்டைக்கழைத்துப்போய்:

கட்டுண்டிருக்கிற பவுலானவன் அழைத்து, உமக்
கொருகாரியத்தைச் சொல்லவேண்டுமென்றிருக்கிற
இந்தவாலிபனை உம்மண்டைக்குக் கொண்டு
போகவேணுமென்று வேண்டிக்கொண்டானென்றான்.

௰௯. அப்போ ஆயிரத்துச் சேர்வைக்காரன் அவனைக்
கையைப்பிடித்துத் தனியே அழைத்துப்போய்: நீ எனக்
கு அறிவிக்கவேண்டியதென்னவென்று கேட்டான்.

௨௰. அவன் சொன்னதாவது: யூதர்கள் பவுலுடைய
செய்தியை இன்னுந் திட்டமாய் விசாரிக்க மனதுள்ள
வர்கள்போலாக்கி அவனை நாளைக்கு ஆலோசனைச்
சங்கத்துக்குக் கொண்டுவர உம்மை வேண்டிக்கொள்
ளத் தீர்மானம்பண்ணினார்கள்.

௨௧. ஆனாலும் நீர் அவர்களுக்கு நம்பாதேயும்; ஏனெனில்
அவர்களில் அவனைக் கொன்றுபோடுமட்டுந் தாங்கள்
புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லையென்று சப
தமிட்டுக்கொண்ட நாற்பதுபேருக்கதிகமான மனு
ஷர் அவனுக்குப் பதிவிருந்து, இப்போதும் நீர் கொடுக்
கும் உத்தரவுக்குக் காத்திருந்து ஆயத்தமாயிருக்கிறார்
களென்றான்.

௨௨. அப்போ ஆயிரத்துச் சேர்வைக்காரன்: நீ இதுக
ளை எனக்கு அறிவித்தாயென்று ஒருவருக்கும் வெளிப்படுத்
தாதேயென்று கற்பித்து, வாலிபக்காரனை அனுப்பிவிட்
டான்.

பவுலு கெசாரியாவுக்கனுப்பப்
பட்டது.

௨௩. பிறபாடவன் நூற்றுவருக்குச் சேர்வைக்காரரில்
ரெண்டுபேரை அழைத்து, கெசாரியாமட்டுக்கும் போக
இருநூறு சேவகரையும், எழுபது குதிரைக்காரரையும்
இருநூறு ஈட்டிக்காரரையும் இராத்திரியின் மூன்றாம்மணி
வேளைக்கு ஆயத்தம்பண்ணுங்கோவென்று சொல்லி,

௨௪. வாகனங்களும் ஆயத்தப்படுத்தவும், ப
வுலுவையேற்றி, துரையாகிய பேலிக்சண்டைக்குப் பத்
திரமாய்க் கொண்டுபோகவுங் கற்பித்து,

௨௫. எழுதின நிருபத்தின் விபரமாவது:

௨௬. பெலமுள்ள துரையாகிய பேலிக்சுக்குக் கிலவுதி
யுலீசியா சந்தோஷமுண்டாக வாழ்த்துகிறேன்.

௨௭. யூதரால் பிடிபட்டவனும் அவர்களால் கொல்
லப்படப்போறவனுமான இந்த மனுஷனை நான், ரா
ணுவத்துடனே போயெடுத்துக்கொண்டுவந்து, அவன்
ரோமனென்றறிந்தேன்.

௨௮. ஆனால் அவர்கள் அவன்பேரில் சாட்டின குற்றத்
தை நான் அறியமனதாய், அவனை அவர்களுடைய ஆலோச
னைச் சங்கத்துக்குக் கொண்டுபோய் விட்டு,

௨௯. அவன்மேல் மரணத்துக்காகிலும் கட்டுகளுக்
காகிலுமேற்ற குற்றமில்லாமல், அவர்களுடைய வே
தத்தின் தர்க்கங்களுக்காக அவன் குற்றஞ்சாட்டப்பட்டவ
னென்று கண்டறிந்தேன்.

௩௰. ஆனாலிந்த மனுஷன்பேரில் யூதரால் நடக்கும்

சதி

ஆலோசினை எனக்கறிவிக்கப்பட்டபோது, உட
னே அவனை உம்மண்டைக்கனுப்பினேன், குற்றஞ்சா
ட்டுகிறவர்களுக்கும் அவன்பேரிலே தங்களுக்குள்ள
காரியங்களை உமக்கு முன்பாகச் சொல்லக் கற்பித்
தேன், சுகமாயிருமென்றெழுதினான்.

௩௧. சேவகர்கள் தங்களுக்குச் சொல்லப்பட்டபடியே
பவுலைச் சேர்த்துக்கொண்டு, ராத்திரியிலே அந்திப
த்திரிசுக்குக் கொண்டுபோய்,

௩௨. மறுநாளிலே குதிரைக்காரரை அவனுடனே
கூடப்போக அனுப்பிவிட்டு, இவர்கள் சேனைவஸ்து
க்குத் திரும்பினார்கள்.

௩௩. அவர்கள் செசரியாவுக்குள் பிரவேசித்து நி
ருபத்தைத் தேசாதிபதிக்குக் கொடுத்து, பவுலையும் அவன்
முன்பாக நிறுத்தினார்கள்.

௩௪. துரை வாசித்து, எந்தச்சீமையான் என்று கேட்
டு, சிலிக்கியன் என்று அறிந்தபோது,

௩௫. உன்னைக் குற்றஞ்சாட்டுகிறவர்களும் வந்த
போது உன்னைக் கேட்டுவிசாரிப்பேனென்று சொல்
லி, ஏரோதேயின் அரண்மனையிலே அவனைக் காவலா
யிருக்கும்படிக்குக் கற்பித்தான்.

உ௪. அதிகாரம்.

பவுல் பேலிக்ஸென்கிற துரைக்கு
முன்பாகத் தன் காரியத்தைச்
சொன்னது.

௧. ஐந்துநாளைக்குப்பிற்பாடு பிரதானஆசாரியனா
கிய அனனியா மூப்பர்களோடுந் தெர்த்துல்லுவென
ன்னும் வாய்சாலக்கினோடுங் கூடப்போய், பவு
லுக்கு விரோதமாய்த் துரையண்டையிலே வந்து பேசி
னார்கள்.

௨. அவன் அழைக்கப்பட்டபோது தெர்த்துல்
லு இக்குற்றஞ்சாட்டத் துவக்கிச் சொன்னதாவது:

௩. மகா உத்தம பேலிக்ஸே! நாங்கள் உம்மாலே
வெகு சமாதானத்தை அனுபவிக்கிறதையும், உம்முடை
ய பிரயாசத்தினாலே இந்தச்சாதிக்கு இப்புகழ்ப்பட்ட நற்செ
ய்கைகள் நடக்கிறதையும் நாங்கள் எப்போதும்
எங்கும் வெகுவாய் நன்றியறிந்திருக்கிறோம்.

௪. ஆனாலும் நான் அதிகவார்த்தைகளால் உமக்குத் தொல்லைப்ப
டாதபடிக்கு, நீர் உம்முடைய சாந்தகுணத்துடனே
நாங்கள் சுருக்கமாய்ச் சொல்லுவதைக் கேட்கும்படிக்கு வேண்டிக்
கொள்ளுகிறேன்.

௫. எப்படியென்றால், இந்த மனுஷன் பெருவாரிக்காச்ச
லாகவும், பூச்சக்கரத்திலுள்ள சகல யூதருக்குள்ளுங் கல
கமெழுப்புகிறவனாயும், நசரேத்தாருடைய மார
க்கத்துக்கு முதலாளியாயுங் கண்டிருக்கிறோம்.

௬. அவன் தேவாலயத்தையுந் தீட்டுப்படுத்தப்
பார்த்தான். அவனை நாங்கள் பிடித்து எங்கள் நியாயப்

பிரமா

பிரமாணத்தின்படியே நியாயந்தீர்க்க மனதாயிருந்தோம். * ௨௧: ௨௮, ௨௬.

௭. ஆனால் ஆயிரத்துச் சேர்வைக்காரனாகிய லீசியா வந்து மிகுந்த பலாத்காரமாய் அவனை எங்கள் கைகளிலிருந்து பறித்துக்கொண்டுபோய்,

௮. அவனைக் குற்றஞ்சாட்டுகிறவர்கள் உம்மண்டையிலே வரக்கட்டளையிட்டான். அவனிடத்தில் நீர் விசாரித்தால் நாங்கள் அவன்மேல் சாட்டுகிற காரியங்களெல்லாம் அறிந்துகொள்ளலாமென்றான்.

௯. அதுக்கு யூதர்களும் இதுகள் அப்படிதானென்று பேசினார்கள்.

௰. அப்பொழுது பேசுகிறதுக்குத் தேசாதிபதி பவுலுக்குச் சைகை காட்டினபோது அவன்: நீர் அநேக வருஷமாக இந்த ஜனத்துக்கு நியாயாதிபதியாயிருக்கிறீரென்று அறிந்து நான் அதிக தைரியமாய் என் காரியங்களுக்கு உத்தரவு சொல்லுகிறேன்.

௧௧. பண்டிகை தொழுதுகொள்ளுகிறதுக்கு நான் எருசலேமுக்கு வந்து இன்றைக்குப் பன்னிரண்டு நாளுக்கதிகமில்லையென்று நீர் அறியலாம்.

௧௨. அவர்கள் என்னைத் தேவாலயத்திலாவது ஒருவரோடே தர்க்கிக்கவும், அல்லது ஆலயங்களிலாவது பட்டணத்திலாவது ஜனங்களைக் கலகப்படுத்தவும் கண்டதில்லை.

௧௩. இப்பொழுது என்பேரில் சாட்டுகிற குற்றங்களை ருசுப்பிக்கவுமாட்டார்கள்.

௧௪. ஆனாலும் அவர்கள் மதபேதமென்று சொல்லுகிற வழியின்படியே நான் நியாயப்பிரமாணத்திலேயும் தீர்க்கதரிசிகளின் புஸ்தகங்களிலும் எழுதியிருக்கிறதெல்லாவற்றையும் விசுவாசித்து என்னுடைய பிதாக்களுடைய பராபரனுக்கு ஆராதனை செய்து,

௧௫. மரித்த நீதிபரரும் அநீதரும் எழுந்திருப்பதுண்டென்று அவர்கள் காத்திருக்கிறதுபோல நம்பிக்கையைப் பராபரனிடத்தில் வைத்திருக்கிறேனென்று உமக்கு அறிக்கையிடுகிறேன்.

௧௬. இதினாலே நான் பராபரனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் * குற்றமில்லாத மனச்சாட்சியையுடையவனாயிருக்கப் பழகுகிறேன். * ௨௩: ௧.

௧௭. அப்பொழுது அநேக வருஷங்களுக்குப் பிறகு நான் என் ஜாதியாருக்குப் பிச்சைகளை ஒப்பிக்கவும், * பலிகாணிக்கைகளைச் செலுத்தவும் வந்தேன்.

* ௨௧: ௨௬.

௧௮. அதிலே நான் சுத்திகரிப்புள்ளவனாய் ஜனக்கூட்டமும் அமளியுமில்லாமல் தேவாலயத்தில் சுத்தம் பண்ணிக்கொண்டிருக்கையில் ஆசியாதேசத்தாரான சில யூதர் கண்டார்கள்.

௧௯. அவர்களுக்கு என் பேரிலே காரியமுண்டானால் அவர்கள் உமக்கு முன்பாக வந்து குற்றஞ்சாட்டவேண்டியதாமே.

௨௰. அல்லது நான் இவர்களுக்குள்ளே நின்று: * மரித்தோரின் உயிர்த்தெழுந்திருக்கிறதுக்காக நான் இன்று உங்களாலே நியாயத்தீர்க்கப்படுகிறேனென்று கூப்பிட்ட ஒரே சத்தத்துக்கொழிய. * ௨௩: ௬.

௨௧. வேறே அவகுணத்தை நான் ஆலோசனைச் சங்கத்துக்கு முன்பாக நிற்கையில் இவர்கள் என்னிடத்தில் கண்டுபிடித்ததுண்டானால் அவர்களே சொல்லட்டுமென்றான்.

௨௨. இந்த மார்க்கத்தின் விசேஷங்களை வெகுதிட்டமாய் அறிந்திருந்த பேலிக்ஸ் இவைகளைக் கேட்டபோது [illegible]: ஆயிரத்துச் சேர்வைக்காரனாகிய லிசியா இங்கே வந்தால் உங்கள் காரியங்களை உற்றறிந்துகொள்ளுவேனென்று அவர்களுக்குச் சொல்லி,

௨௩. பவுலைக் காக்கப்படவும் இலகுவுண்டாயிருக்கவும், அவனுக்கு ஊழியஞ்செய்கிறதுக்கும் அவனைக் காண வருகிறதுக்கும் அவனுடையவர்களில் ஒருத்தருக்குந் தடை செய்யாதிருக்கவும் நூற்றுக்குச் சேர்வைக்காரனுக்குக் கட்டளையிட்டான்.

அவன் பேலிக்சுக்கு முன்பாகப் பிர
சங்கம்பண்ணினது.

௨௪. சில நாளைக்குப் பிறபாடு பேலிக்ஸ் யூதச்சாதியாகிய தன் பெண்சாதி துருசில்லாளோடே கூட வந்து பவுலை வரவழைத்தனுப்பி, கிறீஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைக் குறித்து அவன் சொல்லக் கேட்டான்.

௨௫. ஆனால் அவன் நீதியையும் இச்சையடக்கத்தையும் வரப்போகிற நியாயத்தீர்ப்பையுங் குறித்துப் பேசுகிறபோது பேலிக்ஸ் பயமடைந்து: இப்போ நீ போ, எனக்குச் சமயமானபோது உன்னை வரவழைப்பேனென்று பிரதியுத்தாரஞ் சொன்னான்.

௨௬. ஆனால் பவுலைத் தான் விடுதலைபண்ண அவ்விலத்தனக்குப் பணங்களைக் கொடுப்பானென்று நம்பிக்கையுங் கூட அவனுக்கிருந்தது. அதுநிமித்தியம் அவனை வெகுதரம் அழைத்தனுப்பி அவனுடனே பேசிக்கொண்டிருந்தான்.

௨௭. இரண்டு வருஷமானதற்கு வேறின போதோ வேலை பேலிக்ஸுடைத்துக்குப் போர்ச்சியு பேஸ்தது என்கிறவர் வந்தான். அப்போ பேலிக்ஸ் யூதருக்குத் தயவு செய்யமனதாய், பவுலைக் கட்டுண்டவனாகவே வைத்துப் போனான்.

௨௫. அதிகாரம்.

பேஸ்துக்கு முன்பாக
பவுல் தனக்காக உத்தரஞ்
சொன்னது.

௧. பேஸ்து துரைத்தனத்துக்கு வந்து மூன்று நாளைக்குப் பிறபாடு செசரியாவிலிருந்து யெருசலேமுக்குப் போயினான்.

௨. அப்போ அவனண்டையிலே பிரதான ஆசாரிய

னும

னமயூதருடையதலைவருமபவுலுககுவிரோதமாய
வநதுபேசி,

௩. அவனை யெருசலேமுககு அழைபபிககவும
அவனுககுவிரோதமாயதஙகளுககுததயவுபணணக்கேட்
டு, அவனைவழியிலே கொனறு போடசசதிபணணிநி
னைததாரகள.

௪. பெஸததுவோ வெனனில பிரதியுததாரமாக: ப
வுலுசெசரியாவிலே காககபபடடிருககிறான, நா
னுஞசீககிரமாக அஙகே புறபபடடுப போகப போகிறே
ன,

௫. ஆகையாலஉஙகளிலசகாரியககாரராயிருககிறவர்கள்
கூடபபுறபபட்டுவநது, அநதமனுஷனில நேரமாகியவர்
ககுறறம உணடானால, அவனுககுச சாடடடடுமெனறு
சொன்னான.

௬. அவனஅவர்களிடததிலேபததுநாளுககுமேலாய
சஞசரிததுபபினபுசெசரியாவுககுபபோய,
மறுநாளிலே நியாயாசனததிலே உடகாரநது பவு
லைககொணடுவரசசொனனான.

௭. அவனவநதபோதுவெனனில யெருசலேமிலி
ருநதிறஙகிவநதயூதர்தாஙகள ருசுபிககமாட்டாதவெகு
வானகுறறஙகளை பவுலினமேலசாடடிசசுத
துமநினாாகள.

௮. அதறகவன: நானயூதருடையநியாயபபிரமாணத
துககாகிலும தேவாலயததுககாகிலும இராயனுக
குகாகிலும விரோதமாய ஒருகுறறமுஞசெய்யவிலலை
யெனறுததிரஞசொனனான.

௯. பெஸததுவோவெனனில யூதருககுத்தயவுசெய்
யமனதாய, பவுலுககுமறுஉத்தரமாக: நீ யெரு
சலேமுககுப்போயஙகே, இவவிடததிலேயிககாரி
யஙகளுககாகவெனககு முனபாகநியாயம விசாரிககப
படமனதுணடோவென்றான. * உசு: உள.

௰. அதறகுபபவுல சொனனதாவது: இராயருடைய
நியாயாசனததுககு முனபாக நினறிருககிறேன, அதற
கு முனபாகநான நியாயம விசாரிககபபடவேணடிய
து, யூதருககு நான அநியாயமொனறுஞ செய்யவிலலை
யெனறு நீருமநனறாயறிநதுகொணடிருககிறீர்.

௰௧. நான அநியாயஞசெய்து, மரணததுககுப்பாத
திரமானதொனறையாகிலுமநடபபிததது உணடானால,நான
மரிககபபடிககுமனதாயிருககிறேன; இவர்களென்மேல
சாட்டுகிறகுறறஙகளில் ஒன்றுமிலலாமல போனதே
தேயாகில, ஒருததருமெனனைஇவர்களுககுக்கையொப்பிக
கககூடாது. இராயருககபயமிடுகிறேனெனறான.

௰௨. அபபொழுது பெஸததுதனஆலோசனைககாரரோ
டேபேசிககொணடு: இராயருககபயமிட்டாயே, இரா
யனிடததுககுப் போவாயெனறு மறுவுததாரஞசொன
னான;

பெஸததுபவுலுவையகிரிபபா
ராசாவுககுமுனபாக
நிறுததினது.

௰௩. சில

௰௩. சிலநாள்சென்று பிறபாடே போர்க்கேன்றலோ ரா
சாவாகிய அகிரிப்பாவும் பெர்னீசக்கேயாளும் பெஸ்த்
துவை வாழ்த்த செசாரியாவுக்கு வந்தார்கள்.

௰௪. அவர்கள் அனேகநாள் அங்கேசஞ்சரித்திருக்கும்
போது பெஸ்த்து பவுலினுடைய காரியத்தை ராசாவுக்
கு விவரித்துச் சொன்னதாவது: பேலிக்சுபினாலே கட்டப்
பட்டுக்கிடக்கிறவனாகிய ஒரு மனுஷனிருக்கிறான்.

௰௫. அவன் நிமித்தியமாய்ப் பிரதானஆசாரியர்களும்
யூதருடைய மூப்பருமாய் நானெருசலேமிலிருக்கும்
போதுவந்து அவனுக்கு விரோதமாக்கூக்க ஆக்கினைதீர்ப்
பைக்கேட்டார்கள்.

௰௬. அவர்களுக்கு நான் பிரத்தியுத்தாரமாக: குற்றஞ்
சாட்டப்பட்டவனுக்குக் குற்றஞ்சாட்டினவர்கள் முகமுக
மாயிருந்து சாட்டினதுக்குக் குணக்கருணை சொல்லுகிறதுக்கு
சொல்லை அவனுக்கிடங்கொடுக்கிறதுக்கு முன்னே
ரோமர்களுடைய தேசவிதியிலே எந்த மனுஷனை அழிவுக்கு
ஒப்புக்கொடுக்கப் படுகிறது வழக்கமல்
லவென்றேன்.

௰௭. ஆகையினாலே அவர்களிங்கேகூடிவந்தபோ
து நான் தாமதமென்னத்தும் பண்ணாமல் மறுநாளிலே
நியாயாசனத்திலே உட்கார்ந்து அந்த மனுஷனைக்கொண்
டுவரச் சொன்னேன்.

௰௮. அப்போது குற்றஞ்சாட்டினவர்கள் வந்துநின்று
நான் நினைத்திருந்த குற்றங்களில் ஒன்றையும் அவன்
மேலே சுமத்தாமல்

௰௯. தங்களுடைய மார்க்கத்துக்கும் உயிரோடிருக்கி
றதென்று பவுல் சொன்னமரித்தவனாகிய ஒரு யே
சுவுக்கும் அடுத்த சில தர்க்கங்கள் அவர்களுக்கவனோடே
உண்டாயிருந்தது.

௨௰. ஆனாலும் இந்தக்காரியத்துக்கடுத்த தர்க்கம் எனக்
குச் சந்தேகமாயிருந்தபடியினாலே: நீ யெருசலேமுக்
குப்போய் அங்கே இதுகளுக்காக நியாயம் விசாரிக்கப்
பட உனக்கு மனதுண்டோ வென்றேன்.

௨௧. பவுலோவென்றால் தான் ராயனுடைய நியாய
விசாரிப்புக்கு வைக்கப்பட வேண்டுமென்று அபைய
மிட்டபோது நான் அவனை ராயனண்டைக்கனுப்புமள
வுமே காத்து வைக்கச் சொன்னேனென்றான்.

௨௨. அகிரிப்பாவோ வென்றால் பெஸ்த்துவுடனே:
நானும் அந்த மனுஷனைக் கேட்கமனசுவருதுமென்றான்
அதற்கவன்: நாளை அவனைக் கேட்கலாமென்றான்.

௨௩. மறுநாளிலே அகிரிப்பாவும் பெர்னீக்கேயா
ளும் மிகுந்த ஆடம்பரத்துடனே வந்து, ஆயிரத்துச்சேர்
வைகாரரோடும் பட்டணத்துப்பிரதான மனுஷரோ
டுங்கூடக் கேழ்விசாலைக்குள்ளே பிரவேசித்தபோது
பெஸ்த்து சொன்னபோது பவுலைக் கொண்டுவரப்பட்
டான்.

௨௪. அப்போ பெஸ்த்து சொன்னதாவது: அகிரிப்பா
ராசாவே, எங்களோடே கூடவேயிருக்கிற ச
வர்களாகிய எல்லா மனுஷரே, யூதருடைய திரளா
னசனம் யெருசலேமிலும் இங்கேயும் என்னை வருந்திக்

கே

கொண்டு; இனி உயிரோடிருக்க வொண்ணாதென்று அவர்கள் கூப்பிட்ட மனுஷனை நீங்கள் பார்க்கிறீர்கள்.

௨௫. நானோவென்றால் இவன் மரணத்துக்குப் பாத்திரமான தொன்றையுஞ் செய்ததில்லையென்று அறிந்துகொண்டிருக்கிறேன். ஆனாலும் இவன் தானே ராயனுக்கு அபயமிட்டபடியினாலே இவனை அனுப்பத் தீர்த்துக்கொண்டேன்.

௨௬. இவன்மேலே ஆண்டவனுக்கு எழுதத்தக்க நிச்சயப்பட்ட காரியமில்லை. ஆகையால், விசாரித்துப் பார்த்தபிறபாடு எழுதத்தக்க விசேஷம் எனக்குண்டாகும்படிக்கு, இவனை உங்களுக்கு முன்பாகவும், விசேஷமாய், அகிரிப்பா ராசாவே, உமக்கு முன்பாகவுங் கொண்டுவந்தேன்.

௨௭. ஏனென்றால் கட்டுண்டவனை, அவன்மேலிருக்குங் குற்றங்களை அறிவியாமலனுப்புகிறது எனக்குத் தியாயமற்ற காரியமாய்க் காணுதென்றான்.

௨௬. அதிகாரம்.

பவுலு அகிரிப்பாவின் முன்னே
தனக்காக உத்தாரஞ்சொன்னது.

ஆனால் அகிரிப்பா பவுலுடனே: நீ உனக்காகப் பேச உனக்குத் தாரமுண்டென்றான்: அப்போ பவுலு கையை நீட்டி, தனக்காகச் சொல்லிக்கொண்ட உத்தாரமாவது:

௨. அகிரிப்பா ராசாவே, யூதர்கள் என்னைக் குற்றஞ்சாட்டுஞ் சகல காரியங்களுக்கும் எதிர் உத்தாரமாய் உமக்கு முன்பாக நான் இன்றைக்குச் சொல்லப்போறபடியினாலே என்னைப் பாக்கியவானென்றெண்ணுகிறேன்.

௩. விசேஷமாய் நீர் யூதருடைய சகல முறைமைகளையுந் தர்க்கங்களையும் அறிந்தவரென்கிறதினாலே தானே. ஆகையால் என்னை நீடிய பொறுமையுடனே கேட்க உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்.

௪. யெருசலேமிலே என் சாதியாரிடத்தில் சிறுவயதாகிய ஆதிமுதற்கொண்டு என் நடக்கை எப்படியிருந்ததென்கிறதை யூதரெல்லாரும் அறிந்திருக்கிறார்கள்.

௫. சாட்சி சொல்ல மனதாயிருந்தார்களானால், நானெம்முடைய மார்க்கத்தில் பக்திவயிராக்கியமுள்ள * பரிசேயச் சமயத்தானாய்ச் சீவனம் பண்ணினேனென்று என்னை ஆதிமுதலாய் அறிந்திருக்கிறார்கள். * ௨௨: ௩;

௬. இப்போதும், பரபரனாலே நம்முடைய பிதாக்களுக்குச் செய்யப்பட்டதும், நம்முடைய பன்னிரண்டு கோத்திரங்களும் நம்மிடைவிடாமலே இராவும் பகலும் ஆராதனை செய்துவந்திருக்கிறதுமான * வாக்குத்தத்தத்தின் மேலுள்ள நம்பிக்கைக்காக நான் நியாயந்தீர்க்கப்படுகிறவனாயிருக்கிறேன். * ௧. மோ. ௨௨: ௰௫.

௭. அகி

எ. அகிரிப்பா ராசாவே, இந்த நம்பிக்கைக்காக யூதராலே குற்றஞ்சாட்டப்படுகிறேன்.

அ. என்ன பராபரன் மரித்தோரை எழுப்புகிறது உங்களிடத்திலே நம்பப்படாத காரியமாக எண்ணப்படுமோ.

கூ. மெய்யந்தான், * நானும் நசரேயனாகிய யேசுவின் நாமத்துக்கு விரோதமாய் வெகு காரியங்களை நடப்பிக்கவேண்டியதென்று எண்ணிக்கொண்டிருந்தேன்.

* கலா. க: யங. யச.

ய. அப்படியினா யெருசலேமிலே செய்துமுன்னு நான் பிரதான ஆசாரியர்களால் அதிகாரம் பெற்று, பரிசுத்தவான்களில் அனேகரைக் காவலில் அடைத்தேன், அவர்களைக் கொல்லப்படும்போது சம்மதித்தேன்.

யக. நான் அனேகந்தரஞ் சகல ஆலயங்களிலும் அவர்களைத் தண்டித்து, தூஷணிக்கப் பெலப்பந்தம் பண்ணினேன், நான் அவர்கள் பேரிலே மிகவும் மூர்க்க வெறியாகி, புறதேசப் பட்டணங்கள் மட்டும் அவர்களைத் துரத்திப்போனேன்.

யஉ. இதுகளிலே நான் * பிரதான ஆசாரியர்களிடத்திலே பெற்ற அதிகாரத்தோடும் உத்தாரத்தோடும் தமஸ்குவுக்குப் போகையிலே, * கூ: க. டு.

யங. மத்தியானத்திலே, ராசாவே, நான் வழியிலே சூரியனுடைய ஒளிவுக்கதிகமான வெளிச்சம் வானத்திலிருந்து என்னையும் என்னுடனே கூடப் பயணம் பண்ணுகிறவர்களையுஞ் சுத்திப் பிரகாசிக்கக் கண்டேன்.

யச. ஆனால் நாங்கள் எல்லாருந் தரையிலே விழுந்தபோது, எபிரேயப் பாஷையிலே என்னுடனே சவுலே, சவுலே, நீ நம்மைத் துன்பப்படுத்துவானேன், கூருக்கெதிராக உதைக்கிறது உனக்குக் கடினமாமே என்று விளம்புகிற சத்தத்தைக் கேட்டேன்.

யரு. நானுவென்ல: நீர் ஆர், ஆண்டவரே என்றேன். அதற்கவர் சொன்னதாவது: நாம் நீ துன்பப்படுத்துகிற யேசுவாயிருக்கிறோம்.

யசா. இப்போது நீ எழுந்திருந்து, காலூன்றி நில்லு, ஏனென்றால் நீ கண்டதுகளுக்கும் நாம் உனக்குத் தெரிசனையாக்கப்போறதுகளுக்கும் உன்னை ஊழியக்காரனுக்கும் சாட்சியாகவும் * குறிப்பதற்காக உனக்குத் தெரிசனையானோம். * உஉ: யச. யரு.

யஎ. நாமிப்போ உன்னைச் சனத்தாருடைக்கும் சாதிகளுடைக்கும், அவர்களுடைய கண்களைத் திறக்கவும், அவர்கள் அந்தகாரத்தைவிட்டு வெளிச்சத்துக்குச் சாத்தானுடைய வல்லமையைவிட்டுப் பராபரனண்டைக்குந் திரும்பி,

யஅ. நம்மைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குள்ளே சுதந்திரத்தையும் அடையவும் அனுப்புகிறோம், அவர்களை

ளுகிறதுக்கும் உன்னை நீங்கலாக்க விடுவோமென் றார்.

யகூ. ஆகையாலகிரிப்பா ராசாவே நான் பரமதே ரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனுகாமலே/

உய. முந்தித்தமஸ்கத்திலேயும் யெருசலேமிலேயும் யூ தேயாவின் தேசமெங்குமுள்ளவர்களுக்கும்/ பிறகு புறசாதியார்களுக்கும்/ குணப்படவும்/ பராபரனண் டைக்கு மனந்திரும்பவுமாகுணப்படுதலுக்கேற்ற கிரியை களைச் செய்யவும் வேண்டியதென அறிவித்தேன்.

* கூ: யக. உய.

உக. இதுகளினிமித்தியமாக யூதரென்னைத் தேவா லயத்திலே பிடித்து/ * கொல்லப்பார்த்தார்கள்.

* உஎ: ௩ய. ௩க.

உஉ. ஆனாலும் பராபரனுடைய உதவிபெற்றிந்நாள் வரைக்குஞ் சிறியோர் பெரியோர்களுக்குச் சாட்சி சொல்லிநின்று/

உ௩. கிறிஸ்து பாடுபட வேண்டியதென்றும் மரித்தோர்களிலெழுந்திருந்ததிலே அவர் முதலானவராகி சனத்துக்கும் புறசாதிகளுக்கும் வெளிச்சந்தோன்றப்ப ண்ணுவாரென்றும் தீர்க்கதரிசிகளும் மோசேயும் முன் னமே சொல்லியிருந்த விசேஷங்களேயல்லாமல் வே றொன்றையுமநான் சொல்லவில்லை என்றான்.

உச. அவனிப்படித்தனக்காக உத்தரஞ்சொல்லுகை யில் பெஸ்துமகாசத்தத்துடனே: பவுலே நீ பித்த னாய்! அதிக கல்வி படிப்பு உனக்குப் பயித்திய முண்டாக்குதென்றான்.

உரு. அவனோவெனில் சொன்னதாவது: பெரியோனா கிய பெஸ்துவே! நானபித்தனல்ல! உண்மையுந் தெளிவுமான வார்த்தைகளை வசனிக்கிறேன்!

உசா. இந்த விசேஷங்களை ராசா அறிவார்! ஆகையால் தயிரியமாய் அவருக்கு முன்னே பேசுகிறேன்! ஏனெனில் இது களில் ஒன்றும் அவருக்கு மறைவாயிருக்குமென் றெண்ணேன்! அதேதென்றால் இது * மூலையிலே நடந்த காரியமல்ல. * யோவா: யஅ: உய.

உஎ. அகிரிப்பா ராசாவே நீர் தீர்க்கதரிசிகளை விசு வாசிக்கிறீரோ! விசுவாசிக்கிறீரென்றதை அறிவே னென்றான்.

உஅ. அப்போதகிரிப்பா பவுலுடனே: நான் கி றிஸ்தவனாகிறதுக்குக் கொஞ்சங்குறையநீ என்னைச் சம்மதப்படுத்துகிறாயென்றான்.

உகூ. அதற்குப் பவுலு: கொஞ்சங்குறைந்தாலும் பூரண மாய்க்குறைந்தாலும் இந்தக் கட்டுகளொழிய நானெப்ப டியிருக்கிறேனோ அப்படி நீர் மாத்திரமல்ல இன்று என்னைக் கேட்கிறயாவரும் ஆக்கவேண்டுமென்று பராபரனை வேண்டுகிறேனென்றான்.

௩ய. இதுகளை அவன் சொன்னபோது: ராசாவுந் தேசாதிபதியும் பெர்னிக்கேயாளும் அவர்களுடனேகூட உட் கார்ந்திருந்தவர்களுமெழுந்து/

௩க. தனி

௩௧. தனியேபோய்: * இந்தமனுஷன் மரணத்துக்கா
கிலுங்கட்டுகளுக்கேனும் பாத்திரமானதொன்
றையுஞ்செய்கிறதில்லையென்றவர்களொருவருக்கொருவர் சொல்
லிக்கொண்டார்கள். ௨௩: ௯.

௩௨. அகிரிப்பா பெஸ்துவுடனே: இந்தமனுஷனிரா
யனுக்கபயம் போடாதிருந்தானாகில் விடுதலைபண்
ணப்படக்கூடியதாயிருக்குமென்றான்.

௨௭. அதிகாரம்.

பவுல் இத்தாலியதேசத்துக்குக் கொண்டு
போகப்படுகிறபோது யாத்திரையில்
வார்களென்கிறார். * ஓசே. ௧: ௰.

௨௭. யெசாயாவோவென்றால் இஸ்றவேலைப்பற்றிக் கூப்
பிடுகிறதாவது: * இஸ்றவேல் புத்திரருடைய இ
லக்கம் சமுத்திரத்தின் மணலைத்தன்னையாயிருந்தாலும்
மீதியாயிருப்பவர்களே ரெட்சிக்கப்படுவார்கள்.

* யெச. ௰: ௨௨. ௨௩.

௨௮. ஏனென்றால் காரியத்தை நீதியாய்த் தீர்த்தரு
விரிபண்ணுவார், கருத்தர் பூமியிலே காரியத்தைத் தீர்த்தரு
விரிபண்ணப்பட்ட காரியமாக்குவாரென்கிறான்.

௨௯. யெசாயா * முன்னுக்கவும் உரைத்தபடி, சேனை
களின் கருத்தர் நமக்கொரு வித்தை வைக்காதிருந்தா

லெ

நாம் சோதோமைப்போலாகிக் கொமோறாவுக்கு ஒத்ததாய்ப் போய். * யெச. ௧: ௯.

௩௰. ஆகையால் நாம் என்ன சொல்லுவோம், நீதியைப் பின்தொடராத புறசாதியார் நீதியைப் பற்றிக்கொண்டார்கள், விசுவாசத்தினாலே உண்டாகும் நீதியைத்தானே.

௩௧. நீதியின் நியாயப்பிரமாணத்தைப் பின்தொடர்ந்த இஸ்ரவேலரோவென்றால் நீதியின் நியாயப்பிரமாணத்துக்கு வந்தெட்டவில்லை.

௩௨. அதேதென்றால், அவர்கள் அதை விசுவாசத்தினாலல்ல, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேடினபடியினாலேதானே. ஏனென்றால் இடறுதற்கல்லிலே இடறினார்கள்.

* ௧. கொ. ௧: ௨௩.

௩௩. * இதோ, சீயோனிலே இடறுதற்கல்லையும் இடறலின் கன்மலையையும் வைக்கிறேன், அவர் பேரிலே விசுவாசிக்கிறவனெவனோ அவன் வெட்கப்பட்டுப் போவதில்லை என்றெழுதியிருக்கிறபடிதானே.

* யெச. ௮: ௰௪. ௨௮: ௰௬.

௰. அதிகாரம்.

யூதர்களாயப்பட்ட சகோதரங்கள்.

சகோதரரே, என்னிருதயத்தின் விருப்பமும் நான் இஸ்ரவேலுக்காகப் பராபரனை நோக்கிச் செய்யும் வேண்டுதலும் அவர்களுக்கு இரட்சிப்புண்டாகவிருக்கிறது.

௨. ஏனென்றால் அவர்கள் பராபரனைக்குறித்து வைராக்கியமுள்ளவர்களென்று அவர்களுக்குச் சாட்சி கொடுக்கிறேன், ஆனால் அது அறிவுள்ளதல்ல.

௩. ஏனெனில் அவர்கள் பராபரனுடைய நீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத்தேடி, பராபரனுடைய நீதிக்குக் கீழ்ப்படியாதே போனார்கள்.

௪. ஏனென்றால் விசுவாசிக்கிறவனெவனுக்கும் நீதியுண்டாக, கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் * நிறைவேறுதலாயிருக்கிறார். * மத். ௫: ௰௭.

௫. அதேதென்றால், நியாயப்பிரமாணத்தினாலே வரும் நீதியைக்குறித்து மோசே: * அதுகளைச் செய்கிற மனுஷன் அதுகளாலே பிழைப்பானென்றெழுதுகிறான்.

* ௩. மோ. ௰௮: ௫.

௬. ஆனால் விசுவாசத்தினாலே வரும் நீதி சொல்லுகிறதாவது: * வானத்துக்கு ஏறுபவனார் (அதாவது: கிறிஸ்துவை உயரத்திலிருந்து இறக்கிவைப்பவனார்) என்னாமல் * ௫. மோ. ௩௰: ௰௨—௰௪.

௭. அல்லது பாதாளத்துக்கு இறங்குபவனார் (அதாவது கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணுபவனார்) என்றும் நீ உன் இருதயத்திலே சொல்லாதே என்கிறது.

௮. பின்னை என்ன சொல்லுகிறது: ◆ வார்த்தை உனக்குச்
சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கி
றது. அது நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின்
வார்த்தைதானே. ◆ ௫. மோ. ௩௰. ௰௪.

௯. ஏனென்றால் நீ கர்த்தராகிய யேசுவை உன் வாயி
னாலே அறிக்கைபண்ணி, பராபரன் அவரை மரித்தோ
ரிலிருந்தெழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசு
வாசித்தால், ரட்சிக்கப்படுவாய். ◆ மத். ௰: ௩௨.

௰. ஏனென்றால் நீதியுண்டாக இருதயத்தாலே விசுவா
சிக்கப்படும், ரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை
பண்ணப்படும்.

௰௧. அதேதென்றால் ◆ அவர்பேரிலே விசுவாசிக்கிற
வனெவனாகிலும் வெட்கப்படாதிருப்பானென்று வேத
எழுத்து சொல்லுகிறது. ◆ ஏசா. ௨௮: ௰௬.

௰௨. ஏனென்றால் யூதனென்றும் கிரேக்கனென்
றும் வித்தியாசமில்லை. அதேதென்னில் எல்லாருக்கும்
ஏகமான கர்த்தராயிருக்கிறவர் தம்மை நோக்கிக் கூப்
பிடுகிற எல்லார்பேரிலும் ஐசுவரியசம்பன்னராயிருக்
கிறார். ◆ ௩: ௨௨. ௨௩.

௰௩. ஏனென்றால் ◆ கர்த்தருடைய நாமத்தைத் தொ
ழுதுகொள்பவனெல்லாம் ரட்சிக்கப்படுவான்.

◆ யோவேல். ௩: ௫.

௰௪. ஆனால் தாங்கள் விசுவாசியாதவரை எப்படித் தொ
ழுதுகொள்ளுவார்கள், தாங்கள் கேழ்விப்படாதவர்
பேரிலே எப்படி விசுவாசிப்பார்கள், பிரசங்கிக்கிற
வனில்லாமல் எப்படிக் கேழ்விப்படுவார்
கள்.

௰௫. அனுப்பப்படாமல் எப்படிப் பிரசங்கிப்பார்
கள்; ◆ சமாதானத்தைக் கூறுகிறவர்களும் நற்சுவி
சேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய கால்கள் எத்தனை
அலங்காரமானதென்று எழுதியிருக்கிறபிரகாரமாகத்
தானே. ◆ ஏசா. ௫௨: ௭.

௰௬. ஆனால் எல்லாரும் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்
படிந்ததில்லை. ◆ கர்த்தாவே, எங்கள் கேழ்விப்
பட்டதை விசுவாசித்தவனாரென்று ஏசாயா சொல்லு
கிறானே. ஏசா. ௫௩: ௧. யோவா. ௰௨: ௩௭. ௩௮.

௰௭. ஆகப்போதும் விசுவாசங் கேழ்வியினாலும் கேழ்
வி பராபரனுடைய வசனத்தினாலும் வரும்.

௰௮. ஆனால் கேளாதிருந்தார்களோ வென்கிறேன்.
இல்லை. ◆ அதுகளின் தொனி பூமியெங்கும், அதுகளின்
வசனங்கள் பூச்சக்கரத்துடைய அந்தங்கள் மட்டும்
புறப்பட்டதே. ◆ சங்கீ. ௰௯: ௫.

௰௯. ஆனாலிஸ்றவேல் அதை அறிந்ததில்லையோ
என்கிறேன். முந்தி மோசேதானே: ◆ நான் உங்களுக்கு
ஜனமல்லாதவர்கள் பேரிலே பொறாமையை வருத்
தித்து உங்களுக்கு மதியற்ற சாதியின் பேரிலே எரிச்ச
லுண்டுபண்ணுவேனென்கிறதைச் சொல்லுகிறான்

◆ ௫. மோ. ௩௨: ௨௧.

௨௰. ஏசா

௨௰. ஏசாயாவோவென்றால். * நம்மைத் தேடாதவர்களுக்குத் தென்பட்டோம், நம்மைக் காசவிசாரித்துக் கேளாதவர்களுக்கு வெளியரங்கமானோமென்று தாராளமாய்ச் சொல்லுகிறான். * ஏசா. ௬௫: ௧.

௨௧. இஸ்றவேலைக்குறித்து: * கீழ்ப்படியாததுமாய் எதிர்ப்பேசுகிறதுமான சனத்துக்கு நாள்முழுதும் நம்முடைய கைகளை நீட்டினோமென்கிறதைச் சொல்லுகிறான். * ஏசா. ௬௫: ௨.

௰௧. அதிகாரம்.

யூதரெல்லாருந் தள்ளப்பட்டதில்லை என்பது.

இப்போதும் பராபரன் தம்முடைய சனத்தைத் தள்ளிவிட்டாரோவென்கிறேன், * இல்லையில்லை. ஏனென்றால் நானும் அபிரகாமின் விருத்தமும் பென்யமீன் கோத்திரமுமான இஸ்றவேலனாயிருக்கிறேனே.

* பிலி. ௩: ௫.

௨. பராபரன் தாம் முன்னறிந்த தம்முடைய சனத்தைத் தள்ளிவிட்டதில்லை. அல்லது, எலியாவைக் குறித்து வேதஎழுத்து சொல்லுகிறதை அறியீர்களோ.

௩. அவன்: * ஆண்டவரே, உம்முடைய தீர்க்கதரிசிகளைக் கொன்று உம்முடைய பீடங்களை இடித்துப்போட்டார்கள், நான் ஒருத்தனே மீந்திருக்கிறேன், என்பிராணனையும் வாங்கத் தேடுகிறார்களென்று, இஸ்றவேலுக்கு எதிராகப் பராபரனை நோக்கி விண்ணப்பம் பண்ணினான். * ௧. ராசா. ௰௯: ௰.

௪. இதற்குத் தேவஉத்தரவு அவனுக்கென்ன சொல்லுது: * பாகாலுக்கு முழங்கால் முடக்காத ஏழாயிரம் மனுஷரை நமக்கு மீத்துவைத்தோமென்குது.

* ௧. ராசா. ௰௯: ௰௮.

௫. அந்தப்படியே இக்காலத்திலுங் கிருபையான தெரிந்துகொள்ளுதலின்படியே * ஒரு மீதி வைக்கப்பட்டிருக்குது. * ௯: ௨௭.

௬. அது கிருபையினாலே உண்டாயிருந்ததேயானால் கிரியைகளினாலே உண்டாயிராது, மற்றப்படி கிருபை கிருபையல்லவே, அது கிரியைகளினாலே உண்டாயிருந்ததேயானால் கிருபையாயிராது. மற்றப்படி கிரியை கிரியையல்ல.

௭. ஆனதுகொண்டென்ன, இஸ்றவேல் * தேடுகிறதை அடைந்ததில்லை, தெரிந்துகொள்ளப்பட்டவர்களோவென்றால் அதை அடைந்தார்கள். மற்றவர்களோவென்றால் தத்தமட்டாக மனக்கடினப்பட்டார்கள். * ௯: ௩௧.

௮. * பராபரன் அவர்களுக்குக் கனநித்திரையின் ஆவியையும், காணாதிருக்குங் கண்களையுங், கேளாதிருக்குங் காதுகளையுங் கொடுத்தாரென்றெழுதியிருக்கிற

பிரகாரமாகத்தானே. * யேசா. ௬: ௰. ௨௯: ௯. ௰.

௯. தாவீதுஞ்சொல்லுகிறதாவது: அவர்களுடைய பந்தி அவர்களுக்குச் சுருக்குங் கண்ணியும் இடறுஞ் சரிக்குச்சரிக்கட்டுதலுமாகக்கடவது.

* சங்கீ. ௬௯: ௨௩. ௨௪.

௰. காணாதபடிக்கு அவர்கள் கண்கள் அந்தகாரப்படக்கடவது; அவர்கள் முதுகை எப்பொழுதுங் குனியப்பண்ணுமென்கிறான்.

யூதசாதி என்றென்றைக்குந் தள்ளப் பட்டிருப்பதில்லென்பது.

௰௧. இப்போதும் அவர்கள் விழுந்திருக்கவேண்டுமென்று இடறினார்களோ என்கிறேன்; இல்லை இல்லை; அவர்களுக்குப் பொறாமையை வருத்திவிக்கத்தானே அவர்கள் விழுந்ததினாலே புறசாதிகளுக்கு ரெட்சிப்புக்கிடைத்தது.

௰௨. அவர்கள் விழுந்தது லோகத்துக்கு ஐசுவரியமும் அவர்கள் குறைவு புறசாதிகளுக்கு ஐசுவரியமுமாச்சுதேயானால் எத்தனை அதிகமாய் அவர்கள் நிறைவு அப்படியாம்.

௰௩. ஏனெனில் என் மாம்சத்தாருக்கு நான் பொறாமையை வருத்திவித்து அவர்களில் சிலரை ரெட்சிப்பேனென்று,

௰௪. புறசாதியாராகிய உங்களுடனே பேசுகிறேன்; நான் * புறசாதிகளுக்கு அப்போஸ்தலனாயிருக்கிறபடியினாலே என் ஊழியத்தை மகிமைப்படுத்துகிறேன்.

* அப்போ. ௯: ௰௫. ௰௩: ௨.

௰௫. ஏனென்றால் அவர்களைத் தள்ளிவிடுதல் லோகத்தின் ஒப்புரவாகுதலாயிருந்தால் அவர்களை ஏற்றுக்கொள்ளுதல் என்னமாயிருக்கும்; மரித்தோரிலிருந்துண்டான சீவனைப்போலிருக்குமல்லவோ.

௰௬. முதல் விளைச்சல் பரிசுத்தமானால் அம்பாரமும் அப்படியாம்; வேர் பரிசுத்தமானால் கிளைகளும் அப்படியாம்.

௰௭. ஆனால் கிளைகளில் சிலது ஒடிக்குத் தள்ளப்பட்டு, காட்டொலிவமரமாகிய நீ அவைகளுக்குள்ளே பொருந்தவைக்கப்பட்டு, ஒலிவமரத்தினுடைய வேருக்கும் புஷ்டிக்கும் உடன்பங்காளியாயப் போனதுண்டானால்,

௰௮. கிளைகளுக்கு எதிராய்ப் பெருமைபாராட்டாதே; பாராட்டினாயேயாகிலோ நீ வேரைச் சுமக்காமல் வேர் உன்னைச் சுமக்குதென்று நினைத்துக்கொள்.

௰௯. இப்போதும் நான் பொருந்தவைக்கப்படுவதற்குக் கிளைகள் ஒடிந்து தள்ளப்பட்டதென்கிறாய்.

௨௰. நல்லது; அவிசுவாசத்தினாலே அதுகள் ஒடித்துத் தள்ளப்பட்டது; நீயோவெனில் விசுவாசத்தினாலே நிற்கிறாய்; மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு.

௨௧. ஏனெனறாலபராபரன சுபாவககிளைகளைத தபபவிடாதிருநதாரானால, உனனையுந தபபவிடாதி ருபபாரோவெனறு பயநதிரு.

௨௨. ஆகையாலபராபரனுடைய தயவையுங கண்டிப பையுமபார; விழுநதவர்களபேரிலே யிருக்கிற கண டிபபையும, உனபேரிலோ, நீ தயவிலே நிலைததிருந தால, இருக்கிற தயவையுந தானே. நிலைததாயேயா னால நீயுமவெடடுணடுபோவாய.

௨௩. அவர்களோ வெனறால * அவிசுவாசததிலே நிலைததிராவிடடால பொருததிவைக்கப படுவார்கள. ஏனெனறால அவர்களைமறுபடியுமபொருததிவைகக பராபரன வலலவராயிருக்கிறார். * ௨. கொ. ௩: ௰௬.

௨௪. ஏனெனறால நீ சுபாவததின படியே காட டொலிவையாகியமரததிலிருநதுவெடடபபடடு சுபா பநதபடிநலலொலிவமரததில பொருததிவைக்கபபட டாயானால, எததனை யதிகமாய சுபாவககிளைகளா கியவர்கள தஙகளுடைய ஒலிவமரததிலே பொருத தி வைக்கபபடுவார்கள.

௨௫. ஏனெனனில சகோதரரே, நீஙகள உஙகளில தானேபுததிமானகளாயிராதபடிக்கு, இநத ரகசியததை நீஙகள அறியாதிருகக எனககு மனதிலலை. அதேதெ னில புறசசாதிகளினநிறைவு உளபிரவேசிக்குமட டும இஸறவேலருக்கு ஒருபஙகுக்கு மனககடின முண டாசசுது. * லூ. ௨௧: ௨௪.

௨௬. இநதபடி யெலலா இஸறவேலருமிரடசிக கபபடும. * மீடகிறவர் சீயோனுககுவநது, அவபகதி யையாககோபைவிடடுவிலககுவாரெனறும,

* யெசா. ௫௯: ௨௰.

௨௭. நானவர்களபாவஙகளை நீககுமபோது இதுவே அவர்களுககு நமமாலுணடாகிய உடனபடிககையெனறுமஎழுதியிருககிறபிரகாரமாகததானே.

* யெரே. ௩௧: ௩௩.

௨௮. சுவிசேஷததினபடியேயானால அவர்கள உங களநிமிததியமாக பகையாளிகள, ஆனாலதெரிநது கொளளுதலினபடியே அவர்கள பிதாககளநிமித தியமாகசசிநேகிக்கபபடடவர்கள.

௨௯. ஏனெனனில தமமுடைய வரஙகளுககாக வுமஅழைககிறதுககாகவும பராபரன திருமபமனஸ தாபபடுகிறதிலலை.

௩௰. ஏனெனறால நீஙகள முனகாலததிலே பராபர னுககுக்கீழபபடியாதிருநது, இபபோது இவர்களுடைய அவிசுவாசததிலே இரககம பெறறது போலே,

௩௧. இவர்களுமஇபபோ உஙகளுககுககிடைதத இரக கததிலே கீழபபடியாதே போனார்கள, இவர்களும இரககமபெறததககதாகவே.

௩௨. ஏனெனறால பராபரன எலலாருககுமஇரங க எலலாரையுமஒருமிககமாய அவிசுவாசததுககுளளடைத துபபோடடார். * கலா. ௩: ௨௨.

௩௩. ஆ பராபரனுடைய ஞானம் அறிவு என்கிறதுகளின் ஐசுவரியமெத்தனை ஆழம்! * அவருடைய நியாயத் தீர்ப்புகள் எத்தனையாய் அளவிடக்கப்படாததுகளும்! அவருடைய வழிகள் எத்தனையாய் ஆராயப் படாததுகளுமாயிருக்குது. * சங்கீ. ௩௬: ௭.

௩௪. ஏனென்றால் கர்த்தருடைய சிந்தையை அறிந்தவனார்? * அல்லது அவருக்கு உசாவுதுணையானவனார்.

* யேச. ௪௰: ௰௩.

௩௫. அல்லது * தனக்கு வதிலாகக் கொடுக்கப்பட முந்தி அவருக்குக் கொடுத்தவனார். * யோபு. ௪௧: ௨.

௩௬. ஏனென்றால் எல்லாம் அவராலும் அவர் மூலமாகவும் அவருக்கென்றுமிருக்குது. அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாகக்கடவது. ஆமென்.

௰௨. அதிகாரம்.

நீதிமான்களாக்கப்பட்டவர்கள் நடக்க வேண்டிய பிரமாணங்கள்.

இப்போதும் சகோதரரே! நீங்கள் புத்தியுள்ள ஆராதனை பண்ணுகிறவர்களாய் * உங்கள் சரீரங்களைச் சீவனும் பரிசுத்தமும் பராபரனுக்கு நற்பிரியமுமான பலியாக நிறுத்த, பராபரனுடைய இரக்கங்களுக்காக உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். * ௬: ௰௩.

௨. நீங்கள் * இந்தப் பிரபஞ்சத்துக்கொத்த வேஷந்தரிக்காமல் நீங்கள் ** பராபரனுடைய நன்மையும் நற்பிரியமும் பரிபூரணமுமான சித்தமின்னதென்றறிவதைப் பரிச்சிக்கும்படிக்கு, உங்கள் மனதின் புதிதாகுதலினாலே மறுரூபமாகுங்கோள். * ௧. பேது. ௧: ௰௪. ௰௫.

** எபே. ௫: ௰௭.

௩. என்னவெனில், எண்ணவேண்டியதுக்கு மிஞ்சி எண்ணாமல், * பராபரன் அவனவனுக்குப் பகிர்ந்த விசுவாசத்தின் அளவுக்குத்தக்கதாய் மாத்திரம் அவனவன் தன்னை எண்ண, நான் உங்களிலிருக்கிற ஒவ்வொருத்தனுக்கும் எனக்குக் கட்டளையிடப்பட்ட கிருபையினாலே சொல்லுகிறேன். * ௧. கொ. ௰௨: ௰௧.

எபே. ௪: ௭.

௪. ஏனென்றால் * ஒரே சரீரத்திலே நமக்கநேகம் அவயவங்களிருந்து, எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழிலில்லாதது போலே,

* ௧. கொ. ௰௨: ௨௭.

௫. அநேகராயிருக்கிற நாம் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்கிறோம்; ஆனால் அவனவனைப் பார்த்தால் ஒருவனுக்கொருவன் நாம் அவயவங்களாயிருந்து,

௬. நமக்குக் கொடுக்கப்பட்ட கிருபையின்படியே * பலவித வரங்களுள்ளவர்களாயிருக்கிறோம்.

* ௧. கொ. ௰௨: ௪.

எ. தீர்க

௬. தீர்க்கதெரிசனமானாலும், விசுவாசப்பிரமாணத்துக்கொத்ததாயிருக்கக்கடவது. * ஊழியமானாலும் ஊழியத்திலும் போதிக்கிறவனானால் போதகத்திலும், * ௧. பேது. ௪: ௰. ௰௧.

௮. புத்திசொல்லுகிறவனானால் புத்திசொல்லுகிறதிலுந் தரித்திருக்கக்கடவான். கொடுக்கிறவன் கபடமில்லாமையாய்க் கொடுக்கவும், முதலாளியானவன் சாக்கிரதையுடனேயிருக்கவும், இரக்கஞ்செய்கிறவன் உச்சாயத்துடனே செய்யவுங்கடவான்.

௯. ஸ்னேகம் மாயமற்றதாயிருப்பதாக, பொல்லாப்பை யருவருத்து நன்மையிலே சாய்ந்துக்கொண்டிருங்கோள்.

௰. * சகோதரசினேகத்திலே ஒன்றுக்கொன்று பட்சமாயிருங்கோள், கனம்பண்ணுகிறதிலே ஒருத்தருக்கொருத்தர் முந்திக்கொள்ளுங்கோள்.

* ஏபே. ௪: ௨. ௩.

௰௧. சாக்கிரதையிலே அசட்டாயிராதேயுங்கோள், * ஆவியிலே அனலாயிருங்கோள், கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கோள். * அபி. ௩: ௰௫.

௰௨. நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கோள், உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கோள், செபத்திலே உறுதியாய்த்தரித்திருங்கோள். * லூ. ௰: ௨௰.

௰௩. * பரிசுத்தவான்களுடைய தாட்சிகளுக்குத் தவி செய்யுங்கோள். ** பரதேசிகளைச் சேர்த்துக்கொள்ளுகிறதில் கருத்தாயிருங்கோள். * ௧. கொ. ௰௬: ௧. ௨.

** எபிரே. ௰௩: ௨.

௰௪. * உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கோள், சபிக்காமல் ஆசீர்வதியுங்கோள்.

* மத. ௫: ௪௪.

௰௫. சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கோள், அழுகிறவர்களுடனே அழுங்கோள்.

௰௬. ஒன்றுக்கொன்று ஏகசிந்தையாயிருங்கோள், மேட்டிமையானதுகளைச் சிந்தியாமல், தாழ்மையானதுகளுக்கு உடந்தையாகுங்கோள், உங்களாலேதானே புத்திமான்களாயிராதேயுங்கோள்.

* ௧. கொ. ௧: ௰.

௰௭. * ஒருத்தருக்குந் தின்மைக்குத் தின்மை சரிக்கட்டாதேயுங்கோள். எல்லா மனுஷருக்கும் முன்பாக நன்மையானதுகளைப் பராமரியுங்கோள்.

* ௧. தெச. ௫: ௰௫.

௰௮. கூடுமானால் எல்லா மனுஷரோடும் உங்களாலே ஆனமட்டும் * சமாதானமாயிருங்கோள்.

* எபிரே. ௰௨: ௰௪.

௰௯. பிரியமானவர்களே, நீங்கள் * சரிக்குச்சரிக்கட்டாமல், கோபத்துக்கு ஒதுங்கிப்போங்கோள், ஏனென்றால்: ** நீதியைச்சரிக்கட்டுதல் நம்முடையது நாமே அதற்குக் கொடுப்போமென்று கர்த்தர் சொல்லு

ஜுக்கிறேனென்றெழுதியிருக்கிறது. * மத். ரு: ௩௯.
** ரு. மோ. ௩௨: ௩௫.

௨௰. ஆகையால * உன சததுருவுககுப பசியானால, அவனுககுச சாபபாடு கொடு, அவனுககுத தாகமானால, அவனுககுக குடிககததணணீர கொடு, ஏனெனறால நீ இபபடிச செயகிறதினால அவனதலையினமேல எரிகிற கரிகளைக குவிபபாய.

* லோகக். ௨௫: ௨௧. ௨௨.

௨௧. நீ பொலலாபபினால வெலலபபடாமல பொலலாபபை நனமையினாலே வெலலு.

௰௩. அதிகாரம.

அபபாலு மநதனுககுகதான பிறமாணங்கள.

எநத ஆததுமாவும * மேலபபட்ட அதிகாரஙகளுககுக கீழபபடிநதிருககககடவது. ஏனெனறால பராபரனாலே உணடாகாத அதிகாரமிலலை, உணடான அதிகாரஙகள பராபரனாலே கடடளையிடபபடடதுகள.

* தீத். ௩: ௧.

௨. ஆனதுகொணடு அதிகாரததுககு எதிர்ககிறவன பராபரனுடைய கடடளைககெதிர்ககிறான. எதிர்ககிறவர்களோவெனறால தஙகளுககுததானே ஆககினையைச சமபாதிககிறார்கள.

௩. ஏனெனில துரைகள நறகிரியைகளுககலல துறகிரியைகளுககுப பயஙகரமாயிருககிறார்கள. ஆகையால நீ அதிகாரததுககுப பயபபடாமலிருககவேணுமெனறால நனமைசெய, அபபொழுது அதினாலே உனககுப புகழசசியுணடாம. * ௧. பே. ௨: ௰௩. ௰௪.

௪. ஏனெனில அவன உனககு நனமையாகப பராபரனுடைய ஊழியககாறனாயிருககிறான. நீ பொலலாபபைச செயததாயேயானால, பயபபடு, அதேதெனறால அவன விருதாவாயப படடயததைப பிடிததிரான, ஏனெனில பொலலாபபைச செயகிறவனமேல கோபாககினைவர அவன நீதியைச சரிககடடுகிற தேவஊழியககாறனாயிருககிறான.

௫. ஆகையினாலே நீஙகள கீழபபடியவேணடியதாயிருககிறது, கோபாககினையினிமிததமாததிரமலல மனசசாடசியினிமிததியமாகவுநதானே.

௬. ஈதுககாக நீஙகள கபபஙகளையுங கொடுககிறீர்களே. அதேதெனறால அவர்கள இநதவேலைககெனறு உபாயததிலநிறககிற தேவஊழியககாறராயிருககிறார்கள.

௭. ஆகையால * எலலாருககுஞ செலுததவேணடியதைச செலுததுஙகோள, வரியைச செலுததவேணடியவனுககு வரியையும, ஆதிர்வையைச செலுததவேணடியவனுககுத திர்வையையும, பயததைச செலுததவேணடியவனுககுப பயததையும, கனததைச செலுததவேணடியவனுககுக கனததையுஞ செலுததுஙகோள.
* மத். ௨௨: ௨௧.

௮. ஒருத்தரை ஒருத்தர் சிநேகிக்கிறதேயல்லாமல்
ஒருத்தருக்கும் ஒன்றுங் கடன் படாதேயுங்கோள்;
ஏனென்றால் மற்றவனைச் சிநேகிக்கிறவன் நியாயப்பிர
மாணத்தை நிறைவேற்றினான்.

௯. ஏனென்றால்: விபசாரம் பண்ணாதிருப்பாயாக, கொலை
செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி
சொல்லாதிருப்பாயாக, இச்சியாதிருப்பாயாக என்கிறதும், வேறே கற்ப
னை ஏதேனுமொன்றுண்டானால் அதுவும், உன்
னைப்போலே பிறனைச் சிநேகிப்பாயாக என்கிற இந்த வசனத்
திலே சுருக்கமாய் அடங்கியிருக்குது.

௰. * சிநேகம் அடுத்தவனுக்குப் பொல்லாப்பைச்
செய்யாது, ஆகையாலே சிநேகமே நியாயப்பிரமாணத்தின்
நிறைவேறுதலாயிருக்குது.

* ௧. கொ. ௰௩: ௪. ௫.

௰௧. நித்திரையைவிட்டெழுந்திருக்க வேளையாச்சு
தென்று நாமறிந்திருக்கிறபடியினாலே,
இப்படிச் செய்க்கிறோம், ஏனென்றால் நாம் விசுவாசிச்ச
நாளைப் பார்க்கிலும் இப்போ நம்முடைய ரக்ஷ
ணிப்பு இன்னும் அதிகமாய்ச் சமீபித்திருக்குது. * எபே. ௫: ௰௪.

௰௨. * இராச்சென்று போச்சுது, பகலோ வெளிச்ச
மிருக்குது. ஆனபடியினாலே அந்தகாரத்தினுடைய கிரி
யைகளைப் போட்டுவிட்டு, வெளிச்சத்தின் ஆயுதங்க
ளைத் தரித்துக்கொள்ளக்கடவோம்.

* ௧. யோ. ௨: ௮.

௰௩. பகலிலே நடக்கிறாப்போலே சீராய் நடக்கக்க
டவோம், * பெருந்தீனியிலும் வெறியிலுமல்ல, சய
னங்களிலும் காமவிகாரங்களிலுமல்ல, ** விரோ
தத்திலும் பொறாமையிலுமல்ல.

* லூ. ௨௧: ௩௪. ௧. கொ. ௬: ௯. ௰.
** யாக். ௩: ௰௪—௰௬.

௰௪. நீங்கள் * கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவைத் தரித்
துக்கொண்டு, இச்சைகளுக்கிடமாய் உடலைப் பேணாதி
ருங்கோள். * கலா. ௩: ௨௭.

௰௪. அதிகாரம்.

விசுவாசப்பெலவீனரை நடத்தவேண்டிய மரியாதை.

விசுவாசப்பெலவீனனை ஏற்றுக்கொள்ளுங்
கோள், அவனுடைய ஐயங்களைக் குத்தமாய் நிர்ணயிக்
கவேண்டாம்.

௨. ஒருத்தன் எல்லாவஸ்துக்களையும் போசிக்க
லாமென்று விசுவாசிக்கிறான், பெலவீனனோவெ
ன்றால் மரக்கறிகளைப் போசிக்கிறான்.

௩. போசிக்கிறவன் போசியாதவனை அற்பமாய்
எண்ணவேண்டாம், போசியாதவன் போசிக்கிறவ
னைக் குத்தமாய் நிர்ணயிக்கவும் வேண்டாம், ஏனெ
ன்றால் பராபரன் அவனை ஏற்றுக்கொண்டார்.

௪. * அன்னியபணிவிடைக்காரனைக் குற்றமாய் நிற்ணிக்கிற நீ ஆர்? தன்னுடைய சேமானுக்குத்தானே அவன் நிலைக்கிறான் அல்லது விழுகிறான். ஆனாலும் அவன் நிலைநிறுத்தப்படுவானேனென்றால் பராபரன் அவனை நிலைநிறுத்த வல்லவராயிருக்கிறார். * யாக. ௪: ௰௨.

௫. ஒருத்தன் * ஒருநாளை மற்றொருநாளிலும் விசேஷித்ததாகத் தீர்க்கிறான். வேறொருத்தன் எல்லா நாளையுஞ் சரியாகத் தீர்க்கிறான். ஒவ்வொருத்தன் தன்னுடைய சிந்தையிலே முழு நிற்செயங் கொண்டிருக்கக்கடவான்.

* கொலோ. ௨: ௰௬. ௰௭.

௬. நாளைப் பார்க்கிறவன் கர்த்தருக்கென்று பார்க்கிறான்; நாளைப் பாராதவன் கர்த்தருக்கென்று பாராதிருக்கிறான்; போசிக்கிறவன் கர்த்தருக்கென்று போசிக்கிறான்; ஏனென்றால் * பராபரனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறான்; போசியாதவன் கர்த்தருக்கென்று போசியாதிருந்து பராபரனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறான்.

* ௧. கொ. ௰: ௩௧.

௭. அதேதென்றால் நம்மில் ஒருவனுந் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, ஒருவனுந் தனக்கென்று மரிக்கிறதுமில்லை.

௮. ஏனென்றால் நாம் பிழைத்தாலுங் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தாலுங் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால் நாம் பிழைத்தாலும் மரித்தாலுங் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்.

௯. ஏனென்றால் கிறிஸ்து மரித்தோர்மேலுஞ் சீவனுள்ளோர்மேலும் ஆண்டவராயிருப்பதற்காக மரித்துமெழுந்துமுயிர்த்துமிருக்கிறார்.

௰. நீயோவென்றால் * உன் சகோதரனைக் குற்றமாய் நிற்ணிப்பானேன்? அல்லது நீயும் உன் சகோதரனை அற்பமாயெண்ணுவானேன்? ** எல்லாருங் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்துக்கு முன்பாக நிறுத்தப்படுவோமே. * லூ. ௬: ௩௭. ** மத். ௨௫: ௩௧. ௩௨.

௰௧. ஏனென்றால்: * முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்குமென்றும், நாவுயாவும் பராபரனை அறிக்கைபண்ணுமென்றும் நம்முடைய சீவனைக்கொண்டு விளம்புகிறேனென்கிறதைக் கர்த்தர் சொல்லுகிறாரென்றெழுதியிருக்குது. * யெசா. ௪௫: ௨௩. ௨௪.

பிலிப். ௨: ௯—௰௧.

௰௨. ஆகையால் நம்மில் ஒவ்வொருத்தன் தன்தனக்காகப் பராபரனுக்குக் கணக்கொப்பிவிப்பான்.

௰௩. ஆனபடியினாலே இனி ஒருத்தரை ஒருத்தர் குற்றமாய் நிற்ணியாதிருக்கக்கடவோம்; அதைவிட சகோதரனுக்கு * தடுக்கலையும் இடறலையும் போடாதிருக்கவேண்டுமென்று நிற்ணயம் பண்ணுங்கோள். * மத். ௰௮: ௭.

௰௪. ஒன்றுந் தன்னாலே தீட்டுள்ளதல்லவென்று கர்த்தராகிய யேசுவுக்குள் நிற்செயித்திருக்கிறேன்; யாதொன்றைத் தீட்டுள்ளதாக எண்ணுகிறவனுக்குமாத்திரம் அது தீட்டுள்ளது. * மத். ௰௫: ௰௧.

௰௫. போசனத்தால் உன் சகோதரனுக்குத் துக்கமுண்டானதேயானால், நீ சினேகத்தின்படியே நடவாதேபோ

றய

யங்கிலத்து மரித்து மீட்டவனை * உன்போசனத்தினாலே கெடுக்காதே. * ௧. கொ. ௮: ௯—௰௨.

௰௬. ஆகையால உங்கள நனமைதூஷிக்கப்படாதிருப்பதாக.

௰௭. ஏனெனில பராபரனுடைய ராஜ்ஜியம * போசனமும் பானமுமல்ல, அது நீதியும சமாதானமும பரிசுத்த ஆவியினால அடைகிற சந்தோஷமுந்தானே.

* ௧. கொ. ௮: ௮.

௰௮. ஏனெனறால இதுகளிலே கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்கிறவன பராபரனுக்குகந்தவனும மனுஷருக்குகந்தவனுமாயிருக்கிறான.

௰௯. ஆனபடியினாலே சமாதானத்துக்கும அனனியோனனியமான பக்திவிருத்திக்கும உதவுகிறதுகளைப் பினதொடரக்கடவோம.

௨௰. போசனநிமித்தியமாகப் பராபரனுடைய கிரியையை யழிக்கப்போடாதே. எல்லா வஸ்துக்களும சுத்தந்தான, ஆனாலும இடறலை அடைந்து போசிக்கிற மனுஷனுக்கு அது ஆகாததாயிருக்குது.

௨௧. * மாஙசம போசியாதிருக்கிறதும மதுபானங் குடியாதிருக்கிறதும, யாதொன்றிலே உன சகோதரன இடறலபடுகிறானோ, அல்லது இடறலக்கொளளுகிறானோ, அல்லது பெலவீனப்படுகிறானோ, அதைவிலங்கி யிருக்கிறதும நலம.

* ௧. கொ. ௮: ௰௩.

௨௨. உனக்கு விசுவாசமிருந்தால அது உனனிடத்திலே தானே பராபரனுக்கு முனபாக உனக்கிருக்கக்கடவது. நானலதெனறறிந்ததிலே தனனைத்தான குற்றமாய நிறணியாதவன பாக்கியவான.

௨௩. சந்தேகப்படுகிறவனோவெனில, போசித்தால குற்றவாளியென றுதீர்க்கப்படுகிறான, ஏனெனறால விசுவாசத்தினாலே போசிக்கயில்லை. * விசுவாசத்தினாலே வராததெல்லாம பாவம. * தீத்து. ௧: ௰௫.

௰௫. அதிகாரம.

அபபாஸ்துமமரியாதையுளள நடக்கைக்குக காணபுத்தி.

௧. பெலத்திருக்கிறநாமோவெனில நமமுடைமேலேதான பிரியமாயிராமல, * பெலனற்றவர்களுடைய பெலவீனங்களைச்சுமக்கவேணும. * ௧. கொ. ௯: ௨௨.

௨. ஆகையால நமமில ஒவவொருத்தன நனமையும ஸ்திரணக்கட்டுதலுமுணடாக அடுத்தவனுக்குப பிரியப்படக்கடவான.

௩. ஏனெனறால கிறிஸ்துவுந்தமமுடைமேலேதானே பிரியமாயிருக்கவில்லை: * உமமை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள என்மேலே விழுந்ததென்று எழுதியிருக்கிறபடியேயிருந்தார். * சங்கீ. ௬௯: ௰.

௪. ஆனால முன்னெழுதப்பட்டவைகளெல்லாம * நம முடைய போதனையாக எழுதப்பட்டது. பொறுமையினா லும வேதவாக்கியங்களின் தேறுதலினாலும நமக்கு நம்பிக்கையுண்டாயிருக்கப்பதற்காகத்தானே.

* ௨: தீமோ. ௩: ௰௬ ௰௭.

௫. ஆனால பொறுமைக்குந் தேறுதலுக்கும பரா பரனானவர் உங்களுக்குக் கிறிஸ்து யேசுவினபடியே ஏகமனதைக்கொண்டு ஒருமைப்பட்டிருக்கத்தக்கதாய அருள செய்யக்கடவார்.

௬. நீங்கள ஏகமனப்பட்டு நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவின் பிதாவாகிய பராபரனை ஒரேவா யினாலே மகிமைப்படுத்தத்தக்கதாகவே.

௭. ஆகையினாலே கிறிஸ்துவும பராபரனுடைய மகிமை யுண்டாக நம்மைச் சேர்த்துக்கொண்டது போலே ஒருத் தரொருத்தரைச் சேர்த்துக்கொள்ளுங்கோள.

௮. மேலும பிதாக்களுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்களை திடப்படுத்துகிறதுக்கு, யேசுக் கிறிஸ்து பராபரனுடைய சத்தியத்துக்காகச் சுன்னத்தினு ழியக்காரனானாரென்றும,

௯. புறசாதிகளோவென்றால இரக்கத்துக்காகப் பராபரனை மகிமைப்படுத்துகிறார்களென்றுஞ் சொல லுகிறேன. * இதினிமித்தம புறசாதிகளுக்குள்ளே உமமை அறிக்கைபண்ணி, உமமுடைய நாமத்துக்குச் சங்கீதம்பாடு வேனென்றெழுதியிருக்கிறபடிதானே.

* சங். ௰௮: ௪௯.

௰. பின்னையும: * சாதிகளே, அவருடைய சனத் தோடேகூடச் சந்தோஷப்படுங்கோளென்கிறார.

* ௫. மோ. ௩௨: ௪௩.

௰௧. பின்னையும: * எல்லாச் சாதிகளே, கர்த்தரைத் துதியுங்கோள, எல்லாச் சனங்களே, அவரைப் புகழுங்கோளென்கிறார. * சங். ௱௰௭: ௧.

௰௨. பின்னையும: * ஈசாயின வேரும, சாதிகளை ஆளாததுக்கு எழும்புவருமுண்டு, அவரிடத்திலே சாதிகள நம்பிக்கைவைப்பார்களென்று ஏசாயா சொல்லுகி றான. * யெச. ௰௧: ௰.

௰௩. ஆனால நீங்கள பரிசுத்த ஆவியின பெலத்தினால நம்பிக்கையிலே பெருகும்படிக்கு, நம்பிக்கையினு டைய பராபரன உங்களை விசுவாசத்தினாலுண்டாகும எல்லாச் சந்தோஷத்தினாலுஞ் சமாதானத்தினாலும நிரப்பக்கடவார.

நிருபமுகவு.

௰௪. ஆனால, என சகோதரரே, நீங்களே நற்குணத் தினால நிறைந்தவர்களுந் * சகல அறிவினாலே நிரப்பப் பட்டவர்களும, ஒருத்தருக்கொருத்தர் புத்திசொல்லவல் லவர்களுமாயிருக்கிறீர்களென்று, நானதானும உங் களைப்பற்றி நிச்சயித்திருக்கிறேன.

* ௨. பேது ௧: ௰௨. ௧. யோவா. ௨: ௨௧.

௰௫. ஆகிலும் சகோதரரே, புறசாதிகளின் பெலி பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட்ட பிரியமான பெலியாகும்படிக்கு, நான் பராபரனுடைய சுவிசேஷத்தை புறசாதிகளுக்குள்ளே ஆசாரியன் போலே நடத்துகிறவனாய்க் கிறீஸ்துவினுடைய ஊழியக்காரனாயிருக்க, பராபரனாலெனக்களிக்கப்பட்ட கிருபையினாலே,

௰௬. நான் உங்களை நினைப்பூட்டுகிறவனாய் உங்களுக்குச் சற்றுத் தயிரியமாயெழுதினேன்.

௰௭. பராபரனுக்கடுத்த காரியங்களிலே கிறீஸ்து யேசுவுக்குள் மேன்மை பாராட்டும் முகாந்திரமதினாலெனக்குண்டு.

௰௮. ஏனென்றால் புறசாதிகளைக் கீழ்ப்படியும்படிக் கிறீஸ்து என்னைக்கொண்டு வார்த்தையினாலும் கிரியையினாலும் அடையாளங்களுமற்புதங்களுடைய பெலத்தினாலும் பராபரனுடைய ஆவியின் பெலத்தினாலும் நடப்பித்து வருகிறவைகளல்லாமல் வேறொன்றையுங்குறித்துச் சொல்ல நான் துணிகிறதில்லை.

௰௯. அப்படியே யெருசலேந்துவக்கிச் சுற்றிலும் இல்லிரிக்கு மட்டாகக் கிறீஸ்துவினுடைய சுவிசேஷ ஊழியத்தை நிறைவேற்றினேன்.

௨௰. மேலும் நான் அன்னியனுடைய அஸ்திவாரத்தின் மேலே கட்டாதபடிக்கு, கிறீஸ்துவினுடைய நாமம் விளங்காத ஸ்தலங்களிலே சுவிசேஷத்தை அறிவிக்குந் தக்கதாக நாடினேன்.

௨௧. * அவனுடைய விசேஷம் அறிவிக்கப்படாதிருந்தவர்கள் காணப்பார்க்கவேணுமென்றும் கேழ்விப்படாதிருந்தவர்கள் உணர்வார்களென்றும் எழுதியிருக்கிறதின்படியாகத்தானே. * யேச. ௫௨: ௰௫.

௨௨. இதினாலே தான் உங்களண்டைக்கு வரவொட்டு விசேஷித்துத் தடுக்கப்பட்டேன்.

௨௩. ஆனாலிப்பொழுதோ இந்தப்பிரதேசங்களில் எனக்கினி ஸ்தலமில்லாதபடியினாலும், உங்களண்டைக்கு வர அநேக வருஷங்களாய் எனக்கு வாஞ்சை உண்டாயிருக்கிறபடியினாலும்,

௨௪. உங்களண்டைக்கு நான் ஸ்பானியாவுக்குப் பயணம்பண்ணும் போது வருவேன், ஏனென்றால் நான் உலாவப் பயணம் போகையிலே உங்களைக் கண்டு, உங்களோடடிக்கடிக்கூடி முந்திச் சற்று மனரம்மியப்பட்டு, பிற்பாடு உங்களாலே வழிவிடப்படுவேனென்று நம்பியிருக்கிறேன்.

௨௫. இப்போதோவென்றால் * யெருசலேமுக்குப் பரிசுத்தவான்களுக்கூழியமாய்ப் பயணம்பண்ணுகிறேன்.

* அப்போ. ௰௯: ௨௧.

௨௬. அதேனென்றால் மக்கெதோனிய தேசத்தாரும் அக்காயா தேசத்தாரும் யெருசலேமிலிருக்கும் பரிசுத்தவான்களின் ஏழைத்தரித்திரருக்குச் சற்றுமுதவிசெய்ய விருப்பமானார்கள்.

௨௭. விருப்பமானார்கள்; அவர்களுக்குக் கடன்பட்டவர்களுமாயிருக்கிறார்கள்; ஏனென்றால் புறசாதியார் அவர்களுடைய ஞானநன்மைகளிலே பங்குபெற்றிருந்தால், அவர்களுக்குச் சரீரநன்மைகளிலே ஊழியஞ்செய்யக் கடன்காரருமாயிருக்கிறார்கள்.

௨௮. இதை நான் நிறைவேற்றி, இந்தப் பலனை அவர்கள் கையிலே பத்திரப்படுத்தினபின்பு உங்கள் ஊர்வழியாய் இஸ்பானியாவுக்குப் போய்விடுவேன்.

௨௯. நான் உங்களண்டைக்கு வரும்போதோ வேண்டிலே, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் ஆசீர்வாதப் பரிபூரணத்துடனே வருவேனென்றறிந்திருக்கிறேன்.

௩௰. ஆனால் சகோதரரே, யூதேயாவிலிருக்கிற அவிசுவாசிகளுக்கு நான் தப்புவிக்கப்படுகிறதுக்கும், நான் யெருசலேமுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்குந் தருமசகாயம் பரிசுத்தவான்களுக்கு நற்பிரியமாகிறதுக்கும்,

௩௧. நான் பராபரனுடைய சித்தத்தினாலே சந்தோஷத்துடனே உங்களண்டைக்கு வந்து உங்களோடே கூட இளைப்பாறப்படுகிறதுக்குமாக,

௩௨. நீங்கள் பராபரனை நோக்கி எனக்காகச் செய்யும் வேண்டுதல்களிலே என்னுடனே கூடப் போராடி நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துநிமித்தமாகவும், ஆவியினுடைய சிநேகத்தின் நிமித்தியமாகவும் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். ✝ ௨. தெச. ௩: ௧. ௨. ௧. மோ. ௩௨: ௨௬.

௩௩. ஆறுசமாதானத்தினுடைய பராபரன் உங்களனைவரோடுங்கூட இருக்கக்கடவார்; ஆமென்.

௰௬. அதிகாரம்.

அப்பாஷம முக்வ்வாறுதல்கள்.

கெங்கிரேயா வூர்ச்சபையின் ஊழியக்காரியாகிய நம்முடைய சகோதரி பேபேயாளை நீங்கள் பரிசுத்தவான்களுக்கேற்ற பிரகாரமாய்க் கர்த்தருக்குள் ஏற்றுக்கொண்டு எந்தக் காரியத்திலே உங்களால் ஏதாகிலும் அவளுக்குத் தேவையாயிருக்குதோ அதிலே அவளுக்கு ஆதரவாயிருப்பதற்கு அவளை உங்களுக்கு ஒப்பிவிக்கிறேன்.

௨. ஏனென்றால் அவளும் அநேகருக்கும் எனக்குங்கூட ஆதரவாயிருந்தாள்.

௩. கிறிஸ்துயேசுவுக்குள் என்னுடனே வேலையாட்களாகிய ✝ பிரிஸ்கில்லாளையும் அக்கில்லாவையும் வினவுங்கொள். ✝ அப்போ. ௰௮: ௨. ௨௬.

௪. அவர்கள் என் பிராணனுக்காகத் தங்களுடைய கழுத்தை நீட்டினார்கள்; அவர்களுடைய உபகாரத்தை நான் மாத்திரமல்ல, புறசாதிகளுடைய எல்லாச் சபைகளும் நன்றியறிகிறார்கள்.

௫. அவர்களுடைய வீட்டிலே கூடிய சபையையும் வினவுங்கொள்; அகாயாவிலே கிறிஸ்துவுக்கு முதற்க

ச்சியாகியென்னுடைய பிரியமான எப்பெனேத்துவை மினவுங்கோள்.

௬. எங்களுக்காக மிகவும் பிரயாசப்பட்ட மரியாளை மினவுங்கோள்.

௭. அப்போஸ்தலர்களுக்குள்ளே பேர் பெற்றவர்களுமாய் எனக்கு முந்திக் கிறிஸ்துவுக்குள்ளானவர்களும் என்னினத்தாருமாய் என்னுடனே கூடக் காவலபண்ணப்பட்டிருந்தவர்களுமான அந்திரோனிக்குவையும் யூனியாவையும் மினவுங்கோள்.

௮. கற்த்தனுக்குள் எனக்குப் பிரியமான அம்பலியாவை மினவுங்கோள்.

௯. கிறிஸ்துவுக்குள் நம்முடனே வேலையாளாகிய உர்பானுவையும் எனக்குப் பிரியமான ஸ்தாக்கியையும் மினவுங்கோள்.

௰. கிறிஸ்துவுக்குள் உத்தமனென்று பேர்பெற்ற அப்பெல்லேயை மினவுங்கோள். அரிஸ்தொபுலுவினுடைய மனுஷரில் உள்ளவர்களை மினவுங்கோள்.

௰௧. என்னினத்தானாகிய ஏரோதியோனை மினவுங்கோள். நர்க்கீசுவினுடைய மனுஷரில் கற்த்தருக்குள்ளானவர்களை மினவுங்கோள்.

௰௨. கற்த்தருக்குள் பிரயாசப்பட்ட திரிபேனாளையுந் திரிபோசாளையும் மினவுங்கோள். கற்த்தருக்குள் மிகவும் பிரயாசப்பட்ட பிரியமான பேர்சியாளை மினவுங்கோள்.

௰௩. கற்த்தருக்குள் தெரிந்துகொள்ளப்பட்ட ருபுவையும் எனக்குந் தாயாகிய அவனுடைய தாயாரையும் மினவுங்கோள்.

௰௪. அசிங்கிரித்துவையும் பிலேகோனையும் ஏர்மாவையும் பத்றொபாவையும் ஏர்மேயையும் அவர்களுடனேயிருக்கிற சகோதரரையும் மினவுங்கோள்.

௰௫. பிலோலோகுவையும் யூலியாளையும் நேரேயையும் அவனுடைய சகோதரியையும் ஒலிம்பாவையும் அவர்களுடனேயிருக்கிற பரிசுத்தவான்களனைவரையும் மினவுங்கோள்.

௰௬. ஒருவரை ஒருவர் * பரிசுத்த முத்தத்தினாலே மினவிக்கொள்ளுங்கோள். கிறிஸ்துவினுடைய சபைகள் உங்களை மினவுது. * ௧. கொ. ௰௬: ௨௰.

௰௭. ஆனால் சகோதரரே! நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்துக்கு மிகுசிபேதகங்களையும் இடறல்களையும் உண்டாக்குறவர்களை நோக்கியிருக்க உங்களை எச்சரிக்கிறேன், அவர்களை விட்டு விலகுங்கோள்.

* தீத்து. ௩: ௰.

௰௮. ஏனென்றால் அப்படிக்கொத்தவர்கள் நம்முடைய கற்த்தராகிய யேசுக்கிறிஸ்துவுக்கல்ல, * தங்கள் வயற்றுக்கூழியஞ்செய்து, ** நயவசனிப்பினாலும் ஆசீர்வதிப்பினாலும் போஸலாப்பை அறியாதவர்களுடைய இருதயங்களை மோசம்போக்குறார்கள்.

* பில். ௩: ௰௮. ௰௯. ** ௨. பேது. ௨: ௩.

௰௯. உங்கள்

௰௯. உங்கள் கீழ்ப்படியுதலோ வென்றால் எல்லாருக்குந் தெரிய வந்தது; ஆகையால் உங்களைக் குறித்துச் சந்தோஷப்படுகிறேன். ஆனாலும் நீங்கள் நன்மைக்கு ஞானிகளுந் தீமைக்குப் பேதைகளுமாயிருக்க வேணுமென்றிருக்கிறேன்.

௨௰. ஆனால் சமாதானத்தினுடைய பராபரன் சீக்கிரத்திலே * சாத்தானை உங்கள் காலின் கீழே நசுக்கிப் போடுவார். நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனே கூட இருக்கக்கடவது. ஆமென்.

* ௧. மோ. ௩: ௰௫.

௨௧. * என்னுடனே வேலையாளனாகிய தீமோத்தேயும் என்னினத்தாராகிய லூக்கியும் யாசோனுஞ் சோசிபத்துரும் உங்களைத் தழுவுகிறார்கள். * அப்போ. ௰௬:

௧—௩. பிலி. ௨: ௰௯. ௨௰.

௨௨. கர்த்தருக்குள் இந்த நிருபத்தை எழுதின தெற்தியு என்னப்பட்ட நானும் உங்களைத் தழுவுகிறேன்.

௨௩. எனக்குஞ் சபையனைத்துக்கும் விருந்திடுகிற காயு உங்களைத் தழுவுகிறான்; பட்டணத்துக்கு உக்கிராணக்காரனாகிய * ஏராஸ்துஞ் சகோதரனாகிய குவாற்றுவும் உங்களைத் தழுவுகிறார்கள். * அப்போ. ௰௯: ௨௨.

௨௪. நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினுடைய கிருபை உங்களெல்லாரோடுங் கூடயிருக்கக்கடவது. ஆமென்.

௨௫. ஆனால் ஆதிகாலங்களிலே ரகசியமாயிருந்து இப்போதோ வெளிப்படுத்தப்பட்டு தீர்க்கதரிசன எழுத்துகளிலே அநாதி பராபரனுடைய கட்டளையின்படி வெளியாக்கப்பட்டதும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படியும்படிக்கு எல்லாச் சாதிகளுக்கும் அறிவிக்கப்பட்டதுமாகிய பரம ரகசியத்தை வெளிப்படுத்துகிறதான

௨௬. யேசுக்கிறிஸ்துவினுடைய பிரசங்கமாகிய என் சுவிசேஷத்தின்படியே உங்களைத் திடப்படுத்துக்கு வல்லவருமாய்,

௨௭. * ஏகஞானமுள்ளவருமாகிய பராபரனுக்கு யேசுக்கிறிஸ்துமூலமாய் என்றென்றைக்கும் மகிமையுண்டாகக்கடவது. ஆமென்.

* ௧. தீமோ. ௧: ௰௭.

கொரிந்துப்பட்டணத்திலெழுதி, கெங்கிரேய
ஊர்ச்சபையின் ஊழியக்காரியாகிய பே
பெயாளென்கையிலே ரோமா
புரியாருக்கனுப்பினது.

அப்போஸ்தலனாகிய பவுலு

கொரிந்தியருக்கெழுதின

முதலாம் நிருபம்.

௧. அதிகாரம்.

நிருபமுகவுரை.

பராபரனுடைய சித்தத்தினாலே * யேசு கிறீஸ்துவினு
டைய அப்போஸ்தலனாக அழைக்கப்பட்ட பவுலும்
சகோதரனாகிய சொஸ்தேனேயும், * எபே. ௧: ௧.

௨. கொரிந்துவிலிருக்கிற அழைக்கப்பட்ட பரிசுத்த
வான்களாகிய கிறீஸ்து யேசுவுக்குள் * பரிசுத்தமாக்
கப்பட்ட பராபரனுடைய சபையாருக்கும், அவர்களிடத்
திலுமெங்களிடத்திலுமிருக்கும் நம்முடைய கருத்தராகிய
யேசு கிறீஸ்துவினுடைய நாமத்தைத் தொழுது கொள்
ளுகிற அனைவருக்குங்கூட எழுதுகிறதாவது:

* கா. ௰௧.

௩. நம்முடைய பிதாவாகிய பராபரனாலுங் கருத்தராகிய
யேசு கிறீஸ்துவினாலுமுங்களுக்குக் கிருபையுஞ்சமா
தானமுமுண்டாகக்கடவது.

௪. நீங்கள் சகலத்திலும், சகல வசனத்திலுஞ் சகல
அறிவிலும் யேசு கிறீஸ்துவுக்குள் ஐசுவரியவான்க
ளாயிருக்கிறதினால், அவருக்குள் உங்களுக்களிக்கப்
பட்ட பராபரனுடைய கிருபைக்காக,

௫. எப்பொழுதும் பராபரனை உங்கள் நிமித்தியம்
ஸ்தோத்திரிக்கிறேன்.

௬. ஏனென்றாலுங்களுக்கொன்றுங் குறைவில்லாதி
ராமல் நீங்கள் நம்முடைய கருத்தராகிய யேசு * கிறீஸ்து
வினுடைய வெளிப்படுதலுக்குக் காத்திருக்கக்
கண்டியாய்,

* பிலி. ௩: ௨௰.

௭. கிறீஸ்துவினுடைய சாட்சி உங்களில் திடப்
பட்டது.

௮. நீங்கள் நம்முடைய கருத்தராகிய யேசு கிறீஸ்துவின்
நாளிலே நிந்திக்கப்படாதவர்களாயிருக்க, அவர்
உங்களை முடிவுபரியந்தம் உறுதிப்படுத்துவார்.

௯. உங்களைத் தம்முடைய குமாரனாகிய நம்முடைய கருத்தர்
யேசு கிறீஸ்துவினுடைய * ஐக்கியத்துக்கழைத்த
பராபரன் ** உண்மையுள்ளவர். * யோவ. ௰௫: ௫.

** ௧. தெச. ௫: ௨௪.

பவுலு கொரிந்தியருடைய சபை
யிலே பிறந்த பிரிவினைகளைத்
தண்டிக்கொண்டனது.

௰. ஆனால், சகோதரரே, நீங்களெல்லாரும் ஒன்
றையே பேசவும், உங்களுக்குள்ளே பிரிவினைகளில்
லாமல் நீங்கள் * ஏகசிந்தனையுமாக நிதானிப்புமாக்ச்

சீ

சீர்பொருந்தியிருக்கவும் நம்முடைய கற்தராகிய யேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். * பிலி. ௩: ௰௬.

௰௧. ஏனென்றால், என் சகோதரரே, உங்களுக்குள்ளே விரோதங்களுண்டென்று உங்களைக் குறித்துக் கிலோவேயாரின் மனுஷராலே எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

௰௨. நான் சொல்லுகிறதேதென்றால்: உங்களிலவரவர் நான் பவுலினுடையவனென்றும், நான் * அப்பொல்லோவினுடையவனென்றும், நான் கேபாவினுடையவனென்றும், நான் கிறிஸ்துவினுடையவனென்றுஞ் சொல்லுகிறீர்கள்.

* அப்போ. ௰௮: ௨௪.

௰௩. கிறிஸ்து பிரிந்திருக்கிறாரோ, பவுலு உங்களுக்காகச் சிலுவையிலே அறையப்பட்டானோ, அல்லது பவுலுவின் நாமத்திலே ஞானஸ்நானம் பெற்றீர்களோ,

௰௪. என் நாமத்திலே ஞானஸ்நானங் கொடுத்தேனென்று ஒருத்தனுஞ் சொல்லக்கூடாதபடிக்கு,

௰௫. நான் * கிறிஸ்புக்குங் காயுக்குமொழிய உங்களில் வேறொருத்தனுக்கும் ஞானஸ்நானங் கொடாதிருக்கிறதுக்காகப் பராபரனை ஸ்தோத்திரிக்கிறேன்.

* அப்போ. ௰௮: ௮.

௰௬. * ஸ்தேவானுடைய வீட்டாருக்கும் ஞானஸ்நானங் கொடுத்தேன். அப்புறம் நான் வேறொருத்தனுக்கு ஞானஸ்நானங் கொடுத்ததுண்டோவென்று அறியேன்.

* ௰௬: ௰௫.

௰௭. ஏனென்றால் ஞானஸ்நானத்தைக் கொடுக்கவல்ல, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கக் கிறிஸ்து என்னை அனுப்பினார். கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போக * வசனிப்பின் ஞானத்துடனே பிரசங்கிக்க வல்ல. * ௨: ௪. ௫.

லவுக்கிகஞானமமாயதைகளை
றெப்பிவித்தது.

௰௮. ஏனென்றால் சிலுவையினுடைய வசனங் கெட்டுப்போகிறவர்களுக்குப் பயித்தியமாயிருக்குது, ரட்சிக்கப்படுகிற நமக்கு அது * தெய்வபெலனாயிருக்குது.

* ரோ. ௧: ௰௬.

௰௯. ஏனென்றால்: * நாம் ஞானிகளுடைய ஞானத்தை அழித்து, விவேகிகளுடைய விவேகத்தை மறந்துபோகப்பண்ணுவோமென்றெழுதியிருக்குது.

* யேச. ௨௯: ௰௪.

௨௰. ஞானியெங்கே, வேதபாரகனெங்கே, இந்தப் பிறவகுசியத்துக்கு சாஸ்திரியெங்கே, பராபரனிந்த லோகத்தினுடைய ஞானத்தைப் பயித்தியமாக்கினதில்லையோ.

௨௰௧. ஏனென்றால் பராபரனுடைய ஞானத்துக்கேற்றதாய் லோகம் பராபரனை ஞானத்தினாலே அறியாதபடி

யினு

யினாலே, பிரசங்கத்தினுடைய பயித்தியத்தினாலே விசுவாசிக்கிறவர்களை ரெட்சிக்க, * பராபரனுக்குப் பிரியமாச்சுது.

* மத். ௰௧: ௨௫. ௨௬.

௨௨. ஏனென்றால் * யூதர் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள்.

* மத். ௰௨: ௩௮.

௨௩. நாங்களோ யூதருக்கு இடறலுங் கிரேக்கருக்குப் பயித்தியமுமாகிய * சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்.

௨௪. ஆனால் அழைக்கப்பட்டிருக்கிற யூதருக்குங் கிரேக்கருக்குமோ தேவபெலனாக * தேவஞானமுமாகிய கிறிஸ்துவைத்தானே. * கொலோ. ௨: ௩.

௨௫. ஏனென்றால் தேவபயித்தியமானது மனுஷரைப் பார்க்கிலும் ஞானமாயிருக்குது, தேவபெலயீனமானதும் மனுஷரைப்பார்க்கிலும் பெலனுமாயிருக்குது.

௨௬. ஏனென்றால், சகோதரரே, அழைக்கப்பட்ட உங்களைப் பாருங்கோள், * மாம்சத்தின்படி ஞானிகளாயிருக்கிறவர்கள் அனேகரில்லை, வல்லவர்கள் அனேகரில்லை, நற்குலத்தார் அனேகரில்லை.

* யாக். ௨: ௫.

௨௭. ஞானிகளை வெட்கப்படுத்த, பராபரன் லோகத்தில் பயித்தியமானதுகளைத் தெரிந்துகொண்டார், பெலவான்களை வெட்கப்படுத்த, பராபரன் லோகத்தில் பெலயீனமானதுகளைத் தெரிந்துகொண்டார்.

௨௮. இருக்கிறதுகளை அபாத்தமாக்க, பராபரன் லோகத்தில் இழிகுலமானதுகளையும் அற்பமாய் எண்ணப்பட்டதுகளையும் இல்லாததுகளையுந் தெரிந்துகொண்டார்.

௨௯. தமக்கு முன்பாக ஒருமாம்சமும் பெருமை பாராட்டாதபடிக்குத்தானே.

௩௰. ஆனால் அவராலே நீங்கள் கிறிஸ்துயேசுவுக்குள்ளிருக்கிறீர்கள், இவர் பராபரனாலே நமக்கு ஞானமும் * நீதியும் ** பரிசுத்தப்படுத்துதலும் மீட்புமாக்கப் பட்டார். * யெரே. ௨௩: ௫. ௬. ** யோவ. ௰௭: ௰௯.

௩௧. எழுதியிருக்கிறபடியே, * மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தருக்குள் மேன்மைபாராட்டக்கடவன்.

* யெரே. ௯: ௨௩. ௨௪. ௨. கொ. ௰: ௰௭.

௨. அதிகாரம்.

பவுல் தன்னுடைய வசனிக்கும் ஞானத்துக்கான வேறுதத்தேனென்றுகாண்பித்தது.

சகோதரரே, நானும் உங்களண்டைக்கு வந்து உங்களுக்குப் பராபரனுடைய சாட்சியை அறிவிக்கிறபோது *

மேட்டிமையான வசனப்போதுமையுல்லதுஞானத்தோ
டேவந்ததில்லை. * க: ௰௭.

௨. ஏனென்னில் நான் யேசுக்கிறிஸ்துவை, சிலுவை
யிலே அறையுண்டவரைத் தவிர, வேறொன்றையும்
உங்களுக்குள்ளே அறிந்திருப்பதுக்கு காரியமென்
றெண்ணிக்கொண்டதில்லை.

௩. நானக்குப்பெலயீனத்தோடும்பயத்தோடும் வெகு
நடுக்கத்தோடே உங்களிடத்திலிருந்தேன்.
* அப்போ. ௰௮: ௧. ௬.

௪. உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்தி
லல்லவெ பராபரனுடைய பெலத்திலே நிற்கும்படிக்கு
* ௨. கொரி. ௪: ௭.

௫. என் வசனமுமென் பிரசங்கமும் மனுஷஞான
த்தினுடைய யோக்கியமான வார்த்தைகளாயிராமல், ஆவி
யுடைய பெலனுமாய் விளங்கிறதாயிருந்தது.

௬. ஆனாலும் தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப்
பேசுகிறோம், இந்தப் பிறவெகுசிய ஞானத்தையோவல்ல
அழிந்துபோகிறவர்களாகிய இந்தப் பிறவெகுசியப் பிரபுக்
களுடைய ஞானத்தையுமல்ல.

௭. பராபரன் நம்முடைய மகிமைக்காக லோகத்
தோற்றத்துக்கு முன்னே குறித்து மறைக்கப்பட்
டுமாயிருந்த * தேவரகசியமான ஞானத்தைப் பேசுகி
றோம். * ௪. திமோ. ௫: ௰௬.

௮. அந்த ஞானத்தைப் பிரபஞ்சத்தின் பிரபுக்களிலொரு
வனுமறிந்துகொண்டதில்லை, அறிந்துகொண்டி
ருந்தார்களானால், அவர்கள் மகிமையினுடைய கர்த்
தரைச்சிலுவையிலறைந்ததில்லை.

௯. ஆனால் எழுதியிருக்கிறபடிக்கு: * பராப
ரன் தம்மைச் சிநேகிக்கிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணி
னதுகளைக் கண்ணானது காணவுமில்லை, காது கேட்கவுமில்லை,
அதுகள் மனுஷனுடைய இருதயத்துக்குள் ஏறினது
மில்லை. * யெசா. ௬௪: ௪.

௰. நமக்கோவென்றால் * பராபரன் அதுகளைத் தம்மு
டைய ஆவியினாலே வெளிப்படுத்தினார். ஏனென்றால் ஆவியான
வர் எல்லாவற்றையும், பராபரனுடைய ஆழங்களை
யும், ஆராய்ந்திருக்கிறார். * மத். ௰௬: ௰௭.

௰௧. ஏனென்னால், மனுஷனுள்ளிருக்கிற அவனுடைய
ஆவியேயல்லாமல், பின்னை மனுஷரில் எவன் மனுஷனு
டைய காரியங்களை அறிவான், அப்படியே பரா
பரனுடைய ஆவியேயல்லாமல் பின்னை ஒருத்தரும் பராபர
னுடைய காரியங்களை அறியான்.

௰௨. நாமோவென்றால், பராபரனாலே நமக்கருளப்
பட்டதுகளை அறியும்படிக்கு, லோகத்தினுடைய ஆவி
யையல்ல பராபரனிலிருந்து புறப்படுகிற ஆவியைப்
பெற்றோம்.

௰௩. அதுகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கும்
வார்த்தைகளாலல்ல, பரிசுத்த ஆவி போதிக்கும்
வார்த்தைகளாலே பிரசங்கம் பண்ணி ஆவியா
னவைகளுக்கேற்றதாய் விசாரமாக ஆவியின் காரியங்
களைப் பேசுகிறோம்.

௰௪. ஆனால்

௰௪. ஆனால் ✱ ஜெனன சுவாபமான மனுஷனானவன் பராபரனுடைய ஆவியின் காரியங்களை ஏற்றுக்கொள்ளான்; ஏனென்றால் அதுகள் அவனுக்குப் பயித்தியமாயிருக்கிறது; அதுகள் ஆத்தும பிறகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறபடியினாலே அவன் அதுகளை அறியமாட்டான். ✱ யூதா. ௰௯. ரோ. ௮. ௭.

௰௫. ஆவியைப்பெற்றவனோவென்றால் எல்லாத்தையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; தானோவென்றால் ஒருத்தராலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்.

௰௬. ஏனென்றால் ✱ கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவனார்; எங்களுக்கோவென்றால் கிறிஸ்துவினுடைய சிந்தை உண்டாயிருக்கிறது. ✱ யெச. ௪௰: ௰௩.

௩. அதிகாரம்.

அவன் கொரிந்தியாருடைய பிரிவினைகளைக் கடிந்துகொண்டது.

நானோவென்றால், சகோதரரே, உங்களை ஆவியைப் பெற்றவர்களாக எண்ணி, உங்களுடனே பேசக் கூடாமல், உங்களை மாங்கிஷத்தாராகவும் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாகவும் எண்ணி உங்களுடனே பேசவேண்டியதாயிருந்தது.

௨. உங்களுக்குப் போசனங்கொடாமல், பாலைக் குடிக்கக்கொடுத்தேன்; ஏனென்றால் இன்னம் பெலனில்லாதிருந்தீர்கள்; ஆனால் இன்னம் இப்போதும் பெலனில்லாதிருக்கிறீர்கள். ✱ எபிரே. ௫: ௰௨.

௩. அதேனென்றால் நீங்கள் இன்னம் மாங்கிஷத்தாராயிருக்கிறீர்கள்; ஏனென்றால் ✱ வயிராக்கியமும் விரோதமும் பேதகங்களும் உங்களுக்குள்ளே யிருக்கக்கொள்ள, நீங்கள் மாங்கிஷத்தாரும் மனுஷமார்க்கமாய் நடக்கிறவர்களுமல்லவோ. ✱ ௧: ௰௧. ௰௨.

௪. ஏனென்றால் ஒருத்தன்: நான் பவுலினுடையவனென்றும், வேறொருத்தனோ: நான் அப்பொல்லோவினுடையவனென்றுஞ் சொன்னால் நீங்கள் மாங்கிஷத்தாரல்லவோ.

௫. பவுலோவென்றால் ஆர், அப்பொல்லோவும் ஆர், கர்த்தர் அவனவனுக்குக் கொடுத்ததுக்குத்தக்கதாய் அவர்கள் மூலமாய் நீங்கள் விசுவாசிகளாகிறதுக்கேதுவான ஊழியக்காரர் மாத்திரந்தானே.

௬. நான் நட்டேன், அப்பொல்லோ தண்ணீர் பாய்ச்சினான், ஆனால் பராபரன் பயிராக்கினார்.

௭. ஆனபடியினாலே நடுகிறவனும் ஒன்றுமில்லை, தண்ணீர் பாய்ச்சுகிறவனும் ஒன்றுமில்லை, பயிராக்குகிற பராபரனே எல்லாம்.

௮. நடுகிறவனும் தண்ணீர் பாய்ச்சுகிறவனுமோவென்றால் ஒன்றாயிருக்கிறார்கள். ஆனாலவனவனுந் தன்னுடைய வேலைக்குத்தக்கதாய்த் தன்னுடைய கூலியைப் பெறுவான்.

௯. ஏனென்றால் * நாங்கள் பராபரனுடனே வேலையாட்களாயிருக்கிறோம்; நீங்கள் பராபரனுடைய பண்ணையும் ** பராபரனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள். * ௨. கொ. ௬: ௧. ** எபே. ௨: ௨௰—௨௨.

௰. எனக்குக் கொடுக்கப்பட்ட பராபரனுடைய கிருபையின்படியே, ஞானமுள்ள சிற்பாசாரியைப்போல அஸ்திவாரத்தைப் போட்டேன்; வேறொருத்தன் அதின்மேலே கட்டுகிறான்; ஆனால் தாங்கள் எப்படிக் கட்டுகிறதென்று அவனவன் பார்க்கக்கடவான்.

௰௧. ஏனென்றால் போடப்பட்ட அஸ்திவாரமாகிய யேசுக்கிறிஸ்து என்ற * அஸ்திவாரமேயல்லாமல் வேறே அஸ்திவாரத்தை ஒருத்தனும் போடக்கூடாது.

* யெசா. ௨௮: ௰௬.

௰௨. ஆனால் ஒருத்தன் இந்த அஸ்திவாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல்லுகள், மரங்கள், பில்லு, தாளடி இவைகளைக் கட்டினால்,

௰௩. அவனவனுடைய கிரிகை வெளியாம்; நாளானது அதைத் தெரியப்படுத்தும்; ஏனென்றால் அக்கினியினாலே வெளியாக்கப்படும்; அவனவனுடைய கிரிகை எப்படிக்கொத்ததென்று * அக்கினியானது சோதிக்கும். * யெசா ௪௮: ௰.

௰௪. மேலாகக் கட்டின ஒருத்தனுடைய கிரிகை நின்றால், அவன் கூலியைப் பெறுவான்.

௰௫. ஒருத்தனுடைய கிரிகை வெந்துபோனால், அவன் நஷ்டப்படுவான்; தானேயென்றால் ரெட்சிக்கப்படுவான்; ஆகிலும் அக்கினியிலே அகப்பட்டுத் தப்பினாப்போலேதானே.

௰௬. நீங்கள் * பராபரனுடைய தேவாலயமாயிருக்கிறீர்களென்றும், பராபரனுடைய ஆவி உங்களிலே வாசமாயிருக்கிறாரென்றும் அறியீர்களோ.

* ௨. கொரி. ௬: ௰௬.

௰௭. ஒருத்தன் பராபரனுடைய தேவாலயத்தைக் கெடுத்தால், அவனைப் பராபரன் கெடுப்பார்; ஏனென்றால் பராபரனுடைய தேவாலயம் பரிசுத்தமாயிருக்குது; அது நீங்கள்தானே.

௰௮. ஒருத்தனும் தன்னைத் தானே மோசம்போக்க வேண்டாம்; தான் இந்த லோகத்திலே ஞானியென்று உங்களில் ஒருத்தனுக்குத் தோன்றினால், அவன் ஞானியாகும்படிக்குப் பயித்தியக்காறனாகக்கடவான்.

௰௯. அதேனென்றால் இந்த லோகத்தினுடைய ஞானம் பராபரனிடத்திலே பயித்தியமாயிருக்குது. ஏனென்றால் * ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறாரென்கிறதும், * யோபு. ௫: ௰௩.

௨௰. பின்னையும்: * கறுத்தர் ஞானிகளுடைய சிந்தினைகளை அதுகள் மாயமென்று அறிவார் என்கிறதும் எழுதியிருக்குது. * சங்கீ. ௯௪: ௰௧.

௨௧. ஆகையால் ஒருத்தனும் மனுஷரைக் குறித்துப் பெருமை பாராட்டவேண்டாம்; ஏனென்றால் எல்லாம் உங்களுடையது.

௨௨ பவு

௨௨. பவுலுவாகிலும் அப்பொல்லோவாகிலுங் கேப்பாவாகிலும் லோகமாகிலும் ஜீவனாகிலும் மரணமாகிலும், நிகழ்காரியங்களாகிலும் வருங்காரியங்களாகிலும், எல்லாமுங்களுடையது.

௨௩. நீங்களோ கிறிஸ்துவினுடையவர்கள, கிறிஸ்துவோ பராபரனுடையவர்.

௪. அதிகாரம்.

கொரிந்தியார் தங்களைத்தாங்களே வேண்டிய பிரகாரமாகத்தானும் மெச்சிப் போனதுக்காகப் பவுலு அவர்களுக்குச் சொன்ன புத்தி.

எங்களை அவனவன் கிறிஸ்துவினுடைய ஊழியக்காரரும் பராபரனுடைய ரகசியங்களின் உக்கிராணக்காரருமாகத்தானெண்ணிக்கொள்ளக்கடவான்.

௨. அப்புறம் ஒருத்தன் * உண்மையுள்ளவனென்று கண்டுபிடிக்கப்படுவதே உக்கிராணக்காரனிடத்திலே தேடப்படுகிற காரியமாயிருக்குது. * லூ. ௰௨: ௪௨.

௩. நானேவென்றால் உங்களாலே, அல்லாது ஒரு மனுஷ நியாயநாளின் விசாரிப்பினாலே நியாயந்தீர்க்கப்படுவது எனக்குவெகு அற்பகாரியமாயிருக்குது. ஆனாலுமென்னை நானே நியாயந்தீர்க்கிறதுமில்லை.

௪. ஏனென்றால் நானென்னிலே ஒரு குற்றத்தையும் அறியாதிருந்தாலும், * இதினாலே நான் நீதிமானாகிறவனல்ல, என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரானவர். * சங். ௱௩௰: ௩.

௫. ஆனபடியினாலே கர்த்தர் வருமட்டாக, நீங்கள் காலத்துக்குமுன்னே ஒன்றும் நியாயந்தீர்க்காதேயுங்கோள், அவர் இருளின் அந்தரங்கங்களையும் வெளிச்சமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார். அப்போ புகழ்ச்சியானது அவனவனுக்கு பராபரனாலே உண்டாம்.

௬. சகோதரரே, எழுதப்பட்டதுக்கு * மிஞ்சின எண்ணம் வேண்டாமென்று நீங்கள் எங்களாலே கற்கிறதுக்கும், ஒருத்தனுக்காக ஒருத்தனும் மற்றவனுக்கு விரோதமாய்ப் பிப்போகாதிருக்கிறதுக்கும், நான் உங்கள் நிமித்தியமாக என்னையும் அப்பொல்லோவையுந் திஷ்டாந்திரமாக வைத்து இதுகளைச் சொன்னேன். * வாக்கி. ௩: ௭. ரோ. ௰௨: ௩.

௭. * ஏனென்னில் உன்னை விசேஷத்தவனாக்கிறவனார் அல்லாது நீ பெறாததெது உனக்கிருக்குது, நீயும் பெற்றுமேயாகில், பெறாதவனைப்போலேன் பெருமை பாராட்டுகிறாய். * யாக. ௧: ௰௭.

௮. அப்போதே திருத்தியடைந்தவர்களாயிருக்கிறீர்கள், அப்போதே அயிசுவரியவான்களானீர்கள், எங்களையல்லாமல் ஆண்டீர்கள், ஆனால் நீங்கள் ஆண்டாலே நல்லது, அப்போ உங்களுடனேகூட நாங்களும் ஆளுவோம்.

௯. ஆனால் பராபரன் அப்போஸ்தலராகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்களைப்போலே ஏறக்கடைசியானவர்களாய்க் காணப்பண்ணினாரென்றெண்ணுகிறேன்; ஏனென்றால் லோகத்துக்குந் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம்.

௰. நாங்கள் கிறீஸ்துவினிமித்தியமாகப் பயித்தியகாரர்; நீங்களோ கிறீஸ்துவுக்குள் புத்திமான்கள்; நாங்கள் பெலயீனர், நீங்களோ பெலவான்கள்; நீங்கள் மகிமையுள்ளவர்கள், நாங்களோ கனமற்றவர்கள்.

௰௧. இந்நேரமட்டுக்கும் * பசியுந் தாகமும் அம்மணமுமாயிருக்கிறோம்; குட்டுண்டும் நிலையற்றுமிருக்கிறோம். * ௨. கொ. ௰௧: ௨௪—௨௭.

௰௨. * எங்களுடைய கைகளினாலே வேலைசெய்து உழைக்கிறோம்; வையப்பட்டு ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு அனுபவிக்கிறோம்; தூஷணிக்கப்பட்டும் வேண்டிக்கொள்ளுகிறோம். * ௧. தெச. ௨: ௯.

௰௩. லோகத்தினுடைய குப்பைகளைப் போலவும், இதுவரைக்கும் எல்லாருடைய கழி அழுக்கைப்போலவுமானோம்.

௰௪. இங்ஙனே நான் உங்களை வெட்கப்படுத்த எழுதாமல், நீங்கள் என் பிரியமான பிள்ளைகளென்று உங்களுக்குப் புத்தியாக எழுதுகிறேன்.

௰௫. ஏனென்றால் கிறீஸ்துவுக்குள் பதினாயிரம் வாத்திகள் உங்களுக்கிருந்தாலும், அநேகந் தகப்பன்மார் உங்களுக்கில்லை; ஏனெனில் உங்களை நானே கிறீஸ்து யேசுவுக்குள் சுவிசேஷத்தினாலே பெற்றேன்.

* அப். ௰௮: ௰௧.

௰௬. ஆகையினாலே * என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்களென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். * ௰௧: ௧.

௰௭. இதினிமித்தியமாக நானென் அன்பும் பிரியமுமுள்ள கர்த்தருக்குள் உண்மையுமான என்னுடைய குமாரனாகிய தீமோத்தேயுவை உங்களண்டைக்கு அனுப்பினேன்; இவன் நானெங்கும் எந்தச் சபையிலும் எப்படி போதிக்கிறேனோ, கிறீஸ்துவுக்குள்ளான என் வழிகளை உங்களுக்கு நினைப்பூட்டுவான்.

௰௮. நானுங்களண்டைக்கு வருகிறதில்லையென்கிறதாய்ச் சிலர் உப்பிப்போனார்கள்.

௰௯. ஆனாலும் நான் சீக்கிரமாய்க் கர்த்தருக்குச் சித்தமானால் உங்களண்டைக்கு வந்து, உப்பிப்போனவர்களுடைய வசனியத்தையல்ல, பெலத்தைத் அறிந்துகொள்ளுவேன்.

௨௰. ஏனென்றால் பராபரனுடைய ராச்சியம் வசனியத்திலேயல்ல, பெலத்திலேயிருக்கிறது.

௨௧. உங்களுக்கென்ன வேணும்; நான் பிரம்போடே உங்களண்டைக்கு வரவேணுமோ, அல்லது சினேகத்தோடும் மெத்தனவின் ஆவியோடும் வரவேணுமோ.

௫. அதிகாரம்.

முறைகேடுள்ளவனைத் தள்ளி நீக்கத்தியமாக
பவுலென்பவன் பரிசுத்தாத்மாவால் சொல்லுகிறது.

வேசித்தனமுதலாய் உங்களிடத்திலே உண்டென்று
கேட்கப்படுகுதே; சகப்புருஷனுடைய பெண்சாதியை
ஒருத்தன் வைத்திருக்கிறானென்று அஞ்ஞானிகளுக்குள்
ளுஞ் சொல்லப்படாத வேசித்தனமிருந்ததே.

௨. இந்தக் கிரிகையைச் செய்தவன் உங்கள் நடுவிலிருந்
தெடுக்கப்போடப்படத்தக்கதாகத் துயரப்படவேண்
டியதிருக்க நீங்கள் வெறு ஆலஷ்ப்பிப்போனவர்களா
யிருக்கிறீர்கள்.

௩. ஆனால் நான் சரீரத்தால் தூரமாயிருந்தும் * ஆவியாலுங்
களிடையிலிருக்கிறவனுமாய். * கொலொ. ௨: ௫.

௪. நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறீஸ்துவின் நாமத்தி
னாலே கூடப்பட்டவனாய் நீங்களும் என்னுடைய ஆவி
யுங்கூடிய கூட்டத்திலும் * நம்முடைய கர்த்தராகிய யேசு
க்கிறீஸ்துவினுடைய வல்லமையோடேயும்.

* யொவா. ௨௰: ௨௩.

௫. * மாம்சத்தின் அழிவுக்கென்று சாத்தானுக்க
ப்புக்கொடுக்க; இப்படி நடப்பித்தவன
பேரிலே; அவன் ஆவி கர்த்தராகிய யேசுவின் நாளிலே
ரட்சிக்கப்படும்படிக்கு; நான் அங்கேயிருக்கிற
வன்போல், தீர்மானித்துக்கொண்டிருந்தது.

* சங்கீ. ௱௯: ௰௬. ௰௮. ௧. தீமோ. ௧: ௨௰.

௬. நீங்கள் பாராட்டுகிற பெருமை நல்லதல்ல; *
கொஞ்சமான புளித்தமா பிசைந்தமாவனைத்தையும்
புளிப்பப்பண்ணுமென்றறியீர்களோ. * கலா. ௫: ௯.

௭. ஆனபடியினாலே நீங்கள் புளிப்பில்லாதவர்க
ளாயிருக்கிறபடியே நீங்கள் புதிதான பிசைந்தமாவா
யிருக்கிறதற்குப் பழைய புளித்தமாவைப் புறம்பே
கழித்துப்போடுங்கோள்; ஏனெனில் நம்முடைய பஷாநு
முக்காக அடிக்கப்பட்டுதே; அது க்கிறீஸ்துதானே.

* ௨. மோ. ௰௨: ௰௮. ௰௬.

௮. ஆகையால் பழைய புளித்தமாவோடேயல்லத் துர்க்
குணமும் பொல்லாப்புமென்ற புளித்தமாவோடு
மல்ல; துப்புரவும் உண்மையுமென்ற புளிப்பில்லா
அப்பங்களோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்.

௯. வேசிக்கள்ளாருடனே கலக்கவேண்டாமென்
று நிருபத்திலே உங்களுக்கெழுதினேனே.

௰. ஆனாலிந்த லோகத்து வேசிக்கள்ளரோடுமே; அவா
ஸ்துப்பொருளாசைக்காரரோடுமல்லது, கொள்ளைக்கா
ரரோடுமல்லது விக்கிரகாராதிகளோடுஞ் சக
வாசம்பண்ணவேண்டாமென்று உத்தரவாக அத்த
னையாய் எழுதினதில்லை; அப்படியிருந்தால் நீங்கள் லோக
த்தைவிட்டுப் புறப்பட்டுப்போகவேண்டியதாமே.

௰௧. இப்போதுமோ; கலக்கவேண்டாமென்று

உங்களுக்கெழுதினேன். அதென்னவென்றால், சகோதரனென்னப்பட்ட ஒருத்தன் வேசிக்கள்ளனாய், அல்லது பொருளாசைக்காரனாய், அல்லது விக்கிரகாராதனைக்காரனாய், அல்லது உதாசினனாய், அல்லது வெறியனாய், அல்லது கொள்ளைக்காரனாயிருந்தால்: * அப்படிக்கொத்தவனுடனே போசிக்கவுமவேண்டாம்.

* ௨. தெச. ௩: ௬.

௰௨. ஏனென்னில் புறத்தியிலேயிருக்கிறவர்களை நியாயந்தீர்க்கிறதுக்கெனக்கென்னத்தை? உள்ளேயிருக்கிறவர்களையல்லவோ நீங்கள் நியாயந்தீர்க்கிறீர்கள்.

௰௩. புறத்தியிலேயிருக்கிறவர்களையோவென்றால் பராபரன் நியாயந்தீர்க்கிறார். ஆகையால் பொல்லாதவனை உங்களுடையிடத்திலேயிருந்து தள்ளிப்போடுங்கோள்.

௬. அதிகாரம்.

அவிசுவாசிகளின் முன்பாக வழக்காடுகிறதும் தப்பவுங்கடிந்துகொண்டது.

உங்களில் ஒருவனுக்கும் மற்றொருத்தனுடனே ஒருகாரியமுண்டானால், அவன் பரிசுத்தவான்களிடத்திலே போகாமல் அநீதக்காரரிடத்திலே நியாயத்துக்குப் போகத் துணிகிறதென்ன.

௨. * பரிசுத்தவான்கள் லோகத்தை நியாயந்தீர்ப்பார்களென்றறியீர்களோ? லோகமும் உங்களாலே நியாயந்தீர்க்கப்பட்டால், அற்பவழக்குகளைத் தீர்க்கவும் பாத்திரராயிருக்கிறீர்களோ. * மத். ௰௯: ௨௮.

௩. தூதர்களை நியாயந்தீர்ப்போமென்றறியீர்களோ? பிழைப்புக்கடுத்த காரியங்களைத் தீர்க்கக்கூடாதேபோறதெப்படி.

௪. நீங்களோவென்னில் பிழைப்புக்கடுத்த வழக்குகள் உங்களுக்கிருந்தால் சபையிலே அற்பமாயெண்ணப்பட்டவர்களை அதற்கு வைக்கிறீர்கள்.

௫. உங்களுக்கு வெட்கமுண்டாக இதைச் சொல்லுகிறேன். இப்படியே உங்களில் சகோதரனுக்கும் சகோதரனுக்கும் நடுவே வழக்குத்தீர்க்கத்தக்க ஞானி ஒருத்தனுமில்லையோ.

௬. சகோதரனோடே சகோதரன் வழக்காடுகிறான், அவிசுவாசிகளுக்கு முன்பாகவுந்தானே.

௭. உங்களுக்குள்ளே ஒருத்தனோடொருத்தன் வழக்குகளுண்டாயிருக்கிறதானும் உங்களில் மகாபழுதாமே. * அதைப்பார்க்க நீங்கள் அநியாயத்தைக் கயுக்குச் சேதத்தையும் அநுபவிப்பதற்பாரேனே. * மத். ௫: ௩௯. ௪௰.

௮. ஆனால் நீங்களோ சகோதரருக்குத்தானும் அநியாயஞ்செய்து சேதமுண்டாக்கிறீர்கள்.

௯. அல்லாது அநியாயக்காரர் பராபரனுடைய ராச்சியத்தைச் சுதந்தரிப்பதில்லையென்றறியீர்களோ? மோசம்போகாதேயுங்கோள். * வேசிக்கள்ளராகி

ஹும

னும் விக்கிரகாராதனைக்காரராகிலும் விபசாரரா
கிலுங் காமபுணர்ச்சிக்காரராகிலும் ஆண்புணர்ச்சிக்கா
ரராகிலும், * கலா. ௫: ௰௯—௨௧.

௰. திருடராகிலும் பொருளாசைக்காரராகிலும்
வெறியராகிலும் உதாசனராகிலும் கொள்ளைக்கா
ரராகிலும் பராபரனுடைய ராட்சியத்தைச் சுதந்தரிப்
பதில்லை.

௰௧. * உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்
தீர்கள், ஆனால் கழுவப்பட்டீர்கள், ஆனால் பரிசுத்த
மாக்கப்பட்டீர்கள், ஆனால் நீதிமான்களாக்கப்பட்டீர்
கள், கர்த்தராகிய யேசுவின் நாமத்தினாலும், நம்முடைய
பராபரனுடைய ஆவியினாலுந்தானே. * எபே. ௬: ௰௭;
தீத்து. ௩: ௩—௭.

அதிகாரத்தைத் துறவைக்கப்பார்த்து அனுபவிக்கா
திருக்கவும் வேசித்தனத்தை விலக்கவும்
புத்திசொன்னது.

௰௨. எல்லாத்துக்கும் எனக்கதிகாரமுண்டு, ஆனா
ல் எல்லாம் பிரயோசனமாயிராது, எல்லாத்துக்கும்
எனக்கதிகாரமுண்டு, ஆனால் நானொன்றினுடைய அதி
காரத்துக்குங் கீழாவதில்லை.

௰௩. போசனங்கள் வயத்துக்கும், வயறு போச
னங்களுக்குமாம், ஆனால் பராபரன் இதையும் அதுகளையும்
அழியப்பண்ணுவார். சரீரமோ வேசித்தனத்
துக்கல்ல, கர்த்தருக்குத்தானே, கர்த்தர் சரீரத்துக்குந்
தானே.

௰௪. ஆனால் பராபரன் கர்த்தரை எழுப்பினார், நம்
மையுந் தம்முடைய வல்லமையினாலே எழுப்புவார்.

௰௫. உங்கள் சரீரங்கள் கிறீஸ்துவினுடைய அவய
வங்களென்றறியீர்களோ, இப்போதுங் கிறீஸ்து
வினுடைய அவயவங்களை எடுத்துக்கொண்டு வேசி
யின் அவயவங்களாக்குவேனோ, அப்படி வராதிருப்
பதாக.

௰௬. அல்லது, வேசியோடே ஒட்டிக்கொள்ளுகிற
வன் அவளுடனே ஒரே சரீரமாயிருக்கிறானென்றறியீர்
களோ, ஏனெனில் * இருவரும் ஒரே மாம்சமாயி
ருப்பார்களென்றார். * ௧. மோ. ௨: ௨௪.

௰௭. ஆனால் * கர்த்தரோடே ஒட்டிக்கொள்ளுகிறவன்
அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்.

* யோவா. ௰௪: ௨௩. ௰௫: ௫. ௰௭: ௨௧.

௰௮. வேசித்தனத்தை விலக்கிடுங்கோள், மனுஷன்
செய்கிற எந்தப் பாவமுஞ் சரீரத்துக்குப் புறம்பாயிருக்
கும், வேசித்தனஞ் செய்கிறவனோவென்றால் சுயசரீரத்
துக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறான்.

௰௯. அல்லது உங்கள் சரீரம், நீங்கள் பராபரனாலே
பெற்றிருக்கிற உங்களிலுள்ள பரிசுத்த ஆவியினு
டைய * தேவாலயமாயிருக்கிறதும், நீங்கள்
உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களோ.

* ௩: ௰௬. ௰௭.

௨௰. ஏனென்றால் * உயர்ந்தவிலையாய்க் கொள்ளப்பட்டீர்கள், ஆகையினாலே பராபரனுடையதான உங்கள் சரீரத்திலும், உங்கள் ஆவியிலும் பராபரனை மகிமைப்படுத்துங்கோள். * க. பேது. ௧: ௰௮. ௰௯.

௭. அதிகாரம்.

* சமுசாரமார்க்கத்துக்காகவுஞ் சன்னியாசத்துக்காகவுமுள்ள முந்தின பலவிதமான நியாயங்கள்.

நீங்கள் எனக்கெழுதின காரியங்களுக்கோவென்றால், ஸ்திரீயைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நல்லது.

௨. ஆகிலும் வேசித்தனங்களை விலக்கும்நிமித்தியமாக அவனவனுக்கு அவனவனுடைய பெண்சாதியும், அவளவளுக்கு அவளவளுடைய சொந்தப்புருஷனும் உண்டாயிருப்பதாக.

௩. பெண்சாதிக்குப் புருஷன் செலுத்தவேண்டிய அன்பைச் செலுத்தக்கடவான், புருஷனுக்குப் பெண்சாதியும் அப்படிக்காண்.

௪. பெண்சாதி தன் சுயசரீரத்துக்கு அதிகாரியாயிராமல் புருஷன் அதிகாரியாயிருக்கிறான், அப்படியே புருஷனுந் தன் சுயசரீரத்துக்கு அதிகாரியாயிராமல் பெண்சாதி அதிகாரியாயிருக்கிறாள்.

௫. உபவாசத்துக்கும் ஜெபத்துக்கும் உங்களுக்குப் பொருந்த வேளையுண்டாச், நீங்கள் கொஞ்சக் காலத்துக்கென்று சம்மதியாயிருந்தால் ஒழிய மற்றப்படி ஒருதருக்கொருதர் வேறுபடாதேயுங்கோள். உங்களுக்கு விரதத்துவமில்லாமையால் சாத்தான் உங்களைச் சோதிக்காதபடிக்குத் திரும்பவும் ஏகமாய்க்கூடிவாருங்கோள்.

௬. ஆனாலுமிதை நான் கற்பனையாகவல்ல, உத்தாரமாகச் சொல்லுகிறேன்.

௭. ஏனென்றால் எல்லா மனுஷரும் என்னைப்போலிருக்க விரும்புவேன். ஆகிலும் அவனவனுக்குப் பராபரனாலே ஒரு சொந்தவரமிருக்குது, ஒருத்தனுக்கிப்படியும் ஒருத்தனுக்கப்படியுமாகுத்தானே.

௮. விவாகமில்லாதவர்களும் விதவைகளுமோவென்றால், அவர்கள் என்னைப்போலிருந்துவிட்டால் நல்லதென்று அவர்களுக்குச் சொல்லுகிறேன்.

௯. * விரதகாரியாயிரார்களேயாகில், விவாகம்பண்ணக்கடவார்கள். ஏனென்றால் வேகிறத்தைப்பார்க்கிலும் விவாகம்பண்ணுகிறது தாவிலை.

* க. தீமோ. ௫: ௰௪.

௰. ஆனால் விவாகம்பண்ணினவர்களுக்கு நானல்ல, கர்த்தர் கற்பிக்கிறதேதென்றால், பெண்சாதி புருஷனை விட்டுப்பிரியவேண்டாம்.

௰௧. பிரிந்தாளேயாகில், விவாகமில்லாதிருக்க

அல

அல்லது புருஷனுடனே ஒப்புரவாகக்கடவாள்; * புரு
ஷனும் பெண்சாதியை விட்டுவிடவேண்டாமென்று
கற்பிக்கிறார். * மத். ௰௯: ௪—௬.

௰௨. மற்றவர்களுக்கோ கர்த்தரல்ல நானே
சொல்லுகிறதாவது: ஒரு சகோதரனுக்கு அவிசுவாசி
யான பெண்சாதியிருந்து அவள் அவனுடனே வாசமாயி
ருக்கச்சம்மதியாயிருந்தால் அவன் அவளை விட்டுவிடா
திருக்கக்கடவான்.

௰௩. பெண்சாதியும் அவிசுவாசியான புருஷனோடிரு
ந்து அவன் அவளுடனே வாசமாயிருக்கச்சம்மதியாயிரு
ந்தால் அவள் அவனை விட்டுவிடாதிருக்கக்கடவாள்.

௰௪. ஏனென்றால் அவிசுவாசியான புருஷன் பெண்சா
தியால் பரிசுத்தமாக்கப்பட்டான்; அவிசுவாசியான பெண்
சாதியும் புருஷனால் பரிசுத்தமாக்கப்பட்டாள்; மற்றப்
படி உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே; இப்
பொழுதோ அவைகள் பரிசுத்தமாயிருக்குது.

௰௫. ஆனால் அவிசுவாசி பிரிந்தால், பிரியட்டுமே; இப்
படிச்சகோதரருக்காகச் சகோதரனல்லது சகோ
தரியடிமைப்பட்டவர்களல்ல; சமாதானத்தோடிருக்கத்
தானே பராபரன் நம்மை அழைத்தார்.

௰௬. ஏனென்றால், பெண்சாதியே, நீ புருஷனை ரட்
சிப்பாயோவென்றெப்படி அறிந்திருக்கிறாய்; அல்லது புரு
ஷனே, நீ பெண்சாதியை ரட்சிப்பாயோவென்றெப்படி
அறிந்திருக்கிறாய்.

௰௭. ஆகிலும் பராபரன் அவனவனுக்கு எப்படிப் பகிர்ந்
தாரோ, கர்த்தர் அவனவனை எப்படி அழைத்தாரோ,
அப்படியே நடக்கக்கடவான்; இப்படி எல்லாச்
சபைகளிலும் திட்டம்பண்ணுகிறேன்.

௰௮. ஒருத்தன் சுன்னத்தடைந்தவனாய் அழைக்கப்பட்
டிருந்தால், சுன்னத்தில்லாமையைத் தேடானாக. ஒரு
த்தன் சுன்னத்தில்லாதவனாய் அழைக்கப்பட்டிருந்தால்,
சுன்னத்தடையானாக.

௰௯. சுன்னத்தும் ஒன்றுமில்லை, சுன்னத்தில்லாமை
யும் ஒன்றுமில்லை; பராபரனுடைய கற்பனைகளைக்
கைக்கொள்ளுகிறதே காரியம்.

௨௰. அவனவன் தான் அழைக்கப்பட்டிருக்கிற அழைப்
பிலே நிலைநிற்கக்கடவான்.

௨௰௧. அடிமையாய் அழைக்கப்பட்டிருந்தாயானால்,
கவலைப்படாதே; நீ ஸ்வேச்சைக்காரனாகக் கூடு
மேயானால், அதை நல்லதாய்ச் சேர்த்துக்கொள்.

௨௰௨. அடிமையாய் அழைக்கப்பட்டுக் கர்த்தருக்குள்ளான
வன் கர்த்தருக்குள் ஸ்வேச்சைக்காரனாயிருக்கிறான்;
அப்படியே ஸ்வேச்சைக்காரனாய் அழைக்கப்பட்டவன்
கிறிஸ்துவினுடைய அடிமையாயிருக்கிறான்.

௨௰௩. * உயர்ந்த விலையாய்க் கொள்ளப்பட்டீர்கள்;
மனுஷருக்கடிமைகளாகாதேயுங்கோள். * ௬: ௨௰.

௨௰௪. சகோதரரே, அவனவன் அழைக்கப்பட்டிருக்கிற
நிலைமையிலே பராபரனுக்கு முன்பாக நிலைநிற்கக்
கடவான்.

௨௰௫. கன்னி

௨௫. அன்றி கன்னியாஸ்திரீகளுக்காகக் கர்த்தருடைய கற்பனை எனக்கில்லை, ஆனாலும் நான் உண்மையாயிருக்கிறதற்குக் கர்த்தராலே இரக்கம் பெற்றவனாய் என் யோசினையைக் கொடுக்கிறேன்.

௨௬. அதேதென்றால் இப்போதிருக்கிற உபத்திரவத்தினிமித்தமாக இப்படியிருக்கிறது மனுஷனுக்கு நல்லதென்றெண்ணுகிறேன்.

௨௭. நீ பெண்சாதியுடனே கட்டப்பட்டிருந்தால் அவிழ்க்கத் தேடாதே; நீ பெண்சாதியற்றவனாயிருந்தால் பெண்சாதியைத் தேடாதே.

௨௮. நீ விவாகம்பண்ணினாயானால் அது பாவமுமல்ல, கன்னியாஸ்திரீயும் விவாகம்பண்ணினால் பாவமல்ல. இப்படிக்கொத்தவர்களோவென்றால் மாம்சத்திலுபத்திரம் அடைவார்கள், நானோ உங்களைத் தப்பப்பார்க்கிறேன்.

௨௯. சகோதரரே, இனியிருக்குங் காலங் குறுகினதானபடியினாலே, பெண்சாதிகளுள்ளவர்கள் இல்லாதவர்களைப் போலவும்,

௩௦. அழுகிறவர்கள் அழாதவர்களைப் போலவும், சந்தோஷப்படுகிறவர்கள் சந்தோஷப்படாதவர்களைப் போலவும், கொள்ளுகிறவர்கள் கொண்டிராதவர்களைப் போலவும்,

௩௧. இந்த லோகத்தை அனுபவிக்கிறவர்கள் அதைத் துர்வகையாய் அனுபவியாதவர்களாகவும் இருக்கவேண்டுமென்கிறதையே சொல்லுகிறேன். * ஏனென்றால் இந்த லோகத்தினுடைய வேஷம் போகுது.

* ௧. யோவா. ௨: ௰௭.

௩௨. ஆனால் நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க ஆசையாயிருக்கிறேன். விவாகமில்லாதவன் தான் * கர்த்தருக்கு எப்படி ஏற்றிருப்பேனென்று கர்த்தருக்கடுத்தவைகளுக்காகக் கவலைப்படுகிறான். * ௧. தீமோ. ௫: ௫.

௩௩. விவாகம்பண்ணினவனோ தான் பெண்சாதிக்கெப்படி ஏற்றிருப்பேனென்று லோகத்துக்கடுத்ததுகளுக்காகக் கவலைப்படுகிறான்.

௩௪. விவாகஸ்திரீக்குங் கன்னியாஸ்திரீக்கும் வித்தியாசமென்னவெனில், விவாகமில்லாதவள் தான் சரீரத்திலும் ஆவியிலும் பரிசுத்தவதியாயிருக்கும்படிக்கு, கர்த்தருக்கடுத்தவைகளுக்காகக் கவலைப்படுகிறாள்; விவாகம்பண்ணினவளோ தான் புருஷனுக்கெப்படி ஏற்றிருப்பேனென்று லோகத்துக்கடுத்ததுகளுக்காகக் கவலைப்படுகிறாள்.

௩௫. ஆனாலிதை நானுங்களை மேலுக்குக் கைப்போடுகிறதுக்காகச் சொல்லாமல், நேர்த்தியாயிருக்கிறதென்னமாய் இடையில்லாமல் கர்த்தரைச் சேவித்திருக்கலாமென்றும் உங்களுக்குப் பிரயோசனத்துக்காகச் சொல்லுகிறேன்.

௩௬. ஆனாலொருத்தன் தன்னுடைய கன்னிகை பருவ வயதுசென்று போனவளானால் நேர்த்தியல்லவென்றும் விவாகமாகத் தேவையுமென்றும் நினைத்தால்,

தனக்கு

தனக்கு மனதுள்ளதைச் செய்யச் சுயாதீனமுள்ளவனானால், அது பாவமல்ல; விவாகம்பண்ணட்டும்.

௩௭. ஆனாலெவன் தன் இருதயத்திலே நிலைவரமாய் நின்று சுய மனதின்படி செய்ய அதிகாரியுமாகிய ஏதொரு அவசரத்துக்குக்குள்ளாகாமல், தன்னுடைய கன்னிகையைக் காக்கிறதற்குத் தன் இருதயத்திலே தீர்மானித்தால், நன்றாய்ச் செய்கிறான்.

௩௮. அப்படியே விவாகம்பண்ணிக்கொடுக்கிறவன் நன்றாய்ச் செய்கிறான்; கொடாதவனோ அதிக நன்றாய்ச் செய்கிறான்.

௩௯. பெண்சாதி ⁎ தன்னுடைய புருஷன் உயிரோடிருக்கும் காலமெல்லாம் நியாயப்பிரமாணத்தால் கட்டப்பட்டிருக்கிறாள்; அவள் புருஷன் நித்திரையடைந்தானேயாகில், ஆர்மேல் மனதுண்டோ அவனை விவாகம்பண்ணுகிறதுக்குச் சுயாதீனமுள்ளவளாயிருக்கிறாள்; ஆனாலும் கர்த்தருக்குள்ளே மாத்திரம் அதைச் செய்யவேண்டியது.

⁎ ரோமர். ௭: ௨.

௪௰. அவள் அப்படியிருந்துவிட்டாளேயாகில், என்னுடைய யோசனையின்படி அதிக பாக்கியவதியாயிருக்கிறாள்; ஆனாலெனக்கும் பராபரனுடைய ஆவியுண்டென்று நினைக்கிறேன்.

௮. அதிகாரம்.

விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதுக்கு விலகியிருக்கப்படுத்திச் சொன்னது.

விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதுகளின் காரியத்துக்கோவென்றால், நமக்கறிவுண்டு; ஏனென்னில் அனைவருமறிவுள்ளவர்களாயிருக்கிறோம். அறிவு உப்பிப்போகப் பண்ணுது; சிநேகமோ ஊன்றக் கட்டுது. ⁎ அபோ. ௰௫: ௨௰.

௨. ஆனாலொருவன் ⁎ தானேதோ அறிந்திருக்கிறவனென்றெண்ணினால், அவன் அறியவேண்டியபிரகாரமாக இன்னமும் அறிந்ததில்லை.

⁎ கலா. ௬: ௩.

௩. ஒருவன் பராபரனைச் சிநேகிக்கிறானேயாகில் ⁎ அவன் அவராலே அறியப்பட்டிருக்கிறான்.

⁎ கலா. ௪: ௯.

௪. மேலும் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதுகளைப் போசிக்கிற காரியத்துக்கோவென்றால், லோகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லையென்றும், ஒருவரே ஒழிய வேறொரு தெய்வமில்லையென்றும் அறிந்திருக்கிறோம்.

௫. ஏனென்றால் வானத்திலாகிலும் பூமியிலாகிலும் தேவர்களென்னப்படுகிறவர்களுண்டாயிருந்தாலும், அப்பிரகாரமாக அனேகந்தேவர்களும் அனேகங் கர்த்தாக்களுமிருந்தாலும்,

௬. பிதாவாகியவொரே பராபரன் நமக்குண்டு; அவரா லேயெல்லாமுண்டாச்சுது; அவருக்கென்று நாமுண் டாயிருக்கிறோம். யேசுக்கிறிஸ்துவாகியவொரே கர்த்தரும நமக்குண்டு; அவரைக்கொண்டுமெல்லாமுண்டாச சுது; அவரைக்கொண்டுமநாமிருக்கிறோம.

௭. ஆனாலெல்லாரிடத்திலும் அந்த அறிவில்லை; ஏ னென்றாலிதுவரையிலவர்கள் விக்கிரகத்தை மன துமனசாயபத்துடனே அதை விக்கிரகத்துக்குப்படைக் கப்பட்டதாகப்போசிக்கிறார்கள்; இவர்களுடையமனச சாட்சிதளர்ந்திருக்கிறபடியினாலே தீட்டுப்படும்.

௮. ஆனால் ◆ போசனம் நம்மைப் பராபரனுக்குகந்த வர்களாக்குகிறதில்லையே; ஏனென்னில், நாம்போசித் தாலுமொன்றும்விசேஷமில்லை, போசியாதிருந்தாலகுறைவுமில்லை. ◆ றோ. ௰௪: ௰௭.

௯. ஆகையால் ◆ நீங்களுங்களுடைய அதிகாரம்பெல வீனருக்குத்தடுக்கலாகாதபடி பாருங்கோள். ◆ கலா. ௫: ௰௩.

௰. ஏனென்றாலறிவுள்ளவனான உன்னை ஒருத்தன் விக் கிரகவீட்டிலேபந்தியிருக்கக்கண்டால், பெலவீனமா யிருக்கிற அவனுடைய மனச்சாட்சி விக்கிரகங்களுக் குப்படைக்கப்பட்டதுகளைப்போசிக்கிறதுக்குத்துணி வாக்கப்படுமல்லவோ.

௰௧. ◆ அப்படிக்கிறிஸ்து மரித்து மீட்ட பெலவீன சகோதரன் உன்னுடைய அறிவின் முகாந்திரமாய் கெட்டுப்போகலாமோ. ◆ றோ. ௰௪: ௰௫.

௰௨. ஆனால் இப்படிச்சகோதரருக்குச்சேதமாகப்பா வஞ்செய்து தள்ளாடுகிறதாகிய அவர்களுடைய மனச் சாட்சியை அடிப்படுத்துகிறீர்களானால் கிறிஸ்துவுக்கு வி ரோதமாகப்பாவஞ்செய்கிறீர்கள்.

௰௩. ஆனபடியினாலே போசனம் என் சகோதரனுக் கு இடறலுண்டாக்கினால், நான் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்காதபடிக்கு, என்றைக்கும் மாம்சம் போசியாதிருப்பேனே. ◆ றோ. ௰௪: ௨௧.

௯. அதிகாரம்.

விக்கிரகங்களுக்குப்படைக்கப்பட்டதுகளைவிலக்கியிரும் படிக்குச்சொன்னபுத்திக்கு அதிகப்பலன்கொடுக்கும் படிக்கு, பவுலுதனக்குச்செல்லுமதிகாரங் களைத்தான் வெறுத்திருக்கிறதையெடுத்தது.

நான் அப்போஸ்தலனாயிருக்கயில்லையோ; நான தன்னிஷ்டனாயிருக்கவில்லையோ; நான் நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவைத் தரிசிக்கவில்ல யோ; கர்த்தருக்குள் நீங்கள் ◆ என்னுடைய கிரிகையா யிருக்கிறதில்லையோ. ◆ ௩: ௯. ௰.

௨. நான் மற்றேமனுஷருக்கு அப்போஸ்தலனாயிரா விட்டாலும் உங்களுக்கல்லோ அப்போஸ்தலனாயி ருக்கிறேன்; ஏனென்னில் கர்த்தருக்குள் நீங்கள் ◆ என்னு டைய அப்போஸ்தலத்துவ, ஸ்தாபிதத்தின் முத்திரையாயிருக்கி றீர்கள். ◆ ௨. கொ. ௩: ௨. ௩.

௩. என்னை கடுக்கொண்டு விசாரிக்கிறவர்களுக்கு நான சொல்லுகிற உத்தரவாவது:

௪. போசிக்கவும் குடிக்கவும் எங்களுக்கு அதிகாரமில்லையோ.

௫. மற்ற அப்போஸ்தலரும் கர்த்தருடைய சகோதரரும் * கேபாவுஞ் செய்கிறது போலே, பெண்சாதியாகிய ஒரு சகோதரியை உடனழைத்துக் கொண்டுதிரிய எங்களுக்கு அதிகாரமில்லையோ. * மத. ௮: ௰௪.

௬. அல்லது வேலை செய்யாதிருக்க எனக்கும் பர்னபாவுக்கும் மாத்திரம் அதிகாரமில்லையோ.

௭. ஆர் சுயபணத்தாலே மடன்மாக, கூடப்படிக்கொட்டு போர்வாசிகளுக்குச் சேவிப்பவனார், திராட்சத்தோட்டம் போட்டு அதின் கனியிலே கொஞ்சம் புசியாதிருப்பவனார், அல்லது மந்தையை மேய்த்து அதின் பாலிலே கொஞ்சஞ் சாப்பிடாதிருக்கிறவனார்.

௮. இதுகளை மனுஷமார்க்கமாய்ச் சொல்லுகிறேனோ, நியாயப்பிரமாணமும் அப்படிச் சொல்லாதோ.

௯. மோசேயினுடைய நியாயப்பிரமாணத்திலே: * போரடிக்கிற மாட்டுக்கு வாய்கட்டாயாக என்றெழுதியிருக்குதே, பராபரன் மாடுகளுக்காகவே விசாரமாயிருக்கிறாரோ. * ௫. மோ. ௨௫: ௪. ௧. திமோ.

௫: ௰௮:

௰. அல்லது நம்மைக்காகத்தானே இதைச் சொல்லுகிறாரோ, நம்மைக்காகத்தான இது எழுதியிருக்குது, என்னவெனில் உழுகிறவன் நம்பிக்கையாய் உழவும், போரடிக்கிறவன் தான் நம்பினதுக்குப் பங்குள்ளவனாகுவேனென்ற நம்பிக்கையாய்ப் போரடிக்கவும் வேணும்.

௰௧. * நாங்கள் உங்களுக்கு ஞானநன்மைகளை விதைத்திருந்தோமானால், நாங்கள் சரீரத்துக்கடுத்த உங்கள் நன்மைகளை அறுத்தால் பெரியகாரியமோ.

* கலா. ௬: ௬.

௰௨. வேறேபேருங்களிடத்திலிந்தவதிகாரத்துக்குப் பங்குள்ளவர்களானால், நாங்களும் அதிகமல்லவோ: ஆனாலும் * நாங்கள் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்துக்கு யாதொரு தடையுண்டாக்காதபடிக்கு, * இந்த அதிகாரத்தை நாங்கள் அனுபவித்துக் கொண்டிராமல், எல்லாம் பொறுக்கிறோம்.

* ௪: ௰௧: ௰௨. ௨. கொரி. ௰௧: ௯.

௰௩. ஆசாரியவூழியத்திலே செய்கிறவர்கள் ஆசாரியவாரத்திலே போசிக்கிறார்களென்றும், பீடத்தை அடுத்திருக்கிறவர்கள் பீடத்துடனே கூடப்பங்குண்டென்றும் அறியீர்களோ. * ௫. மோ. ௰௮: ௧—௪.

௰௪. அப்படியே கர்த்தர் * சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு சுவிசேஷத்திலே பிழைக்கக் கட்டளைபண்ணினார். * லூக். ௰: ௭. ௮.

௰௫. நானோ இவைகளில் ஒன்றையும் அனுபவித்துக்கொண்டதில்லை, இப்படி எனக்கு நடக்க வேணுமென்று இதுகளை நான் எழுதினதுமில்லை

சாக

ஏனெனில் நான் பெருமையை அவத்தமாக்குகிறதைப் பார்க்கிலும் சாகிறது எனக்கு நலமாயிருக்கும்.

௰௫. அதேதென்றால் நான் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தால் அதினாலே எனக்குப் பெருமையில்லை; ஏனெனில் அது என் மேல் விழுந்த கடன்; நான் சுவிசேஷத்தைப் பிரசங்கியாதே போனேனேயாகில், எனக்கு ஐயோ.

௰௭. இதை நான் மனதுள்ளவனாய்ச் செய்தால் எனக்குப் பலனுண்டு; மனதில்லாதவனாய்ச் செய்தாலும் உக்கிராண விசாரிப்பு எனக்கு ஒப்பிவிக்கப் பட்டிருக்குது.

௰௮. அப்போது எனக்குப் பலன் என்னவென்றால், நான் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கையில் அதிலே என்னுடைய அதிகாரத்தை ஆகாதவகையாய் அநுபவியாதபடிக்கு, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைச் செலவில்லாமலே வைக்கிறதுதான் எனக்குப் பலன்.

௰௯. ஏனெனில் நான் எல்லாருக்கும் நீங்கலாயிருந்தும், நான் அதிகங்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுவதற்கு, என்னைத்தானே எல்லாருக்கும் ஊழியக்காரனாக்கினேன்.

௨௰ நான் யூதரை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறதுக்கு * யூதருக்கு யூதனைப் போலவும், நியாயப்பிரமாணத்துக்குக் கீழானவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறதுக்கு; அவர்களுக்கு நியாயப்பிரமாணத்துக்குக் கீழானவனைப் போலவுமானேன். * அப்போ. ௰௬: ௩.

௨௧. பராபரனுக்கு முன்பாக நியாயப்பிரமாணமில்லாதவனாயிராமல் கிறிஸ்துவின் நியாயப்பிரமாணத்துக்குள்ளானவனாகிய நான் நியாயப்பிரமாணமில்லாதவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறதுக்கு அவர்களுக்கு * நியாயப்பிரமாணமில்லாதவனைப் போலவுமானேன். * கலா. ௪: ௯—௰௨.

௨௨. பெலவீனரை ஆதாயப்படுத்திக் கொள்ளுவதற்கு * பெலவீனருக்குப் பெலவீனனைப் போலானேன்; நான் எப்படியும் சிலரை ** இரட்சிப்பதற்கு எல்லாருக்கும் எல்லாமானேன். * ௩: ௧. ௨. ** ௰: ௩௨. ௩௩.

௨௩. ஆனால் இதைச் சுவிசேஷத்தின் நிமித்தியமாக; அதுக்கு நான் உடன்பங்காளனாகும்படிக்குச் செய்கிறேன்.

௨௪. ஓடுகசாலையிலே ஓடுகிறவர்களெல்லாரும் ஓடினாலும், ஒருத்தனே பந்தயத்தைப் பெறுகிறானென்று அறியீர்களோ; நீங்கள் அதைப் பிடிக்கும்படியாய் ஓடுங்கோள்.

௨௫. ஆனால் போராடுகிறவனெல்லாம் எல்லாத்திலும் இச்சையடக்கமாயிருக்கிறான்; அவர்களோ அழிவுள்ள கிரீடத்தையும், நாமோவெனில் * அழிவற்றதையும் பெறும்படிக்குத்தானே. * ௨. தீமோ. ௪: ௭. ௮. அப். ௨: ௰.

௨௬. ஆனபடியால் நான் * நிச்சயமில்லாதவனுக்கு ஓடேன்; நான் ஆகாசத்தை அடிக்கிறவனுக்குச் சலம்பம் பண்ணேன். * ஹே. ௮: ௩௮: ௩௬.

௨௭. மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என்னுடைய சரீரத்தை நான் நெருக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்.

௰. அதிகாரம்.

இசுரவேலருக்குப்பட்டதைக்கொண்டு
கொரிந்தியாரின் விக்கிரகத்துக்காக
பவுலவர்களுக்குத் [illegible]
அநேக [illegible] பட்ட
பட்ட திஷ்டாந்தங்களைத் தந்து
[illegible].

ஆனாலுஞ் சகோதரரே நம்முடைய பிதாக்களெல்லாரும் * மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாருஞ் ** சமுத்திரத்தை உருவ நடந்துவந்தார்கள்.

* ௨. மோ. ௰௩: ௨௧. ௨௨. ** ௨. மோ. ௰௪: ௨௨.

௨. எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்திலுஞ் சமுத்திரத்திலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்.

௩. * எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள். * ௨. மோ. ௰௬: ௰௫.

௪. * எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள், அதேதென்னில் கூடவருகிற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள், அந்தக் கன்மலையே கிறிஸ்துவாயிருந்தார். * ௨. மோ. ௰௭: ௬.

௫. ஆகிலும், அவர்களில் அநேகம்பேர்களின் பேரிலே பராபரன் பிரியமாயிருந்ததில்லை, அதேதெனில் * வனாந்திரத்திலே மடிவிக்கப்பட்டார்கள் [illegible] அறியாதே போனார்கள் [illegible].

* ௪. மோ. ௨௬: ௬௪. ௬௫.

௬. அவர்கள் * இச்சித்ததுபோல நாமும் பொல்லாதவைகளை இச்சிக்கிறவர்களாகாதபடிக்கு இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாச்சுது.

* ௪. மோ. ௰௧: ௪—௬. ௩௩.

௭. * ஜனம் போசிக்கிறதுக்கும் குடிக்கிறதுக்கும் உட்கார்ந்து, விளையாடுகிறதுக்கு எழுந்திருந்தார்களென்று எழுதியிருக்கிறபடி அவர்களில் சிலர் விக்கிரகாராதனைக்காரரானதுபோல, நீங்களும் அப்படிக்கொத்தவர்களாகாதேயுங்கோள்.

* ௨. மோ. ௩௨: ௬.

௮. வேசித்தனம்பண்ணாமலும் இருக்கக்கடவோம், அப்படி அவர்களிலே சிலர் * வேசித்தனம்பண்ணி ஒரே நாளிலே இருபத்துமூவாயிரம்பேர் விழுந்தார்கள்.

* ௪. மோ. ௨௫: ௧. ௯.

௯. கிறிஸ்துவைச் சோதியாமலும் இருக்கக்கடவோம், அப்படி அவர்களிலே சிலர் * சோதித்து, பாம்புகளாலே அழிக்கப்பட்டார்கள். * ௪. மோ. ௨௧: ௪—௬.

௰. முறுமுறுக்காமலுமிருங்கோள், அப்படி அவர்களிலே சிலர் * முறுமுறுத்து, சங்கரிக்கிறவனாலே அழிக்கப்பட்டார்கள். * ௪. மோ. ௰௬: ௪௧. ௪௯.

௰௧. ஆனாலிதுகளெல்லாம் திஷ்டாந்தங்களாக அவர்களுக்கு வந்து சம்பவித்தது, யுகாந்தத்தின் முடிவுகாலங்களுக்குள்ளான நமக்குச் சரிக்கையாக எழுதப்பட்டது.

௰௨. ஆனபடியினாலே * நிற்கிறவனென்று தன்னை யெண்ணுகிறவன் விழாதபடிக்குப் பார்க்கக்கடவான்.

* ரோ. ௰௧: ௨௰.

௰௩. மனுஷசோதனையல்லாமல் வேறே சோதனை உங்களைப் பிடிக்கவில்லை. பராபரனே விசுவாசமுள்ளவராயிருக்கிறார், அவருங்களைப் பெலத்துக்கு மிஞ்சின சோதனையாய் நீங்கள் சோதிக்கப்படவொட்டாமல், நீங்கள் சகிக்கக்கூடும்படிக்குச் சோதனையுடனே கூடப் போக்கையும் உண்டாக்குவார். * ௨. பேத. ௨: ௯.

௰௪. ஆகையால், எனக்குப் பிரியமானவர்களே விக்கிரகாராதனையை விலகியோடுங்கோள்.

விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டது
அதைப்புசிக்கிறவன் பிசாசுடனே
அயிக்கமாகிறானென்று ரூபிக்குது.

௰௫. உங்களைப் புத்திமான்களென்றெண்ணிப் பேசுகிறேன், நான் சொல்லுகிறதை நீங்களே நிதானித்துப் பாருங்கோள்.

௰௬. நாங்கள் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரங் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் அயிக்கியமாயிருக்கிறதல்லவோ, நாங்கள் பிட்கிற அப்பங் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் * அயிக்கியமாயிருக்கிறதல்லவோ.

* மத். ௨௬: ௨௬—௨௮.

௰௭. ஒரே அப்பமானபடியினாலே அனேகரான நாம் * ஒரே சரீரமாயிருக்கிறோம். ஏனென்றால் எல்லாரும் அந்த ஒரே அப்பத்துக்குப் பங்குள்ளவர்களாயிருக்கிறோம். * ரோமர்: ௰௨: ௫.

௰௮. மாம்சத்தின்படி இஸ்றவேலாயிருக்கிறவர்களைப் பாருங்கோள், பலிகளைப் புசிக்கிறவர்கள் பலிபீடத்தின் அயிக்கியமாயிருக்கிறார்களல்லவோ.

௰௯. இப்பொழுதுமென்னச் சொல்லுகிறேன், விக்கிரகமியாதோன்றென்கிறேனோ, அல்லது விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டது யாதோன்றென்கிறேனோ, இல்லை.

௨௰. அக்கியானிகள் பலியிடுகிறது பராபரனுக்கல்ல, * பிசாசுகளுக்குப் பலியிடுகிறார்களென்கிறதையே சொல்லுகிறேன். ஆனால் நீங்கள் பிசாசுகளின் அயிக்கியமாய்ப்போக எனக்கு மனதில்லை.

* ரு: மோ. ௩௨: ௰௭.

௨௧. நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்தையும் பிசாசுகளுடைய பாத்திரத்தையுங் குடிக்கக்கூடாது, நீங்கள் கர்த்தருடைய பந்திக்கும் பிசாசுகளுடைய பந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக்கூடாது.

௨௨. அல

உ௨. அல்லாமற் கர்த்தருக்கு எரிச்சலுண்டாக்குவோமோ/ அவரைப்பார்க்கப் பெலவான்களாயிருக்கிறோமோ.

உ௩. * எல்லாத்துக்குமெனக்கதிகாரமுண்டு ஆனால எல்லாம பிரயோசனமாயிராது/ எல்லாத்துக்குமெனக்கதிகாரமுண்டு/ ஆனாலெல்லாம ஊர்ணக்கட்டாது. * ௬: ௰௨.

உ௪. ஒருத்தனுந் * தன்காரியத்தைத்தேடாமல/ அவனவன் மற்றவனுடைய காரியத்தைத்தேடக்கடவான.

* பிலி. ௨: ௪.

உ௫. நீங்கள மனச்சாட்சியின நிமித்தியமாக ஒன்றையும விசாரியாமல/ மாங்கிஷக்கடையிலே விற்கிறதெதையும வாங்கிப் புசியுங்கோள.

உ௬. ஏனெனில * பூமியும அதினுட நிறைவுங் கர்த்தருடையதாயிருக்குது. * சங. உ௪: ௧.

உ௭. அவிசுவாசிகளில ஒருத்தன உங்களை அழைக்கக் கொள்ள நீங்கள போகமனதுள்ளோரானால/ நீங்கள மனச்சாட்சியின நிமித்தியமாக ஒன்றையும விசாரியாமல/ உங்களுமுன வைக்கப்பட்டதெதையும புசியுங்கோள.

உ௮. ஆனால ஒருத்தன உங்களுடனே: இது விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதென்றால/ அதை அறிவித்தவனுடைய நிமித்தியமாகவும மனச்சாட்சியின நிமித்தியமாகவும புசியாதிருங்கோள/ ஏனெனில பூமியும அதினுட நிறைவுங் கர்த்தருடையதாயிருக்குது.

உ௯. உன்சொந்த மனச்சாட்சியைக் குறித்தல்ல/ மற்றவனுடைய மனச்சாட்சியைக் குறித்துச் சொல்லுகிறேன/ ஏனென்றால என்னுடைய சுயாதீனம் அன்னியனுடைய மனச்சாட்சியினாலே குற்றமாய் நினைக்கப்படுவானேன.

௩௰. நான * ஸ்தோத்திரப்பட்டே அதையநுபவித்தால/ நான ஸ்தோத்திரஞ்செய்கிற அதனுபவிக்கிறதுக்காகத் தூஷணிக்கப்படுவானேன.

* ௧ தீமோ. ௪: ௪.

௩௧. ஆகையால நீங்கள * புசித்தாலுங் குடித்தாலும என்னசெய்தாலும/ எல்லாத்தையும பராபரனுடைய மகிமைக்கென்று செய்யுங்கோள.

* கொலோ. ௩: ௰௭.

௩௨. நான என்னுடைய பிரயோசனத்தைத் தேடாமல/ அநேகருடைய பிரயோசனத்தை/ அவர்கள * ரட்சிக்கப்படும்படிக்குத் தேடி/ எல்லாத்திலுமெல்லாருக்கும் பிரியமாய் நடக்கிறதுபோலே/

* ௯: ௨௨.

௩௩. நீங்களும/ யூதருக்குங் கிரேக்கருக்கும பராபரனுடைய சபைக்கும * இடறலற்றவர்களாகுங்கோள.

* ரோ. ௰௪: ௰௩.

௰௧. அதிகாரம்.

சபைக்கேற்ற வழக்கமாக செய்கையிலே புருஷர்கள்
முக்காடிடாமலிருக்கிறதும், ஸ்திரீகள் தலை
மூடிக்கொண்டிருக்கிறதும் யோக்
கியமென்பது.

நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்களும் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்.

* ௪: ௰௬.

௨. சகோதரரே, நீங்களெல்லாவற்றிலுமென்னை நினைத்து, நான் உங்களுக்கொப்புவித்தபடியே கட்டளைகளைக் கைக்கொண்டிருக்கிறதுக்காக உங்களைப் புகழுகிறேன்.

௩. ஆனாலெந்தப்புருஷனுடையதலைக் கிறிஸ்துவென்றும், * பெண்சாதியினுடையதலை புருஷனென்றும், ** கிறிஸ்துவினுடையதலை பராபரனென்றும் நீங்களறிய வேண்டுமென்றிருக்கிறேன்.

* எபே. ௫: ௨௩. ** ௩: ௨௩.

௪. தலைமூடிக்கொண்டிருந்து ஜெபம்பண்ணிலுந் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனுமாகிய எந்தப்புருஷனுந் தன்றலையைக் கனவீனப்படுத்துகிறான்.

௫. ஆனால் தலை மூடாமல் ஜெபம்பண்ணிலுமல்லது தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற எவ்வொரு ஸ்திரீயுந் தன்றலையைக் கனவீனப்படுத்துகிறாள், ஏனென்றால் அது அவள் சிரைக்கப்பட்டதுக்குச் சரியாயிருக்கும்.

௬. ஏனென்றால் ஸ்திரீ மூடிக்கொள்ளாவிட்டால், மயிரையுங்கத்தரித்துக்கொள்ளக்கடவாள்; ஆனால் மயிர்க்கத்தரிக்கப்படுகிறது அல்லது சிரைக்கப்படுகிறது ஸ்திரீக்கு வெட்கமானபடியினாலே, மூடிக்கொண்டிருக்கக்கடவாள்.

௭. புருஷனோவென்றால் தலையைமூடிக்கொண்டிருக்கவேண்டியதல்லை, ஏனென்றால் * பராபரனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிறான், ஆனால் பெண்சாதி புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள்.

* ௧. மோ. ௧: ௨௬. ௨௭.

௮. ஏனென்றால் புருஷன் பெண்சாதியால் தோன்றினவனல்ல, * பெண்சாதி புருஷனால் தோன்றினவள்.

* ௧. மோ. ௨: ௨௨.

௯. புருஷன் பெண்சாதிக்காகச் சிஷ்டிக்கப்பட்டவனல்ல, * பெண்சாதி புருஷனுக்காகச் சிஷ்டிக்கப்பட்டவள். * ௧. மோ. ௨: ௰௮.

௰. ஆகையால் தூதர்களினிமித்தியமாக ஸ்திரீக்குத் தலையின்மேலே அதிகாரமுண்டாயிருக்கவேண்டியது.

௰௧. ஆகிலுங்கர்த்தருக்குள் பெண்சாதியில்லாமற் புருஷனுமில்லை, புருஷனில்லாமல் பெண்சாதியுமில்லை.

௰௨. ஏனெ

௰௨. ஏனெனில ஸ்திரீ புருஷனிலிருக்கிறது போல புருஷன ஸ்திரீயினாலுமிருக்கிறான, ஆகிலும சகலமும பராபரனாலேயிருக்குது.

௰௩. ஸ்திரீ தலைமூடிக்கொண்டிராமல பராபரனைத்தொழுகிறது லட்சணமோ என்று உங்களுக்குள்ளே நீங்களே நிதானியுங்கோள.

௰௪. அல்லாது புருஷன மயிரை நீளமாய வளர்த்தால, அதவனுக்குக்கனயீனமாயிருக்குதென்றும,

௰௫. பெண்சாதியோ மயிரை நீளமாய வளர்த்தால அதவளுக்கு மகிமையாயிருக்குதென்றுஞ் சுவாபமே உங்களுக்குப்போதியாதோ, ஏனெனில மயிர் அவளுக்கு முக்காடாகக்கொடுத்திருக்குது.

௰௬. ஆனாலொருவன பிடிவாதியாயிருக்க எத்தனிக்குதாயக்கண்டால, எங்களுக்கப்படிக்கொத்த பழக்கமில்லை, பராபரனுடைய சபைகளுக்குமில்லை.

கர்த்தருடைய ராப்போசனத்தைப்பரி
சுத்தமாய ஆசரிக்கிறதுக்கும பாத
திரமாய வாங்கிறதுக்கும புத்தி
சொன்னது.

௰௭. அதிகநன்மையாகவல்லால அதிக ஈனப்படமாகக் கூடிவருகிறீர்களென்கிறதினாலே சொல்லிக்காட்டப்போற காரியத்திலே சவேண்டுஅல உங்களைப்புகழேன.

௰௮. அதேதெனனில முதலாகவே, நீங்கள சபையிலே கூடிவரும்போது, உங்களில பிரிவினைகளுண்டென்று கேட்கிறேன, அதிலே சிலதுகளை நம்புகிறேன.

௰௯. ஏனெனறால உங்களில உத்தமர் வெளியாகும்படிக்கு, * மார்க்கபேதங்களும உங்களிலுண்டாயிருக்கவேண்டியது. * மத். ௰௮: ௭.

௨௰. நீங்களொருமிக்கக் கூடிவரும்போதோவெனில, நீங்கள செய்கிறது கர்த்தருடைய ராப்போசனத்தைப் புசிக்கிறதல்ல.

௨௧. ஏனெனறால, சாப்பிடுகையிலே அவரவர் தங்கள சொந்தப்போசனத்தை முந்தி வாங்கி, ஒருத்தனே பசித்திருக்கிறான, மற்றொருத்தனே மிச்சமாய்ச்சாப்பிட்டிருக்கிறான.

௨௨. ஆனாலபோசிக்கிறதுக்குங் குடிக்கிறதுக்கும உங்களுக்கு வீடுகளில்லையோ, அல்லது பராபரனுடைய சபையை அசட்டைபண்ணி, இல்லாதவர்களை வெட்கப்படுத்துகிறீர்களோ, உங்களுக்கு நானென்ன சொல்லுவேன, உங்களைப்புகழுவேனோ, இதிலே உங்களைப்புகழேன.

௨௩. ஏனெனில நான உங்களுக்கொப்பிவித்ததை * நான கர்த்தரிடத்திலே அடைந்தேன, அதாவது: ** கர்த்தராகிய யேசு தாமகாட்டிக்கொடுக்கப்பட்ட ராத்திரியிலே அப்பத்தை எடுத்துக்கொண்டு, * கலா. ௧: ௰௨. ** மத். ௨௬: ௨௬—௨௮. மாற். ௰௪: ௨௨—௨௪. லூக். ௨௨: ௰௯. ௨௰.

௨௪. ஸெதததோததிரமபணணி அதைப பிட்டு: நீஙகள வாஙகிப புசியுஙகள; இது உஙகளுககாகப பிட்கபபடுகிற என்னுடைய சரீரமாயிருககுது; இதை என நினைவுககூருதலுககாகச செயயுஙகோள என்றார்.

௨௫. அநதபபடிககேனே, சாபபிடடொசனமபணணின பிறபாடு அவர்பாததிரததையுமெடுதது: இநதப பாததிரம என்னுடைய இரததததிலே புதுஉடனபடிககையா யிருககுது; இதை நீஙகள குடிககிற போதெலலாமென நினைவுககூருதலுககாகச செயயுஙகோ ளென்றார்.

௨௬. அதுகையால நீஙகளிநத அபபததைப போசிதது இநதப பாததிரததிலே குடிககிற போதெலலாஙகர்ததருடைய மரணததை அவர் வருமடடுககும அறிவிககிறீர்கள.

௨௭. அனபடியாலே எவனுகிலுமபாததிரனலலாமல அபபததைப போசிதது அலலது கர்ததருடைய பாததிரததிலே குடிததால, அவன கர்ததருடைய சரீரததுககும இரததததுககுங் குற்றமுளளவனாயிருபபான.

௨௮. ஆகையால மனுஷன *தனனைததானே சோதிதது, இபபடியே அபபததிலே போசிதது இநதப பாததிரததிலே குடிககககடவான. *௨. கொ. ௰௩:௫.

௨௯. ஏனெனில அபாததிரனாய போசிததுக குடிககிறவன; கர்ததருடைய சரீரமினனதென்றறியாமையினாலே; தனககுததானே ஆககினைததீர்பபைப போசிததுக குடிககிறான.

௩௰. இதுநிமிததியமாக உஙகளிலே பெலவீனருமவியாதிககாரருமவெகுபேர்களுணடு; அனேகர் நிததிரையுமடைநதிருககிறார்கள.

௩௧. ஏனெனில *நமமைநாமே நிதானிததுக்கொணடால, நியாயநதீர்ககபபடோம. *சங். ௩௨: ௫.

௩௨. நியாயநதீர்ககபபடடோமேயாகில, நாம லோகததோடே ஆககினைககுளளாகததீர்ககபபடாதபடிககுக கர்ததராலே தெணடிககபபடுகிறோம.

௩௩. ஆகையால என சகோதரரே, நீஙகள போசிககிறதுககுககூடிவநதால, ஒருததருககொருததர் காததிருஙகோள.

௩௪. ஒருததனுககுப பசியிருநதேயாகில அவனநீஙகள ஆககினைககுளளாகககூடிவராதபடிககு, வீடடிலே சாபபிடககடவான. மற்றக காரியஙகளையோ நான வருமபோது திடடமபணணுவேன.

௰௨. அதிகாரம்.

ஞானவரஙகளுடைய விததியாசஙகளின
நிமிததியமாகப பிரிவினைகளவேணடா
மென்றெசசரிததது.

அனறியும, சகோதரரே, ஞானவரஙகளின செயதியை நீஙகள அறியாதிருககிறதுககு மனதிலலை.

௨. வழிகாட்டப்பட்டபடியே நீங்கள் ஊமையானவிக்
கிரகங்களண்டைக்குக் கொண்டுபோகப்பட்ட அஞ்ஞா
னிகளாயிருந்தீர்களென்றறிவீர்கள்.

௩. ஆகையால் பராபரனுடைய ஆவியினாலே பேசு
கிற எவனும் இயேசுவைச் சபிக்கப்பட்டவனென்று சொல்லானென்றும், பரிசுத்
த ஆவியினாலேயல்லாமல் ஒருவனும் இயேசுவைக் கர்த்தரென்று
சொல்லக் கூடாதென்றும் உங்களுக்கு அறிவிக்
கிறேன்.

௪. ஆனால் *வரங்களுடைய வித்தியாசங்களுமுண்டு
ஆவியோ ஒருவர். * ரோ. ௰௨: ௬.

௫. ஊழியங்களுடைய வித்தியாசங்களுமுண்டு,
கர்த்தரோ ஒருவர்.

௬. பெலன்களுடைய வித்தியாசங்களுமுண்டு,
எல்லாவற்றையும் எல்லாருக்குள்ளும் நடப்பிக்கிற
பராபரனோ ஒருவர்.

௭. ஆனால் அவனவனுக்கு ஆவியினுடைய வரங்கள்
பிரயோசனத்துக்காகக் கொடுக்கப்படுகுது.

௮. அதெப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞான
த்தினுடைய வசனமும், வேறொருத்தனுக்கு அந்த ஆவியி
னாலே அறிவினுடைய வசனமும்,

௯. வேறொருத்தனுக்கு அந்த ஆவியினாலேதானே வி
சுவாசமும், வேறொருத்தனுக்கு அந்த ஆவியினாலேதா
னே குணமாக்கும் வரங்களும்,

௰. வேறொருத்தனுக்கு வல்லமைகளைச் செய்யும்
பெலன்களும், வேறொருத்தனுக்குத் தீர்க்கதரிசன
மும், வேறொருத்தனுக்கு ஆவிகளுடைய வித்தியாசங்க
ளை நிதானிக்கும் வரமும், வேறொருத்தனுக்குப் பலபல
பாஷைகளும், வேறொருத்தனுக்குப் பாஷைகளின் வியா
க்கியானமும் கொடுக்கப்படுகுது.

௰௧. ஆனால் அந்த ஒரே ஆவியானவர் *அவரவருக்கு
அவர்களுக்குச் சொந்தவரங்களைத் தம்முடைய சித்தத்தின்படி
யே பகிர்ந்து கொடுத்து, இதுகளெல்லாம் நடப்பிக்
கிறார். * எபே. ௪: ௭.

௰௨. எப்படியென்றால், சரீரம் ஒன்றாயும், அநேகம் அவய
வங்களுள்ளதுமாயிருந்து, அந்த ஒரே சரீரத்தின் அநே
கமான எல்லா அவயவங்களும் ஒரே சரீரமாயி
ருக்குதோ, அப்படியே கிறிஸ்துவுமிருக்கிறார்.

௰௩. எப்படியென்றால் நாம் யூதராயிருந்தாலும் கிரேக்கரா
யிருந்தாலும், அடிமைகளாயிருந்தாலும் சுயாதீனராயி
ருந்தாலும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரமா
குதற்கு ஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆ
வியால் தாகந்தீர்க்கப்பட்டோம்.

௰௪. ஏனெனில் சரீரமும் ஒரே அவயவமாயிரா
மல், அநேக அவயவங்களாயிருக்குது.

௰௫. காலானது: நான் கையாயிராதபடியினாலே
நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே
அது சரீரத்தின் அவயவமாயிராதோ.

௰௬. காதானது: நான் கண்ணாயிராதபடியினாலே நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ.

௰௭. சரீர முழுதுங் கண்ணானால், கேள்வியெங்கே; அது முழுதுஞ் செவியானால், மோப்பமெங்கே.

௰௮. இப்பொழுதும் பராபரன் அவயவங்களில் ஒவ்வொன்றைத் தமக்குச் சித்தமானபடி சரீரத்திலே வைத்தார்.

௰௯. அதுகளெல்லாம் ஒரே அவயவமாயிருந்ததேயானால், சரீரமெங்கே.

௨௰. இப்பொழுது அவயவங்களோ அநேகம், சரீரமோ ஒன்று.

௨௧. ஆனாற் கண்ணானது கையுடனே: நீ எனக்குத் தேவையில்லையென்றும், அல்லாது தலையானது கால்களுடனே: நீங்கள் எனக்குத் தேவையில்லையென்றுஞ் சொல்லக்கூடாமல்,

௨௨. சரீர அவயவங்களில் பெலவீனமாய்க் காணப்படுகிறதுகளே மிகவுந் தேவையானதுகளாயிருக்கிறது.

௨௩. நமக்குச் சரீர அவயவங்களில் கனவீனமாய்க் காணப்படுகிறதுகளுக்கே அதிக்கக் கனத்தையுந் தரிப்பிக்கிறோம், நம்மில் அலங்காரத்தாழ்ச்சியானதுகளுக்கு அதிக அலங்காரமுண்டு.

௨௪. நம்மில் அலங்காரமானதுகளுக்கோ வேண்டியதுக்குத் தேவையில்லை.

௨௫. இப்படிச் சரீரத்திலே பிரிவினை உண்டாயிராமல் அவயவங்கள் ஒன்றுக்கொன்று ஏகப்பிரமாணிக்கையாயிருக்கும்படிக்கு, பராபரன் தாழ்ச்சியானதுக்கு அதிக்கக் கனங்கொடுத்துச் சரீரத்தை நிரவிவைத்தார்.

௨௬. ஒரே அவயவம் பாடுபட்டால், எல்லா அவயவங்களுங் கூடப்பாடுபடும்; ஒரே அவயவம் மகிமையடைந்தால், எல்லா அவயவங்களுங் கூடச் சந்தோஷப்படும்.

௨௭. * நீங்களோவென்னிற் கிறிஸ்துவினுடைய சரீரமுந் தனித்தனியே அவயவங்களுமாயிருக்கிறீர்கள்.

* ரோம. ௰௨: ௫.

௨௮. * பராபரன் சபையிலே முதலாவது அப்போஸ்தலரும், இரண்டாவது தீர்க்கதரிசிகளும், மூன்றாவது போதகருமான அந்தந்தப் பேரையும், பிற்பாடு வல்லமைகளையும், பிற்பாடு குணமாக்கும் வரங்களையும், ஆதரிக்கிறதுகளையும், ஆளுகைகளையும், பலவிதப் பாஷைகளையுங் கட்டளையிட்டார்.

* எபே. ௪: ௰௧.

௨௯. எல்லாரும் அப்போஸ்தலரோ, எல்லாருந் தீர்க்கதரிசிகளோ, எல்லாரும் போதகரோ, எல்லாரும் வல்லமைகளைச் செய்கிறவர்களோ.

௩௰. எல்லாருக்குங் குணமாக்கும் வரங்களுண்

டோ

ளோ? எல்லாரும் பாஷைகளைப் பேசுகிறார்களோ? எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களோ?

௩௧. நீங்களோவென்றால் * அதிக நன்மையான வரங்களை நாடுங்கள்; ** இன்னமும் அதிக மேன்மையுள்ள வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்.
* ௰௪: ௧. ** ௰௩: ௧. மற.

௰௩. அதிகாரம்.

சிநேகமே பிரதானம் என்பது.

நான் மனுஷருடைய பாஷைகளையுந் தேவதூதருடைய பாஷைகளையும் பேசினாலுஞ் சிநேகமெனக்கில்லாதிருந்தால், நான் சத்திக்கிற வெண்கலமும் அலறுகிற கைத்தாளமுமானேன்.

௨. நான் தீர்க்கதரிசனமுள்ளவனாயிருந்து, சகல இரகசியங்களையுஞ் சகல அறிவையும் அறிந்து, * மலைகளைப் பேர்க்கத்தக்கதான விசுவாசத்தையும் பெற்றிருந்தாலும், சிநேகமெனக்கில்லாதிருந்தால் நான் ஒன்றுமில்லை. * மத். ௭: ௨௨. ௨௩.

௩. நானென்னுடைமைகளெல்லாவற்றையும் ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்தாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படக் கொடுத்தாலும், சிநேகமெனக்கில்லாதிருந்தால் அதினாலெனக்குப் பிரயோசனமொன்றுமில்லை.

௪. சிநேகம் * நீடிய சாந்தமுந் தயவுமாயிருக்குது; சிநேகம் பொறாமையுடையதல்ல; சிநேகம் இடம்பஞ்செய்யாது; அது உப்பிப் போகாது. * ௧. பேது. ௪: ௮.

௫. அது லச்சையானதைச் செய்யாது; தன்னுடையதைத் தேடாது; அது சினமடையாது; அது பொல்லாப்பை நினையாது.

௬. அது அநீதத்துக்குச் சந்தோஷப்படாமல் உண்மைக்குச் சந்தோஷப்படுகுது.

௭. அது * எல்லாத்தையும் பொறுக்குது; எல்லாத்தையும் விசுவாசிக்குது; எல்லாத்தையும் நம்புகுது; எல்லாத்தையுஞ் சகிக்குது. * ரோமர். ௰௫: ௧.

௮. சிநேகமொருக்காலும் ஒழிந்துபோகாது; தீர்க்கதரிசனங்களானாலும் நின்றுபோம்; பாஷைகளானாலும் ஓய்ந்துபோம்; அறிவானாலும் ஒழிந்துபோம்.

௯. ஏனென்றால் நாம் அற்பமாய் அறிந்திருக்கிறோம், அற்பமாய்த் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறோம்.

௰. நிறைவானது வரும்போதோவென்றால் குறைவுள்ளது நீங்கிப்போம்.

௰௧. நான் குழந்தையாயிருக்கையிலே குழந்தையைப்போலே பேசினேன், குழந்தையைப்போலே உணர்ந்தேன், குழந்தையைப்போலே சிந்தித்தேன்; நான் புருஷனானபோதோவென்றால், குழந்தைக்கடுத்தவைகளை ஒழித்துப்போட்டேன்.

௰௨. * தேவபோசனனுடைய நிழலாகவும், அப்போதே வெளிப்படுமானாலும் முகமுகமாகவும் காணக்கூடிய தேவபோசனம் அளிக்கப்படுகிறது; அப்போதோ வெளிப்படுத்தப்படாமல் அடிமைப்படுத்தப்பட்டு இருந்துகொண்டிருக்கிறேன்.

* ௨. கொ. ௫: ௭.

௰௩. தேவபோசனத்தோடே விசுவாசமும் நம்பிக்கை சிநேகம் இம்மூன்றும் நிலைத்திருக்கும்; இவைகளில் சிநேகமே பெரியது.

௰௬. அதிகாரம்.

தீமைக்கு எதிரிடையாய்ச் சொல்லப்பட்ட ஞானவரங்களைப் பார்க்கிலும் புண்ணியத்துக்குரிய சிநேகத்தைத் தேடுங்கள்.

சிநேகத்தைப் பின்பற்றுங்கள்; ஞானவரங்களையும் நாடுங்கள்; விசேஷமாய்த் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலை நாடுங்கள்.

௨. ஏனெனில் அந்நிய பாஷையிலே பேசுகிறவன் மனுஷருக்கல்ல, தேவனுக்கே பேசுகிறான்; ஒருவனும் அதை அறியான்; ஆவியினாலே இரகசியங்களைப் பேசுகிறான்.

௩. தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்கு பக்திவிருத்தியும் புத்தியும் ஆறுதலும் உண்டாகப் பேசுகிறான்.

௪. அந்நிய பாஷையிலே பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்; தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ சபைக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறான்.

௫. நீங்களெல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசவேண்டுமென்று விரும்புகிறேன்; ஆகிலும் நீங்கள் * தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவர்களாக வேண்டுமென்று அதிகமாய் விரும்புகிறேன்; சபையானது பக்திவிருத்தியடையும்படிக்கு அந்நிய பாஷைகளில் பேசுகிறவன் அர்த்தத்தையுஞ் சொல்லாதிருந்தால், தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் அவனைப்பார்க்கிலும் பெரியவன். * ௪. மோ. ௰௧: ௨௯.

௬. மேலும் சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்து, உங்களுக்கு இரகசியத்தை வெளிப்படுத்துகிறதாகவாவது, அறிவுண்டாக்குகிறதாகவாவது, தீர்க்கதரிசனமாகவாவது, போதகமாகவாவது பேசாமல், அந்நிய பாஷைகளாய்ப் பேசினால் உங்களுக்கு என்ன பிரயோசனமாயிருப்பேன்.

௭. அதுமட்டுமல்ல உயிரில்லாத வாத்தியங்களும் சத்தமிடுகிறவைகளாயிருந்தும், குழலாகிலும் சுரமண்டலமாகிலும் தொனிகளில் வித்தியாசங் காட்டாதேபோனால், ஊதப்படுகிறதும் வாசிக்கப்படுகிறதும் இன்னதென்று எப்படித் தெரியும்.

௮. எக்காளமும் விளங்காத சத்தமிட்டால், எவன் யுத்தத்துக்கு ஆயத்தம்பண்ணுவான்.

௯. அந்தப்படியே நீங்களும் நாவினாலே தெளிவான பேச்சைப் பேசாவிட்டால், சொல்லப்பட்டது இன்னதென்று எப்படித் தெரியும்; ஆகாசத்திலே பேசுகிறவர்களாயிருப்பீர்களே.

௰. லோக

௰. லோகத்திலே எத்தனை விதமான சத்தங்கள் உண்டாயிருந்தாலும், அதுகளில் ஒன்றும் அர்த்தமற்றதல்ல.

௰௧. இப்போதும் நான் சத்தத்தினுடைய பெலத்தை அறியாதேபோனால், பேசுகிறவனுக்கு மோட்டனாயிருப்பேன், பேசுகிறவன் எனக்கும் மோட்டனாயிருப்பான்.

௰௨. அப்படியே நீங்களும் ஞானவரங்களை நாடுகிறவர்களானபடியினாலே, சபையின் ஞானக்கட்டுக்கென்று * பெருகப்பாருங்கோள்.

* ப௫. ௨௫: ௨௬.

௰௩. ஆகையால் மறுபாஷையாய்ப் பேசுகிறவன் அதின் அர்த்தத்தைச் சொல்லும்படியாகச் செபம்பண்ணக்கடவான்.

௰௪. ஏனென்றால் நான் மறுபாஷையிலே செபம்பண்ணினால் என் ஆவி செபம்பண்ணுது, ஆனால் என் அறிவு கனியற்றதாயிருக்குது.

௰௫. இப்போ செய்யத்தக்கதென்ன, ஆவியாலே செபம்பண்ணுவேன், ஆனாலும் அறிவுடனே செபம்பண்ணுவேன், ஆவியாலே பாடுவேன், ஆனாலும் அறிவுடனே கூடப்பாடுவேன். * ஏபே. ௫: ௰௯.

௰௬. நீ ஆவியினாலே ஸ்தோத்திரித்தால், கல்லாதவனுடைய ஸ்தலத்திலிருக்கிறவன் உன் ஸ்தோத்திரத்துக்கு எப்படி ஆமென் என்பான், நீ சொல்லுகிறதின்னதென்றறியானே.

௰௭. நீயோ செவ்வையாய் நன்றாய் ஸ்தோத்திரிக்கிறாய், மற்றவனோ ஞானக்கட்டப்படுகிறதில்லை.

௰௮. நான் உங்களெல்லாரையும் பார்க்க அதிகமாய்ப் பாஷைகளாய்ப் பேசுகிறேனென்றதுக்காக என் பராபரனை ஸ்தோத்திரிக்கிறேன்.

௰௯. ஆகிலும் நான் சபையிலே மறுபாஷையாய்ப் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதைப் பார்க்கிலும், நான் அறிவிலே ஐந்து வார்த்தைகளை மற்றவர்களையும் உபதேசிக்கும்படிக்குப் பேசமனதாயிருக்கிறேன்.

௨௦. சகோதரரே, * நீங்கள் புத்தியிலே குழந்தைகளாகாமல், துர்க்குணத்துக்குக் குழந்தைகளாயிருங்கோள், ஆனால் புத்தியிலே தேறினவர்களாயிருங்கோள். * ரோ. ௰௬: ௰௯.

௨௧. மறுபாஷைக்காரராலேயும் மறு உதடுகளாலேயும் இந்த ஜனத்துடனே பேசுவேன், அப்படியும் அவர்கள் நமக்குச் செவிகொடுத்துக் கேட்பதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறதாய் வேதத்திலே எழுதியிருக்குது.

* ஏசா. ௨௮: ௰௧ ௰௨.

௨௨. ஆனபடியினாலே மறுபாஷைகள் விசுவாசிகளுக்கல்ல, அவிசுவாசிகளுக்கடையாளமாயிருக்குது; தீர்க்கதரிசனமோ அவிசுவாசிகளுக்கல்ல விசுவாசிகளுக்கடையாளமாயிருக்குது.

௨௩. இப்போது சபையெல்லாம் ஏகமாய்க் கூடிவந்து, எல்லாரும் மறுபாஷைகளாய்ப் பேசக்கொண்

ளாகல

கல்லாதவர்களாவது அவிசுவாசிகளாவது உள்ளேப்பிர வேசித்தால்; நீங்கள் பயித்தியம் பிடித்தவர்களென் பார்களல்லவோ.

௨௪. ஆனால் எல்லாருந் தீர்க்கதரிசனஞ் சொல்லு கையில், அவிசுவாசி அல்லது கல்லாதவன் ஒருத்தன் உள்ளேப்பிரவேசித்தால், அவன் எல்லாராலுங் கண்டிக் கப்பட்டு எல்லாராலும் நிதானிக்கப்படுவான்.

௨௫. இந்தப் பிரகாரமாக * அவனிருதயத்தின் அந் தரங்கங்கள் வெளியரங்கமாம்; அப்படியே அவன் முகங்குப்புறவிழுந்து பராபரனைப் பணிந்துகொண் டு பராபரன் மெய்யாய் உங்களுக்குள்ளே இருக்கிறா ரென்றறிக்கையிடுவான். * ஏசா. ௬. ௰௪.

நல்லொழுங்கையாய்த் தீர்க்கதரிசனஞ்சொல் லிப்பேசும்படிக்குப் பவுலுஞ் சொன்னது.

௨௬. ஆகையால், சகோதரரே, நீங்கள் கூ டிவருகிறபோது உங்களிலொவ்வொருத்தனுக்குச் சங் கீதமுண்டு போதகமுண்டு, மறுபாஷையுமுண்டு, சத்திய வெளிப்படுத்துதலுண்டு, வியாக்கியானமு முண்டு; ஞானக்கட்டுதலுண்டாக எல்லாஞ் செய்யப் படக்கடவது.

௨௭. ஒருத்தன் மறுபாஷையாய்ப் பேசுகிறதுண்டா னால், இரண்டுபேர், அல்லது மிகுதியாய் மூன்று பேர் மட்டுக்குள் அப்படிச்செய்ய; அவர்கள் ஒருத்தன் ஒருத்தனாய்ப் பேசி, ஒருத்தன் அருத்தத்தைச்சொல்லவேணும்.

௨௮. அருத்தஞ்சொல்லுகிறவனில்லாவிட்டால், சபை யிலே மௌனமாயிருந்து, தனக்குத்தானும் பராபரனுக் கும் பேசக்கடவான்.

௨௯. தீர்க்கதரிசிகளோவென்றால் இரண்டு மூன்று பேர் பேசி, மற்றவர்கள் நிதானிக்கக்கடவார்கள்.

௩௰. ஆனால் உட்கார்ந்திருக்கிற மற்றொருத்தனுக்கு ஏதாகிலும் வெளிப்படுத்தப்பட்டால், முந்தினவன் அமர்ந்திருக்கக்கடவான்.

௩௧. ஏனெனில் எல்லாருங் கற்றுக்கொள்ளுகிறதுக்கும் எல் லாருந்தேறுகிறதுக்கும், நீங்களெல்லாரும் ஒருத்தன் ஒருத்தனாய்த் தீர்க்கதரிசனஞ்சொல்லலாம்.

௩௨. தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக் குக் கீழ்ப்படிகிறதுமாயிருக்குது.

௩௩. ஏனெனில் பராபரன் அமளியினுடைய பராப ரனாயிராமல் சமாதானத்தினுடைய பராபரனாயிருக்கிறார்; பரிசுத்தவான்களுடைய எல்லாச்சபைகளிலும் அப் படித்தானே.

௩௪. * உங்கள் பெண்சாதிகள் சபைகளில் மௌனமாயிருக் கக்கடவார்கள். ஏனென்றால் பேசுகிறதுக்கு அவர்களுக்கு உத் தரவில்லை; ** கீழ்ப்படிய அவர்களுக்குக் கட்டளையிருக் குது; அப்படியே வேதமுஞ்சொல்லுது.

* க. தீமோ. ௨: ௰௨ ** க. மோ. ௩: ௰௬

௩௫. ஆனால் ஒருகாரியத்தைக் கற்க அவர்களுக்கு மனதுண்டானால், அவ்வீட்டில் தங்களுடைய புருஷருக்கு

கேட்க

கேட்கக்கடவர்கள்; ஏனென்றால் சபையிலே பேசுகிறது ஸ்திரீகளுக்கு அவலட்சணமாயிருக்குது.

௩௬. அல்லாமல் தேவவசனம் உங்களிடத்திலிருந்து புறப்பட்டதோ, அல்லது உங்களண்டைக்கு மாத்திரம் வந்ததோ.

௩௭. ஒருத்தன் தன்னைத் தீர்க்கதரிசியென்றாவது ஆவிக்குரியவனென்றாவது எண்ணினால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகளாயிருக்குதென்று அறிந்துகொள்ளக்கடவான்.

௩௮. ஒருத்தன் அறியாமலிருந்தால் அவன் அறியாமலிருக்கட்டும்.

௩௯. ஆகையால் சகோதரரே, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறதற்கு வாஞ்சையாயிருங்கள், அந்நியபாஷைகளைப் பேசவுந் தடைபண்ணாதேயுங்கோள்.

௪௰. எல்லாம் மரியாதையோடே ஒழுக்கத்தோடே வரிசையுமாக நடக்கக்கடவது.

௰௫. அதிகாரம்.

மரித்தோருடைய உயிர்த்தெழுந்திருக்குதலையில் உண்டான விரோதமான போதகத்தைத் தள்ளிப் போட்டது.

௧. அன்றியுஞ் சகோதரரே நானுங்களுக்குப் பிரசங்கித்ததும் நீங்கள் ஏற்றுக்கொண்டதும் நீங்கள் நிலைநிற்கிறதுமான சுவிசேஷத்தையே உங்களுக்கு அறிவிக்கிறேன்.

௨. நீங்கள் விசுவாசித்தது வீணாயிராமலிருந்தால், நான் உங்களுக்குப் பிரசங்கித்தபிரகாரமாக நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே உங்களுக்கு இரட்சிப்புமுண்டு.

௩. * நானடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததுமானதென்னவென்றால், கிறிஸ்து வேத எழுத்துகளின்படியே நம்முடைய பாவங்களை நிமித்தியமாக மரித்து, * ஏசா. ௫௩: ௰௨.

௪. வேத எழுத்துகளின்படியே அடக்கம்பண்ணப்பட்டு மூன்றாம் நாளிலே எழுந்திருந்து,

௫. * கேப்பாவுக்கும், ** பிறபாடு பன்னிருவருக்குந் தெரிசனையானாரென்கிறதுதானே.

* லூ. ௨௪: ௩௪. ** யோவா. ௨௰: ௰௯. ௨௬.

௬. அதின்பிறகு * அவர் அஞ்ஞூறு சகோதரருக்கு மேற்பட்டவர்களுக்கு ஒருமிக்கத் தெரிசனையானார், அவர்களில் மிச்சமானவர்கள் இந்நாள்வரைக்கும் இருக்கிறார்கள், சிலரோவென்றால் நித்திரையடைந்தார்கள். * மத். ௨௮: ௰௬.

௭. பிறபாடு யாக்கோபுக்கும், அதின் பிறகு அப்போஸ்தலரெல்லாருக்குந் தெரிசனையானார்.

௮. ஆனால் எல்லாருக்குங் கடைசியிலே அழிந்துப் போயிருந்த எனக்குந் * தெரிசனையானார்.

* அப்போ. ௯: ௫. ௨௨: ௰௪. ௨. கொ. ௰௨: ௨.

௯. ஏனென்றால், நான் அப்போஸ்தலரெல்லாரிலுஞ் சிறியவனாயிருக்கிறேன், நான் பராபரனுடைய சபை

யைத்

யைத்துன்பப்படுத்தினபடியினாலே நான் அப்போஸ்
தலனென்னழைக்கப்படப் பாத்திரவானல்ல.

௰. *நானானதோவென்றால் பராபரனுடைய
கிருபையினாலே யிருக்கிறேன்; அவர் என்மேல் வைத்தக்
கிருபையும் விருதாவாயிராமல், நான் அவர்களெல்லா
ரையும் பார்க்க அதிகமாய் உழைத்தேன்; நானோ அல்
ல என்னுடனேயிருக்கும் பராபரனுடைய கிருபையதுவே.

* ௩: ௰.

௰௧. இப்போது நானானாலும் அவர்களானாலுஞ்சரி
இப்படியே பிரசங்கிக்கிறோம்; இப்படியே விசுவா
சித்தீர்கள்.

௰௨. கிறிஸ்து மரித்தோரிலிருந்தெழுந்தாரென்று
பிரசங்கிக்கப்பட்டிருக்கையில், உங்களில் சிலர்
மரித்தோருடைய உயிர்த்தெழுந்திருக்கிறதில்லையென்றெப்ப
டிச் சொல்லுகிறார்கள்.

௰௩. மரித்தோருடைய உயிர்த்தெழுந்திருத்தலில்லாதி
ருந்ததேயானால் கிறிஸ்துவுமெழுந்திருக்கவில்லை.

௰௪. கிறிஸ்து எழுந்திராமலிருந்தாரேயானால்
எங்கள் பிரசங்கமும் அபத்தம், உங்கள் விசுவாசமும்
அபத்தமாமே.

௰௫. மரித்தோரெழுந்திராவிட்டால், நாங்கள் பரா
பரனைப்பற்றியே, அவர் எழுப்பாத கிறிஸ்துவை யெழுப்
பினாரென்று சாட்சிசொன்னதினாலே, பராபரனுடை
ய பொய்ச்சாட்சிக்காரராய்க் காணப்படுவோம்.

௰௬. ஏனென்றால் மரித்தோர் எழுந்திராவிட்டால்
கிறிஸ்துவுமெழுந்திருந்ததில்லை:

௰௭. கிறிஸ்து எழுந்திராமற் போனாரேயாகில்
உங்கள் விசுவாசம் வீணாயிருக்குது; இன்னமுமுங்கள்
பாவங்களிலிருக்கிறீர்கள்.

௰௮. கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களுங்
கெட்டார்கள்.

௰௯. நாம் இம்மைக்காகமாத்திரங் கிறிஸ்துவின்
பேரிலே நம்பிக்கையாயிருந்தாலெல்லா மனுஷரைப்
பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருக்
கிறோம்.

௨௰. இப்போதோவென்றால் கிறிஸ்துமரித்தோரி
லிருந்தெழுந்து நித்திரையடைந்தவர்களுக்கு *முதற்பல
னாகினார். * அப்போ. ௨௬: ௨௩.

௨௧. ஏனென்றால், ஒரு மனுஷனால் மரணமுண்டான
படியினாலே ஒருமனுஷனால் மரித்தோருடைய உயிர்த்
தெழுந்தலுமுண்டாயிருக்குது.

௨௨. அதேதென்றால், ஆதாமுக்குள் எல்லாரும்
மரிக்கிறது போலே கிறிஸ்துவுக்குள் எல்லாரும்
உயிர்ப்பிக்கப்படுவார்கள்.

௨௩. ஆனால் அவனவன் தன்தன்னுடைய வரிசையிலே; த
ன் முதற்பலனாகமானவர் கிறிஸ்து; பிற்பாடு *
அவர் வருகையிலே அவருடையவர்கள் எழுந்திருப்
பார்கள். * அ. ஸீ. ௨௰: ௬.

௨௪. பிற்பாடு, அவர் பராபரனும் பிதாவுமானவ
ருக்கு ராச்சியத்தை ஒப்புக்கொடுக்கும்போதும், எல்

லா

சகல துரைத்தனத்தையும் எல்லா அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரிக்கும்போது/ முடிவுண்டாம்.

௨௫. ஏனென்றால் * எல்லா சத்துருக்களையும் தம்முடைய பாதத்துக்குக் கீழ்ப்போடுமட்டாக/ அவர் ஆளவேண்டியது. * சங்கீ. ௱௰: ௧.

௨௬. * பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம்.
* அபி. ௨௰: ௰௪: ௨௧: ௪.

௨௭. ஏனென்றால் * எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினார் எல்லாங் கீழ்ப்பட்டதென்று சொல்லும்போது/ சகலத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினவர் நீங்கலாயிருக்கிறாரென்பது வெளியரங்கமாயிருக்கிறது. * சங்கீ. ௮: ௭——௯.

௨௮. ஆனால் சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும் பேர்க்குப் பராபரன் எல்லாரிலும் எல்லாமாயிருக்கப் படிக்குக் குமாரனானவர் தாமுந் தமக்கெல்லாத்தையுங் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்படுவார்.

௨௯. மேலும் மரித்தோர் எழுந்திராவிட்டால்/ மரித்தோர் நிமித்தம் ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்ன செய்கிறார்கள்/ மரித்தோர் நிமித்தமென்ன ஞானஸ்நானம் பெறுகிறார்கள்.

௩௰. நாங்களுமேன் எந்நேரமும் நாசமோசத்துக்கேதுவாயிருக்கிறோம்.

௩௧. * அநுதினமும் மரிக்கிறேனென்கிறதை நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறீஸ்துவுக்குள் உங்களைக் குறித்தெனக்கிருக்கும் மேன்மையைக் கொண்டுறுதிப்படுத்துகிறேன்.
* ௨. கொ. ௪: ௰. ௰௧.

௩௨. மரித்தோர் எழுந்திராவிட்டால் நானெபேசுவிலே மனுஷர் வழக்கப்படியே துஷ்டமிருகங்களுடனே போராடினதினாலே எனக்கென்ன பிரயோசனம் * புசிப்போம் குடிப்போம் ஏனென்றால் நாளைக்குச் சாவோமே.
* யெச. ௨௨: ௰௩.

௩௩. மோசம்போகாதேயுங்கோள்/ துர்ச்சம்பாஷணைகள் நற்குணங்களைக் கெடுக்கும்.

௩௪. நீங்கள் பாவஞ்செய்யாமல் உத்தமமாய் முழித்திருங்கோள்/ ஏனென்றால் சிலர் பராபரனை அறியாதிருக்கிறார்கள்/ உங்களுக்கு வெட்கமாகச் சொல்லுகிறேன்.

௩௫. ஆனாலும் ஒருவன்: மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள்/ எப்படிக்கொத்த சரீரத்துடனே வருவார்களென்பான்/

௩௬. மதியற்றவனே/ நீ விதைக்கிறது * மரித்தாலே ஒழிய உயிர்க்கிறதில்லை. * யோவா. ௰௨: ௨௪.

௩௭. நீ விதைக்கும்போது/ விளையப்போகிற மேனியையும் விதையாமல்/ கோதுமையை அல்லது மற்றொரு தானியத்துடைய வெறுமணியை விதைக்கிறாய்.

௩௮. ஆனால் பராபரன் அதற்குத் தமக்குச் சித்தத்தின்படியான மேனியையும்/ விதைகளில் ஒவ்வொன்றுக்கும் அதினதின் சொந்த மேனியையுங் கொடுக்கிறார்.

௩௯. எல்லா மாம்சமும் ஒரே மாம்சமல்ல/ மனுஷருடைய மாம்சம் வேறே/ மிருகங்களு

டைய

டையமாம்ஷமோ வேறே, மச்சங்களுடையதோ வேறே, பறவைகளுடையதோ வேறே.

௪௰. பரத்துக்கடுத்த மேனிகளுமுண்டு, பூமிக்கடுத்த மேனிகளுமுண்டு; ஆனாலும் பரத்து மேனிகளுடைய மகிமை வேறே, பூமிக்கடுத்த மேனிகளுடைய மகிமையோ வேறே.

௪௧. சூரியனுடைய மகிமையும் வேறே, சந்திரனுடைய மகிமையும் வேறே, நட்சத்திரங்களுடைய மகிமையும் வேறே; மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்குது.

௪௨. மரித்தோருடைய உயிர்த்தெழுதலும் அப்படிதானே. அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழியாததாய் எழுந்திருக்கும்.

௪௩. கனவீனமாய் விதைக்கப்படும், * மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பெலவீனமாய் விதைக்கப்படும், பெலமுள்ளதாய் எழுந்திருக்கும். * பிலி. ௩: ௨௰. ௨௧.

௪௪. சீவனுள்ள சரீரம் விதைக்கப்படும், ஆவியான சரீரம் எழுந்திருக்கும்; சீவனுள்ள சரீரமுமுண்டு, ஆவியான சரீரமுமுண்டு.

௪௫. அப்படியும் * முந்தின மனுஷனாகிய ஆதாம் சீவாத்துமாவானான் என்றெழுதியிருக்குது; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார். * ௧. மோ. ௨. ௭.

௪௬. ஆனாலும் ஆவியான சரீரம் முந்தினதாயிராமல், சீவனுள்ள சரீரம் முந்தினதாயிருக்குது; பிற்பாடு ஆவியான சரீரம்.

௪௭. முந்தின மனுஷன் பூமியால் உண்டான மண்ணானவன்; இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர்.

௪௮. மண்ணானவன் எப்படியிருந்தானோ அப்படியே மண்ணானவர்களுமிருக்கிறார்கள். வானவர் எப்படியிருக்கிறாரோ, அப்படியே வானவர்களுமிருக்கிறார்கள்.

௪௯. பின்னும், எப்படி மண்ணானவனுடைய சாயலை அணிந்திருந்தோமோ, அப்படியே வானவருடைய சாயலையும் அணிந்திருப்போம்.

௫௰. ஆகிலும் சகோதரரே, மாம்சமும் இரத்தமும் பரமனுடைய ராட்சியத்தைச் சுதந்தரிக்கமாட்டாது, அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிக்கிறதில்லை என்கிறதைக்குறித்துச் சொல்லுகிறேன்.

௫௧. இதோ ஒரு இரகசியத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன்: * நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை, ஆனாலும் எல்லாரும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது ஒரு கண்ணிமையாண்ட பொழுதிலே மறுரூபமாக்கப்படுவோம். * ௧. தெச. ௪. ௰௫. ௰௭.

௫௨. ஏனென்றால் * எக்காளந் தொனிக்கும், அப்போ மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள், நாமோ மறுரூபமாக்கப்படுவோம்.

* மத். ௨௪: ௩௧.

௫௩. ஏனென்றால் அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், மரணத்துக்குள்ளாகிய இது மரியாமையையும் தரித்துக்கொள்ளவேண்டியது.

௫௪. அழிவுள்ளதாகிய இது அழியாமையையும் மர
ணத்துக்குள்ளாகிய இது மரியாமையையுந் தரித்துக்
கொள்ளும்போதோவென்றால்: மரணம் ஜெயமாக
முழுங்கப்பட்டுதென்றும்,

௫௫. மரணமே, உன் கூர் எங்கே, பாதாளமே, உன
ஜெயமெங்கேயென்றும் * எழுதியிருக்கிற வாக்கியந் நி
றைவேறும். * ஏசா. ௨௫: ௮. ஓசே. ௰௩: ௰௪.

௫௬. மரணத்தின் கூர் பாவம், பாவத்
தின் பெலம் நியாயப்பிரமாணம்.

௫௭. ஆனாலும் நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறீஸ்துவினா
லே நமக்குச் ஜெயங்கொடுக்கிற பராபரனுக்கு ஸ்தோத்தி
ரம்.

௫௮. ஆனபடியினாலே, என் பிரியமான சகோதர
ரே, கர்த்தருக்குள் உங்களுடைய வேலை விருதாவா
யிராதென்றறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களும் அசை
யாதவர்களுமாய்க் கர்த்தருடைய கிரியையிலே எப்போ
தும் பெருகிக்கொண்டிருங்கள்.

௰௬. அதிகாரம்.

பவுல் தருமஞ் சேர்க்கிறதுக்குக் காக்கத் திட்டம்பண்
ணி, நிருபத்தை முடித்துப்போடுது.

பரிசுத்தவான்களுக்காக * சேர்க்கும் தருமங்களுக்
கோவென்றால், கலாத்திய தேசத்துச் சபைகளுக்கு
நான் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்
கோள். * ரோ. ௰௫: ௨௬. ௨௭.

௨. நான் வரும்போது தருமஞ் சேர்க்கிறதாகத் தவணை
க்குப்படிக்கு, உங்களில் அவனவன் வாரத்து * மு
தலாங் கிழமைதோறும் தன்தன் வாழ்வுக்குத் தக்கதாய்த்
தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவான்.
* அப். ௨௰: ௭.

௩. ஆனால் நான் வந்திருக்கும்போது, உங்களுடைய
உபகாரத்தை எருசலேமுக்குக் கொண்டுபோகிறதுக்
கு நீங்கள் நிருபங்களைக் கொடுத்து எவர்களை உத்தம
ரென்று குறிப்பீர்களோ அவர்களை அனுப்புவேன்.

௪. நானும் போகத்தக்கதானால், என்னுடனே
கூடப்போவார்கள்.

௫. நான் மக்கெதோனியாவை உருவ நடந்தபின்பு
தானே உங்களண்டைக்கு வருவேன், ஏனென்றால் மக்
கெதோனியாவை உருவ நடப்பேன்.

௬. ஆனால் நான் எங்கே போனாலும், நீங்கள் என
னை வழிவிட்டனுப்பும்படிக்கு, நான் உங்களிடத்திலே
தரித்திருப்பேனுக்கும், அல்லது மழைகாலத்துக்குந்
தங்குவேன்.

௭. ஏனென்றால் இப்போ வழிப்பயணத்திலே உங்
களைப் பார்க்க எனக்கு மனதில்லை, கர்த்தருடைய
உத்தாரம் இருந்ததேயானால், உங்களிடத்திலே சில
காலந் தரித்திருக்கலாமென்று நம்பியிருக்கிறேன்.

௮. ஆகிலும் எபேசுபட்டணத்திலே பெந்தெகொஸ்தே மட்டும் இருப்பேன்.

௯. ஏனென்றால் பெரிதும் பலனுமான கதவு எனக்குத் திறக்கப்பட்டது; எதிர்க்கிறவர்களும் அநேகருண்டு.

௰. தீமோத்தேயு வந்தானேயாகில் அவன் உங்களிடத்தில் பயமற்றிருக்கப் பாருங்கள். ஏனென்றால் என்னைப்போல அவனும் கர்த்தருடைய கிரியையை நடப்பிக்கிறான்.

௰௧. ஆனபடியினாலே ஒருத்தனும் அவனை அற்பமாய் எண்ணாமல் அவனை சமாதானத்தோடே என்னிடத்துக்கு வரும்படிக்கு வழிவிட்டனுப்புங்கள்; ஏனென்றால் சகோதரரோடுகூட அவனுக்குக் காத்திருக்கிறேன்.

௰௨. சகோதரனாகிய அப்பொல்லோவின் சேதி கொண்டால்: சகோதரரோடுகூட உங்களிடத்துக்கு வர அவனை மெத்தவும் வேண்டிக்கொண்டேன்; ஆனாலிப்போ வர அவனுக்கு மனதேயில்லாதிருந்தது; அவனுக்கு நற்சமயமான போதே வருவான்.

௰௩. முழித்திருங்கள்; விசுவாசத்திலே நிலைத்திருங்கள்; புருஷராயிருங்கள்; பெலனுள்ளவர்களாயிருங்கள்.

௰௪. உங்கள் காரியங்களெல்லாம் சிநேகத்திலே செய்யப்படக்கடவது.

௰௫. சகோதரரே! ஸ்தேப்பானுடைய வீட்டார் அகாயாதேசத்து முதற்பலனாகமான பேர்களென்றும் அவர்கள் பரிசுத்தவான்களுடைய ஊழியத்துக்குத் தங்களை நேமித்தவர்களென்றும் அறிந்திருக்கிறீர்கள்.

௰௬. பேட்டிக்கொத்தவர்களுக்கும் துணையாய்க் கிரியைசெய்து உழைக்கிறயாவருக்கும் நீங்களும் கீழ்ப்பட்டிருந்துகொள்ள உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்.

௰௭. ஸ்தேப்பானும் பொர்த்துனாத்தும் அகாயிக்கும் வந்ததுக்குச் சந்தோஷமாயிருக்கிறேன்; ஏனென்றால் உங்களுடைய குறைவை அவர்கள் நிறைவாக்கினார்கள்.

௰௮. என்னுடைய ஆவியையும் உங்கள் ஆவியையும் இளைப்பாறச்செய்தார்கள். ஆகையால் இப்படிக்கொத்தவர்களை அறிந்துகொள்ளுங்கள்.

௰௯. ஆசியதேசத்துச் சபைகள் உங்களை வாழ்த்துது; ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் தங்கள் வீட்டிலே கூடிய சபையோடுகூட உங்களைக் கர்த்தருக்குள் மிகுதியும் வாழ்த்துகிறார்கள்.

௨௰. சகோதரரெல்லாரும் உங்களை வாழ்த்துகிறார்கள். உங்களை ஒருத்தரை ஒருத்தர் பரிசுத்த முத்தத்தினாலே வாழ்த்திக்கொள்ளுங்கள்.

௨௧. * பவுலாகிய நான் என் கையெழுத்தாய் வாழ்த்துகிறேன். * ௨. தெச. ௩: ௰௭.

௨௨. யாதொருத்தன் கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவை

சிநே

சிநேகியாதேபோனால, அவன சபிககபபடடவனாயிருக ககககடவான. நமமுடைய கறதர வருகிறார.

௨௩. கறதராகிய யேசுகிறிஸதுவினுடைய கிருபை உஙகளுடனேகூட இருககககடவது.

௨௪. கிறிஸது யேசுவுககுளளான எனனுடைய சிநேகம உஙகளெலலாரோடுஙகூடயிருககுது ஆமென.

பிலிபபிபடடணததிலெழுதி, ஸதேவான, பொறது னாதது, அகாயககு, திமொததேயுளளகிறவர்களா லகயிலே கொரிநதியாருககனுபபின முதலாம நிருபம.

அபபோஸதலனாகிய பவுல

கொரிநதியாருககெழுதின

இரணடாமநிருபம.

௧. அதிகாரம.

பராபரனிடததிலுணடான உபகதிரததைபபவுல கொரிநதியாருககறிவிககிறது. அவர்களுக காககததனககுணடானநலலநமபிககை யைககாணபிததும.

பராபரனுடைய சிததததினாலே யேசுகிறிஸதுவினு டைய அபபோஸதலனாகிய பவுலுஞசகோதரனாகிய தீமோததேயுங கொரிநதுபபடடணததிலுளள பராபர னுடைய சபைககும, அகாயாதேசமெஙகுமுளள எல லாபபரிசுததவானகளுககுஙகூடயெழுதுகிறதாவது:

௨. நமமுடைய பிதாவாகிய பராபரனாலுங கறதாகிய யேசுகிறிஸதுவினாலும உஙகளுககுக கிருபையுஞ சமா தானமும உணடாககககடவது

௩. நாஙகள தாமே பராபரனாலே தேறறபபடுந தேறறரவினாலே பலபல உபததிரசததிலுளளவர்க ளைததேறறரவுபணணககூடுமபடிககு,

௪. எஙகளை எஙகளுடைய சகல உபததிரததிலுந தேறறரவுபணணுகிறவரெககஙகளுடையததகபபனும * எலலாததேறறரவுடைய பராபரனுமான நமமுடை கறதர யேசுகிறிஸதுவினுடையபிதாவாகிய பராப ரனதோததிரிககபபடடவர். * ரோ. ௰௫: ௫.

௫. ஏனெனில * கிறிஸதுவினுடையபாடுகளெங கண்மேலேபெருகிறதுபோல, கிறிஸதுவினாலெங களுடையஆறுதலுமபெருகுது. * சஙகீ. ௯௪: ௨௰.

௬. ஆனாலும நாஙகள உபததிரபபடடாலும, அது உங களாறுதலுககாகவும, நாஙகள படுகிற பாடுகெ

ளீர்களோ நீங்களும் பொறுமையாக நிறைசயில் பெல னுக்கு உங்களு ரெட்சிப்புக்காகவுந்தானே. நாங்கள் ஆறுதலடைந்தாலும் அது உங்கள் ஆறுதலுக்காக வும் ரெட்சிப்புக்காகவுந்தானே. உங்களுக்காக எங் களுடைய நம்பிக்கை திடமுமாயிருக்குது.

௭. ஏனென்றால் நீங்கள் பாடுகளிலே பங்காளி களாயிருக்கிறதுபோல ஆறுதலிலேயும் பங்காளி களாயிருப்பீர்களென்று அறிந்திருக்கிறோம்.

௮. ஏனென்றால் சகோதரரே ஆசியாவிலே எங் களுக்கு வந்த எங்களுடைய உபத்திரவத்தை நீங்களறி யாதிருக்க எங்களுக்கு மனதில்லை. அதேதென்றால் பிழைப்போமென்னுமந்தாக்கள் மெத்தச் சந்தேகப் பட்டு தக்கதனையாக பெலத்துக்கு மேற்சின்ன பார மெங்களுக்குண்டாச்சுது. * அப. ௰௯: ௨௩.

௯. ஆனால் நாங்கள் எங்கள் பேரிலல்ல மரித்தோ ரை எழுப்புகிறவராயிருக்கிற தேவனிடத்திலே நம்பிக்கை வைக்கிறதுக்காக மரிக்கிறோமென்கிறதை எங் களுக்குள்ளே தீர்ந்திருந்தது.

௰. அவர் எங்களை அப்படிப்பட்ட மரணத்துக்கு நீங் கலாக்கி விடுவித்தவருமல்லாமல் இனியும் விடுவிக்கிறவருமாயிருக்கிறார்.

௰௧. எங்களுக்காகச் செய்யும் வேண்டுதலினாலே நீங்களுங்கூட உதவியாயிருக்கக்கொள்ளா. * அனேக விசுவாசிகளினாலே மாயிருப்போமென்று அவரை நம்பியிருக் கிறோம். அனேகர் முகாந்திரத்தினாலே எங்களுக்குண் டானவைகளுக்காக அனேகரால் எங்களின் நிமித்திய மாய ஸ்தோத்திரப்பண்டாகும்படியாகத்தானே.

* உ. தீமொ. ௬: ௰௨.

௰௨. ஏனென்றால் நாங்கள் லோகத்திலே விசேஷ மாகவே உங்களிடத்திலே கபடமில்லாமையாயும் தேவனுக்குப் பிரியமாயும் மாம்சத்தின் ஞானத் தோடல்ல பராபரனுடைய கிருபையுடனே கொண்டு சஞ்சரித்தோமென்று எங்கள் மனசாக் ஷிக்குச் சொல்லுகிறதற்கு எங்களுடைய மேன்மையா யிருக்குது.

௰௩. ஏனென்றால் நீங்கள் வாசிக்கிறதும் அறிந்து கொள்ளுகிறதுமான காரியங்களேயல்லாமல் வேறே காரியங்களை உங்களுக்கெழுதோம்.

௰௪. ஆனால் நீங்கள் கர்த்தராகிய யேசுவின் நாளிலே எங்களுடைய மேன்மையாயிருக்கிறாப்போல நாங் களும் உங்களுடைய மேன்மையாயிருக்கிறோமென்று நீங் கள் எங்களை ஏகதேசமாய் அறிந்துகொண்டபடி முடிவுபரியந்தமும் அறிந்து கொள்ளுவீர்களென்று நம்புகிறேன்.

தானுடனே வாராத முகாந்திரத்தைச்
சொன்னது.

௰௫. இந்த நம்பிக்கையிலே நான் உங்களுக்கிரண் டாம் உபகாரமுண்டாக முந்த உங்களண்டைக்கு வரவும்,

௰௬. உங்கள் ஊர்வழியாக மக்கெதோனியா

வுக்கு

வசுடுப்போகவும் அப்படியும் மக்கெதோனியாவி
லிருந்து உங்களண்டைக்கு வரவும் உங்களால் யூதே
யாவுக்கு வழிவிடப்பட்டு வரவும் யோசனையா
யிருந்தேன்.

௰௭. இப்படியோசனையும நானெப்படி யோசித்துப்பாக்க
காயமே யோசித்தேனோ அல்லது ஆமாமென்கிறதும
அல்லவல்லவென்கிறதுமென்னிடத்திலே உண்டாய
ருக்கும்படியாக நான் யாதொன்றைச் சரீர வல்லமையா
லெழுத்தின்படியே யோசிக்கிறேனோ.

௰௮. நானுங்களுக்குப் பிரசங்கித்த வாக்கு
யோடுமாமென்றும் அல்லவென்றுமிருந்த
தில்லையென்கிறதுக்குப் பராபரனுடைய உண்மையே
சாட்சி.

௰௯. ஏனென்றால் அதெப்படியென்றா
ல் சில்வானாலும் தீமோத்தேயுவினாலும் உங்க
ளுக்கு நான் பிரசங்கிக்கப்பட்ட பராபரனுடைய குமா
ரனாகிய யேசுக்கிறீஸ்து ஆமாமென்றும் அல்லவென்றும
இராமல் அவரிடத்தில் ஆமென்றிருக்குது.

௨௰. ஏனென்றால் எங்களாலே கொண்டு பராபர
னுக்குமகிமையுண்டாகும்படிக்குப் பராபரனுடைய வாக்குத்
தத்தங்களெல்லாம் அவரிடத்தில் ஆமென்றும் அவரால
ஆமென்றுமிருக்குது.

௨௰௧. ஆனாலெங்களை உங்களோடே கூடக் கிறீஸ்து
வுக்குள்ளே ஸ்திரப்படுத்துகிறவரும் நம்மை அபிஷேகம்
பண்ணினவரும் பராபரன்.

௨௰௨. அவர் நம்மை முத்திரை போட்டவருமாய் நம்முடை
இருதயங்களில் ஆவியென்கிற அச்சாரத்தைக் கொடுத்தவ
ருமாமே. எபே. ௧: ௰௩. ௰௪. ௪: ௩௰.

௨௰௩. நானோவென்றால் உங்களைத் தப்புவிக்கப்பார்த்து
கொரிந்துப்பட்டணத்துக்கின்னம் வராதிருந்தேனெ
ன்கிறதுக்குப் பராபரனை என் ஆத்துமத்தின்மேல
சாட்சியாக வைக்கிறேன்.

௨௰௪. நாங்கள் உங்கள் விசுவாசத்துக்குச் சமஸ்தானங்கள
ென்கிறதில்லை அல்லவா உங்கள் சந்தோஷத்துக்கு உத
வியாளர்களாயிருக்கிறோம். ஏனென்றால் விசுவாசத்தி
லே நிலைநிற்கிறீர்கள். ௧. பேது. ௫: ௩.

௨. அதிகாரம்.

மகா துக்கமடைந்த பெரும்பாவிக்கு
மன்னிக்கப்படவேணுமென்கிறது.

ஆனாலானுங்களண்டையில் மறுபடியுந்துக்கத்
தோடே வராதிருக்கும்படி எனக்குள்ளே தீர்த்துக்
கொண்டேன்.

௨. ஏனென்றால் நான் உங்களைத் துக்கப்படுத்தினால
என்னாலே துக்கப்பட்டவனே அல்லாமல் என்னைச்சந
தோஷப்படுத்துகிறவர்.

௩. நான் வந்து சந்தோஷம் அடையவேண்டியவர

களால் துக்கமடையாதபடிக்கு, இந்தக் காரியத்தை உங்களுக்கெழுதியிருந்தேன்; என்னிலே என்னுடைய சந்தோஷம் உங்களெல்லாருடைய சந்தோஷமாயிருக்குமென்கிற நம்பிக்கை எனக்கு உங்களெல்லாரைப்பற்றியுமிருக்குது.

௪. ஏனென்றால் வெகுவியாகுலமும் மனநெருக்கமுமுள்ளவனாய் வெகு கண்ணீரோடே உங்களுக்கெழுதினேன்; நீங்கள் துக்கப்படவல்ல, உங்கள் பேரிலே விசேஷமாக எனக்கிருக்குஞ் சிநேகத்தை நீங்கள் அறியத்தானே.

௫. ஆனாலொருவன் உங்களெல்லார் பேரிலும் பாரத்தைச் சுமத்தாதபடிக்கு, ஒருத்தன் துக்கமுண்டாக்கியிருந்தால், அவன் என்னைத் துக்கப்படுத்தினதில்லை, ஏதொரு பங்குக்குமாத்திரந் துக்கப்படுத்தினான்.

௬. அநேகராலுண்டான இந்தக் கண்டிதம் அப்படிக்கொத்தவனுக்குப் போதும்.

௭. அதினுக்கெதிராய் அப்படிக்கொத்தவன் முழுங்கப்படாதபடிக்கு, அதுக்குவிட நீங்கள் அவனை மன்னித்துத் தேறுதலும் பண்ணவேண்டும்.

௮. ஆகையினாலே நீங்கள் அவனுக்குச் சிநேகத்தைக் காண்பிக்க உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

௯. ஏனென்றால் நீங்கள் எல்லாத்திலுங் கீழ்ப்படிந்திருக்கிறீர்களோ என்று உங்கள் உத்தமகுணத்தை அறியும்படி எழுதியிருந்தேன்.

௰. ஆனால் எவனுக்கு யாதொன்றை மன்னிக்கிறீர்களோ, அவனுக்கு நானும் மன்னிக்கிறேன்; ஏனென்றால் நானும் ஒருத்தனுக்கு யாதொன்றை மன்னித்திருந்தால், அதைக் கிறிஸ்துவின் சமுகத்திலே உங்களுக்காக மன்னித்தேன்; சாத்தானாலே நாம் நஷ்டப்பட்டுப்போகாதபடிக்குத்தானே.

௰௧. ஏனென்றால் அவனுடைய நினைவுகள் எங்களுக்குத் தெரியாததல்ல.

தன்னுடைய ஊழியத்துக்குப் பராபரன் கட
டளையிட்டு வருகிற ஆசீர்வாதத்
தைக் குறித்துச் சொன்னது.

௰௨. நான் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க * துரோவாவுக்கு வந்தபோது, கர்த்தருக்குள் எனக்குக் கதவு திறக்கப்பட்டபோதோவெனில், நான் என் சகோதரனாகிய தீத்துவைக் காணாததினாலே என் ஆவியிலே எனக்கு இளைப்பாறுதலே இல்லாதிருந்தது. * அப்போ. ௧௬: ௮.

௰௩. நான் அவர்களை விட்டுப் பிரிந்துகொண்டு மக்கெதோனியாவுக்குப் பிறப்பட்டுப்போனேன்.

௰௪. ஆனால் கிறிஸ்துவுக்குள் எப்போதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணுகிறவரும், எல்லாவிடத்திலும் எங்களைக்கொண்டு தம்முடைய அறிவினுடைய வாசனையை வெளிப்படுத்துகிற பராபரனுக்கே ஸ்தோத்திரம்.

௰௫. ஏனென்றால் ரட்சிக்கப்படுகிறவர்களுக்

குள

ளேயும் கெட்டுப்போறவர்களுக்குள்ளேயும் பராபரனுக்கு நாங்கள் கிறீஸ்துவின் நறுங்கந்தமாயிருக்கிறோம்.

௰௬. இவர்களுக்கோ மரணத்துக்கு மரணவாசனையும், அவர்களுக்கோ சீவனுக்குச் சீவவாசனையுமாகத் திரேன். ஆனா இதுகளுக்கு *சமர்த்தனார். ௩: ௫.

௰௭. ஏனென்றால் நாங்கள் அனேகரைப்போலே பராபரனுடைய வசனத்தைக் கலப்படமாக்குகிறவர்களாயிராமல், பராபரனுக்கு முன்பாகக் கிறீஸ்துவுக்குள்ளது ப்பரவாகவும் பராபரனாலுண்டானதாகவும் பேசுகிறோம்.

௩. அதிகாரம்.

தன்னுடைய விசேஷ ஊழியத்திலே கொரிந்தியார் குணப்பட்டுத் தப்பவுறு அவர்களுக்கு நிருபமானது.

எங்களைத் தானே நாங்கள் மறுபடியும் மெச்சிக்கொள்ளத் துவக்குகிறோமோ? அல்லது சிலருக்குத் தேவையானதுபோல உங்களண்டைக்கு ஒப்புமெய்ப்பானத் திருபங்களும், உங்களண்டையிலே வாங்கும் மெய்ப்பானத் திருபங்கள் எங்களுக்குத் தேவையாயிருக்குதோ.

௨. எங்கள் இருதயங்களிலே எழுதப்பட்டு, சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்படும் எங்களுடைய நிருபம் நீங்கள்தானே.

௩. ஏனென்றால் நீங்கள் எங்கள் ஊழியத்தினாலே உண்டாகி, மையினாலல்ல, சீவனுள்ள பராபரனுடைய ஆவியினாலே கற்பலகைகளிலல்ல, இருதயத்தின் சதையான பலகைகளிலே எழுதப்பட்ட கிறீஸ்துவினுடைய நிருபமென்று வெளியாக்கப்படுகிறீர்கள்.

* யெரே. ௩௧: ௩௩. எசேக். ௩௬: ௨௬. ௨௭.

௪. ஆனாலும் இப்படிக்கொத்த நம்பிக்கை கிறீஸ்துவினாலே எங்களுக்குப் பராபரன்மேலிருக்குது.

௫. நாங்கள் யாதொன்றை நினைக்க *எங்களாலே தானே சமர்த்தராயிருக்கிறோமென்கிறதில்லை, எங்களுடைய சமர்த்தியம் பராபரனாலே உண்டாயிருக்குது.

* பிலி. ௨: ௰௩.

௬. அவர் எங்களைப் புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கவுஞ் சமர்த்தராக்கினார், எழுத்தினுடைய ஊழியக்காரராயிருக்கவல்ல, ஆவியினுடைய ஊழியக்காரராயிருக்கத்தானே. ஏனென்றால் எழுத்துக் கொல்லுது, ஆவியோ உயிர்ப்பிக்குது.

நியாயப்பிரமாணத்தின் போதகத்தைப் பார்க்கச் சுவிசேஷப் போதகம் மிக மேன்மையானதென்று காணப்பிக்குது.

௭. கல்லுகளிலே பதிந்து எழுத்துகளிலே அடங்கிய

மரணத்துக்குடைய ஊழியம் மகிமையுள்ளதாயிருந்து, மோசேயினுடைய முகத்திலுள்ள ஒழிந்துபோகிற மகிமையினிமித்தம் இஸ்ரவேல் புத்திரர் அவன் முகத்தை நோக்கிப்பார்க்கக்கூடாதிருந்ததேயானால்,

* ௨. மோ. ௩௪: ௩௰.

௮. எத்தனை அதிகமாய் ஆவியினுடைய ஊழியம் மகிமையுள்ளதாயிருக்கும். * ரோ. ௮: ௰௫. ௰௬.

௯. ஆக்கினைத்தீர்ப்புக்குள்ளாக்குதலின் ஊழியம் மகிமையானால், அதிகமாய் நீதியாக்குதலின் ஊழியம் மகிமையிலே பெருகுகிறது.

* ரோ. ௧: ௰௬. ௰௭.

௰. அப்படியே இதின் அதிகப்பிரகாசமாய்ப்பார்த்தால் மகிமைப்பட்டிருந்ததும் இந்த மேன்மையான மகிமையினாலே மகிமைப்பட்டதுமல்ல;

௰௧. ஏனெனில் ஒழிந்துபோவது மகிமையோடிருந்ததானால், அதிகமாய் நிலைநிற்கிறது மகிமையுள்ளதாயிருக்கும்.

௰௨. இப்போதும் இப்படிச் சொன்ன நம்பிக்கையெங்களுக்கு உண்டாயிருக்கிறதினாலே, வெகுதாராளமாய்ப் பேசுகிறவர்களாயிருக்கிறோம்.

௰௩. நீங்கிப்போகிறதின் முடிவை இஸ்ரவேல் புத்திரர் நோக்கிப்பாராதபடியாக மோசே தன் முகத்தின்மேல் முக்காடுபோட்டது போல நாங்கள் போடோம். * ௨. மோ. ௩௪: ௩௩—௩௫.

௰௪. அவர்களுடைய சிந்தைகளோவென்றால் கடினப்பட்டது; ஏனென்றால் இந்நாள்வரைக்கும் பழைய ஏற்பாட்டின் புஸ்தகம் வாசிக்கப்படும்போது அந்த முக்காடு நீங்காததாய் மூடியிருக்குது. அது கிறிஸ்துவினாலே நீங்கிப்போம். * ரோ. ௬: ௰.

௰௫. இந்நாள்வரைக்கும் மோசேயினாகமங்கள் வாசிக்கப்படும்போது, முக்காடு அவர்கள் இருதயத்தின்மேல் மூடிக்கிடக்குது.

௰௬. * அவர்கள் கர்த்தரண்டைக்கு மனந்திரும்பும்போதோவென்றால் முக்காடு எடுபட்டுப்போம்.

* ரோ. ௰௧: ௨௩. ௨௫. ௨௬.

௰௭. கர்த்தரோவென்றால் ஆவியாயிருக்கிறார்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலை உண்டு.

* யோவா. ௪: ௨௪.

௰௮. நாமோவென்றால் எல்லாரும் * திறந்தமுகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறாப்போலேகண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையாய் மறுரூபப்படுகிறோம். * யோவா. ௧: ௰௪.

௪. அதிகாரம்.

தேவனுடைய மகிமையான சுவிசேஷப்போதகத்தின் ஊழியத்திலே யோக்கியமானது.

[illegible] உங்களிடத்தி [illegible] சிபாரிசு நிருபங்கள் [illegible] வேண்டியதோ [illegible]

௨. * [illegible] எழுதப்பட்டு [illegible] எல்லா மனுஷராலும் அறியப்பட்டு வாசிக்கப்பட்டுமிருக்கிற [illegible] நிருபமாயிருக்கிறீர்கள். * ௧. கொரி. ௯: ௨—௫.

௩. * [illegible] கிறிஸ்துவினுடைய நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்கமாயிருக்கிறது. * ௨. கொரி. ௨: ௰.

௪. [illegible] கிறிஸ்துவின் மூலமாய் தேவனைப்பற்றி எங்களுக்கு இப்படிப்பட்ட நம்பிக்கை உண்டு. * [illegible] ௩: ௨. ** [illegible] ௰௪: ௰௩.

௫. ஏனெனில் [illegible] எங்களாலே [illegible] ஒன்றை யோசிக்கிறதற்கு [illegible] யோக்கியமானவர்களல்ல; எங்களுடைய யோக்கியம் தேவனாலே உண்டாயிருக்கிறது.

௬. [illegible] புதிய உடன்படிக்கையின் [illegible] அவர் எங்களை [illegible] ஆவிக்கே [illegible] யோக்கியமாக்கினார் [illegible] * ௧. யோ. ௧: ௰.

௭. [illegible] மோசேயினுடைய [illegible] இஸ்ரவேல் புத்திரர் [illegible] அடைந்திருக்கிறோம். * ௧. கொரி. ௨: ௪. ௫.

௮. [illegible] நீதியுண்டாக்குகிற ஊழியம் [illegible]

௯. [illegible] [illegible]

௰. [illegible] அப்படியே [illegible] * [illegible] ௩௪: ௨௯. ௩௦.

௰௧. ஏனெனில் [illegible] சீவனுள்ள [illegible] வெளியரங்கமா [illegible] கொடுக்கப்பட்டிருக்கிறது.

௰௨. அப்படிப்பட்ட [illegible] சீவனுள்ள [illegible]

௰௩. [illegible] * [illegible] அவிசுவாசத்து [illegible]

ணியே நாங்களும் பெற்றிருந்து நாங்களும் விசுவாசிக்கி
றோம், ஆகையினாலே நாங்களும் பேசுகிறோம்.

* சங். ௱௰௬: ௰.

௰௪. ஏனென்றால் கர்த்தராகிய யேசுவை எழுப்பினவர்
* எங்களையும் யேசுவைக்கொண்டே எழுப்பி உங்க
ளோடேகூடத் தமக்கு முன்பாக நிறுத்துவாரென்று அறிந்
திருக்கிறோம். * ரோ. அ: ௰௧.

௰௫. ஏனென்றால் திரளானவர்களுடைய அனேகருடை
ய ஸ்தோத்திரத்தினாலே பராபரனுடைய மகிமைக்கென்
று பெருகும்படிக்கு, இதுகளெல்லாம் உங்களுக்
காகச் சம்பவிக்குது.

௰௬. ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்துபோகிறதில்லை,
புறம்பான எங்கள் மனுஷன் அழிந்தாலும் உள்ளானவன்
நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறான்.

௰௭. ஏனென்றால் * அதிசீக்கிரமாய் நீங்கும் லேசா
னதும் முடிவுபட்டதுமான ** உபத்திரவம் மேன்மையாயி
ருக்கும் நித்தியமான கனமகிமையை நமக்குண்டாக்கு
து. சங்கீ. ௩௰: ௫. ** ரோ. அ: ௰௮.

௰௮. காணப்படுகிறவைகளை அல்ல, காணப்படாத
துகளை நோக்கியிருக்கிற நமக்குத்தானே. ஏனென்றால்
காணப்படுகிறதுகள் அநித்தியம், காணப்படாததுக
ளோ நித்தியமாயிருக்குது.

௫. அதிகாரம்.

மனுஷருடைய நோக்கமிருக்கிற தேவவீடு உண்
மையாயிருக்கிற பரவாசத்தைக் குறித்துச் சொல்லுகிறது
பிரசங்கிக்கிறமென்றது.

அதேதென்னில் பூமிக்கடுத்த கூடாரமாகிய நம்முடைய வீடு
இடிந்துபோனாலும், * பராபரனால் கட்டப்பட்டதும் கைவே
லையல்லாததும் நித்திய வீடு நமக்குப் பரமண்டலங்களிலே
இருக்குதென்று அறிந்திருக்கிறோம்.

* யோ. ௰௪: ௨.

௨. ஏனென்றால் இதிலே * நாம் தவிக்கிறோம், நம்முடைய பரம
குடியிருப்பைத் தரித்துக்கொள்ள வாஞ்சையாயிருக்கி
றோம். * ரோ. அ: ௨௩.

௩. நாம் * நிர்வாணிகளாகக் காணப்படாமல் உடுத்தவர்களாக
கண்டுபிடிக்கப்படலாம்படியாம்.

அபி. ௰௬: ௧௫.

௪. அதேதென்னால் இந்தக் கூடாரத்திலிருக்கிற நாம் பாரஞ்
சுமந்து தவிக்கிறோம்; ஏனென்றால் நாம் உரிந்துபோடப்
படவேண்டுமென்கிறதல்ல, மரணத்துக்குள்ளானது ஜீ
வனாலே விழுங்கப்படுவதற்கு உடுத்தப்படவேண்டுமென்
கிறோம்.

௫. இதுக்கு நம்மை ஆயத்தப்படுத்தினவர் தேவனே,
அவர் தம்முடைய * ஆவியென்னும் அச்சாரத்தையும்
நமக்குத் தந்தார். * எபே. ௧: ௰௪.

௬. ஆகை

௬. ஆகையினாலே நாமெப்போதுந் திடனாயிருந்து, நாம் சரீரத்தில் குடியிருக்குமட்டுங் கர்த்தரிடத்திலே சேராத பரதேசிகளாயிருக்கிறோமென்றறிந்திருக்கிறோம்.

௭. ஏனெனில் * தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம். * ரோ. ௮: ௨௪. ௨௫.

௮. ஆனாலு நாம் திடனாயிருந்து, சரீரத்துக்குப் புறம்பாய்ப் பரதேசம்போகவும், கர்த்தரண்டையிலே குடியிருக்கவும் அதிக விருப்பமாயிருக்கிறோம்.

௯. ஆகையால் நாம் குடியிருந்தாலும் பரதேசிகளாயிருந்தாலும், அவருக்குகந்தவர்களாயிருக்குங்கனத்தைத் தேடுகிறோம்.

௰. ஏனென்றால் அவனவன் தன் சரீரத்திலே நடப்பித்த நன்மைக்காகிலுந் தின்மைக்காகிலுந் தக்கதுக்குச்சரி அடையும்படிக்கு, நாமெல்லாரும் * கிறிஸ்துவினுடைய நியாயாசனத்துக்கு முன்பாக வெளிப்படவேண்டியது. * மத். ௨௫: ௩௧. ௩௨.

௰௧. ஆனபடியினாலே * கர்த்தருடைய பயங்கரத்தை அறிந்திருந்து, மனுஷரைப் போதிக்கிறோம், பராபரனுக்கோவென்றால் வெளியரங்கமாயிருக்கிறோம், ஆனாலும் உங்கள் மனச்சாட்சிகளிலும் வெளியரங்கமாயிருக்கிறோமென்று நம்புகிறேன்.

* ௨. பேது. ௩: ௰—௰௨.

௰௨. ஏனென்றால் நாங்கள் மறுபடியும் உங்களுக்கு முன்பாக மெச்சிக்கொள்ளாமல், இருதயத்தாலல்லவே வெளிவேஷத்தால் மேன்மைபாராட்டுகிறவர்களுக்குக் கேற்ற உத்தரங்களுக்காக மேன்மைபாராட்டுகை உங்களுக்குண்டாக உங்களுக்கிடம் பண்ணுகிறோம்.

௰௩. ஏனெனில் நாங்கள் பிரமைகொண்டவர்களாயிருந்தாலும் பராபரனுக்காகத்தானே, புத்தியாயிருந்தாலும் உங்களுக்காகவேயிருக்கிறோம்.

௰௪. ஏனென்றால் கிறிஸ்துவினுடைய சிநேகம் எங்களை நெருக்குகிறது; ஏனென்றால் * எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருந்தால், எல்லாரும் மரித்தார்களென்று நிதானிக்கிறோம். * ௧: தீமோ: ௨: ௫.

௰௫. * பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைக்காமல், தங்களுக்காக மரித்தெழுந்தவருக்கென்று பிழைக்கும்படிக்கு அவர் எல்லாருக்காகவும் மரித்தார்.

* ரோ. ௰௪: ௭—௯.

௰௬. ஆனபடியினாலே நாம் இதுமுதற்கொண்டு ஒருவனையும் மாம்சத்தின்படியாய் அறியோம்; நாம் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படியாய் அறிந்திருந்தோமானாலும், இப்போதினி அப்படியாக அறியோம்.

௰௭. ஆகையால் ஒருத்தன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், * புதுச்சிருஷ்டியாயிருக்கிறான். பழையதுகளொழிந்து போச்சுது, ** இதோ எல்லாம் புதிதாச்சுது.

* கலா. ௬: ௰௫. ** அபி. ௨௧: ௫.

௰௮. ஆனாலே யாவுங் கிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்குக் கொடுத்த பராபரனாலே இதெல்லாமும் உண்டாயிற்று.

௰௯. அதேதென்றால் பராபரன் கிறிஸ்துவுக்குள்ளிருந்து, லோகத்தாரின் பாவங்களை அவர்கள்மேல் சுமத்தாமல், லோகத்தைத் தமக்கு ஒப்புரவாக்கிக்கொண்டு ஒப்புரவாக்குதலின் வசனத்தை எங்களுக்குள்ளே வைத்தார்.

௨௰. ஆனபடியினாலே, பராபரன் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதாய், நாங்கள் கிறிஸ்துவுக்காகத் தானாபதிகளாயிருந்து: பராபரனோடே ஒப்புரவாகுங்கோளென்று கிறிஸ்துவுக்குப் பதிலாக வேண்டிக்கொள்ளுகிறோம்.

௨௧. ஏனென்றால் * நாம் அவருக்குள் பராபரனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காக ** பாவமாக்கினார். * எரே. ௨௩: ௬. ௧. கொரி. ௧: ௩௰. ** யெசா. ௫௩: ௪—௬.

௬. அதிகாரம்.

பராபரனுடைய கிருபையைக் கேட்கப்பிரிக்கத்
மாயந்தக்கருத்துக்குப் பவுலு கொடுக்குந்த
யானுரத்தின் மாதிரியுஞ் சொல்லினது.

ஆனால் நீங்கள் பராபரனுடைய கிருபையை வீணாகக் கேட்டுப்பெற்றவர்களாயிராதபடிக்கு நாங்கள் * உடன் வேலையாள்களாய் புத்திசொல்லுகிறோம்.

* ௧. கொரி. ௩: ௯.

௨. ஏனென்றால்: * பிரியமான காலத்திலே உன் வேண்டுதலைக்கேட்டு, ரட்சிப்பின் நாளிலே உனக்கு ஒத்தாசை பண்ணினேனென்கிறார். இதோ இப்போது நற்பிரியமான காலம், இதோ இப்போது ரட்சிப்பினுடைய நாள். * யெசா. ௪௯: ௮.

௩. ஊழியம் நிந்திக்கப்படாதபடிக்கு, நாங்கள் ஒன்றிலுமொருவருக்கு இடறலுண்டாக்காமல்,

௪. எல்லாத்திலேயும் எங்களைப் பராபரனுடைய ஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறோம். வெகு பொறுமையிலேயும் உபத்திரவங்களிலேயும், அவசியங்களிலேயும் நெருக்கங்களிலேயும்,

௫. * அடிகளிலேயுங் காவல்களிலேயும், கலாதிகளிலேயும் பிரயாசங்களிலேயும், கண்முழிப்புகளிலேயும் உபவாசங்களிலேயும், * ௧௧: ௨௪. ௨௫.

௬. கற்பிலேயும் அறிவிலேயும், நீடிய சாந்தத்திலேயும் தயவிலேயும், பரிசுத்தஆவியிலேயும், மாயமற்ற சிநேகத்திலேயும்,

௭. சத்தியத்தினுடைய வசனத்திலேயும், பராபரனுடைய பெலத்திலேயும், நீதியினுடைய வலதுபக்கத்தாயுதங்களாயுதங்களிலேயும்,

௮. கனத்திலும் கனயீனத்திலும், அவகீர்த்தியிலும்
நற்கீர்த்தியிலுந்தானே. எத்தராகக் காணப்பட்டுஞ் சத்
தியவான்களாயிருக்கிறோம். * மத். ௨௭: ௬௩.

௯. அறியப்படாதவர்களாகக் காணப்பட்டும் அறிந்
துகொள்ளப்படுகிறோம், மரிக்கிறவர்களாகக்
காணப்பட்டும், இதோ பிழைக்கிறோம், தண்டிக்
கப்பட்டவர்களாகக் காணப்பட்டும், கொலையுண்
ணாதிருக்கிறோம்.

௰. துக்கப்படுகிறவர்களாகக் காணப்பட்டும், எப்ப
ொழுதுஞ் சந்தோஷப்படுகிறோம், தரித்திரராகக் காணப்
பட்டும், அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறோம்,
ஒன்றுமில்லாதவர்களாகக் காணப்பட்டும், எல்
லாவற்றையும் உடையவர்களாயிருக்கிறோம்.

௰௧. கொரிந்தியரே, எங்கள் வாய் உங்களோடே
பேசத் திறந்திருக்குது, எங்கள் இருதயம் விரிவாச்சுது.

௰௨. எங்களுக்குள் நீங்கள் நெருங்கியிராமல் உங்கள்
உள்ளத்திலே நெருக்கமாயிருக்கிறீர்கள்.

௰௩. ஆனாலதற்கீடாக நீங்களும் விரிவாகுங்கோ
ளென்று * பிள்ளைகளுக்குச் சொல்லுகிறாப்போலே
யாய்ச் சொல்லுகிறேன். * ௧ கொ. ௪: ௰௪.

௰௪. * அன்னிய நுகத்தடியிலே அவிசுவாசிகளோடே பி
ணைக்கப்படாதேயுங்கோள், நீதிக்கும் அக்
கிரமத்துக்கும் பங்கேடேது, ** இருளுக்கும் வெளிச்சத்
துக்கும் ஐக்கியமேது. * ௨. மோ. ௩௪: ௰௨. ** எபே.
௫: ௰௧.

௰௫. பேலியாளுடனே கிறிஸ்துவுக்கு இசைவுமேது,
அல்லது அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது.

௰௬. விக்கிரகங்களுடனே பராபரனுடைய தேவ
ாலயத்துக்குக் கோவைவதுமேது, ஏனென்றால்: * நாம்
அவர்களுக்குள் வாசம்பண்ணி, அவர்களுக்குள் உலா
வி, அவர்களுடைய பராபரனாயிருப்போம், அவர்கள்
நமக்குச் சனமாயிருப்பார்கள் என்று பராபரன்
சொன்னபடி, நீங்கள் ** சீவனுள்ள பராபரனுடைய
தேவாலயமாயிருக்கிறீர்கள்.

* ௩. மோ. ௨௬: ௰௨. ** ௧. கொ. ௩: ௰௬.

௰௭. * ஆனபடியினாலே நீங்கள் அவர்களின் நடுவிலிருந்
து புறப்பட்டு, பிரிந்துபோய், அசுத்தமானதைத்
தொடாதிருங்கோள் என்று கர்த்தர் சொல்லுகிறார்;
அப்போது நான் உங்களைச் சேர்த்துக்கொண்டு,

* ஏசா. ௫௨: ௰௧. அறி. ௰௮: ௪.

௰௮. உங்களுக்குப் பிதாவாயிருப்போம், நீங்கள் நமக்
குக் குமாரருங் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று * ச
ர்வத்துக்கும் வல்ல கர்த்தர் சொல்லுகிறார்.

* சங்கீ. ௱௩: ௰௩. யெரே. ௩௧: ௯. ௨௰.

௭. அதிகாரம்.

தானுடைக் கடிந்துகொள்ளுதல்களை அவர்
கள் ஏற்றுக்கொண்டதே வெகு நன்

மான

மானதுக்கமடைந்ததினாலே தனக்குண்டான ஆறுதலைப் பவுல் காண்பித்தது.

இப்போதும், பிரியமானவர்களே, இப்படிக்கொத்த வாக்குத்தத்தங்களை நமக்குண்டாயிருக்கக்கொள்ள, மாங்கிஷத்திலும் ஆவியிலுமுண்டான எல்லாக் கறையுமற நீங்க நம்மை நாம் சுத்திசரிக்கக்கொண்டு, பரிசுத்தமாகுதலை தேவபயத்துடனே நிறைவேற்றக்கடவோம்.

௨ எங்களுக்கிடங்கொடுங்கோள், நாங்களொருத்தனுக்குமக்கிரமஞ்செய்ததில்லை, ஒருத்தனையுங்கெடுத்ததில்லை, ஒருத்தனிடத்திலும் பொருளைத் தேடினதில்லை.

௩ உங்களைக்குற்றவாளிகளாக்கத்தக்கதாகச் சொல்லேனே, ஏனென்றால் கூடச்சாகவுங் கூடப்பிழைக்கவுந்தக்கதாய் நீங்கள் எங்களிருதயங்களிலிருக்கிறீர்களென்று முன் சொன்னேனே. * ௬: ௰௪. ௰௨.

௪ உங்களுடனே வெகுதயிரியமாய்ப் பேசுகிறேன், உங்களைக்குறித்து மிகவும் பெருமைபாராட்டுகிறேன், ஆறுதலால் நிறைந்திருக்கிறேன், எங்களுடைய சகல உபத்திரவத்திலும் பரிபூரண சந்தோஷமாயிருக்கிறேன்.

௫. ஏதென்றால் நாங்கள் மக்கெதோனியாவிலே வந்தபோது எங்கள் மாங்கிஷத்துக்குச் சுயாப்பாறுதலொன்றுமில்லாமல் எல்லாத்திலும் உபத்திரபட்டோம், புறம்பே போர்கள், உள்ளே பயங்களிருந்தது.

௬ ஆனால் * தாழ்மையானவர்களைத் தேற்றரவுபண்ணுகிற பராபரன் தீத்து வந்ததினாலே எங்களைத் தேற்றரவுபண்ணினார். * ௧: ௪ ௫.

௭. அவன் வந்ததினாலே மாத்திரமோ அல்ல, அவன் உங்களாலடைந்த ஆறுதலினாலுந்தானே, அவனெங்களுக்கு உங்கள் வாஞ்சையையும், உங்கள் புலம்புதலையுமெனக்காக உங்களுக்குள்ள பக்திவயிராக்கியத்தையுமெங்களுக்குக் காண்பித்தான், அதினாலே அதிகமாய் சந்தோஷப்பட்டேன்.

௮. ஏதென்றால் * நான் நிருபத்தினாலே உங்களைத்துக்கப்படுத்தியிருந்தும், மனஸ்தாபப்படேன், அந்தநிருபங்கொஞ்சப்பொழுதாகிலுமுங்களைத்துக்கப்படுத்தினதென்று கண்டு நான் மனஸ்தாபப்பட்டிருந்தாலும், * ௨: ௪.

௯. இப்போ சந்தோஷப்படுகிறேன், நீங்கள் துக்கப்பட்டதுக்கல்ல, நீங்கள் குணப்படத்தக்கதாய்த் துக்கப்பட்டதுக்குத்தானே. ஏனென்றால் நீங்கள் என்னாலுமொன்றாலும் நஷ்டப்படாதபடியாய், தேவனுக்கேற்றமான துக்கமடைந்தீர்கள்.

௰ ஏனென்றால் * தேவனுக்கேற்றமான துக்கம் பின்பு மனஸ்தாபமற்ற குணப்படுதலை ரெட்சிப்புக்கிடமாக உண்டாக்குது, * * லோகத்துக்கமோ மரணத்தையுண்டாக்குது.

* மத. ௫: ௪. * * ௧. தீமோ. ௬: ௰.
௰௧. ௭௮

௰௧. ஏனெனில் இதோ, நீங்கள் தெய்வேற்றவிதமான துக்கம் அடைந்ததே உங்களிடத்திலே எத்தனை சாக்கிரதையையும், எத்தனை குணக்கேடுபடிக்குச் சொல்லையும், எத்தனை காங்கையையும், எத்தனை பயத்தையும், எத்தனை வாஞ்சையையும், எத்தனை பத்திவைராக்கியத்தையும், எத்தனை சரிக்குச்சரிகட்டுதலையும் உண்டாக்கிற்று; அந்தக் காரியத்திலே உங்களைச் சுத்தவாளர்களென்று எல்லாத்திலும் விளங்கப்பண்ணினீர்கள்.

௰௨. ஆகையினாலே நான் உங்களுக்கு எழுதியிருந்தும் அநியாயஞ்செய்தவன் நிமித்தியுமல்ல, அநியாயஞ் செய்யப்பட்டவன் நிமித்தியுமல்ல; உங்களுக்காக எங்களுக்கிருக்கிற சாக்கிரதை பராபரனுக்கு முன்பாக உங்களுக்குள்ளே வெளிப்பட வேணுமென்கிறதின் நிமித்தியமாக எழுதியிருந்தேன்.

௰௩. ஆனதுகொண்டு உங்கள் ஆறுதலினாலே ஆறுதலடைந்தோம்; விசேஷமாகத் தீத்துவினுடைய ஆவி உங்களெல்லாராலும் இளைப்பாறினதினாலே அவனுக்கு வந்த சந்தோஷத்தினாலே அதிக சந்தோஷப்பட்டோம்.

௰௪. ஏனென்றால் உங்களைக்குறித்து அவனுடனே புகழ்ச்சியாக ஏதுங்காரியஞ் சொல்லியிருந்தேனுமாகில், அதினாலே வெட்கப்பட்டுப்போகாமல், நாங்கள் உங்களுடனே எல்லாத்தையும் உண்மையாய்ச் சொன்னது போலத் தீத்துவுடனே நாங்கள் உங்களுக்காகச் சொன்ன புகழ்ச்சியும் உண்மையாச்சுது.

௰௫. நீங்கள் பயத்தோடும் நடுக்கத்தோடும் ஏற்றுக்கொண்டு, உங்களெல்லாருடைய கீழ்ப்படியுதலையும் அவன் நினைவுகூருகையில் அவனுடைய மனசு உங்கள்மேல் பரிபூரணமுருக்கமாயிருக்குது.

௰௬. ஆகையால் எல்லாத்திலும் எனக்கு உங்கள்மேலே நம்பிக்கையுண்டாயிருக்குதென்று சந்தோஷப்படுகிறேன்.

௮. அதிகாரம்.

'தருமசேர்க்கைக்குக் கேவினது.

௧. அன்றி, சகோதரரே, மக்கெதோனிய தேசத்துச் சபைகளிலே அளிக்கப்பட்ட பராபரனுடைய கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம்.

௨. அதேதென்றால், உபத்திரவத்தின் வெகுவான சோதினையிலே அவர்களுடைய பரிபூரண சந்தோஷம் அவர்களை, தங்கள் ஆழமான தரித்திரத்திலே கடையில்லாமல் கொடுக்கப் பண்ணினதினாலே, அது ஐசுரியமாகப் பெருகிற்று.

௩. அதேதென்றால் அவர்கள் பெலத்துக்குத் தக்கதாகவும் பெலத்துக்கு மிஞ்சினதாகவும் கொடுக்கத் தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்கிறதுக்குச் சாட்சியாயிருக்கிறேன்.

௪. அதினாலே அவர்கள் எங்களை, தங்கள் உபகாரத்தையும் பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படுந் தருமவூ

ழியத்

ழியத்தின பங்கையும ஏற்றுக்கொள்ள மிகுந்த வேண்டிக்கொண்டு, * அப்போ. ௪: ௩௪. ௩௫.

௫. நாங்கள நம்பியிருந்தபடி மாத்திரஞ் செய்யாமல, தங்களைத் தாமே முந்திக் கர்த்தருக்கும, பிற்பாடு தேவனுடைய சித்தத்தினாலே எங்களுக்கும ஒப்புக்கொடுத்தார்கள.

௬. ஆனதுகொண்டு நாங்கள தீத்துவைச சார முந்தி துவக்கின பிரகாரமாக உங்களிடத்திலே இந்தத் தருமகாரியத்தையும முடிக்கவும வேண்டிக்கொண்டோம்.

௭. ஆனால நீங்கள எல்லாக் காரியத்திலேயும, விசுவாசத்திலேயும வசனத்திலேயும அறிவிலேயும எல்லாச் சாக்கிறதையிலேயும எங்கள மேலுள்ள உங்கள சிநேகத்திலேயும பெருகுகிறதுபோல, இந்தத் தருமகாரியத்திலேயும பெருகப்பாருங்கோள.

௮. நான கட்டளையாகச் சொல்லாமல, மற்றவர்களுடைய ஜாக்கிரதையைக்கொண்டு உங்கள சிநேகத்தின உண்மையைப் பரீட்சிக்கிறவனாகச் சொல்லுகிறேன.

௯. ஏனெனில நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்து அயிசுரியமுள்ளவராயிருந்தும, நீங்கள அவருடைய தரித்திரத்தினாலே அயிசுரியவான்களாகும்படிக்கு * உங்கள நிமித்தியமாகத் தரித்திரரானாரென்கிற அவருடைய கிருபையை அறிந்திருக்கிறீர்கள.

* சகரி. ௯: ௯. லூக். ௯: ௫௮.

௰. இதிலே என யோசனையைச் சொல்லுகிறேன, ஏனென்றால செய்கிறதுக்கு மாத்திரமல்ல, செய்ய வேணுமென்றிருக்கிறதுக்கும முதல்ப்போ ஒருவருஷமாயத் துவக்கம்பண்ணின உங்களுக்கு இது பிரயோசனமாயிருக்குது.

௰௧. இப்போ அதைச் செய்கிறதையும நிறைவேற்றுங்கோள. * மனதுமென்றமனப்பூருவமாய்ப்பட்ட உண்டாயிருக்கிறதோ அப்படி உண்டானதிலே எடுத்து * நிறைவேற்றுதலும உண்டாவதாக.

* பிலி. ௨: ௰௩.

௰௨. ஏனெனில மனப்பூருவமேயிருந்ததானால, ஒருத்தனுக்கே மாத்திரமிருந்தாலும * பிரியமானவனாயிருக்கிறான, அது அவன இல்லாமைக்குத்தக்கதாயிராது.

* மாற்கு. ௰௨: ௪௨. ௪௩.

௰௩. ஏனென்றால மற்றவர்களுக்கு லகுவும உங்களுக்கோ உபத்திரவமுண்டாயிருக்க வேணுமென்றதுக்கல்ல, சரிசமானத்துக்கே சொல்லுகிறோம.

௰௪. அவர்கள பரிபூரணம உங்கள தாழ்ச்சிக்கு உதவி சரிசமானமுண்டாக, இக்காலத்திலே உங்கள பரிபூரணம அவர்கள தாழ்ச்சிக்கு உதவுவதாக.

௰௫. * அநேகமாய்ச் சேர்த்தவனுக்கு அதிகமானதுமில்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதுமில்லையென்று எழுதியிருக்கிறபிரகாரமாகத்தானே.

* ௨. மோ. ௰௬: ௰௮.

௰௬. ஆகிலும் உங்களுக்காக அந்த ஜாக்கிரதையைத் தீத்துவின் இருதயத்திலே கொடுத்த பராபரனுக்கு ஸ்தோத்திரம்.

௰௭. ஏனென்றால் அவன் வேண்டுதலைக் கொண்டது மாத்திரமல்ல, அவன் அதிக ஜாக்கிரதையுள்ளவனாயிருந்து தன் சொந்த மனதுள்ளவனாய் உங்களண்டைக்குப் புறப்பட்டுப்போனான்.

௰௮. அதல்லாமல் சகல சபைகளிலும் சுவிசேஷத்தினால் ஸ்துதியைப் பெற்ற சகோதரனை அவனோடேகூட அனுப்பினோம்.

௰௯. அதுவுமாத்திரமல்ல, கர்த்தருக்கே மகிமையாகவும் உங்களுடைய மனவிருப்பம் விளங்கவும், எங்கள் ஊழியத்துக்குச் சேர்க்கப்படும் இந்த உபகாரத்திலே எங்களுக்கு உடன்பயணமாகச் சபைகளாலே தெரிந்துகொள்ளப்பட்டவனுமாயிருக்கிறான்.

௨௰. எங்கள் ஊழியத்துக்குச் சேர்க்கப்படும் இந்தத் திரள உபகாரத்துக்காக ஒருவரும் எங்களை மிகப்படுத்தாதபடிக்கு நாங்கள் எச்சரிக்கையாயிருந்து, * ௧. கொ. ௫: ௨௪.

௨௧. கர்த்தருக்கு முன்பாகமாத்திரமல்ல, * மனுஷருக்கு முன்பாகவும் நலமானதுகளைப் பார்த்து விசாரிக்கிறோம். * ரோம. ௧௨: ௧௭. பிலி. ௪: ௮.

௨௨. ஆகிலும் நாங்கள் வெகு தரம் அநேக காரியங்களில் ஜாக்கிரதையுள்ளவனென்று கண்டறிந்தவனும், இப்போது உங்கள்மேலுள்ள மிகுந்த நம்பிக்கையினாலே வெகு ஜாக்கிரதையுள்ளவனுமான எங்கள் சகோதரனை அவர்களோடேகூட அனுப்பினோம்.

௨௩. தீத்துவினுடைய காரியமோவென்றால், அவன் எனக்குக் கூட்டாளியும் உங்களுக்குள்ளே என்னுடனே வேலையாளுமாயிருக்கிறான்; எங்கள் சகோதரரோவென்றால், சபைகளுடைய அப்போஸ்தலர்களும் கிறிஸ்துவின் மகிமையுமாயிருக்கிறார்கள்.

௨௪. ஆகையினாலே உங்கள் சிநேகத்தையும் நாங்கள் உங்கள்மேலே சொன்ன புகழ்ச்சியையும் அவர்களுக்கும் சபைகளுக்கும் முன்பாகவும் ருசுகாட்டப்பண்ணுங்கோள்.

௯. அதிகாரம்.

அப்பாலுந் தருமஞ் சேர்க்கிறதுக்கேவும் முகாந்திரங்களைச் சொன்னது.

பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்மவூழியத்தைக்குறித்து நான் உங்களுக்கெழுதத் தேவையில்லையே.

௨. ஏனென்றால் அகாயா ஒரு வருஷமாய் ஆயத்தப்பட்டிருக்கிறதென்று நான் மக்கெதோனியருடனே சொல்லி, உங்களைக்குறித்துப் புகழ்ச்சி உங்களு

ுடைய மனப்பூரணத்தை அறிவேன்; உங்களினுண்டான சுறுசுறுப்பு அநேகரை எழுப்பிவிட்டதுமுண்டு.

௩. ஆனால் உங்களைக்குறித்து நாங்கள் சொன்ன புகழ்ச்சி இந்தக்காரியத்திலே வீணாய்ப் போகாமல், நான் சொன்னபடி நீங்கள் ஆயத்தப்பட்டவர்களாயிருப்பதற்குச் சகோதரரை அனுப்பினேன்.

௪. மக்கெதோனியர் என்னுடனேகூட வந்து, உங்களை ஆயத்தப்படாதவர்களைக் கண்டால், நிச்சயத்திடமாய்ப் புகழ்ந்ததுக்காக நீங்களொன்றுஞ் சொல்லேன், நாங்களே வெட்கப் படாதிருப்பதற்குந்தானே.

௫. ஆகையால் இந்தச் சகோதரர் முன்னதாய் உங்களிடத்துக்குப் போகும்படிக்கும், முன்னே அறிவிக்கப்பட்டிருக்கிற உங்களுடைய ஆசீர்வாதம் பிசினித்தனம்போலல்ல ஆசீர்வாதம்போலே ஆயத்தமாயிருக்கத்தக்கதும்படிக்கும் அவர்களை வேண்டிக்கொள்ளத் தேவையாய்க் கண்டேன்.

௬. ஆனால் நான் சொல்லுகிறதேதெனில், சிறுக விதைக்கிறவன் சிறுகவும் அறுப்பான்; ஆசீர்வாதங்களோடே விதைக்கிறவன் ஆசீர்வாதங்களோடும் அறுப்பான். * வாக்கு. ௰௪: ௨௯. ௰௯: ௰௭.

௭. அவனவன் தான் மனதிலே நேமித்தபடி கொடுக்கக்கடவான்; துக்கத்தினாலே அல்லாது கட்டாயத்தினாலே வேண்டாம். ஏனெனில் * சந்தோஷமாய்க் கொடுக்கிறவனைப் பராபரன் நேசிக்கிறார்.

* ௨. மோ. ௨௫: ௨.

௮. ஆனால் நீங்கள் எல்லாத்திலும் எப்போதும் எல்லா மனத்திருத்தியோடும் நிறைந்து, சகல நற்கிரியைக்கும் பெருகுவதற்காக, பராபரன் உங்கள் மேல் சகல கிருபையையும் பெருகப்பண்ண வல்லவராயிருக்கிறார்.

௯. * வாரி இறைத்து ஏழைகளுக்குக் கொடுத்தான்; அவன் நீதி என்றென்றைக்கும் நிற்குமென்றெழுதியிருக்கிறபிரகாரமாகத்தானே. * சங். ௱௰௨: ௯.

௰. விதைக்கிறவனுக்கு விதையை ஈக்கிறவரோவென்றால் போசிக்க அப்பத்தையும் ஈந்து, உங்கள் விதையைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சல்களை வளர்ப்பார்.

௰௧. பராபரனுக்கு எங்களாலே ஸ்தோத்திரம் வருத்திக்கிற கபடில்லாத நற்குணமெல்லாமுண்டாக, நீங்கள் எல்லாத்திலும் ஐசுவரியவான்களாயிருக்கும்படிக்குத்தானே.

௰௨. ஏனெனில் இந்தத் தருமந்தருகிறதின் ஊழியம் பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நிறைவாக்குகிறதாக மாத்திரமல்ல, அநேகர் பராபரனை ஸ்தோத்திரிக்கிறதினாலே பெருகுகிறதுமாயிருக்கிறது.

௰௩. அவர்கள் இந்த ஊழியத்தின் உத்தமத்தைக் கண்டு, நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கீழ்ப்படியுதலோடே அறிக்கை பண்ணுகிறீர்களென்றும்

தங்

[illegible] வெளிப்படுத்துகிற [illegible] சபைகளுக்கெல்லாம் [illegible] பண்ணுகிற [illegible]

௰௪. உங்களுக்காக வேண்டுதல் செய்து உங்களி [illegible] தேவனுடைய [illegible] கிருபையி னிமித்தமாக உங்கள்மேல் வாஞ்சையாயிருக் கிறார்கள்.

௰௫. சொல்லிமுடியாத [illegible] அவருடைய ஈவுக்காகத் தேவனுக்கு ஸ்தோத்திரம். * [illegible]

௰. அதிகாரம்.

[illegible] அப்போஸ்தலத்துவத்தை [illegible] நிரூபிக்கிறது.

முகமுகமாய் உங்களுக்குள் இருக்கும்போது தாழ்மையுள்ளவனும் தூரத்திலிருக்கும்போது [illegible] உங்கள் [illegible] பவுலாகிய நான் கிறிஸ்துவினுடைய [illegible] சாந்தத்தினாலும் உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். * [illegible]

௨. [illegible] நான் [illegible] இருக்கும்போது [illegible] மாம்சத்தின்படி நடக்கிறவர்களென்று [illegible] [illegible] கொண்டிருக்கிற [illegible] [illegible] தைரியத்தோடே [illegible] வேண்டிக்கொள்ளுகிறேன்.

௩. [illegible] நாங்கள் மாம்சத்தில் நடந்தும் [illegible] மாம்சத்தின்படி [illegible] போர்செய்கிறதில்லை.

௪. [illegible] எங்கள் [illegible] ஆயுதங்கள் மாம்சத்துக்கடுத்தவைகளாயிராமல் [illegible] [illegible] தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. * [illegible]

௫. அதுகளால் நாங்கள் [illegible] எண்ணங்களையும் [illegible] [illegible] எதிராக [illegible] [illegible] எல்லா [illegible] [illegible] எல்லா [illegible] [illegible] கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் [illegible] சிறைப் படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.

௬. உங்கள் கீழ்ப்படிதல் [illegible] [illegible] எல்லாக் கீழ்ப்படியாமைக்கும் [illegible] பழிவாங்க [illegible] [illegible] ஆயத்தமாயிருக்கிறோம்.

௭. முகத்துக்குமுன்னேயிருக்கிறதுக்கா பார்க்கி றீர்களோ? [illegible] ஒருவன் தான் கிறிஸ்துவினுடையவனென்று [illegible] [illegible] [illegible] [illegible] கிறிஸ்துவினுடையவனாயிருக்கிறதுபோல நாங்களும் கிறிஸ்துவினுடையவர்களென்று [illegible] [illegible] சிந்திக்கக்கடவன்.

௮. [illegible] உங்களை [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] மேன்மைபாராட்டினாலும் [illegible]

நான

நான் வெட்கப்பட்டுப்போவதில்லை. * ௰௩: ௰.

௯. நானொருவேளில் நிருபங்களால் உங்களைப்பய முறுத்துகிறவனைப்போலக் காணப்பட எனக்கு மனதில்லை.

௰. அவனுடைய நிருபங்களோ பாரமும்பெல முமுள்ளவைகள். சரீரத்தின முகத்தாலோ. பெலயீன முமவசனம் அற்பமானதுமென்கிறார்கள்.

௰௧. அப்படிப்பட்டவன், நாங்கள் தூரத்திலே நிரு பங்களின் வசனத்திலே எப்படியிருக்கிறோமோ அப படி முகதாவிலேகிரிகையிலுமிருப்போமென்று சிந் திக்கக்கடவான்.

௰௨. ஏனெனில் தங்களைத்தானே புகழுகிற சிலருக்கு நாங்களெங்களைச் சரியாக்கவும் ஒப்பிடவுந் துணி யோம்; தங்களாலே தங்களை அளந்துகொண்டு தங் களுக்குத் தங்களை ஒப்பிடுகிறவர்களோவென்றால் புத்திமான்களல்ல.

௰௩. நாங்களோவென்றால் அளவுக்கு மிஞ்சினதாய் மேன்மை பாராட்டாமல், உங்களிடத்துக்கும் வந் தெட்டும்படியாய் எங்களுக்கு அளந்து பகிர்ந்த அளவின் பிரமாணமாக மேன்மைபாராட்டுகிறோம்.

௰௪. ஏனெனில் உங்களண்டைக்கு வந்தெட்டாதவர் களாய் நாங்கள் அளவுக்கு மிஞ்சிப்போகிறதில்லை; கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் பிரசங்கித்து உங் கள்மட்டுக்கும் வந்து சேர்ந்தோமே.

௰௫. அளவுக்குமிஞ்சி அன்னியவேலைகளுக்குள்ப் பட்டு மேன்மை பாராட்டோம்; உங்கள் விசுவாசம் வளர்ந்தபோதோவென்றால், உங்களால் எங்கள் பிர மாணத்தின்படி மிகுதியாய்ப் பெருகுவோமென்கிற நம் பிக்கை எங்களுக்குண்டு.

௰௬. உங்களுக்கப்புறமான தேசங்களில் சுவிசே ஷத்தை அறிவிக்கவும், அன்னிய பிரமாணத்தில் ஆயத் தமானவைகளில் மேன்மை பாராட்டாதிருக்கவுந் தானே.

௰௭. * மேன்மைபாராட்டுகிறவனே கர்த்தருக்குள் மேன்மைபாராட்டக்கடவான்.

* யெரே. ௯: ௨௩. ௨௪. ௧. கொரி. ௧: ௩௧.

௰௮. ஏனெனில் * தன்னைத்தானே புகழுகிறவனல்ல கர்த்தர் புகழுகிறவனே உத்தமன். * வாக்கி. ௨௭: ௨.

௰௧. அதிகாரம்.

கள்ளஅப்போஸ்தலர் நிமித்தியமாகப் பவுல் கொ ரிந்தியருக்குத் தன்னுடைய உத்தம உண்மையையும், சுவி சேஷத்துக்காகத் தான் அநுபவிக்கும் பாடுகளை யுந் தெரியக்காட்டினது.

௧. மதியில்லாமையின் நிமித்தியமாக நீங்களென்னைச் சற்றேபொறுத்திருந்தால் தாவிளை; ஆனாலென்னைப் பொறுத்திருக்கிறீர்களே.

௨. ஏனெ

௨. ஏனென்றால் உங்களுக்காகத் தேவ வைராக்கியமான வைராக்கியமாயிருக்கிறேன் அதேனென்றால் உங்களைக் கற்புள்ள கன்னியாஸ்திரீயாக ஒரே புருஷனாகிய க்றிஸ்துவுக்கு முன்னிறுத்த ஆயித்தப்படுத்தினேன். * ஓசே. ௨: ௰௯. ௨௰.

௩. ஆகிலும் சற்பமானது தன் தந்திரத்தினாலே ஏவாளை மோசம் போக்கினதுபோலே உங்கள் சிந்தைகளும் க்றிஸ்துவினிடத்திலுள்ள பத்தியின் ஏகமையினின்று விலகிக் கெட்டுப்போமோவென்று பயந்திருக்கிறேன்.

* ௧. மோ. ௩: ௪.

௪. ஏனென்றால் எவனாகிலும் வந்து நாங்கள் பிரசங்கித்திராத வேறொரு யேசுவைப் பிரசங்கித்தால், அல்லது நீங்கள் பெற்றிராத வேறொரு ஆவியையும் நீங்கள் ஏற்றுக்கொண்டிராத வேறொரு சுவிசேஷத்தையும் பெறுவீர்களானால் நன்றாய்ச் சகித்திருப்பீர்கள்.

* கலா. ௧: ௬—௮.

௫. * நானோவென்றால் மகா பிரதான அப்போஸ்தலருக்கு ஒன்றிலுந் தாழ்ந்தவனல்லவென்றெண்ணுகிறேன். * ௧. கொ. ௰௫: ௰.

௬. நான் வசனத்திலே கல்லாதவனாயிருந்தாலும் ஞானத்திலே கல்லாதவனல்ல, எல்லாத்திலு முங்களிடத்தில் அனைவருக்குள்ளேயும் வெளிப்பட்டிருக்கிறோமே.

௭. அல்லது நீங்கள் உயர்த்தப்படும்படிக்கு நான் என்னைத் தாழ்த்தி பராபரனுடைய சுவிசேஷத்தை இலவசமாய் உங்களுக்குப் பிரசங்கித்ததினாலே குற்றஞ் செய்தேனோ?

௮. உங்களுக்கு ஊழியஞ் செய்யும்படி மற்றச் சபைகளைக் கொள்ளையிட்டு நான் சம்பளம் பற்றிக்கொண்டேன், நான் உங்களண்டையில் இருந்து குறைச்சல் அனுபவிக்கிறபோதும் நான் ஒருவரையும் வருத்தப்படுத்தினதில்லை.

௯. ஏனென்றால் மக்கெதோனியாவிலிருந்து வந்த சகோதரர் என் குறைவை நிறைவாக்கினார்கள், நான் எல்லாத்திலும் உங்களுக்குப் பாரமாயிராதபடிக்குப் பார்த்தேன் இனிமேலும் பார்ப்பேன்.

௰. * அகாயா சீமைப் புறங்களிலே இந்தப் புகழ்ச்சி எனக்கு நிறுத்தப்படுவதில்லை என்கிறதற்கு என்னிலுள்ள க்றிஸ்துவினுடைய உண்மையைக் கொண்டு சொல்லுகிறேன். * ௧. கொரி. ௯: ௰௫.

௰௧. ஏன், நான் உங்களைச் சிநேகியாதபடியினாலேயோ, அல்லவென்று பராபரன் அறிவார்.

௰௨. ஆனால் நான் செய்கிறதைச் செய்வேன் ஏதுக்கென்றால் காரியங்களின் மேன்மை பாராட்டுகிறதிலே எங்களைப் போலே காணப்படச் சமயந்தேடுகிறவர்களுக்குச் சமயம் அறப் போகப்பண்ணுகிறதுக்குத்தானே.

௰௩. ஏனென்றால் அப்படிக்கொத்தவர்கள் அப்போஸ்தலர் க்றிஸ்துவினுடைய அப்போஸ்தல

ரீஸ வேஷந்தரித்துக்கொள்ளுகிற கள்ள வேலையாட்களாயிருக்கிறார்கள். * மத். ௭: ௰௫.

௰௪. இதுவும் ஆச்சரியமல்ல, சாத்தானானவனே வெளிச்சத்தூதனுடைய வேஷமெடுக்கிறது.

௰௫. ஆனபடியினாலே அவனுடைய ஊழியக்காரரும் நீதியினுடைய ஊழியக்காரரைப்போலே வேஷமெடுத்தாலும் பெரிய காரியமல்ல; அவர்களுடைய முடிவோ அவர்களுடைய கிரியைகளுக்குத் தக்கதாயிருக்கும்.

௰௬. ஒருத்தனும் என்னை மதியீனனென்று எண்ணவேண்டாமென்று மறுபடியுஞ் சொல்லுகிறேன்; அப்படியில்லாவிட்டால், நானுங் கொஞ்சம் மேன்மைபாராட்டும்படிக்கு என்னை மதியீனனைப்போலாகிலும் ஏற்றுக்கொள்ளுங்கள்.

௰௭. நான் சொல்லுகிறதைக் கர்த்தருக்கேற்றபடியே சொல்லாமல், இந்தத் திடமான மேன்மைபாராட்டலிலே மதியீனனாகவே சொல்லுகிறேன்.

௰௮. அநேகர் மாம்சத்தின்படி மேன்மைபாராட்டுகிறார்கள், நானும் மேன்மைபாராட்டுவேன். * [illegible]

௰௯. நீங்கள் புத்திமான்களாயிருக்க, மதியீனரைச் சந்தோஷமாய்ச் சகித்திருக்கிறீர்கள்.

௨௰. ஒருவன் உங்களை அடிமைப்படுத்தினாலும், ஒருவன் உங்களைப் பட்சித்தாலும், ஒருவன் எடுத்துக்கொண்டாலும், ஒருவன் தன்னை உயர்த்தினாலும், ஒருவன் உங்களை முகத்திலே அறைந்தாலும் சகித்திருக்கிறீர்கள்.

௨௧. நாங்கள் பலவீனரானதுபோலே அவமானமாய்ப் பேசுகிறேன்; ஆகிலும் ஒருவன் எதிலே துணிவுள்ளவனாயிருக்கிறானோ, அதிலே நானும் துணிவுள்ளவனாயிருக்கிறேன், மதியீனமாய்ச் சொல்லுகிறேன்.

௨௨. அவர்கள் எபிரேயர்களோ, நானும் எபிரேயன்; இஸ்ரவேலராயிருக்கிறார்களோ, நானும் இஸ்ரவேலன்; ஆபிரகாமின் வித்தாயிருக்கிறார்களோ, நானும் ஆபிரகாமின் வித்து.

௨௩. கிறிஸ்துவின் ஊழியக்காரராயிருக்கிறார்களோ, நான் அவர்களிலும் அதிகம் (மதியீனமாய்ப் பேசுகிறேன்). நான் அதிகப் பிரயாசத்திலும், மிகுந்த அடிகளிலும், அதிகக் காவல்களிலும், அடிக்கடி மரணங்களிலும் அகப்பட்டேன்.

௨௪. யூதர்கையில் * ஒன்று குறைய நாற்பதடியாய் ஐந்துதரம் அடிபட்டேன். * உபா. ௨௫: ௩.

௨௫. மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் * கல்லெறியுண்டேன், மூன்றுதரங் கப்பல் சேதப்பட்டுப் போயிருந்தேன், ஒரு ராப்பகல் முழுதும் ஆழத்திலே போக்கினேன். * அப். ௰௪: ௰௯.

௨௬. அநேகந்தரம் வழிப்பயணங்களிலும், ஆறுகளால் வரும் மோசங்களிலும், கள்ளரால் வரும் மோசங்களிலும், சுயஜாதியாரால் வரும் மோசங்களிலும், புறசாதியாரால் வருகிற மோசங்களிலும், பட்

டண

லுண்டான மோசங்களிலும் வனாந்திரத்திலுண்டான மோசங்களிலும் சமுத்திரத்திலுண்டான மோசங்களிலும் கள்ள சகோதரரிடத்திலுண்டான மோசங்களிலும்

௨௭. * வேலையிலும் வருத்தத்திலும் வெகுவிழிச்சகண ழிப்புகளிலும் பசியிலும் தாகத்திலும் வெகுவிரச உபவாசங்களிலும் குளிரிலும் நிருவாணத்திலுமிருந்தேன். * ௬: ௫.

௨௮. புறக்காரியங்களைத்தவிர எனக்கனுதினச் சந்தடி வருத்தாலெல்லாச் சபைகளின் விசாரிப்புமிருக்குது.

௨௯. எவனுடைந்த பெலயீனமானாற் பெலயீனமாகாதிருக்கிறேனா எவனடைகிறதேடறல் எனக்கெரியாதிருக்கும்.

௩௰. மேன்மைபாராட்ட வேண்டியதானால் * என் பெலயீனத்துக்கடுத்தவைகளைச் சொல்லி மேன்மைபாராட்டுவேன். * ௰௨. ௫: ௯.

௩௰௧. என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட பராபரனும் நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவின் பிதாவுமானவர் நான் பொய்சொல்லேனென்றறிவார்.

௩௰௨. தமஸ்குவிலே அரேத்தராசாவினுடைய சனத்தலைவனானவன் என்னைப் பிடிக்க வேணுமென்று தமஸ்கியருடைய பட்டணத்தைக் காவலாய் வைத்துக் காத்தான்.

௩௰௩. * அப்போது கூடையிலே மதிலின் வழியாயிறக்கப்பட்டு அவனுடைய கைகளுக்குத் தப்பிப்போனேன். * அப்போ. ௯: ௨௪. ௨௫.

௰௨. அதிகாரம்.

பவுலானவன் தன்னைச் செய்யப்பட்ட மேன்மைபாராட்டு
தலைக்கெல்லாம் உண்டான காரணங்களைச் சொல்லுகிறதும்
பின்னையுங் கொரிந்தியருக்குப் பார்த்துவானவர்
களை நேசங்காக்கத்தக்கதாய்ப் பாடுபடுகிறதும்
அவர்களுக்கு இதினாலே புத்தியும்.

மேன்மைபாராட்டுகிறது எனக்குப் பிரயோசனமாயிராதே தோனாலுங் கர்த்தருடைய தெரிசனங்களையும் வெளிப்படுத்தல்களையுஞ் சொல்லுவேன்.

௨. கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன். அவன் பதினாலு வருஷத்துக்கு முன்னே மூன்றாம் வானமட்டுக்கும் எடுக்கப்பட்டான். சரீரத்துக்குள்ளானவனாகவோ அறியேன் சரீரத்துக்குப் புறம்பானவனாகவோ அறியேன் பராபரன் அறிவார்.

௩. அப்படிப்பட்ட மனுஷனை அறிவேன். அவன் பரதீசுக்குள் எடுக்கப்பட்டு மனுஷன் பேசத்தகாத வாக்குக் கெட்டாவாறுதைகளைக் கேட்டான்.

௪. சரீரத்துக்குள்ளானவனாகவோ சரீரத்துக்குப் புறம்பானவனாகவோ அறியேன் பராபரன் அறிவார்.

௫. அப்படிக்கொத்தவனைக் குறித்து மேன்மைபாராட்டுவேன்; என்னைத்தானே குறித்தோ என் பலவீனங்களிலேயொழிய வேறொன்றிலும் மேன்மைபாராட்டுவதில்லை. • ௰௧: ௩௰.

௬. மேன்மைபாராட்டப்போனாலும் நான் மதியீனனாயிருக்கமாட்டேன், உண்மையைச் சொல்லுவேன். ஆனாலும் ஒருவனும் என்னிடத்திலே காண்கிறதற்கும் கேட்கிறதற்கும் மேலாக என்னை எண்ணாதபடிக்கு அதைச் செய்யாதிருக்கிறேன்.

௭. அன்றியும் வெளிப்படுத்தல்களுடைய மேன்மையினாலே நான் உயர்த்தப்படாதபடிக்கு என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டது; நான் உயர்த்தப்படாதபடிக்கு என்னைக் குட்டும்படி சாத்தானுடைய தூதனாயிருக்கிறது. • யோபு. ௨: ௭.

௮. இதுக்காக மூன்றுதரம் அது என்னைவிட்டு நீங்கும்படிக்குக் கர்த்தரை வேண்டிக்கொண்டேன்.

௯. அதற்கு அவர்: என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கியிருக்கும்படிக்கு நான் என் பலவீனங்களைக் குறித்தே மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்.

௰. ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் பலவீனங்களிலும் நிந்தைகளிலும் நெருக்கங்களிலும் துன்பங்களிலும் இடுக்கண்களிலும் பிரியப்படுகிறேன்; நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்.

• ௰ரோ. ௫: ௩.

௰௧. மேன்மைபாராட்டி மதியீனனானேன்; நீங்களே என்னை அப்படிச் செய்யப் பலவந்தப்படுத்தினீர்கள். நான் உங்களால் மெச்சிக்கொள்ளப்படவேண்டியதாயிருந்தது; நான் ஒன்றுமில்லையென்றாலும் மிகுந்த பிரதான அப்போஸ்தலருக்கு ஒன்றிலும் குறைவுள்ளவனல்ல.

௰௨. அப்போஸ்தலனுடைய அடையாளங்கள் உங்களுக்குள்ளே எல்லாவிதமான பொறுமையோடும் அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் வல்லமைகளினாலும் நடப்பிக்கப்பட்டதே.

௰௩. நான் உங்களுக்குப் பாரமாயிருக்கவில்லையென்றதுதவிர மற்றச் சபைகளுக்கு எதிலே குறைவாயிருந்தீர்கள்? இந்த அநியாயத்தை எனக்கு மன்னியுங்கோள்.

• ௰௧: ௯.

௰௪. இதோ, மூன்றாந்தரம் உங்களிடத்திற்கு வர ஆயத்தமாயிருக்கிறேன்; உங்களைப் பாரப்படுத்துவதில்லை; நான் உங்களுடையதைத் தேடாமல் உங்களையே தேடுகிறேன். பிள்ளைகள் பெற்றாருக்கல்ல, பெற்றார் பிள்ளைகளுக்கே பொக்கிஷங்களைச் சேர்க்கவேண்டியது. • ௰௩: ௧.

௰௫. நானோவெனில் உங்களாத்துமாக்களுக்காகச் சந்தோஷமாய்ச் செலவழிப்பேன், முழுதுஞ் செலவழிக்கப்படுவேன்; உங்களை மிகுதியாய்ச் சிநேகிக்கிறவனாயிருந்தும், நான் கொஞ்சமாய்ச் சிநேகிக்கப்படுகிறேன்.

௰௬. அப்படியேயாகட்டும், நான் உங்களுக்குப் பாரமாயிருக்கவில்லை; ஆகிலும் நான் தந்திரமுள்ளவனாயிருந்து உங்களைக் கபடத்தினாலே பிடித்தேன்.

௰௭. நான் உங்களிடத்துக்கு அனுப்பினவர்களில் யாராலாவது உங்களிடத்தில் பொழிவுண்டாக்கினேனோ?

௰௮. நான் தீத்துவை வேண்டிக்கொண்டு அவனுடனே ஒரு சகோதரனை அனுப்பினேன்; தீத்து உங்களிடத்தில் ஏதாகிலும் பொழிவுண்டாக்கினானோ? நாங்கள் ஒரே ஆவியினாலே ஒரே அடிச்சுவடுகளில் நடந்தோமல்லவோ?

௰௯. நாங்கள் உங்களுக்கு எதிரே போக்குச்சொல்லுகிறோமென்று நினைக்கிறீர்களோ? தேவனுக்கு முன்பாகக் கிறிஸ்துவுக்குள் பேசுகிறோம்; பிரியமானவர்களே, எல்லாவற்றையும் உங்கள் பக்திவிருத்திக்காகவே செய்கிறோம்.

௨௰. ஏனெனில், நான் வந்து உங்களை என் மனதின்படியிருக்கக் காணாமலும், நானும் உங்கள் மனதின்படியிராமல் நீங்கள் என்னைக் காணவும், வாக்குவாதங்களும், பொறாமைகளும், கோபங்களும், வாதுகளும், புறங்கூறுதல்களும், கோள்களும், இறுமாப்புகளும், கலகங்களும் உண்டாயிருக்குமோவென்றும்,

௨௧. மறுபடியும் நான் வரும்போது என் தேவன் என்னை உங்களிடத்தில் தாழ்மைப்படுத்துவாரோ, முன்பாவஞ் செய்து தாங்கள் நடப்பித்த அசுத்தத்தையும் வேசித்தனத்தையும் காமவிகாரத்தையுங்குறித்து மனந்திரும்பாதவர்களாகிய அநேகரைக் குறித்து நான் துக்கப்படுவேனோ என்று பயந்திருக்கிறேன்.

௰௩. அதிகாரம்.

தண்டனையைக் குறித்துக் கண்டிப்பும் புத்தியும்.

௧. மூன்றாந்தரம் உங்களிடத்தில் வருகிறேன்; சகலவிஷயமும் இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் நிலைவரப்படும்.

௨. நான் இரண்டாந்தரம் உங்களிடத்தில் இருந்தபோது சொன்னதுபோல, இப்பொழுது தூரத்திலிருந்து முன்பு பாவஞ்செய்தவர்களுக்கும் மற்ற எல்லாருக்கும் முன்னறிவிக்கிறேன்; நான் திரும்பி வந்தால் தப்பவிடமாட்டேன்.

௩. ஏனென்றால் உங்களிடத்தில் பேசுகிறவருக்கு உங்களிலே பெலவீனராயிராமல் உங்களிடத்தில் பல வல்லவராயிருக்கிற கிறிஸ்துவைப் பரீட்சைபார்க்க வேண்டுமென்றிருக்கிறீர்களே.

௪. ஏனென்றால் அவர் பெலவீனத்தினாலே சிலுவையிலே அறையப்பட்டிருந்தும், பராபரனுடைய வல்லமையினாலே பிழைத்திருக்கிறார். அப்படியே நாங்களும் அவருக்குள் பெலவீனராயிருந்தாலும் அவருடனேகூடப் பராபரனுடைய வல்லமையினாலே உங்களிடத்திலே பிழைத்திருப்போம்.

௫. விசுவாசத்திலே யிருக்கிறீர்களோவென்று உங்களைச் சோதித்துப்பாருங்கள். உங்களைத்தானே பரீட்சித்தறியுங்கள். அல்லது யேசுக்கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்கள் அறியீர்களா? நீங்கள் ஆகாதவர்களாயிராதிருந்தால் அப்படியிருக்கிறார்.

௬. நாங்களோ ஆகாதவர்களல்லவென்று அறிவீர்களென்று நம்புகிறேன்.

௭. ஆகிலும் நீங்கள் ஒரு பொல்லாப்பையுஞ் செய்யாதிருக்கும்படிக்குப் பராபரனை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறேன்; நாங்கள் பரீட்சைக்கு நிற்கிறவர்களென்று காணப்படும்படி அல்ல, நீங்கள் நன்மையானதைச் செய்யும்படிக்கே, நாங்கள் ஆகாதவர்கள் போலிருக்கக் கருதுகிறேன்.

௮. ஏனென்றால் நாங்கள் சத்தியத்துக்கு விரோதமாக ஒன்றுஞ் செய்யக்கூடாமல் சத்தியத்துக்காகச் செய்வோம்.

௯. ஏனென்றால், நாங்கள் பெலவீனராயிருக்கையில் நீங்கள் பெலத்தவர்களாயிருக்கும்போது சந்தோஷப்படுகிறோம்; நீங்கள் நற்சீர்பொருந்தவேண்டுமென்று விரும்புகிறோம்.

௰. ஆகையால் நான் உங்களிடத்தில் வந்திருக்கையிலே, * இடிக்கிறதற்கல்ல கட்டுகிறதற்கென்று கர்த்தர் எனக்குத் தந்த அதிகாரத்தின்படியே நான் கண்டிப்பாய் நடவாதபடிக்கு இவைகளைத் தூரமாயிருந்து எழுதுகிறேன். * ௰: ௮.

நிருபத்தின் முடிவு.

௰௧. கடைசியிலே, சகோதரரே, * சந்தோஷமாயிருங்கள், நற்சீர்பொருந்துங்கள், தேறுதலடையுங்கள், ஏகசிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள், அப்பொழுது அன்புக்குஞ் சமாதானத்துக்கும் பராபரனானவர் உங்களுடனேகூடயிருப்பார். * பிலி. ௪: ௯.

௰௨. * ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்திக்கொள்ளுங்கள். பரிசுத்தவான்களெல்லாரும் உங்களை வாழ்த்துகிறார்கள். * ௧. கொரி. ௰௬: ௨௰.

௰௩. கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினுடைய கிருபையும் பராபரனுடைய சிநேகமும் பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்களெல்லாரோடுங்கூட இருக்கக்கடவது. ஆமென்.

மக்கெதோனியாதேசத்துப் பிலிப்பிப் பட்ட
ணத்திலிருந்து தீத்து லூக்கா என்ப
வர்களைக்கொண்டு கொரிந்தியருக்கு
எழுதப்பட்ட இரண்டாம் நிருபம்.

அப்போஸ்தல ஆகிய பவுலு

கலாத்தியருக்கெழுதின

நிருபம்.

௧. அதிகாரம்.

[illegible]

[illegible]

௨. [illegible]

௩. [illegible]

௪. [illegible]

௫. [illegible]

௬. [illegible]

௭. [illegible]

௮. [illegible]

௧. கொ. ௰௬: ௨௨.

௯. [illegible]

௰. [illegible]

[illegible]

னத்தைப்பிரியப்படுத்தப்பார்க்கிறேனோ? பராபரனுக்குச்சம்மதமா னத்தைப்பிரியப்படுத்தப்பார்க்கிறேனோ. அல்லது மனுஷருக்குப்பிரிய ப்படப்பார்க்கிறேனோ. நானின்னமும் மனுஷருக்குப்பிரிய மாயிருந்தால் நான் கிறிஸ்துவினுடைய ஊழியக்கார னல்ல. • ௧. தெச. ௨: ௪.

௰௧. ஆனல், சகோதரரே என்னாலே அறிவிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடையதல்லவென்று உங் களுக்கு அறிவிக்கிறேன்.

௰௨. ஏனென்னில் • நான் அதை மனுஷனாலே யடைந்திருக்கவுமில்லை கற்றுக்கொண்டதுமில்லை இயேசுகிறிஸ்துவினு டைய அறிவிப்பினாலே அதைப்பெற்றுக்கொண்டேன்.

• ௧. கொ. ௰௧: ௨௩.

௰௩. ஏனென்னில் • நான் பராபரனுடைய சபையை மிகுதியாகத்துன்பப்படுத்தி அதைப்பாழாக்கினேன்.

• அப்போ. ௮: ௩. ௯: ௧.

௰௪. என் ஜாதியிலே என்வயதுள்ள அநேகரைப் பார்க்கிலும் யூதமார்க்கத்திலே தேறினவனாயிருந் து என்னுடைய பிதாக்களுடைய பாரம்பரியங்களுக்காக மிகவும் பக்திவைராக்கியமுள்ளவனாயிருந்தேன் என்பதை நீங்கள் கேட்டிருக்கிறீர்களே.

௰௫. ஆனாலும் என்னைத் தாயின் கர்ப்பத்திலே பிரித்தெடுத்து தம்முடைய கிருபையினாலே அழைத்த பராபரன்

௰௬. தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்திலே சுவிசேஷமாய் அறிவிக்கத்தக்கதாக • அவரை எனக் குள்ளே வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தபோது நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனை பண்ணாமல். • மத். ௰௬: ௰௭.

௰௭. எனக்கு முந்தி அப்போஸ்தலராயிருந்தவர் களிடத்திலே எருசலேமுக்குப் போகாமலும் உட னே அரபிதேசத்துக்குப் புறப்பட்டுப் போய் மறு படியும் தமஸ்குவுக்குத் திரும்பி வந்தேன்.

௰௮. பிறகு மூன்று வருஷத்துக்குப்பின்பு பே துருவைப் பார்க்கிறதற்காக எருசலேமுக்கு வந்து அவனிடத்திலே பதினைந்து நாளிருந்தேன்.

௰௯. கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோ பைத்தவிர அப்போஸ்தலரில் வேறொருவனை நான் காணவில்லை.

௨௰. நான் உங்களுக்கு எழுதுகிறதுகளோ வென் றால் இதோ பொய்யல்லவென்று பராபரனுக்குமுன் பாகச் சத்தியம்பண்ணுகிறேன்.

௨௧ பிறகு சீரியாக் கிலிக்கியா தேசங்களினுடைய புறங்களிலே வந்தேன்.

௨௨. ஆனால் யூதேயாவிலே கிறிஸ்துவுக்குள்ளா ன சபைகளுக்கு முகமறியாதவனாயிருந்தேன்.

௨௩. முன்னே நம்மைத் துன்பப்படுத்தினவனே தான் முன் பாழாக்கின விசுவாசத்தை இப்போ சுவிசேஷமாய

அறி

அழிக்கிறானென்கிறதை அவர்கள் கேட்டவர்களாய மாத்திரமிருந்தது.

௨௪. என்னைக்காகப் பராபரனை மகிமைப்படுத்தினார்கள்.

௨. அதிகாரம்.

புறசாதிகளுக்குச் சுவிசேஷத்தைத் தேவனால் பூரணமா
ய்க்கப்பட்டவனாகக் காண்பிக்கிறான்
யூதசாதி பக்ஷ விசுவாசிகளுக்குப்
பேதுருவாகிய அப்போஸ்தலனுக்குக்
[illegible] கண்டு
தெனடு.

பின்பாடு பதினாலு வருஷஞ்சென்றபோது நான் பர்னபாவுடனே கூடமறுபடியும் யெருசலேமுக்குத் தீத்துவையுங்கூட்டிக்கொண்டு போயிருந்தேன்.

* அப்போ. ௧௫: ௧. ௨.

௨. நானொருதேவவெளிப்படுத்தலினாலே போயிருந்து நானொருக்கால் ஓடினது விருதாவாய்ப் போகாதபடிக்கு புறசாதிகளிடத்திலே நான் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தை அவர்களுக்கும் விசேஷமாக எண்ணப்படுகிறவர்களுக்கும் விபரிக்கத்தக்கதாயிருந்தேன்.

௩. ஆனாலென்னோடேகூட விருந்த கிரேக்கனான தீத்து விருத்தசேதனம் பண்ணிக்கொள்ள வலுக்கட்டாயப் பட்டதில்லை.

௪. யேசுக்கிறிஸ்துவுக்குள் நமக்குண்டான நம்முடைய சுயாதீனத்தை வேவுபார்க்கிறதுக்கும், நம்மை அடிமைத்தனத்துக்குள்ளாக்குகிறதுக்கும் பக்கவழியாய் நுழைந்துவந்து புகுந்த கள்ளச் சகோதரர் நிமித்தியமாகத்தானே.

௫. சுவிசேஷத்தினுடைய சத்தியம் உங்களிடத்திலே நிலைநிற்கத்தக்கதாக, அவர்களுக்கு நாங்கள் ஒருநாழிகையாகிலும் கீழ்ப்படிந்து இணங்கினதில்லை.

௬. விசேஷத்தவர்களென்றெண்ணப்பட்டபேர்களோவென்றால் முந்தியெப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் எனக்கென்ன கவலையில்லை, பராபரன் மனுஷமுகமாட்டம் பார்க்கிறவரல்ல, என்னோடேயென்றாலோ எண்ணிக்கையுள்ள பேர்கள் அதிகமொன்றும் போதிக்காமல்,

௭. சுன்னத்துள்ளவர்களிடத்திலே சுவிசேஷம் பேதுருவினம்பிக்கைக்கொப்புவிக்கப்பட்டதுபோலே சுன்னத்தில்லாதவர்களிடத்தில் அதுஎன் நம்பிக்கைக்கொப்புவிக்கப்பட்டதென்று நன்றாய்க் கண்டார்கள்.

௮. ஏனெனில் சுன்னத்துள்ளவர்களிடத்திலே அப்போஸ்தல ஊழியத்துக்கென்று பேதுருவுக்குள் பெலனாயிருந்தவர் புறசாதிகளிடத்திலே எனக்குள்ளும் பெலனாயிருந்தார்.

௯. எனக்களிக்கப்பட்ட கிருபையைத் தூண்களாகவெண்ணப்பட்ட யாக்கோபும் கேப்பாவும் யோ

வானு

ளாகுங் கண்டிருந்து, எனக்கும் பர்னபாவுக்கும், நாங்கள் புறசாதிகளிடத்திலுந் தாங்களோ சுன்னத்துள்ளவர்களிடத்திலும் பிரசங்கிப்பதென்று, அன்னியோன்னியத்துக்கடையாளமாக வலதுகைகளைக் கொடுத்தது,

௰. தரித்திரரைமாத்திரம் நினையுங்கோளென்றார்கள், அதை நான் செய்யச் சாக்கிரதைப்பட்டுமாயிருந்தேன்.

யூதருடைய முறைமைக்குள்ளாகக்கொள்ளாதபடிக்குப் புற
சாதியான விசுவாசிகளுக்குப் பேதுரு இடறலுக்கேதுவா
ளமாய் நடந்தபோது தான் அவனோடே எதிர்த்
துப்பேசின விபரங் குறித்துக்கொண்டிரு
க்கு.

௰௧. அன்றியும் பேதுரு அந்தியோகியாவுக்கு வந்தபோது, அவன்மேல் குற்றஞ்சுமர்ந்ததினாலே முகமுகமாய் அவனோடேதிர்த்தேன்.

௰௨. அதெதேனாலெனில் யாக்கோபண்டையிலிருந்து சிலர் வாராததுக்கு முன்னே புறசாதியாருடனே சாப்பிட்டான், அவர்கள் வந்தபோதோ, விருத்தசேதனமுள்ளவர்களுக்குப் பயந்து சாடையாய் விலகியிருந்தான்.

௰௩. மற்ற யூதரும் அவனோடே கூடமாயம்பண்ணிக்கொண்டிருந்தார்கள், பர்னபாவுமவர்களுடைய மாயத்தினாலே கூட இழுப்புண்டான்.

௰௪. ஆனாலவர்கள் சுவிசேஷத்திலுடைய உண்மைக்குத் தக்கதாகச் செவ்வையாய் நடவாததை நான் கண்டபோது, எல்லாருக்கும் முன்பாக நான் பேதுருவை நோக்கிச் சொன்னதாவது: யூதனாயிருக்கிற நீர் யூதமுறைமையாக அல்ல, புறசாதிமுறைமையாய் நடக்கிறீரே, நீர் புறசாதியாரை யூதமுறைமையாயிருக்கவருத்தம்பண்ணுவானேன்.

௰௫. நாம் புறசாதியாரில் பிறந்த பாவிகளாயிராமல் சுபாவத்தால் யூதராயிருந்து,

௰௬. * இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலேயொழிய நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாகுகிறதில்லையென்றறிந்து, நாமுமே நியாயப்பிரமாணத்தின் கிரியைகளாலல்ல, கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாகும்படிக்குக் கிறிஸ்து யேசுவின்பேரிலே விசுவாசிக்கிறோமே; ஏனென்றால் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளாலே ஒரு மாம்சமும் நீதியுள்ளதாகாதே.

* ரோ. ௩: ௨௮: ௪: ௫: எபே: ௨: ௮. ௯.

௰௭. இப்போது கிறிஸ்துவுக்குள் நீதிமான்களாகப்பார்க்கும் நாமும் பாவிகளாகக் கண்டுபிடிக்கப்பட்டாலப்படி, கிறிஸ்து பாவத்துக்கு ஊழியக்காரரோ, அல்லவே.

௰௮. ஏனென்றால் நான் இடித்துப்போட்டதுகளை மறுபடியுங் கட்டினால் என்னை நானே மீறினவனாகக் காண்பிக்கிறேனென்றேனே.

௰௯. நானே தேவனுக்கென்று [illegible] பிழைக்கும்படிக்கு நியாயப்பிரமாணத்துக்கு நியாயப்பிரமாணத்தாலே செத்தேனே.

௨௰. கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன். ஆனாலும் பிழைத்திருக்கிறேன், நானல்ல, கிறிஸ்து எனக்குள் பிழைத்திருக்கிறார். நான் இப்போ மாம்சத்திலே பிழைக்கிறதோவென்றால், என்னைச் சிநேகித்து எனக்காகத் தம்மைத்தானே ஒப்புக்கொடுத்தவராகிய தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலே பிழைத்திருக்கிறேன்.

௨௧. நான் [illegible] தேவனுடைய கிருபையைத் தள்ளேன், எதென்றால் * நியாயப்பிரமாணத்தினாலே நீதியுண்டானால் கிறிஸ்து விருதாவாய் மரித்தாரே.

* ரோ. ௨: ௰௩.

௩. அதிகாரம்.

நியாயப்பிரமாணத்துக்கல்ல விசுவாசத்தி
னாலேதான் [illegible]
பவுல் [illegible]
[illegible]
[illegible]
[illegible]

புத்தியில்லாத கலாத்தியரே, சத்தியத்துக்குக் கீழ்ப்படியாதபடிக்கு உங்களை மயக்கினவன் யார். யேசுக்கிறிஸ்து உங்களுக்குள்ளே சிலுவையில் அறையுண்டவராக உங்கள் கண்களுக்கு முன்பாக வெளிப்படுத்தப்பட்டாரே.

௨. இதை மாத்திரம் [illegible] நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே [illegible] விசுவாசத்தின் பிரசங்கத்தினாலே [illegible] பெற்றீர்களோ [illegible].

௩. இத்தனை புத்தியீனராயிருக்கிறீர்களா. ஆவியினாலே துவக்கின நீங்கள் இப்போ மாம்சத்திலே நிறைவேற்றுகிறீர்களா.

௪. இத்தனை பாடுகளை வீணாய்ப் பட்டீர்களோ, அது வீணாயிருந்தால் போமென்றேனே.

௫. ஆகையால் உங்களுக்கு ஆவியைக் கொடுத்து உங்களுக்குள்ளே வல்லமைகளை நடப்பிக்கிறவர் அதை நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே செய்கிறாரோ விசுவாசத்தின் பிரசங்கத்தினாலே செய்கிறாரோ.

௬. * அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டதென்றபடியினாலேயோ. * ௧. மோ. ௰௫: ௬.

௭. ஆகையால் விசுவாசமார்க்கத்தார்தானே ஆபிரகாமுடைய பிள்ளைகளென்று அறிகிறீர்கள்.

௮. அன்றியும் தேவன் விசுவாசத்தினாலே சாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னறிந்து

ஞாக

ஜிக்கிறாரே: * உனக்குள்ளே சகலசாதிகளும் ஆசீர்வதிக்
கப்படுமென்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்
னறிவித்தது. ௧. மோ. ௰௨: ௩.

௯. ஆகையால் விசுவாசமார்க்கத்தார் விசுவாசமுள்
ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்.

௰. ஏனென்றால் நியாயப்பிரமாணத்தின் கிரியைக்
காரரெல்லாரும் சாபத்துக்குக் கீழ்ப்பட்டிருக்கிறார்
கள். அதேதெனில் * நியாயப்பிரமாணப் புஸ்தகத்
தில் எழுதியிருக்கிறவைகள் எல்லாவற்றையுஞ் செய்யும்படி
யாய் அவைகளில் நிலைநிற்காதவனெவனோ அவன் சபிக்கப்
பட்டவனென்று எழுதியிருக்கிறது. * ௫. மோ. ௨௭: ௨௬.

௰௧. ஆனால் நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும்
பராபரனிடத்தில் நீதிமானாக்கப்படுகிறதில்லை என்கிற
து வெளியரங்கமாயிருக்கிறது, ஏனென்றால்: * விசுவாசத்
தினாலே நீதிமான் பிழைப்பான். * ஆபகூ. ௨: ௪.
ரோ. ௧: ௰௭.

௰௨. நியாயப்பிரமாணமோ விசுவாசமார்க்கமான
தல்ல; * அவைகளைச் செய்கிற மனுஷன் அவைகளாலே பிழைப்பான். * ௩. மோ. ௰௮: ௫.

௰௩. கிறிஸ்து நமக்காகச் சாபமாகி நம்மை நியாயப்பி
ரமாணத்தின் சாபத்துக்கு நீங்கலாக மீட்டுக்கொண்
டார். ஏனென்றால்: ** மரத்திலே தூக்கப்பட்டவனெவனோ அவன்
சபிக்கப்பட்டவனென்று எழுதியிருக்கிறது.

* ரோ. ௮: ௩. ௨. கொ. ௫: ௨௧. ** ௫. மோ. ௨௧: ௨௩.

௰௪. ஆபிரகாமின் ஆசீர்வாதம் கிறிஸ்து யேசுவி
னாலே சாதிகள் மேல்வரவும், நாம் வாக்குத்தத்தமா
கிய ஆவியை விசுவாசத்தினாலே பெறவுந்தானே.

௰௫. சகோதரரே, மனுஷமுறைமையாகச் சொல்லு
கிறேன்; உறுதிபண்ணப்பட்டதாகிய ஒரு மனுஷனுடை
ய உடன்படிக்கையை முதலாய் ஒருத்தனும் அவமாக்கு
கிறதில்லை... அதனோடே கூட்டுகிறதுமில்லை.

௰௬. ஆகையால் ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்
ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டது; சந்
ததிகளுக்கென்று அநேகங்குறித்துச் சொல்லாமல்
* உன் சந்ததிக்கென்று தனிவசனமாய்ச் சொல்லுகி
றார். அந்தச் சந்ததி கிறிஸ்துதானே. * ௧. மோ: ௨௨. ௰௮.

௰௭. ஆதலால் பராபரனாலே கிறிஸ்துவை நோக்கி முன்
உறுதிபண்ணப்பட்ட ஏற்பாட்டை * நானூற்று முப்
பது வருஷத்துக்குப் பிற்பாடு உண்டான நியாயப்பிர
மாணமானது வாக்குத்தத்தத்தைக் கழிக்கும்படியாய் உறு
த்தியமற்றதாக்காதென்கிறதைச் சொல்லுகிறேன்.

* ௨. மோ. ௰௨; ௪௰.

௰௮. ஏனென்றால் * நியாயப்பிரமாணத்தினாலே சுதந்
தரம் உண்டானால் அது வாக்குத்தத்தத்தினாலே உண்டா
யிராது. ஆபிரகாமுக்கோவென்றால் பராபரன் அதை
வாக்குத்தத்தத்தாலே அருளிச்செய்தார்.

* ரோ. ௪: ௰௩. ௰௪.

ஞாயப்பிரமாணம் பாவிகளைக் கிறிஸ்துவினிடத்துக்கு வழிநடத்தும் வாத்தியென்பது.

௰௯. பேப்போசம் ஞாயப்பிரமாணமேனத்துக்கு? அது வாக்குத்தத்தஞ்செய்யப்பட்ட சந்ததி வருமளவுமட்டாக மீறுதல்களினிமித்தியமாய் கூட்டப்பட்டது; தேவதூதரைக்கொண்டு * மத்தியஸ்தனுடைய கையிலே கட்டளையிடப்பட்டது. * ௨. மோ. ௨௰: ௰௮—௨௧.

௨௰. மத்தியஸ்தனோவென்றால் ஒருவனுடையவனல்ல; பராபரனோ ஒருத்தர்தானே.

௨௧. ஆயபோதும் ஞாயப்பிரமாணம் பராபரனுடைய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமோ? அல்லவே. ஏனென்றால் * உயிர்ப்பிக்கத்தக்க ஞாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டிருந்தால் நீதியானது மெய்யாய் ஞாயப்பிரமாணத்தினாலே உண்டாம்.

௨௨. வேத எழுத்தோவென்றால் யேசுக்கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே வாக்குத்தத்தம் விசுவாசிக்கிறவர்களுக்குக் கொடுக்கப்படும்படிக்கு * எல்லாரையும் ஏகமாய்ப் பாவத்தின் கீழ் அடைத்துப்போட்டது.

* ரோ. ௩: ௯.

௨௩. ஆகிலும் விசுவாசம் வருமுன்னே நாங்கள் வெளியாகப்போகிற விசுவாசத்துக்கென்று அடைக்கப்பட்டவர்களாய் ஞாயப்பிரமாணத்தின் கீழ் காவசப்பட்டிருந்தோம்.

௨௪. அப்படியே விசுவாசத்தினாலே நாங்கள் நீதிமான்களாவதற்கு ஞாயப்பிரமாணம் எங்களைக் கிறிஸ்துவினிடத்துக்கு வழிநடத்துகிற வாத்தியாயிருந்தது.

௨௫. விசுவாசம் வந்தபிறபாடோவென்றால், நாங்கள் இனி வாத்திக்குக் கீழானவர்களல்ல.

௨௬. ஏனென்றால் எல்லாரும் * கிறிஸ்து யேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே பராபரனுடைய பிள்ளைகளாயிருக்கிறீர்கள். * யோ. ௧: ௰௨.

௨௭. அதேதென்றால் * கிறிஸ்துவுக்குள்ளாக எத்தனைபேர் ஞானஸ்நானம்பெற்றீர்களோ, அத்தனைபேருங் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்கள்.

* ரோ. ௬: ௩.

௨௮. * இதிலே யூதனென்றுங் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றுந் தன்சுதந்திரக்காறனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; ஏனென்றால் நீங்களெல்லாருங் கிறிஸ்து யேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். * ௧. கொரி. ௰௨: ௰௩.

௨௯. நீங்கள் கிறிஸ்துவின் பார்சமேயானால், நீங்கள் ஆபிரகாமின் வித்துமாய் வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரருமாமே.

௪. அதிகாரம்.

தாயபிரமாணத்துக்குக் கீழானவர்கள் காரியக்காரருக்குக் கீழான குழந்தைக்கு ஒப்பிடப்பட்டது.

நான் சொல்லுகிறதேதெனில், சுதந்தரவாளி எல்லாத்துக்கும் எசமானாயிருந்தும், அவன் எத்தனை காலங் குழந்தையாயிருக்கிறானோ, அத்தனை காலம் அவனுக்கும் அடிமைக்கும் வித்தியாசமில்லாமல்,

௨. தகப்பன் குறித்த காலமட்டும் அவன் காரியக்காரருக்கும் வீட்டுவிசாரிப்புக்காரருக்குங் கீழாயிருக்கிறான்.

௩. அப்படியே நாங்களும் குழந்தைகளாயிருந்த போது, லோகத்தின் ஞானவழிபாடுகளுக்குக் கீழ் * அடிமைப்பட்டவர்களாயிருந்தோம். * ௩: ௨௩.

௪. ஆனால் தாயபிரமாணத்துக்குக் கீழானவர்களை மீட்டுக்கொள்ளவும் நாம் புத்திரசுவிகாரத்தை அடையவும்,

௫. பராபரன், காலம் நிறைவேறுதல் வந்த போது, ஸ்திரீயினிடத்திலே பிறந்தவரும் தாயபிரமாணத்துக்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை அனுப்பினார்.

௬. இப்போதும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினாலே: * அப்பா பிதாவே என்று கூப்பிடுகிற தம்முடைய குமாரனுடைய ஆவியைப் பராபரன் உங்கள் இருதயங்களிலே அனுப்பினார். * ரோ. ௮: ௰௫.

௭. ஆகையால் நீ இனி அடிமையல்ல, புத்திரனாயிருக்கிறாய்; * புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய் பராபரனுடைய சுதந்தரனுமாயிருக்கிறாய். * ரோ. ௮: ௰௭.

௮. அப்போதோ நீங்கள் பராபரனை அறியாமல் சுபாவத்தின்படி தேவர்களல்லாதவைகளுக்கு அடிமைகளாயிருந்தீர்கள்.

௯. இப்போதோ நீங்கள் பராபரனை அறிந்து, அல்லது பராபரனாலே தான் அறியப்பட்டிருக்கக் கொள்ள பெலவீனமும் வறுமையுமான ஞானவழிபாடுகளுக்குத் திரும்ப நூதனமாய் அடிமைப்பட்டிருக்க மனதாய் அவைகளுக்குள்ளபடி மறுபடியுந் திரும்புகிறீர்கள்.

௰. * நாட்களையும் மாதங்களையும் காலங்களையும் வருஷங்களையும் பார்க்கிறீர்கள்
* கொலோ. ௨: ௰௬.

௰௧. நான் உங்களிடத்திலே வீணாய்ப் பிரயாசப்பட்டேனோ என்று உங்களுக்காகப் பயந்திருக்கிறேன்.

௰௨. என்னைப்போலாகுங்கள், நான் உங்களைப் போலுமானேனே; சகோதரரே, உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன், எனக்கு நீங்கள் அநியாயம் ஒன்றுஞ்செய்ததில்லை.

௰௩. நான் முந்தின விசை மாம்ச பெலவீனமாய் உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தேனென்று அறிந்திருக்கிறீர்களே. * ௧. கொரி. ௨: ௩.

௰௪. அப்பொழுது மாங்கிஷத்திலுள்ள என்னுடை
யசோதனையை நீங்கள் அற்பமாய் எண்ணாமலும்
அரோசியாமலும், பராபரனுடைய தூதனைப்போ
லும் கிறிஸ்து யேசுவைப்போலும் என்னை ஏற்
றுக்கொண்டீர்கள். * யோவா. ௰௩: ௨௰.

௰௫. ஆகையால் எத்தனை பாக்கியவான்களாயி
ருந்தீர்கள் ஏனென்றால் கூடுமானால் நீங்கள் அப்பொ
உங்கள் சொந்தக் கண்ணைப் பிடுங்கி எனக்குக் கொடுப்பீர்க
ளென்று உங்களுக்குச் சாட்சியாயிருக்கிறேன்.

௰௬. நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொன்னபடி
யினாலேதான் உங்களுக்குச் சத்துருவானேனோ.

௰௭. அவர்கள் உங்களை நல்ல வைராக்கியமாய்
நாடாமல் நீங்கள் தங்களை நாடத்தக்கதாக எங்க
ளைப்புறம்பாக்குமனதாயிருக்கிறார்கள்.

௰௮. ஆனால் நான் உங்களண்டையிலிருக்கும்போது
மாத்திரமல்ல எப்போதும் நல்லமானதிலே வைராக்கி
யமாயிருக்கிறது நல்லது.

௰௯. * என் குழந்தைகளே, கிறிஸ்து உங்களில்
உருவேற்படுமட்டும் உங்களுக்காக மறுபடியுங்
கெர்ப்பவேதனைப்படுகிறேன். * க. கொ. ௪: ௰௫.

௨௰. ஆனால் நானிப்போ உங்களண்டையிலிருந்து
என் சத்தத்தை மாற்றிக்கொள்ள எனக்காசையுண்டு
ஏனென்றால் உங்களுக்காகச் சந்தேகப்பட்டிருக்கிறேன்.

தாயப்பிரமாணத்துக்குக் கீழானவர்கள்
ஆபிரகாமுக்கு அடிமைப்பெண்ணிடத்து
தலைப்பிறந்த சந்தானத்துக்கொப்பி
டப்பட்டது.

௨௧. தாயப்பிரமாணத்துக்குக் கீழாயிருக்க மன
துள்ள நீங்கள் தாயப்பிரமாணப் பொஸ்தகத்தைச்
சொல்லுகிறதைக் கேளீர்களோ என்றெனக்குச்
சொல்லுங்கோள்.

௨௨. அதேதென்றால் ஆபிரகாமுக்கு இரண்டு குமாரரி
ருந்தார்கள் என்றெழுதியிருக்குது * அடிமையானவளி
டத்திலே பிறந்தவனொருத்தனும் * அடிமையல்லாத சமுசாரி
யினிடத்திலே பிறந்தவனொருத்தனுந்தானே. * க. மோ. ௰௬:
௰௫. ** ௨௧: ௨. ௩.

௨௩. அடிமையானவளிடத்திலே பிறந்தவனோவெ
ன்றால் * மாங்கிஷத்தின்படியே பிறந்தான், அடிமையல்
லாதவளிடத்திலே பிறந்தவனோ ** வாக்குத்தத்தத்தினாலே
பிறந்தான். * ௰௬: ௧—௩. ** க. மோ. ௰௫: ௪. ௬.
௰௭: ௰௫. ௰௬. ௰௮: ௰.

௨௪. இவைகள் ஞானார்த்தமுள்ள காரியங்கள்: ஏனெ
ன்றால் இந்த ஸ்திரீகள் இரண்டேற்பாடுகளே, ஒன்று
அடிமைத்தனத்துக்குள்ளாகப் பிள்ளையைப் பெறுகிற
சீனாய்ப்பருவதத்தின் ஏற்பாடு, அது ஆகார்தானே.

௨௫. ஏனென்றால் ஆகாரென்கிறது அரபியிலுள்ள சீனாய்ப்
பருவதமாயிருக்குது. அது இப்போதிருக்கிற யெருச

லேமுக்குச்சரியாயிருக்குது. அதுதன்பிள்ளைகளோடேகூட அடிமைப்பட்டிருக்குது.

௨௬. ஆனால்* மேலான யெருசலேம் அடிமையல்லாதது; அதுநமக்கெல்லாந்தாயாயிருக்குது.

* எபி. ௰௨: ௨௨. அபி. ௩: ௰௨. ௨௧: ௨. ௰.

௨௭. ஏனெனில்:* பிள்ளைபெறாதமலடியே, மகிழ்ந்திரு; கெர்ப்பவேதனைப் படாதவளே, கெம்பீரமாய் எழும்பிச்சத்தமிடு; ஏனெனில் புருஷனுள்ளவளைப்பார்க்கிலும் அவாந்திரமானவளுக்கு அதிக பிள்ளைகளுண்டென்றெழுதியிருக்குது. * யெச. ரு௪: ௧.

௨௮. நாமோ சகோதரரே, ஈசாக்கைப் போல* வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாயிருக்கிறோம். * ரோம. ௯: ௭. ௮.

௨௯. ஆனாலப்போது மாம்சத்தின்படி பிறந்தவன் ஆவியின்படி பிறந்தவனை யப்படி* துன்பப்படுத்தினனே, அப்படியேயிப்போதும் நடக்குது.

* க. மோ. ௨௧: ௯.

௩௰. ஆனாலும் வேதவாக்கியமென்னசொல்லுது?* அடிமையானவளையும் அவள் மகனையும் புறம்பேதள்ளு; ஏனெனில் அடிமையானவளின் மகன் அடிமையல்லாதவளின் மகனோடேசுதந்தரவாளியாயிருப்பதில்லையென்று சொல்லுது. * க. மோ. ௨௧: ௰—௰௨.

௩௧. ஆகையால், சகோதரரே, நாம் அடிமையானவளுக்கல்ல, அடிமையல்லாதவளுக்கும் பிள்ளைகளாயிருக்கிறோம்.

ரு. அதிகாரம்.

விசுவாசத்தினாலுண்டான விடுதலையிலே நிலைநிற்கிறதுக்கான புத்தி.

ஆனபடியினாலே நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்தடிக்குள்ளாகாமல்,* கிறிஸ்துநம்மைவிடுதலையாக்கின நிலைமையிலே நிலைகொண்டிருங்கோள். * யோ. ௮: ௩௬.

௨. இதோ, நீங்கள் சுன்னத்துப்பண்ணிக்கொண்டால் கிறிஸ்து உங்களுக்கொரு பிரயோசனமுமாயிராரென்று பவுலாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௩. சுன்னத்துப்பண்ணிக்கொள்ளுகிற எவனொரு மனுஷனும் நியாயப்பிரமாணத்தை முழுதும் நிறைவேற்றக்கடனாளியென்று அப்படிக்கொத்தவனுக்கு மறுபடியுஞ்சாட்சியாக அறிவிக்கிறேன்.

௪. நியாயப்பிரமாணத்தினாலே நீதிமான்களாகவேண்டுமென்றிருக்கிறீங்களாகிய நீங்கள் கிறிஸ்துவை விட்டகன்று, கிருபைக்குப்புறம்பாக விழுந்தீர்கள்.

ரு. ஏனெனில் நாம் ஆவியிலே விசுவாசத்தினாலே* நீதியினம்பிக்கைக்குக்காத்திருக்கிறோம். * ௨. தீமோ. ௪: ௮.

௬. அதே

௬. அதேதென்னிலே கிறிஸ்துயேசுவுக்குள்ளே * சுன்னத்
தாகிலும் சுன்னத்தில்லாமையாகிலும் ஒன்றுக்கும் உ
தவாது; சிநேகத்தாலே பெலனைக் காட்டும் விசுவாச
மேயுதவும். * ௧. கொரி. ௭; ௰௯.

௭. நன்றாயோடினீர்கள்; சத்தியத்துக்குக் கீழ்ப்படி
யாதே போக உங்களைத் தடுத்தவனார்.

௮. இந்தப்போதனை உங்களையழைத்தவராலே உண்
டானதல்ல.

௯. புளித்ததாகிய கொஞ்சம் மா பிசைந்த மாவெல்
லாம் உப்பப்பண்ணுது. * ௧. கொ. ௫; ௬.

௰. நீங்கள் வேறெண்ணங்கொள்ளாதிருப்பீர்களெ
ன்று நான் கர்த்தருக்குள்ளாக உங்கள்மேல் நம்பிக்கை
யாயிருக்கிறேன், உங்களைக் கலக்குகிறவனெவனானாலு
ம் அவன் ஆக்கினையைச் சுமந்திருப்பான்.

௰௧. சகோதரரே, நானின்னுஞ் சுன்னத்தைப் பிரசங்கித்
தேனேயானால் நானினித் துன்பப்படுவானேன், அப்
போ சிலுவையின் இடறலொழிந்திருக்குமே.

* ௧. கொ. ௧; ௨௩.

௰௨. உங்களைக் கலக்கம் பண்ணுகிறவர்கள் தறிப்
புண்டுபோனாலு நன்றாயிருக்கும். சகோதரரே,
நீங்கள் விடுதலையாயிருக்க அழைக்கப்பட்டீர்
கள்.

விசுவாசத்தினுடனே ஞானத்துக்குடைய
மாம்சத்துக்கிசைய அல்லா
யாதபடிக்கு படித்தேனே
ன்று.

௰௩. இந்த விடுதலையை மாம்சத்துக்கிசையமாத்
திரமல்லப் பின்பாமல் சிநேகத்தினாலே ஒருவருக்கொரு
வர் ஊழியஞ்செய்யுங்கோள்.

௰௪. ஏனென்னில் உன்னைத்தான் உன்னைப்
போலே சிநேகிப்பாயாகவென்கிற ஒரே வாக்கியத்திலே
நியாயப்பிரமாணமெல்லாம் நிறைவேறுது.

௰௫. நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்
தீர்களேயானால் ஒருவராலே ஒருவர் அழிந்துபோகாதே
பாருங்கோள்.

௰௬. * மாம்சத்தின் இச்சையை நிறைவேற்றாமல்
ஆவியிலே நடந்துகொள்ளுங்கோளென்கிறேன்.

* ரோ. ௮; ௰௩.

௰௭. ஏனென்னில் மாம்சம் ஆவிக்கு விரோதமாக
வும் ஆவியோ மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்
குது; நீங்கள் வேணுமென்றதுகளை * செய்யாதபடிக்
கு இதுகள் ஒன்றுக்கொன்று எதிர்க்குது.

௰௮. * ஆவியினாலே நடத்தப்படுகிறீர்களேயானால் நீங்கள்
நியாயப்பிரமாணத்துக்குக் கீழானவர்களல்ல.

* ரோ. ௮; ௧. ௨.

௰௯. மாம்சத்தின்கிரிகைகளோ வெளி யரங்கமாயிருக்குது. அதாவது: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம்,

௨௰. விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வயிராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பேதகங்கள், மாறுகங்கள்,

௨௧. பொறாமைகள், கொலைகள், வெறிகள், வெருந்தீனிகள் முதலானதுகள்தானே; *இப்படிக்கொத்துகளைச் செய்கிறவர்கள் பராபரனுடைய ராச்சியத்தைச் சுதந்திரிப்பதில்லையென்று நான் முன்னே சொன்னது போலச்சொல்லியபடி இதுகளைக் குறித்து உங்களுக்கு முன்னறிவிக்கிறேன்.

* ௧. கொ. ௬: ௯. ௰. எபே. ௫: ௫. ௬. அபி. ௨௨: ௰௫.

௨௨. *ஆவியின் கனியோவென்றால் சிநேகம், சந்தோஷம், சமாதானம், நீடியசாந்தம், தயவு, நற்குணம், விசுவாசம், மெத்தனவு, இச்சையடக்கம்;

* எபே. ௫: ௯.

௨௩. *இப்படிக்கொத்தவர்களுக்கு யாதொரு பிரமாணம் விரோதமாகாது. * ௧. தீமோ. ௧: ௯.

௨௪. *கிறிஸ்துவின் பாரிசமானவர்களோ வெனில் மாம்சத்தை ஆசைகளோடும் இச்சைகளோடுங் கூடச் சிலுவையிலறைந்திருக்கிறார்கள். *ரோ. ௬: ௬.

௨௫. நாம் ஆவியிலே பிழைத்தால் ஆவியிலே நடக்கவுங்கடவோம்.

௨௬. *வீண்பெருமைக்காரராய் ஒருத்தரையொருத்தர் முனிவிடுகிறவர்களும் ஒருத்தருக்கொருத்தர் பொறாமைப்படுகிறவர்களுமாகாதிருக்கக்கடவோம். * பிலி. ௨: ௩.

௬. அதிகாரம்.

மெத்தனவுக்கும் மனத்தாழ்மைக்குந் தருமத்துக்கும் ஏவுகிறபுத்தி.

சகோதரரே, ஒருமனுஷன் யாதொரு குற்றத்திலே அகப்பட்டுக்கொண்டாலும், ஆவியைப்பெற்றிருக்கிறீங்கள் *மெத்தனவின் ஆவியாலே அப்படிக்கொத்தவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கோள். நீயுஞ் சோதிக்கப்படாதபடிக்கு உன்னையே நோக்கியிரு.

*சங்கீ. ௱௪௧: ௫.

௨. *ஒருத்தர்பாரங்களை ஒருத்தர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கோள். *ரோ. ௰௫: ௧.

௩. ஏனென்றால் ஒருத்தன் தான் ஒன்றுமல்லாதிருந்தும், தன்னையொருபொருட்டென்றெண்ணினால், தன்னைத்தானே மோசம்போக்குகிறான்.

௪. தன்தன் சுயக்கிரிகையை அவனவன் உத்தமமாக்கக்கக்கடவான், அப்போ மற்றவனைப் பார்க்கையி

அல்லாமல் தன்னிலேயே பார்க்கையிலே புகழ்ச்சியைப் பெறுவிப்பான்.

௫. ஏனென்றால் அவனவன் தன்தன் சுயபாரத்தைச் சுமப்பான்.

௬. வசனத்தின் உபதேசத்தைக் கேட்கிறவன் தன்னை உபதேசிக்கிறவனைச் சகல நன்மைகளிலும் பங்காளியாக்கக்கடவான்.

௭. மோசம்போகாதேயுங்கோள். பராபரன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; ஏனென்றால் மனுஷன் என்னத்தை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.

௮. தன் மாம்சத்தின் மேலே விதைக்கிறவன் மாம்சத்தினாலே அழிவை அறுப்பான்; ஆவியின் மேலே விதைக்கிறவனே ஆவியினாலே நித்திய சீவனை அறுப்பான்.

• ஷெ. அ: ௰௩.

௯. ஆனால் நன்மைசெய்கிறதிலே சோர்ந்துபோகாதிருக்கக்கடவோம், ஏனென்றால் தளர்ந்துபோகாதிருந்தோமானால் ஏற்றகாலத்திலே அறுப்போம்.

• ௨. தெச. ௩: ௰௩.

௰. ஆகையால் நமக்குக் காலமிருக்கக்கொள்ள யாவருக்கும், விசேஷமாய் விசுவாசத்தின் வீட்டாருக்கும் நன்மைசெய்யக்கடவோம்.

நிருபத்தின் முடிவு.

௰௧. என் கைகள் எழுத்தாய் எத்தனை எழுதினேனென்று பாருங்கோள்.

௰௨. எவர்கள் மாம்சத்திலே நல்வேஷமாயுக் காணப்படவேண்டுமென்றிருக்கிறார்களோ, அவர்கள் கிறீஸ்துவினுடைய சிலுவையினிமித்தம் பாடுகளைப் படாதிருக்கிறதுக்குமாத்திரமே உங்களுக்கு விருத்தசேதனம் பண்ணிக்கொள்ள வலுவந்தம் பண்ணுகிறார்கள்.

௰௩. ஏனென்றால் சுன்னத்தடைந்திருக்கிறவர்கள் தாங்களும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாதிருக்கிறார்கள், ஆனாலும் அவர்கள் உங்கள் மாம்சத்தைக் குறித்து மேன்மைபாராட்டும்படிக்கு நீங்கள் சுன்னத்துப் பண்ணிக்கொள்ள வேணுமென்றிருக்கிறார்கள்.

௰௪. எனக்கோவென்றால் நம்முடைய கர்த்தராகிய யேசுகிறீஸ்துவினுடைய சிலுவையிலொழிய வேறொன்றிலும் மேன்மைபாராட்டல் வேண்டாம். அவராலே எனக்கு லோகம் சிலுவையில் அறையுண்டிருக்குது; லோகத்துக்கு நானும் அப்படியிருக்கிறேன்.

• ௬. கொரி. ௫: ௰௭. ௨: ௨.

௰௫. அதேதென்றால் கிறீஸ்துயேசுவுக்குள் சுன்னத்து சாக்ஷாத் சுன்னத்தில்லாமையுமாகிறதும் ஒன்றுக்கு முதவாது; புதுச்சிருஷ்டியே உதவும். • ௨. கொ. ௫: ௰௭.

௰௬. எவர்கள் இந்தப் பிரமாணத்தின்படியே நடக்கிறார்களோ, அவர்கள்மேலும், பராபரனு

னுடைய இஸ்ரவேலின் மேலுஞ் சமாதானமுமிரக்கமுமிருக்கக்கடவது.

௰௭. இனிமேலொருவனும் என்னை வருத்தமுண்டாக்க வேண்டாம்; ஏனென்றால் நான் கர்த்தராகிய யேசுவினுடைய அச்சடையாளங்களை என் சரீரத்திலே சுமந்து கொண்டிருக்கிறேன்.

௰௮. சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினுடைய கிருபை உங்களாவியுடனேகூடயிருக்கக்கடவது. ஆமென்.

ரோமாவிலிருந்து கலாத்தியருக்கெழுதினது.

அப்போஸ்தலனாகிய பவுல்

எபேசியருக்கெழுதின

நிருபம்.

௧. அதிகாரம்.

யூதருக்கும்புறசாதிகளுக்கும் ஏகமாயக்கிலே
ஆம் பராபரனுடைய கிருபையின்
மேன்மையைத்துதித்து
பிக்கிறது.

பராபரனுடைய சித்தத்தினாலே யேசுக்கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல், எபேசுவிலே கிறிஸ்துயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கெழுதுகிறதாவது:

௨. * நம்முடைய பிதாவாகிய பராபரனாலுங் கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையுஞ் சமாதானமுமுண்டாகக்கடவது. * கொலோ. ௧: ௨.

௩. பரமண்டலங்களில் நம்மைக் கிறிஸ்துவுக்குள் சகலஞான ஆசீர்வாதத்தினாலும் ஆசீர்வதித்த பராபரனும் நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினுடைய பிதாவுமானவர் * ஸ்தோத்திரிக்கப்படுவர்.

* ௧. பேது. ௧: ௩. ௪.

௪. எப்படியாக அவர் தமக்குமுன்பாக நாம் பரிசுத்தவான்களுந் திக்கில்லாமாசற்றவர்களுமாயிருப்பதற்கு * நம்மை லோகத்தோற்றத்துக்குமுன்னே அவருக்குள் தெரிந்துகொண்டு; * ௨. தீமோ. ௧: ௯.

௫. * பிரியமானவருக்குள் நாம் நம்முடைய மேலானவைகளினாலே தயவுடைய கிருபையினுடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக; * மத். ௩: ௰௭.

௬. நம்மைத்தம்முடைய நேசமான சித்தத்தின்படியே

யேசு

[illegible] * யோவா. க: யசு.

எ. [illegible] * கொலோ. க: யரு.

அ. [illegible]

கூ. * காலங்கள் நிறைவேறினபோது [illegible] * கலா. ச: ச. ரு.

ய. நாம் [illegible] தீர்மானித்திருந்த [illegible] * கொலோ. க: உரு. ௯.

யக. கிறீஸ்துவினாலே [illegible] அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக [illegible]

யஉ. [illegible]

யங. [illegible] * உ. கொரி. க: உக. உஉ.

யச. * [illegible] * தீத்து. உ: யச. க. பேது. உ: சு.

யரு. [illegible]

யசா. [illegible] * ரோ. க: ச. சு.

யஎ. [illegible] * சங். ௱ய: க.

யஅ. [illegible]

யகூ. [illegible]

 [illegible]

லத்தின்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்தில் காண்பிக்கிற தம்முடைய வல்லமையினுடைய மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும் நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்கு வெளிச்சமாக்கப்பட்ட புத்தியின் கண்களைக் கொடுக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

௨௰. இவரை அவர் பரமண்டலங்களில் தம்முடைய வலதுபாரிசத்திலே,

௨௧. * எல்லாத் துரைத்தனத்துக்கும் அதிகாரத்துக்கும் வல்லமைக்கும் கர்த்தத்துவத்துக்கும் இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மகா மேலாக உட்கார்த்தி,

* பிலி. ௨: ௯—௰௧. கொலோ. ௨: ௰.

௨௨. * எல்லாவற்றையும் அவர் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, அவரை எல்லாவற்றுக்கும் மேலான தலையாகச் சபைக்குக் கொடுத்தார். * சங்கீ. ௮: ௭—௯. மத். ௨௮: ௰௮.

௨௩. இது எல்லாரிலும் எல்லாவற்றையும் நிரப்புகிற அவருடைய நிறைவாகிய சரீரமாயிருக்கிறது.

௨. அதிகாரம்.

அப்பாவமும் யூதர் புறசாதிகள் மீதிலுமுள்ள பராபரனுடைய பொதுவான கிருபையைத் தெரியக்காட்டினது.

அக்கிரமங்களாலும் பாவங்களாலும் * மரித்தவர்களாயிருந்த உங்களையும் உயிர்ப்பித்தார்.

* கொலோ. ௨: ௰௩.

௨. அதுகளிலே முற்காலத்திலே * இந்தலோகத்தின் வழக்கத்தின்படியேயும், அவிசுவாசத்தின் பிள்ளைகளிலே இப்போது கிரியைநடப்பிக்கிற ஆகாசத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவியின்படியேயும் நடந்துகொண்டீர்கள். * ௧. யோவா. ௫: ௰௯.

௩. அவர்களுக்குள்ளே நாங்களெல்லாரும் முற்காலத்திலே நாங்கள் மாமிச இச்சைகளின்படி நடந்து, மாமிசமும் சிந்தையும் விரும்பினதுகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலே கோபத்துக்குள்ளானவர்களாயிருந்தோம்.

* ரோ. ௩: ௨௩. ௨௪.

௪. * கிருபையில் ஐசுவரியமுள்ள பராபரனோவென்றால் நம்மைச் சிநேகித்த தம்முடைய ** மிகுந்த சிநேகத்தினாலே, * சங்கீ. ௱௩: ௮. ** யோவா. ௩: ௰௬.

௫. பாவங்களால் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே ரட்சிக்கப்பட்டீர்கள்.

௬. நம்மைக் கிறிஸ்து யேசுவுக்குள் கூடவும் எழுப்பி * பரமண்டலங்களிலே கூடவும் உட்கார்த்தினார்.

* பிலி. ௩: ௨௰.

௭. நாமக் கிறிஸ்துயேசுவுக்குள் நம்முடைய பேரிலே வைத்த தயவினாலே தம்முடைய கிருபையினுடைய மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களிலே திஷ்டாந்தமாய்க் காண்பிக்கத்தக்கதாகவே.

௮. ஏனென்றால் * கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களாலுண்டானதுமல்ல, இது பராபரனுடைய ஈவு.

* தீத்து. ௩: ௪—௭.

௯. யாதொருத்தனும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரிகைகளாலுண்டானதல்ல.

௰. ஏனென்றால் நாம் கிறிஸ்துயேசுவுக்குள் நற்கிரிகைகளுக்குச் சிருஷ்டிக்கப்பட்டு, * பராபரனுடைய செய்கையாயிருக்கிறோம்; அதுகளிலே நாம் நடக்க அவர் முன்னுக்கு அதுகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.

* சங்கீ. ௱: ௩. ௨. கொரி. ௫: ௰௭.

௰௧. ஆனபடியினாலே முன்னமாம்சத்திலே புறஜாதியாராயிருந்து, மாம்சத்திலே கையினாலே செய்யப்பட்ட சுன்னத்துடையவர்களாலே சுன்னத்தில்லாதவர்களென்னப்பட்ட நீங்கள்,

௰௨. அக்காலத்திலே கிறிஸ்துவையில்லாதவர்களுமாய், இஸ்ரவேலுடைய ஜனங்களின் ஆட்சிக்குப் புறம்பான அன்னியருமாய், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைக்குப் பரதேசிகளுமாய், நம்பிக்கையில்லாதவர்களுமாய், இந்த லோகத்திலே பராபரனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைவுகூருங்கோள்.

௰௩. இப்பொழுதோவென்றால் முந்தித்தூரமாயிருந்த நீங்கள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கிறிஸ்துயேசுவுக்குள்ளாகக் கிட்டினவர்களானீர்கள்.

௰௪. ஏனென்றால் * அவர் நம்முடைய சமாதானமாயிருந்து, இரண்டையும் ஒன்றாக்கி, பகையான நடுச்சுவரைத் தகர்த்து, * யேசா. ௯. ௬: ௭.

௰௫. சட்டங்களாகிய கற்பனைகளின் நியாயப்பிரமாணமென்கிற பகையைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்துப்போட்டார்; தாம் சமாதானம்பண்ணி, இருதிறத்தாரையுந் தமக்குள் * ஒரே புதுமனுஷனாகச் சிருஷ்டிக்கத்தக்கதாகவும், * ௧. கொரி. ௰௨: ௰௩.

௰௬. பகையைத் தம்மாலே கொன்று, சிலுவையினாலே ஒரே சரீரத்திலே இருதிறத்தாரையும் பராபரனுக்கு ஒப்புரவாக்குகிறதற்குமே.

௰௭. அவர் வந்து, தூரமாயிருந்த உங்களுக்குங் கிட்டயிருந்தவர்களுக்கும் * சமாதானத்தைச் சுவிசேஷமாய் அறிவித்தார். * யேசா. ௫௭: ௰௯.

௰௮. ஏனென்றால் அவராலே நாமிருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே * பிதாவினிடத்தில் சேருஞ்சேர்த்தலையடையப்பெற்றிருக்கிறோம். * ரோ. ௫: ௨.

௰௯. ஆகையால் நீங்களினி அன்னியரும் பரதேசிகளுமாயிராமல், * பரிசுத்தவான்களோடே ஏக ஊராருமாய் பராபரனுடைய வீட்டாருமாய், * கலா. ௬: ௰.

உ௰. அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகளென்கிறவர்களுடைய அஸ்திவாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு யேசுக்கிறிஸ்துதானே * கோடிக் கல்லாயிருக்கிறார். * யெசா. உ௮: ௰௬.

உ௧. அவர்மேல் மாளிகையெல்லாந் தம்மோடே சேர்வாய் இணைக்கப்பட்டு; கர்த்தருக்குள் பரிசுத்த தேவாலயமாக வளருது.

உ௨. அவர்மேல் நீங்களும் ஆவியிலே பராபரனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்படுகிறீர்கள்.

௩. அதிகாரம்.

பராபரனுடைய பொதுவான கிருபையை
புறசாதிகளிடத்திலே அறிவிக்கிறதுக்
குக் கர்த்தரால் அளிக்கப்பட்ட மேன்மையான
உத்தியோகமென்பது.

இதுநிமித்தியம் புறசாதியாராயிருக்கிற உங்களுக்காகக் கிறிஸ்துயேசுவினுடைய * கட்டுண்டவனான பவுலாகிய எனக்கு; * ௪: ௧.

உ. * உங்களை விசாரிக்கக் கொடுத்திருக்கிற தேவகிருபையினுடைய உக்கிராணம் இன்னதென்று கேட்டிருப்பீர்களே. * அப்போ. உ௨: உ௧.

௩. அதென்னவெனில், * புறசாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்திரரும் உடன் சரீரருமாய் அவர் கிறிஸ்துவுக்குள்ளே பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன் பங்காளிகளுமாயிருக்கிறார்களென்பது; * உ: ௰௩.

௪. இப்போ அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்குந் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியினாலே வெளிப்படுத்தியிருக்கிறதுபோல, வேறேகாலங்களிலே மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படாதிருந்த ரகசியத்தை; * ௧: ௯. ௰.

௫. அவர் எனக்கு, நான் முன் சுருக்கமாய் எழுதினதுபோல, வெளிப்படுத்தி அறிவித்தாரென்கிறதுதானே.

௬. அதை நீங்கள் வாசித்து, அதினாலே கிறிஸ்துவினுடைய ரகசியத்திலே எனக்குண்டான அறிவை உணர்வீர்களாம்.

௭. இந்தச் சுவிசேஷத்துக்கு நான் பராபரனுடைய வல்லமையுள்ள சத்துவத்தினால் எனக்களிக்கப்பட்ட அவர் கிருபையினுடைய ஈவின்படியே ஊழியக்காரனானேன்.

௮. பராபரன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்துயேசுவுக்குள் பண்ணின அநாதித் தீர்மானத்தின்படியே;

௯. இப்போ அவருடைய வெகு விதமான ஞானம் * பரமண்டலங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்குஞ் சபையினாலே தெரியவருகிறதுக்காகவும்,

* ௧. பேது. ௧: ௰௨.

௰. * எல்லாப் பரிசுத்தவான்களிலுஞ் சிறியவனாகிய எனக்கு, கிறிஸ்துவினுடைய ஆராய்ந்து முடியாத

அறிகுறியதுக்கு புறசாதிகளிடத்திலே சுவிசேஷமாய் அவ
ரைக்கிறதுக்கும். * ௧. கொலோ. ௰௫: ௬.

௰௧. யேசுக்கிறிஸ்து வைக்கோண்டுள்ளவர்களுக்குரிய கு
சீஷர்களுக்குப் பரகுருவானவர் ஆத்துமாக்களுக்குள் முக்கியமாய
மனந்திருந்தாத்தைப் பற்றிப் பெறுகிறதுக்கு ஞா
னமுள்ளவர்களுக்கும் சமாதானத்தைக் கிருபையை நின்
டைக்கொடுக்கிறது. * அப்போ. ௨௩: ௰௧.

௰௨. அவனுக்குள் நம்முடைய விசுவாசத்தினாலே தைரியமும் விசுவாசத்
தினால் நம்பிக்கையோடே சேருகிறதுக்கு உத்த
மனுமுண்டாயிருக்குது. * எபிரே. ௰: ௰௬—௨௨.

நீதிபோதுவானத்தைப் பின்பற்றுகிறது
அவர்களுக்கு இருக்கிற மேம்படியான பாக்கியம்
இன்னதென்று தெரியத்.

௰௩. ஆகையால் உங்கள் நிமித்தியமாய் நான் அனுப
விக்கிற உபத்திரவங்களிலே நீங்கள் தைரியம் கெட்டுப்போ
காதபடிக்கு வேண்டிக்கொள்ளுகிறேன், அதுகள் உங்
களுக்கு மகிமையாயிருக்குது. * ௧. தெச. ௩: ௩.

௰௪. இதுநிமித்தியமாக நான் பரமண்டலங்களிலும்
பூமியிலேயும் இருக்கிற அனைத்துக்கும்
நாமகாரணராகிய,

௰௫. நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினுடைய
பிதாவை நோக்கி என் முழங்கால்களை முடக்கி,

௰௬. நீங்கள் அவருடைய ஆவியினாலே உள் மனுஷனிலே
வல்லமையாய் பலப்படவும், * ௬: ௰.

௰௭. விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்க
ளிலே வாசமாயிருக்கவும், * யோவா. ௰௪: ௨௩.

௰௮. நீங்கள் அன்பிலே வேருன்றி அஸ்திவாரப்
பட்டவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங் கூட
அகலமும் நீளமும் ஆழமும் உயரமும் இன்னதென்று
அறிந்து,

௰௯. அறிவுக்கு மேலான கிறிஸ்துவினுடைய சிநே
கத்தை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், பரா
பரனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும்,
அவர் தம்முடைய மகிமையினுடைய ஐசுவரியத்தின்படி
யே உங்களுக்குக் கட்டளையிட வேண்டிக்கொள்ளுகிறேன்.

௨௰. ஆனால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதையும்
நினைக்கிறதையும் எல்லாம் பார்க்கிலும் மெத்தவும் அதி
கமாக நமக்குள் பெலனுக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு,

௨௧. சபையிலே என்றைக்கும் முள்ள சந்ததிகளெங்
கும் நடந்து முறைகள் எல்லாவற்றிலும் கிறிஸ்து யேசுவினா
லே மகிமையுண்டாவதாக ஆமென். * ரோ. ௰௬: ௨௭.

௬. அதிகாரம்.

பெற்றோருடைய கற்பனைக்கு அடங்கியவுள்ளிய
சீலனுக்குள் ஆகும் புத்தி.

இப்போதும் நீங்கள் அழைக்கப்பட்ட * அழைப்புக்குப் பாத்திரவான்களாய். * தீத்து. ௨: ௰௧—௰௩.

௨. * எல்லாமனத்தாழ்மையோடும் மெத்தனவும் நீண்டசாந்தத்தோடும் நடந்துகொண்டு, ஒருத்தரை யொருத்தர் சிநேகமாய்ப் பொறுத்திருந்து, * கொலோ. ௩: ௰௨—௰௪.

௩. சமாதானக் கட்டினாலே ஆவியினொருமையைக் காக்கக்கொள்வதற்குச் சாக்கிரதையாயிருக்க, கர்த்தருக்குள் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.

௪. * ஒரேசரீரமும் ஒரேஆவியுமுண்டு, அழைக்கப் பட்டீர்கள் ஒரே நம்பிக்கைக்குமழைக்கப்பட்டீர்கள். * ௧. கொரி. ௰௨: ௰௩.

௫. ஒரேகர்த்தரும் ஒரேவிசுவாசமும் ஒரேஞானஸ்நானமும்,

௬. * எல்லாருக்கும் ஒரேபராபரனும் பிதாவுமுண்டு, அவர் உங்களெல்லார் மேலுமிருக்கிறவரும், உங்களெல்லாரையுங்கொண்டு கிரியைநடப்பிக்கிறவரும் உங்களெல்லாருக்குள்ளுமிருக்கிறவருமாமே.

* மல்கி. ௨: ௰.

௭. ஆனால் * நம்மில் அவனவனுக்கு, கிறிஸ்துவினுடைய ஈவினளவுக்குத்தக்கதாய், கிருபைகொடுத்திருக்குது. * ரோ. ௰௨: ௬—௮.

௮. * அவர் உன்னதத்துக்கேறிச் சிறையாகுதலைச் சிறையாகப்போட்டு, மனுஷருக்கீவுகளைக் கொடுத்தாரென்கிறதினிமித்தஞ் சொல்லியிருக்குது.

* சங்கீ. ௬௮: ௰௮.

௯. ஆனால் அவர் முந்தி மகாத்தாழ்வான பூதலங்களிலே யிறங்கினபடியினாலே யல்லோ ஏறினார்.

௰. * இறங்கினவரே, எல்லாத்தையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களின்மேலும் ஏறினவருந்தான். * பிலி. ௨: ௮. ௯.

௰௧. நாமனைவருங் கிறிஸ்துவினுடைய நிறைவின் வளர்த்தியின் அளவாயிருக்கிற ஒரு புருஷனுக்கு, ஏக விசுவாசத்துக்கும் பராபரனுடைய குமாரனை அறிகிற அறிவுக்கும் வந்துசேருமட்டும்,

௰௨. அவரே பரிசுத்தவான்களுடைய சீர்பொருந்துதலுக்கும், கிறிஸ்துவினுடைய சரீரமானது கட்டப்படும் ஊழியத்தின் கிரியைக்கும்,

௰௩. * சிலரை அப்போஸ்தலராகவுஞ் சிலரைத் தீர்க்கதரிசிகளாகவுஞ் சிலரைச் சுவிசேஷகராகவுஞ் சிலரை மேய்ப்பராகவும் போதகராகவுங் கட்டளையிட்டார்.

* ௧. கொரி. ௰௨: ௨௮.

௰௪. நாமினி மனுஷருடைய சூதும் மோசம்போக்குகிறதற்கு வகைதேடுந் தந்திரமுமாகிய சகலவித உபதேசப் பெருங்காற்றினாலும் அலைபட்டு அடிபட்டுச் சுழலுகிற குழந்தைகளாயிராமல், * ௧. கொரி. ௰௪: ௨௰

௰௫. சிநேகத்திலே உண்மையாயிருந்து, * தலையா

கிய

யேசுக்கிறிஸ்துவுக்குள்ளாக எல்லாவற்றிலும் வளருக் கிறத்துக்குத்தானே. * கொலோ. ௧: ௰௮.

௰௬. அவராலே சரீரமனைத்தும் உதவியாயிருக்கிற சகலக்கணுக்களினாலே இசைவாய்க்கூட்டி இணைக்கப்பட்டு, தனக்குச்சேர்ந்த அளவுக்கடுத்தபடி உண்டாகு ம் ஒவ்வொரு அவயவத்தின் பலத்துக்குத்தக்கதாய் அன்பிலே செய்கிறதினாலே சரீரவளர்த்தியுண்டாகி றது.

சகலபாவங்களையும் அருவருத்தொதுக்கக்க னபுத்தி.

௰௭. இப்போதும் மற்றச்சாதிகள் புத்தியில் அந்தகா ரப்பட்டு, தங்கள் இருதயத்தின் கடினத்தினாலே தங்களிலி ருக்கும் அறியாமையினாலே பராபரனுடைய சீவனுக்குப் புறம்பானவர்களாயிருந்து,

௰௮. தங்கள் சிந்தனையினுடைய மாயையின்படியே நடக் கிறபோல, * நீங்கள் இனிநடவாதேபோங்களென்று கர்த்தருக்குள்ளே நானே சொல்லிச் சாட்சியுண்டாக எச்சரிக் கிறேன். * ௧. பேது. ௪: ௩.

௰௯. அவர்கள் உணர்ச்சியற்றுப்போய், * சகல அசுத்தத்தையும் ஆசையாய் நடப்பிக்க, தங்களைக் காம விகாரத்துக்கு ஒப்புக்கொடுத்தார்கள்.

௨௰. நீங்களோ இப்படியாகக் கிறிஸ்துவைக் கற்றுக்கொண்டதில்லை.

௨௧. முந்தின நடக்கையின்படி மோசம் போகிற இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு: * ரோ. ௬: ௬.

௨௨. * உங்கள் மனதின் ஆவியிலே புதிதாகி, * ரோ. ௰௨: ௨.

௨௩. மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் பரம னுசாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட * நவமான மனுஷ னைத் தரித்துக்கொள்ளவேண்டுமென்கிறதாக, * கொலோ. ௩: ௰.

௨௪. நீங்கள், யேசுவுக்குள் * மெய்யாயுண்டானபடி அவரைக்குறித்துக் கேள்வியாகி, அவராலே போதிக் கப்பட்டீர்களே. * யோவா. ௰௪: ௬.

௨௫. ஆனபடியினாலே பொய்யைக் களைந்து, அவனவன் தன் பிறனுடனே மெய்யைப் பேசுங்கோள், ஏனென்றால் ஒருவருக்கொருவர் அவயவங்களாயி ருக்கிறோம். * சகரி. ௮: ௰௬.

௨௬. * நீங்கள் சினமடைந்தாலும் பாவஞ்செய்யாதே யுங்கோள், உங்கள் எரிச்சலின் மேலே சூரியன் அஸ்த மிக்கவொட்டாமலும், * சங். ௪: ௫.

௨௭. * பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கோள். * ௧. பேது. ௫: ௮. ௯. யாக்கோ. ௪: ௭.

௨௮. திருடினவன் இனித்திருடாமல், குறைச்சலுள்ள வனுக்குக்கொடுக்கத்தக்கதாக, * கைகளினாலே நலமானவேலைசெய்து உழைக்கக்கடவான். * ௧. தெச. ௪: ௰௧. ௰௨.

௨௯. ஒரு துஷ்டவார்த்தையும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; விளக்கத்துக்கடுத்ததுக்கொண்டு கேட்கிறவர்கள் ஞானக்கிருபையடைகிறதுக்குத் தக்கதுமான நல்ல வார்த்தையுண்டானால் அதையே நீங்கள் பேசி,

* மத். ௰௨: ௩௬.

௩௰. நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற பராபரனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கோள். * ௧: ௰௩.

௩௧. சகல கசப்பும் மூர்க்கமும் கோபமும் கூக்குரலும் தூஷணமும் எல்லாத்துர்க்குணமுங்கூட உங்களைவிட்டு நீக்கப்படக்கடவது.

* கொலோ. ௩: ௮.

௩௨. நீங்கள் ஒருவரிலொருவர் தயவும் மனஉருக்கமுமாயிருந்து பராபரன் கிறிஸ்துவுக்குள் உங்களுக்கு மன்னித்ததுபோல ஒருவருக்கொருவர் மன்னியுங்கோள்.

௫. அதிகாரம்.

அப்பாலும் பரிசுத்த நடக்கைக்கான புத்தி.

ஆகையால் நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போலப் பராபரனைப் பின்பற்றுகிறவர்களாகி,

* மத். ௫: ௪௮.

௨. கிறிஸ்து நம்மைச் சிநேகித்து நமக்காகத் தம்மைத் தானே பராபரனுக்கு உகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்ததுபோல, நீங்களும் சிநேகத்திலே நடந்துகொள்ளுங்கோள்.

௩. ஆனாலும் பரிசுத்தவான்களுக்கு ஏற்கும்படியே, உங்களுக்குள் வேசித்தனமும் சகல அசுத்தமும் அல்லது பொருளாசையும் பேர்முதலாய்ச் சொல்லப்படாதிருப்பதாக. * கொலோ. ௩: ௫.

௪. வம்பும் பயித்தியப்பேச்சும் பரியாசமும் அப்படித்தான். அதுகள் ஏராத காரியங்கள். ஸ்தோத்திரமே ஏற்றது.

௫. ஏனென்றால் வேசிக்கள்ளன், அல்லது அசுத்தவான், அல்லது விக்கிரக ஆராதனைக்காரனுக்கு ஒப்பான பொருளாசைக்காரன் ஒருத்தனுக்கும் பராபரன் ராட்சியமாகிய கிறிஸ்துவின் ராட்சியத்திலே சுதந்தரமில்லையென்று அறிந்திருக்கிறீர்கள். * ௧. கொ. ௬: ௯. ௰.

௬. ஒருத்தரும் உங்களை வீண் வார்த்தைகளினாலே மோசம்போக்கவேண்டாம்; ஏனென்றால், இந்தக் காரியங்களினிமித்தியமாக அவிசுவாசத்தின் பிள்ளைகள் மேல் பராபரனுடைய கோபம் வரும்.

* கொலோ. ௩: ௬.

௭. ஆகையால் அவர்களுக்குப் பங்காளிகளாகாதேயுங்கோள்.

௮. ஏனெ

௮. ஏனென்றால் முன்காலத்திலே அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோவெனில் கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள், * வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கோள். * பிலி. ௨: ௰௫.

௯. ஏனென்றால் ஆவியின்கனி சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்குது.

௰. கர்த்தருக்குப் பிரியமானதேதென்று நீங்கள் சோதித்துப்பார்த்து,

௰௧. * கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடந்தையாயிராமல், அதுகளைக் கடிந்துகொள்ளுகிறவர்களாகத்தானிருங்கோள். * ௨. கொரி. ௬: ௰௪.

௰௨. ஏனென்றால் அவர்களால் ஒளிப்பிடமாய்ச் செய்யப்படுங்காரியங்களைச் சொல்லுகிறதும் லச்சையாயிருக்குது.

௰௩. ஆனால் அதுகளெல்லாம் வெளிச்சத்தினால் கடிந்துகொள்ளப்பட்டு வெளியரங்கமாம், ஏனென்றால் வெளியரங்கமாக்குகிறதெல்லாம் வெளிச்சமாயிருக்குது.

௰௪. * தூங்குகிற நீ முழித்து மரித்தோரை விட்டெழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று தேவன் சொல்லுகிறார். * யெச. ௬௰: ௧.

௰௫. ஆகையினாலே நீங்கள் ஞானமற்றவர்களைப் போலல்ல, ஞானமுள்ளவர்களைப் போல கவனமாய் நடந்துகொள்ளவகைபார்த்து,

௰௬. * காலத்தைத் தப்பாமல் பிடியுங்கோள், ஏனென்றால் நாட்கள் பொல்லாததாயிருக்குது.

* கொலோ. ௪: ௫.

௰௭. ஆகையால் நீங்கள் மதியற்றவர்களாகாமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்வுள்ளவர்களாகி,

௰௮. * கெட்டமார்க்கமுள்ள மதுபானவெறிகொள்ளாமல், ஆவியினால் நிறையப்பட்டு, * லூக். ௨௧:

௩௪—௩௫. யெச. ௫: ௰௧. ௰௨.

௰௯. * சங்கீதங்களாலும் கீர்த்தனங்களாலும் ஞானப்பாட்டுகளாலும் உங்களுக்குப் புத்தி சொல்லிக்கொண்டு, உங்களிருதயத்திலே கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி, * கொலோ. ௩: ௰௬. ௰௭.

௨௰. பிதாவாகிய பராபரனை நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவின் நாமத்திலே எப்பொழுதும் எல்லாத்துக்காகவும் மேலத்தோத்திரித்து,

௨௧. தெய்வப்பயத்தோடே ஒருத்தர்க்கொருத்தர் கீழ்ப்படிந்திருங்கோள்.

பெண்சாதிகளுக்கும் புருஷருக்குஞ்சொன்ன புத்தி.

௨௨. பெண்சாதிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறாப்போலே உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கோள். * ௧. பேது. ௩: ௧. கொலோ. ௩: ௰௮.

௨௩. ஏனென்றால் கிறிஸ்துசபைக்குத் தலையுஞ் சரீரத்துக்கு இரட்சகருமாயிருக்கிறதுபோலே, * புருஷன் பெண்சாதிக்குத் தலையாயிருக்கிறான்.

* க. கொரி. ௰௧: ௩.

௨௪. ஆனாலும் சபைக் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோலே பெண்சாதிகளுந் தங்களுடைய புருஷருக்கு எல்லாத்திலேயுங் கீழ்ப்படியவேணும்.

௨௫. புருஷரே, * உங்களுடைய பெண்சாதிகளைச் சினேகியுங்கோள், அப்படிக் கிறிஸ்துவுஞ் சபையைச் சினேகித்து, * கொலோ. ௩: ௰௯.

௨௬. தாம் அதைப் பரிசுத்தமாக்க, வசனத்தோடே கூடிய தண்ணீர் முழுக்கினாலே சுத்திகரிப்பதற்கும்,

* தீத். ௩: ௫.

௨௭. கறைதிரை முதலானதுகளில்லாமல் அதைப் பரிசுத்தமும் மிகுதியானதுமான மகிமையுள்ள சபையாகத் தமக்குத்தானே நிறுத்திக்கொள்ளவும், தம்மைத்தாமே அதுக்காக ஒப்புக்கொடுத்தார்.
* சங்கீ. ௪௫: ௰௪.

௨௮. அப்படிப் புருஷர் தங்களுடைய பெண்சாதிகளைத் தங்களுடைய சரீரங்களைப் போலே சினேகிக்கவேண்டியதாயிருக்குது. தன்னுடைய பெண்சாதியைச் சினேகிக்கிறவன் தன்னைத்தானே சினேகிக்கிறான்.

௨௯. ஏனென்றால் எவனும் எந்தக்காலத்துந் தன்னுடைய சரீரத்தைப் பகைத்தவனுயிரமில்லை, கர்த்தர் சபைக்குச் செய்கிறதுபோலே அதைப் போஷித்துக் காப்பாத்துகிறான்.

௩௰. ஏனென்றால் * நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களும் அவர் சதையும் அவர் எலும்புகளுமாயிருக்கிறோம். * க. கொரி. ௰௨: ௨௭.

௩௧. * இதுநிமித்தியமாக மனுஷன் தன் தகப்பனையுந் தாயையும் விட்டுத் தன் பெண்சாதியுடனே சேருவான், இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.
* க. மோ. ௨: ௨௪.

௩௨. இந்த ரகசியம் பெரியது, நானோ * கிறிஸ்துவையுஞ் சபையையுங் குறித்துச் சொல்லுகிறேன்.
* க. கொரி. ௬: ௰௭.

௩௩. ஆனாலும் நீங்களும் அவனவன் தன்தன் பெண்சாதியைத் தனைப்போலே சினேகிக்கக்கடவான், பெண்சாதியோ புருஷனுக்குப் பயந்திருக்கக்கடவாள்.

௬. அதிகாரம்.

பிள்ளைகளுக்கும் பெற்றாருக்கும் வேலைக்காரருக்கும் எசமான்களுக்குஞ் சொன்ன புத்தி.

பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கோள், ஏனென்றால் இது நீதி.
* கொலோ. ௩: ௨௰.

௨. * நீ நனறா யிருககிறதறகும உன நாளகளை பூமியிலே நீடிததிருக்கிறதறகும உன தகபபனையும உனதாயையுங கனமபணணு. * உ. மோ. ௨௰: ௰௨.

௩. இதுவாககுததததமுளள முதலாஙகறபனையா யிருககுது.

௪. * பிதாககளே, நீஙகள உஙகள பிளளைகளைக கோபபபடுததாமல, ** வாலததணடனையிலேயும *** கருததருடைய புததியிலேயும அதுகளை வளாவுஙகோள.

* கொலோ. ௩: ௨௧. ** வாககி. ௰௩: ௨௪.

*** ௫. மோ. ௬: ௭.

௫. வேலைககாரரே, மாஙகிஷததின படி சேமானனளாயிருக்கிறவர்களுககு நீஙகள கிறிஸததுவுககுக கீழபபடிகிறதுபோல, உஙகளிருதயங கபடமிலலாமையாய, பயததோடுமநடுககததோடுங்கீழபபடிந து, * கொலோ. ௩: ௨௨—௨௫. தீதது. ௨: ௯. ௰.

௧. பேது. ௨: ௰௮.

௬. மனுஷருககு இஷ்டமியககாரர் போல பார்வைக கூழியஞசெயயாமல, கிறிஸததுவின ஊழியககாரர் போல, மனதார பராபரனுடைய சிததததின படி செயது,

௭. நலமனதாயமனுஷருககென றலல, கருததருககென றூழியஞசெயது,

௮. அவனவன வேலைககாறனானாலுந தனனிசசைக காரனானாலும, எநதநனமைசெயகிறானோ, அதி னாலபலனை கருததரிடததிலே அடைவானென றறி யுஙகோள.

௯. * எசமானகளாகியநீஙகளும அவர்களுககசசப படியேசெயது, மிரட்டுதலைததவிழதது, உஙகளுககும எசமான பரமணடலஙகளிலிருககிறார், அவரிடததிலே பாரபட்சமிலலையென றறிநதுகொளளுஙகோள.

* கொலோ. ௪: ௧.

நருபத்தின முகிவு.

௰. இததககாரிய மெனனவெனறால, என சகோத ரரே, கருததரிலும அவருடைய பெலததின வலலமை யிலும பெலபபடுஙகோள.

௰௧. நீஙகள பிசாசின உபாயதநதிரஙகளோடெதிர்த துநிறககககூடுமபடிககு பராபரனுடைய சருவாயுத வறககததை தயுநதரிததுககொளளுஙகோள.

௰௨. ஏனெனறால ரததததோடும மாஙகிஷததோடு மலல, துரைததனஙகளோடும அதிகாரஙகளோடும, இபபிரபஞசயததினுடைய அநதகார லோகாதிபதிக ளோடும, பரமகாரியஙகளிலே பொலலாஙகுசெயகிற குமசுவிகளின ஆவிகளோடுமநமககுப போரிருக குது. * ௨. யோவ. ௰௪: ௩௰. ௨. கொ. ௪: ௪.

௰௩. ஆகையால பொலலாதநாளிலே நீஙகள எதிர்ககவும, எலலாததையுஞசெயது முடிததவர்க

ளாய் நிற்கவுங் கூடும்படிக்கு, பராபரனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கோள்.

௰௪. அப்படியாக நின்று நீங்கள் சத்தியத்தாலே உங்கள் அரையைக் கட்டினவர்களும், நீதியின் மார்க்கவசத்தை உடுத்தவர்களும், * ஏசா. ௰௧: ௫. ௫௯. ௰௭.

௧. பேது. ௧: ௰௩.

௰௫. கால்களிலே சமாதான சுவிசேஷத்துக்குள்ள ஆயத்தத்தைப் பாதரட்சையாகத் தொடுத்தவர்களுமாக நின்று,

* ஏசா. ௫௨: ௭.

௰௬. எல்லாத்துக்கும் மேலாக * விசுவாசத்தின் கேடயத்தைப் பிடித்துக்கொள்ளுங்கோள், அதினாலே நீங்கள் பொல்லாங்கனுடைய நெருப்பான அம்புகளெல்லாம் அவித்துப்போடலாம்.

* ௧. பேது. ௫: ௯.

௰௭. * ரெட்சிப்பின் தலைச்சோட்டையும், ** பராபரனுடைய வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் நீங்கள் எடுத்துக்கொண்டு, * ௧. தெச. ௫: ௮.

** எபிரே. ௪: ௰௨.

௰௮. * எல்லாக் காலத்திலும் ஆவியிலே சகல வேண்டுதலாலும் விண்ணப்பத்தாலும் செபம்பண்ணி, இதுக்காக எல்லா மன உறுதியோடும், சகல பரிசுத்தவான்களுக்காகவும் எனக்காகவுஞ் செய்யும் விண்ணப்பத்தோடும் விழித்துக் கொண்டிருங்கோள். * லூக். ௰௮: ௧. ௧. தெச. ௫: ௰௭.

௰௯. நான் தயிரியமாய் என் வாயைத் திறந்து, சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதுக்கு வசனம் எனக்குக் கொடுக்கப்படவும்,

௨௰. சங்கிலியால் கட்டுண்டு, அதற்குத் தானாபதியாயிருக்கிற நான் அதைச் சொல்லவேண்டியபடி தயிரியமாய்ச் சொல்லவுந்தானே. * ௨. கொ. ௫: ௨௰.

௨௧. ஆனால் என்னைச் செய்கிறதென்னவென்று உங்களுக்கும் என்னுடைய நடபடிகள் தெரியவரும்படிக்கு, அதெல்லாத்தையும் பிரியசகோதரனும் கர்த்தருக்குள் உண்மையுள்ள ஊழியக்காரனுமாகிய * தீக்கிக்கு உங்களுக்கு அறிவிப்பான். * அப். ௨௰: ௪. கொலோ. ௪: ௭.

௨௨. நீங்கள் எங்கள் செய்திகளை அறியவும் அவன் உங்கள் இருதயங்களைத் தேற்றவுந்தானே அவனை உங்களண்டைக்கு அனுப்பினேன்.

௨௩. பிதாவாகிய பராபரனாலும் கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினாலும் சகோதரருக்கு விசுவாசத்தோடே கூடச் சமாதானமுஞ் சிநேகமும் உண்டாக்கக்கடவது.

௨௪. நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவை அழியாச் சிநேகமாய்ச் சிநேகிக்கிற அனைவரோடுங்கூடக் கிருபை இருப்பதாக. ஆமென்.

ரோமாபுரியிலெழுதித் தீக்கிகையிலே ஏபேசியருக்கனுப்பினது.

அப

அபபோஸதலனாகிய பவுலு

பிலிபபியருககெழுதின

நிருபம.

க. அதிகாரம.

அவர்களுடையநற்சீரினிமிததியம.
பவுலுதனசநதோஷததைக
காணபிததது.

யேசுக்கிறிஸதுவின ஊழியககாரராகிய பவுலுவுந
தீமோததேயும, பிலிபபிபபட்டணததிலேகிறிஸதுயே
சுவுககுளளாயிருககிற பரிசுததவானகளெலலாருக
கும, கணகாணிகளுககும ஊழியககாரருககுஙகூட
எழுதுகிறதாவது:

உ. நமமுடையபிதாவாகியபராபரனாலுங கர்ததராகிய
யேசுககிறிஸதுவினாலும உஙகளுககு கிருபையுஞசமா
தானமுமஉணடாககடவது.

ங. முதலநாளதுவககி யிதுவரைககுமநீங
களசுவிசேஷததுககாகவுணணியவுணணிய ஐயிககமான
வர்களானறு,

ச. நானுஙகளைநினைககிறபோதெலலாமென
பராபரனைஸதோததிரிககது,

ரு. உஙகளனைவருககாகவும நானபணணுகிற
எலலாசசெபததிலுமெபபோதுஞ சநதோஷததுட
னேவிணணபபஞசெயது,

சா. உஙகளிலேநறகிரிகைகயைசதுவககினவர் அதைக
யேசுககிறிஸதுவின நாளமட்டாசமுடியநடததுவாரு
வாரெனகிறதைசயேநமபியிருககிறேன.
* யோவா. சா: உசு.

எ. எனகட்டுகளிலும, நானசுவிசேஷததுககாக
உததரவுசொலலியதைததிடபபடுததுகிறதிலும, நீஙக
ளனைவருமெனனோடேகூடககிருபையிலேஐயிககமா
யிருககிறவர்களானதால உஙகளைநானெனனிருதயத
திலசேர்ததுககொணடிருககிறபடியினாலே, அபபடி
உஙகளெலலாரையுஙகுறிதது நினைககிறதுஎனககு
நியாயமாயிருககிறது. * அபபோ. உஅ: யசா.

அ. ஏனெனறால, யேசுககிறிஸதுவின உருககமான
சிநேகததிலே உஙகளெலலார்மேலும எததனை
வாஞசையாயிருககிறேனெனகிறதுககு பராபரனா
னககுசசாட்சி.

கூ. மேனமேலுஙகள சிநேகமபததிகழுதிகமாயஅறிவி
லுமெலலாஉணர்ச்சியிலும பெருககவும,

ய. இநதபபிரகாரமாகநீஙகளநனமைதுனமையே
னவைகளை வேறுபடுததி, கிறிஸதுவின நாள
மட்டுககுநதுபபுரவானவர்களும இடறலறறவர்க
ளும,

௰௧. பராபரனுக்கு மகிமையுந்துதியுமாக யேசுக்கிறிஸ்துவினாலே நீதியின் கனிகளால் நிறைந்தவர்களுமாயிருக்கவுஞ் செய்யப்பண்ணுகிறேன்.

அவன் தன் உபத்திரவங்களிலும் வரும்
பிரயோசனத்தையும் தன்னுடைய
நம்பிக்கையையும் அவர்களுக்
கறிவித்து அவர்களை நிலை
வரத்துக் கேவினது.

௰௨. எனக்குச் சம்பவித்த காரியங்களோவெனில், சகோதரரே, *சுவிசேஷத்தினுடைய அதிகப்பிரபலியத்துக்காகத் தேறினதென்று நீங்கள் அறியவேணுமென்றிருக்கிறேன். * ஹா. ௨௧: ௰௩.

௰௩. என் கட்டுகள் கிறிஸ்துவுக்குள்ளானவைகளென்று, அரண்மனையெங்குமுள்ளவர்களுக்கும் மற்றெல்லாருக்கும் வெளியரங்கமாகி,

௰௪. கர்த்தருக்குள்ளான அனேக சகோதரரிற் சமானவர்கள் என் கட்டுகளாலே திடன் கொண்டு, வசனத்தை பயமில்லாமல் சொல்ல அதிகமாய்த் துணிந்திருக்கிறார்கள்.

௰௫. சிலரோ பொறாமையினாலும் விரோதத்தினாலும், சிலரோ நல்மனதினாலுங் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள்.

௰௬. அவர்களோ என் கட்டுகளோடே உபத்திரவங் கூட்டநினைத்து, சுத்தமாயல்ல, விரோதத்தினாலே கிறிஸ்துவை அறிவிக்கிறார்கள்.

௰௭. இவர்களோவெனில், நான் சுவிசேஷத்துக்காக உத்தரஞ்சொல்ல வைக்கப்பட்டவனென்றறிந்து சநேகத்தினாலே அறிவிக்கிறார்கள்.

௰௮. இப்போதுமென்ன, எப்படியாகிலும் மாயத்தினாலாகிலும் உண்மையினாலேயாகிலுங் கிறிஸ்து அறிவிக்கப்படுகிறாரே, இதிலே சந்தோஷப்படுகிறேன், இனியுஞ் சந்தோஷப்படுவேன்.

௰௯. ஏனெனில், நான் ஒன்றிலும் வெட்கப்பட்டுப் போகாமல், எப்போதும்போல இப்பொழுதும் எல்லாத் தயிரியத்துடனே, பிழைப்பினாலாகிலுஞ் சாவினாலாகிலுங் கிறிஸ்து என் சரீரத்திலே மகிமைப்பட்டுவாரென்கிற என்னுடைய வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கிந்தக்கதாய்,

௨௰. அது உங்கள் வேண்டுதலினாலும் யேசுக்கிறிஸ்துவினுடைய ஆவியின் உதவியினாலும் எனக்கு ரட்சிப்பாகமுடியுமென்றறிவேன்.

௨௧. ஏனெனில் * கிறிஸ்து எனக்கு சீவன், சாவு எனக்கு ஆதாயம். * கலா. ௨: ௨௰.

௨௨. ஆகிலும் மாம்சத்திலே பிழைத்திருக்கிறதே எனக்குக் கிரியையின் பலனுள்ள காரியமாயிருக்கக்கொள்ள, என்னதைத் தெரிந்துகொள்ளுவேனென்றறியேன்.

௨௩. ஏனெனில் இரண்டுக்குமுள்ளே நெருக்குண்டு, பிரிந்துபோய், கிறிஸ்துவுடனே யிருக்கவெனக்கா

ஷயிருக்குது; ஏனெனில் அது மெத்தவுந் தகவுள்ளது.
* ௨. கொ. ௫: ௮. ஊ. ௨௩: ௬௩.

௨௪. மாம்சத்திலே தரித்திருக்கிறதோவென்றால் உங்களுக்காக அதிக தேவையாம்.

௨௫. இப்போதும் நான் மறுபடியும் உங்களண்டைக்கு வருகிறதினாலே என்னிமித்தம் உங்களுடைய மகிழ்ச்சி கிறிஸ்து யேசுவுக்குள் பெருகும்படிக்கு,

௨௬. நான் உங்கள் விசுவாசத்தின் வளர்த்திக்காகவுஞ் சந்தோஷத்துக்காகவுந் தரித்து, உங்களெல்லாரோடுங்கூட இருப்பேனென்று நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்.

௨௭. ஆனால், நான் வந்து உங்களைக் கண்டாலும், நான் தூரமாயிருந்தாலும், நீங்கள் ஒரே ஆவியிலே நிலைத்து, ஒரே ஆத்துமத்தினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்துக்காகக் கூடப் போராடி, எதிர்க்கிறவர்களாலே ஒன்றிலும் மிரளாதிருக்கிறீர்களென்கிறதாய் உங்கள் செய்திகளை நான் கேட்கும்படிக்குக் கிறிஸ்து சுவிசேஷத்துக்குப் பாத்திரமாக மாத்திரஞ் சஞ்சரியுங்கோள்.

௨௮. அவர்களெதிர்க்கிறது அவர்களுக்குக் கேட்டுக்கும், உங்களுக்கோ ரெட்சிப்புக்கும் அடையாளமாயிருக்குது; இது பராபரனுடைய செயல்தானே.

௨௯. ஏனெனில், கிறிஸ்துவின் பேரிலே விசுவாசிக்கிறது மாத்திரமல்ல, அவர் நிமித்தியமாகப் பாடுபடுகிறதும் உங்களுக்கருளப்பட்டிருக்குது.

௩௰. நீங்கள் *என்னிடத்திலே கண்டதும், என்னைக்குறித்து இப்போ கேழ்க்கிறதுமான அந்தப் போராட்டமே உங்களுக்குமுண்டு. * அப்போ. ௰௬: ௨௨. ௨௩.

௨. அதிகாரம்.

ஏகசிந்தைக்கும் மனத்தாழ்மைக்கும் ஏவின புத்தி.

இப்போதுங் கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், யாதொரு சிநேகமான தேறுதலும், ஆவியினுடைய யாதொரு அன்னியோன்னியமும், யாதொரு உருக்கமான பட்சமும் இரக்கங்களுமுண்டானால்,

௨. நீங்கள் ஏகசிந்தையும் ஏகசிநேகமுமாயிருந்து, ஒருமனமும் ஒருசிந்தையுமாயிருக்கிறதினாலே என் சந்தோஷத்தை நிறைவேற்றுங்கோள். * ௧: ௨௭.

௩. *ஒன்றையும் வாதினாலே அல்லது வீண் பெருமையினாலே செய்யாமல், மனத்தாழ்மையினாலே **ஒருத்தரொருத்தர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணுங்கோள். * கலா. ௫: ௨௬. ** ரோம. ௰௨: ௰.

௪. *அவனவன் தனக்கானதுகளையல்ல, பிறருக்கானதுகளையும் நோக்கியிருங்கோள்.

* ௧. கொ. ௰: ௨௪.

௫. *கிறிஸ்து யேசுவிலிருந்த சிந்தையே உங்களிலுமிருக்கக்கடவது. * மத். ௰௧: ௨௯.

௬. அவர் *பராபரனுடைய ரூபமாயிருந்தும், பராபரனுக்குச் சரியாயிருக்கிறதைக் கொள்ளையாடின உடைமையாக எண்ணாமல், * கொலோ. ௧: ௰௫.

௭. தம்மைத்தாம் வெறுமையாக்கி, * ஊழியக்காரனுருவெடுத்து, ** மனுஷர் சாயலாகி, * யெச. ௪௨: ௧

** யெச. ௫௩: ௩.

௮. வேஷத்திலே மனுஷனாகக் காணப்பட்டு, *தம்மைத் தாம் தாழ்த்தி, மரணபரியந்தம், சிலுவையினுடைய மரணபரியந்தமே கீழ்ப்படிந்தவரானார்,

* எபி. ௰௨: ௨.

௯. ஆனபடியினாலே பராபரன் * அவரை மேலுக்கு மேலாகவும் உயர்த்தி, * ஏபே. ௧: ௨௰—௨௨.

௰. *யேசுவின் நாமத்துக்கு வானோர் பூலோகத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், * யெச. ௪௫: ௨௩. ௨௪. அபி. ௫: ௪—௰௩.

௰௧. நாவு யாவும் யேசுகிறிஸ்து கர்த்தரென்று பிதாவாகிய பராபரனுக்கு மகிமையாக அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தை அவருக்கருளிச்செய்தார்.

பயத்தோடே ரட்சிப்பை நடப்பிக்கிறதுக்கும், தீங்கற்று நடக்கிறதுக்குஞ் சொன்ன புத்தி.

௰௨. ஆகையினாலே, என்னுடைய பிரியமானவர்களே, நான் அண்டையிலேயிருக்கும்போது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்போதும் வெகு அதிகமாய் நீங்கள் எப்போதும் கீழ்ப்படிந்ததுபோலே *பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் ரட்சிப்பை நடப்பியுங்கோள். * ௧. பேது. ௧: ௰௭.

௰௩. ஏனெனில் உத்தமப்பிரியமாய மனதையும் பெலத்தையும் உங்களில் உண்டாக்கிறவர் பராபரன்.

௰௪. நீங்கள் கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே, குற்றமுங்கவடுமில்லாதவர்களும், பராபரனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு,

௰௫. எல்லாத்தையும் *முறுமுறுப்புகளும் தர்க்கிப்புகளுமில்லாமல் செய்யுங்கோள்.

* ௧. பேது. ௪: ௯. ௰.

௰௬. நான் வீணாக ஓடினதும் வீணாக உழைத்ததுமில்லையென்கிற மகிழ்ச்சி எனக்குக் கிறிஸ்துவின் நாளிலே உண்டாக, நீங்கள் *சீவனுடைய வசனத்தைப் பிடித்திருந்து அவர்களுக்குள்ளே ** வெளிச்சங்களைப்போலவுலகத்திலே பிரகாசியுங்கோள். * ௨. தீமோ. ௧: ௰௩.

** மத். ௫: ௰௪. ஏபே. ௫: ௮.

தான் கொலைப்பட்டாலுந் தனுடனே சந்தோஷமாயிருக்க அவர்களை எழுப்பினது.

௰௭. ஆனாலும் உங்கள் விசுவாசத்தினுடைய பலியின் மேலும் ஊழியத்தின் மேலும் நான் ஊற்றப்பட்டுப் போனாலும் நான் மகிழ்ந்து, உங்களெல்லாரோடுங் கூடச் சந்தோஷமாயிருக்கிறேன். * ௨. தீமோ. ௪: ௬.

௰௮. அப்படியே நீங்களும் இதினிமித்தம் மகிழ்ந்து என்னுடனே கூடச் சந்தோஷமாயிருங்கோள்.

௰௯. ஆனாலுநான் உங்கள் செய்திகளையும் அறிந்து மனத்தேறுதலடையும்படிக்குச் சீக்கிரத்திலே தீமோத்தேயுவை உங்களண்டைக்கு அனுப்பலாமென்று கர்த்தராகிய யேசுவுக்குள் நம்பியிருக்கிறேன்.

௨௰. அதேதென்றால் உங்கள் காரியங்களை உத்தமமாய்ப் பிராமரிக்க, அவனைப்போல * எனக்குச் சர்மனதான் ஒருத்தனுமில்லை.

௨௰௧. ஏனென்றால் கிறீஸ்து யேசுவினுடையதுகளை யல்ல தங்களுடையதுகளை எல்லாருந் தேடுகிறார்கள்.

௨௰௨. அவனோ, என்னுடனே கூட, * தகப்பனுக்குப் பிள்ளைபோலே சுவிசேஷத்தில் ஊழியஞ் செய்தானென்று அவனுத்தமகுணத்தை அறிந்திருக்கிறீர்கள்.

* ௨. தீமோ. ௩: ௨.

௨௰௩. ஆகையால் என் சேதிகள் எப்படி நடக்குமென்று நான் கண்டவுடனே அவனை யனுப்பலாமென்று நம்புகிறேன்.

௨௰௪. ஆனால் நானதாகு சீக்கிரத்திலே வருவேனென்று கர்த்தருக்குள் நம்பியிருக்கிறேன்.

தானப்படியுமனுப்பவிட்ட எப்பாப்பிறோதீத்துக்காக எழுதினது.

௨௰௫. ஆனாலென் சகோதரனும் உடன் வேலையாளும் உடன் சேவகனும், * உங்களுக்கோ தானாபதியுமென் குறைச்சலுக்கு விசாரிப்புக்காரனுமான எப்பாப்பிறோதீத்துவை உங்களண்டைக்கு அனுப்பவேண்டியதாகக் கண்டேன். * ௪: ௰௮.

௨௰௬. ஏனென்றால் அவன் உங்களெல்லாரின்பேரிலும் வாஞ்சையுள்ளவனும், தான் வியாதிப்பட்டதை நீங்கள் கேட்டபடியினாலே மிகவும் வியாகுலப்படுகிறவனுமாயிருந்தான்.

௨௰௭. மெய்தான், 'சாகத்துக்கு வெகுசமீபமாய் வியாதிப்பட்டிருந்தான், ஆனாலும் பராபரன் அவனுக்கிரங்கினார், அவனுக்கு மாத்திரமோ அல்ல, எனக்குத் துக்கத்தின்மேல் துக்கம் உண்டாகாதபடிக்கு, எனக்கும் இரங்கினார்.

௨௰௮. ஆகையால் நீங்கள் அவனை மறுபடியுங் கண்டு சந்தோஷப்படவும், என் துக்கங் குறையவும், அவனை அதிதீவிரமாயனுப்பினேன்.

௨௰௯. ஆனபடியினாலே நீங்கள் அவனைக் கர்த்தருக்குள்

எல்லாச்சந்தோஷத்தோடுமேற்றுக்கொண்டு, இப்படிக்கொத்தவர்களைக் கனம்பண்ணுங்கோள்;

* ௧. தெச. ௫: ௰௨. ௰௩.

௩௰. ஏனென்றால் எனக்குச்செய்யும் ஊழியத்திலே உங்கள் குறைவைத்தீர்க்கும்படிக்கு அவன் தன்பிராணனைச்சட்டைபண்ணாமல், கிறிஸ்துவின் வேலைக்காக மரணபரியந்தங் கிட்டியிருந்தான்.

௩. அதிகாரம்.

பவுலானவன் தன்னுடைய பிரசங்கத்துக்கெதிர்க்கிறவர்களுக்காக எச்சரிக்கையாயிருக்கச் சொல்லி, தன்னுடைய சுத்த சுவிசேஷமார்க்கத்தை மாதிரியாகக் காண்பித்தது.

குறைக்காரியமென்னவென்றால், என் சகோதரரே, கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கோள்; நான் அதே காரியங்களை உங்களுக்கெழுதுகிறது எனக்குச் சலிப்புண்டாக்காது, உங்களுக்கோவென்றால் நிச்சயமுண்டாக்குது. * ௨: ௰௮. ௬: ௬.

௨. நாய்களுக்கெச்சரிக்கையாயிருங்கோள், பொல்லாதவேலையாட்களுக்கெச்சரிக்கையாயிருங்கோள், சுன்னத்துக்காரர் செய்கிறதுண்டிப்புக்கெச்சரிக்கையாயிருங்கோள்.

௩. ஏனென்றால் மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியிலே பராபரனுக்கு ஊழியஞ்செய்து, கிறிஸ்து யேசுவுக்குள் மேன்மை பாராட்டுகிறோமே சுன்னத்துள்ளவர்கள். * ௫. மோ. ௩௰: ௬. யோ. ௪: ௨௪. ரோ. ௨: ௨௮. ௨௯.

௪. மெய்தான் மாம்சத்தின்மேலும் நம்பிக்கையாயிருக்கிறதுக்கு எனக்குமுண்டு; வேறொருத்தன் மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிருக்க நினைத்தால், நான் அதிகம்.

௫. * நான் எட்டாம்நாளிலே சுன்னத்துப்பண்ணப்பட்டவன், நான் இஸ்ரவேல் சாதியாகிய பென்யமீன் கோத்திரத்தான், நான் எபிரேயரிலே பிறந்த எபிரேயன், நியாயப்பிரமாணத்தைப் பார்த்தால் நான் ** பரிசேயன்.

* ௨. கொ. ௰௧: ௨௨. ** அப்போ. ௨௬: ௫.

௬. பக்திவயிராக்கியத்தைப்பார்த்தால் நான் * சபையைத் துன்பப்படுத்தினவன், நியாயப்பிரமாணத்திலுள்ள நீதியைப் பார்த்தால், நான் குற்றஞ்சாட்டலில்லாதிருந்தவன். * அப்போ. ௨௬: ௯—௰௧.

௭. ஆனாலும் * எனக்கு லாபமாயிருந்ததுகளைக் கிறிஸ்துவுக்காகச் சேதமென்றெண்ணினேன்.

* மத். ௰௩: ௪௪.

௮. ஆம் ஆம், என் கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவை * அறிகிற மேன்மைக்காக எல்லாத்தையுஞ் சேதமென்றெண்ணிக்கொண்டேயிருக்கிறேன்.

* யோவா. ௰௭: ௩.

௯. நான

௯. நான கிறிஸ்ததுவை ஆதாயப்படுத்திக்கொள்ளு
கிறதற்கும◆ நியாயப்பிரமாணத்திலுண்டான என்னு
டைய நீதியையல்ல கிறிஸ்ததுவைப்பற்றும் விசுவா
சத்தினால் வருகிறதும் விசுவாசத்தின்மேல் பராபரனா
லுண்டாயிருக்கிறதுமான நீதியையுடையவனாய்க்கொண்டிருக்கி
கிறிஸ்ததுவுக்குள் இருக்கிறவனென்று கண்டுபிடிக்
கப்படுகிறதுக்கும். ◆ ரோ. ௩: ௨௰.

௰. நான அவரையும◆ அவருடைய உயிர்த்தெழுதலின
பெலனையும அவருடைய பாடுகளின ஐக்கியத்தை
யும அறிகிறதுக்கும். நான மரித்தோருடைய உயிர்த்தெ
ழுதலுக்கு வந்துசேரலாமோவென்று அவருடைய
மரணத்துக்கொப்பாகிறதுக்கும்.

◆ ரோ. ௬: ௪. ௫.

௰௧. அவருக்காக எல்லாத்தையுஞ் சேதமென்று
விட்டேன். குப்பையுமாக எண்ணுகிறேன்.

௰௨. நானப்பொழுதே அதைப்பிடித்தவனல்லது
அப்பொழுதே முற்றுந் தேறினவனென்று சொல்லா
மல் நான கிறிஸ்துயேசுவினாலே பிடியுண்டபடி
யால்◆ அதைப்பிடித்துக்கொள்ள ஆசையாய்ப்பின்தொட
ருகிறேன். ◆ யோவா. ௰௨: ௩௨. ◆◆

௧. தீமோ. ௬: ௰௪. ௰௨.

௰௩. சகோதரரே, நான அதைப்பிடித்துக்
கொண்டவனென்றெண்ணவில்லை.

௰௪. ஒன்று செய்கிறேன். பின்னானதுகளை மறந்து.
முன்னானதுகளை நாடி. கிறிஸ்துயேசுவுக்குள்ளான
பரம அழைப்பு◆ மேலான அழைப்பின்பந்தயத்துக்கே
லக்காகத்தொடருகிறேன். ◆ ௧. கொ. ௯: ௨௪—௨௭.

௰௫. ஆகையால் தேறினயாவருமிந்தச்சிந்தையா
யிருக்கக்கடவோம். நீங்கள் ஒருகாரியத்தில் வேறே
சிந்தையாயிருந்தால், அதையும் பராபரன் உங்களுக்குத்
தெளிவிப்பார்.

௰௬. ஆகிலும் நாம்வந்த அந்தப்பிரமாணத்திலேதானே
நடந்துகொண்டு◆ ஒரே சிந்தையாயிருக்கக்கடவோம்.

◆ ௧. பேது. ௩: ௮.

௰௭. சகோதரரே, நீங்கள் என்னைப் பின்
பற்றுகிறவர்களாகி. நாங்கள் உங்களுக்கு மாதிரியாய்ப்
படிநடக்கிறவர்களை நோக்குங்கோள்.

◆ ௧. கொ. ௪: ௰௬. ௰௧: ௧.

௰௮. ஏனெனில், அனேகர் நடக்கிறார்கள்;
அவர்கள் கிறிஸ்துவினுடைய சிலுவையின் பகைஞ
ரென்று உங்களுக்கு அநேகந்தரஞ்சொன்னேன். இப்போ
தோவெனில் அழுகையோடு சொல்லுகிறேன்.

௰௯. பூமிக்கடுத்த சிந்தையான அவர்களுடைய முடி
வு அழிவுதானே, அவர்கள் தேவன் வயிறு, அவர்கள்
மகிமை அவமானங்கள் லெச்சையிலிருக்குது.

◆ ரோ. ௰௬: ௰௮.

௨௰. நம்முடைய சஞ்சரிப்போவெனில்◆ பரமண்டலங்
களிலிருக்குது. அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிறயேசு

கிறி

ரக்ஷகராகிய யேசுக்கிறிஸ்து வரப்பார்த்துக்கொண்டிருக்கிறோம். * எபே. ௨: ௩. கொலோ. ௩: ௧—௪.

௨௧. அவர் தமக்கெல்லாத்தையும் கீழ்ப்படுத்திக்கொள்ள வல்லமையான தம்முடைய பெலத்தின்படியே நம்முடைய தாழ்மையான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்துக்கொப்பாக மறுரூபப்படுத்துவார்.

* ௧. கொ. ௰௫: ௪௩.

௪. அதிகாரம்.

அவர்கள் சமுத்துண நடக்கைக்குக் கேட்கிறது.

ஆனபடியினாலே, என் பிரியமும் வாஞ்சையுமான எனக்கு *சந்தோஷமும் கிரீடமுமான சகோதரரே, இந்தப்படிக்குக் கர்த்தருக்குள் நிலைகொண்டிருங்கோள், பிரியமானவர்களே. * ௧. தெச. ௨: ௰௯. ௨௰.

௨. கர்த்தருக்குள் ஏகசிந்தையாயிருக்க, எவோதியாளுக்கும் புத்தி சொல்லுகிறேன், சிந்திகேயாளுக்கும் புத்தி சொல்லுகிறேன்.

௩. என் உத்தம கூட்டாளியே, அவர்களுக்கு உதவியாயிருக்க உன்னையும் வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் க்லேமெந்தோடும் மற்றுமுள்ள என்னுடன் வேலையாளர்களோடுங்கூடச் சுவிசேஷத்திலே என்னுடனே போராடினார்கள்; அவர்கள் நாமங்கள் *சீவபுஸ்தகத்திலுள்ளது. * லூ. ௰: ௨௰. அறிவி. ௩: ௫. ௨௰: ௰௨. ௨௧: ௨௭.

௪. *கர்த்தருக்குள் எப்போதுஞ் சந்தோஷமாயிருங்கோள்; மறுபடியுஞ் சொல்லுகிறேன், சந்தோஷமாயிருங்கோள். * ௩: ௧.

௫. உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்குந் தெரிந்திருக்கக்கடவது. *கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.

* யாக. ௫: ௮. ௯.

௬. *நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாத்திலும் உங்கள் விண்ணப்பங்கள் ஸ்தோத்திரத்துடனே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் பராபரனுக்கு அறிவிக்கப்படக்கடவது.

* ௧. பேது. ௫. ௭.

௭. அப்போ *எல்லாப் புத்திக்கும் மேலான தெய்வ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து யேசுவுக்குள் காப்பாற்றும்.

* யோவ. ௰௪: ௨௭.

௮. இறுதிக்காரியமென்னவெனில், சகோதரரே, எதுகள் உண்மையாயிருக்குதோ, எதுகள் கனம், எதுகள் நீதி, எதுகள் கற்பு, எதுகள் பிரியம், எதுகள் நற்கீர்த்தியாயிருக்குதோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ, அதுகளையே சிந்தித்துக்கொண்டிருங்கோள்.

௯. நீங்

௯. நீங்கள் என்னிடத்திலே கற்று அடைந்து கேட்டுக் கண்டதுகளைச் செய்யுங்கோள், அப்போ சமாதானத்துடைய பராபரன் உங்களுடனே கூடயிருப்பார்.

அவர்களுடைய பணிகாணிக்கைகளைக் குறித்தெழுதினது.

௰. என்மேலுள்ள உங்கள் விசாரிப்பை நீங்கள் இப்போதிரும்பத் துளிர்க்கப் பண்ணினீர்களென்று கர்த்தருக்குள் மிகவுஞ் சந்தோஷப்பட்டேன், இதின்மேல் சிந்தையுமாயிருந்தீர்கள், ஆனால் உங்களுக்குச் சமயந் தட்டியாயிருந்தது.

௰௧. நான் அதை என் குறைச்சலினிமித்தியமாய்ச் சொல்லேன், ஏனென்றால் நான் எந்த யிருப்பிலிருந்தும் *மனரம்மியமாயிருக்கக் கற்றேன்.

* ௧. தீமோ. ௬: ௬.

௰௨. தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும் பெருகியிருக்கவும் எனக்குத் தெரியும், எங்கும் எல்லாத்திலும் திருப்தியாயிருக்கவும் பசியாயிருக்கவும் பரிபூரணமுடையவுந் தாழ்ச்சியுடையவும் போதிக்கப்பட்டேன்.

௰௩. என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவுக்குள் எனக்கெல்லாத்துக்கும் பெலனுண்டு.

* யோவ. ௰௫: ௫.

௰௪. ஆகிலும் நீங்கள் என் உபத்திரத்துக்கு உதவிக்கமன்னது நல்லாச் செய்கையாயிருக்குது.

௰௫. பிலிப்பியரே, சுவிசேஷத்தின் துவக்கத்திலே நான் மக்கெதோனியாவிலிருந்து புறப்பட்ட போது நீங்கள் மாத்திரமேயல்லாமல் ஒரு சபையும் கொடுக்கல் வாங்கல் காரிய எனக்கயிக்கமானதில்லையென்று நீங்களும் அறிந்திருக்கிறீர்கள்.

௰௬. ஏனென்றால் தெசலோனிக்கேக்கு நீங்கள் என் தாட்சிக்குத் தவிரேண்டுமொருதரமனுப்பினீர்கள்.

௰௭. நான் காணிக்கைகளை நாடுகிறவனாயிருக்கிறதைச் சொல்லேன், *உங்கள் கணக்குக்குக் கனிபெருகுவதை நாடுகிறேன். * ௨. கோ. ௯: ௯.

௰௮. ஆனால் எல்லாமெனக்கு வந்துசேர்ந்து பரிபூரணமாச்சுது, உங்களாலனுப்பப்பட்ட சுகந்த வாசனையும் பராபரனுக்குப் பிரியமான உகந்த பெலியுமானதுகளை நான் எப்பாப்பிறோதித்துவின் கையிலே வரப்பெற்றுக்கொண்ட போது, எனக்கு நிறைவுண்டாச்சுது.

௰௯. என் பராபரனே வென்றால் தம்முடைய ஈசுரியத்தின்படியே உங்கள் குறைவையெல்லாங் கிறிஸ்து யேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.

௨௰. ஆனால் நம்முடைய பராபரனுக்கும் பிதாவுக்கும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் மகிமையுண்டாகக்கடவது. ஆமென்.

௨௧. பரிசுத்தவானெல்லாம் கிறிஸ்து யேசுவுக்குள் வாழ்த்துவங்கோள். என்னுடனேயிருக்கிற சகோதரருங்களை வாழ்த்துகிறார்கள்.

௨௨. பரி

௨௨. பரிசுத்தவான்கள் அனைவரும் விசேஷமாக ராயன் அரமனையிலிருக்கிறவர்களும் உங்களை வினவுகிறார்கள்.

௨௩. நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினுடைய கிருபை உங்களனைவரோடுங்கூட இருக்கக்கடவது. ஆமென்.

ரோமாபுரியிலிருந்தெப்பாப்பிரோதீத்துவின் கையிலே பிலிப்பியாருக்கெழுதப்பட்டது.

அப்போஸ்தலனாகிய பவுல்

கொலோசேயருக்கெழுதின

நிருபம்.

௧. அதிகாரம்.

கிறிஸ்துமார்க்கத்துக்குட்பட்டவர்களுக்காகப் பராபரனை ஸ்தோத்திரித்து வேண்டிக்கொண்டது.

பராபரனுடைய சித்தத்தினாலே யேசுக்கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுலுஞ் சகோதரனாகிய தீமோத்தேயும்,

௰௪. ஆகையால் இளவயதுள்ள விதவைகள் * விவாகம்பண்ணவும், பிள்ளைகளைப் பெறவும், வீட்டை நடத்தவும், * விரோதியானவன் நிந்திக்கிறதற்கு ஒரு காரணத்தையும் கொடாதிருக்கவும் வேண்டுமென்றிருக்கிறேன்.

* ௧. கொ. ௭: ௯. ** தீத்து. ௨: ௭.

௰௫. ஏனெனில் சிலர் இப்பொழுதே சாத்தானைப் பின்பற்றி விலகிப்போனார்கள்.

௰௬. விசுவாசியான ஒருவனுக்காவது விசுவாசியான ஒருத்திக்காவது விதவைகளிருந்தால், அவர்களே அவைகளுக்கு உதவிசெய்யக்கடவர்கள்; சபையானது உண்மையாய் விதவைகளாயிருக்கிறவர்களுக்கு உதவிசெய்யும்படிக்கு, சபையின்மேல் பாரமில்லாதிருக்கவேண்டும்.

௰௭. * நன்றாய் விசாரணைசெய்கிற மூப்பர்கள், விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்கள், இரட்டிப்பான கனத்துக்குப் பாத்திரராக எண்ணப்படவேண்டும். * ௧. தெச. ௫: ௧௨. ௧௩.

௰௮. ஏனென்றால் * போரடிக்கிற மாட்டை வாய்கட்டாயாக என்றும், ** வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றும் வேதவாக்கியம் சொல்லுகிறதே.

* ௫. மோ. ௨௫: ௪. ௧. கொ. ௯: ௯. ** லூக். ௰: ௭.

௰௯. * இரண்டு மூன்று சாட்சிகளிருந்தாலொழிய

ருமூப்பனுக்கு விரோதமாகக் குற்றச்சாட்டையேற்றுக் கொள்ளாதே * ௫. மோ. ௰௯: ௰௫.

௨௰. பாவஞ்செய்கிறவர்களை, மற்றவர்களுக்கும் பயமுண்டாக, எல்லாருக்கும் முன்பாகக் கடிந்து கொள்.

௨௧. நீ பாரபட்சமாய் ஒன்றுஞ்செய்யாமல், முன் குறியீடப்பான தோஷநுதலின்றியே இதுகளைக் காத்துநடக்க, * பராபரனுக்குங் கர்த்தராகிய யேசுக் கிறிஸ்துவுக்கும், தெரிந்துகொள்ளப்பட்ட தூதருக்கும் முன்பாகத் திடசாட்சியாய் எச்சரிக்கிறேன்.

* ௨. தீமோ. ௪: ௧. ௨.

௨௨. * கைகளைச் சீக்கிரமாய் ஒருத்தன் மேலும் வைக்காதே, அன்னியபாவங்களுக்குப் பங்காளியுமாகாதே, உன்னைக் கற்புள்ளவனாகக் காத்துக்கொள்.

* ௪: ௰௪. அப். ௬: ௬. ௰௩: ௩.

௨௩. நீ இனித் தண்ணீர் குடிக்கிறவனாயிராமல், உன் வயிற்றுக்காகவும் உனக்கடிக்கடி வருகிற பெலவீனங்களுக்காகவும் கொஞ்சந் திராட்சப் பழரசங்கூட்டு.

௨௪. சிலமனுஷருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருந்து, குற்றச்சுமை முந்திக்கொள்ளும், ஆனால் சிலரைக் கள பின்செல்லுகிறதாயிருக்கும்.

௨௫. ஒருபிரகாரமாகவுஞ் சிலருடைய நற்கிரியைகள் வெளியரங்கமாயிருக்கிறது, அப்படியிராதது களும் மறைக்கப்பட்டிருக்கக்கூடாது.

௬. அதிகாரம்.

வேலைக்காரரையும், வேற்றுமைப்போதகர் பொருளாசைக்காரர் ஐசுவரியவான்களையுங் குறித்துப் புத்திமதிகளைச் சொல்லி, தீமோத்தேயுவைச் செய்யவேண்டிய காரியங்களுக்கேற்கத் தன்மைக்கேற்படுத்தினது.

நுகத்தடிக்குக் கீழான வேலைக்காரர் யாவரும் பராபரனுடைய நாமமும் உபதேசமுந் தூஷணிக்கப் படாதபடிக்கு, தங்களுடைய ஏசமான்களை எல்லாக் கனத்துக்கும் பாத்திரவான்களாக எண்ணக் கடவர்கள். * எபே. ௬: ௫—௮.

கொலோ. ௩: ௨௨—௨௫. தீத்து. ௨: ௯. ௧. பேது. ௨: ௰௮.

௨. ஆனாலும் அவர்களுக்கு விசுவாசிகளான ஏசமான்களுண்டோ, அவர்கள் சகோதரராயிருக்கிறதினாலே அசட்டைபண்ணாமல், விசுவாசிகளும் பிரியருமான நல்வேலையை அனுபவித்துக்கொள்ளுகிறவர்களுமாயிருக்கிறதினால் அதிகமாய்ச் சேவிக்கக்கடவர்கள். இப்படிப் போதித்துப் புத்திசொல்லு.

௩. ஒருத்தன் நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினுடைய ஆரோக்கியமான வசனங்களுக்குந் தேவபத்திக்கேற்ற உபதேசத்துக்கும் இசைந்தவனாயிராமல், * வேற்றுமையப் போதகம் பண்ணினால், * ௧: ௩.

௪. அவன் [illegible] * [illegible] பிரயோஜன [illegible] [illegible] [illegible] * ௩: ௭.

௫. [illegible] * [illegible] [illegible].

* தீத்து. ௩: ௰௧.

௬. * போதுமென்ற [illegible] * * தேவ [illegible]. * எபிரே. ௰௩: ௫.

[illegible]

௭. [illegible] [illegible] [illegible]. [illegible]

௮. * [illegible].

* ௧. [illegible]

௯. [illegible] [illegible].

* [illegible]

௰. [illegible] [illegible] உருவக்குத்திக்கொண்டார்கள்.

௰௧. [illegible] * ௨. தீமோ. ௨: ௨௨.

௰௨. * விசுவாசத்தின் நற்போராட்டத்தைப் [illegible] [illegible] * ௧. கொ. ௯: ௨௫. ௨௬. ௨. தீமோ. ௪: ௭ ௮.

௰௩. [illegible] * ௫. ௨௧.

௰௪. * [illegible] [illegible].

* [illegible] ** [illegible] ௨௭: ௰௧. யோவ. ௰௮: ௩௬. ௩௭.

௰௫. அந்தப்படிப்பிரசன்னமாகுதலை ஏகநாயகனாக
இம்பயுள்ளவனுந் தேசங்கட்டாத தேவசகத்தலோக
மாயிருக்கிறவனும் மனுஷரில் ஒருவனுங் கண்டதா
யிருக்கிறவனும் காணக்கூடாதவனுமானவர் | ௧: யா. பெருவ.

௫: ௰௯. ௨. தேமோ. ௩௩: ௨௰.

௰௬. சாசுவதத்தைக் கொடுக்கிற ஒருவரான பாக்கி
யமுள்ள ஏகச்சக்கராதிபதியுமானவர் காலங்களிலே
காண்பிப்பார். அவருக்குக் கனமும் நித்திய வல்லமை
யுண்டாவதாக | ஆமென். ௫. தேமோ. ௰: ௰.

௰௭. இம்மைப்பிரபஞ்சத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் மேட்டி
மை சிந்தையுள்ள வர்களாய்க் கனகவஸ்துக்களிலே பற்றுவையாமல்
நிலையில்லாத ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை
கொள்ளாமலே சகலத்தையும் அனுபவிக்கும்படி எங்களுக்கு

சங்கீ. ௬௨: ௰௧. ௫: ௰. ரூ: ரூ. ௬௮. ௬௨: ௬.

௰௮. நன்மைசெய்யவும் நற்கிரியைகளிலே ஐசுவரிய
வான்களாகவும் கொடுக்கமனமுள்ளவர்களாகவும்
உபகாரிகளாயிருக்கவும் | ௫. தேமோ. ௰௫:

௭ — ௰௧.

௰௯. நித்தியஜீவனைப் பற்றிக்கொள்ளத்தக்கதாக
வருங்காலத்துக்கு நல்ல அஸ்திவாரத்தைத் தங்களுக்கு
ஷாமாகவைக்கவும் அவர்களுக்குக் கற்பி.

௫ மத. ௬: ௰௯. ௨௰.

௨௰. ஓ தீமோத்தேயுவே | உன்னிடத்தில் ஒப்புவிக்கப்
பட்டதை நீ காத்துக்கொண்டு | சுத்தமல்லா
வீண்பேச்சுகளுக்கும் ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்ற
நூலின் விபரீதங்களுக்கும் விலகு.

௫ ௨. தீமோ. ௧: ௰௪. ௫௫ ௨. தீமோ. ௨: ௰௬.

௨௧. அதைச் சிலர் பாராட்டி | விசுவாசத்துக்குத் தப்பிப்
போனார்கள் | கிருபையானது உன்னோடே கூட இருக்
கக்கடவது | ஆமென். ௫ ௬: ௬. ௰௪.

பக்தாத்திப் பிரிக்யாவினாலுண்டானமாகிய
லவோதிக்கேயாவிலிருந்து தீமோத்தேயு
வுக்கு எழுதப்பட்ட முதலாம் நிருபம்.

அபொஸ்தலனாகிய பவுலு தீமோத்தேயுவுக்கெழுதின இரண்டாம் நிருபம்.

க. அதிகாரம்.

பெசுறவர்களை அனலமுட்டியெழுப்பி மெய்யப் போதகத்தைக் கெட்டியாய்க் கைக்கொண்டிருக்கப் புத்திசொன்னது.

கிறிஸ்துயேசுவினாலே சீவனுண்டாயிருக்கிற வாக்குத்தத்தத்தின்படியேயும் பராபரனுடைய சித்தத்தினாலேயும் யேசுக்கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுலு, * உ: ய.

உ. * பிரியகுமாரனாகிய தீமோத்தேயுவுக்கு; பிதாவாகிய பராபரனாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்துயேசுவினாலுங் கிருபையும் இரக்கமும் சமாதானமுமுண்டாக வாழ்த்துகிறேன். * க. தீமோ. ச: உ.

ங. நான் உன்னை இடைவிடாமல் * இரவும்பகலும் என் செபங்களில் நினைத்து, உன் கண்ணீரை ஞாபகம்பண்ணி, சந்தோஷத்தாலே நிறையப்படுவதற்கு உன்னைக் காணவாஞ்சையாயிருந்து,

* க. தெச. ரு: ய. க. தீமோ. ச: ரு.

ச. முன்னோர்முதல்கொண்டு * சுத்தமனசாட்சியோடே நான் ஆராதிக்கிற பராபரனை, உன்னிலுள்ள ** மாயமற்ற விசுவாசத்தை நினைவுகூருகிறதினாலே ஸ்தோத்திரிக்கிறேன். * அப. உங: க. உச:

யசா. ** க. தீமோ. க: ரு.

ரு. அது முந்தி உன் பாட்டியாகிய லோயிசாளுக்குள்ளும் * உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் வாசமாயிருந்தது, அது உனக்குள்ளும் வாசமாயிருக்குதென்று நிச்சயித்திருக்கிறேன். * அப. யசா: க.

சா. இதுநிமித்தமாக நீ, உன்மேல் நான் என் கைகளை வைத்ததினாலே * உன்னிலுள்ள பராபரனுடைய வரத்தை அனலெழுப்ப உனக்கு நினைப்பூட்டுகிறேன். * க. தீமோ. ச: யச. க. தெச. ரு: யகூ.

எ. ஏனென்றால் பராபரன் நமக்குப் பயத்தின் ஆவியையல்ல, பெலனுக்குஞ் சிநேகத்துக்குஞ் சொஸ்தப்படுத்தியின் ஆவியைக் கொடுத்தார். * ரோ. அ: யரு.

அ. ஆகையால் * நம்முடைய கற்த்தரின் சாட்சிக்காகவுங் அவருடைய கட்டுண்டவனான என்னாலும் நீ வெட்கப்படாமல், பராபரனுடைய பெலத்தின்படி சுவிசேஷத்துடனேகூடத் தீங்கனுபவி.

* ரோ. க: யசா.

கூ. அவர் * நம்முடைய கிரிகைகளின்படியேயல்ல, தம்முடைய நிர்ணயத்தின்படியேயும் கிறிஸ்துயேசு

வுக்குள்

லுக்குள்ளே லோகத்தோற்றமான காலங்களுக்குமுன்னே நமக்குக் கட்டளையிடப்பட்டதும்/ * தீத்து. ரு: அ. எ.

ய. இப்போதோ வெளிச்ச * மரணத்தை நீக்கிப்போட்டு
ன்/ சீவனையும் அழியாமையையுங்கொண்டே சுவிசேஷத்தினாலே
வெளிச்சத்திலே கொண்டுவந்த நம்முடைய ரட்சகராகிய யேசு
க்கிறிஸ்துவினுடைய பிரசன்னமாகுதலினாலே வெளியரங்கமாக்கப்
பட்டதுமான கிருபையின்படியேயும் நம்மை ரட்சித்
து/ பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்.

* எபேச. உரு: அ. எபி. உ: யச. யரு.

யக. அதுக்குநான பிரசங்கியாகவும அப்போஸ்தலனாகவும் புறசாதிகளுடைய போதகனாகவும் வைக்கப்பட்டேன்.

யஉ. இதினிமித்தமிந்த பாடுகளையும் அநுபவிக்கிறேன்/ ஆனாலும் நான் வெட்கப்படேன்/ ஏனென்றால ஆரை விசுவாசித்தேனென்று அறிவேன்/ அவர் என்னிடத்தி லொப்புக்கொடுக்கப்பட்டதை அந்நாள்மட்டாக்க் காக்கவல்லவரென்று நிச்சயித்துமிருக்கிறேன்.

யந. நீ விசுவாசத்தோடேயும் கிறிஸ்து யேசுவுக்குள்ளாசிநேகத்தோடேயுமென்னிடத்திலே கேட்ட * ஆரோக்கியவசனங்களின மாதிரியை வைத்திரு.

* தீத்து. உ: க.

யச. இந்த நல்ல அடைக்கலத்தை நமக்குள் வாசமான பரிசுத்தஆவியைக்கொண்டுகார்.

யரு. ஆசியாவிலுள்ளயர்வருமென்னைவிட்டுத்திரும்பினார்களென்கிறதை அறிவாய்/ அவர்களில் பிகெல்லுமெர்மொகேனேயுமிருக்கிறார்கள.

யசா. ஒனேசிப்போருடைய வீட்டுக்குக் கர்த்தர் இரக்கங் காண்பிக்கக்கடவாராக/ ஏனென்றால் அவன் வெகுவிசை என்னைக் குளிர்த்திபண்ணினான. * ச: யசு.

யஎ. அவனென்ன சங்கிலிக்காக வெட்கப்படாமல்/ தானே ரோமாவுக்கு வந்தபோது வெகுகருத்தாயென்னைத்தேடிக்கண்டுபிடித்தான.

யஅ. அந்நாளில் கர்த்தரிடத்திலே இரக்கங்கண்டுபிடிக்க/ கர்த்தர் அவனுக்குக்கட்டளையிடக்கடவார். அவன எபேசுவிலும எத்தனை உபகாரங்களைச்செய்தானென்பதை நீ நன்றாயறிந்திருக்கிறாய.

உ. அதிகாரம்.

உபத்திரவத்தைச்சகிக்கப்புத்திசொன்னது.

இப்போதும்/ என்குமாரனே/ நீ கிறிஸ்து யேசுவிலுள்ள கிருபையிலே பெலத்துக்கொண்டு/

உ. நீ வெகுசாட்சிகளுக்கூடத்திலே என்னிடத்திலே கேட்டதுகளை மற்றவர்களையும் உபதேசிக்கச் சமர்த்தராயிருக்கும் * உண்மையுள்ள மனுஷருக்கொப்புவி.

* க. தீமோ. ரு: உ. ௰.

௩. நீ யேசுக்கிறிஸ்துவினுடைய நற்சேவகனாய்த் தீங்கநுபவி. * ௧: ௮.

௪. தனக்கவனைச் சேவகமெழுதிக்கொண்டவனுக் கேற்றவனாயிருக்கும்படி போர்ச்சேவகஞ்செய்கிறவனெவனும் பிழைப்பின் சோலிகளிற் சிக்கிக்கொள்ளான்.

* ௧. கொ. ௯: ௨௫.

௫. ஒருவன் போராடினாலுங்கூட பரீட்சைக்காரமாய் போராடாதே போனால் முடிசூட்டப்படான்.

௬. வேலைசெய்கிற பயிர்க்குடி பலன் அனுபவிக்கிறதில் முந்தினவனாகவேண்டும்.

௭. நான் சொல்லுகிறதைச் சிந்தித்துக்கொள், கர்த்தரோ வெல்லாவற்றிலுமுனக்குப் புத்திக்கூர்மை கொடுப்பார்.

௮. என் சுவிசேஷத்தின்படியே மரித்தோரிலிருந் தெழுந்த தாவீதின் வித்தாகிய யேசுக்கிறிஸ்துவை நினைவுகொண்டிரு. * ௨: சாமு. ௭: ௧௨. மத். ௧: ௧.

௯. அதுக்காக நான் குற்றவாளியைப்போலக் கட்டப்பட்டுத் தீங்கநுபவிக்கிறேன்; ஆகிலும் பராபரனுடைய வசனங் கட்டப்படவில்லை.

* பிலி. ௧: ௧௨—௧௪.

௧௦. இதினிமித்தம் நான் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் யேசுக்கிறிஸ்துவினால் வருகிற இரட்சிப்பை நித்திய மகிமையோடே கூடப் பெற்றுக்கொள்ளும்படிக்கு எல்லாவற்றையும் சகிக்கிறேன்.

௧௧. இது உண்மையான வாக்கென்னவென்றால் நாம் கூட மரித்தோமானால் கூடவும் பிழைப்போம்.

* றோ. ௬: ௫. ௮:

௧௨. நாம் சகித்துக்கொண்டிருந்தால் கூட ஆளுவோம், நாம் அவரை மறுதலித்தால் அவரும் நம்மை மறுதலிப்பார். * மத். ௰: ௩௩.

௧௩. நாம் அவிசுவாசிகளானாலும் அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார், தம்மைத்தாமே மறுதலிக்கமாட்டார். * றோ. ௩: ௩. ௪. மோ. ௩௨: ௪.

கள்ளப்போதகரைக்குறித்துத் தீமோத்தேயுவுக்குப் புத்திசொன்னது.

௧௪. இதுகளை நினைப்பூட்டி, ஒன்றுக்கும் பிரயோசனமில்லாததும் கேட்கிறவர்களைக் கவிழ்க்கிறதுமான வாக்குவாதம் பண்ணாதிருக்கக் கர்த்தருக்கு முன்பாகத் திடச்சாட்சியாய் எச்சரி.

௧௫. வெட்கப்படாமல் சத்தியவசனத்தை நிதானமாய்ப் பகுத்துக்கொடுக்கிற உத்தம வேலையாளாகத் தன்னைப் பராபரனுக்கு முன்னே நிறுத்தக் கருத்துள்ளவனாயிரு.

௧௬. ஆனால் பரிசுத்தமற்ற வீண் கூச்சல்களுக்கு விலகு; அவைகளால் அவர்கள் அதிக அவபக்திக்குத் துணிந்துபோவார்கள். * ௧. தீமோ. ௬: ௨௦.

௧௭. அவ்

௰௭. அவர்களுடைய வசனங் கன்னகசரத்தைப்போல அரிக்கும்; இமெநேயும் பிலேத்தும் அப்படிக்கொத்தவர்கள். * ௧. தீமோ. ௧: ௨௰.

௰௮. அவர்களை உயிர்த்தெழுந்தலை ஆயப்போச்சுது தீர்ந்ததென்று சத்தியத்துக்குத் தப்பி, சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப்போட்டார்கள்.

௰௯. ஆகிலும் பராபரனுடைய உறுதியான அஸ்திவாரம் நிலைநிற்குது. * கர்த்தர் தம்முடையவர்களை அறிந்திருக்கிறார்; ** கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிறவனெவனும் அக்கிரமத்தைவிட்டு விலகக்கடவனென்கிறது அதுக்கு முத்திரையாயிருக்குது
* சங். ௧: ௬. யோவா. ௰: ௰௪. ** ௪. யோவே.
௨: ௩. ௫.

௨௰. ஆகிலொரு பெரிய வீட்டிலே பொன் வெள்ளிய பாத்திரங்கள் மாத்திரமல்ல, மரமும் மண்ணுமான பாத்திரங்களுமுண்டு; சிலது கனத்துக்குஞ் சிலது கனவீனத்துக்குமானது.

௨௧. ஏதுபோதுமொருத்தனிதுகளை விட்டுத் தன்னைச் சுத்திகரிசெய்தால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும் எசமானுக்குக் கவைக்கிருக்கிறதும் சகல நற்கிரியைக்கு ஆயித்தம்பண்ணப்பட்டதுமாகிய கனத்துக்கான பாத்திரமாயிருப்பான்.

௨௨. வாலவயது இச்சைகளையோ நீ விலக்கிவிட்டு, சுத்த இருதயத்தோடே ஜெபிக்கிறவர்களோடே நீதியையும் விசுவாசத்தையுஞ் சிநேகத்தையுஞ் சமாதானத்தையும் பின்தொடர்ந்துபோ. * ௧. தீமோ. ௬: ௰௧.

௨௩. * புத்தியுங் கல்வியுமில்லாத தற்கங்களோவென்றால் சண்டைகளை ஜெனிப்பிக்குமென்றறிந்து, அதுகளைச் சேராதிரு. * ௧. தீமோ. ௪: ௭.
தீத்து. ௩: ௯.

௨௪. கர்த்தரின் ஊழியக்காறன் * சண்டைபண்ணுறவனல்லாமல் எல்லாருக்கும் மெதுவானவனும் போதகசமர்த்தனும் பொல்லாரைச் சகிக்கிறவனுமாயிருந்து,
* ௧. தீமோ. ௩: ௨. ௩.

௨௫. எதிர்ச்சிந்தைக்காறருக்குப் பராபரன் சத்தியத்தை அறிய குணப்படுதலைத் தருவாரோவென்றும்,

௨௬. பிசாசினுலே அதின் இச்சையின்படி பிடியுண்டிருக்கிறவர்கள் திரும்பத் தெளிந்து அதின் கண்ணிக்கு நீங்குவார்களோவென்றும், மெத்தனவுடனே அவர்களை உபதேசிக்கவேண்டியது.

௩. அதிகாரம்.

துன்மார்க்கப்போதகரை வெறுத்து மெய்ப்போதகத்திலே நிலைத்திருக்கப் புத்தி சொன்னது.

கடைசிநாட்களிலே பொல்லாத காலங்கள் வருமென்றறி. ௨. பேது. ௨: ௧—௩.
யூதா. ௰௮. வச.

௨. அதேதென்னில மனுஷர் தற்சினேகருமாய் பணப்பிரியருமாய் வீம்புக்காரருமாய் அகந்தையுள்ளவர்களுமாய் தூஷணக்காரருமாய் பெற்றாருக்குக் கீழ்ப்படியாதவர்களுமாய் நன்றியறியாதவர்களுமாய் துன்மார்க்கருமாய்

௩. சுபாவ அன்பில்லாதவர்களுமாய் [illegible] வர்களுமாய் [illegible] இச்சையடங்காதவர்களுமாய் கடூரருமாய் நல்லோரைச் சினேகியாதவர்களுமாய்

௪. துரோகிகளும் துணிகரக்காரருமாய் உப்பிப்போனவர்களுமாய் பராபரனைப் பார்க்கிலும் சல்லாபத்தைச் சினேகிக்கிறவர்களுமாய்

௫. * தேவபக்தியின் வேஷத்தைத் தரித்தும் அதின் பெலத்தை மறுதலிக்கிறவர்களுமாயிருப்பார்கள். இப்படிக்கொத்தவர்களை விலகியிரு. * தீத்து. ௧: ௰௬.

௬. ஏனென்றால் பாவங்களால் அழுத்தப்பட்டுப் பல பலவிச்சைகளாலே ஏவப்பட்டு,

௭. எப்போதுங் கற்றும் ஒருக்காலுஞ் சத்தியத்தின் அறிவுக்கு வரமாட்டாத பெண்பெண்சாதிகளை வீடுகளுக்குள் நுழைந்து சிறையாக்குகிறவர்கள் அவ்வண்ணத்தாராயிருக்கிறார்கள்.

௮. யன்னேயும் யம்பிரேயும் எப்படி * மோசேயோடே எதிர்த்து நின்றார்களோ, அப்படியே புத்திகெட்டு விசுவாசத்துக்கடுத்ததிலே தகாதவர்களான இந்த மனுஷருஞ் சத்தியத்தோடே எதிர்த்து நிற்கிறார்கள். * ௨. மோ. ௭: ௰௧.

௯. ஆகிலுமவர்கள் அதிகம் போகமாட்டார்கள்; ஏனென்றால் அன்னவர்களுடைய மதிகேடு * வெளியரங்கமானது போல இவர்களுடையதும் அப்படியாம். * ௨. மோ. ௮: ௰௮. ௯: ௰௧.

௰. நீயோவென்றால் என்னுடைய போதகத்திலும் நடக்கையிலும் மனநோக்கத்திலும் விசுவாசத்திலும் நீடியசாந்தத்திலும் சினேகத்திலும் பொறுமையிலும்

௰௧. எனக்கு அந்தியோகியாவிலும் இக்கோனியாவிலும் லீஸ்த்திராவிலும் நடந்ததுக்கொத்த துன்பங்களிலும் பாடுகளிலும் பின்சென்று வந்தாய். இப்படிக்கொத்த துன்பங்களைச் சகித்தேன்; அதுகளுக்கெல்லாங் கர்த்தரென்னை நீக்கலாக்கிவிட்டார்.

* அப்போ. ௰௩: ௫௰: ௰௪: ௨. ௰௯.

௰௨. ஆனால் கிறிஸ்து யேசுவுக்குள் தேவபக்தியாய்ச் சீவிக்கப் பண்ண மனதாயிருக்கிற அனைவரும் * துன்பப்படுவார்கள். * அப்போ. ௰௪: ௨௨.

௰௩. பொல்லாத மனுஷரும் எத்தருமோவென்றால் மோசம்போக்கி மோசம்போய் வரவர அதிகக் கேடுள்ளவர்களாவார்கள்.

௰௪. நீயோவென்றால் கற்று மெய்யென்றுணர்ந்தவைகளிலே நிலைத்திரு; நீ இன்னாரிடத்திலே கற்றாயென்றறிந்துமிரு.

௰௫. யேசுகிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினாலே உன்னை ரட்சிப்புக்கு ஞானமுள்ளவனாக்கப்

வல்ல

பேசுறுன பரிசுத்த எழுத்துக்களை சிறுவயது துவக்கி அறிந்திருக்கிறயென்கிறதும் உனக்குத்தெரியும்.

௰௬. *வேதமெல்லாந் தேவ ஆவியாலருளப் பட்டதுமி பரனுடைய மனுஷன் நற்கிரியைக் கெல்லாந்திருத்திருந்தவனாயிருக்கு. * ௨. பேது. ௧: ௨௰. ௨௧.

௰௭. * உபதேசத்துக்குங் கண்டனத்துக்குஞ் சீர்திருத்தலுக்கும் நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோசனமாயிருக்குது. * சங்கீ. ௰௯: ௮. ௯.

௪. அதிகாரம்.

அப்பாலும் மெய்ப்போதகத்திலே நிலைத்திருக்கப் புத்திசொன்னது.

ஆனபடியினாலே காலஞ்சேர்ந்தேறியாய சமையத்திலுஞ் சமையமேதகத்திலும் வசனத்தைப் பிரசங்கி, எல்லா நீடிய சாந்தத்தோடும் போதகத்தோடுங் கடிந்துகொள், அதட்டு, புத்திசொல்லுவேன்,

௨. நான் பராபரனுக்கு முன்பாகவும் உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையுந் தம்முடைய பிரசன்னமாகுதலிலும் ராச்சியத்திலும் நியாயந் தீர்க்கப்போகிறதாகிய யேசுக்கிறிஸ்துவுக்கு முன்பாகவுந் திட்டச்சாட்சியாய்ச் சரிக்கிறேன்.

௩. ஏனென்றால் அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுத்திராமல், செவிக்கு இனியமானதை விரும்பி தங்கள் சுயஇச்சைகளின்படியாகத் தங்களுக்குப் போதகரைக் குவித்துக்கொண்டு,

௪. செவியைச் சத்தியத்துக்கு விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்.

௫. நீயோவென்றால் எல்லாத்திலும் மனத்தெளிவாயிருந்து, கஷ்டப்படு, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவாகரமாய் நடத்து.

௬. ஏனென்னில் என்ரத்தம் வார்த்தலாகும் வேளைவந்தது, நான் பிரிந்துபோற காலங் கிட்டிநிற்குது.

௭. * நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்தேன்.
* ௧. கொ. ௯: ௨௫ — ௨௭.

௮. அப்புறம் நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே எனக்குக் கொடுக்கப்போற * நீதியினுடைய கிரீடம் எனக்குவைத்திருக்குது, ஆனால் எனக்குமாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பின அனைவருக்குந்தானே. * ௧. பேது. ௫: ௪.
யாக். ௨: ௰.

நிருபத்தின் முடிவு.

௯. சீக்கிரமாய் என்னண்டைக்குவரச் சாக்கிரதைப்படு.

௰. ஏனென்றால் *தெமா இகலோகத்தைச் சிநேகித்து என்னை விட்டுத் தெசலோனிக்கேக்குப் போனான்; கிரெஸ்கேன்ஸ் கலாத்தியாவுக்கும் தீத்து தல்மாத்தியாவுக்கும் போனார்கள். * கொலொ. ௪. ௰௪.

௰௧. *லூக்கா மாத்திரம் என்னுடனே யிருக்கிறான். **மாற்குவை உன்னுடனே கூட்டிக்கொண்டுவா; அவன் ஊழியத்துக்காக எனக்குப் பிரயோசனமா யிருக்கிறான். * கொலொ. ௪. ௰௪. ** அப். ௧௫. ௩௭.

௰௨. தீக்கிக்குவை எபேசுவுக்கனுப்பினேன்.

௰௩. நான் துரோவாவிலே கார்ப்புவினிடத்தில் வைத்துவிட்டு வந்த மேலங்கியையும் புஸ்தகங்களையும் விசேஷமாய்த் தோல் சுருள்களையும் நீ வருகிறபோது கொண்டுவா.

௰௪. கன்னானாகிய அலெக்சந்தர் எனக்கு வெகு தீமை செய்தான்; கர்த்தர் அவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனுக்குக் கொடுக்கக்கடவார்.

௰௫. அவனுக்கு நீயும் எச்சரிக்கையாயிரு; ஏனென்றால் நம்முடைய வார்த்தைகளுக்கு மகாவும் எதிர்த்துநின்றான்.

௰௬. நான் முதல்விசை உத்தரவு சொல்லுகிறபோது ஒருத்தனும் என்னுடனே கூட வந்ததில்லை; எல்லாரும் என்னைக் கைவிட்டார்கள். அது அவர்கள்மேல் சுமராதிருப்பதாக.

௰௭. கர்த்தரோவென்றால் என்னுடனே நின்று, என்னாலே பிரசங்கம் பூரணமாய் வெளிப்படுத்தப்படும்படிக்கும் அஞ்ஞானிகளெல்லாரும் கேட்கும்படிக்கும் எனக்குத் தைரியம் தந்து என்னைப் பெலப்படுத்தினார்; சிங்கத்தின் வாயிலிருந்தும் இரட்சிக்கப்பட்டேன்.

௰௮. கர்த்தர் என்னை எல்லாத் துர்ச்செய்கைக்கும் விலக்கித் தம்முடைய பரமராச்சியத்துக்கு ரட்சித்துக் கொண்டுபோவார். அவருக்கு என்றென்றைக்கும் சதாகாலங்களிலும் மகிமையுண்டாவதாக. ஆமேன்.

௰௯. *பிரிஸ்கில்லாவையும் ஆக்கில்லாவையும் ஒனேசிப்போருவின் வீட்டாரையும் வாழ்த்து. * அப்போ. ௰௮.

௧ — ௩.

௨௰. எரஸ்து கொரிந்துவிலிருந்துவிட்டான்; துரோப்பீமுவை மிலேத்திலே வியாதிப்பட்டவனாக விட்டுவந்தேன்.

௨௧. நீ மாரிகாலத்துக்கு முன்னே வரச் சாக்கிரதைப்படு. ஐபூலுவும் புதேன்ஸும் லீனுவும் கிலவுதியாளும் மற்றெல்லாச் சகோதரரும் உனக்கு வந்தனமென்கிறார்கள்.

௨௨. கர்த்தராகிய யேசுக்கிறிஸ்து உன் ஆவியுடனே கூடயிருப்பாராக. கிருபையானது உங்களோடே கூடயிருப்பதாக. ஆமேன்.

பவுலு இரண்டாம்விசை நேரோ ராயனுக்கு முன்
நிறுத்தப்பட்டபோது ரோமாவிலே எழுதி
தீமோத்தேயுவுக்கனுப்பின இரண்டாம்
நிருபம்.

அப்போஸ்தலனாகிய
பவுல்
தீத்துவுக்கு எழுதின
நிருபம்.

க. அதிகாரம்.

நிருபத்தின் முகவுரை.

பொய்யுரையாத தேவன் ஆதிகாலங்களுக்கு முன்னே [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]

* க. [illegible] ௩: [illegible] ** [illegible] க: ௬. [illegible]

௨. [illegible]

௩. [illegible]

௪. [illegible] தீத்துவுக்கு [illegible] [illegible] [illegible] தேன். * க. தீமோ. ௧: ௨.

[illegible]

௫. [illegible] உன்னை கிரேத்தாவிலே [illegible] விட்டுவந்தேனே.

௬. [illegible] [illegible] * ௧. தீமோ. ௩: ௨-௫

௭. [illegible] * க. கொ. ௪: க. ** ௨. தீமோ. ௨: ௨௪

௮. [illegible]

௯. [illegible]

௯. ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்ல
வும் எதிர்ப்பேசுகிறவர்களைக் கடிந்துகொள்ளவும்
வல்லவனாயிருக்கும்படிக்கு, உபதேசத்துக்
கேற்ற உண்மையான வசனத்தைக் கெட்டியாய்ப் பிடிக்
கிறவனுமாயிருக்கவேணும்.

௰. ஏனென்றால் அநேகர், விசேஷமாய் சுன்னத்துக்
காரர், அடங்காதவர்களும் * வீண்வசனிப்புக்காரரு
ம் மனதை மயக்குகிறவர்களுமாயிருக்கிறார்கள்.

* ௧. தீமோ. ௧: ௬.

௰௧. அவர்களுடைய வாயை அடக்கப்போடவேணும்;
அவர்கள் இலச்சையான ஆதாயத்துக்காக அடாதகா
ரியங்களை உபதேசித்து, முழுவீடுகளைக் கவிழ்க்கிறார்
கள்.

௰௨. அவர்களிலொருவனவர்களுடைய தீர்க்கதரிசியானவன்:
கிரேத்தரெப்போதும் பொய்யரும் பொல்லாத மிரு
கங்களும் சோம்பலான வயிறுகளுமாயிருக்கிறார்
கள் என்றான்.

௰௩. இந்தச்சாட்சி உண்மையாயிருக்கிறது; இதுமுகாந்
திரமாக அவர்களவர்கள் விசுவாசத்திலே ஆரோக்
கியமாயிருக்கவும்,

௰௪. யூதக்கட்டுக்கதைகளுக்கும் சத்தியத்தைவிட்டு
விலகுகிற மனுஷருடைய கற்பனைகளுக்கும் செவிகொ
டாதிருக்கவும் கண்டிப்பாய்க் கடிந்துகொள்.

௰௫. சுத்தவான்களுக்கோ * யாவும் சுத்தமாயிருக்கு
து; அசுத்தமானவர்களுக்கும் அவிசுவாசிகளுக்குமோ
ஒன்றும் சுத்தமாயிராமல் அவர்களுடைய சிந்
தையும் மனச்சாட்சியும் அழுக்காயிருக்கும்.

* மத். ௰௫: ௰௧.

௰௬. பராபரனை அறிகிறோமென்று அறிக்கையிடுகி
றார்கள்; ஆனால் அருவருப்பானவர்களும் இணங்காத
வர்களும் நற்கிரியைக்கெல்லாம் அபாத்திரருமாயிருந்து
கிரியைகளிலே மறுதலிக்கிறார்கள்.

௨. அதிகாரம்.

தேவபக்திக்கேற்றதான மார்க்கமாய்
நடக்க யாவருக்கும் புத்திசொல்ல
வேணுமென்றது.

நீயோவென்றால் ஆரோக்கியமான உபதேசத்துக்கேத்
ததுகளைப்பேசு.

௨. முதிர்வயதுள்ளவர்கள் முழித்திருக்கிறவர்க
ளும் சன்மார்க்கத்துச் சொல்லப்புத்திமான்களுமாய் விசு
வாசத்திலும் சிநேகத்திலும் பொறுமையிலும் ஆரோக்
கியவான்களுமாயிருக்கவும்,

௩. அப்படியே முதிர்வயதுள்ள ஸ்திரீகளும் பரிசுத்தத்துக்
கேற்ற நிலைமையுள்ளவர்களும், நிந்தைசொல்லுகிறவர்க
ளல்லாதவர்களும், அதிமதுபானத்துக்கு இச்சைப்ப
டாதவர்களுமாயிருந்து,

௪. பாலபரானுரையயவெசனாத தூஷணங்கடபடாத
படிக்கு அவர்கள் தெளிந்த புத்தியுள்ளவர்களாய் புருஷரையும் பிள்
ளைகளையுஞ் சிநேகிக்கிறதுக்குமி.

௫. மனதெளிவுள்ளவர்களாயும் கற்புள்ளவர்
களும் வீட்டுக்காவலாய்க்காம நல்லவர்களும் த*
ங்கள்ருஷருக்குக் கீழ்ப்படிந்தவர்களுமா
யிருக்கும்படிக்கு புத்தியாய்ச்சொல்லத்தக்க போதிக்க
வாயிருக்கவும். * எபே. ரு: உ௨.

௬. அப்படியே யௌவனபுருஷர் மனதெளிவுள்ளவர்களாயி
ருக்கவும் புத்திசொல்லு.

௭. * எல்லாவற்றிலும் உன்னைத்தானே நற்கிரியைகளுக்கு மாதிரி
யாகக்காண்பித்து * க. பேது. உ: யஉ.

* * க. பேது. ரு: ங.

௮. உபதேசத்திலே கலப்பில்லாமையையும் ...
... பேசுகிறதும் ...
வசனத்தைக் குற்றஞ் சாட்டப்படாத வசனத்தை.

௯. * வேலைக்காரர் தங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்து
... எல்லாவற்றிலும் பிரியமாய் நடந்து
... எதிர்த்துப் பேசாமல்
... எல்லாவற்றிலும்
பிரியமாய் நடக்கவும். * எபே. சா: ரு—அ.

௰. வஞ்சனை பண்ணாமல் ... நல்ல
உண்மையை ... காண்பிக்கச் சொல்லு.

௰௧. ஏனென்றால் பாவிகளை ... இரட்சிப்பான
தேவகிருபை எல்லா மனுஷருக்கும் பிரசன்னமாயிற்று
து. ங: சா. மத். உ௪: யசா.

௰௨. நாம் அவபக்தியையும் * லௌகீக இச்சைகளையும்
வெறுத்து மனதெளிவுடனும் நீதியுடனும் தேவபக்தியு
டனும் இப்பிரபஞ்சத்திலே ஜீவனம்பண்ணி.

* க. யோவா. ௩: யரு—யஎ.

௰௩. பாக்கியமான நம்பிக்கைக்கும் ... மகா தேவனும்
நம்முடைய இரட்சகருமாகிய யேசுக்கிறிஸ்துவினுடைய
மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்க்கி
றவர்களாய் நடக்கும்படி நமக்கு உபதேசிக்கிறது.

௰௪. அவர் நம்மை சகல அக்கிரமத்துக்கும் நீங்கலாக்கி
மீட்டுக்கொள்ளவும் * நற்கிரியைகளுக்கு ... பக்தியான
சொந்தசனமாகத் தமக்குச் சுத்திகரிக்கவும் ** நமக்காகத்
தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.

* மத். ரு: யசா. ** கலா. க: ங.

௰௫. நீ இவைகளைச் சகல அதிகாரத்தோடும் பேசிப் புத்தி
சொல்லிக் கடிந்துகொள்ளு * ஒருவனும் உன்னை அசட்
டை பண்ணவேண்டாம். * க. தீமோ. ச: யஉ.

௩. அதிகாரம்.

சன்மார்க்கத்துக்குக் கேவுக்குச் விசேஷத்தைத்
திடமாய்ப் போதிக்கப் பண்ணவேண்டியது
தர்க்கங்களையும் புத்திகெட்டுக்கு
வேதப்பிரட்டரையும் விலக்க.
வெம்பாசரித்தது.

௧. துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்குங் கீழ்ப்பட்டிருந் தடங்கி நற்கிரியைக்கெல்லாம் ஆயத்தமாயிருக்கவும் * ௧. பேது. ௨: ௰௩. ௰௪.

௨. ஒருத்தனையுந் தூஷணியாமல், வழக்காடாதவர்களுஞ் சாந்தமுள்ளவர்களுமாயிருக்கவும், மனுஷருக்கெல்லாருக்குஞ் சகல மெத்தனவையுங் காண்பிக்கவும் அவர்களுக்கு நினைப்பூட்டு. * பிலி. ௪: ௫.

௩. ஏனெனில் * முற்காலத்திலே நாமும் மதிகேடருங் கீழ்ப்படியாதவர்களும் வழிதப்பி நடக்கிறவர்களும் பலவித இச்சைகளுக்குஞ் சந்தோஷங்களுக்கும் அடிமைகளும் துர்க்குணத்திலும் பொறாமையிலுஞ் ஜீவனம்பண்ணுகிறவர்களும் பகைக்கப்படத்தக்கவர்களும் ஒருவரையொருவர் பகைக்கிறவர்களுமாயிருந்தோம்.

* எபே. ௨: ௨. ௩.

௪. ஆனாலும் நம்முடைய இரட்சகராகிய பராபரனுடைய அன்பும் நரசீவதயையும் பிரசன்னமானபோது

* ௨: ௰௧. ௧. யோவா. ௪: ௯.

௫. அவர் நாம் அவருடைய கிருபையினாலே நீதிமான்களாக்கப்பட்டு நித்தியசீவனுடைய நம்பிக்கையின்படி சுதந்தரராகும்படிக்கு

௬. நம்மை நாம் செய்திருந்த நீதியின் கிரியைகளினாலே அல்ல, தம்முடைய இரக்கத்தின்படியே * * மறுஜென்ம முழுக்கினாலும் * எபே. ௨: ௪—௯. ௨. தீமோ. ௧: ௯. ௰. * * யோவா. ௩: ௫.

௭. தாம் நம்முடைய இரட்சகராகிய யேசுக்கிறிஸ்துமூலமாய் நம்மேல் பரிபூரணமாக * ஊற்றின பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் இரட்சித்தார்.

* யோவேல். ௩: ௫.

௮. இந்த உண்மையான வார்த்தையைப் பராபரனை விசுவாசித்தவர்கள் நற்கிரியைகளை நடத்த விசாரிப்பாயிருக்கக் கருதும்படிக்கு நீ இவைகளைக் குறித்து நிச்சயமாய்ப் போதிக்கவேண்டுமென்றிருக்கிறேன். இதுகளே நன்மையும் மனுஷருக்குப் பிரயோசனமுமான காரியங்கள்.

௯. ஆனாலும் * புத்தியீனமான தர்க்கங்களையும் வம்சவரிசைகளையும் வாக்குவாதங்களையும் நியாயப்பிரமாணத்தின்மேலுண்டாகுஞ் சண்டைகளையுந் தவிர்த்துப்போடு; ஏனெனில் அதுகள் அப்பிரயோசனமும் வீணுமாயிருக்குது. * ௧. தீமோ. ௧: ௪.
௬: ௪. ௨. தீமோ. ௨: ௨௩.

௰.* வேதப்பிரட்டனாகிய மனுஷனை யொருதரம் ரெண்டோருவிசை புத்திசொன்ன பிற்பாடு அவனைவிட்டு விலகு.

* மத். ௭: ௰௫. ரோம. ௰௬: ௰௭. ௨. யோவ. ௰. வச.

௰௧ அப்படிக்கொத்தவன் கவிழ்ந்து போனவனாயிருந்து தன்னாலே தானே ஆக்கினைக்குள்ளாய்த் தீர்க்கப்பட்டுப் பாவஞ்செய்கிறானென்று அறிந்திரு.

நிருபமுடிவு.

௰௨. நான் அர்தெமாவை அல்லது *தீகிக்குவை உன்னண்டைக்கனுப்பும்போது நீ நிக்கொப்பொலிஸுக்கு என்னண்டை வரப் பிரயாசப்படு, ஏனெனில் அங்கே மாரிகாலத்துக்குத் தங்கத் தீர்மானித்துக்கொண்டேன்.

* அப்போ. ௨௰: ௪. எபே. ௬: ௨௧.

௰௩. நியாயசாஸ்திரியாகிய சேனாவையும் *அப்பொல்லோவையும் ஏதொன்றிலுங் குறையில்லாதபடிக்குப் பிரயாசப்பட்டு வழிவிட்டனுப்பு. * அப்போ. ௰௮: ௨௪.

௰௪. ஆனாலும் நம்முடையவர்களுங் கனியற்றவர்களாயிராமல் அவசரங்களுக்குத் தக்கவும் நற்கிரியைகளுக்கு விசாரிப்பாயிருக்கப் பழகட்டும்.

௰௫. என்னோடிருக்கிற அனைவரும் உனக்கு வந்தனஞ் சொல்லுகிறார்கள். விசுவாசத்திலே நம்மைச் சிநேகிக்கிறவர்களுக்கு வந்தனஞ் சொல்லு. கிருபையானது * உங்களனைவரோடுங் கூடயிருக்கக்கடவது. ஆமென்.

மசெதோனியதேசத்துப் பட்டணமாகிய நிக்கொப்பொலியிலிருந்தெழுதியனுப்பினது.

அப்போஸ்தலனாகிய பவுல் பிலேமோனுக்கெழுதின நிருபம்.

குணப்பட்ட ஒநேசிமு வேலைக்காரனுக்கிய பூரண சிபாரிசுக்கான முத்திரைக் கொண்டமனு.

* கிறிஸ்துயேசுவினுடைய கட்டுண்டவனாகிய பவுலும் சகோதரனாகிய தீமோத்தேயும் எங்களுக்குப் பிரியனும் உடன் வேலையாளுமாகிய பிலேமோனுக்கும்,

௨. பிரியமான அப்பியாளுக்கும் எங்களுடன் சேவகனாகிய * அர்க்கிப்புக்கும் ** உன் வீட்டிலே சேருஞ் சபைக்குமெழுதுகிறதாவது: * கொலோ. ௪: ௰௭.

** ரோ. ௰௬: ௫.

௧. நமது மேற்பட்டதாவாகிய பராபரனுடைய கற்பனைக்கு யோக்கியமான நன்மைகளுக்குத் தக்கபடி வைத்தியனைச் சமாதானமுடனே கனம்பண்ணவேணும்.

௨. குணமாக்கப்படுகிறது மேலுமான பராபரனுடைய துவாரங்களிலேயிருந்து உண்டாகிறது; அவன் ராஜாவினிடத்திலும் பெற்றுக்கொள்ளுகிறான்.

௩. வைத்தியனுடைய ஞானம் அவனைப் பெரியவர்களுக்குள்ளே உயர்த்தும்; பிரபுக்களுக்கு முன்பாக அவனை மதிக்கப்பண்ணும். * யாத். ௧௫: ௨௫.

௪. நாம் எப்போதுமான தேவனுடைய உண்மையை அறிகிறதற்காக பாரம் அளந்துகொள்ளுகிறோம்.

௫. ஏனென்றால் சகோதரனே உன்னுடைய பரிசுத்தவான்களுடைய சிஷ்டங்கள் முதல் பாவிகளிடத்திலே உன்னை நீக்கக் கடவுள் நமக்குத் தோன்றுகிறது, அவருடைய மனம் அடைந்திருக்கிறது.

௬. அவர் சொன்னது, புதிர் வயதுள்ளவனும் போதேனும் யோசித்து நினைக்கிறவனுமாயிருக்கப்பட்டவனாயிருந்தான்.

௭. குருக்காரியத்தை உனக்குக் காக்கக் கடவுள் தேவதுக்கு ஒப்பாய்ப் பரம் அருளிச்செய்ததுபோல அப்படியே யோசனையை நிமித்தியமாக வேண்டிக்கொள்ளுகிறேன்.

௮. ஏனென்றால், என் கட்டளைகளைப் பெற்று முன் உனக்கு அதிகமாய் யோசிக்கவும் பேசவும் தேவனுடைய உன்னதமான அருமையான யோசிக்கும் மனம் என்னுடைய சித்தமாக உண்டாக வேண்டிக்கொள்ளுகிறேன். * கொலோ. ௩: ௭. ௮.

௯. அவனை முழுப்படியும் அனுபவி.

௰. நீயோ தேவனுடைய கட்டளையை எப்போதும் நன்மையாக நடக்கும்படிக்குக் காத்துக்கொள்.

௰௧. சவிசேஷத்தின் நிமித்தம் பங்கடைந்தவன் நீ உன்னுடைய வழிகளிலே நடக்கக்கடவாய்; ஞானத்தை உன்னிடத்திலே வைத்துக்கொள்ளவேண்டும் என்கிறேன்.

௰௨. அவன் உன்னதமான தேவனுடைய நாமத்தினாலே மனம் பொருந்தியிருக்கும்; உன் யோசனையும் நல்லமனமும் உன்னுடைய செய்கைகளும் நன்றாயிருக்கத்தக்கதாக.

௰௩. அவன் தேவனுக்கு அருளப்பட்டவனாய்த் தேவனுடைய கிருபையினாலே நீதியுள்ள பரிசுத்தவான்களுடைய சந்ததிக்குப் போதகனாயிருக்கிறான்.

௰௪. அவனை எனக்குப் பிரியமாய் நேசமுள்ளவனாய் நடத்தி உனக்குச் சம்பூரணமான அதிகமாய் அருமையாக்கப்பட்டவன்.

௰௫. அப்படியிருக்கிறதினாலே உனக்கு நன்மையுண்டாகும்; அவனை நீ உன்னைப்போலக் காத்துக்கொள்.

௰௬. அவன்

௰௮. அவன் உனக்கு யாதொரு அநியாயஞ்செய்ததும், அல்லது கடன்பட்டதுமுண்டேயானால், அதை என் கணக்கிலே எழுது.

௰௯. பவுலாகிய நான் என் கையினாலே எழுதினேன், நானே கொடுத்துத் தீர்ப்பேன்; நீயும் உன்னைத்தானே எனக்குக் கடன்பட்டிருக்கிறாயென்று நான் உனக்குச் சொல்லத் தேவையில்லை.

௨௰. ஆம், சகோதரனே, உன்னாலே நான் கர்த்தருக்குள் அநுபவிக்கட்டும், கர்த்தருக்குள் என் உள்ளத்தைக் குளிர்ச்சியாக்கு.

௨௧. நான் சொல்லுகிறதிலும் அதிகஞ்செய்வாயென்று அறிந்து, உன் கீழ்ப்படிதலுக்காக நம்பிச் செய்த திடநம்பிக்கையுடனே உனக்கெழுதினேன்.

௨௨. இதுவுமல்லாமல் எனக்கு விடுதியையும் ஆயத்தம்பண்ணு; ஏனெனில் * உங்கள் ஜெபங்களினாலே உங்களுக்குக் கொடுக்கப்படுவேனென்று ** நம்பியிருக்கிறேன். * ௨. கொரி. ௧: ௰௧. ** பிலி. ௧: ௨௫. ௨௬.

௨௩. கிறிஸ்து யேசுவுக்குள் என்னோடேகூடக் காவலிப்பட்டவனாகிய * எப்பாப்பிராவும்,

* கொலோ. ௪: ௰௨.

௨௪. என் உடன்வேலையாளராகிய * மாற்குவும் அரிஸ்தர்க்கும் ** தேமாவும் லூக்காவும் உனக்கு வந்தனம் பண்ணுகிறார்கள். * கொலோ. ௪: ௰. ** கொலோ. ௪: ௰௪.

௨௫. நமது கர்த்தராகிய யேசுக்கிறீஸ்துவினுடைய கிருபை உங்கள் ஆவியுடனே கூடயிருக்கக்கடவது; ஆமென்.

ரோமாவிலேயிருந்து ஒநேசிமுவின் கையிலே பிலேமோனுக்கு எழுதப்பட்டது.

அப்போஸ்தலனாகிய பவுல் எபிரேயருக்கெழுதின நிருபம்.

௧. அதிகாரம்.

கிறீஸ்துவினுடைய தேவமகத்துவம் ரூபிக்கப்பட்டது.

பூர்வகாலத்திலே பலபங்காயும் பலவகையாயும் தீர்க்கதரிசிகளாலே பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன் இந்தக் கடைசி நாட்களிலே குமாரனைக்கொண்டு நமக்குத் திருவுளம்பற்றினார்.

* தேவ

௨. * இவரைச் சகலத்துக்குஞ் சுதந்தரவாளியாக வைத்தார், ** இவரைக்கொண்டு லோகத்தையும் உண்டாக்கினார்.

* மத். ௨௮: ௰௮. ** யோவ. ௧: ௩.

௩. இவர் அவருடைய மகிமையின் * பிரகாசமும், ** அவருடைய தற்சுபாவத்தின் அச்சுமாயிருந்து, எல்லாவற்றையுந் தம்முடைய வல்லமையின் வசனத்தினாலே சுமந்துக்கொண்டு, தம்மாலேதானே நம்முடைய பாவங்களின் சுத்திகரிப்பையுண்டாக்கி, *** உன்னதங்களிலே மகத்துவத்தின் வலதுபாரிசத்திலே உட்கார்ந்து,

* ௨. கொ. ௩: ௰௪. ௰௫. ** கொலோ. ௧: ௰௫. *** மாற். ௰௬: ௰௯.

௪. தேவதூதரைப்பார்க்கிலும் * எத்தனைக்கு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக் கொண்டாரோ, அத்தனைக்கு அவர்களிலும் மேன்மையுள்ளவரானார்.

* பிலி. ௨: ௰. ௰௧.

௫. ஏனென்றால்: * நீர் நம்முடைய குமாரனாயிருக்கிறீர், இன்று நாம் உம்மை ஜெநிப்பித்தோம் என்கிறதாகவும், பின்னும் ** நாம் அவருக்குப் பிதாவாயிருப்போம், அவர் நமக்குக் குமாரனாயிருப்பாரென்கிறதாகவும் அவர் தூதர்களில் எவனுக்காகிலும் எப்போ சொன்னார்.

* சங்கீ. ௨: ௭. ** ௨. சாமு. ௭: ௰௪.

௬. தாம் * முதற்பேறானவரைத் திரும்ப லோகத்துக்குள் அழைத்துக்கொண்டு வந்தபோதோவென்றால்: ** தேவதூதரெல்லாம் அவரைப் பணியக்கடவார்களென்றார். * கொலோ. ௧: ௰௮. ** சங்கீ. ௯௭: ௭.

௭. தேவதூதரைக்குறித்தோ: * தம்முடைய தூதரை ஆவிகளாகவும் தம்முடைய வேலைக்காரரை அக்கினிச்சுவாலைகளுமாக்குகிறாரென்றார். * சங்கீ. ௱௪: ௪.

௮. குமாரனைக்குறித்தோவென்றால்: * பராபரனே, உம்முடைய ஆசனம் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களாகுந்தன்றும், உம்முடைய ராட்சியத்தின் செங்கோல் செம்மையான செங்கோலாயிருக்குது.

* சங்கீ. ௪௫: ௭. ௮.

௯. நீதியைச் சிநேகித்து, அக்கிரமத்தைப் பகைத்திருக்கிறீர், ஆகையினாலே, பராபரனே, உம்முடைய பராபரன் உம்முடைய பங்காளிகளைப் பார்க்கிலும் உம்மை மகிழ்ச்சியின் எண்ணெயால் அபிஷேகம் பண்ணினார் என்றும்,

௰. பின்னையும்: * ஆண்டவரே, நீர் ஆதியிலே பூமியை அஸ்திவாரப்படுத்தினீர், வானங்கள் உம்முடைய கைகளின் கிருத்தியங்களாயிருக்குது.

* சங்கீ. ௱௨: ௨௬—௨௮.

௰௧. அதுகள் அழிந்துபோம், நீரோ நிலைநிற்கிறீர், அதுகளெல்லாம் வஸ்திரம்போலே பழசாய்ப்போம்.

௰௨. அதுகளை ஒரு சால்வையைப்போலே சுருட்டுவீர், அப்போது மாறிப்போம், நீரோ ஒன்றாயிருக்கி

றீர்

றுப்பீடமாகுமட்டுக்கும் நீர் உம்முடைய வலதுபக்கத்திலே இருந்
துபோவதில்லை என்றுசொல்லியிருக்கிறது.

யங. * நாம் உம்முடைய சத்துருக்களை உம்முடைய பா
தபடியாக்கிப்போடுமட்டும் நம்முடைய வலதுபாரிசத்
திலே இருக்கக்கடவாயென்று அவர் தூதரில் எவனுக்
காகிலுமெப்போ சொன்னார்.

* சங்கீ. ௱ய: க.

யச. அவர்களெல்லாரும் * இரட்சிப்பைச் சுதந்த
ரிக்கப்போறவர்களினிமித்தமாக ஊழியத்துக்க
னுப்பப்பட்ட பணிவிடைக்காரரல்லவோ.

* சங்கீ. ஙச: அ. சு. கூ: யக. யஉ.

உ. அதிகாரம்.

நமக்காகத் தாழ்மையாய்ப்பாடுபட்ட கிறிஸ்துவினு
டைய மகத்துவமும் மேன்மையும் அவருடைய
மனுஷத்துவமும் ருசுப்பிக்கப்பட்டது.

ஆகையினாலே நாம் ஒருக்கால் விலகப்படாதபடிக்கு நாம் கேட்
டவைகளுக்கு மிகக் கவனமாயிருக்கவேண்டும்.

உ. ஏனென்றால் * தேவதூதரைக்கொண்டு சொல்லக்
கப்பட்ட வசனம் உறுதியாகிச் சகல மீறுதலுக்கும் கீழ்ப்படி
யாமைக்கும் நீதியான சிக்ஷையை அடைந்திருக்கக்
கொள்ள,

* அப். எ: ருங. கலா ங: யசு.

ங. நாம் இத்தனை பெரிய இரட்சிப்புக்குக் கவலை
யற்றுப்போனோமாகில் * எப்படித் தப்பித்துக்
கொள்ளுவோம்? அது ** கர்த்தரால் உரைக்கப்படத்
துவக்கி, கேட்டவர்களால் நமக்கு உறுதியாக்கப்பட்டி
ருக்கிறதே.

* ய: உஅ. உகூ. ** யஉ: உரு.

ச. தேவனும் பரம்பரையாக * அடையாளங்களினா
லும் அற்புதங்களினாலும் பலபல வல்லமைகளி
னாலும் பரிசுத்த ஆவியைத் தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்
து கொடுக்கிறதினாலுஞ் சாட்சிகொடுக்கிறாரே.

* மாற்கு. யசு: யஉ.

ரு. ஏனென்றால் வரப்போகிறதாயிருக்கும் மனுஷரும்
பேசுகிறதுமான யுகத்தை அவர் தேவதூதருக்குக் கீழ்ப்
படுத்தினதில்லை.

சு. ஒருவிடத்திலேயோவென்றால் ஒருத்தன் திட்டமாய்ச் சாட்
சியாய்ச் சொன்னதாவது: * மனுஷனை நீர் நினைக்கிறதற்
குக்கும், அவன் எத்தன்மை? மனுஷனுடைய குமாரனை நீர் நோக்
கிப்பார்க்கிறதுக்கும் அவன் எம்மாத்திரம்.

* சங்கீ. அ: ரு—சு.

எ. நீர் அவனைக் கொஞ்சக்காலம் தேவதூதரிலுஞ்
சிறியவனாக்கினீர், மகிமையினாலும் கனத்தினாலும் அவ
னை முடிசூட்டி, உம்முடைய கைகளின் கிரியைகளின்
மேல் அதிகாரியாக்கிவைத்து,

௮. சகலத்தையும் அவர் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீரென்றான. சகலத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினதினாலே ஒன்றையும் அவருக்குக் கீழ்ப்படாததாக விட்டதில்லை. இப்பொழுதோவென்றால் சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டதை நாமின்னங் காணவில்லை.

௯. ஆனாலும் பராபரனுடைய கிருபையினாலே * ஒவ்வொருத்தருக்காகவும் மரணத்தை ருசிபார்க்கப் பதற்குக் கோத்தத்திற்காக அவர் தேவதூதரிலும் சிறியவராக்கப்பட்டிருந்த யேசு மரணத்தைக் குறித்து ** மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம். * ௧. யோ. ௨: ௨. ** மத். ௨௮: ௰௮.

௰. ஏனென்றால் எல்லாம் அவருக்காகவும் எல்லாம் அவராலேயும் உண்டாயிருக்கிறதே அவர் அநேகம் பிள்ளைகளை * மகிமையிலே கொண்டுவரப்பண்ணுகிறதிலே அவர்களுடைய ரட்சணியத்தின் அதிபதியைப் பாடுகளினாலே முற்றுமுடிந்தவராக்குவது அவருக்கேற்றதாயிருந்தது.

* லூ. ௨௪: ௨௬.

௰௧. ஏனென்றால் பரிசுத்தமாக்குகிறவரும் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களும் எல்லாரும் ஏகத்தினால் உண்டாயிருக்கிறார்கள். இதினிமித்தம் அவர் இவர்களை * சகோதரரென்றழைக்க வெட்கமாயெண்ணாமல்,

யோவ. ௨௰: ௰௭

௰௨. * உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து சபையிலே உம்மைத் துதிப்பேனென்றும்,

* சங். ௨௨: ௨௩.

௰௩. பின்னையும்: * நான் அவரை நம்பியிருப்பேனென்றும் பின்னையும்: ** இதோ நானும் பராபரன் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் என்று சொல்லுகிறார். * சங். ௰௮: ௩. ** ஏசா. ௮: ௰௮.

௰௪. ஆனபடியினாலே பிள்ளைகள் மாம்சத்துக்கும் ரத்தத்துக்கும் பங்குள்ளவர்களாயிருக்கிறபடியினால் அவரும் அதுபோலவே அவைகளுக்குப் பங்குள்ளவரானார்; தாம் * மரணத்தினாலே மரணத்தின் வல்லமையை உடையதாயிருக்கிற பிசாசை மரணத்திலே அழிப்பதற்கும்,

* ௧. மோ. ௩: ௰௫.

௰௫. உயிரோடிருக்கும்நாளெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்துக்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணுவதற்குமாக்கத்தானே.

௰௬. ஏனென்றால் அவர் தேவதூதருடைய சுபாவம் எடுக்காமல், ஆபிரகாமின் வித்தியினவர் பதத்தை எடுத்திருக்கிறார்.

௰௭. ஆனபடியினாலே தாம் ரெக்கமுள்ளவரும் சனத்தின் பாவங்களை நிவர்த்தியாக்கத் தேவகாரியங்களுக்கு உண்மையுள்ள பிரதான ஆசாரியருமாயிருக்கும்படிக்கு அவர் எல்லாவற்றிலேயும் * சகோதரருக்கொத்தவராக வேண்டியதாயிருந்தது.

* பிலி. ௨: ௭. ௮.

௰௮. ஏனென்றால் தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்குச் சகாயம்பண்ணலாம்.

* ௪: ௰௫. ௰௬.

௩. அதிகாரம்.

மோசேயிலும் மேன்மையான கிறிஸ்துவினுடைய சொற்கேட்கப்புத்திசொன்னது.

ஆனபடியினாலே பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்தச் சகோதரரே நாம் அறிக்கைபண்ணுகிற * அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாகிய கிறிஸ்துயேசுவைக் கவனித்துப்பாருங்கோள்.

* யோவ. ௨௰: ௨௧.

௨ * மோசேயவர் வீட்டிலெங்குமிருந்ததுபோல இவர் தம்மை வைத்தவருக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார். * ௪. மோசே. ௰௨: ௭.

௩. ஆனால் வீட்டைக் கட்டினவன் அதை உண்டுபண்ணினவனாகையால் அதிக கனமுள்ளவனாயிருக்கிறதே, அதுக்கணக்கு மோசேயைப் பார்க்கிலும் இவரதிக மகிமைக்குப் பாத்திரரானார்.

௪. ஏனென்றால் எந்தவீட்டாலும் ஒருத்தனாலே உண்டாக்கப்படும்; எல்லாவற்றையும் உண்டுபண்ணினவர் சர்வேசுரனே.

௫. மெய்தான், சொல்லப்படப் போகிறகாரியங்களுக்குச் சாட்சியாக மோசே ஊழியக்காரனாய் அவர் வீட்டிலெங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான்.

௬. கிறிஸ்துவோவென்றால் அவர் வீட்டுக்கதிகாரியான குமாரனாக அடக்கியிருக்கிறார். நாம் தயிரியத்தையும் நம்பிக்கையின் புகழ்ச்சியையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பிடித்திருந்தால் * அவருடைய வீடு நாமதானே. * ௧. திமோ. ௩: ௰௫.

௭. ஆகையால் பரிசுத்த ஆவி சொல்லுகிறதின்படியே: இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில்,

* சங்கீ. ௯௫: ௭—௰௧.

௮. * வனாந்திரத்திலே கோபமூட்டுதலிலும் சோதனையின் நாளிலும் நடந்தபோல உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதேயுங்கோள்.

* ௨. மோ. ௰௭: ௧—௭. ௪. மோ. ௰௪: ௧—௰.

௯. அங்கே உங்கள் பிதாக்கள் நம்மைச் சோதித்து நம்மைப் பரீட்சைபார்த்து நம்முடைக் கிரிகைகளை நாற்பதுவருஷங்கண்டார்கள்.

௰. ஆனபடியினாலே நாம் அந்தச் சந்ததியைச் சேர்ந்து: அவர்கள் எப்போதும் மனந்தப்பிநடந்து நம்முடைய வழிகளை அறியாதிருக்கிறார்களென்று சொல்லி,

௰௧. * அவர்கள் நம்முடைய இளைப்பாறுதலுக்குள்ளே பிறவேசிப்பதில்லையென்று நம்முடைய கோபத்திலே ஆணையிட்டோமென்றார்.

* ௪. மோ. ௰௪: ௨௧—௨௩.

௰௨. சகோ

௧௨. சகோதரரே! சீவனுள்ள பராபரனை விட்டு அகலுகிற அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருத்தனுக்குள்ளேயாகிலுமிராதபடிக்கு நீங்கள் பார்த்து,

௧௩. உங்களிலொருத்தனும் பாவமோசத்தினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்றென்னப்படுமட்டும் ஒருவருக்கொருவர் தினந்தினமும் புத்திசொல்லுங்கோள்.

௧௪. ஏனென்றால் ஆதுவக்கின திடநம்பிக்கையை முடிவுமட்டும் உறுதியாய்ப் பிடித்திருந்தோமானால் கிறிஸ்துவுக்குப் பங்குள்ளவர்களாயிருக்கிறோம்.

* வுசி. ௨: ௰.

௧௫. இன்றென்னப்படுகிறதுக்குள்ள அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், கோபமூட்டுதலிலே நடந்ததுபோல உங்களிருதயங்களைக் கடினப்படுத்தாதேயுங்கோள்.

௧௬. ஏனென்றால் கேட்டுச் சிலர் கோபமூட்டினார்கள் மோசேயினாலே எகிப்திலிருந்து புறப்பட்ட எல்லாருமோ அல்ல.

௧௭. நாற்பதுவருஷமாய் யாரோடவர் கோபமாயிருந்தார்? பாவஞ்செய்தவர்களோடல்லவோ? * அவர்களுடைய சரீரங்கள் வனாந்திரத்திலே விழுந்துபோச்சுது. * ௪. மோ. ௨௬: ௬௪. ௬௫.

௧௮. அவிசுவாசிகளுக்கேயல்லாமல் பின்னை எவர்களுக்குத் தம்முடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசியாதிருக்க ஆணையிட்டார்.

௧௯. அவிசுவாசத்தினாலேதான் அவர்கள் உள்ளே பிரவேசிக்கமாட்டாமல் போனதென்று பார்க்கிறோம்.

௪. அதிகாரம்.

* கிறிஸ்துவினாலுண்டாகும் இளைப்பாறுதலைத் தப்பவிடாதபடிக்கு எச்சரிக்கிறது.

ஆகையினாலே உங்களில் யாதொருத்தன் அவருடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கிறதற்கான வாக்குத்தத்தத்தைத் தப்பவிட்டுப் பிந்தினவனாகக் காணப்படுவானென்று பயந்திருக்கக்கடவோம்.

௨. ஏனென்றால் சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுபோல நமக்கும் அறிவிக்கப்பட்டது; ஆனாலும் பிரசங்கத்தின் வசனங் கேட்டவர்களில் விசுவாசத்தோடே * கலவாதபடியினாலே அவர்களுக்குப் பிரயோசனமற்றிருந்தது.

௩. விசுவாசித்திருக்கிற நாமோ இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கிறோம், ஏனென்றால்: லோகத்தோற்றமுதற் செய்யப்பட்ட கிரியைகள் முடிந்திருந்தாலும், அவர்: * இவர்கள் நம்முடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பதில்லையென்று நம்முடைய கோபத்திலே ஆணையிட்டோமென்றார்.

* சங். ௯௫: ௰௧.

௪. ஏனென்றால் ஒருவிடத்திலே ஏழாநாளைக்
குறித்து: * பராபரன் ஏழாநாளிலே தம்முடைய கிரி
கைகளெல்லாவற்றையும் முடித்து ஓய்ந்தாரென்றும்,

* ௧. மோ. ௨: ௨.

௫. திரும்ப இவ்விடத்திலே: * அவர்கள் என்னுடைய
இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பதில்லை என்
றுஞ்சொன்னார். * ௪. மோ. ௰௪: ௨௧—௨௩.

௬. ஆகையால் சிலர் அதுக்குள் பிரவேசிக்க வே
ண்டியவராய்ப்போறதாயிருக்கிறபடியினாலும், முந்த
ச்சுவிசேஷங்கேட்டவர்கள் அவிசுவாசத்தினாலே உட்பிர
வேசியாதே போனபடியினாலும்,

௭. திரும்பவும் வெகுகாலத்துக்குப் பிற்பாடு தாவீதின்
பொஸ்தகத்திலே: * இன்று அவருடைய சத்தத்தைக்
கேட்பீர்களாகில் உங்கள் இருதயங்களைக் கடினப்
படுத்தாதேயுங்கோளென்று சொல்லப்பட்டபடி, இன்றென
றுசொல்லி ஒருநாளைக் குறிக்கிறார்.

* சங்கீ. ௯௫: ௭. ௮.

௮. ஏப்போதும் யோசுவா அவர்களை இளைப்பாறு
தலுக்குள்ளே நடத்தியிருந்தால் பிற்பாடு வேறொரு
நாளைக் குறித்து அவர் சொல்லப்போறதில்லையே.

௯. ஆகையினாலே பராபரனுடைய ஜனத்துக்கு இளைப்
பாறுகிற காலம் இன்னம் வரத்திருக்குது.

௰. ஏனென்றால் அவருடைய இளைப்பாறுதலுக்
குள்ளே பிரவேசித்தவன் பராபரன் தம்முடைய கிரிகைகளை
முடித்து ஓய்ந்ததுபோலே தானும் * தன் கிரிகைகளை
முடித்து ஓய்ந்திருக்கிறான். * வெளி. ௰௪: ௰௩.

௰௧. ஆகையால் யாரொருத்தன் அவிசுவாசத்தினுடை
ய அந்த திஷ்டாந்தத்துக்குள்ளாய் விழாதபடிக்கு,
நாம் அந்த இளைப்பாறுதலுக்குப் பிரவேசிக்கச் சாக்கிறதை
யாயிருக்கக்கடவோம்.

௰௨. ஏனென்றால் * பராபரனுடைய வார்த்தை சீவ
னுள்ளதும், பெலனுள்ளதும், இருபுறமுங் கருக்குள்ள
எந்தப் பட்டயத்தையும் பார்க்கக் கருக்கானதும்,
ஆத்துமத்தையும் ஆவியையும், சந்துகளையும் ஊனை
யும் பிரிக்கும்படியாக உருவிப்போறதும், இருதயத்தின்
சிந்தனைகளையும் நினைவுகளையும் நியாயந்தீர்க்கிறது
மாயிருக்குது. * யெரே. ௨௩: ௨௯.

௰௩. * அவருக்கு முன்பாகத் தோன்றாத சிஷ்டி ஒன்
றுமில்லாமல், எல்லாம் நமக்குக் கணக்குக்காரிய
முண்டாயிருக்கிற அவருடைய கண்களுக்கு நிர்வாண
மும் வெட்டவெளியுமாயிருக்குது. * சங்கீ. ௱௩௯:
௰௧. ௰௨.

௰௪. ஏப்போதும் * பரமண்டலங்களை உருவப்போன
ன தேவகுமாரனாகிய யேசுவென்ற மகாபிரதான
ஆசாரியர் நமக்கிருக்கிறபடியினாலே நாம் அறிக்கைபண்
ணுகிறதைப் பிடித்துக்கொண்டிருக்கக்கடவோம்.

* ௮: ௧. ௨.

௰௫. ஏனென்றால் * நம்முடைய பெலயீனங்களுக்குப் பரா
டக்கமாட்டாதபிறதான ஆசாரியர் நமக்கில்லாமல் பாவந

தவிரஎல்லாவிதத்திலுநம்மைப்போல சோதிக்கப்பட்டவர்நமக்கிருக்கிறார். * ௧: ௰. ௰௪. பிலி. ௨: ௭. ௮.

௰௬. ஆகையால் நாமிரக்கத்தைப்பெறவும் நற்சமயத்துக்குச்சகாயமான கிருபையைக்கண்டடைக்கவும் கிருபாசனத்தண்டைக்குத்தயிரியத்துடனே சேர்க்கடவோம். * ௰: ௰௯ — ௨௨.

௫. அதிகாரம்.

கிறிஸ்து ஆரோனிலும் மேன்மையான பிரதான ஆசாரியரென்பது.

ஏனென்றால் மனுஷரிலெடுக்கப்பட்ட எவ்வெந்தப் பிரதான ஆசாரியனும் பாவங்களினிமித்தங் காணிக்கைகளையும் பலிகளையுஞ் செலுத்தும்படிக்கு, மனுஷருக்காகத் தேவகாரியங்களுக்கு ஏற்படுத்தப்படுகிறான்,

௨. தானும் பெலவீனத்தால் சூழப்பட்டிருக்கிறபடியினாலே அறியாதவர்களுக்காகவும் மோசம்போனவர்களுக்காகவும் பரிதபிக்கத்தக்கவனாயிருக்கிறான்.

௩. அதுமுகாந்திரமாய் அவன் ஜனத்துக்காக எப்படியோ அப்படியே தனக்காகவும் பாவங்களினிமித்தம் பலியிடவேண்டியதாயிருக்கிறது. * ௩. மோ. ௯: ௭.

௪. *ஆரோனைப்போல் பராபரனாலே அழைக்கப்பட்டவனேயொழிய வேறொருவனு மிந்தக்கனத்தைத் தனக்குத்தக்கிவித்துக்கொள்ளுகிறதுமில்லை.
* ௨. மோ. ௨௮: ௧.

௫. அப்படியே கிறிஸ்துவும் பிரதான ஆசாரியராகிறதற்குத் தம்மைத்தாமே மகிமைப்படுத்தினதில்லை; அவரைநோக்கி: * நீர்நம்முடைய குமாரன், இன்று நாம் உம்மைச் ஜெநிப்பித்தோம் என்று சொன்னவரே அந்தமகிமையைக்கொடுத்தார். * சங். ௨: ௭. மத். ௩: ௰௭.

௬. அப்படியே வேறேரிடத்திலும்: * நீர் என்றென்றைக்கு மெல்கிசேதேக்கின் வண்ணமான ஆசாரியர் என்கிறார். * சங். ௱௰: ௪.

௭. அவர் தம்முடைய மாம்சத்தின் நாட்களிலே தம்மை மரணத்துக்கு நீங்கலாக்க ரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி உரத்தசத்தத்தோடுங் கண்ணீரோடும் வேண்டுதல்களையும் விண்ணப்பங்களையுஞ் செலுத்தி, அச்சமறக் கேட்கப்பட்டு, * லூ. ௨௨:
௪௨. ௪௪. மத். ௨௭: ௪௬.

௮. தாம் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளால் கீழ்ப்படிதலைக் கற்று,

௯. * முற்றுமுடிந்தவராய்த் தமக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும் நித்தியரட்சிப்பின் காரணராகி,
* ௨: ௰.

௰. பராபரனாலே மெல்கிசேதேக்கின் வண்ணமான பிரதான ஆசாரியரென்று நாமந்தரிக்கப்பட்டார்.

௰௧. அப்படிக்கொத்தவரைக் குறித்துப் பேசவச னங்களுக்குமிலக்கணமுமே; நீங்கள் கேட்க மந்த மாயிட்டுப்போனபடியினாலே வியாக்கியானம் பண்ணுகிறதுக்கு அரிதுமாயிருக்குது.

௰௨. ஏனெனில் காலத்தைப் பார்த்தால், போதக ராயிருக்கவேண்டிய உங்களுக்குப் பராபரனுடைய முதல்வாக்கியங்களின் சூத்திரங்களை ஒருவன் திரு ம்பவும் உபதேசிக்கத் தேவையாயிருக்கிறது. * நீங் கள் பெலத்த போசனமல்ல, பாலைத் தேவையுள்ளவர் களானீர்கள். * ௧. கொரி. ௩: ௧. ௨.

௰௩. ஏனெனில் பாலுண்கிறவனெவனோ அவன் குழந் தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்திலே பழ காதவனாயிருக்கிறான்.

௰௪. பெலத்த போசனமோ நன்மை தின்மை வகுக்க யுக்தமாய்ப் பழக்கத்தினாலே இந்திரியங்கள் அப்பியாசித் திருக்கிற தேறினவர்களுடைய ஆகாரமாயிருக்குது.

௬. அதிகாரம்.

கிறிஸ்துமேலக்கிறேச்சதைக்கிணா வண்ணமான பிர
தான ஆசாரியரினக்த்தையைப் பவுலஸ்த
திரிக்குமனத்தாய்ப் புவமைரஉக்கிய
நம்ப அசத்தியானவர்களுக்கு
முந்திச்சொன்னபடிக்கு.

ஆகையினாலே நாம் கிறிஸ்துவினுடைய ஆதி ஞாயங்க ளின் வசனத்தைவிட்டு, செத்தக்கிரியைகளுக்கு நீங்கலா குங் குணப்படுதல், பராபரன்பேரில் வைக்கும் விசு வாசம்.

௨. ஞானஸ்நானங்களின் உபதேசம், கைகளை மேலே வைக்குதல், மரித்தோரின் உயிர்த்தெழுந்தல், நித்திய ஞாயத்தீர்ப்பு என்றதுகளின் அஸ்திவாரத்தை மறு படியும் போடாமல், தேறின உபதேசத்துக்குப் போகக்கடவோம்.

௩. * பராபரன் உத்தாரங்கொடுத்தாலப்படி செய் வோம். * யோ. ௰௫: ௫.

௪. ஏனெனில், ஒருதரம் வெளிச்சமாக்கப்பட்டு பரமன் ஈவை ருசிபார்த்து, பரிசுத்த ஆவிக்குப் பங்குள்ள வர்களாகி,

௫. பராபரனுடைய நல்வாசகத்தையும் வரப் போறலோகத்தின் பெலன்களையும் ருசிபார்த்திருக் கிறவர்கள்,

௬. * அதிலேயிருந்து பராபரனுடைய குமாரனைத் தங் களுக்கு மறுபடியுஞ் சிலுவையிலறைந்துபோட்டு அவ மானப்படுத்தினால், அவர்களைத் திரும்பக் குணப்படுத்தே அக்குப் புத்தாக்கக்கூடாத காரியமாயிருக்குது.

* ௰: ௨௬ — ௨௯.

௭. ஏனென்றால், தன்மேலே அநேகந்தரம் வரும் மழையைக் குடித்து, தன்னைப் பண்படுத்துகிறவர்க

ஒருசேர்க்கையாய்ப் பயிரையுஞ் செனிப்பிக்கிறநிலம் பராபர னாலே ஆசீர்வாதம்பெறும்.

௮. முள்ச்செடிகளையும் முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிறதோ ஆகாததும் * சாபத்துக்குச் சமீபத்ததுமாயிருக்கிறது; அதின் முடிவு ** சுட்டெரிக்கப்படுதல்.

* மத்தே. ௰௧: ௩௰ — ௨௪. ** மத்தே. ௩: ௰.

௯. ஆனாலும், பிரியமானவர்களே, நாங்கள் இப்படிச் சொன்னாலும், உங்களைக் குறித்தும் மகா வாசியானதும் இரட்சணியத்துக்குச் சேர்ந்ததுமான நம்பிக்கையாயிருக்கிறோம்.

௰. ஏனென்றால், * பராபரன் உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலுஞ் செய்துவருகிறதினாலுந் தம்முடைய நாமத்துக்காகக் காண்பித்த நேசத்தின் வேலையையும் ** மறக்க அநீதமானவரல்ல.

* மத். ௰: ௪௨. ** மல்கி. ௩: ௰௬.

௰௧. நீங்கள் ஓர்வேளாகிலும் அசட்டைக்காரராயிராமல், வாக்குத்தத்தங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலுஞ் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களைப் பின்பற்றும்படிக்கு,

௰௨. உங்களில் அவனவன் முடிவுமட்டும் பரிபூரண நிச்சயமுள்ள நம்பிக்கைக்கென்று அந்தச் சாக்கிரதையைக் காண்பிக்க ஆசையாயிருக்கிறோம்.

௰௩. ஏனென்றால், பராபரன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணுகிறபோது, ஆணையிடத் தம்மிலும் பெரியவரில்லாதபடியினாலே * தம்முடையபேரிலே ஆணையிட்டு: * ௧. மோ. ௨௨: ௰௬ — ௰௮.

௰௪. உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேனென்றார்.

௰௫. அப்படியே அவன் நீடிய பொறுமையாயிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றான்.

௰௬. மனுஷரோவென்றால் தங்களிலும் பெரியவர் பேரில் ஆணையிடுகிறார்கள்; * உறுதியுண்டாக ஆணை அவர்களுக்குச் சகல எதிர்ப்பேச்சுக்கும் முடிவு.

* ௨. மோ. ௨௨: ௰௧.

௰௭. ஆகையினாலே முன் வைக்கப்பட்டிருக்கிற நம்பிக்கையைப் பிடிக்க அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு, பராபரன் பொய்சொல்லக்கூடாத இரண்டு அசையாக் காரியங்களாலே மிகுந்த ஆறுதல் உண்டாகும்படிக்கு,

௰௮. பராபரன் தாம் வாக்குத்தத்தத்தின் சுதந்திரவாளிகளுக்குத் தம்முடைய ஆலோசனையின் அசையாமையை அதிக பரிபூரணமாய்க் காண்பிக்கச் சித்தமாய் ஆணையாலே நடுநின்றார்.

௰௯. அது நமக்குப் பத்திரமும் உறுதியுந் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது.

௨௰. அவ

௨௰. அங்கே முன்னோடினவரும் * என்றென்றைக்கும் மெல்கிசேதேக்கின் வண்ணமாகப் பிரதான ஆசாரியருமான யேசுநாதர் நமக்காக உள்ளே பிரவேசித்தார்.

* ௫: ௬. ௰.

௭. அதிகாரம்.

மெல்கிசேதேக்கும் பிரதான ஆசாரியராகிய கிறிஸ்துவுக்கு முன் அடையாளமாயிருந்தான் என்பது.

இந்த மெல்கிசேதேக்கு சாலேமின் ராசாவும், உன்னதமான பராபரனுடைய ஆசாரியனுமாயிருந்தான்; ராசாக்களை முறியடித்து வந்த * ஆபிரகாமுக்கு அவன் எதிர்கொண்டுபோய், அவனை ஆசீர்வதித்தான்.

* ௧. மோ. ௰௪: ௰௮ —. ௨௰.

௨. அவனுக்கு ஆபிரகாம் எல்லாவற்றிலும் பத்திலொன்று பங்கிட்டுக் கொடுத்தான். அவன் முதலாவது நாமத்தின்படி நீதியின் ராசா; பிற்பாடு சமாதானத்தின் ராசாவென்றுங் கொள்ளுகிற சாலேமின் ராசாவென்று சொல்லப்படுகிறான்.

௩. அவனுக்குப் பிதாவுந் தாயும் வங்கிஷ அட்டவணையுமற்றவன்; அவனுக்கு நாட்களின் துவக்கமுஞ் சீவனின் முடிவுமில்லாதிருந்தும், அவன் பராபரனுடைய குமாரனுக்கொப்பனையாகக் கட்டப்பட்டு, நித்தியகாலமும் ஆசாரியனென்று நிலைநிற்கிறான்.

௪. இவனெத்தனை பெரியவனென்கிறதைப் பாருங்கோள். கோத்திரத்தலைவனாகிய ஆபிரகாமுங்கூட அவனுக்குக் கொள்ளையிலே பத்திலொரு பங்குங் கொடுத்தான்.

௫. மெய்யதான், * லேவியின் புத்திரரில் ஆசாரியப்பட்டத்தை அடைகிறவர்கள் தாங்களும் ஆபிரகாமின் அரையிலிருந்து வந்தவர்களுடைய சகோதரராகிய சனத்தினிடத்திலே குறிப்பிரமாணத்தின்படி பத்திலொன்று வாங்கக் கட்டளைபெற்றிருக்கிறார்கள்.

* ௪. மோ. ௰௮: ௨௰—௨௮.

௬. ஆனால் இவர்களுடைய வங்கிஷவரிசையில் வாராதவன் ஆபிரகாமின் கையிலே பத்திலொன்று வாங்கி, * வாக்குத்தத்தங்களைப் பெற்றவனை ஆசீர்வதித்தான்.

* ௧. மோ. ௰௨: ௨. ௩.

௭. ஆனால் பெரியதினால் சிறியது ஆசீர்வதிக்கப்படுமென்கிறதுக்கு எதிர்ப்பேச்சொன்றுமில்லையே.

௮. பின்னையும் இவ்விடத்தில் மரிக்கிற மனுஷர் பத்திலொன்றை வாங்குகிறார்கள்; அவ்விடத்திலோ, பிழைக்கிறானென்று சாட்சிபெற்றவன் வாங்கினான்.

௯. பின்னையும் பத்திலொன்று வாங்குகிற லேவியும் ஆபிரகாமினாலே பத்திலொன்று கொடுத்தானென்கிறதாய்ச் சொல்லலாமே.

௰. ஏனென்றால் மெல்கிசேதேக்கு இவனுக்கு எதிர்கொண்டுபோனபோது இவன் தன்னுடைய தகப்பனின் தொடையிலிருந்தான்.

மெல்கிசெதேக்கின் வண்ணமான கிறிஸ்துவினு
டைய ஆசாரியப்பட்டம் லேவிக்கோத்திர ஆசா
ரியப்பட்டத்துக்கு மாத்திரமேன்மையான
தென்பது.

௰௧. பேபொது ஜனம் லேவிகோத்திர ஆசாரியப்
பட்டத்துக்குக் கீழ் நியாயப்பிரமாணத்தைப்
பெற்றதுமுதல் * அதினாலே உண்டான பூரணத்துவமா
னால் பின்னும் ஆரோனுடைய வண்ணமாய் எண்ணப்படாமல் **
மெல்கிசெதேக்கின் வண்ணமான வேறொரு
ஆசாரியர் எழும்பத் தேவையாயிருப்பானேன்.

* கலா. ௨: ௨௧. ** சங். ௱௰: ௪.

௰௨. ஆசாரியப்பட்டம் மாறிப்போகிறதினாலே நியா
யப்பிரமாணத்துக்கும் மாற்றுதலுண்டாகவேண்டி
யது.

௰௩. ஏனென்றால் இவைகள் எவனைக்குறித்துச் சொல்
லப்படுகிறதாயவர் வேறே கோத்திரத்துக்குள்ளான
வர், அதிலே ஒருத்தனும் பலிபீடத்து ஊழியஞ்செய்ததில்லை.

௰௪. ஏதெனில் நம்முடைய கர்த்தர் * யூதாவிலிருந்
து உதித்தது வெளியாயிருக்கிறது. ** அந்தக்கோத்திரத்
தைக்குறித்து மோசே ஆசாரியப்பட்டத்துக்காக ஒன்
றுஞ்சொன்னதில்லை. * ௧. மோ. ௪௯: ௰.

** ஏச. ௰௧: ௧. ௨.

௰௫. பின்னையும் மாம்சசம்பந்தமான நியாயப்பி
ரமாணத்தின்படியல்ல, ஒழியாத சீவனுடைய பெ
லத்தின்படியான வேறொரு ஆசாரியர் மெல்கிசெதே
க்கின் சாயலாய் எழும்புகிறதினாலே,

௰௬. அது இன்னமதிகமான வெளியரங்கமாயிருக்கி
றது.

௰௭. ஏனென்றால் * நீர் என்றென்றைக்கும் மெல்கி
செதேக்கின் வண்ணமான ஆசாரியரென்று சாட்சிசொல்
லுகிறார். * சங். ௱௰: ௪.

௰௮. அதெதென்றால் முந்தின கட்டளை தன் பெலவீ
னத்தின் நிமித்தமும் அப்பிரயோசனத்தின் நிமித்தமு
மொந்தள்ளப்படுகிறது;

௰௯. ஏனென்றால் * நியாயப்பிரமாணம் ஒன்றையும்
முடிக்கத்தில்லை; விசேஷமான நம்பிக்கையானதுக்கு
ப்போவென்று ஆசாரியத்துவத்தை முடிக்குது; இதினாலே பரா
பரனண்டைக்குச் சேருகிறோம். * அப். ௰௩: ௩௯.

௨௰. அவர்களோ ஆணையில்லாமல் ஆசாரியராக்
கப்பட்டார்கள்.

௨௧. இவரோவென்றால் * நீர் என்றென்றைக்கும்
மெல்கிசெதேக்கின் வண்ணமான ஆசாரியரென்று கர்
த்தர் ஆணையிட்டார், மனஸ்தாபப்படாமலிருப்பா
ரென்று அவருடனே சொன்னவராலே ஆணையோ
டே ஆசாரியரானார். * சங். ௱௰: ௪.

௨௨. இப்போதும் ஆணையில்லாமலே யேசு ஆசாரிய
ராகப்படவில்லையானதினாலே எத்தனை அதிகமா
உத்தமமானதுவாகிய உடன்படிக்கைக்குப் பிணை
யாளியானார்.

௨௩. அவர்களுமோ மரணம் அவர்களைத் தரித்திருக்க
வொட்டாததினாலே அநேகர் ஆசாரியரானார்கள்.

௨௪. இவரோவென்றால் என்றென்றைக்கும் நிலைத்
திருக்கிறபடியினாலே ஆசாரியப்பட்டம் இவருக்கு மாறா
ததாயிருக்குது.

௨௫. ஆகையினாலே அவர் தம்முடைய மூலமாய்ப் பராபர
னண்டைக்குச் சேருகிறவர்களை முடிய முடிய ரட்சிக்க
தக்கவருமாயிருக்கிறார்; ஏனென்றால் அவர்களுக்காக வேண்
டிக்கொள்ளுகிறதுக்கு என்றைக்கும் பிழைத்
திருக்கிறார். * ௧. யோ. ௨: ௧.

௨௬. ஏனென்றால் இப்படிக்கொத்த பரிசுத்தரும் குற்
றமில்லாதவருங் கறையற்றவரும் பாவிகளுக்கு
விலக்கமானவரும் வானங்களிலும் உயரமானவ
ருமாய்,

௨௭. பிரதான ஆசாரியர்களைப்போலே நாடோறும் முந்திச் சுய
பாவங்களுக்காகவும் பின்பு ஜனத்தின் பாவங்களுக்காகவும்
பலிகளையிடத் தேவையில்லாதவருமா
யிப்பிரதான ஆசாரியர் நமக்கேற்றவராயிருந்தார்; ஏ
னென்றால் இதை ஒருவிசை தம்மைத்தாமே பலியிட்டதினா
லே செய்தார். * ௫: ௩.

௨௮. நியாயப்பிரமாணமோ பெலவீனமுள்ள மனு
ஷரைப் பிரதான ஆசாரியராக வைக்குது; நியாயப்பிரமா
ணத்துக்குப் பிறகு வந்த ஆணையான வாக்கியமோ வென்
றென்றைக்கும் நிறைவானவராகிய குமாரனை
வைக்குது.

௮. அதிகாரம்.

* கிறிஸ்துப் பரமபிரதான ஆசாரியரும் புதுமை உடன்
படிக்கையின் மத்தியஸ்தருமென்கிறது.

இப்போது சொன்னதுகளின் தொகையென்னவென்
றால், பரமண்டலங்களிலே மகத்துவ ஆசனத்தின் வல
து பாரிசத்திலே உட்கார்ந்து, * ௬: ௰௬.

௨. பரிசுத்தஸ்தலத்துக்கும், மனுஷராலல்ல கர்த்தரே
போட்ட மெய்யான கூடாரத்துக்கும் ஊழியக்காரனாயிருக்கப்
பட்ட பிரதான ஆசாரியர் நமக்கிருக்கிறார்.

௩. ஏனென்றால் ஒவ்வொரு பிரதான ஆசாரியனுங் கா
ணிக்கைகளையும் பலிகளையுஞ் செலுத்துகிறதுக்கு ஏற்ப
டுகிறான்; ஆகையால் செலுத்துகிறதுக்கு இவருக்கும் உண்டா
யிருக்க வேண்டியதாயிருக்குது.

௪. அவர் பூமியிலே யிருந்தாரேயானால் ஆசாரியரா
ரார்; ஏனென்றால் நியாயப்பிரமாணத்தின்படியே காணிக்
கைகளைச் செலுத்துகிற ஆசாரியர்களிருக்கிறார்கள்.

௫. இவர்கள் பரம காரியங்களின் * மாதிரிக்கும்
நிழலுக்கும் ஊழியஞ் செய்கிறார்கள். அப்படி கூடாரத்
தைச் செய்யப் பண்டப்போறமோசேக்கு: நீ எல்லாத்தை
யும் பர்வதத்திலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரி
யின்படியே செய்யப்பாரென்று தேவ உத்தரவுண்
டாச்சுது. * கொலோ. ௨: ௰௭. ** ௨. மோ. ௨௫: ௪௰.

௬. இப்போதும் எத்தனைக்கு வாசியானதும் வாசியானவாக்குத்தத்தங்களின்மேலே கட்டளையிடப்பட்டதுமான உடன்படிக்கைக்கு அவர் மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அத்தனைக்கதிக விசேஷித்த ஆசாரியத்துவத்தையும் பெற்றார். * ௨. கொரி. ௩: ௬—௯.

௭. ஏனெனிலந்த முதலாமுடன்படிக்கை குறைவற்றதாயிருந்தானால், இரண்டாவதுக்கிடந்தேடப்படுவதில்லை.

௮. ஏனெனிலவர் அதைக் குற்றப்படுத்தி அவர்களுக்குச் சொல்லுகிறதாவது: * இதோ நாட்கள் வருகுதென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்போ இஸ்ரவேல்வீட்டோடும் யூதாவீட்டோடும் புது உடன்படிக்கையைப் பண்ணுவேன். * எரே. ௩௧: ௩௧—௩௪.

௯. நானவர்கள் பிதாக்களோடே அவர்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவரக் கைப்பிடித்தநாளிலே பண்ணின உடன்படிக்கை செய்யப்போகிறதில்லை; ஏனென்றால் அவர்கள் நம்முடைய உடன்படிக்கையிலே நிலைநின்றதில்லை; நானும் அவர்களைப் புறக்கணித்தேனென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௰. ஆனாலந்நாட்களுக்குப் பிறபாடே நாம் இஸ்ரவேல்வீட்டோடே பண்ணப்போற உடன்படிக்கையாவது: நாம் நம்முடைய பிரமாணங்களை அவர்கள் மனதிலே கொடுத்து, அதுகளை அவர்கள் இருதயத்திலே எழுதி, அவர்களுக்குப் பராபரனாக இருப்போம், அவர்கள் நமக்குச் சனமாயிருப்பார்களென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௰௧. ஒருத்தனுந்தனக்கடுத்தவனையும் ஒருத்தனுந்தன் சகோதரனையுங் கர்த்தரை அறியென்று போதிப்பதுமில்லை; ஏனென்றால் அவர்களில் சிறியவன் துவக்கிப் பெரியவன் மட்டுமெல்லாரும் நம்மை அறிவார்கள்.

௰௨. ஏனென்றால் நாம் அவர்கள் அநியாயங்களை மன்னித்து அவர்கள் பாவங்களையும் அவர்கள் அக்கிரமங்களையும் இனி நினையாதிருப்போமென்கிறார்.

௰௩. புது உடன்படிக்கையென்று சொல்லுகையில், முந்தினதைப் பழசாக்கினார். ஆனாற் பழசும் முற்றத்தினுமாயிருக்கிறதுங் குலைந்துபோகச் சமீபமாயிருக்குது.

௯. அதிகாரம்.

அப்பாலும் பழைய ஏற்பாட்டின் நிழலான ஆசாரியப்பட்டமும் ஏற்பாட்டின் பொருளான ஆசாரியப்பட்டமும் ஒத்துப்பார்க்கப்பட்டது.

மெய்தான், முந்தின உடன்படிக்கைக்கும் ஆராதனைய ஞாயங்களும் லவுகீக பரிசுத்தஸ்தலமுமிருந்தது.

௨. ஏனென்றால் முதலாங்கூடாரஞ் செப்பனிடப்பட்டது; அதிலே * குத்துவிளக்கும், * * மேசையுந் தேவசமுகத்தப்பங்களுமிருந்தது; அது பரிசுத்தமானதென்னப்படும். * ௨. மோ. ௨௫: ௩௧—௩௯. * * ௨. மோ. ௨௫: ௨௩—௩௰.

௩. ஆனால

௩. ஆனால் இரண்டாந்திரைக்குப் பிறகாலே * பரிசுத்த
ஸ்தலமென்னப்பட்ட கூடாரமிருந்தது;

* ௨. மோ. ௨௬: ௩௩. ௩௪.

௪. அதிலே பொற் தூபகலசமும், * எங்கும்
பொன்தகட்டால் மூடப்பட்ட உடன்படிக்கையின் பெட்டியு
முமிருந்தது; அதிலே ** மன்னாவை வைக்கப்பட்ட
பொற் பாத்திரமும், *** துளிர்த்த ஆரோனின்
கோலும், **** உடன்படிக்கையின் பலகைகளுமிருந்தது;

* ௨. மோ. ௨௫: ௰—௰௫. ** ௨. மோ. ௰௬: ௩௨—௩௪. *** ௪. மோ. ௰௭: ௧—௰௧. **** ௨. மோ. ௨௫: ௰௬.

௫. அதின்மேல் * கிருபாசனத்தை மூடி நிழலி
டுகிற மகிமையினுடைய கேருபீன்களுமிருந்தது. இவைக
ளைக் குறித்துத் தனித்தனியே பேசப்படுஞ் சமயமல்ல.

* ௨. மோ. ௨௫: ௰௮—௨௨.

௬. இவைகள் இப்படிச் செப்பனிடப்பட்டபின்போ
னால், ஆராதனைகளைச் செய்துமுடிக்கிற ஆசாரியர்
கள் முதலாங் கூடாரத்திலே எப்போதும் உள்ப
பிரவேசிக்கிறார்கள்.

௭. இரண்டாவதிலோ வருஷத்துக்கு ஒருவிசை பி
ரதான ஆசாரியன் மாத்திரம் உள்பிரவேசிக்கிறான்;
அவன் தனக்காகவும் ஜனத்தின் தப்பிதங்களுக்காகவுஞ்
செலுத்துமிரத்தமில்லாமலல்ல.

* ௩. மோ. ௰௬: ௨. ௰௬: ௩௪.

௮. முதலாங் கூடாரம் நிலைகொண்டிருக்குமட்டும்
பரிசுத்த ஸ்தலத்துக்குப் போகிற வழி இன்னும் வெளி
யாகவில்லையென்கிறதைப் பரிசுத்த ஆவியான
வர் தெரியப்படுத்துகிறார்.

௯. அந்தக் கூடாரங் காணிக்கைகளும் பலிகளுஞ்
செலுத்தப்படுகிற அக்காலத்துக்கே உதவுகிற
ஒப்பனையாயிருந்தது.

௰. அவைகள் ஆராதனை செய்கிறவனை மனச்சாட்சியிலே
தேற்றுவிக்க மாட்டாமல்; போஜனங்களோடும்
பானங்களோடும் பலவித ஸ்நானங்களோடும்
மாம்சீக நீதிகளோடும் மாத்திரங்கூடினதுக
ளாயிருந்து சீர்திருத்தலின் காலமட்டாக சுமத்தி வைக்
கப்பட்ட காரியங்களாயிருந்தது.

௰௧. ஆனால் கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளின் பி
ரதான ஆசாரியராய் வந்து, இந்தச் சிருஷ்டிப்பாகிய கை
வேலையான கூடாரத்தின் வழியாயல்ல; * அதிக
பெரிதும் உத்தமமுமான தன்னதின் வழியாகவும்,

* ௰: ௰௯—௨௧.

௰௨. கடாக்கள் கன்றுக்குட்டிகளுடைய ரெத்தத்
தினாலுமல்ல, தம்முடைய சொந்த ரெத்தத்தினாலும் ஒரேவிசை * பரி
சுத்த ஸ்தலத்திலே நித்திய மீட்டுதலை உண்டுபண்ணின
வராய்ப் பிரவேசித்தார். * ௪: ௰௪.

௰௩. ஏனென்றால், * எருதுகள் கடாக்களுடைய
ரெத்தமும், ** தீட்டுப்பட்டவர்கள் மேல் தெளிக்கப்பட்ட

கிடாரியின் சாம்பலுமமாக தீட்டுப்பட்டவர்களை மா
ம்சப்பரிசுத்தப்படுத்துதலால்; ௩. மோ. ௰௬: ௰௪.

௰௫. ** ௪. மோ. ௰௯: ௯. ௰௭.

௰௪. எத்தனை அதிகமாய் நித்திய ஆவியினாலே தம்மைத்
தாமே பழுதற்ற பலியாகப் பராபரனுக்குப் படைத்த அவராகப்பட்ட
கிறிஸ்துவினுடைய இரத்தம் உங்கள் மனச்சாட்சியை
சீவனுள்ள பராபரனுக்கு ஊழியஞ்செய்யும்படிக்குச் செத்த
கிரியைகளறச் சுத்திகரிக்கும். * க. பேது. ௧: ௰௯.

௧ யோவா. ௧: ௭. அபி. ௧: ௫.

௰௫. இதனாலே முந்தின உடன்படிக்கையின் கீழ்ச் சம்பவித்த அ
க்கிரமங்களை நீக்கிப் போக்குகிறதாக மரணமுண்டானதினால், அப்படி
யே அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்
பட்ட நித்திய சுதந்தரத்தை அடைகிறதற்காக, அவர் புது
உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்.

* ௰௨: ௨௪. ௧. தீமோ. ௨: ௫.

௰௬. ஏதென்றால் மரணசாதனம் எங்கேயோ அங்
கே அந்தச் சாதனத்தை எழுதினவனுடைய மரணமுண்டாக
வேண்டியது.

௰௭. ஏனெனில் மரணசாதனம் மரணமானபிறகே அந்தச்
சாதனம் உறுதியானது; அதை எழுதினவன் உயிரோடி
ருக்கையில் அது பெலப்படாமலேயே.

௰௮. ஆனதுகொண்டு முந்தினதும் இரத்தமில்லா
மல் பிரதிஷ்டைபண்ணப்படவில்லை.

௰௯. ஏனென்றால் *மோசேயானவன் எல்லாப்பிரசனத்துக்
கும் நியாயப்பிரமாணத்தின்படியே எல்லாக்கற்பனையையுஞ் சொல்
லப்பட்ட பிற்பாடு, அவன் கன்றுக்குட்டிகள் வெள்ளாட்
டுக்கடாக்களுடைய இரத்தத்தைத் தண்ணீரோடும் சிகப்பான ஆட்டு
மயிரோடும் ஈசோப்போடுங்கூட வாங்கிப் புஸ்தகத்
தின்மேலும் சகல சனத்தின்மேலுந் தெளித்து:

* ௨. மோ. ௨௪: ௩—௮.

௨௰. இது பராபரன் உங்களுக்குக் கற்பித்த உடன்படிக்
கையினுடைய இரத்தமென்றான்.

௨௧. *கூடாரத்தின் மேலும் ஆராதனையினுடைய எல்
லாப் பணிமுட்டுகள் மேலும் அப்படியே இரத்தத்
தைத் தெளித்தான். * ௩. மோ. ௮: ௰௫. ௰௯.

௩௰. ௰௯: ௰௪. ௨௰.

௨௨. கொஞ்சங்குறைய நியாயப்பிரமாணத்
தின்படியே இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; *இரத்தஞ்
சிந்துதலில்லாமல் மன்னிப்புண்டாகாது.

* ௩. மோ. ௰௭: ௰௧.

௨௩. ஆகையால் பரமண்டலங்களிலுள்ளவைக
ளின் மாதிரிகளானவைகள் இதுகளினாலும் பரம காரியங்
களோ இதுகளிலும் விசேஷமான பலிகளினாலுஞ் சு
த்திகரிக்கப்படவேண்டியதாயிருந்தது.

௨௪. ஏனென்றால் கிறீஸ்து மெய்யான பரிசுத்தஸ்த
லத்துக்கு ஒத்த அடையாளமான கைவேலையா
யிருக்கும் பரிசுத்தஸ்தலத்திலல்ல, பரமண்டலத்திலே

தானே

தானேயிப்போ பராபரனுடைய சமுகத்திலே நமக்காகப்
பிரசன்னமாயிருக்க உள்ப்பிரவேசித்தார்.

* ௧. யோவ. ௨: ௧.

௨௫. பிரதான ஆசாரியன் அன்னியரத்தத்தோடே
வருஷந்தோறும் பரிசுத்தஸ்தலத்துக்குட் பிரவே
சிக்கிறதுபோலத் தம்மைத்தாமே அநேகந்தரஞ் செலுத்துவதற்
கு அவருள் பிரவேசிக்கவில்லை.

* ௨. மோ. ௩௰: ௰.

௨௬. மற்றப்படி உலகத்தோற்ற முதல
கொண்டு அநேகம் விசை பாடுபட வேண்டியதாயி
ருக்குமே; இப்போதோவென்றால் உலக முடிவுகாலத்
திலே ஒருவிசை தம்மைப்பலியிடுகிறதினாலே பாவத்
தை நீக்கும்படிக்கு வெளிப்பட்டார்.

௨௭. ஒரேவிசை மரிக்கிறதும் அதுக்குப் பிறபாடே நி
யாயத்தீர்ப்பும் எந்தப்பிரகாரமாய் மனுஷருக்குக் குறிக்
கப்பட்டிருக்குதோ,

௨௮. அந்தப்பிரகாரமாகக் கிறீஸ்துவும் அநேகருடைய
பாவங்களைச் சுமந்துதீர்க்க, ஒரேவிசைப் பலியான பின்
பு இரண்டாம்விசை தமக்குக் காத்திருக்கிறவர்களுக்
கு இரட்சிப்பாகப் பாவமில்லாமல் தோன்றுவார்.

* ஏசா. ௫௩: ௰௨.

௰. அதிகாரம்.

கிறீஸ்துவுடைய பலியின் பரிபூரண நித்திய
பேறுண்டாக்குகிறது.

நியாயப்பிரமாணமோவென்றால் காரியங்களின் சு
ரூபத்தையல்ல, வரப்போகிற நன்மைகளின் நிழ
லைக்கொண்டிருக்கிறபடியினாலே, அதுசேர்ந்துவரு
கிறவர்களை, காலந்தப்பாமல் வருஷந்தோறும் நி
த்தியமாய்ச் செலுத்துகிற பலிகளினாலே ஒருக்
காலும் பூரணர்களாக்கமாட்டாது.

* கொலோ. ௨: ௰௭.

௨. ஏனென்றால் ஆராதனை செய்கிறவர்கள் அப்புறம்
பாவங்களின் மனச்சாட்சியில்லாமல் ஒரு
விசை சுத்தமாக்கப்பட்டார்களானால், அதுகளைச்
செலுத்தப்படாமல் நின்றுபோமே.

௩. அதுகளாலே வருஷந்தோறும் பாவங்களின்
நினைவுகூருதலிருக்கிறது.

௪. ஏனென்றால் காளைகள் கடாக்களுடைய இரத்தம்
பாவங்களை நீக்கப்போகிறது கூடாத காரியமாயிருக்
குது.

௫. ஆகையால் அவர் உலகத்துக்குள் வந்து சொல்
லுகிறதாவது: * பலியையும் காணிக்கையையும் நீர்
விரும்பாமல், சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்.

* சங். ௪௰: ௭—௯.

௬. சர்வாங்கதகனப்பலிகளும் பாவத்தினிமித்
தம் இடும் பலிகளும் உமக்குப் பிரியமானதல்ல.

௭. இதோ

௭. அப்பொழுது நான்: தேவனே, புஸ்தகச் சுருளிலே என்னைக்
குறித்தெழுதியிருக்கிறபடி, உம்முடைய சித்தத்தின்படி செய்யு
கிறதற்கு இதோ வருகிறேன் என்று சொன்னேன் என்றார்.

௮. மேலே பலியையும் காணிக்கையையும் தகனபலிகளையும் பாவ
நிவாரணபலிகளையும் நீர் விரும்பவில்லை, அவைகளில் பிரிய
மில்லையென்று சொல்லி; அவைகள் நியாயப்பிரமாணத்தின்படி
செலுத்தப்பட்டு வருகிறதென்று சொன்னபின்பு,

௯. பின்பு: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்யு
கிறதற்கு இதோ வருகிறேன் என்றார். இரண்டாவதை
நிலைநிறுத்தும்படிக்கு முந்தினதை நீக்கிப்போடுகிறார்.

௰. இந்தச் சித்தத்தின்படியே யேசுக்கிறிஸ்துவினுடைய சரீரம்
ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே நாம் பரிசுத்தமாக்
கப்பட்டிருக்கிறோம். * ௯: ௰௨.

௰௧. எவனொரு ஆசாரியனும் நாடோறும் ஆராதனைசெய்
துகொண்டு, ஒருக்காலும் பாவங்களை நிவர்த்திசெய்யக்
கூடாத ஒரேவிதமான பலிகளை அநேகந்தரம் செலுத்திக்
கொண்டு நிற்கிறான்.

௰௨. இவரோ பாவங்களுக்காக ஒரேபலியைச் செலுத்தி, என்
றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்து,

* ௧: ௩

௰௩. * இனித் தம்முடைய சத்துருக்கள் தம்முடைய பாதப
டியாக்கப்படுமளவும் காத்துக்கொண்டிருக்
கிறார். * சங்கீ. ௱௰: ௧.

௰௪. ஏனென்றால் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை
ஒரே பலியினாலே அவர் என்றைக்கும் பூரணப்படுத்தி
யிருக்கிறார்.

௰௫. இதைக்குறித்துப் பரிசுத்த ஆவியும் நமக்குச் சாட்சியாக
இருக்கிறார்; எப்படியென்றால்:

௰௬. * அந்நாட்களுக்குப் பின்பு நான் அவர்களோடே
பண்ணும் உடன்படிக்கையாவது: நான் என் பிரமாணங்களை
அவர்கள் இருதயங்களிலே வைத்து, அவர்கள் மனதிலே அவைக
ளை எழுதுவேன் என்று சொன்னபின்பு, கர்த்தர் சொல்லு
கிறார் என்றும்,
நிற்கிறது. * எரே. ௩௧: ௩௩. ௩௪.

௰௭. பின்பு: அவர்களுடைய பாவங்களையும் அக்கிரமங்களை
யும் இனி நினையாதிருப்பேன் என்றும் சொல்லு
கிறார்.

௰௮. இவைகளுக்கு மன்னிப்பு உண்டான இடத்திலே
பாவத்தினிமித்தம் பலிசெலுத்துதல் இனி
இல்லை.

விசுவாச உபதேசத்தினால் உண்டாகிய புத்தி.

௰௯. ஆகையால் சகோதரரே, யேசுவினுடைய
இரத்தத்தினாலே பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்க,

௨௰. அவர் நமக்குத் * தம்முடைய மாம்சமாகிய திரையின்
வழியாய்ப் புதிதும் ஜீவனுமான வழியாகப் பிரதிஷ்டை
பண்ணின பிரவேசத்தின் தைரியமுமாய். * மத். ௨௭: ௫௧.

௨௧. பராபரனுடைய வீட்டின்மேலே அதிகாரியான மகாஆசாரியரும் நமக்கிருக்கிறதினாலே,

௨௨. நாம் உண்மையுள்ள இருதயத்தோடும் பரிபூரண விசுவாசத்தோடும், இருதயங்கள் துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்டவர்களாகவும் சரீரஞ் சுத்தத் தண்ணீராலே கழுவப்பட்டவர்களாகவுஞ் சேர்ந்து,

௨௩. நம்பிக்கையின் அறிக்கையைப் பற்றுதலாய்ப் பிடிக்கமலப்பிடித்துக்கொள்ளக்கடவோம்; ஏனென்றால் வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவர்.

௨௪. சிநேகத்துக்கும் நற்கிரியைகளுக்கும் ஏவுதலுண்டாகாக நாம் ஒருவரொருவரைக் கவனமாயிருந்து,

* ௩: ௰௩. ௧. தெச. ௫: ௰௧.

௨௫. நாம் கூடுக்கூடுகிறதைச் சிலர் தங்களுடைய வழக்கமாயிருக்கிறதுபோலே விட்டுவிடாமல், நீங்கள் அந்த நாள் சமீபித்து வருகிறதைக் காணக்காண அதிகமாய் * ஒருத்தர்க்கொருத்தர் புத்திசொல்லக்கடவோம்.

* கொலோ. ௩: ௰௬.

௨௬. ஏனென்றால் * நாம் சத்தியத்தின் உணர்வைப் பெற்றபின்பு மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்தோமானால், பாவங்களினிமித்தம் இனி வேறே பலியிராமல்,

* ௬: ௪—௮.

௨௭. நியாயத்தீர்ப்புக்கு மாத்திரமே பயப்படச்செய்யப்போறதும் * எதிர்ச்சவிகளை அக்கினிக்கும் பயங்கரமான எதிர்பார்க்குதலே மீந்திருக்கும். * ௨. தெச. ௧: ௮.

௨௮. மோசேயின் நியாயப்பிரமாணத்தை ஒருத்தன் தள்ளினாலே இரக்கமில்லாமல் இரண்டு மூன்று சாட்சிகளின்வாக்கினாலே சாகிறான்.

௨௯. பராபரனுடைய குமாரனை மிதித்துப்போட்டு, தானே பரிசுத்தமாக்கப்பட்ட உடன்படிக்கையின் இரத்தத்தைப் பரிசுத்தமல்லாதென்றெண்ணி, கிருபையினுடைய ஆவியை நிந்திக்கிறவன் எத்தனை அதிகமான ஆக்கினைக்குப் பாத்திரனாக எண்ணப்படுவானென்று நினைக்கிறீர்கள்.

௩௦. ஏனென்றால் * நீதியைச் சரிக்கட்டுதல் என்னுடையது, நானே பதிலுக்குக் கொடுப்பேனென்று கர்த்தர் சொல்லுகிறாரென்றும், திரும்பவும் ** கர்த்தர் தம்முடைய ஜனத்தை நியாயந்தீர்ப்பாரென்று சொன்னவரை அறிவோம். * ௫. மோ. ௩௨: ௩௫. ** ௫. மோ. ௩௨: ௩௬.

௩௧. ஜீவனுள்ள பராபரனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமானது.

௩௨. ஆனாலும் நீங்கள் வெளிச்சமாக்கப்பட்டு பாடுகளினுடைய பெரிதான போராட்டத்தைச் சகித்த முந்தின நாட்களை நினைவுகூருங்கோள்.

௩௩. நிந்தனைகளாலும் உபத்திரவங்களாலும் வேடிக்கையாக்கப்பட்டீர்களே, (அந்தப்படி நடத்தப்பட்டவர்களுக்குப் பங்காளிகளுமானீர்களே.

௩௪. அந்தக் கட்டுகளிலே எனக்குண்டானதுக்கு நீங்கள் பாகப்பட்டீர்கள்; பரமண்டலங்களிலே வாசமான நிலைக்கு

ஆஸ்தி

ஆஸ்தி உங்களுக்கிருக்குதென்று அறிந்து, உங்களுக்குள்ள ஆஸ்திகளைச் சந்தோஷத்தோடே கொள்ளையாயிடக் கொடுத்தீர்கள்.

ஙரு. ஆகையினாலே • மகாப்பலனுள்ள உங்கள் தைரியத்தை எறிந்துவிடாதேயுங்கோள்.

• மத். ய: ஙஉ.

ஙசா. அதேதென்றால் நீங்கள் பராபரனுடைய சித்தத்தைச் செய்து வந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்குத் தேவையாயிருக்குது. • லூக். உக: யகூ.

ஙஎ. • ஏனென்றால் வருகிறவர் இன்னங் கொஞ்சப் போதிலே தாமதியாமல் வருவார். • ஆப. உ: ங.

ஙஅ. ஆனால் • விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்; பின்வாங்கிப்போனானேயாகில் அப்படிக்கொத்தவனைப்பற்றி நம்முடைய ஆத்துமம் பிரியமாயிராதென்கிறார். ஆப. உ: ச.

ஙகூ. நாமோவெனில் கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல் ஆத்துமம் ரெட்சிக்கப்பட விசுவாசமாகிறவர்களாயிருக்கிறோம்.

யக. அதிகாரம்.

விசுவாசத்துக்கேவுதிஷ்டாந்தங்கள்.

விசுவாசமோவென்றால் நம்புகிற காரியங்களின் • உறுதியாயும் •• காணாத காரியங்களின் நிச்சயத்தைக் காட்டுகிறதுமாயிருக்குது. • சங். உசா: எ. ௱உரு: கு. ௱சஎ: ரு. கூ. •• உ. கொரி. ரு: எ.

உ. அதினாலேதானே பூருவத்தார் நற்சாட்சிபெற்றார்கள்.

ங. விசுவாசத்தினாலே நாம் •• லோகம் பராபரனுடைய சொல்லாலே செய்யப்பட்டதென்றும், காணப்படுகிறதுகள் காணப்படாமலிருக்கிறதுகளாலுண்டானதென்றும் அறிந்துகொள்ளுகிறோம். • சங். ஙங: சா. கூ.

ச. விசுவாசத்தினாலே • ஆபேல் காயீனைப் பார்க்கிலும் மேன்மையான பலியைப் பராபரனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன், பராபரன் அவனுடைய காணிக்கைகளுக்குச் சாட்சி கொடுத்ததினால், •• நீதிமானென்று சாட்சிபெற்றான்; அதினாலே அவன் மரித்தும் இன்னம் பேசுகிறான். • க. மோ. ச: ச. •• மத். உங: ஙரு.

ரு. விசுவாசத்தினாலே • ஏனோக் மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்; பராபரன் அவனை எடுத்துக்கொண்டபடியினாலே அவன் காணப்படாமற் போனான். ஏனென்றால் அவன் எடுத்துக்கொள்ளப்படுகிறதுக்கு முன்னே பராபரனுக்குப் பிரியமானவனென்று சாட்சிபெற்றான். • க. மோ. ரு: உச.

சா. ஆனால் விசுவாசமில்லாமல் அவருக்குப் பிரியமாயிருக்கக்கூடாது; ஏனென்றால் பராபரனண்டைக்

ச்சேருகிறவன், அவருண்டென்றும், அவருக்கு ஊழியஞ்செய்கிறவர்களுக்குப் பலனளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்.

௭. விசுவாசத்தினாலே நோவா, தானின்னுங் காணப்படாதிருக்கிறவைகளைக் குறித்துத் தேவனாலே எச்சரிக்கப்பட்டபோது பயந்து, தன் வீட்டை ரட்சிக்கிறதற்காக ப்பேழையைச் செய்வித்து: அதினாலே லோகத்தைக் குற்றவாளியாக்கினதுமன்றி, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான்.

* ௧. மோ. ௬: ௮. ௰௩.

௮. விசுவாசத்தினாலே * ஆபிரகாம், தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்துக்குப் புறப்பட்டுப்போக அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் எங்கே சேருவானென்றறியாமல் புறப்பட்டுப்போனான்.

* ௧. மோ. ௰௨: ௧—௪.

௯. விசுவாசத்தினாலே அவன் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திலே * பரதேசியைப்போலே சஞ்சரித்து, அந்த வாக்குத்தத்தத்துக்கு உடன்சுதந்தரராகிய ஈசாக்கோடும் யாக்கோபோடுங் கூடாரங்களிலே குடியிருந்தான். * அப்போ. ௭: ௫.

௰. ஏனென்றால் பராபரன் கட்டி உண்டாக்கின அஸ்திவாரங்களுள்ள பட்டணத்துக்கு அவன் காத்திருந்தான். * ௰௨: ௨௨.

௰௧. விசுவாசத்தினாலே * சாராளானவளுங் கெற்பந்தரிக்கப் பெலனடைந்து, வயது சென்றவளாயிருந்தும் பிள்ளைபெற்றாள், ஏனென்றால் வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணினாள்.

* ௧. மோ. ௰௮: ௰—௰௨. ௨௧: ௧. ௨.

௰௨. ஆனபடியினாலே * ஒருவனாலே சரீரஞ் செத்தவனாயிருந்தானே, ** வானத்து நட்சத்திரங்களைப் போலுமாயனந்தமாய்க் கடற்கரை மணலைப் போலுமனேகராயிருந்தார்கள்.

* ரோ. ௪: ௰௯. ** ௧. மோ. ௰௫: ௫.

௰௩. இவர்களெல்லாரும் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதுகளை அடையாமல், * தூரத்திலே அதுகளைக் கண்டு, நம்பி, அவைகளைக் கொண்டு, தாங்கள் பூமியின் மேலே ** அன்னியரும் பரதேசிகளுமென்று அறிக்கைபண்ணி, விசுவாசத்தோடே மரித்தார்கள். *

யோவ. ௮: ௫௬. ** ௧. மோ. ௨௩: ௪.

௰௪. இப்படிக்கொத்தவைகளைச் சொல்லுகிறவர்கள் தாங்கள் ஊரைநாடுகிறதைத் தெரியப்படுத்துகிறார்கள்.

௰௫. தாங்கள் விட்டுவந்ததை நினைத்திருந்தார்களானால், அதுக்குத் திரும்புகிறதுக்கு அவர்களுக்குச் சமயமிருக்குமே.

௰௬. இப்போதோ மேலானவைகளான பரமதேசத்தை விரும்புகிறார்கள், ஆகையினாலே பராபரன் * அவர்களுடைய பராபரனென்றழைக்கப்பட அவர்களுக்காக

வெட்க

வெட்கப்படுகிறதில்லை; ஏனெனில் அவர்களுக்கொ
ருபட்டணத்தை ** ஆயித்தம்பண்ணிஞர்.

* உ. மோ. ங: சா. ** மத். உஉ: ஙஉ.

யஎ. விசுவாசத்தினாலே ஆபிரகாம், தான் சோதிக்கப்
பட்டபோது, * ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொ
டுத்தான். * க. மோ. உஉ: ச. மு.

யஅ. * ஈசாக்கினிடத்திலே உன்வித்து விளங்குமென்
று அவனோடே சொல்லப்பட்டிருந்தது. இப்படிக்
கொத்தவாக்குத்தத்தங்களைப்பெற்றவன் ஏகசேய
னானவனைப் பலியாக ஒப்புக்கொடுத்தது.

* க. மோ. உக: யஉ.

யகூ. மரித்தோரிலிருந்துமெழுந்திருக்கப்பண்ணப்
பராபரன் வல்லவர் என்றெண்ணினான்; ஆகையிஞ
லவனை அதற்கொப்பனையாகத் திரும்பவும் அ
டைந்தான்.

உய. விசுவாசத்தினாலே * ஈசாக்கியாக்கோபையும்
ஏசாவையும்வருங்காரியங்களைக்குறித்து ஆசீர்வதித்
தான். * க. மோ. உஎ: உஅ. மு.

உக. விசுவாசத்தினாலே யாக்கோபு தான் காலம்
பண்ணுகிறபோது, யோசேப்புடைய குமாரரில் ஒவ்
வொருத்தனை ஆசீர்வதித்து, தன் ஊன்றுகோலின்முனை
யிலே சாய்ந்து பணிந்தான்.

* க. மோ. சஅ: ௯. மு.

உஉ. விசுவாசத்தினாலே யோசேப்பு * தான் காலம்
பண்ணுகிறபோது, இஸ்ரவேல் புத்திரருடைய புறப்
படுதலைக்குறித்துப்பேசி, தன் எலும்புகளைக்
குறித்துக் கட்டளைகொடுத்தான்.

* க. மோ. ருய: உச. உரு.

உங. விசுவாசத்தினாலே மோசேயின் தாய்தகப்பன்,
அவன் பிறந்தபோது * பிள்ளை அழகுள்ளதென்று கண்
டு, மூன்றுமாதம் ஒளித்துவைத்து, ராசாவினுடைய கட்
டளைக்குப் பயப்படாதேபோனார்கள்.

* உ. மோ. உ: க. உ.

உச. விசுவாசத்தினாலே * மோசே, தான் பெரியவ
னானபோது, பார்வோனின் குமாரத்திமகனென்னப்
படுகிறதைவெறுத்து,

* உ. மோ. உ: யக—யஉ.

உரு. * பாவத்தின் அநித்திய அநுபவத்தையநுபவிக்கிற
தைப்பார்க்கிலும், பராபரனுடைய சனத்துடனே
தீங்கனுபவிப்பதையே தெரிந்துகொண்டு,

* சங். அச: யக.

உசா, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்
துவின் நிந்தையை அதிக ஐசுவரியமாக எண்ணிஞன்,
ஏனென்றால் பலனின்மேல் நோக்கமாயிருந்தான்.

உஎ. விசுவாசத்தினாலே அவன் ராசாவின் குரோதத்துக்
குப் பயப்படாமல், எகிப்தைவிட்டுப்போஞன்;

னென

ணனாலும் அதெரிசியமானவரை தான் தெரிசிக்கிறப் போலே ஸ்திரப்பட்டிருந்தான்.

௨௮. விசுவாசத்தினாலே அவன் தலைச்சன்களைச் சங் காரஞ்செய்கிறவன் அவர்களைத் தொடாதபடிக்கு, * பஸ்கா வையுமிரத்தந்தெளிப்பையு மநுஷ்டிக்கப்பண்ணினான்.

* ௨. மோ. ௰௨: ௨௧—௨௮.

௨௯. விசுவாசத்தினாலே * சிவந்தசமுத்திரத்தை வெட் டாந்தரையைப் போலே கடந்துபோனார்கள். அதை எசிப்தியர் செய்யத்தொடங்கி அமிழ்ந்துபோ னார்கள். * ௨. மோ. ௰௪: ௨௧. ழு.

௩௰. விசுவாசத்தினாலே * எரிகோவின் மதிலானது ஏழுநாள் சுத்தப்பட்டு விழுந்தது.

* யோசு. ௬: ௧—௨௰.

௩௰௧. விசுவாசத்தினாலே * ராகாபென்கிற வேசி, வேகாரர்களைச் சமாதானத்துடனே ஏற்றுக்கொண்டு அவிசுவாசிகளோடே கூடச் சேதமாகாதிருந்தாள்.

* யோசு. ௬: ௨௧—௨௫.

௩௰௨. அப்புறம் என்னசொல்லுவேன், நான் கிதெயோன், பாராக்கு, சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுவேலென்பவர்களின் செய்திகளையுந் தீர்க்கதரிசிகளின் செய்திகளையும் விஸ்தரிக்கப்போனால், எனக்குக் காலங்குறையுமே.

௩௰௩. இவர்கள் விசுவாசத்தினாலே ராச்சியங்களை ஜெயித்துக்கொண்டதும், நீதியை நடப்பித்ததும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதுகளை அடைந்ததும், * சிங்கங்களின் வாய்களை அடைத்ததும்,

* தானி. ௬: ௧. ழு.

௩௰௪. * அக்கினியின் பெலத்தை அவித்ததும், பட்டையக்கூர்மைக்குத் தப்பினதும், பெலயீனத்திலே பெலன் கொண்டதும், யுத்தத்திலே வல்லவர்களானதும், அன்னியருடைய பாளயங்களை மடங்கடித்ததுமுண்டு. * தானி. ௩: ௨௩. ழு.

௩௰௫. * ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை திரும்ப எழுந்தவர்களாக அடைந்ததுமுண்டு; வேறுசிலரோ, தாங்கள் வாசியான உயிர்த்தெழுந்தலையும் அடையும்படிக்கு மீட்கதலை ஏற்றுக்கொள்ளாமல், சேப்புண்டு வேதிக்கப்பட்டார்கள்.

* ௧. ராசா. ௰௭: ௨௨. ழு. ௨. ராசா. ௪: ௩௫. ௩௬.

௩௰௬. வேறுசிலர் நிந்தனைகளையும் அடிகளையுங் கட்டுகளையுங் காவலையுங் கூடவநுபவித்தார்கள்.

௩௰௭. கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சை பார்க்கப் பட்டார்கள், பட்டையவெட்டால் மரித்தார்கள், ஆட்டுச்சோமங்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டுதிரிந்து, குறையையும் உபத்திரவத்தையுந் தீங்கையும் அநுபவித்தார்கள்.

௩௰௮. லோகம் பாத்திரமாயிராத அவர்கள் வனாந்திரங்களிலும் பர்வதங்களிலும் கெபிகளிலும் பூமியின் குகைகளிலுஞ் சிதறுண்டலைந்தார்கள்.

௩௯. இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாதே போனார்கள்.

௪௰. ஏனென்றால் அவர்கள் நம்மையல்லாமல் நிறைவாகாததற்கு, பராபரன் நமக்காக வாசியான ஒரு காரியத்தை முன் நேமித்திருந்தார்.

௰௨. அதிகாரம்.

பொறுமையும் தேவபக்தியுமாயிருக்கப் புத்தி சொன்னது.

ஆகையால் சாட்சிகளுடைய இத்தனை பெரிய மேகத்தினாலே சூழப்பட்டிருக்கிற நாமும், • எல்லாப் பாரத்தையும் நம்மைச் சுற்றி நெருக்குகிற பாவத்தையும் தள்ளிவிட்டு, நமக்கு முன் வைத்திருக்கிற போராட்டத்திலே • • பொறுமையுடனே ஓடி, • றோ. ௭: ௨௧—௨௪. • • ௰: ௩௬. ௧. கொ. ௯: ௨௪. ௨௫.

௨. விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய யேசுவை • நோக்கிப் பார்க்கக்கடவோம், அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்துக்காகக் குருசை அவமானத்தை அசட்டைசெய்து சயித்து, • • பராபரனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்திலே உட்கார்ந்தார் • ௩: ௧. • • ௨சி. ௩: ௨௧.

௩. ஆகையால் உங்கள் ஆத்துமங்களில் நீங்கள் இளைத்துப்போய் விடாதபடிக்கு, நீங்கள் தமக்கு விரோதமாய்ப் பாவிகளாலுண்டான இப்படிக் கொத்த எதிர்ப்பேச்சைச் சயித்தவரைத் தியானித்துக் கொள்ளுங்கோள்.

௪. • நீங்களின்னம் ரெத்தம் பரியந்தம் பாவத்தோ டெதிர்த்து நின்று போராடினதில்லை.

• ௧. கொரி. ௰: ௰௩.

௫. என்றாலும் • என்மகனே கர்த்தருடைய தெண்டனையை அற்பமாக எண்ணாதே, அவராலே தண்டிக்கப் படும்போது சோர்ந்துபோகாதே.

• வாக்கி. ௩: ௰௧. ௰௨.

௬. என்னென்றால் கர்த்தர் நேசிக்கிறவனெவனோ அவனைத் தெண்டிக்கிறார், தாம் சேர்த்துக்கொள்ளுகிற எல்லாக் குமாரனையும் அடிக்கிறாரென்று பிள்ளைகளாகிய உங்களுக்குச் சொல்லப்படுகிற புத்தியை மறந்தீர்கள்.

• அபி. ௩: ௰௯.

௭. நீங்கள் தெண்டனையைப் பொறுத்தால், உங்களைப் பராபரன் குமாரராகக் கொண்டு தம்மை ஒப்புக்கொடுக்கிறார், ஆரொருவனைத் தகப்பன் தெண்டியாதிருந்தால் பிள்ளையாயிருக்கும்.

௮. எல்லாரும் பங்குள்ளவர்களான தெண்டனையைப் பெறாமலிருந்தீர்களேயானால் நீங்கள் குமாரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருக்கிறீர்கள்.

௯. நம்முடைய மாம்சத்தின் பிதாக்களை நமக்குத் தெண்டிப்பவர்களாயிருந்தும் அவர்களுக்கு நாம் அஞ்சினதுண்டேயானால், வெகு அதிகமாய் ஆவிகளுடைய பிதாவுக்கு நாம் பிழைக்கத்தக்கதாக, கீழ்ப்படிய வேண்டாமோ.

௰. அவர்கள் கொஞ்சநாளாக, தங்களுக்குத் தோற்றினபடி தெண்டித்தார்கள், இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்படி, பிரயோசனத்துக்குத் தக்கதாய் நம்மைத் தெண்டிக்கிறார்.

௰௧. ஆனால் தெண்டிப்பு யாவும் நடக்கிறபோது சந்தோஷமாய்க் காணாமல், துக்கமாய்க் காணுது, பிறபாடோவெனில் அதினாலே பழக்கப்பட்டவர்களுக்கு நீதியினுடைய சமாதானமான கனியைத் தரும்.

௰௨. ஆகையினாலே * நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்து போன முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்து.
* யெச. ௩௫: ௩.

௰௩. நொண்டியாயிருக்கிறது சுளுக்கடையாமல் குணமேயாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வையாக்குங்கோள்.

௰௪. * யாவரோடுஞ் சமாதானமாயிருக்கிறதையும் ** பரிசுத்தமாயிருக்கிறதையும் பின்தொடருங்கோள், அதுயல்லாமல் ஒருத்தனுங் கர்த்தரைத் தெரிசிப்பதில்லை.
* ரோ. ௰௨: ௰௮. ** மத். ௫: ௮.

௰௫. ஒருத்தனும் பராபரனுடைய கிருபைக்குத் தாழ்ச்சியாய்ப் போகாமலும், * யாதொரு கசப்பான வேர் முளைத்துச் செழும்பி கலகமுண்டாக்கிறதினாலே அநேகர் தீட்டுப்படாமலும், * ரு. மோ. ௨௯: ௰௮.

௰௬. ஒருத்தனும் * வேசிக்கள்ளனாய், அல்லது ** ஒரே போசனத்துக்குத் தன் சேஷ்டபிறப்பு சுதந்திரத்தைக் கொடுத்துவிட்ட ஏசாவைப்போலே சீர்கேடனாகாமலிருக்கக் கவனித்துப்பாருங்கோள்.
* ஏபே. ௫: ௩. ** க. மோ. ௨௫: ௨௯. ௩௪.

௰௭. ஏனென்றால் அவன் பிற்பாடு ஆசீர்வாதத்தைச் சுதந்திரித்துக்கொள்ள மனதாயிருக்கிறபோது, ஆகாதவனென்று தள்ளப்பட்டானென்றறிவீர்கள், ஏனெனில் அவன் கண்ணீரோடே திரும்பவுமதைத் தேடியும், அதுக்கிடங்காணாதே போனான்.

௰௮. தொட்டப்படத்தக்கதான பர்வதத்துக்கும், வேகிற அக்கினிக்கும், மந்தாரத்துக்கும், இருளுக்கும், புசலுக்கும்,
* உ. மோ. ௰௯: ௰௮—௰௯.

௰௯. எக்காள முழக்கத்துக்கும், வார்த்தைகளுடைய சத்தத்துக்கும் நீங்கள் வந்து சேர்ந்ததில்லையே, அதைக் கேட்டவர்கள், * தங்களுக்குப் பிறம்ப வசனஞ் சொல்லப்படாதபடிக்கு வேண்டிக்கொண்டார்கள். * உ. மோ. ௨௰: ௰௯.

௨௰. ஏனென்றால், ஒரு மிருகமாகிலும் பர்வதத்தைத் தொட்டால் கல்லெறியுண்டு, அல்லது அம்பினாலேயெய்யுண்டு சாகவேண்டுமென்று கற்பிக்கப்பட்டதைச் சயிக்கமாட்டாதே போனார்கள். * உ. மோ. ௰௯: ௰௨. ௰௩.

௨௧. திகிலும அதிருமானனாயிருக்கிறேனென்று மோசேயுஞ்சொன்னான்/ இத்தனைபயங்கரமாக அந்தப் பிரத்தியட்சமிருந்தது.

௨௨. நீங்களோசீயோனபருவதத்துக்கும/ * பரமஎருசலேமென்கிற ஜீவனுள்ள பராபரனுடைய பட்டணத்துக்கும அநேகமாயிரங்களான தேவதூதர்க்கும/

* கலா. ௪: ௨௬.

௨௩. * பரலோகத்திலே பேரெழுதப்பட்ட முதலப் பேறானவர்களுடைய சர்வசங்கத்துக்கும் சபைக்கும/ எல்லாருக்கும நியாயாதிபதியாகிய பராபரனிடத்துக்கும/ நிறைவேறின நீதிமானகளுடைய ஆவிகளண்டைக்கும/ * லூக. ௰: ௨௰.

௨௪. புது உடனபடிக்கையின மத்தியஸ்தராகிய யேசுவண்டைக்கும/ * ஆபேலுடைய இரத்தத்திலும வாசியானதுகளைப் பேசுகிற தெளிக்கப்பட்ட இரத்தத்துக்கும வந்துசேர்ந்தீர்கள். * ௧. மோ. ௪: ௰.

௨௫. பேசுகிறவரை நீங்கள கேட்கமாட்டோமென்று விலகாதபடிக்குப் பாருங்கள/ ஏனென்றால பூமியிலே பேசினவரைக் கேட்கமாட்டோமென்று விலகினவர்கள தப்பிப்போகக்கூடாதிருந்தார்களே/ பரமண்டலங்களிலிருந்து பேசுகிறவரை நாமவிட்டுவிலகினால/ எப்படித் தப்பிப்போவோம. * ௨:௨. ௩. ௰:௨௮. ௨௯.

௨௬. அவருடைய சத்தம அப்போது பூமியை அசைத்தது இப்போதோ/ * இன்னும ஒருக்கால நான பூமியை மாத்திரமல்ல/ வானத்தையும அசைப்பேனென்று வாக்குத்தத்தமபண்ணினார். * ஆகா. ௨: ௭.

௨௭. இன்னம ஒருதரமென்கிறதினாலே அசையுங் காரியங்கள மாறுதலாய்வேண்டியதைக் குறிக்குது/ ஏனென்றால அசையாக்காரியங்கள நிலைநிற்கும்படிக்கு அவைகள உண்டாக்கப்பட்டிருக்குது.

௨௮. ஆகையால அசையாத ராச்சியத்தைப் பெறுகிற நாமபராபரனுக்குப் பிரியமாக * பயபக்தியோடும பயத்தோடும ஊழியஞ்செய்யத்தக்கதாக்கிருபையைப் பிடித்துக்கொண்டிருக்கக்கடவோம. * பிலி. ௨: ௰௨.

௨௯. ஏனென்றால நம்முடைய பராபரன அழிக்கும அக்கினியாயிருக்கிறார். * ௫. மோ. ௪: ௨௪.

௰௩. அதிகாரம்.

நலநடக்கைக்குரிய புத்திமதிகளும/ வீணடையாக்குப்
போதகங்களுக்கு எச்சரிக்கைகொள்ளுமபடிக்
கும ஏவுகிறது.

௧. சகோதரசிநேகம நிலைநிற்கக்கடவது. * ரோ. ௰௨: ௰.

௨. பரதேசிகளைச் சேர்த்துக்கொள்ள மறவாதேயுங்கள/ ஏனென்றால அதினாலே சிலர அறியாமல * தேவதூதரைச் சேர்த்துக்கொண்டதுண்டு/ * ௧. மோ.

௰௮: ௧. ௩. ௰௯: ௧. ௩.

௩. கட்டுண்டவர்களை நீங்களும் உடன்கட்டுண்ட
வர்களைப்போலே நினைத்து, தீங்கனுபவிக்கிறவர்களை
நீங்களுந் தானுஞ் சரீரத்தோடேயிருக்கிறீர்களென் றறிந்து
நினைத்துக்கொள்ளுங்கோள்.

௪. விவாகமானது எல்லாரிடத்திலும் கனமுள்ளதும்,
விவாகமஞ்சம் நிர்மலமானதுமாயிருக்கக்கடவது.
ஆனால் வேசைக்கள்ளரையும் விபசாரரையும் பராபரன்
நியாயந்தீர்ப்பார். * கலா. ௫: ௰௯—௨௧.

வெளி. ௨௨: ௰௫.

௫. * இருக்கிறதுகளே போதுமென்று, உங்கள் நடக்கை
பொருளாசையற்றிருக்கக்கடவது, ஏனென்றால் : * *
நான் உன்னை ஒருபோதுங் கைவிடுகிறதுமில்லை உன்னைக் கைவிட்டு விலகு
வதுமில்லையென்று அவரே சொன்னாரே. * ௧. தீமோ. ௬:

௮—௰௧. * * யோசு. ௧: ௫.

௬. ஆனதுகொண்டு * கர்த்தர் எனக்குச் சகாயர், நான்
பயப்படேன், மனுஷன் எனக்கென்ன செய்வானென்
று நாம் திடநம்பிக்கையாய்ச் சொல்லலாம்.

* சங். ௱௰௮: ௬.

௭. உங்களுக்குப் பராபரனுடைய வசனத்தைச் சொன்ன
உங்களை வழிநடத்தினவர்களை நினையுங்கோள், அவர்களுடைய
நடக்கையின் முடிவைக் கண்ணோக்கி, அவர்களின் விசுவா
சத்தைப் பின்பற்றுங்கோள்.

௮. * யேசுக்கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றென்றைக்
கும் ஒருவரே. * வெளி. ௧: ௰௭. ௰௮.

௯. * பலவித அந்நிய போதகங்களாலே அலைக்கழியுண்
டாதேயுங்கோள், ஏனென்றால் இருதயம் போச
னங்களினாலேயல்ல கிருபையினாலே திடப்படுகிறது
நல்லது, அதுகளிலே நடந்தவர்களுக்கது பிர
யோசனமாயிருந்ததில்லை. * எபே. ௪: ௰௪. ௰௫.

* * எபி. ௯: ௰—௰௪

௰. நமக்கொரு பலிபீடமுண்டு, அதிலிருந்து சா
ப்பிடக் கூடாரத்துக்காராதனை செய்கிறவர்களுக்க
திகாரமில்லை.

௰௧. ஏனென்றால் பாவங்களினிமித்தமாக எந்
தச் சீவன்களுடைய ரெத்தம் பிரதான ஆசாரியனாலே ப
ரிசுத்த ஸ்தலத்துக்குள் கொண்டுபோகப்படுகுதோ,
அதுகளின் உடல்கள் பாளயத்துக்குப் புறம்பே சுட்
டெரிக்கப்படுகுது. * ௩. மோ. ௰௬: ௨௭

௰௨. ஆனபடியினாலே யேசுவும், தம்முடைய சுயரெ
த்தத்தினாலே சனத்தைப் பரிசுத்தம்பண்ணுகிறதற்காக, பட்
டணவாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்.

௰௩. ஆகையால் நாம் பாளயத்துக்குப் புறம்பே அவ
ரண்டையிலே, அவருடைய நிந்தையைச் சுமந்து, புறப்ப
ட்டுப்போவோம்.

௰௪. ஏனென்றால் நிலைநிற்கிற பட்டணம் நமக்கிங்கே
இல்லை, வரப்போகிறதைத் தேடுகிறோம்.

௰௫. ஆகையால் அவர் முன்னிட்டுப் பராபரனுக்கு

ரெகத்தேசகாலமுமச்சுமந்துகொண்டாமகைகு ஆவிக்கைகுபண
ஊயஉருக்காநடையதுளிபாக்கிதுதியன பொலியையாகே
ஊத்தக்கடவோம். * சங்கீதம். ருப: உ௰.

ஓசே. ௰௪: ௩.

௰௫. ஆறுைநனைமதேபடிவெநதறும உயிநைமாயி
நேசகவுமமறவாதேயுங்கோள். ஏனென்றால் அப்படி
படிக்கொத்தபலிகளுக்குப்பாரபரன்ப்ரீதிப்படுகிறார்.
* குலோ: ௬: ௰. ** ஓசே. ௬: ௬.

௰௭. *உங்களைநடத்துகிறவர்களுக்குக்கீழ்ப்படிந்திருங்
கோள்; ஏனென்றால் அவர்கள் உங்கள் ஆத்துமாக்
களுக்காகக் கணக்கொப்புவிப்பவர்களாய் விழித்
திருக்கிறார்கள்; அவர்கள் அதைத் துக்கத்தோடே செய்
யாமல் சந்தோஷத்தோடே செய்யும்படி அப்படிச்செய்யுங்கோள்;
ஏனென்றால் அது உங்களுக்குநல்லதல்ல.

* ௧. தெச. ௫: ௰௨. ௰௩.

௰௮. எங்களுக்காக செபம்பண்ணுங்கோள்; எ
ன்னத்தினால் எல்லாவற்றிலும் நல்ல நடக்கையுள்
ளவர்களாயிருக்க மனதுள்ளவர்களென்று நம்பிக்
கையிருக்கிறோம்.

௰௯. ஆனாலும் நான் உங்களிடத்திற்குச் சீக்கிர
மாய் மறுபடியுந்திரும்பிவரும்படிக்கு நீங்களிப்படி
செய்யவேணுமென்றிக்கிறேன்.

உ௰. ஆடுகளுக்குப் பெரிய மேய்ப்பரான நம்முடைய
கர்த்தராகிய யேசுவை நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினா
லே மரித்தோரிலிருந்து எழுப்பின சமாதானத்தின்
தேவனானவர்,

* யோவா. ௰: ௰௧. ௧. பேது. ௨: ௨௫.

உ௧. தமக்குமுன்பாகப்பிரியமானதை உங்களில்
யேசுக்கிறிஸ்துவைக்கொண்டு நடப்பித்து, உங்களை
சமஸ்த நற்கிரியையிலும் தம்முடைய சித்தத்தின்படி செய்யத்
தக்கவர்களாக்குவாராக; அவருக்கு
என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்.

உ௨. ஆனாலும் சகோதரரே, நீங்கள் இந்தப் புத்திமதியான
வார்த்தையைப் பொறுத்துக்கொள்ளும்படி உங்களை வேண்டிக்
கொள்ளுகிறேன்; ஏனென்றால் சுருக்கமாக உங்களுக்கு
எழுதினேன்.

உ௩. சகோதரனாகிய தீமோத்தேயு விடுதலையானதை
அறியுங்கோள்; அவன் சீக்கிரமாக வந்தால் அவனோடே
கூட வந்து உங்களைக் காண்பேன்.

உ௪. உங்களை நடத்துகிறவர்களெல்லாரையும் எல்லாப்
பரிசுத்தவான்களையும் வாழ்த்துங்கோள். இத்தாலியா
தேசத்தார் உங்களை வாழ்த்துகிறார்கள்.

உ௫. கிருபை உங்களெல்லாரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

எபிரேயருக்கு இத்தாலியாவிலேயிருந்து தீமோத்
தேயுவின் கையிலனுப்பினது.

அப்போஸ்தலனாகிய

யாக்கோபுடைய பொதுவான

நிருபம்.

௧. அதிகாரம்.

சோதினைகளைக் குறித்துச் சொன்ன புத்தி.

பராபரனுக்குங் கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய யாக்கோபு, * சிதறிப்போயிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்களுக்குஞ் சந்தோஷமுண்டாக வெழுதுகிறேன். * ௧. பேது. ௧: ௧.

௨. என் சகோதரரே, நீங்கள் பலவித சோதினைகளிலே விழும்போது,

௩. உங்கள் விசுவாசத்தைப் பரீட்சைபார்க்குதல் பொறுமையை உண்டாக்குகிறதென்றறிந்து, * ** அதைச் சந்தோஷமாக எண்ணுங்கோள்.

* ரோ. ௫: ௩. ௪ ** மத். ௫: ௰—௰௨.

௪. ஆனால் நீங்கள் ஒன்றிலுங் குறையாயிராமல் தேறினவர்களும் நிறைவானவர்களுமாயிருப்பதற்காகப் பொறுமை நிறைவான கிரியையுள்ளதாயிருக்கக்கடவது.

௫. உங்களில் ஒருத்தனுக்கு * ஞானங் குறைவாயிருந்தால், தயாளுவாயுங் கடியாதவருமாய் உண்மையாய் எல்லாருக்குங் கொடுக்கிறவருமான பராபரனிடத்தில் கேட்கக்கடவான். அப்போ அவனுக்குக் கொடுக்கப்படும்.

* ௧. ராசா. ௩: ௯—௰௨.

௬. ஆனால் * ஒன்றுஞ் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவான்; ஏனென்றாற் சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு மோதுண்டலைகிற கடலலைக்குச் சமானமானவன். * மற்கு. ௰௧: ௨௪.

௭. அப்படிக்கொத்த மனுஷன், தான் கர்த்தரிடத்திலே யேதாகிலும் பெறுவானென்று நினைக்கவேண்டாம்.

௮. இருமனப்பட்ட மனுஷன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவன்.

௯. தாழ்ந்த சகோதரனானவன் தன் * உயர்ச்சியினாலும், * ௨. கொரி. ௬: ௰.

௰. அயிசுவரியவானோ தன் * தாழ்ச்சியினாலும் மேன்மை பாராட்டக்கடவான்; ஏனென்றால் ** புற்பூவைப்போல ஒழிந்துபோவான். * மத். ௫: ௩. ** ௧. பேது. ௧: ௨௪.

௰௧. அதெப்படியென்றால், * சூரியன் வெயிலோடே உதித்துப் புல்லை உலர்த்தினபோது, அதின் பூ உதிர்ந்து, அதின் ரூபத்தின் அழகு அழிந்துபோகிறது; அப்படியே அயிசுவரியவானுந் தன் வழிகளில் வாடிப்போவான்.

* சங். ௱௩: ௰௫.

௰௨. சோதனையைச் சகிக்கிற மனுஷன் * பாக்கியவானாயிருக்கிறான், அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மையச் சிநேகிக்கிறவர்களுக்கு ** வாக்குத்தத்தம்பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்.

* ௧. பேது. ௧: ௬. ௭. ** அஸ். ௨: ௰.

௰௩. சோதிக்கப்படுகிற எவனும் நான் தேவனாலே சோதிக்கப்படுகிறேனென்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாப்பான காரியங்களினால் சோதிக்கப்படாதவருமாயிருக்கிறார், ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல.

௰௪. அவனவன் தன் சுயஇச்சையினாலே இழுப்புண்டு இச்சைகுட்பட்டுச் சோதிக்கப்படுகிறான்.

௰௫. பின்பு இச்சை கர்ப்பந்தரித்துப் பாவத்தைப் பிறப்பிக்கும், பாவமும் நிறைவேறின போதோவெனில மரணத்தைச் ஜெநிப்பிக்கும்.

௰௬. என் பிரிய சகோதரரே, மோசம்போகாதேயுங்கள்.

௰௭. சகல * நல்ல ஈவும் உத்தமமான சகல வரமும் உயரத்திலிருந்துண்டாகி ** ஏதுமாறுதலாகிலும் ஏதும்வேற்றுமையின் நிழலாகிலுமில்லாத ஜோதிகளுடைய பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகுது.

* மத். ௭: ௰௧. ** ௪. யோவா. ௧: ௫.
௫. மோசே. ௩௨: ௪.

௰௮. அவர் தாம்சித்தமாயிருந்தமையால் சிருஷ்டிகளில் நாம் ஒருமுதற்பலன்களாவதற்குச் * சத்தியத்தின் வசனத்தினாலே ஜெநிப்பித்தார்.

* ௧. பேது. ௧: ௨௩.

௰௯. ஆகையினாலே, என் பிரிய சகோதரரே, எவனும் கேட்கிறதற்குத் தீவிரமும் * பேசுகிறதற்குத் தாமதமும் ** கோபிக்கிறதற்குத் தாமதமுமாயிருக்கக்கடவன். * ஸோக. ௰௭: ௨௭. ௨௮.

** பிரசங். ௭: ௯.

௨௰. ஏனென்றால் மனுஷனுடைய கோபம் பராபரனுடைய நீதியை நடப்பியாது.

௨௰௧. ஆகையாலே நீங்கள் * எல்லா அசுத்தத்தையுங் கொடிய துர்க்குணத்தையும் போட்டுவிட்டு, உள்ளே நட்டப்பட்டதும் உங்கள் ஆத்துமங்களை ரட்சிக்கவல்லதுமான வசனத்தைச் சாந்தத்தோடே ஏற்றுக்கொள்ளுங்கோள். * கொலோ. ௩: ௮. ௯.

௨௰௨. ஆனால் நீங்கள் * உங்களையே மோசம்போக்காதபடிக்கு வசனத்தின் கேழ்விக்காரராய் மாத்திரமல்ல அதின் செய்கைக்காரருமாயிருங்கோள்.

* மத். ௭: ௨௪ — ௨௭.

௨௰௩. ஏனென்றால் ஒருத்தன் வசனத்தின் செய்கைக்காரனல்லாமற் கேழ்விக்காரனாயிருந்தால், அவன் தன் சுபாவ முகத்தைக் கண்ணாடியிலே கண்டுகொள்ளும் மனுஷனுக்கொப்பானவன்.

௨௪. அதெப்படியென்றால் தன்னைத்தானே கண்டு புறப்பட்டுப்போய், உடனே தான் யிருந்தத்தை மறந்தான்.

௨௫. சுதந்திரத்துவயின் பூரணமாயிருக்கிற வேதத்தைக் கண்ணோக்கிப் பார்த்து, அதிலே நிலைகொண்டிருக்கிறவனே மறதியான கேட்டுக்காரனாயிராமல், கிரிகையின் செய்கைக்காரனாயிருந்தால் அவன் தன் செய்கையிலே பாக்கியவானாயிருப்பான்.

* யோவா. ௰௩: ௰௭

௨௬. உங்களிலொருவன் தன்னை தேவபக்தியுள்ளவனென்றெண்ணி, * தன் நாவை அடக்காமல், தன்னிருதயத்தை எத்தினால், அவனுடைய தேவபக்தி வீணாம். * சங். ௩௪: ௰௩.

௨௭. திக்கற்றவர்களையும் விதவைகளையும் அவர்களுடைய உபத்திரவத்திலே விசாரிக்கிறதும், * தன்னை லோகத்தால் கறைபடாதபடிக்குக் காத்துக்கொள்ளுகிறதும், பிதாவாகிய பராபரனுக்கு முன்பாக மாசில்லாததுமான தேவபக்தியாயிருக்கிறது.

* ௧. யோவ. ௨: ௰௫.

௨. அதிகாரம்.

பாரபட்சமாய் விசுவாசத்தைக் கொள்ளவேண்டாமென்பது.

என்சகோதரரே, மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவின் பேரிலுள்ள விசுவாசமுள்ளவர்களுக்கு பட்சபாதத்துடனே கூடியதாயிருக்க வேண்டாம்.

௨. அதெப்படியென்றால் பொன் மோதிரமும் மினுக்கான வஸ்திரந்தரித்த ஒருவனும் அழுக்கு வஸ்திரந்தரித்த தரித்திரனான ஒருவனும் உங்கள் ஆலயத்துக்குள்ளே பிரவேசிக்கும்போது,

௩. நீங்கள் மினுக்கான வஸ்திரந்தரித்தவனை நோக்கினவுடனே: நீயிங்கே நல்ல இடத்தில உட்காரென்று, தரித்திரனை நோக்கி: நீ அங்கே நில்லு, அல்லது இங்கே என் பாதபடிக்குக் கீழாக உட்காரென்று சொன்னால்,

௪. நீங்கள் உங்களுக்குள்ளே பேதம் பண்ணின் துர்ச்சிந்தனைகளுள்ள நீதிகாரராயினீர்களல்லவோ.

௫. என் பிரியமான சகோதரரே, கேளுங்கோள், * பராபரன் இந்த லோகத்துத் தரித்திரரை, விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மைச் சிநேகிக்கிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம் பண்ணின ராச்சியத்தின் சுதந்தரராகவும் தெரிந்துகொண்டதில்லையோ.

* ௧. கொ. ௧: ௨௬—௨௮

௬. நீங்களோ தரித்திரனைக் கனவீனம் பண்ணினீர்கள். உங்களை ஐசுவரியவான்களல்லோ ஒடுக்குகிறார்கள், அவர்களல்லவோ உங்களை நியாயாசனங்களுக்கு இழுக்கிறார்கள்.

௭. உங்களுக்குத்தரிக்கப்பட்ட நல்லநாமத்தை அவர்களல்லோ தூஷணிக்கிறார்கள்.

௮. ஏட்டுபாதும்: * உன்னைக்குறித்து உன்னைப் போலே சிநேகிப்பாயாகவென்கிற வேதவசனப்படிக்கு ராஜரீகமாச்சாதுரியப் பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மைசெய்கிறீர்கள்.

* மாற்கு. ௰௨: ௩௧.

௯. பக்ஷபாதமாயிருந்தீர்களேயாகில் நீங்கள் பாவத்தைச்செய்துகொண்டு, மீறினவர்களென்று ஞாயப்பிரமாணத்தாலே கண்டிக்கப்படுகிறீர்கள்.

௰. ஏனென்றால் எவனாகிலும் * ஞாயப்பிரமாணத்தை எல்லாவற்றையுங்கைக்கொண்டும் ஒன்றிலே தப்பினால், அவன் எல்லாவற்றுக்குங் குற்றவாளியாவான்.

* ௫. மோ. ௨௭: ௨௬. மத். ௫: ௰௯.

௰௧. விபசாரம்பண்ணாதிருப்பாயாக என்று சொன்னவர்: கொலைசெய்யாதிருப்பாயாக என்றுஞ் சொன்னார். நீ விபசாரம்பண்ணாதிருந்தாலும் கொலைசெய்தாயானால் ஞாயப்பிரமாணத்தை மீறினவனாவாய்.

௰௨. * விடுதலையின் பிரமாணத்தாலே நியாயந்தீர்க்கப்படப்போகிறவர்களாய் பேசுங்கோள் செய்யுங்கோள். * ௧: ௨௫.

௰௩. ஏனென்றால் * இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத ஞாயத்தீர்ப்புண்டாம்: ஞாயத்தீர்ப்புக்கெதிரே இரக்கம் மேன்மைபாராட்டும்.

* மத். ௰௮: ௨௩—௩௫.

கிரிகைகளில்லாத விசுவாசஞ்செத்ததென்பது.

௰௪. என் சகோதரரே, * ஒருவன் தனக்கு விசுவாசம் உண்டென்று சொல்லியுங் கிரிகைகளில்லாதிருந்தால், பிரயோசனமென்ன? அந்த விசுவாசம் அவனை ரெட்சிக்கக்கூடுமோ. * மத். ௭: ௨௧.

௰௫. ஒருசகோதரனாவது ஒருசகோதரியாவது நிர்வாணமானவர்களும் அன்றாடகப்பிழைப்பற்றவர்களுமாயிருக்கும்போது,

௰௬. உங்களிலொருத்தன் அவர்களுடனே: நீங்கள் சமாதானத்தோடே போய், குளிர்காய்ந்து பசியாறுங்கோளென்று சொல்லியுஞ் சரீரத்துக்குத் தேவையானவைகளை அவர்களுக்குக் கொடாமற் போனால், பிரயோசனமென்ன.

௰௭. அப்படியே விசுவாசமுங் கிரிகைகளில்லாதிருந்தாலது தன்னிலேதானே செத்ததாயிருக்குது.

௰௮. சிலன் ஒருத்தன்: உனக்கு விசுவாசமுண்டு, எனக்குக் கிரிகைகளுண்டு, உன் விசுவாசத்தை உன் கிரிகைகளாலே எனக்குக் காண்பி, நான் என் கிரிகைகளாலே என் விசுவாசத்தை உனக்குக் காண்பிப்பேனென்பானே.

௰௯. பராபரன் ஒருவரேயென்று விசுவாசிக்கிறாய், அப்படி நீசெய்கிறது நல்லது, அசுத்தபிசாசுகளும் விசுவாசித்து நடுக்குகிறது.

௨௰. ஆனால், அவத்தமனுஷனே, கிரியைகளில்லாத விசுவாசஞ் செத்ததென்றறியவுனக்கு மனதுண்டோ?

௨௧. நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரனாகிய ஈசாக்கைப் பலிபீடத்தின்மேல் செலுத்தினபோதே அவன் கிரியைகளினாலேயல்லோ நீதிமானாக்கப்பட்டான்.

✢ ௧. மோ. ௨௨: ௯-௧௨.

௨௨. விசுவாசமவனுடைய கிரியைகளோடேகூடநடத்துவாயிருந்து, கிரியைகளினாலே விசுவாசம் நிறைவேறினதென்று பார்க்கிறாயே.

௨௩. அப்படியே ✢ ஆபிரகாம் பராபரனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டதென்கிறவேத எழுத்து நிறைவேறிற்று. ✢✢ பராபரனுடைய சினேகிதனென்னப்பட்டான்.

✢ ௧. மோ. ௰௫: ௬. ✢✢ ஏசா. ௪௧: ௮.

௨௪. ஆகையால், விசுவாசத்தினாலே மாத்திரமல்ல கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாக்கப்படுகிறானென்று பார்க்கிறீர்களே.

௨௫. அப்படியே ராகாபென்கிற வேசியும், ✢ தூதாளிகளைச் சேர்த்துக்கொண்டு வேறுவழியாய் அனுப்பிவிட்டு, கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட்டாள். ✢ யோசு. ௨: ௧. [illegible].

௨௬. ஏனென்றால் ஆவியில்லாத சரீரஞ் செத்ததாயிருக்கிறாப்போலே, கிரியைகளில்லாத விசுவாசமுஞ் செத்ததாயிருக்குது.

௩. அதிகாரம்.

நாவினுடைய பாவங்களின் பேரிலே புத்தியிட்டு, மேலுண்டான ஞானத்தின் மேன்மைகளைக் காண்பித்தது.

என் சகோதரரே, அதிக ஆக்கினையடைவோமென்றறிந்து உங்களில் அநேகர் போதகராகாதேயுங்கோள்.

௨. ஏனென்றால் எல்லாரும் வெகுவாய்த் தப்புகிறோம். பேச்சிலே ஒருவன் தப்பாதவனாயிருந்தால், அவனே சரீர முழுவதையுங் கடிவாளம்பிடித்தடக்கத்தக்க தேறினமனுஷன்.

௩. இதோ குதிரைகள் நமக்குக் கீழ்ப்படியும்படிக்கு அதுகளின் வாயிலே கடிவாளங்களைப்போட்டு, அதுகளுடைய முழுச்சரீரத்தையுந் திருப்பி நடத்துகிறோம்.

௪. இதோ கப்பல்களானாலே அப்படிப்பட்ட தேசமான பெரியதுகளாயும் மும்முரமான காற்றுகளாலே நடத்தப்படுகிறவைகளாயுமிருந்தாலும் எவ்விடத்துக்கு நோக்கினோ அவ்விடத்துக்கு நேராகத் திருப்பப்படுகுது.

௫. அப்படிப்போலே ✢ நாவுஞ் சின்ன அவயவமாயிருந்தும், பெரியவைகளைப் பண்ணும். இதோ, சின்ன

நெருப்பு

நெருப்பானது எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்திவிடும்.
* சங். ௰௨: ௪. ௫. நீதி: ௫. ௬௩: ௨ ௬.

௬. நாவும் நெருப்பாகத்தானே, அக்கிரம லோகமே; அது சரீரமுழுவதையுங் கறைப்படுத்தி, பிறப்பின் சக்கரத்தைக் கொளுத்துகிறதும், நரகத்தாலே கொளுத்தப்படுகிறதுமான நாவு நம்முடைய அவயவங்களுக்குள்ளே இருக்கிறது.

* மத். ௰௫: ௰௧. ௰௮. ௰௯.

௭. எல்லாவகையான மிருகங்கள் பறவைகள் ஊர்வனவும் ஜலஜந்துக்களுமாகிய சுபாவமானது மனுஷசுபாவத்தாலே அடக்கப்படுகுது, அடக்கப்பட்டுமிருக்குது.

௮. ஆனால் அடங்காத பொல்லாப்பாயும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாகிய நாவை யடக்கிப்பிடிக்க ஒருவனாலும் கூடாது.

௯. பராபரனும் பிதாவுமானவரை அதினாலே ஸ்தோத்திரிக்கிறோம், பராபரனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலே சபிக்கிறோம்.

௰. ஒரே வாயிலிருந்து ஸ்தோத்திரமும் சாபமும் புறப்படுகுது. என் சகோதரரே, இப்படி நடக்கலாகாது.

௰௧. ஊற்றானது ஒரே துவாரத்திலிருந்து தித்திப்பையுங் கசப்பையுஞ் சுரக்கப்பண்ணுமோ.

௰௨. என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப் பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங்களையும் தரக்கூடுமோ. அப்படியே ஒரு ஊற்றும் உப்புச்சலத்தையுந் தித்திப்பான சலத்தையுந் தரக்கூடாது.

௰௩. உங்களில் ஞானியும் அறிவாளியுமாயிருக்கிறவன் எவன்? * அவன் நல்ல நடக்கையினாலே தன் கிரியைகளை ஞானத்துக்குடைய சாந்தத்தோடே காண்பிக்கக்கடவன். * எபே. ௫: ௮. ௯. ௰௫.

௰௪. உங்களிருதயத்திலே கசப்பான பொறாமையும் விரோதத்தின் எரிச்சலும் உண்டாயிருந்தால், சத்தியத்துக்கு விரோதமாய்ப் பெருமையையும் பொய்யையுஞ் சொல்லாதேயுங்கோள்.

௰௫. இந்த ஞானம் உயரத்திலிருந்து இறங்கின ஞானமாயிராமல், லவுகீகமும் ஜென்மசுபாவமும் பேய்த்தனமுமானது.

௰௬. எங்கே பொறாமையுஞ் சண்டையும் எழும்புகிறதோ, அங்கே கலகமும் எல்லாத் துற்செய்கையும் உண்டு.

௰௭. உயரத்திலிருந்து வருகிற ஞானமோ வென்றால் முதலாவது கற்புள்ளதும், பிறகு சமாதானமுள்ளதும், சாந்தமுள்ளதும், இணக்கமுள்ளதும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததும், பட்சபாதமில்லாததும், மாயமற்றதுமாயிருக்குது.

௰௮. * நீதியாகிய கனியோ வென்றால் சமாதானத்தை நடப்பிக்கிறவர்களுக்குச் சமாதானத்திலே விதைக்கப்படுகிறதாகும்.

* ஏசா. ௩௨: ௰௭. ௰௮.

௪. அதி

௪. அதிகாரம்.

லோகசிநேகத்தை விட்டுக் கர்த்தருக்குக் கீழ்ப்படியச்சொன்னது. னைக்கண்டிப்புள்ளவர்களைப்பற்றி.

௧. உங்களுக்குள்ளே உயித்தங்களும் சண்டைகளும் எங்கிருந்து வருகுது; உங்கள் அவயவங்களிலே * போர்செய்யுது செல்லுகிற இச்சைகளாலல்லவோ.

* ௧. பேது. ௨: ௰௧.

௨. நீங்கள் இச்சித்தும் உங்களுக்கில்லை; நீங்கள் பெருமையும் ஆசையுமாயிருந்தும் அடையமாட்டீர்கள்; சண்டையும் யுத்தமும் பண்ணுகிறீர்கள்; ஆகிலும் நீங்கள் வேண்டிக்கொள்ளாதிருக்கிறதினாலே உங்களுக்கில்லை.

௩. நீங்கள் வேண்டிக்கொண்டும் உங்கள் இச்சைகளிலே நீங்கள் சிலவழிக்கவேணுமென்று * அகாதவிதமாய் வேண்டிக்கொள்ளுகையால் அடையீர்கள்.

* யோபு. ௧: ௰௫. யோவே. ௯: ௩௧.

௪. விபசாரரே, விபசாரிகளே, * லோகசிநேகம் பராபரனுக்குப் பகையென்று அறியீர்களா; ஆகையால் லோகத்துக்குச் சிநேகிதனாயிருக்க மனதாயிருக்கிறவன் பராபரனுக்குப் பகைஞனாகிறான்.

* ௧. யோவா. ௨: ௰௫.

௫. அல்லது: * நம்மிலே வாசமாயிருக்கிற ஆவியானவர் பொறாமைக்கேதுவாய் இச்சிக்கிறாரென்று வேதவாக்கியம் விருதாய்ச் சொல்லுகிறதென்று நினைக்கிறீர்களோ.

* ௪. மோ. ௰௧: ௨௯.

௬. அதைவிட அதிக கிருபையை அவர் அளிக்கிறார்; ஆகையினாலே: * பராபரன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து, தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையை அளிக்கிறாரென்று சொல்லியிருக்குது.

* கலா. ௫: ௨௨. ** லூக். ௩: ௩௪.

௭. ஆகையால் பராபரனுக்குக் கீழ்ப்படியுங்கோள்; * பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கோள், அப்போ ** அவன் உங்களைவிட்டோடிப்போவான்.

* ௧. பே. ௫: ௮. ** மத். ௪: ௰௧

௮. பராபரனண்டை சேருங்கோள், அப்போ அவர் உங்களண்டை சேருவார். பாவிகளே, * கைகளைச் சுத்தமாக்குங்கோள்; இருமனக்காரரே, இருதயங்களைச் சுத்தமாக்குங்கோள்.

* யேசா. ௧: ௰௬.

௯. * சஞ்சலமாகத் துயரப்படுங்கோள், உங்கள் நகைப்பு துயரமாகவும் உங்கள் சந்தோஷம் துக்கமாகவும் மாறக்கடவது. * மத். ௫: ௪.

௰. * கர்த்தருக்கு முன்பாகத் தாழுங்கோள், அப்போ அவர் உங்களை உயர்த்துவார்.

* ௧. பேது. ௫: ௬.

சகோதரனைக் குற்றமாய் நிருணியாமலும் செல்வங்களுக்காக விம்புபண்ணாமலுமிருக்க எச்சரிக்குது.

யக. சகோதரரே ஒருவரை ஒருவர் விரோதமாய்ப் பேசாதேயுங்கோள சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி தன் சகோதரனைக் குற்றமாய் நிருணிக்கிறவன் நியாயப்பிரமாணத்துக்கு விரோதமாய்ப் பேசி நியாயப்பிரமாணத்தைக் குற்றமாய் நிருணிக்கிறான. நியாயப்பிரமாணத்தைக் குற்றமாய் நிருணித்தாயேயானால் நீ நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவனாயிராமல் அதைக் குற்றமாய் நிருணிக்கிறவனாயிருக்கிறாய். * மத். எ: க—ரு.

யஉ. நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிட்டவர் ஒருவரே அவர் ரட்சிக்கவும் அழிக்கவும் வல்லவர். மற்றொருத்தனைக் குற்றமாய் நிருணிக்கிற நீ ஆர். * ரோ. யச: ச.

யங. இப்பொழுதும் நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்துக்குப் போய் அங்கே ஒரு வருஷமிருந்து வியாபாரம் பண்ணி ஆதாயம் பெறுவோமென்கிறவர்களே, ஏகோ.
* லூக். உள: க. ஓர். யஉ: யசு—உய.

யச. நாளையத்தினத்தில் செய்குவது அறியீர்களே. என்னவெனில் உங்கள் சீவனென்ன, கொஞ்சநேரங்காணப்பட்டுப் பிறகு காணாமல் போகிற புகைத்தானே.

யரு. அதற்குப் பதிலாக நீங்கள் * ஆண்டவருக்குச் சித்தமாயிருந்து நாங்கள் உயிரோடிருந்தால் இதை அதைச் செய்வோமென்று சொல்லவேண்டியதாயிருக்கும். * அப்போ. யஅ: உக.

யசா. இப்பொழுதோவெனில் உங்கள் வீம்புகளிலே பெருமைபாராட்டுகிறீர்கள். இப்படிக்கொத்த பெருமைபாராட்டலெல்லாம் பொல்லாங்காயிருக்கிறது.

யஎ. இப்பொழுதும் ஒருத்தன் நன்மை செய்ய அறிந்திருந்தும் அதைச் செய்யாதேபோனால் அவனுக்குப் பாவமாயிருக்குது. * லூ. யஉ: சள.

ரு. அதிகாரம்.

ஏக்கமற்ற ஆஸ்திகாரருக்குச் செய்யும் புத்தி.

இப்பொழுதும் ஓ ஆஸ்திகாரரே உங்கள் மேல் வரும் நிர்ப்பந்தங்களின் நிமித்தியமாக அலறி அழுங்கோள். * லூ. சா: உச. உரு.

உ * உங்கள் ஆஸ்தியம் அழிந்து உங்கள் வஸ்திரங்களைப் பொட்டுப் பூச்சித்து. * மத். சா: யகூ

ங. உங்களுடைய பொன்னும் வெள்ளியும் பாசிபிடித்தது. * அதுகளுடைய பாசி உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருந்து உங்கள் மாம்சங்களை அக்கினி போலத் தின்னும். கடைசி நாட்களிலே பொக்கிஷங்களைச் சேர்த்தீர்கள். * மத். உரு: சஉ சங.

ச. இதோ உங்கள் வயல்களை அறுத்த வேலையாட்களுக்குடையதுகளிலே உங்களால அநியாயம் பண்ணப்பட்ட

ரோசப்படுகுது. அறுத்தவர்களின் கூக்குரல்களும் சேனைகளுடைய கர்த்தருடைய செவிகளிலே பட்டது.

ரு * நீங்கள் பூமியின்மேலே செல்வமுக்கு செருக்கிமன்யிருந்தீர்கள்|கொழுத்ததுக்கவர் அடிக்கப்படுகிற நாளிலே செய்கிறதுபோல உங்கள் இருதயங்களைப் போஷித்தீர்கள். * லூ. ௧௬: ௰௯.

௬. நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குத் தீர்த்துக் கொன்றுபோட்டீர்கள்|அவன் உங்களோடே எதிர்த்து நிற்கவில்லை.

* நீண்டபொறுமையாயிருக்கவும் வீணாணை யிடாதிருக்கவும் சொன்னது:

எ. பொறுமையாய்ச் சகோதரரே|கர்த்தருடைய வருகைமட்டும் * நீண்டபொறுமையாயிருங்கோள். இதோ பயிர்க்குடி பூமியின் விலையேறப்பெற்ற கனிக்காகக் காத்திருந்து|தான் முன்மாரியையும் பின்மாரியையும் அடையுமட்டும் அதுக்காக நீண்டபொறுமையாயிருக்கிறான். * லூ. ௨௧: ௰௯.

அ நீங்களும் நீண்டபொறுமையாயிருந்து உங்கள் இருதயங்களைத் திடப்படுத்துங்கோள்|ஏனென்றால் கர்த்தருடைய வருகை சமீபித்திருக்குது.

௯. சகோதரரே|நீங்கள் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாதபடிக்கு ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பெருமூச்சு விடாதிருங்கோள். இதோ நியாயாதிபதி வாசலுக்குமுன் நிற்கிறார்.

௰. என் சகோதரரே|கர்த்தருடைய நாமத்திலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பத்துக்கும் நீண்டபொறுமைக்கும் மாதிரியாக வைத்துக்கொள்ளுங்கோள்.

௰௧. இதோ * சகிக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோம். நீங்கள் ** யோபுடைய பொறுமையைக் கேட்டீர்கள்|கர்த்தருடைய முடிவையுங் கண்டீர்கள்|ஏனென்றால் கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவர். * மத். ரு: ௰. ௰௧. ** யோபு. ௧: ௨௧.

௰௨. எல்லாத்தையும் பார்க்கிலும் முக்கியமாய்|என் சகோதரரே|* வானத்தின் பேரிலாகிலும் பூமியின் பேரிலாகிலும் வேறெந்த ஆணையின் பேரிலாகிலும் சத்தியம்பண்ணாதேயுங்கோள். நீங்கள் ஆக்கினைத்தீர்ப்புக்குள்ளாய் விழாதபடிக்கு உங்களுக்குள் ஆமாம், என்கிறது ஆமாமென்றும்|இல்லையென்கிறது இல்லையென்றும் இருக்கக்கடவது. * மத். ரு: ௩௪—௩௭.

கருத்தாய்ச் செபம்பண்ணுகிறதும் பாவியைத் திருப்புகிறதும் மகாபலனுள்ளதென்பது:

௰௩. உங்களில் ஒருத்தன் * துன்பப்பட்டால்|செபம் பண்ணக்கடவான்|** ஒருத்தன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதங்களைப் பாடக்கடவான்.
* சங். ௰௫: ௰௫. ** கொலோ. ௩: ௰௬.

௰௪. உங்களில் ஒருத்தன் வியாதியாயிருந்தால்|அவன் சபையின் மூப்பரை வரவழைப்பானாக|அவர்கள் அவனுக்

மேலே ஜெபம் பண்ணி, கர்த்தருடைய நாமத்திலே * அவனுக்கு எண்ணெய் பூசக்கடவார்கள்.

* மாற். ௬: ௧௩.

௧௫. அப்போ விசுவாசத்தினுடைய ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்படியாய் கர்த்தர் அவனை எழுப்புவார், அவன் பாவங்களைச் செய்திருந்தால் அவனுக்கு மன்னிக்கப்படும்.

௧௬. நீங்கள் ஸ்வஸ்தமாகத்தக்கதாக * ஒருவருக்கொருவர் பாவங்களை அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். ** நீதிமானுடைய கருத்துள்ள வேண்டுதல் வெகு பெலனுள்ளதாயிருக்கிறது.

* மத். ரு: ௨௩—௨௪. ** ஸங்கீ. ௩௪: ௧௫. ௧௬.

௧௭. எலியா நம்மோடொக்கப் பாடுகளுக்கு ஆளானவனாயிருந்தும், மழை பெய்யாதபடிக்கு வேண்டுதலோடே ஜெபம் பண்ணினான், அப்போ மூன்று வருஷமும் ஆறு மாதமும் * பூமியின்மேல் மழை பெய்யாதிருந்தது. * ௧. ராஜா. ௧௭: ௧.

௧௮. * மறுபடி ஜெபம் பண்ணினான், அப்போ வானம் மழையைத் தந்து, பூமி தன் கனியை முளைப்பித்தது.

* ௧. ராஜா. ௧௮: ௪௫.

௧௯. சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தை விட்டு விலகிப்போனால், ஒருவன் அவனைத் திருப்பினால்,

௨௦. அவன், பாவியை அவனுடைய வழியின் மோசத்துக்கு நீக்கித் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்துக்குத் தப்புவித்து, பாவங்களின் திரளை மூடுவானென்று அறியக்கடவான்.

அப்போஸ்தலனாகிய
பேதுருவினுடைய பொதுவான
முதலாம் நிருபம்.
௧. அதிகாரம்.

ரட்சிப்பின் மேன்மையைக் குறித்து அதுக்குத் தக்கதான நடக்கைக்குக் கேட்டது.

யேசுக்கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பேதுரு * பிதாவாகிய பராபரனுடைய முன்னறிவுக்குத் தக்கதாய் ஆவியினாலே பரிசுத்தமாகுதலிலே, கீழ்ப்படியத்தக்கதாகவும் யேசுக்கிறிஸ்துவினுடைய இரத்தம் தெளிக்கப்படுகிறதுக்கும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகிய,

* எபே. ௧: ௪.

௨. பொந

௨. பொநதோர்விலலகலாசகியோவிலலைகபபடதோக
யோவிலு சூசியாவிலுயபிதரிலியாவிலுது * சிதஷி
ருசகலையாதேசக்கலுகடுதுககதாவது: கலையுக
சமாதானமும உஙகளுககுப பெருககககடவது.
* யாக. ௧: ௧.

௩. யேசுக்கிஸ்ததுமரிததோர்லிருநதெழுநததினால
நமமைததமமுடமிருநதேசககததினபடியே,

௪. அழிவறறதும * மாசுககுறையறறதுமான சுதநதிரததின
சிவனுளள நமபிககைககு மறுபடியுஞ செனிப்பித
பராபரனுமநமமுட கறததாகிய யேசுக்கிஸ்ததுவினு
டையபிதாவுமானவர் ஸ்தோததிரிககபபடடவர்.
* ரு: ச.

௫. கடைசிக்காலததிலே வெளிப்படப் ஆயித்தமான
ரெட்சிப்புக்குப் பராபரனுடைய பெலத்தினாலே விசுவா
சத்தைக்கொண்டு காக்கப்படுகிற உங்களுக்கு அதுபர
மண்டலஙகளிலே வைததிருக்குது.

௬. யேசுக்கிஸ்தது வெளிப்படும்போது உங்களுக
குப்புகழ்ச்சியுங்கனமுமகிமையுமவர உங்களவிசுவா
சத்தினுசததமம நெருப்பினாலே பிடமிடபபடுகிற அழி
வுளள பொனனிலுமதிகாவிலையேறபபெறறதாய
கணடுபிடிககபபடுவதறகு,

௭. பேபோசபலவிதசோதனைகளிலே, தேவையா
னால்கொஞசககாலநதுககமாயிருக்கிற நீஙகள அப
போதகளிகூருவீர்கள். * ௨. கொரி. ௪: ௰௭.

௮. அவரைககாணாமல சிநேகிக்கிறவர்களுமாய் இப
போதகோரசியாமலே அவர்பேரிலே விசுவாசிக்கிறவர்க
ளுமாகிய நீஙகளசொலலிமுடியாததமகிமையுளளசந
தோஷமாயகளிகூர்ந்து, * யோவா. ௨௰: ௨௯.

௯. உஙகளவிசுவாசத்தின முடிவாகிய ஆதமமாக
களினரெடசிபபையடைவீர்கள.

௰. உஙகளமேலவநதகிருபையைககுறிததுதீர்ககத
தரிசனஞசொனனதீர்ககதரிசிகளாநநத ரெடசிபபை
குறிததுமேததவுநதேடிஆராயநது,

௰௧. கிறிஸ்ததுவககுணடாம பாடுகளையும அதுக
ளினபினவருமமகிமைகளையுஞசாடசியாய முனன
றிவிததபோதுதஙகளிலுளள கிறிஸ்ததுவினுடைய
ஆவியானவர்எநதககாலததை அலலது எபபடிக
கொதத காலததைககுறிததுக காட்டினாரெனறு
ஆராயநதார்கள.

௰௨. தாஙகளதுகளுககலலவலல நமககுத
தானதஙகளஊழியஞசெயதார்களெனறு
அவர்களுககுவெளியாககபபடடுது.* வானததிலிருந
தனுபபபபடட பரிசுதத ஆவியால உஙகளுககுச சுவிசே
ஷததைபபிரசஙகிததவர்களாலேகொணடு இதுகளை இப
போ உஙகளுககு அறிவிககபபடடுது இதுகளுககுளளதேவ
தூதர்குனிநதுபார்ககஆசையாயிருககிறார்கள.
* அபபோ. ௨: ௧—௪.

௰௩. ஆகையாலநீஙகளஉஙகளசிநதையின அரைக
கசசைகடடிககொணடுதெளிவுறறவர்களாயிருநது,

யேசு

யேசுக்கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குக் கொண்டுவரப்படுங் கிருபையின்மேல் பூரணநம்பிக்கையை வைத்து; * லூ. ௰௨: ௩௫. ௩௬. ** லூ. ௨௧: ௩௪.

௰௪. கீழ்ப்படிகிற பிள்ளைகளைப்போலே முன் உங்கள் அஞ்ஞானமையிலே நடந்த இச்சைகளுக்கேற்க வேஷந்தரித்துக்கொள்ளாதிருந்து;

௰௫. உங்களையழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறாப்போல * நீங்களுமெல்லா நடக்கைகளிலும் பரிசுத்தராயிருங்கோள். * லூ. ௧: ௭௫.

௰௬. ஏனென்னில்: பரிசுத்தராயிருங்கோள்; அதேனென்றால் நாம பரிசுத்தராயிருக்கிறோம் என்றெழுதியிருக்குது. * ௩. மோ. ௰௯: ௨.

௰௭. பாரபட்சமில்லாமல் அவனவன் கிரியையின்படிக்குத் தக்கதாய்த் தீர்க்கிறவரை நீங்கள் பிதாவென்று கூப்பிடுகிறபடியினாலே நீங்கள் பரதேசிகளாகும் முழுவதும் பயத்துடனே நடந்து; * ரோ. ௨: ௰௧.

௰௮. அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலுமல்ல;

௰௯. குற்றமுமாசுமற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே பிதாக்களுடைய பாரம்பரை நடக்கையின் மாயைக்கு நீங்கள் மீட்கப்பட்டீர்களென்றறிந்திருங்கோள். * அப்போ. ௨௰: ௨௮ ௧. கொரி. ௬: ௨௰.

௨௰. அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னாலே குறிக்கப்பட்டவராயிருந்தும்; கடைமுடிவான காலங்களிலே அவர் பேரில் விசுவாசிக்கும் உங்களுக்காக வெளிப்பட்டார்.

* உ. தீமொ. ௧: ௯. ௰.

௨௧. உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் பராபரன்மேலிருக்கும்படிக்கு, அவரை அவர் மரித்தோரிலிருந்தெழுப்பி, அவருக்கு மகிமையைக் கொடுத்தார்.

௨௨. ஆகையால் நீங்கள் சத்தியத்துக்குக் கீழ்ப்படிகிறதினாலே உங்கள் ஆத்துமங்களை ஆவியைக்கொண்டு மாயமற்ற சகோதரசிநேகத்துக்கென்று சுத்தமாக்கி;

௨௩. அழிவுள்ள வித்தினாலல்ல; என்றென்றைக்குமிருக்கிற ஜீவனுள்ள தேவவசனமென்னும் அழிவில்லாத வித்தினாலே * மறுபடியும் ஜெனிப்பிக்கப்பட்டவர்களாயிருந்து, ஒருவரையொருவர் சுத்தஇருதயத்தோடே கருத்தாய்ச் சிநேகியுங்கோள். * யோவா. ௧: ௰௩. யாக. ௧: ௰௮.

௨௪. ஏனென்றால் * மாம்சமெல்லாம் புல்லைப்போலேயும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலேயுமிருக்குது; புல் உலர்ந்து அதின் பூ உதிர்ந்தது. * சங். ௱௩: ௰௫ — ௰௭. ஏசா. ௪௰: ௬ — ௮.

௨௫. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்குமிருக்கும்; அந்த வசனமே உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்ட வசனந்தானே.

௨. அதிகாரம்.

கிறீஸ்துவுக்குள் வளர்ந்தாணி அவரை சன மார்க்கத்திற் கையாற அருக்கைகப்படணைணா ரவினது.

ஆகையால் கர்த்தர் தயவுள்ளவரென்கிறதை நீங்கள் ருசிபார்த்திருந்தீர்களானால், * சங்கீ. ௩௪: ௮.

௨. * எல்லாத் துர்க்குணத்தையும் எல்லாக் கவடத்தையும் மாயங்களையும் பொறாமைகளையும் எல்லாப் புறணிகளையும் அகற்றிப்போட்டு,

* ஏபே. ௪: ௩௧.

௩. நீங்கள் வசனத்தின் கலப்பில்லாத பாலினாலே வளரும்படிக்கு * புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல அதின்மேல் வாஞ்சையாயிருங்கோள்.

* சங். ௱௰௯: ௱௩௧. * மத். ௰௮: ௩.

௪. * மனுஷராலே ஆகாதென்று தள்ளுண்டு பராபரனிடத்திலே தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமான ஜீவனுள்ள கல்லாகிய அவரிடமாகச் சேர்ந்துவந்த நீங்களும், * சங். ௱௰௮: ௨௨.

௫. ஜீவனுள்ள கல்லுகளைப்போலே * ஞானமாளிகையாகவும் யேசுக்கிறீஸ்துமூலமாய்ப் பராபரனுக்குப் பிரியமான * ஞானப்பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்படுங்கோள்.

* ஏபே. ௨: ௨௰—௨௨. * * ஓசே. ௰௪: ௨. ௧. எபி. ௰௩: ௰௫ ௰௬.

௬. * இதோ தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமான கோடிக்கல்லைச் சீயோனிலே வைக்கிறேன், அதின்பேரிலே விசுவாசிக்கிறவன் வெட்கப்பட்டுப்போவதில்லை என்கிறது அதனாலே வேதத்திலே எழுதியிருக்குது. * ஏச. ௨௮: ௰௬.

௭. ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது. அவிசுவாசிகளுக்கோவெனில், வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளினதே மூலைக்குத் தலையும் * தடுக்கல்லின் கல்லும் இடறுதலின் கல்லுமாச்சுது. * ஏச. ௮: ௰௪. ௰௫.

லூக். ௨: ௩௪.

௮. அவர்கள் ஏவாங்காதவர்களாயிருந்து வசனத்திலே இடறுகிறார்கள், அதற்கு வைக்கப்பட்டவர்களுமாயிருக்கிறார்கள்.

௯. நீங்களோவென்னில் உங்களை அந்தகாரத்தைவிட்டுத் தம்முடைய ஆச்சரியமான வெளிச்சத்துக்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியும், * இராசரீகமான ஆசாரியக்கூட்டமும் பரிசுத்த சாதியும் அவருக்குச் சொந்தமான சனமுமாயிருக்கிறீர்கள். * ௨. மோ. ௰௯:

௫. ௬. அபொ. ௯: ௬. ௫: ௰.

௰. * முற்காலத்திலே சனமல்லாதிருந்த நீங்கள் இப்பொழுது பராபரனுடைய சனமாயிருக்கிறீர்கள்; இரக்கம் பெறாதிருந்த நீங்கள் இப்பொழுது இரக்கம் பெற்றவர்கள். * ஓசே. ௧: ௰. ௨: ௨௩.

௰௧. பிரியமானவர்களே, ஆத்துமத்துக்கு விரோதமாய்ப் போர்செய்யும் * மாம்சஇச்சைகளுக்கு நீங்கள் விலகியிருக்கவும்; * ரோ. ௰௩: ௰௪. கலாத். ௫: ௨௪.

௰௨. * புறசாதியார் உங்களை எதிலே அக்கிரமக்காரரென்று விரோதமாய்ச் சொல்லுகிறார்களோ, அதிலே உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, கண்காணிப்பின் நாளிலே பராபரனை மகிமைப்படுத்தும்படிக்கு, நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையாய் நடக்கவும்; * அர்தேசியர் தேசிகளாகிய உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். * மத். ௫: ௰௬. * எபி. ௰௧: ௰௩.

துரைத்தனத்துக்கும் மேன்மையானவர்களுக்குங் கீழ்ப்படிந்து நடக்கப் புத்திசொன்னது.

௰௩. ஆகையால் * எல்லா மனுஷ அதிகாரத்துக்குங் கர்த்தர் நிமித்தியமாய்க் கீழ்ப்படியுங்கோள்; மேன்மையதிகாரமுள்ள ராசாவுக்கானாலுஞ்சரி; * ரோ. ௰௩: ௧. தீத்து. ௩: ௧.

௰௪. துன்மைசெய்கிறவர்களின் ஆக்கினைக்கும் நன்மைசெய்கிறவர்களின் புகழ்ச்சிக்கும் அவனாலே அனுப்பப்பட்ட துரைகளுக்கானாலுஞ்சரி.

௰௫. ஏனெனில் நீங்கள் * நன்மைசெய்கிறதினாலே மதியற்ற மனுஷருடைய அறியாமையை வாயடக்குகிறது பராபரனுடைய சித்தமாயிருக்குது. * தீத்து. ௨: ௭.

௰௬. * விடுதலையாயிருந்தும், விடுதலையைத் துற்குணத்துக்கு முக்காடாகக் கொண்டிராமல், பராபரனுடைய அடிமைகளாயிருங்கோள். * யோவா. ௮: ௩௨.

௰௭. எல்லாரையுங் கனம்பண்ணுங்கோள்; சகோதரசிநேகியுங்கோள். பராபரனுக்குப் பயந்திருங்கோள்; ராசாவைக் கனம்பண்ணுங்கோள்.

௰௮. * வேலைக்காரரே, எல்லாப் பயத்துடனே எசமான்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கோள்; நல்லவர்களுக்குஞ் சாந்தகுணமுள்ளவர்களுக்கும் மாத்திரமல்ல, முரடருக்குங் கூடத்தானே. * எபே. ௬: ௫.

௫ — ௮.

௰௯. ஏனெனில் ஒருத்தன் பராபரனைப்பற்றிய மனச்சாட்சியின் நிமித்தியம் * துக்கங்களைச் சகித்து அநியாயமாய்ப் பாடனுபவித்தால், அது வேண்டியதே. * மத். ௫: ௰.

௨௰. ஏனெனில் நீங்கள் பாவஞ்செய்து குட்டுப்பட்டுச் சகித்தால் என்ன கீர்த்தி? நீங்கள் நன்மைசெய்து பாடுபட்டுச் சகித்திருப்பீர்களானால், அதுவே பராபரனிடத்திலே பிரியமானவை.

௨௧. ஏனென்றால * இதுக்கழைக்கப்பட்டீர்கள; ஏனென்னில கிறீஸ்துவும உங்களுக்காகப்பாடுபட்டு, நீங்கள தமமுடைய காலடிகளைத தொடர்ந்துவர உங்களுக்குப பிறமாணமபின்னை வைததார.

* ௧. தெச. ௩: ௩.

௨௨. அவர பாவஞ செயயததிலலை; அவர வாயிலே வஞசனை கணடுபிடிககபபடடதுமிலலை. * ஏச. ௫௩: ௯

௨௩. * அவர வையபபடுகிறபோது பதிலுககு வையாமலும, பாடுபடுகிறபோது அசசுறுததாமலும, நீதியாயத தீர்ககிறவருககுத தமமை ஒபபுககொடுததார.

* ஏச. ௫௩: ௭.

௨௪. நாம பாவஙகளுககுச செதது, நீதிககுப பிழைகக * நமமுடைய பாவஙகளைத தாமே தமமுடைய சரீரததிலே எடுததுககொணடு மரததினமேலேறினார; அவருடைய தழுமபுகளாலே குணமானீர்கள. * ஏச ௫௩: ௪. ௧. யோவ ௩: ௫.

௨௫. ஏனென்னில சிதறுணட ஆடுகளைப போலிருநதீர்கள; இபபோ உஙகள ஆதமாககளுடைய * மேயபபருமாய கணகாணியுமாயிருககிறவரிடததுககுத திருமபபபட்டீர்கள. * ஏச. ௫௩: ௬. ** யோவ ௰: ௰௧.

௩. அதிகாரம.

பெணசாதிகளுககும புருஷருககுஞ சொனன புததி.

அபபடியே * பெணசாதிகளே, சிலர வசனததாலே இணஙகாதேபோனாலும, பயததோடேகூடிய உஙகள கறபான நடககையைக கணடு,

* எபே. ௫: ௨௨—௨௪.

௨. வசனமினறியே ஸ்திரீகளின நடககையால ஆதாயபபடுததிககொளளபபடுவதறகு, உஙகளுடைய புருஷருககுக கீழபபடிநதிருஙகோள.

௩. * புறமபே மயிர்பினனலும பொனனாபரணம பூணுதலும வஸ்திரம உடுககுதலுமான அலஙகாரமாயிராமல, * ௧. தீமோ. ௨: ௯. ௰. ஏச. ௩:

௰௮—௨௪.

௪. இருதயததின அநதரஙகமனுஷனமேததனவான அமைநத ஆவியினாகிய அழியாத அலஙகாரததைத தரிததிருககக கடவது; அதுவே பராபரனுககு முனபாக விலையேறபபெறறது.

௫. ஏனென்றால, பூர்வததிலே பராபரனமேல நமபிககையான பரிசுததப பெணசாதிகளுந தஙகளுடைய புருஷருககுக கீழபபடிநது, தஙகளை அலஙகரிததார்கள.

௬. அபபடியே சாறாள ஆபிரகாமைச சேமானென்றழைதது அவனுககுக கீழபபடிநதாள; நனமைசெயது

ஏருதிகிலுக்குமபயப்படாதிருந்தீர்களானால், அவளுக்கு நீங்கள் பிள்ளைகளானீர்கள். * ௧. மோ. ௰௮: ௰௨.

௭. அப்படியே, * புருஷரே, உங்கள் செபங்களுக்குத் தடைப்படாதபடிக்குப் புத்தியுள்ளவர்களாய் அவர்களோடே வாசமாயிருந்து, உங்களின் மெல்லிய பாண்டமாகிய ஸ்திரீகளுக்கு, அவர்களும் ஜீவனுடைய கிருபையைக் கூடச்சுதந்தரிக்கிறவர்களென்று கனங்கொடுங்கோள்.

* எபே. ௫: ௨௫.

சினேகமும்பொறுமையுமாயிருக்க அவர்களுக்குச் சொன்னபுத்தி.

௮. கடைசியிலே, எல்லாரும் * ஒருமனப்பட்டவர்களும், பரதவிக்கிறவர்களும், சகோதரநேசமுள்ளவர்களும், உருக்கமுள்ளவர்களும், பட்சமுள்ளவர்களுமாயிருங்கோள். * ரோம. ௰௨: ௰௫. ௰௬.

௯. * பொல்லாப்புக்குப்பொல்லாப்பையும், அல்லது உதாசீனத்துக்கு உதாசீனத்தையுஞ் சரிக்கட்டாதேயுங்கோள். அதற்கு எதிரிடையாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள அழைக்கப்பட்டீர்களென்றறிந்து, ஆசீர்வதியுங்கோள். * மத்தே ௫: ௪௪. ௪௫

௰. ஏனெனில், * ஜீவனை விரும்பி நல்ல நாள்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் தன் நாவைப் பொல்லாப்புக்குத் தன் உதடுகளை வஞ்சனைப்பேச்சுக்கும் விலக்கக்கடவன்; * சங். ௩௪: ௰௩—௰௪.

௰௧. பொல்லாப்பைவிட்டுவிலகி நன்மைசெய்யவும், சமாதானத்தைத்தேடி அதைப் பின்தொடரவுங்கடவான்.

௰௨. ஏனெனில் கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் வைக்கப்பட்டிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனிக்குது; ஆகிலுங் கர்த்தருடைய முகம் பொல்லாங்குசெய்கிறவர்களுக்கு விரோதமாயிருக்குது.

௰௩. நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால், உங்களுக்குப் பொல்லாப்பைச் செய்ப்பவனார்?

௰௪. அல்லாமலும் நீதியினிமித்தமாக நீங்கள் பாடுபட்டாலும் பாக்கியவான்களாயிருக்கிறீர்கள்; ** அவர்கள் பயமுறுத்தலுக்கு நீங்கள் பயப்படாமலுங் கலங்காமலும், * மத்தே. ௫: ௰. **

யெசே. ௮: ௮.

௰௫. * கர்த்தராகிய பராபரனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணி, உங்களிலிருக்கும் நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் உத்தரவு கேட்கிறவனுக்கெல்லாம் மனத்தாழ்மையோடும் பயத்தோடும் உத்தரஞ் சொல்ல எப்போதும் ஆயத்தமாயிருந்து,

* எச. ௮: ௰௩.

௰௬. * கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் நல்நடக்கையைத் தூஷணிக்கிறவர்கள் உங்களைப் பொல்லாங்கு

செய்கிறவர்களென்று பொறணை சொல்லுகிறதி
லே வெட்கப்படும்படிக்கு நல்மனச்சாட்சியுடைய
வர்களாயிருங்கோள். ௨: ௰௨.

௰௭. அக்கிரமத்தைச் செய்கிறவர்களாய
பாடனுபவிக்கிறதைப் பார்க்கிலும் பராபரனுக்குச்
சித்தமானால் நன்மைசெய்கிறவர்களாய்ப் பாடனுபவிக்
கிறது நல்லது.

௰௮. ஏனென்றால் கிறிஸ்துவும் பாவங்களினிமித்தமாய
நீதியுள்ளவர் அநீதியர்களுக்காகப் பாடு
பட்டு நம்மைப் பராபரனிடத்திலே சேர்க்கத்தக்க
தாக மாங்கிஷத்திலே கொலையுண்டு ஆவியிலே
உயிர்ப்பிக்கப்பட்டார். * ரோ. ரு: ௬.

௰௯. அதிலே அவர் போய் * பூர்வகாலத்திலே பராபரனு
டைய நீடியபொறுமை ஒருவிசை நோவாவின் நாளா
களிலே பேழை ஆயத்தம் பண்ணப்படுகையிலே பொ
றுத்தபோது விசுவாசியாமலே போன காவலிலுள்
ளாவிகளுக்கும் **பிரசங்கித்தார். * ௧. மோ. ௬:
௩. ஹூ. ** ௪: ௬.

௨௰. அந்தப்பேழையிலே கொஞ்சப் பேராகிய எட்டுப்பேர்
மாத்திரம் உள்ளேபட்டு தண்ணீரிலே காப்பாற்றப்
பட்டார்கள்.

௨௧. இதின் ஒப்பனையாகிய *ஞானஸ்நானம் மாங்கிஷ
அழுக்கை நீக்குதலாயிராமல் பராபரனோடே நல்
மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து இப்போ
நம்மையும் யேசுக்கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுந்த
லாலே ரட்சிக்குது. மாற்கு. ௰௬: ௰௬. ரோ.

௬: ௩. ௪.

௨௨. அவர் பரமண்டலத்துக்குள்ளே போய், * பராபர
னுடைய வலத்து பாரிசத்திலேயிருக்கிறார்; அவருக்குத்
தேவதூதரும் அதிகாரங்களும் வல்லமைகளுங் கீழ்ப்
படிந்திருக்குது. * எபே. ௧: ௨௰—௨௨.

௪. அதிகாரம்.

பாவத்துக்குச் செத்து, கிறிஸ்தவ ஞானமா
க்கமாய் நடந்து, உபத்திரவங்களிலே நம்பிக்கையாய்
நிலைநிற்கப் புத்திசொன்னது.

இப்போது கிறிஸ்து நமக்காக மாங்கிஷத்திலே பாடு
பட்டபடியினாலே நீங்களும் அந்தச் சிந்தையையே ஆயுத
மாகவுண்டுகொள்ளுங்கோள். * எபி. ௰௨: ௧—௩.

௨. ஏனென்றால் மாங்கிஷத்திலே பாடுபட்டவன் இனி
மாங்கிஷத்திலே மீதியாயிருக்கும் காலத்தை மனுஷரின்
இச்சைகளுக்கல்ல, பராபரனுடைய சித்தத்துக்குப்பி
ழைக்கும்படிக்கு பாவத்தைவிட்டோய்ந்தான்.

௩. ஏனென்றால் சென்றுபோன காலத்திலே காம
விகாரங்களிலும் இச்சைகளிலும் மதுபான வெறிக
ளிலும் பெருந்தீனியிலும் குடியிலும் அருவருக்கக

ஆராதினைகளிலும் நடந்து, அஞ்ஞானிகளின் மனதுக் கேற்கிறதை நடப்பித்தது நமக்குப் போதும்.

* எபே. ௪: ௰௭—௰௯.

௪. நீங்கள் அந்தக் கெட்டமார்க்கத்தின் நாசமானதுக் குக்கூட ஓடாமலிருக்கிறதைப் புதுமையென்று பார்த்து தூஷணிக்கிறார்கள்.

௫. அவர்கள் உயிரோடிருக்கிறவர்களையும் மரித்த வர்களையும் நியாயந்தீர்க்க ஆயத்தமாயிருக்கிறவருக் குக் கணக்கொப்புவிப்பார்கள்.

௬. ஏனெனில் இதுக்காக * மரித்தோர்களுக்கும் அவர் கள் மாம்சத்திலே மனுஷர் முன்பாகத் தீர்க்கப் பட்டு, ஆவியிலே பராபரன் முன்பாகப் பிழைப்பதற் காக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. * ௩: ௰௯.

௭. * ஆனாலெல்லாத்துக்கும் முடிவு கிட்டி வந்தது, ஆகையால் ** சாவதானபுத்தியாயிருந்து ஜெபங் களுக்கு மனந்தெளிவாயிருங்கோள்.

* ௧. யோவா. ௨: ௰௮. ** லூ. ௨௧: ௩௬.

௮. எல்லாத்தையும் பார்க்கிலுமோவென்றால் ஒருத் தருக்கொருத்தர் உருக்கமுள்ளவர்களாயி ருங்கோள். ஏனென்றால் சிநேகம் * திரளான பாவங்களை மூடும். * பொதக. ௰: ௨.

௯. நீங்கள் முறுமுறுப்பில்லாமல் ஒருத்தரொரு த்தர் * சேர்த்துக்கொண்டு, * எபி. ௰௩: ௨.

௰. * அவனவனெப்படி வரம் பெற்றுக்கொண்டானோ அப்படியே பராபரனுடைய பலவிதமான கிருபையின் நல் உக்கிராணக்காரரைப்போல ஒருத்தர் கொருத்தர் அதி னாலே ஊழியஞ்செய்யுங்கோள். * ரோ. ௰௨: ௬.

௰௧. * ஒருத்தன் பேசினால் பராபரனுடைய வாக்கியங் களாய்ப் பேசக்கடவான், ஒருத்தன் ஊழியஞ்செய்தால், பராபரன் கொடுக்கிற பெலத்தால் செய்யக்கடவான், எல்லாத்திலும் பராபரன் யேசுக்கிறீஸ்துக்குள்ளாய் மகிமைப்படும் பொருட்டாகத்தானே, அவருக்குள்ளென்றென் றைக்குமுள்ள சதாகாலங்களும் மகிமையும் பெலனு முண்டாயிருக்குது, ஆமென். * ரோ. ௰௨: ௭. ௮.

௰௨. பிரியமானவர்களே. * சோதினையாக உங் களுக்குள்ள அக்கினையினாலே நீங்கள் ஒருபுதுமை உங் களுக்குச் சம்பவிக்கிறாப்போலே திகையாமல்,

* ௧: ௬. ௭. ஏசா. ௪௮: ௰.

௰௩. கிறிஸ்துவினுடைய பாடுகளுக்கெப்படிப் பங் குள்ளவர்களானீர்களோ, அப்படி அவருடைய மகி மையின் வெளிப்படுத்தலிலே களிகூர்ந்து மகிழும்படிக் குச் * சந்தோஷமாயிருங்கோள். * யாக. ௧: ௨. ௩.

௰௪. * நீங்கள் கிறிஸ்துவினுடைய நாமத்தினிமித்தியம் நிந்திக்கப்பட்டால், பாக்கியவான்கள், ஏனென்றால் மகிமையின் ஆவியும் பராபரனின் ஆவியுமானவர் உங் களோடே தங்கியிருக்கிறார், அவர்களிடத்திலே தூஷ ணிக்கப்படுகிறார், உங்களிடத்திலே மகிமைப்படுகிறார்.

* மத. ௫: ௰௧. ௰௨.

௰௫. ஆனா

௰௫. ஆனாலுமுங்களிலொருத்தனுங்கொலைபாதகனாய
அல்லது திருடனாய், அல்லது பொல்லாங்குசெய்தவ
னாய், அல்லது அன்னியகாரியங்களிலே தலையிட்டுக்
கொண்டவனாய்ப்பாடுபடவேண்டாம்.

௰௬. கிறிஸ்தவனாய்ப்பாடுபட்டானேயாகில் வெட்
காமலிருந்து பராபரனை இந்தக்காரியத்திலே * மகிமைப்
படுத்தக்கடவான். * யோவா. ௨௧: ௰௯.

௰௭. ஏனென்றால் நியாயத்தீர்ப்பு * பராபரனுடைய
வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்
திலே துவக்கப்பட்டதேயாகில் பராபரனுடைய சுவி
சேஷத்துக்குக்கீழ்ப்படியாதவர்களின் முடிவு ** என்
னமாயிருக்கும். * யெரே. ௨௫: ௨௯. ** லூக்.
௨௩: ௩௧.

௰௮. * நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், அபக்
தனும்பாவியுமானவனெங்கே நிற்பான்.
* வாக். ௰௧: ௩௧.

௰௯. ஆகையால் பராபரனுடைய சித்தத்தின்படியே பா
டுபடுகிறவர்கள் உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவ
ருக்குத்தங்கள் ஆத்துமாக்களை நன்மைசெய்கிறவர்க
ளாயொப்புக்கொடுக்கக்கடவார்கள். * சங். ௩௧:
௫. லூ. ௨௩: ௪௬.

௫. அதிகாரம்.

மூப்பருக்கும் மற்றவர்களுக்குஞ்சொன்னபுத்தி.

உங்களிலுள்ள மூப்பரை உடன்மூப்பனுங் கிறிஸ்
துவினுடைய பாடுகளின் சாட்சியும் வெளிப்படப்
போகிற மகிமையின் பங்காளனுமாகிய நானெச்சரிக்
கிறதாவது:

௨. உங்களிடத்திலுள்ள * பராபரனுடைய மந்தை
யை நீங்கள் கட்டாயத்தினாலல்ல, மனப்பூர்வத்தி
னாலேயும், ** லச்சையான ஆதாயப்பிரியத்தினாலல்
ல, உற்சாகமனதினாலேயும்,
* அப். ௨௰: ௨௮. ** ௧. தீமோ. ௩: ௩.

௩. * சுதந்தரங்களை ஆண்டுகொள்ளுகிறவர்க
ளாகவல்ல, மந்தைக்கு ** மாதிரிகளாகவும் கண்
காணித்துமேயுங்கள்.
* ௨. கொ. ௧: ௨௪. ** பிலி. ௩: ௰௭.

௪. அப்போ, * பிரதான மேய்ப்பர் வெளிப்படுகை
யிலே ** மகிமையினுடைய வாடாக்கிரீடத்தைப்பெறு
வீர்கள். * ௨: ௨௫. ** ௨. தீமோ. ௪: ௮. யாக். ௧: ௰௨.

௫. அப்படியே இளைஞர்களே, மூப்பருக்குக்கீழ்ப்
படியுங்கள்; * எல்லாருமொருவருக்கொருவர்
கொத்துக்கீழ்ப்படிந்து மனத்தாழ்மையை அணிந்து
கொள்ளுங்கள். ஏனெனில் ** அகந்தையுள்ள
வர்களோடே பராபரனெதிர்த்துநின்று, தாழ்மை
யானவர்களுக்கோ கிருபையளிக்கிறார்.
* எபே. ௫: ௨௧. ** யாக். ௪: ௬.

௬. ஆனபடியினாலே பராபரனேற்றகாலத்திலே உங்களையுயர்த்தும்படிக்கு அவருடைய வல்லமையான கைக்குக்கீழாகத்தாழுங்கோள்.

* யாக. ௪: ௰.

௭. * உங்கள் கவலையெல்லாம் அவர்மேலே எறிந்துபோடுங்கோள். ஏனென்றால் அவர் உங்களுக்காக விசாரிப்பாயிருக்கிறார்.

* பீலி. ௪: ௬. எபி. ௰௩: ௫.

௮. * மனசுதெளிவாயிருங்கோள், முழித்திருங்கோள், ஏனென்றால் உங்கள் எதிராளியாகிய பிசாசு கெர்ச்சிக்கிற சிங்கம்போலே, எவனை முழுங்கலாமோவென்று வகைதேடிச்சுத்தித்திரியுது.

* ௧. தெச. ரு: ௬.

௯. அதுக்கு நீங்கள் விசுவாசத்திலே உறுதியாயெதிர்த்து நில்லுங்கோள், லோகத்திலுள்ள உங்கள் சகோதரக்கூட்டத்திலே அப்படிக்கொத்த பாடுகளே நிறைவேறி வருகுதென்றறியுங்கோள்.

* ஏபே. ௬: ௰௧—௰௬.

௰. ஆனால் * கொஞ்சக்காலம்பாடுபட்டிருக்கிற நம்மை கிறிஸ்துயேசுவுக்குள் தம்முடைய நித்தியமகிமைக்கழைத்த சகலகிருபையுமுடைய பராபரனே உங்களைச் சீர்பொருந்தப்பண்ணி, உறுதியாக்கி, திடப்படுத்தி, அஸ்திவாரப்படுத்தக்கடவார். * ௪: ௭.

௰௧. அவருக்கு மகிமையும் பெலனும் என்றென்றைக்கும் சதாகாலங்களிலும் உண்டாயிருக்கக்கடவது. ஆமென்.

௰௨. புத்தியாகவும் நீங்கள் நிற்கிறதிற்கடுத்த பராபரனுடைய மெய்யான கிருபையிதுவென்று சாட்சியாகவும் நான் சுருக்கமாய் உங்களுக்கெழுதினதை எனக்குண்மையாயிருக்கிற சகோதரனாகிய சில்வானுவின் கையிலே அனுப்பினேன்.

௰௩. பாபிலோனிலே கூடத் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிற சபையும், என் குமாரனாகிய மாற்குவும் உங்களை வினவுகிறார்கள்.

௰௪. ஒருவரையொருவர் சிநேகமுத்தத்தினாலே வினவிக்கொள்ளுங்கோள். கிறிஸ்துயேசுவுக்குள்ளிருக்கிற உங்களனைவருக்கும் சமாதானம். ஆமென்.

அப்போஸ்தலனாகிய

பேதுருவினுடைய பொதுவான

இரண்டாம் நிருபம்.

௧. அதிகாரம்.

புண்ணியநடக்கைக்கெழுப்புகிற புத்தி.

நம்முடைய பராபரனும் இரட்சகருமாகிய யேசுக்கிறிஸ்துவினுடைய நீதியால் எங்களோடே கூட ஏகத்துவமு

யான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு யேசுகிறிஸ்
துவினுடைய ஊழியக்காரனும் அப்போஸ்தலனு
மாகிய சீமோன் பேதுரு எழுதுகிறதாவது:

௨. பராபரனையும் நம்முடைய கர்த்தராகிய யேசுவை
யும் அறிகிற அறிவினாலே கிருபையுஞ் சமாதானமும் உங்க
ளுக்குப் பெருகக்கடவது.
* ௧. பேது. ௧: ௨.

௩. மகிமையினாலும் புண்ணியத்தினாலும் நம்மை
அழைத்தவரை நாம் அறிகிற அறிவினாலே அவருடைய
தேவ பெலனானது ஜீவனுக்குந் தேவ பக்திக்கும்
வேண்டியதெல்லாவற்றையும் நமக்குக் கொடுத்தபடி
யினாலும், * ௧. பேது. ௨: ௯.

௪. இச்சையினால லோகத்திலுள்ள கேட்டுக்குத் தப்பி
னதபடியிருக்கக் கொண்டவர்களோடுங்கூட தெய்
விக குணத்துக்குப் பங்குள்ளவர்களாகத்தக்க மகா
மேரிய விலையேறப் பெற்ற வாக்குத்தத்தங்கள்
நமக்குக் கொடுத்தருளப்பட்டபடியினாலும்,

௫. நீங்கள் இதின் மேலத்தானே * எல்லா ஜாக்கிர
தையையும் வைத்து, உங்கள் விசுவாசத்திலே புண்ணிய
த்தையும், புண்ணியத்திலே அறிவையும்
* ஓா. ௰௩: ௨௪.

௬. அறிவிலே இச்சையடக்கத்தையும், இச்சையடக்க
த்திலே பொறுமையையும், பொறுமையிலே தேவ
பக்தியையும்,

௭. தேவபக்தியிலே சகோதரசிநேகத்தையும், *
சகோதரசிநேகத்திலே பொதுப்பட்ட சகலருக்குங் கா
ட்டுவழங்குஞ் சிநேகம். * ௧. தெச. ௩: ௰௨.

௮. ஏனெனில் இவைகள் உங்களுக்குண்டாயிருந்து
பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய யேசுகிறிஸ்
துவை அறிகிற அறிவிலே வீணராக அல்லது * கனி
யற்றவர்களாகயிருக்க வொட்டாது:
* தீத்து. ௩: ௰௪.

௯. ஏனென்றால் இவைகளில்லாதவனோ போகு
கோ, அவன் குருடனுந் தூரங்காணாதவன் சுத்திகரிப்ப
மறந்து கண்ணைச் சொருகப்போல குருடனாயிருக்கிறான்.

௰. ஆகையால், சகோதரரே, * உங்கள் அழைப்பை
யுந் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்குவதற்கு அதிக ஜா
க்கிரதையாயிருங்கோள். இப்படிச் செய்தீர்
களானால் நீங்கள் ஒருக்காலும் இடறிப்போவதில்
லை. * எபி. ௩: ௰௪.

௰௧. ஏனென்றால் இப்படியே நம்முடைய கர்த்தரும் இர
ட்சகருமாகிய யேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்
யத்துக்குள் பிரவேசிக்குதல் உங்களுக்குப் பரிபூர
ணமாய் அளிக்கப்படும்.

௰௨. ஆனபடியினாலே * நீங்கள் இவைகளை அறிந்து,
ம் உங்களுக்கு இருக்கிற சத்தியத்திலே உறுதிப்பட்டிருந்
தாலும், எப்போதும் உங்களுக்கு இவைகளை நினைப்பூட்ட
நான் அசதியாயிருக்கமாட்டேன்.
* ரோ. ௰௫. ௰௪—௰௭.

௰௩. * நமது கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவுமெனக்கு அறிவித்தபடி நானென் கூடாரத்தைப் போட்டுவிடுவது சீக்கிரமென்றறிந்திருக்கிறேன்.

* யோவா. ௨௧: ௰௮ ௰௯.

௰௪. நானிந்தக் கூடாரத்திலிருக்குமட்டும் உங்களை நினைப்பூட்டுகிறதினால எழுப்புவது நியாயமாகவெண்ணுகிறேன்.

௰௫. ஆனாலநான் போனதற்குப்பிறகுமிவைகளையெப்போதும் நினைவுகூர உங்களுக்குச் சமயமுண்டாகப்பிரயாசப்படுவேன்.

௰௬. ஏனெனில் நுட்பமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாய் உங்களுக்கு நமது கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினுடைய வல்லமையையும் வருகையையும் நாங்களறிவியாமல,

௰௭. * அவர் பிதாவாகிய பராபரனாலே கனமும் மகிமையும் பெற்றபோது, இவர் நாம் பிரியமாயிருக்கிற நம்முடைய நேசகுமாரனாயிருக்கிறாரென்கிற சத்தம் அவருக்குச் சிறந்த மேன்மையான மகிமையிலிருந்து வருகிறபோது * அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக்கண்டவர்களாய் உங்களுக்கு அறிவித்தோம்.

* மத். ௰௭: ௫. ** யோவா. ௧: ௰௪.

௰௮. இந்தச்சத்தத்தை நாங்கள் அவரோடேகூடப் பரிசுத்த பர்வதத்திலிருக்கையில வானத்திலிருந்து வரக்கேட்டோம்.

௰௯. மகாதிட்டமான தீர்க்கதரிசனவசனமுமநமக்குண்டே, பொழுது விடிந்து உங்கள இருதயங்களிலே வெள்ளியுதிக்குமட்டும் நீங்களதை இருளான ஸ்தலத்தில் பிரகாசிக்கிற * வெளிச்சமாகியதைக்கவனித்து நடக்கிறது நற்செய்கையாயிருக்கும்.

* சங். ௱௰௯: ௱௫. ௨. கொரி. ௪: ௬. ௪.

௨௰. வேதவாக்கியத்திலுள்ள எந்தத்தீர்க்கதரிசனமும் [illegible] யிராதென்கிறதை முந்தி அறியுங்கோள்.

௨௧. ஏனெனில் தீர்க்கதரிசனம் பூர்வகாலத்தில் மனுஷனுடைய சித்தத்தினாலே வராமல, பராபரனுடைய பரிசுத்த மனுஷர் * பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.

* ௨. தீமோ. ௩: ௰௬. ௰௭.

௨. அதிகாரம்.

கள்ளப்போதகர் உண்டாகுங் கேட்டையும் அவையும் ஆக்கினையையுங்காண்பித்தது.

ஆனாலும் * கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனத்துக்குள்ளே இருந்தார்கள்; அப்படி உங்களுக்குள்ளும் ** கேடான வேதப்பிரட்டுகளை நுழைப்பண்ணி, தங்களைக் கொண்டவரை மறுதலித்து, தங்கள்மேல் தீவிரமான அழிவை வருத்துவிக்கிற கள்ளப்போதகர் இருப்பார்கள்.

* யெரே. ௬: ௰௩. ஏசேக். ௰௩: ௩. ௬.
** அப்போ. ௨௰: ௨௯.

௨. அவர்களுடைய கேடுகளை அநேகர் பின்செல்லுவார்கள் அவர்களாலே சத்தியவழி தூஷிக்கப்படும்.

௩. கட்டுவார்த்தைகளாலே உங்களிலே பொருளாசையாய் வியாபாரம்பண்ணுவார்கள். அவர்களுக்குப் பூர்வகாலந்துவக்கி வைத்த ஆக்கினை அசந்திராமலும் அவர்கள் அழிவு உறங்காமலுமிருக்குது.

௪. ஏனென்றால் * பாவஞ்செய்த தூதர்களைப் பராபரன் தப்பவிடாமல், நரகத்துக்குள்ளே தள்ளி, நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாகுந்த அந்தகாரச் சங்கிலிகளுக்கொப்புக்கொடுத்து,

* யோபு. ௪: ௧௮. யூதா. ௬. வச.

௫. * பழையலோகத்தையுந் தப்பவிடாமல், நீதியினுடைய எட்டாம்பிரசங்கியாகிய நோவாவைக் காப்பாற்றிப் பத்தியற்றவர்களுடைய லோகத்தின் மேலே சலப்பிரளயத்தை வரப்பண்ணான்.

* ௧. மோ. ௭: ௨௧. ௨௩.

௬. * சோதோங்கொமோராவென்னும் பட்டணங்களையுஞ் சாம்பலாக்கி, கீழ்துமேலுந் தள்ளிப்போடுகிறத்திலே ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, ஆகாமியமாய் நடக்கப்போறவர்களுக்குத் திருஷ்டாந்தமாக வைத்து,

* ௧. மோ. ௰௯: ௨௪. ௨௫.

௭ அக்கிரமக்காரருடைய காமவிகாரநடக்கையாலே வருத்தப்பட்ட நீதிமானாகிய லோத்தைத் தப்புவித்து விட்டாரே.

௮. ஏனென்றால் அந்த நீதிமான் அவர்களுக்குள்ளே குடியிருந்து, நாளுக்கு நாள் அக்கிரமக் கிரியைகளைக் கண்டுங் கேட்டுமிருந்ததினாலே தன் நீதியுள்ள ஆத்துமத்தை * வாதித்தான். * சங்கீ. ௱௰௯: ௱௩௬.

௯. கர்த்தர் தேவபத்தியுள்ளவர்களை * சோதனைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கவும், அக்கிரமக்காரரையோ நியாயந்தீர்க்கும் நாளுக்கு ஆக்கினைக்குள்ளானவர்களாக வைக்கவும் அறிவார். * ௧. கொ. ௰: ௰௩.

௰. விசேஷமாக அசுத்தத்தினுடைய இச்சையாய் மாம்சத்தின் பின்னே போய் கர்த்தத்துவத்தை அசட்டைபண்ணுகிறவர்களைத்தானே. அவர்கள் துணிகரக்காரர், அகங்காரிகள், அதிகாரங்களைத் தூஷிக்க நடுங்காதவர்கள். * யூதா. ௰ — ௰௬.

௰௧. பெலத்திலும் வல்லமையிலும் அதிகமான தேவதூதர் முதலாய் அதுகளுக்கு விரோதமாகக் கர்த்தருக்கு முன்பாகத் தூஷணமான நியாயத்தீர்ப்பைப் போடார்களே.

௰௨. இவர்களோ * பிடியுண்டழிக்கப்படுவதற்குச் சனித்த புத்தியற்ற மிருக சீவன்களைப்போலே, தாங்கள் அறியாததுகளிலே தூஷணத்தைச் சொல்லி, தங்கள் கேட்டிலே கெட்டழிந்து அநீதத்தின் பலனை அடைவார்கள். * எரே. ௰௨: ௩.

௰௩. அவர்கள் அநுதினச் செருக்கைச் சௌக்கியமென்றெண்ணி, கறைகளும் லச்சைகளுமாயிருந்து, தங்கள் வஞ்சகங்களிலே செருக்காய் வாழ்ந்து, உங்களோடே விருந்துண்டு,

௰௪. விப

யச. விபசாரத்தால் நிறைந்திருக்கும் பாவத்தை விட்டோயாததுமான கண்களுள்ளவர்களாயிருந்து, உறுதியற்ற ஆத்துமாக்களை ஆசைப்படுத்தி, எல்லாப் பொருளாசைகளுக்குப் பழகின இருதயத்தை உடைத்தான சாபத்தின் பிள்ளைகள்.

யரு. அவர்கள் செம்மையான வழியைவிட்டுத் தப்பிப்போய், * பேயோரின் குமாரனாகிய பாலாமின் வழியைப் பின்சென்று போனார்கள்; அவன் அநியாயத்தின் கூலியை விரும்பினான்.

* சு. மோ. உஉ: ரு. ௲. அதி. உ: யச.

யசா. ஆனால் அவனுடைய மீறுதலுக்காகக் கடிந்துகொள்ளப்பட்டான்; பேசாதிருக்கிற வாகனமாகிய கழுதை மனுஷசத்தமாய்ப் பேசித் தீர்க்கதரிசியின் மதிகேட்டைத் தடுத்தது.

யஎ. இவர்கள் தண்ணீரில்லாத கிணறுகளும், சுழல்காற்றால் அடியுண்டோடுகிற மேகங்களுமாயிருக்கிறார்கள்; என்றென்றைக்குமுள்ள அந்தகாரமான இருளானது அவர்களுக்கு வைத்திருக்குது.

யஅ. ஏனென்றால் மோசமாய் நடக்கிறவர்களுக்கு மெய்யாய்த் தப்பினவர்களாயிருந்தவர்களை, மாயையையும் பெருமையுமான வார்த்தைகளைப் பேசி மாம்சத்தின் இச்சைகளாலும் காமவிகாரங்களினாலும் ஆசைப்படுத்திக்காட்டுகிறது.

யகூ. தாங்களே கெட்டுப்போகிறவர்களாயிருந்தும் அவர்களுக்கு விடுதலையை வாக்குத்தத்தம் பண்ணுகிறார்கள். ஏனென்றால் * எதினாலொருவன் ஜெயங்கொள்ளப்பட்டானோ அதற்கவன் அடிமையானான்.

* யோவ. அ: ௩௪.

உய. அதேனென்றால் * அவர்கள் கர்த்தரும் இரட்சகருமாகிய யேசுக்கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே லோகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினபிறபாடு, அதுகளில் மறுபடியும் சிக்குப்பட்டுக் கீழானால், அவர்களுக்கு முந்தினவைகளைப் பார்க்கப் பிந்தினவைகள் கேடாச்சுது. * மத். யஉ: ௪ரு. லூ. ய: உ௬, உஎ.

உக. ஏனென்றால் அவர்கள் நீதியின் வழியை * அறிந்திருந்தும், தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனைகளை விட்டுத் திரும்புகிறதைப் பார்க்க அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். * லூ. யஉ: ௪எ.

உஉ. ஆனால் * நாய் தான் கக்கினதைத் தின்னத் திரும்புகிறதென்றும், குளிப்பாட்டப்பட்ட பன்னி சேற்றிலே புரளத் திரும்புகிறதென்றும் சொல்லுகிற மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது.

* பழ. உ௬: யக.

௩. அதிகாரம்.

வேதசகந்தக்காரரைக்குறித்தெச்சரிக்கிறதும் நியாயத்தீர்ப்பினாளிலே சம்பவிக்கும்பயங் கரத்தையுங்காண்பிக்கிறதும்.

பிரியமானவர்களே, இந்தஇரண்டாம்நிருபத்தை இப்போ உங்களுக்கெழுதுகிறேன்.

௨. பரிசுத்ததீர்க்கதரிசிகளாலே முன் சொல்லப் பட்டவாக்குகளையும், இரட்சகராகிய கர்த்தரின் அப் போஸ்தலராகிய எங்களுடைய கற்பனையையும் நீங் கள் நினைக்க, இரண்டிலும் உங்கள் துப்பரவான நினைவை * நினைப்பூட்டி எழுப்புகிறேன். * ௧: ௰௩.

௩. * கடைசிநாள்களிலே தங்கள்சுயஇச்சைகளின் படிநடந்து, * ௨. தீமோ. ௩: ௧.

௪. அவருடையவருகையின் வாக்குத்தத்தம் எங்கேயிருக் குது, பிதாக்கள் நித்திரை அடைந்தபிறகு எல் லாஞ்சிருஷ்டியின் தொடக்கமுதல் இருந்த பிரகாரமா யிருக்குதேயென்று சொல்லிப் பரியாசக்காரர் வரு வார்களென்கிறதை முதல்முதல் அறிந்திருங்கோள்.

௫. ஏனெனில் பூர்வகாலத்தில் * பாரபரனு டையவாக்கினாலே வானங்களும், சலத்தினாலுஞ் சலத்திலேயும் நிலைகொண்ட பூமியுமிருந்ததென் றதையும், * சங். ௩௩: ௬.

௬. * அதுகளாலே அப்போதிருந்தலோகம் வெள் ளங்கொண்டு அழிந்துபோனதையும் அவர்கள் மன தார அறியாமலிருக்கிறார்கள்.

* ௧. மோசே. ௭: ௰௧—௨௰.

௭. இப்போதிருக்கிற வானங்களும் பூமியும்மோவே ளிலே அந்தவார்த்தையாலே தானே வைத்து வைக்கப்பட் டு * பக்தியற்றமனுஷர் நியாயந்தீர்க்கப்பட்டுக் கெடு நாளுக்கு அக்கினிக்கிரையாகக் காக்கப்படுகுது.

* ௨. தெச. ௧: ௮. ௭.

௮. ஆனாலும், பிரியமானவர்களே, * கர்த்தரிடத்தில் ஒருநாள் ஆயிரம் வருஷங்களைப்போலவும், ஆயிரம் வருஷங்கள் ஒருநாளைப்போலவும் இருக்குதென் கிற ஒரேகாரியத்தை நீங்கள் அறியாதிருக்கவேண் டாம். * சங். ௯௰: ௪.

௯. * சிலர்தாமதமென்றெண்ணுகிறதுபோலக் கர்த்தர் பண்ணின வாக்குத்தத்தத்துக்குத் தாமதிக்காமல், * நம்முடையமேல் நீடியபொறுமையாயிருந்து, யாதொ ருத்தர் கெட்டுப்போகவொண்ணாமல் எல்லாருங் குணப்படுகி றதுக்குவெனச் சித்தமாயிருக்கிறார். * ஆப. ௨: ௩.

** எசே. ௩௩: ௰௧. ரோ. ௨: ௪.

௧. தீமோ. ௨: ௪.

௰. ஆனாலும் கர்த்தருடையநாள் ராவிலேதிருடன்வ ருகிறவண்ணமாய்வரும், * * அதிலே வானங்கள்

மடமடப்போடொழிந்து, பூதியங்களெரிந்துக் கரைந்து, பூமியும் அதிலுள்ள கிரிகைகளும் வெந்து போம். * ௧ தெச. ௫: உ. * * ஆசா. ௨௪: ௩௫.

௰௧. ஏபேபோகுய், இதுகளெல்லாங் கரைந்துபோகுதாயிருக்கக்கொள்ள நீங்கள், வானங்கள் வெந்து கரைந்து, பூதியங்களெரிந்துருகிப் போகும் பராபரனுடைய நாளின் வருகைக்குக் காத்திருக்கவுந் தீவரிக்கவும்

௰௨. பரிசுத்த நடக்கைகளிலுந் தேவபயத்திலும் எப்படிப்பட்டவர்களாயிருக்க வேண்டியது.

௰௩. * ஆனாலும் அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே, நீதி வாசமாயிருக்கிற புது வானங்களுக்கும் புது பூமிக்குங் காத்திருக்கிறோம்.

* ஏசா. ௬௫: ௰௭. அபிவி. ௨௧: ௧.

௰௪. ஆகையிலே, பிரியமானவர்களே, இதுகளுக்குக் காத்திருக்கிற நீங்கள் அவராலே கறையற்றவர்களுங் குற்றமற்றவர்களுமாய்ச் சமாதானத்திலே கண்டுபிடிக்கப் படத்தக்கதாய் ஜாக்கிரதையாயிருந்து,

௰௫. நமதாண்டவருடைய நீண்டபொறுமையை ரெட்சிப்பாக எண்ணுங்கோள். இப்படி எங்கள் பிரியசகோதரனாகிய பவுலுந் தனக்குக் கொடுபட்ட ஞானத்தின்படியே உங்களுக்கெழுதியிருக்கிறான்.

௰௬. எல்லா நிருபங்களிலும் இதுகளைக் குறித்துப் பேசும்போது அப்படியெழுதினான்; * அதுகளில் சில உணர அர்த்தாக்கிய சிலதுகளுண்டு, அதுகளைக் கல்லாதவர்களும் உறுதியற்றவர்களும், மற்றவேத எழுத்துகளையுந்தாங்கள் புரட்டுகிறபடி போலே தங்களுக்குத் தங்கள் கேடாகப் புரட்டுகிறார்கள்.

* உ. கோ. ௬: ௩ ௬.

௰௭. நீங்களோவென்றால், பிரியமானவர்களே, அக்கிரமக்காரரின் மோசத்திலே கூட்டிழுப்புண்டு உங்கள் உறுதியைவிட்டு விழுந்து போகாதபடிக்கு, இதுகளை முன்னறிந்து, உங்களைக் காத்து,

௰௮. நமது கர்த்தரும் இரட்சகருமாகிய யேசுக்கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கோள். அவருக்கு இப்போதும் என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக, ஆமென்.

அப்போஸ்தலனாகிய
யோவானுடைய பொதுவான
முதலாம் நிருபம்.
௧. அதிகாரம்.

வெளிப்பட்ட தேவகுமாரனுக்கும் பாவிகளுக்குஞ் பரனோடே ஐக்கியமாகும் வகை.

ஆதி * முதலாயிருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே * * கண்டதும், நாங்கள் நோக்கிப்

பார்த்

பார்த்ததுமாய் நாங்கள் கைகள் *** தொட்டதுமான சீவ
னுடைய வாக்கியத்தைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கி
றோம். * யோவா. ௧: ௧. ௨. ** யோவா. ௬: ௰௬.

*** லூ. ௨௪: ௩௯.

௨. ஏனெனில் * சீவன் வெளிப்பட்டது; பிதாவினி
டத்திலிருந்ததும் நமக்கு வெளிப்பட்டதுமான நித்த
திய சீவனை நாங்கள் கண்டிருந்து, அதைக்குறித்துச் சாட்சி
கொடுத்து, உங்களுக்கு அறிவிக்கிறோம்.

* யோவா. ௧: ௪.

௩. நாங்கள் கண்டதையுங் கேட்டதையும் உங்க
ளுக்குமெங்களோடே ஐக்கியமுண்டாயிருப்பதற்கு,
உங்களுக்கு அறிவிக்கிறோம்; ஆனால் * நம்முடைய ஐக்கியம்
பிதாவோடேயும் அவர் குமாரனாகிய யேசு கிறிஸ்துவோ
டேயுமிருக்கிறது. * யோவா. ௰௭: ௨௰ — ௨௩.

௪. உங்கள் சந்தோஷம் நிறைந்ததாயிருக்கும்படிக்
இதுகளை உங்களுக்கு எழுதுகிறோம்.

௫. * பராபரன் வெளிச்சமாயிருக்கிறார்; அவரில்
இருளொன்றுமில்லையென்கிறது நாங்கள் அவராலே
கேட்டிருந்து உங்களுக்கு அறிவிக்கிற வாக்குத்தத்தம்.

* சங். ௱௪: ௨.

௬. அவரோடே நமக்கு ஐக்கியமுண்டென்று நாம்
சொல்லியும் இருளில் நடந்தால், நாம் உண்மையைச்
செய்யாமல் பொய்சொல்லுகிறோம்.

௭. அவர் வெளிச்சத்திலிருக்கிறதுபோல நாமும்
வெளிச்சத்தில் நடந்தோமேயானால், நமக்கு அன்னிய
வன்னிய ஐக்கியமுண்டாயிருந்து, அவர் குமாரனாகிய
யேசுக்கிறிஸ்துவினுடைய இரத்தம் நம்மையெல்லாப்
பாவமும் நீங்கச் சுத்திகரிக்குது * எபி. ௯: ௰௪. அபி. ௧: ௫.

௮ நமக்குப் பாவமில்லையென்றோமானால், உண்
மை நமக்குள்ளிராமல் நம்மை நாம் மோசம்போக்கி
றோம்.

௯. * நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால்,
அவர் நமக்குப் பாவங்களை மன்னித்து, நம்மையெல்
லா அவஞாயமும் நீங்கச் சுத்திகரிப்பதற்கு உண்மையும்
நீதியுமுள்ளவராயிருக்கிறார். * சங். ௩௨: ௫.

௰ நாம் பாவஞ்செய்ததில்லையென்றோமானால், அவ
ருடைய வாக்குத்தம் நமக்குள்ளிராமல், அவரைப் பொய்
யராக்குகிறோம்.

௨. அதிகாரம்.

பாவத்தையும் லோகசிநேகத்தையுங் கிறிஸ்து
வின் எதிராளியையுங்குறித்து எச்சரித்தது.

என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்
இதுகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்
செய்தானேயாகில், நீதிபரராயிருக்கிற யேசுக்கிறிஸ்து

வேண்டுகிற காரியக்காறதர் நமக்கு பிதாவினிடத்திலிருக்கி
றார். * றோ. ௮: ௩௪. எபி. ௯: ௨௪.

௨. அவர் நம்முடைய பாவங்களை நிமித்தியால் கிருபை
உண்டாக்குதலாயிருக்கிறார்; ஆனால் நம்முடைய பாவங்
களை நிமித்தியமாத்திரமல்ல, * * சமஸ்த லோகத்தின்
பாவங்களை நிமித்தியமுந்தானே. * ௨. கொரி. ௫:
௨௧. * * யோவ. ௧: ௨௯. ௩: ௩௯.

௩. அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டோ
மாகில், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால
அறிவோம்.

௪. அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும்
அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் உண்மை
யில்லாத பொய்யனாயிருக்கிறான்.

௫. ஆனாலெவன் அவருடைய வசனத்தைக்
கைக்கொள்ளுகிறானோ அவனிலே பராபரனுடைய சிநேகம்
மெய்யாகத் தேறுகிறது; அவருக்குள்ளிருக்கிறோமென்
பதையிதினால அறிவோம். * யோவ. ௰௪: ௨௧.

௬. * அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்
லுகிறவன் அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்
டியது. * யோவ. ௰௫: ௰.

௭. சகோதரரே, புதுக்கற்பனையை அல்ல, நீங்கள்
ஆதிமுதலாய்ப் பெற்றிருக்கிற பழைய கற்பனையை
உங்களுக்கு எழுதுகிறேன்; அந்தப் பழைய கற்பனை நீங்
கள் ஆதிமுதலாக் கேட்ட வசனந்தானே.

௮. மறுபடியும் புதுக்கற்பனையை உங்களுக்கு எழு
துகிறேன்; அதாவது: அவருக்குள்ளும் உங்களுக்குள்
ளும் நிசக்கக்கடவது; ஏனெனில் இருள் நீங்கிப்போய்
மெய்யான வெளிச்சம் இப்போ பிரகாசிக்குது.

* றோ. ௰௩: ௰௨.

௯. தான் வெளிச்சத்திலிருக்கிறேனென்று சொல்லி
யுந் தன் சகோதரனைப் பகைக்கிறவன் இதுவரைக்கும்
இருளிலேயிருக்கிறான்.

௰. தன் சகோதரனைச் சிநேகிக்கிறவன் வெளிச்சத்
திலே நிலைகொள்ளுகிறான்; அவனிடத்தில் இடறலில்
லை.

௰௧. தன் சகோதரனைப் பகைக்கிறவனோ இருளிலே
யிருந்து இருளிலே நடந்து தானெங்கே போகிறானென்
கிறதை அறியாதிருக்கிறான்; ஏனெனில் இருள் அவன்
கண்களைக் குருடாக்கிறது.

௰௨. பிள்ளைகளே, பாவங்கள் உங்களுக்கு அவ
ருடைய நாமத்தின் நிமித்தியம் மன்னிக்கப்பட்டதென்று
உங்களுக்கு எழுதுகிறேன்.

* லூ. ௨௪: ௪௭. ௪௮.

௰௩. பிதாக்களே, ஆதிமுதலாயிருக்கிறவரை அறிந்
திருக்கிறீர்களென்று உங்களுக்கு எழுதுகிறேன். வாலி
பர்களே, பொல்லாங்கனை வென்றீர்களென்று உங்க
ளுக்கு எழுதுகிறேன். பிள்ளைகளே, பிதாவை அறிந்தி
ருக்கிறீர்களென்று உங்களுக்கு எழுதுகிறேன்.

௰௪. பிதாக்களே! ஆதிமுதலாயிருக்கிறவரை அறிந்
திருக்கிறீர்களென்று உங்களுக்கெழுதினேன்| வாலி
பரே! பெலவான்களாயிருக்கிறீர்களென்றும் தேவ
வசனம் உங்களில் நிலைத்திருக்கிறதென்றும் பொல்
லாங்கனை ஜெயித்தீர்களென்றும் உங்களுக்கெழுதி
னேன்.

௰௫. லோகத்தையும் லோகத்திலுள்ளவைக
ளையுஞ் சினேகியாதேயுங்கோள்| * ஒருவன் லோ
கத்தைச் சினேகித்தால் அவனிலே பிதாவின் சினேகமில்
லை. * யாக. ௪: ௪.

௰௬. ஏனெனில் மாம்சத்தினுடைய இச்சையுங்
கண்களினுடைய இச்சையுஞ் சீவனத்தினுடைய பெருமை
யுமான லோகத்திலுள்ள சகலமும் பிதாவினால்
உண்டாயிராமல் லோகத்தினால் உண்டாயிருக்கிறது.

௰௭. * லோகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்|
பராபரனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்
றென்றைக்கும் நிலைநிற்கிறான். * ௧. கொரி. ௭: ௩௧.

௰௮. பிள்ளைகளே! கடைசி நேரமாயிருக்கிறது|*
கிறிஸ்துவின் சத்துரு வருகிறதை நீங்கள் கேட்டி
ருக்கிறபடி இப்பொழுதும் கிறிஸ்துவின் சத்துருக்கள்
அநேகர் உண்டானார்கள்| அதினாலே கடைசி நேரமா
யிருக்கிறதென்றறிகிறோம். * மத. ௨௪: ௨௪. ௨. தெச.
௨: ௩. ௪.

௰௯. * நம்மிடத்திலிருந்து புறப்பட்டார்கள்| ஆனால
வர்கள் நம்முடையவர்களாயிருந்ததில்லை| ஏனென்றால்
நம்முடையவர்களாயிருந்தார்களானால் நம்முடனே
நிலைத்திருப்பார்களாம். ஆனால் எல்லாரும் நம்முடையவர்
களல்லவென்று வெளியாகும்படிக்குப் புறப்பட்
டார்கள். * அப்போ. ௨௰: ௩௰.

௨௰. * நீங்களோவென்றால் பரிசுத்தரானவரால் அபிஷே
கத்தைப்பெற்றவர்களாய் எல்லாத்தையும் அறிந்திருக்கிறீர்கள்
* யோவ. ௰௪: ௨௬. ௰௬: ௰௩.

௨௧. நீங்கள் சத்தியத்தை அறியாததினாலல்ல| நீங்
களதையும் சத்தியத்தாலொருபொய்யும் உண்டாயிரா
தென்கிறதையும் அறிந்திருக்கிறபடியினாலேயுங்களுக்
கெழுதினேன்.

௨௨. யேசுவென்கிறவர் கிறிஸ்துவல்லவென்று
மறுதலிக்கிறவனேயல்லாமல் பின்னையார் பொய்யன்.
பிதாவையுங் குமாரனையும் மறுதலிக்கிறவனே
கிறிஸ்துவின் சத்துரான்.

௨௩. குமாரனை மறுதலிக்கிறவனுக்கெல்லாம்
பிதாவுமில்லை.

௨௪. ஆகையால் ஆதிமுதலாய் நீங்கள் கேட்டதுங்
களில் நிலைத்திருக்கக்கடவது. ஆதிமுதலாய் நீங்கள்
கேட்டது உங்களில் நிலைத்திருந்தால்| நீங்களுங் குமார
னிலும் பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள்.

௨௫. * நித்தியசீவனே அவர் நமக்குக் கொடுத்த வாக்
குத்தத்தம். * யோவ. ௩: ௩௬.

௨௬. உங்களை மோசம்போக்கிறவர்களைக் குறித்து இதுகளை உங்களுக்கு எழுதினேன்.

௨௭. நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களிலே நிலைகொண்டிருக்குது; * உங்களுக்கு ஒருத்தன் போதிக்க உங்களுக்குத் தேவையாயிராமல், அந்த அபிஷேகமே சகல காரியங்களையுங்குறித்து எப்படி உங்களுக்குப் போதிக்குதோ, அப்படியே பொய்யற்ற சத்தியமாயிருக்குது. அது உங்களுக்குப் போதித்தபடியே அவரிலே நிலைத்திருப்பீர்கள். * யெரே. ௩௧: ௩௩. ௩௪.

௨௮. இப்போதும், பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது, நாம் அவர் வருகையில் அவரால் வெட்கப்படுத்தப்படாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு, * அவரிலே நிலைத்திருங்கோள். * யோவ. ௰௫: ௪—௭.

௨௯. அவர் நீதியாரென்பது உங்களுக்குத் தெரிந்திருந்தால், நீதியைச் செய்கிறவனெல்லாம் அவரிலே பிறந்தவனென்றறிந்திருக்கிறீர்கள்.

௩. அதிகாரம்.

தேவபுத்திரராகிற மகிமையும் அதுக்கேற்குஞ் சுத்தத்தையுஞ் சகோதர சிநேகத்தையுங் குறித்துச் சொன்னது.

நாம் * பராபரனுடைய பிள்ளைகளென்றழைக்கப்படுவதிலே பிதா நமக்குச் செய்துள்ள பெரிய சிநேகத்தை அளவெண்ணிப்பாருங்கோள். இது நிமித்தியம் லோகம் நம்மை அறியாது; ஏனென்றால் அது அவரை அறிந்ததில்லை. * யோவ. ௧: ௰௨.

௨. பிரியமானவர்களே, இப்போ பராபரனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்; நாம் இன்னமென்னப்படுவோமென்று இன்னம் வெளியரங்கமானதில்லை. அவர் வெளிப்படும்போதோவெனில், அவருக்குச் சாயலாயிருப்போமென்றறிந்திருக்கிறோம்; ஏனெனில் அவரிருக்கிற வண்ணமாக * * அவரைத் தெரிசிப்போம். * கொலொ. ௩: ௪. * * மத். ௫: ௮.

௩. அவர் பேரில் இந்த நம்பிக்கையை வைத்திருக்கிறவனெல்லாம், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறபடியே தன்னையுஞ் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்.

௪. பாவத்தைச் செய்கிறவனெல்லாம் அநியாயத்தையுஞ் செய்கிறான்; பாவமே அநியாயமாயிருக்குது.

௫. அவர் நம்முடைய பாவங்களை நீக்க வெளிப்பட்டாரென்றறிவீர்கள்; அவரிலே பாவமில்லை. * யோவ. ௧: ௨௯.

௬. அவரிலே நிலைத்திருக்கிறவனெல்லாம் பாவஞ்செய்யாதிருக்கிறான்; பாவஞ் செய்கிறவனெல்லாம் அவரைக் கண்டதுமில்லை அவரை அறிந்ததுமில்லை.

௭. பிள்ளைகளே, உங்களை ஒருத்தனும் மோசம்போக்க வேண்டாம்; நீதியைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவராயிருக்கிறதுபோலே நீதியுள்ளவனாயிருக்கிறான்.

௮. பாவததைசசெயகிறவன * பிசாசினாலுணடா யிருககிறான, ஏனெனறால ஆதிமுதலாயபிசாசுபாவஞ செயயுது. ** பிசாசினகிரியைககளைககெடுககவே பராபரனுடையகுமாரன வெளிப்படடார.

* யோவ. ௮: ௪௪. ** ௧. மோ. ௩: ௰௫.

௯. *பராபரனிலேபிறநதவனெலலாம பாவஞசெய யாதிருககிறான, ஏனெனறால அவருடையவிததுஅவனுக குளளேதரிததிருககுது, அவன பராபரனிலேபிறநதபடியினாலே பாவஞசெயயமாட்டான. * ௫: ௰௮.

௰. இதிலேபராபரனுடையபிளளைகளும பிசாசினு டையபிளளைகளும [illegible] வெளி; எங்க ளாமநீதியைசசெயயாமலிருநதுதனசகோதரனைசசிநேகி யாமலிருககிறவனெலலாமபராபரனாலுணடா னவனலல.

௰௧. ஏனெனறால நாமஒருததரையொருததர்சிநேகிகக வேணுமெனகிறதேநீஙகள ஆதிமுதலகொணடுவந விககககேடடவிசேஷம. யோவ. ௰௩: ௩௪.

௰௨. *பொலலாஙகனாலுணடாயிருநது தனசகோ தரனைககொனறகாயீனைபபோலிருககவேணடாம அவன எததினிமிததம அவனைககொனறான, தனகிரி யைகளபொலலாததுநதனசகோதரனகிரியைகளோ நீதியுளளதுமாயிருநததினிமிததநதானே.

* ௧. மோ. ௪: ௮.

௰௩. என சகோதரரே, *லோகம உஙகளைபபகைத தால, ஆசசரியபபடாதேயுஙகோள. * யோவ. ௰௫: ௰௮—௨௧.

௰௪. *மரணததைவிடடுநீஙகி, சீவனுககுளபபடடிருககி றோமெனறறிஞசுநாமஅறிவோம, ஏனெனறால சகோ தரரைசசிநேகிககிறோம, சகோதரனைசசிநேகியாதவன மரணததிலேநிலைகொணடிருககிறான.

* யோவ. ௫: ௨௪.

௰௫. *தனசகோதரனைபபகைககிறவனெலலாம மனுஷகொலைபாதகனாயிருககிறான, ஆனாலமனுஷகொலை பாதகனாகியஎவனுககுளளும நித்தியசீவனநிலைததிருக கிறதிலலையெனறறிவீர்கள. * மத. ௫: ௨௧. ௨௨.

௰௬. *அவர்நமககாகத தமமுடைய சீவனை விடடு விடடதினாலேசிநேகம இனனதெனறறிநதோம, நா முஞசகோதரருககாகசசீவனைவிடடுவிடககடனுளள வராயிருககிறோம. * யோவ. ௩: ௰௬. ௰௫: ௰௩.

௰௭. ஆனாலெவனுககிநதலோகசீவனமுணடாயிருந்து, *தனசகோதரனுககுககுறைசசல உணடென றுகணடு, தனனிருதயததை அவனைவிலக அடைததுக கொணடால, அவனுககுளளே பராபரனினசிநேகம எப படிநிலைககும. * ௫. மோ. ௰௫: ௭.

௰௮. என பிளளைகளே, *வசனததினாலும நாவினா லுமலல, கிரியையினாலுமஉணமையினாலுஞ சிநேகிக ககககடவோம. * யாக. ௨: ௰௫—௰௬.

௰௯. இதினாலே நாம் சத்தியத்தார் என்கிறதை நாம் அறிந்திருந்து/

௨௰. நம்முடைய இருதயம் நம்மை நோக்ஷத்தாக்ஷத் தீர்த்தாலும், நம்முடைய இருதயத்தைப் பார்க்கப் பராபரனே பெரியவராயிருந்து எல்லாத்தையும் அறிகிறார் என்று நம்முடைய இருதயங்களை அவருக்கு முன்பாகத் திடப்படுத்திக் கொள்ளலாம்.

௨௧. பிரியமானவர்களே/ நம்முடைய இருதயம் நம்மை நோக்ஷத்தாக்ஷத்தீர்க்காதிருந்தால்/ நாம் பராபரனுக்கு முன்னே தைரியங்கொண்டிருந்து/

௨௨. எதைக்கேட்கிறோமோ/ அதை அவராலே யடைகிறோமென்றால் அவருடைய கற்பினைகளைக் கைக்கொண்டு/ அவருக்கு முன்பாக ஏற்றதுகளைச் செய்கிறோம்.

௨௩. நாம் அவர்குமாரனாகிய யேசுக்கிறீஸ்துவினுடைய நாமத்தின் மேலே விசுவாசித்து/ அவர் நமக்குக் கற்பினை தந்தபடி ஒருவரை யொருவர் சிநேகிக்க வேணுமென்கிறதே அவருடைய கற்பினை.

௨௪. அவருடைய கற்பினைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரிலும் நிலைத்திருக்கிறான்/ அவர் அவனிலும் நிலைத்திருக்கிறார்/ * அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்த ஆவியினாலே அறிகிறோம்.

* ரோம. அ: கூ.

௪. அதிகாரம்.

போதகரை எப்படிப் பகுத்தறியவேணுமென்று சோதிக்கப் புத்திசொல்லுகிறது.

பிரியமானவர்களே/ * நீங்கள் எல்லா ஆவியையும் நம்பாமல் ஆவிகள்/ பராபரனால் உண்டானதுகளோவென்று சோதித்தறியுங்கோள்/ ஏனென்றால் அநேகங்கள்ளத்தீர்க்கதரிசிகள் லோகத்திலே புறப்பட்டார்கள். * மத். ௭: ௰௫. ௰௯. ௨௪: ௪. ௫.

௨. பராபரனுடைய ஆவியைனத்தினால் அறிகிறீர்களென்றால்/ மாம்சத்திலேவந்த யேசுக்கிறீஸ்துவை அறிக்கைப்பண்ணுகிற எல்லா ஆவியும் பராபரனால் உண்டாயிருக்கிறது.

௩. மாம்சமாய்க்கத்திலேவந்த யேசுக்கிறீஸ்துவை அறிக்கைபண்ணாதிருக்கிற ஆவியும் பராபரனால் உண்டானதாயிராது/ * இதுவே நீங்கள் வருகுதென்று கேட்டிருக்கிற அந்திக்கிறீஸ்துவினுடைய ஆவி/ அது இப்போதுமே லோகத்திலிருக்குது. * உ: ௰௮. ௨௨.

௪. பிள்ளைகளே/ நீங்கள் பராபரனால் உண்டாயிருந்து/ அவர்களை செயித்தீர்கள். ஏனென்றால் லோகத்திலிருக்கிறவனைப்பார்க்க உங்களிலிருக்கிறவர் பெரியவர்.

௫. அவர்கள் லோகத்தாராயிருக்கிறார்கள்/ ஆனபடியினாலே லோகத்தாராய்ப் பேசுகிறார்கள்/ லோகம் அவர்களுக்குக் கேட்குது.

௬. நாம் பராபரனாலே உண்டாயிருக்கிறோம்; * பராபரனை அறிகிறவன் நம்மைக் கேட்கிறான்; பராபரனாலே உண்டாயிராதவன் நம்மைக் கேளான். இதினாலே சத்தியத்தினுடைய ஆவியையும் மாயத்தினுடைய ஆவியையும் இன்னின்னதென்று அறிகிறோம். * யோவ. ௮: ௪௭.

சகோதரசிநேகத்துக்கு தேவசிநேகத்துக்கு மாதிரிப்பினது.

௭. பிரியமானவர்களே! ஒருவரை ஒருவர் சிநேகிக்கக்கடவோமாக; ஏனெனில் சிநேகம் பராபரனாலுண்டாயிருக்குது. சிநேகிக்கிறவனெவனும் பராபரனாலே பிறந்திருந்து பராபரனை அறிகிறான்.

௮. சிநேகியாதவன் பராபரனை அறிந்ததில்லை; ஏனெனில் பராபரன் சிநேகந்தானே.

௯. பராபரன் தம்முடைய ஒரே பேறான குமாரனை நாம் அவர் மூலமாய்ப் பிழைக்கும்படிக்கு லோகத்தில் அனுப்பினதினாலே நம்மேலுள்ள பராபரனுடைய சிநேகம் வெளியரங்கமாச்சுது. * யோவ. ௩: ௰௬.

௰. பராபரன் நம்மைச் சிநேகித்ததேயல்லாமல் நாம் அவரைச் சிநேகித்தது; தம்முடைய குமாரனை நம்முடைய பாவங்களினிமித்தியமாய்க் கிருபையுண்டாக்குந் தோலாக அனுப்பினதிலே சிநேகமுண்டாயிருக்குது.

௰௧. பிரியமானவர்களே! * பராபரன் நம்மை இவ்விதமாய்ச் சிநேகித்திருக்கக்கொண்டு நாமும் ஒருவரை ஒருவர் சிநேகிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்.
* மத்தே. ௰௮: ௩௩.

௰௨. பராபரனை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை; நாம் ஒருவரை ஒருவர் சிநேகித்தோமேயானால் பராபரன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய சிநேகம் நம்மில் நிறைவேறினதுமாயிருக்குது.

௰௩. * அவர் நமக்குத் தம்முடைய ஆவியிலே கொடுத்ததினாலே நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம். * ௩: ௨௪.

௰௪. * பிதா குமாரனை லோகரக்ஷகராக அனுப்பினதை நாங்கள் பார்த்திருந்து சாட்சியாக ஒப்பிக்கிறோம். * யோவா. ௧: ௰௪.

௰௫. யேசு பராபரனுடைய குமாரனென்று எவனாகிலும் அறிக்கைபண்ணுகிறானே அவனிலே பராபரன் நிலைத்திருக்கிறார்; பராபரனிலே அவனும் நிலைத்திருக்கிறான்.

௰௬. பராபரனுக்கு நம்மிடமேலுள்ள சிநேகத்தை நாம் அறிந்து விசுவாசித்தோம். பராபரன் சிநேகந்தானே; சிநேகத்திலே நிலைத்திருக்கிறவன் பராபரனிலே நிலைத்திருக்கிறான்; பராபரன் அவனிலும் நிலைத்திருக்கிறார்.

௰௭. நியாயத்தீர்ப்பின் நாளிலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கும்படிக்குத்தானே சிநேகம் நம்மிடத்திலே நிறைவேறுது; ஏனெனில் அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இந்த லோகத்திலிருக்கிறோம்.

௰௮ சினேகத்திலே பயமில்லை; நிறைந்த சினேகம் பயத்தைப் புறம்பே தள்ளும்; ஏனெனில் பயம் வேதனையுள்ளது; பயப்படுகிறவன் சினேகத்திலே தேறினவனல்ல.

௰௯. நாம் அவரைச் சினேகிக்கக்கடவோம்; ஏனெனில் *அவர் முந்தி நம்மைச் சினேகித்தார். * ரோ. ௫: ௮.

௨௰. *ஒருத்தன்: பராபரனைச் சினேகிக்கிறேனென்று சொல்லியுந் தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; ஏனெனில் தான் கண்ட தன் சகோதரனைச் சினேகியாதவன் தான் காணாத பராபரனை எப்படிச் சினேகிக்கக்கூடும். * ௨: ௯.

௨௰௧. பராபரனைச் சினேகிக்கிறவன் தன் சகோதரனையுஞ் சினேகிக்கவேண்டுமென்கிற கற்பனையை அவராலே அடைந்திருக்கிறோம்.

௫. அதிகாரம்.

யேசுக்கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தின் அடையாளங்களும் உறுதியும் பலனுந் தயிரியமும்.

யேசுவென்கிறவர் கிறிஸ்துவாயிருக்கிறாரென்று விசுவாசிக்கிறவனெல்லாம் *பராபரனிலே பிறந்திருக்கிறான்; ஆனாற் பிறப்பித்தவரைச் சினேகிக்கிறவனெல்லாம் அவரிலே பிறந்தவனையுஞ் சினேகிக்கிறான்.

* யோவான். ௧: ௰௨. ௰௩.

௨. பராபரனைச் சினேகித்து அவர் கற்பனைகளைக் கைக்கொண்டோமானால், பராபரனுடைய பிள்ளைகளைச் சினேகிக்கிறோமென்று அதினாலே அறிகிறோம்.

௩. ஏனெனில் *நாம் பராபரனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரைச் சினேகிக்கிற சினேகம்; **அவர் கற்பனைகள் பாரமுமல்ல.

* யோவா. ௰௪: ௨௩. ௨௪. ** மத். ௰௧: ௩௰.

௪. ஏனென்றால் பராபரனிலே பிறந்ததெல்லாம் லோகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே லோகத்தை ஜெயித்த ஜெயம். * ௨: ௰௫—௰௭.

௫. *யேசு பராபரனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயொழிய பின் யார் லோகத்தை ஜெயிக்கிறவன். * ௧ கொரி. ௰௫: ௫௭.

௬. யேசுக்கிறிஸ்துவாகிய இவரே *தண்ணீரோடும் இரத்தத்தோடும் வந்தவர்; தண்ணீரோடே மாத்திரமல்ல, தண்ணீரோடும் இரத்தத்தோடுந்தானே. ஆவி சத்தியமானதால் ஆவியே சாட்சியுங் கொடுக்கிறவர்.

* யோவான். ௰௯: ௩௪. ௩௫.

௭. ஏனெனில் வானத்திலே சாட்சிகொடுக்கிறவர்கள் மூவர்; *பிதா, **வார்த்தை, பரிசுத்த ஆவி; இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள். * மத். ௨௮: ௰௯. சங். ௩௩: ௬. ஏசா. ௬: ௩. ** யோவா. ௧: ௧.

௮. பூமியிலே சாட்சிகொடுக்கிறதுகளும் மூன்றுண்டு ஆவி, தண்ணீர், இரெத்தம், இம்மூன்றும் ஒன்றாயிருக்கிறது.

௯. நாம் மனுஷருடைய சாட்சியை ஏற்றுக்கொண்டால், * பராபரனுடைய சாட்சி அதிகமாயிருக்கிறது, பராபரனுடைய சாட்சியோவென்றால் தம்முடைய குமாரனைக்குறித்து அவர் கொடுத்த சாட்சிதானே.

* யோவ. ௮: ௰௮.

௰. பராபரனுடைய குமாரன் பேரிலே விசுவாசிக்கிறவன் இந்தச்சாட்சியைத் தனக்குள் வைத்திருக்கிறான். பராபரனை விசுவாசியாதவன் அவரைப் பொய்யராக்குகிறான், ஏனென்றால் பராபரன் தம்முடைய குமாரனைக்குறித்துக் கொடுத்த சாட்சியின் பேரில் விசுவாசியாதிருக்கிறான்.

௰௧. நித்தியசீவனைப் பராபரன் நமக்குத் தந்தாரென்கிறதும், * இந்தச்சீவன் அவருடைய குமாரனுக்குள் இருக்கிறதென்கிறதுமே அந்தச்சாட்சி. * யோவ. ௧: ௪.

௰௨. * குமாரனையுடையவன் சீவனையுடையவன், பராபரனுடைய குமாரனில்லாதவன் சீவனில்லாதவன். * யோவ. ௩: ௩௬.

௰௩. உங்களுக்கு நித்திய சீவனுண்டென்கிறதை நீங்கள் அறிந்து, பராபரனுடைய குமாரனுடைய நாமத்தின் பேரில் விசுவாசிக்கும்படிக்கு, தேவனாகிய பராபரனுடைய குமாரனுடைய நாமத்தின் பேரில் விசுவாசிக்கிற உங்களுக்கு எழுதினேன்.

௰௪. * நாம் அவருடைய சித்தத்தின்படியே எதைக்கேட்டாலும், நமக்குச் செவிகொடுக்கிறாரென்கிறதே நாம் அவரை நோக்கிப் பெற்றிருக்கிற தயிரியம்.

* ௩: ௨௧. ௨௨.

௰௫. நாம் எதைக்கேட்டாலும் நமக்குச் செவிகொடுக்கிறாரென்கிறதை அறிந்தோமேயாகில், நாம் அவரிடத்திற் கேட்ட விண்ணப்பங்களைப் பெறுவோமென்றறிந்திருக்கிறோம்.

௰௬. மரணத்துக்கு நேராயிராத பாவத்தை ஒருத்தன் தன் சகோதரன் செய்யக்கண்டால், வேண்டுதல் செய்யக்கடவான், அப்பொழுது அவனுக்குச் சீவனைத் தருவார். ஆகிலும் இது மரணத்துக்கு நேராய்ச் சாத பாவத்தைச் செய்கிறவர்களுக்குத்தானே. * மரணத்துக்கு நேராகிய பாவமுண்டு, அதினிமித்தம் வேண்டுதல் செய்யச் சொல்லேன். * மாற். ௩: ௨௮. ௨௯. எபி. ௬:

௪—௬. ௰: ௨௬—௨௯.

௰௭. எல்லா அக்கிரமமும் பாவந்தான். ஆனால் மரணத்துக்கு நேராகிய பாவமுண்டு.

௰௮. * பராபரனிலே பிறந்தவனெவனும் பாவஞ்செய்யாதிருக்கிறானென்கிறதை அறிவோம். பராபரனிலே பிறந்தவன் தன்னைக் காக்கிறான், துஷ்டனாகியவன் அவனைத் தொடான். * ௩: ௯.

௰௯. நாம் பராபரனாலுண்டானவர்களென்றும் உலோகமெல்லாம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்.

௨௰. ஆறுகூட பராபரனுடைய குமாரன் வந்து, நாம் சத்தியமுள்ளவரை அறிவதற்காக நமக்குப் புத்தியைக் கொடுத்தாரென்றறிந்திருக்கிறோம்; அவருடைய குமாரனாகிய யேசுக்கிறிஸ்துவென்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள் நாமிருக்கிறோம்; இவர் மெய்யான பராபரனும் நித்திய சீவனுமாயிருக்கிறார். * அரு. ௯: ௫.

௧. தீமோ. ௩: ௰௬. எபி. ௧: ௮.

௨௧. பிள்ளைகளே, உங்களை விக்கிரகங்களுக்கு விலக்கமாய்க் காருங்கோள். ஆமென்.

அப்போஸ்தலனாகிய

யோவானுடைய

இரண்டாம் நிருபம்.

தெய்வபத்தியுள்ள ஒரு அம்மைக்கும் அவள் பிள்ளைகளுக்கும் எழுதப்பட்டது.

நமக்குள் நிலைநிற்கிறதும் என்றென்றைக்கும் நம்மோடேயிருப்பதுமான சத்தியத்தினிமித்தம் மூப்பனாகிய நான் மாத்திரமல்ல, சத்தியத்தை அறிந்திருக்கிற அனைவருமுண்மையாய்ச் சிநேகிக்கிற,

௨. தெரிந்துகொள்ளப்பட்ட அம்மைக்கும் அவளுடைய பிள்ளைகளுக்கும் எழுதுகிறதாவது:

௩. பிதாவாகிய பராபரனாலும் பிதாவின் குமாரனாகிய கர்த்தரான யேசுக்கிறிஸ்துவினாலும் உங்களுடனே கிருபையும் இரக்கமுஞ் சமாதானமுஞ் சத்தியத்தோடுஞ் சிநேகத்தோடுங்கூடயிருக்கக்கடவது.

௪. உம்முடைய பிள்ளைகளில் பிதாவினாலே நாம் கற்பனையடைந்தபடி உண்மையிலே நடக்கிறவர்களை நான் கண்டதுக்காக மிகவுஞ் சந்தோஷப்பட்டேன்.

௫. இப்போதும், அம்மையே, * நாம் ஒருத்தரை ஒருத்தர் சிநேகிக்கவேணுமென்று நான் உமக்குப் புதுக்கற்பனையாகவல்ல, ஆதிமுதலாய் நாம் அடைந்திருக்கிற கற்பனையாக எழுதி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன். * ௧. யோவ. ௨: ௭-௰.

௬. * நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே சிநேகம். நீங்கள் ஆதிமுதலாய்க் கேட்டிருக்கிறபடி நடந்துகொள்ள வேண்டிய கற்பனை இதுவே. * ௧. யோவ. ௫: ௩.

௭. ஏனெனில், மாம்சத்திலே வந்த யேசுக்கிறிஸ்துவை அறிக்கைபண்ணாத அநேகம் எத்தர் லோகத்திலே பிரவேசித்தார்கள். அப்படிக்கொத்தவனே எத்தனுங் கிறிஸ்துவுக்கெதிராளியுமாயிருக்கிறான்.

௮. * நாம் தேடிக்கொண்டதுகளை யிழந்துபோகா மல், நிறைந்தபலனைப்பெறும்படிக்கு, எச்சரிக் கையாயிருங்கோள். * எபி. ௨: ௧.

௯. கிறிஸ்துவின் போதகத்திலே நிலைநில்லாமல் மீறிநடக்கிறவனெல்லாம் பராபரனில்லாதவன். கிறிஸ்துவின் போதகத்திலே நிலைநிற்கிறவனுக்கே பிதாவுமுண்டு குமாரனுமுண்டு.

௰. * ஒருத்தன் உங்களண்டைக்கு வந்து இந்தப்போதகத் தைக்கொண்டுவராதிருந்தால், அவனை உங்கள் வீட் டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த் துதல்சொல்லாமலுமிருங்கோள்.

* ரோ. ௧௬: ௧௭.

௰௧. ஏனெனில் அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகி றவன் அவனது துற்கிரியைகளுக்குப் பங்காளனாகிறான்.

௰௨. உங்களுக்கு எழுதவேண்டிய காரியங்கள் அநேக மிருந்தும், கடுதாசியினாலும் மையினாலும் அதுகளை வி பரிக்க நான் மனதாயிருந்ததில்லை, உங்கள் சந்தோ ஷம் நிறைந்ததாயிருக்கும்படிக்கு உங்களண்டைக்கு நேருக்குநேராய் வந்து பேசலாமென்று நம்பியிருக்கி றேன்.

௰௩. தெரிந்துகொள்ளப்பட்ட உம்முடைய சகோதரி யின் பிள்ளைகள் உம்மை வாழ்த்துகிறார்கள். ஆமென்.

அப்போஸ்தலனாகிய

யோவானுடைய

மூன்றாம் நிருபம்.

தருமவானாகிய காயுசுக்குத் தீட்டினது.

மூப்பனாகிய நான் * உண்மையாய்ச் சிநேகிக்கிற பிரிய மான காயுசுக்கு எழுதுகிறதாவது:

* ௨. யோவா. ௧. வசனம்.

௨. பிரியமானவனே, உன் ஆத்துமம் வாழ்ந்திருக்கி றதுபோல, நீ எல்லாத்திலும் வாழ்ந்து சுகமாயிருக் கவேண்டுகிறேன்.

௩. ஏனெனில் சகோதரர் வந்து, நீ சத்தியத்திலேப் படிநடந்துகொள்ளுகிறபடியே உன்னுடைய உண்மைக் குச் சாட்சிகொடுத்தபோது, மிகவுஞ் சந்தோஷப் பட்டேன்.

௪. என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறதை நான் கேட்பதிலும் அதிக சந்தோஷம் எனக்கில்லை.

௫. பிரியமானவனே, நீ சகோதரருக்கும் பரதேசிக ளுக்குஞ் செய்கிறதுகளையெல்லாம் உண்மையாய்ச் செய்கிறாய்.

௬. அவர்கள் சபைக்கு முன்பாக உன்னுடைய சிநேகத்
துக்குச் சாட்சிகொடுத்தார்கள்; அவர்களை நீ பராபர
னுக்கு முன்பாகப் பாத்திரமானபடி வழிவிட்டனுப்பி
னால் நன்றாய்ச் செய்வாய்.
௭. ஏனென்றால் அவர் நாமத்தினிமித்தம் அவர்கள்
புறசாதியார் கையிலொன்றும் வாங்காமல் புறப்பட்
டார்கள்.
௮. ஆகையால் நாம் சத்தியத்துக்குதவியாளர்களா
யிருக்கும்படிக்கு, இப்படிக்கொத்தவர்களைச் சேர்த்
துக்கொள்ளக் கடனாளிகளாயிருக்கிறோம்.
௯. சபைக்கு எழுதினேன்; ஆனாலவர்களில் தலை
மையாயிருக்க விரும்புகிற தியோத்திரேப்பே எங்களை ஏற்
றுக்கொள்ளான்.
௰. ஆனபடியினாலே நான் வந்தால், அவன் நமக்கு
விரோதமாய்ப் பொல்லாத வார்த்தைகளாய் அலப்பி
செய்துவருகிற கிரியைகளை நினைத்துக்கொள்ளுவேன்
அவன் அதுக்குப் போதுமென்றிராமல், தானும் சகோ
தரரை ஏற்றுக்கொள்ளாதிருக்கிறான்; ஏற்றுக்
கொள்ளமனதாயிருக்கிறவர்களையுந் தடுத்துச்
சபைக்குப் புறம்பே தள்ளுகிறான்.
௰௧. பிரியமானவனே, நீ பொல்லாப்பானதை
அல்ல, நலமானதைப் பின்பற்று. நன்மைசெய்
கிறவன் பராபரனாலே உண்டாயிருக்கிறான்; பொல்
லாப்புச்செய்கிறவனோ பராபரனைக் கண்டதில்லை.
* ௧. யோவ. ௩: ௬.
௰௨. தேமேத்திரியு எல்லாராலுஞ் சத்தியத்தாலுந்
நற்சாட்சி பெற்றான். நாங்களுஞ் சாட்சிகொடுக்
கிறோம்; எங்கள் சாட்சி மெய்யென்றறிவீர்கள்.
௰௩. * எழுத அநேகங்காரியங்கள் எனக்கிருந்தது,
ஆனால் மையினாலும் இறகினாலும் அதுகளை உனக்
கெழுத மனதாயிராமல்;
* ௨. யோவ. ௰௨. வசனம்.
௰௪. சீக்கிரத்துக்குள்ளே உன்னைப் பார்க்கலா
மென்றிருக்கிறேன்; அப்போது முகமுகமாய்ப்
பேசுவோம்.
௰௫. உனக்குச் சமாதானம்; சிநேகிதர் உன்னை வின
வுகிறார்கள். சிநேகிதரைப் பேர்ப்பேராக வினவு.

அப்போஸ்தலனாகிய

யூதாவின் பொதுவான

நிருபம்.

எத்தருக்கெச்சரிக்கையாயிருக்கவும், சுத்த
போதகத்திலும் நடக்கையிலும் நிலைவரமாயிருக்
கவும் எழுதப்பட்டது.

யேசுக்கிறிஸ்துவினுடைய * ஊழியக்காரனாகிய யூதா
வென்னும் யாக்கோபின் சகோதரன் பிதாவாகிய பரா
பரனால

பரிசுத்தமாக்கப்பட்டவர்களும் காக்கப்பட்டவர்களுமாகிய அழைக்கப்பட்டவர்களுக்கு எழுதுகிறதாவது: * ரோ. ௧: ௭.

௨. இரக்கமும் சமாதானமும் சினேகமும் உங்களுக்குப் பெருகக்கடவது.

௩. பிரியமானவர்களே, பொதுவான இரட்சிப்பைக் குறித்து உங்களுக்கு எழுத வெகு ஜாக்கிரதையாயிருக்கையில் பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்துக்காக நீங்கள் போராடவேண்டுமென்று உங்களுக்குப் புத்தியுண்டாக்குகிறது அவசியமாய்க் கண்டது.

௪. ஏனென்றால் நமது பராபரனுடைய கிருபையை * காமவிகாரமாகப் பிரட்டி, ஏகநாதரான ஆண்டவராகிய பராபரனையும் நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவையும் * * மறுதலிக்கிற பக்தியற்ற சில மனுஷர்கள் பக்கவழியாய் நுழைந்தார்கள்; அவர்கள் இந்த ஆக்கினைக்குள்ளாகிறவர்களென்று பூர்வகாலத்திலே எழுதியிருக்குது.

* கலா. ௫: ௰௩. * * ௨. பேது. ௨: ௧.

௫. ஆனாலுஞ் சனங்களை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணி இரட்சித்த கர்த்தர் பிற்பாடு விசுவாசியாதவர்களை அழித்தாரென்று, நீங்கள் முன்னே அறிந்திருக்கிறதை உங்களுக்கு நினைப்பூட்ட மனதாயிருக்கிறேன். * ௧. கொ. ௰: ௧—௫.

௬. தங்கள் ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்கள் சொந்த வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும் அவர் மகாநாளின் ஆக்கினைத்தீர்ப்புக்கென்று நித்திய கட்டுகளினாலே அந்தகாரத்தில் அடைத்துவைத்தார்.

* ௨. பே. ௨: ௪.

௭. * அப்படியே சோதோம் கொமோரா என்பவைகளும் அவைகளைச் சுற்றியிருந்த பட்டணங்களும் இவர்களைப்போல் விபசாரம்பண்ணி அந்நிய மாம்சத்தைத் தொடர்ந்து, நித்திய அக்கினியின் ஆக்கினையை அனுபவித்துத் திருஷ்டாந்தரமாகக் கிடக்குது.

* ௨. பே. ௨: ௬.

௮. அப்படியே இந்தச் சொப்பனக்காரரும் மாம்சத்தை அசுசிப்படுத்திக்கொண்டு, கர்த்தத்துவத்தை அசட்டைபண்ணி அதிகாரங்களைத் தூஷிக்கிறார்கள்.

௯. பிரதான தேவதூதனாகிய * மிகாயேல் மோசேயினுடைய சரீரத்தைக் குறித்துப் பிசாசோடே தர்க்கித்துப் பேசினபோது, தூஷணத்தீர்ப்பை அவன்மேலிட்டுத் துணியாமல்: கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராகவென்று சொன்னான்.

* தானி. ௰: ௰௩. சகரி. ௩: ௨. அப். ௰௨: ௭.

௰. * இவர்களோவென்றால் தாங்கள் அறியாதிருக்கிறவைகளைத் தூஷிக்கிறார்கள்; சுபாவ

மாய * புத்தியற்றசீவனங்களைப்போல அறிந்திருக்கிறார்களோ அதுகளிலேகெட்டுக்கிறார்கள்.

உ. பேது. உ: ௰௨.

௰௧. அவர்களுக்குஐயோ. ஏனென்றால் * காயீனுடையவழியிலே நடந்து/ ** பாலாமுடையகூலிக்காக மோசத்திலேஉருண்டுவிழுந்து/ *** கோரேசனெதிர்த்துப்பேசினபாவத்துக்குள்ளாய்க்கெட்டார்கள்.

* க. மோ. ௪: ௮. ** உ. பேது. உ: ௰௫. ***

௪. மோ. ௰௬: ௧. ௩௨.

௰௨. * இவர்கள்உங்கள்அசிநேகவிருந்துகளிலேகூடவிருந்துண்டு/ பயமில்லாமல்தங்களைமேய்க்கிறவர்களும் ** காற்றுகளாலேஅலைப்படுகிறதண்ணீரில்லாமேகங்களும்/ உலர்ந்துகனியற்று இரண்டுவிசைசெத்துவேர்களற்றமரங்களும்/

உ. பேது. உ: ௰௩. ௰௪. ** உ. பேது. உ: ௰௭.

௰௩. * தங்கள்சொந்தவெட்கங்களை நுரைதள்ளுகிற அமளியான சமுத்திரஅலைகளும்/ தங்களுக்கென்றைக்கும்வைத்திருக்கிற காரிருளின் அந்தகாரத்துக்குப் போகிறவைகளாகிய நட்சேத்திரங்களுமாயிருக்கிறார்கள், * ஏசா. ௫௭: ௨௰.

௰௪. ஆதாம்முதலாக்கொண்டேழாந்தலைமுறையான * ஏனோக்குமிவர்களைக்குறித்துமுன்னறிவித்தது: இதோகர்த்தர் எல்லாரிலேயும் நியாயத்தீர்வையிடவந்தருளுமவர்களிலே பக்தியற்றவர்கள் எல்லாரும் அவர்கள்பக்தியற்றுச்செய்த எல்லாக்கிரியைகளினிமித்தமும்/ தமக்கு விரோதமாய்ப்பக்தியற்றபாவிகள்பேசின எல்லாக்கடினவார்த்தைகளினிமித்தியமாகவுங்கண்டிப்பதற்கும்/

* க. மோ. ௫: ௰௮.—௨௪.

௰௫. * தம்முடையதிரளானசேனைகளாகிய பரிசுத்தவான்களோடேகூடவருகிறாரென்றான்.

* தானி. எ: ௰. மத். உ௫: ௩௧.

௰௬. இவர்கள்முறுமுறுப்புக்காரருமுறையிட்டிருக்கிறவர்களுந்தங்களிச்சைகளின்படிநடக்கிறவர்களுமாயிருக்கிறார்கள். இவர்களுடையவாய் * மகா மேட்டிமையானதுகளைப்பேசி/ பொழிவுக்காகமுகங்களைஆச்சரியமாய்ப்பார்க்கிறார்கள்.

* உ. பேது. உ: ௰௮.

௰௭. நீங்களோ/ பிரியமானவர்களே! நம்முடைய கர்த்தராகியயேசுக்கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலராலேமுன்சொல்லப்பட்டவார்த்தைகளை நினைவுகூருங்கோள்.

௰௮. * கடைசிக்காலத்திலேதங்கள் அக்கிரமஇச்சைகளின்படி நடக்கிறசக்கந்தக்காரர் இருப்பார்களென்றுஉங்களுக்குச்சொன்னார்களே.

* உ. தீமோ. ௩: ௧—௫.

௰௯. பேதகங்களாகப்பிரிந்துகொண்டு/ ஆவியில்லாதருக்கிறஜென்மசுபாவத்தார்இவர்களேதான்.

௨௰. நீங்க

௨௰. நீங்களோவென்றால், பிரியமானவர்களே, உங்களை உங்கள் மகாபரிசுத்த விசுவாசத்தின் மேலே ஸ்தானமாகக் கட்டிக்கொண்டு பரிசுத்த ஆவிக்குள்ளாய்ச் செபம்பண்ணி,

௨௧. உங்களைப் பராபரனுடைய சினேகத்திலே பெலப்படுத்தி நித்திய சீவனை அடையும்படி நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினுடைய இரக்கத்துக்குக் காத்திருங்கோள்.

௨௨. நீங்கள் வித்தியாசம் பண்ணி, * சிலருக்கு இரங்கி, * கலா. ௬: ௧.

௨௩. சிலரையோவென்றால் பயத்தோடே அவர்களை அக்கினியிலிருந்து இழுத்து இரட்சித்து, மாம்சத்தாலே கறைப்பட்ட அங்கியையும் பகையுங்கோள். * ஆமோ. ௪: ௰௧.

௨௪. ஆனால் உங்களை இடறாமல் காக்கவும், மாசறு மகிழ்ச்சியாகத் தம்முடைய மகிமையின் சன்னதியிலே நிறுத்தவும் வல்லவரும்,

௨௫. * ஏகஞானியாய்த் தானுள்ளவருமாயிருக்கிற நம்முடைய ரட்சகரான பராபரனுக்குக் கனமும் மகத்துவமும் பெலனும் அதிகாரமும் இப்போதும் எல்லாக் காலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

* ரோ. ௰௬: ௨௭.

தேவவாசகனாகிய
யோவானுக்குண்டான
ரகசியஅறிவிப்பு.
௧. அதிகாரம்.

இந்தரகசியஅறிவிப்பின்முகவுரை

சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியதுகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிப்பதற்கு, பராபரன் யேசுக்கிறிஸ்துவுக்குக் கொடுத்ததும், இவர் தம்முடைய தூதனைக்கொண்டு தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்குக் குறிப்பாய்க் காட்டி அனுப்பினதுமான ரகசிய அறிவிப்பு.

௨. இவன் பராபரனுடைய வசனத்தையும் யேசுக்கிறிஸ்துவினுடைய சாட்சியையும், தான் கண்டவையெல்லாவையுஞ் சாட்சியாயொப்புவித்தான்.

௩. * இந்தத் தீர்க்கதரிசனத்தின் வசனங்களை வாசிக்கிறவனும் கேட்கிறவர்களும், அதிலே எழுதியிருக்கிறதுகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், ஏனென்றால் காலம் சமீபமாயிருக்கிறது.

* ௨௨: ௭.

௪. யோவான் ஆசியாவிலுள்ள * ஏழு சபைகளுக்கெழுதுகிறதாவது: ** இருக்கிறவரும இருந்தவரும வருகிறவருமாயிருக்கிறவராலும், அவர் ஆசனத்துக்கு முன்பாகயிருக்கிற ஏழு ஆவிகளாலும், * ௰௧. ௨௪.

** ௨. மோ. ௩: ௰௪.

௫. உண்மையுள்ள சாட்சியும், * மரித்தோரிலிருந்து முதலாய்ப்பிறந்தவரும், ** பூமியினராசாக்களுக்கதிபதியுமாகிய யேசுக்கிறீஸ்துவினாலும உங்களுக்குக் கிருபையுஞ் சமாதானமும உண்டாகக்கடவது; *** நம்மைச் சினேகித்து நம்மைத் தம்முடைய இரத்தத்திலே பாவங்களறக்கழுவி, * கொலோ. ௧: ௰௮. ** சங்கீ. ௮௯: ௨௭.

*** கலா. ௨: ௨௰.

௬. நம்மைத் தம்முடைய பிதாவாகிய பராபரனுக்கு முன்பாக * இராசாக்களும ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும பெலனும என்றென்றைக்குமுள்ள சதக்காலங்களிலுமுண்டாவதாக, ஆமென்.

* ௧. பேது. ௨: ௯.

௭. இதோ, * மேகங்களோடே வருகிறார், அப்போ கண்யாவும ** அவரைக் குத்தினவர்களும அவரைக் கண்டு, பூமியின் கோத்திரங்களெல்லாம அவர்மேல் புலம்புவார்கள், ஆம், ஆமென். * மத். ௨௪: ௩௰.

** சகரி. ௰௨: ௰.

௮. * நான் அல்பாவும் ஒமேகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேனென்று, இருக்கிறவரும இருந்தவரும வருகிறவருமாகிய சருவத்துக்கும வல்ல கர்த்தர் விளம்புகிறார். * ஏசா. ௪௧: ௪. ௪௪: ௬.

கர்த்தராகிய யேசுக்கிறீஸ்து யோவானுக்குத் தெரிசனையாகி, ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கு நிருபங்களை யெழுதக்கற்பித்தது.

௯. உங்கள் சகோதரனும் யேசுக்கிறீஸ்துவின் உபத்திரத்திலுமராட்சியத்திலும் பொறுமையிலும் உடன் பங்காளனுமாயிருக்கிற யோவானாகிய நான், பராபரனுடைய வசனத்தினிமித்தியமும யேசுக்கிறீஸ்துவினுடைய சாட்சியினிமித்தியமும பத்மு என்னப்பட்ட தீவிலிருந்தேன்.

௰. கர்த்தருடைய நாளிலே ஆவிக்குள்ளானேன், அப்போ எனக்குப் பின்னாலே:

௰௧. நான் அல்பாவும ஒமேகாவும் முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேனென்றும, நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்திலெழுதி, ஆசியாவிலிருக்கிற எபேசு, சிமறனா, பெர்கமு, தியத்திரா, சர்தே, பிலதெல்பியா, லவோதிக்கேயா பட்டணங்களிலுள்ள ஏழு சபைகளுக்கனுப்பென்றும உரைக்கிற எக்காளசத்தம்போலொத்த மகாசத்தத்தைக் கேட்டேன்.

௰௨. அப்போ என்னுடனே பேசின சத்தத்தைப் பார்க்கத் திரும்பினேன், திரும்பினபோது, * ஏழு பொன் விளக்குத்தண்டுகளையும்,

* ௨. மோ. ௨௫: ௩௭.

௰௩. ஏழுவிளக்குத்தண்டுகளின்நடுவே நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்து * ஒருமனுஷகுமாரனுக்கொப்பானவரைக்கண்டேன்.

* எசேக். ௧: ௨௬.

௰௪. அவருடைய சிரசும் மயிருமோ வெளுத்த வெண்மையான பஞ்சையும் உறைந்த மழையையும் போலே வெண்மையாகவும், * அவருடைய கண்கள் அக்கினிச்சுவாலைப்போலவும், * ௰௯: ௰௨.

௰௫. அவருடைய கால்கள் உலைக்களத்திலே காய்ந்த செம்புக்கொத்ததாகவும், * அவருடைய சத்தம் பலதண்ணீர்களின் இரைச்சலைப்போலவும் இருந்தது. * ௰௪: ௨.

௰௬. தம்முடைய வலதுகரத்திலே ஏழுநட்சத்திரங்களை ஏந்திக்கொண்டிருந்தார். * அவர் வாயிலிருந்து இருபுறமுங்கருக்குள்ள கூர்மையான பட்டயம் புறப்பட்டது; ** அவருடைய முகம் சூரியன் தன் வல்லமையாய்ப் பிரகாசிக்கிறதுபோலிருந்தது.

* ௰௯: ௰௫. எபேசி. ௬: ௧௭. எபி. ௪: ௰௨.
** ௰௬. ௰௭: ௨.

௰௭. நான் அவரைக்கண்டபோது, மரித்தவனைப்போல அவருடைய பாதங்களில் விழுந்தேன்; அப்போது அவர் தம்முடைய வலதுகரத்தை என்மேல் வைத்து, எனக்குச் சொன்னதாவது: பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவருமாய் உயிருள்ளவருமாயிருக்கிறேனும்.

௰௮. மரித்திருந்தேனும், ஆனால் இதோ, என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிழைத்திருக்கிறேனும். ஆமென். நரகம் மரணமென்பதுகளின் திறவுகோல்களையுடையவர்.

௰௯. நீ கண்டதுகளையும், இருக்கிறதுகளையும், இதுகளுக்குப் பின்பாடு சம்பவிக்கப்போறதுகளையும் எழுது.

௨௰. நம்முடைய வலதுகரத்திலே நீ கண்ட ஏழுநட்சத்திரங்களின் இரகசியத்தையும், ஏழுபொன்விளக்குத்தண்டுகளின் செய்தியையுந்தானே. அந்த ஏழுநட்சத்திரங்கள் ஏழுசபைகளினுடைய தூதராயிருக்கிறார்கள்; நீ கண்ட அந்த ஏழுவிளக்குத்தண்டுகளோவென்றால் ஏழுசபைகளாயிருக்குது. * மலக். ௨: ௭.

௨. அதிகாரம்.

முதலாம்நிருபம்.

எபேசுச்சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது: * ஏழுநட்சத்திரங்களைத் தம்முடைய வலதுகரத்திலே ஏந்தியிருந்து, ஏழுபொன்விளக்குத்தண்டுகளின் நடுவே உலாவுகிறவர் சொல்லுகிறதாவது: * ௧: ௰௬. ௨௰.

௨. உன் கிரியைகளையும் உன் பிரயாசத்தையும் உன் பொறுமையையும், நீ பொல்லாதவர்களைப் பொறுக்கக் கூடாததையும், அப்போஸ்தலரா

யிராவிட்டாலுந் தங்களை அப்போஸ்தலரென்று சாற்றுகிறவர்களை நீ சோதித்து அவர்களைப் பொய்யராகக் கண்டுபிடித்ததையும்,

௩. நீ சுமந்து கொண்டிருக்கிறதையும், நீ பொறுமையாயிருக்கிறதையும், நீ நம்முடைய நாமத்தினிமித்தம் இளைக்காமல் மிகப் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேம்.

௪. ஆனாலும் உன் முதலாஞ் சிநேகத்தை விட்டாயென்று உன்மேல் நமக்குக் குறையுண்டு.

௫. ஆகையால் எங்கேயிருந்து விழுந்தாயென்று நினைத்து, குணப்பட்டு, முதற் கிரியைகளைச் செய், இல்லாவிட்டால், நாமுனக்குச் சீக்கிரமாய் வந்து, நீ குணப்படாதே போனால், உன் விளக்குத்தண்டை அதின் ஸ்தானத்தைவிட்டுப் பேர்ப்பேம்.

௬. நாமும் பகைக்கிற நிக்கொலாயர் மதக்காரருடைய கிரியைகளை நீ பகைக்கிறதோ உனக்குண்டு.* ௰௫. வச.

௭. ஆவி சபைகளுக்குச் சொல்லுகிறதைக் கேட்கக் காதுள்ளவன் கேட்கக்கடவான்; ஜெயங்கொள்ளுகிறவனுக்குப் பராபரனுடைய *பரதீசின் நடுவிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்போமென்றெழுது. * ௨௨: ௨. ௧.மோ. ௨:௯.

ரெண்டாம் நிருபம்.

௮. சிமிர்னாச் சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது: *மரித்திருந்து பிழைத்த முந்தினவரும் பிந்தினவருமானவர் சொல்லுகிறதாவது: * ௧: ௰௭. ௰௮.

௯. உன் கிரியைகளையும் உபத்திரவத்தையும், ஐசுவரியமுள்ள உனக்கிருக்கிற தரித்திரத்தையும், தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல் சாத்தானுடைச் சபையாயிருக்கிறவர்களின் தூஷணத்தையும் அறிந்திருக்கிறேம்.

௰. *நீ படப்போகிறபாடுகளுக்குக் கொஞ்சமும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும்படிக்குப் பிசாசு உங்களிற் சிலரைக் காவலிற் போடுவதுண்டு, நீங்கள் பத்துநாள் உபத்திரமனுபவிப்பீர்கள், மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்போ உனக்கு *சீவனுடைய கிரீடத்தைத் தருவேம். * மத். ௰: ௨௨. * யாக. ௧: ௰௨.

௰௧. ஆவி சபைகளுக்குச் சொல்லுகிறதைக் கேட்கக் காதுள்ளவன் கேட்கக்கடவான்: எவன் ஜெயங்கொள்ளுகிறானோ அவன் *இரண்டாம் மரணத்தாற் சேதப்படானென்றெழுது: * ௨௰: ௰௪. ௨௧: ௮.

மூன்றாம் நிருபம்.

௰௨. பெர்கமு சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது: *இருபுறமுங் கருக்குள்ள கூர்மையான பட்டயத்தையுடையவர் சொல்லுகிறதாவது:

* ௧: ௰௬.

௰௩. உன்

௰௩. உனகிரியைகளையும, நீ சாததானுடை* ஆசன மிருக்குமிடத்தில குடியிருக்கிறதையும, நீ நம்முடை நாமததைப்பற்றிக கொணடிருக்கிறதையும, சாத தான குடியிருக்கிற உங்களிடத்தே நம்முடைய உணமை யுளள சாடசியாகிய அந்திப்பா கொலலப்பட்ட நாளக ளிலும நீ நம்முடைய மேலுள்ள விசுவாசத்தை மறுத லியாமலிருந்ததையும அறிந்திருக்கிறோம. * ௰௩: ௨.

௰௪. ஆனாலவிக்கிரகங்களுக்குப்படைத்ததுகளைப போசிப்பதற்கும வேசித்தனமபணணுவதற்கும இஸ ரவேலபுத்திரர்முனபாக இடறலை வைக்கப் பாலா க்குப் போதித்த பாலாமுடைய போதகத்தை பிடித் திருக்கிறவர்கள அங்கே உனக்குணடாகிறது, உன மேலநமக்குக் கொஞ்சங்குறைகளுணடு. * ௪. மோ. ௨௫: ௧—௩. ௩௧: ௰௬.

௰௫. அப்படியே நிக்கொலாமத்தாருடைய போதகத்தைப்பிடித்திருக்கிறவர்களும உனக்குணடு அதைப்பகைக்கிறோம. * ௬. வச.

௰௬. இனப்படு, இலலாவிட்டால நாம உனக்கு சீக்கிரமாய வந்து,* நம்முடைய வாயின பட்டையத்தால அவர்களோடே யுத்தமபணணுவோம. * ௰௯: ௰௫.

௰௭. ஆவி சபைகளுக்குச் சொலலுகிறதைக் கேட்கக் காதுளளவன கேட்கக்கடவான: ஜெயங்கொளளு கிறவனுக்கு நாம ஒளிப்பிடமான* மனனாவிலே போசிக்கக்கொடுத்து, அவனுக்கு வெணமையான குறிக்கல லையும, இந்தக்கலலின மேலாய எழுதப்பட்டதும பெறுகி றவனேயலலாமல ஒருவனும அறியாததுமான புதுநா மத்தையுங்கூடக் கொடுப்போம என்கிறார என்றெழுது. * யோவா. ௬: ௫௰. ௫௧.

நாலாமநிருபம.

௰௮. தீயாத்திரா சபையின தூதனுக்கு நீ எழுத வேணடியது: * அக்கினிக்கொழுந்தையொத்த கணக ளுஞ் சொக்காவெணகலத்தையொத்த காலகளுமுளள தேவ குமாரன சொலலுகிறதாவது: * ௧: ௰௪. ௰௫.

௰௯. உன கிரியைகளையும உன சிநேகத்தையும உன ஊழியத்தையும உன விசுவாசத்தையும உன பொறுமை யையும, முந்தினதுகளிலும அதிகமான உன பிந்தின கிரியைகளையும அறிந்திருக்கிறோம.

௨௰. ஆனாலும தன்னைத் தீர்க்கதரிசினி என்று சொல லுகிற* யேசபேல என்கிற ஸ்திரீ போதகம்பண ணுகிறதையும, நம்முடைய ஊழியக்காரரை வேசித் தனமபணணவும விக்கிரகங்களுக்குப் படைத்ததுக ளைப்போசிக்கவுமாததுகளையும் போதித்திருக்கி றயானது, உன மேல நமக்குக் கொஞ்சங்குறைக ளுணடு. * ௧. இராசா. ௰௬: ௩௧.

௨௧. அவளுக்குத்தன வேசித்தனத்தை விட்டுக்குணப் படத்தவணை கொடுத்தோம, ஆனாலுங் குணப்படாதே போனாள.

௨௨. இதோ நாம அவளைக் கட்டிலாகக்கிடையாகவும,* அவளுடனே விபசாரம பணணினவர்களை, தங்கள

க்ஷிணைகளை அவர்கள் விட்டுக் கொண்டதேயோ
ஜென்மத்தை உபத்திரத்திலே மட்டோடே / * யஅ: ௬.

௨௩. அவனிடத்திலே கொல்லவேண்டுமென்று
போகிறோம். அப்போது ... நாம்
உன்னிடத்திலே ... நம்பிக்கையும் ...
... உங்களுக்கும் அவனுக்கும் உங்
கள் க்ஷிணைகளைப்படியே கொடுப்போம்: * சங்கீ.
எ: ய.

௨௪. ஆனால் உங்களுக்கும் தியாகத்தினாலே நேர்ந்த
போதக்குணத்துக்குக் கொண்டாடம். ஆதலால் ...
... அவர்களுக்கும் நாமே சொல்லுகிற நாம்
உங்கள் மேலே வேண்டியவைகளைப் பெறுவோம்.

௨௫. * உங்களுக்குண்டாகாதவைகளையோ நம்முடைய
மேட்டிமைக்குக் கேள். * ௩: யக.

௨௬. எவனும் வேண்டுமென்று ... நம்முடைய க்ஷி
ணைகளைக் கொண்டு ... உனக்கு / * நம்
முடைய ... சாதி
களுமே அதிகாரங்கொடுப்போம். * சங்கீ. ௨: அ. ௬.

௨௭. இயக்குவிக்கும் பேரால், தோஷத்துக்குப்பின்
அவனை நேசிக்கக்கூடாதவர்கள் ஆனவர்கள்.

௨௮. அவனுக்குவிட்டு வெளியேற்றுவோம்.

௨௯. சாதுவானவன் / ஆவிக்குப்பின் ... செல்லு
கிறதே தென்றுக் கேட்டுக்கொண்டவோனோ வேழுந்து.

௩. அதிகாரம்.

ஐந்தாம் நிருபம்.

சர்வேசுரனுக்குக் கோதீ எழுதவேண்டியது:
பாவம் ... யும். * ஏழுத் ...
... சொல்லுகிறது: உயிரோ
டிருக்கிறவர்களுக்கு ... உனக்குத்தான் ... செத்துவ
இருக்கிற ... அவனோடுகூட ... ம்!!

* க: ௬. * * ௧: யகூ:

௨. நீ முழித்திருக்கிறவனுக்கு, ... பேர்
வாயுந்திப்ப படிக்குப் ஏதொன்றில் நாம் உன் க்ஷிணைக
ளைப் பாவங்களுக்கு முன்பாக நினைத்துக் கொள்ளக்
கண்டதில்லை.

௩. ஆகையால் நீ எப்படி அகப்பட்டுச் சேழுவிப்பஞ்
... நீ அவனிடத்தில் ... கொண்டு
* இருப்பாய். நீ முழித்திராமலே போனாலும் * * திரு
டனைப்போல உன்மேலே வருவோம். நாம் உன்
மேலே வரும் வேளையை அறியாதிருப்பாய்.

* ௪: ௫. * * மகூ. ௨௪: ௬௩. க. தெச. ௫: ௨.

௪. ... தங்கள் வஸ்திரங்களைக் கறைப்படுத்தாதிருக்
கிற கொஞ்சப்பேர் உனக்கு சர்தேயிலுமுண்டு; அவர்
கள் நம்முடனே வெண்மையுடைதரித்து நடப்பார்கள்;
ஏனெனில் அதுக்குப் பாத்திரராயிருக்கிறார்கள்.

௫. எவன்

௫. ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவன் வெண்வஸ்திரங்களைத் தரிப்பிக்கப்படுவான், அவனுடைய நாமத்தை நான் ஜீவனுடைய புஸ்தகத்திலே கிறுக்கிப்போடாமல் ** அவனுடைய நாமத்தை நம்முடைய பிதாவின் முன்பாகவும் அவருடைய தூதர்கள் முன்பாகவும் அறிக்கைபண்ணுவேன். * லூ. ௰௨. ** மத். ௰: ௩௨.

௬. காதுள்ளவனெவனோ ஆவி சபைகளுக்குச் சொல்லுகிறதைக் கேட்கக்கடவானென்றெழுது.

ஆறாம் நிருபம்.

௭. பிலதெல்பியா சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது; தாவீதின் திறவுகோலையுடையவரும், பூட்டக்கூடாமல் திறக்கிறவரும், திறக்கக்கூடாமல் பூட்டுகிறவருமாகிய பரிசுத்தமும் ** சத்தியமுமானவர் சொல்லுகிறதாவது: * யெசா. ௨௨: ௨௨.

** ௧: ௫. யோவா. ௰௪: ௬.

௮. உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், இதோ உனக்கு முன்பாகத் திறக்கப்பட்ட வாசலை வைத்தேன், அதை ஒருத்தரும் பூட்டக்கூடாது; ** உனக்குக் கொஞ்சம் பெலனிருந்தும் நீ என் நாமத்தை மறுதலியாமல் என்னுடைய வசனத்தைக் கைக்கொண்டாய். * லூ. ௰௨: ௩௨.

௨. கொரி. ௨: ௭.

௯. இதோ, தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல் பொய் சொல்லுகிறவர்களான சினகோகா சாத்தானுடைய ஆலயத்தாரில் சிலரை உனக்குத் தருகிறேன்; இதோ அவர்கள் உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணியவும், நான் உன்னைச் சினேகித்தேனென்று அறியவும் பண்ணுவேன். * ௨: ௯.

௰. நீ என்னுடைய பொறுமையின் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, உன்னை நான் பூமியின் மேல் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படிக்கு சகத்தின் மேலும் வரப்போகும் சோதனையின் வேளைக்கு விலக்கிக் காப்பேன்.

௰௧. இதோ, சீக்கிரமாய் வருகிறேன், ஒருவரும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பிடித்துக்கொண்டிரு. * ௨௨: ௰௨. ** ௨. தீமோ. ௪:

௰௩. ௰௪.

௰௨. எவன் வெல்லுகிறானோ அவனை நான் நம்முடைய பராபரனுடைய தேவாலயத்தில் ஸ்தம்பமாக்குவேன்; அவன் மேலே நம்முடைய பராபரனுடைய நாமத்தையும், நம்முடைய பராபரனண்டை வானத்திலிருந்திறங்குகிற ** புதிய எருசலேமாகிய நம்முடைய பராபரனுடைய பட்டணத்தின் நாமத்தையும், நம்முடைய புதிய நாமத்தையும் எழுதுவேன். * ௨௨: ௪.

** ௨௧: ௨. ௰.

௰௩. காதுள்ளவனெவனோ ஆவி சபைகளுக்குச் சொல்லுகிறதைக் கேட்கக்கடவானென்றெழுது.

ஏழாம் நிருபம்.

௰௪. லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது: உண்மையுஞ் சத்தியமுமான சாட்சியும் * பராபரனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாகிய ஆமெனானவர் சொல்லுகிறதாவது: * ௧: ௫.
** கொலோ. ௧: ௰௫—௰௭.

௰௫. நீ குளிருமல்ல அனலுமல்லவென்றுன் கிரியைகளை அறிவேன்; நீ குளிராகிலும் அனலாகிலும் இருந்தால் நலமாயிருக்கும்.

௰௬. இப்படி நீ குளிருமாயிராமல் அனலுமாயிராமல் வெதுவெதுப்பாயிருக்கிறபடியினாலே உன்னை என் வாயினின்று புறம்பாக வாந்திபண்ணிப்போடுவேன்.

௰௭. ஏனென்றால்: ஐசுவரியவானாயிருக்கிறேன், திரவியசம்பன்னனானேன், எனக்கு ஒன்றுங் குறைவில்லையென்று நீ சொல்லுகிறபடியினாலே, நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும் பரிதபிக்கப்படத்தக்கவனும் தரித்திரனும் குருடனும் நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாதபடியால்,

௰௮. நீ ஐசுவரியவானாகும்படிக்கு, நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், * உன் நிர்வாணமாகிய வெட்கம் வெளியரங்கமாகாமல் நீ உடுத்திக்கொள்ளும்படிக்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே * * கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம் போடவும் உனக்கு யோசனை சொல்லுகிறேன்.
* ௰௯: ௮. * * யோசு. ௫௫: ௧.

௰௯. * நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு.
* யோபு. ௫: ௰௭.

௨௰. இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் உட்பிரவேசித்து அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான். * யோவா. ௰௪: ௨௰௩.

௨௰௧. நான் ஜெயங்கொண்டு என் பிதாவோடே அவருடைய சிங்காசனத்திலே உட்கார்ந்ததுபோல, * ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கும் என்னோடே என்னுடைய சிங்காசனத்திலே உட்காரும்படிக்கு அருள் செய்வேன். * மத். ௰௯: ௨௰௮.

௨௰௨. ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவனென்றெழுதென்றார்.

௪. அதிகாரம்.

முத்திரிக்கப்பட்டிருக்கிற புஸ்தகத்தைத் திறக்கும்படிக்கு ஆட்டுக்குட்டி அருகிலே வருகிறதும், முன்னுரைக்குக் காட்சிகள் — முதலாஞ் சாட்சியும் கேர்ச்சனை.

இவைகளுக்குப்பின்பு, இதோ, வானத்திலே திறக்கப்பட்ட ஒரு வாசலைக் கண்டேன்: நான் முந்திக் கேட்டதாயிருந்த எக்காளசத்தம் போன்ற சத்தம் என்னோடே பேசக்கேட்டேன்; அது: முந்தினசத்

மானது: இங்கே ஏறிவா, இதுகளுக்குப் பிற்பாடு சம்பவிக்கவேண்டியதுகளை உனக்குக் காண்பிப்பேனென்றுரைத்தது. * க: யக.

௨. உடனே * ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது இதோ வானத்தில் ஒரு ஆசனம் வைக்கப்பட்டிருந்தது; அந்த ஆசனத்தின்மேல் ** ஒருத்தர் உட்கார்ந்திருந்தார்.

* க: ய. ** எசா. ௬: க. எசேக். க: உ௬.

௩. உட்கார்ந்திருந்தவர் பார்வைக்கு யஸ்பிக்கல்லுக்கும் செம்பக்கல்லுக்கும் ஒப்பாயிருந்தார்; ஆசனத்தைச் சுற்றிப் பார்வைக்கு மரகதச்சாயலாகிய வானவில்லும்;

௪. ஆசனத்தைச் சுற்றி இருபத்துநாலு ஆசனங்களுமிருந்தது; அந்த ஆசனங்களின்மேலே * வெண்வஸ்திரங்களைத் தரிக்கப்பட்டிருக்கிறவர்களாய்ச் சிரசுகளின்மேலே பொற்கிரீடங்களுமானவர்களான இருபத்துநாலு மூப்பர் உட்கார்ந்திருக்கக்கண்டேன்.

௫. ஆசனத்திலிருந்து மின்னல்களுங் குமுறல்களும் சத்தங்களும் புறப்பட்டது; பராபரனுடைய ஏழாவிகளாகிய ஏழு தீவட்டிகள் ஆசனத்துக்கு முன்பாக எரிகிறதாயிருந்தது.

௬. ஆசனத்துக்கு முன்பாகப் படிகத்துக்கொப்பான கண்ணாடிக்கடலுமுண்டு; ஆசனத்தின் நடுவிலும் ஆசனத்தைச் சுற்றிலும் முன்னும் பின்னும் கண்களால் நிறைந்த * நாலு ஜீவன்களுமிருந்தது. * எசேக். க: ரு.

௭. * முதலாம் ஜீவன் சிங்கத்துக்கொப்பாகவும்; இரண்டாம் ஜீவன் கன்றுக்குட்டிக்கொப்பாகவும்; மூன்றாம் ஜீவன் மனுஷனைப்போல முகமுள்ளதாகவும்; நாலாம் ஜீவன் பறக்கிற கழுகுக்கொப்பாகவுமிருந்தது. * எசேக். க: ய.

௮. * நாலு ஜீவன்களிலும் ஒவ்வொன்றுக்கு ஆறு சிறகுகளுமுண்டு; அவைகளைச் சுற்றிலும் உள்ளும் புறம்பும் கண்களால் நிறைந்துமாயிருந்தது; ** இருந்தவரும் இருக்கிறவரும் வரப்போகிறவருமாயிருக்கிற சர்வத்துக்கும் வல்ல பராபரனாகிய கர்த்தர் *** பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று சொல்லிக்கொண்டே இரவும் பகலும் ஓய்விலாதிருந்தது. * எசா. ௬: ௨.

** க: ௮. *** எசா. ௬: ௩.

௯. ஆனால் ஆசனத்தின்மேல் உட்கார்ந்திருந்து என்றென்றைக்கும் சதாகாலங்களிலுமயிருக்கிறவருக்கு ஜீவன்கள் மகிமையையுங் கனத்தையும் ஸ்தோத்திரத்தையுஞ் செலுத்தும்போது;

௰. * இருபத்துநாலு மூப்பர் ஆசனத்தின்மேல் உட்கார்ந்தவர் முன்பாக விழுந்து; என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலுமயிருக்கிறவரைப் பணிந்து தங்கள் கிரீடங்களை ஆசனத்துக்கு முன்பாகப் போட்டு:

௰௧. ஆண்டவரே, மகிமையையுங் கனத்தையும் வல்லமையையுமடைந்துக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் தேவரீர் எல்லாத்தையுஞ் சிருஷ்டித்தீர்; உம்முடைய சித்தத்தினாலே அதுகள் உண்டாகிச் சிருஷ்டிக்கப்பட்டிருக்குதென்றார்கள்.

ரு. அதிகாரம்.

முத்திரிக்கப்பட்ட புஸ்தகத்தைத் தேவ ஆட்டுக்
குட்டி திறக்கிறவராக வெளிப்பட்டதும் அவர்
கொண்டாடப்படுமான தோத்திரம்.

அப்பால் உள்ளும் புறமுமாய் எழுதி ஏழு முத்திரைகளாலே முத்திரிக்கப்பட்ட ஒரு புஸ்தகத்தை நான் * ஆசனத்தின் மேலே உட்கார்ந்திருக்கிறவருடைய வலதுகரத்திலே கண்டேன்.
* ௪: ௨. ௩.

௨. புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரவான் ஆரென்று மகா சத்தத்தோடே கூப்பிடுகிற பலமுள்ள ஒரு தூதனைக் கண்டேன்.

௩. ஆனால் வானத்திலாகிலும் பூமியின் மேலாகிலும் பூமியின் கீழாகிலும் உள்ள ஒருவரும் புஸ்தகத்தைத் திறக்கவும் அதைப் பார்க்கவும் கூடாதிருந்தது.

௪. அப்பொழுது அந்தப் புஸ்தகத்தைத் திறந்து வாசிக்கவும் அதைப் பார்க்கவும் பாத்திரவானொருவனும் காணப்படாததினாலே நான் மெத்த அழுதேன்.

௫. * மூப்பரிலொருவன் என்னுடனே: அழாதே, இதோ ** யூதா கோத்திரத்தில் பிறந்த தாவீதின் வேருமாகிய சிங்கம் புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளைக் கழற்றவும் ஜெயங்கொண்டாரென்றான்.
* ௪: ௪. ** ௧. மோ. ௪௯: ௯. ௰.
ஏசா. ௰௧: ௧. ௰.

௬. அப்பொழுது இதோ, ஆசனத்துக்கும் நாலு ஜீவன்களுக்கும் நடுவிலும் மூப்பர்கள் நடுவிலும் ஏழு கொம்புகளும் பூமியெங்கும் அனுப்பப்பட்ட பராபரனுடைய * ஏழு ஆவிகளாகிய ஏழு கண்களுமுள்ள, அடிக்கப்பட்டவண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டியை நிற்கக் கண்டேன். * ௪: ௫.

௭. அவர் வந்து, புஸ்தகத்தை ஆசனத்தின் மேல் உட்கார்ந்திருக்கிறவருடைய வலதுகரத்திலே வாங்கினார்;

௮. அவர் புஸ்தகத்தை வாங்கினபோது, நாலு ஜீவன்களும் இருபத்துநாலு மூப்பரும் அவனவன் * சுரமண்டலங்களையும், ** பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கங்களால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்திருந்து, ஆட்டுக்குட்டிக்கு முன்பாக விழுந்து; * ௰௪: ௨. ** அ: ௩. ௪. சங். ௱௪௧: ௨.

௯. புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரத்திலும் பாஷையிலும் ஜனத்திலும் சாதியிலும் எங்களைப் பராபரனுக்கு * உம்முடைய இரத்தத்தினாலே கொண்டு; * ௧. பேது.
௧: ௰௯.

௰. * எங்களை எங்கள் பராபரனுக்கு முன்பாக ராசாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியின் மேலே அரசாட்சிபண்ணுவோமென்று, புதுப்பாட்டைப் பாடினார்கள். * ௧: ௬.

௰௧. அப்பொழுது நான் பார்த்து, ஆசனத்தையுஞ் சீவன்களையும் மூப்பர்களையுஞ் சுற்றிலும் அநேகந்தூதருடைய சத்தத்தைக் கேட்டேன்; * அவர்களுடைய இலக்கம் பதினாயிரங்கள் பதினாயிரங்களும் ஆயிரங்கள் ஆயிரங்களுமாயிருந்தது.

* தானி. ௭: ௰. எபி. ௰௨: ௨௨.

௰௨. அவர்கள் மகா சத்தத்துடனே: அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரமாயிருக்கிறதென்றார்கள்.

௰௩. * வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழேயிருக்கிற சகல சிருஷ்டிகளும் சமுத்திரத்தின் மேலிருக்கிறவைகளும், அவைகளிலுள்ள யாவும்: ஆசனத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டிக்கும் ஸ்தோத்திரமுங் கனமும் மகிமையும் வல்லமையும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக் கேட்டேன். * சங்கீ. ௬௯: ௩௪.

௰௪. நாலு சீவன்களும்: ஆமென் என்றது: இருபத்துநாலு மூப்பரும் விழுந்து, என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிழைத்திருக்கிறவரைப் பணிந்து கொண்டார்கள்.

௬. அதிகாரம்.

ஆறு முத்திரைகள் திறக்கப்பட்டது.

ஆட்டுக்குட்டியானது முத்திரைகளில் ஒன்றைத் திறக்கக் கண்டேன், அப்பொழுது நாலு சீவன்களில் ஒன்று: நீ வந்து பாரென்று இடிமுழக்கச் சத்தமாய் உரைக்கக் கேட்டேன்.

௨. அப்பொழுது, இதோ, ஒரு வெள்ளைக் குதிரையைக் கண்டேன், * அதின்மேலிருக்கிறவர் வில்லைப் பிடித்திருந்தார், அவருக்கு ஒரு கிரீடங் கொடுக்கப்பட்டது, அவர் செயக்கீர்த்தராகவுஞ் செயிப்பதற்காகவும் புறப்பட்டார்.

* ௰௯: ௰௧—௰௫. சங்கீ. ௪௫: ௫. ௬.

௩. அது இரண்டாம் முத்திரையைத் திறந்தபோது இரண்டாஞ் சீவன்: நீ வந்து பாரென்று உரைக்கக் கேட்டேன்.

௪. அப்பொழுது சிவப்பான வேறொரு குதிரை புறப்பட்டது, அதின்மேலிருக்கிறவனுக்கு, சமாதானத்தைப் பூமியிலிருந்தெடுத்துக்கொள்ளவும், சனங்கள் ஒருவரையொருவர் வெட்டவும் அதிகாரம் அளிக்கப்பட்டது, பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது.

௫. அது மூன்றாம் முத்திரையைத் திறந்தபோது மூன்றாஞ் சீவன்: நீ வந்து பாரென்று உரைக்கக் கேட்டேன். அப்பொழுது, இதோ, ஒரு கறுப்புக் குதிரையைக் கண்டேன், அதின்மேலிருக்கிறவன் * ஒரு தராசைத் தன் கையிலே பிடித்திருந்தான். * ௩. மோ. ௨௬: ௨௬.

௬. அப்போதொருபணத்துக்குக்கோதுமையொருபடியும், ஒரு பணத்துக்கு வாற்கோதுமை மூன்றுபடியும், எண்ணெயையுந் திராட்சரசத்தையுஞ் சேதப்படுத்தாதேயென்றும் நாலு சீவசெந்துக்களினிடையில் ஒரு சத்தத்தைக் கேட்டேன்.

௭. அது நாலாம் முத்திரையையுடைத்தபோது நாலாவதுசீவசெந்து: நீ வந்து பார் என்று சொல்லுகிற சத்தத்தைக் கேட்டேன்.

௮. அப்போதோ! மஞ்சள் நிறமான குதிரையைக் கண்டேன், அதின்மேலிருந்தவனுடைய நாமம் மரணம் அவனுக்குப்பின் பாதாளஞ் சென்றது. அவைகளுக்கு பூமியின் நாலத்தொரு பங்கைப் பட்டயத்தினாலும் பஞ்சத்தினாலும் சாவினாலும் பூமியினுடைய மிருகங்களாலுங் கொல்லும்படிக்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது.

௯. அது ஐந்தாம் முத்திரையையுடைத்தபோது பலிபீடத்தின் கீழ்நான் * பராபரனுடைய வசனத்தினிமித்தமும் தங்களுக்கிருந்த சாட்சியினிமித்தமுங் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைக் கண்டேன். * ௨௰: ௪.

௰. அவர்கள் மகாசத்தத்துடனே: பரிசுத்தமுஞ் சத்தியமுமுள்ள ஆண்டவரே! எந்தமட்டும் நியாயந்தீர்க்காமலும் பூமியின் மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தப்பழியை வாங்காமலும் இருப்பீரென்று கூப்பிட்டார்கள்.

௰௧. அப்போதவரவருக்கு * வெள்ளை நிலையங்கிகள் கொடுக்கப்பட்டு, தங்களைப்போலக் கொலையுண்கப்போகிறவர்களான உடன்வேலைக்காரருந் தங்களுடைய சகோதரருமானவர்கள் நிறையுமட்டும், அவர்கள் இன்னுங் கொஞ்சக்காலமட்டும் இளைப்பாறவேண்டுமென்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது. * ௩: ௫. ௭: ௯.

௰௨. அது ஆறாம் முத்திரையைத் திறக்கிறதைக் கண்டேன்; அப்போ பெரிதான பூமியதிர்ச்சியுண்டாச்சுது * * சூரியன் கம்பளியைப்போலக் கறுப்பாய்ச் சந்திரன் இரத்தம்போலாச்சுது. * ௰௩: ௰௪. ** அப்போ. ௨: ௨௰.

௰௩. வானத்தின் நட்சத்திரங்கள், பெருங்காற்றால் அசையுண்ட அத்திமரந் தன் காய்களை உதிர்க்கிறதுபோல பூமியிலே விழுந்தது.

௰௪. வானஞ் சுருட்டப்படுகிற புஸ்தகத்தைப்போல அகன்றுபோச்சு, எல்லா மலையுந் தீவுகளுந் தங்கள் ஸ்தானம் விட்டசைந்து போச்சுது.

௰௫. பூமியின் ராசாக்களும் பெரியோர்களும் ஐசுவரியவான்களுஞ் சேனைத்தலைவர்களும், பலவான்களும், எல்லா அடிமைகளும் எல்லாச் சுயாதீனிகளுமாகிய * பர்வதங்களின் குகைகளிலுங் கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு; * ஏசா. ௨: ௰௯.

௰௬. பர்வதங்களையுங் கன்மலைகளையும் பார்த்து: நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேலுட்கார்ந்தவருடைய முகத்துக்கும் ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்துக்கும் மறைத்துக்கொள்ளுங்கள்.

௰௭. ஏனெ

௰௭. ஏனென்றால் அவர்களுடைய கோபத்தின் பெரிதான நாள வந்தது; யார் நிற்கக்கூடுமென்றார்கள்.

ஏ. அதிகாரம்.

விசுவாசிகளான தேவனுடைய பக்தர் ஆகிய நூற்று நாற்பத்துநாலாயிரங்களுக்கு முத்திரை போடப்பட்டதும், மகா உபத்திரவம் அனுபவித்து மகிமைக்குள் வரும் பலஜனங்கள் காண்பிக்கப்பட்டதுமான தெரிசனை.

இதுகளுக்குப்பிறபாடு பூமியின் நாலுகோணங்களிலே நாலு தூதர் நின்று பூமியின்மேலாகிலும் சமுத்திரத்தின் மேலாகிலும் எந்த மரத்தின் மேலாகிலும் அடிக்காதபடிக்கு பூமியின் நாலு காற்றுகளையும் பிடித்திருக்கக் கண்டேன்.

௨. சீவனுள்ள பராபரனுடைய முத்திரையையுடைய வேறொரு தூதனையும் சூரியனுதிக்கிற திசையிலிருந்து ஏறிவரக்கண்டேன்; அவன் பூமியையும் சமுத்திரத்தையுஞ் சேதப்படுத்த அதிகாரம் பெற்ற நாலு தூதரையும் நோக்கி மகாசத்தமாய்:

௩. * நாம் நம்முடைய பராபரனுடைய ஊழியக்காரருடைய நெற்றிகளில் முத்திரை போடுமட்டும் பூமியையாகிலும் சமுத்திரத்தையாகிலும் மரங்களையாகிலும் சேதப்படுத்தாதேயுங்கள் என்று சொல்லிக்கூப்பிட்டான். * எசே. ௯: ௪—

௪. நான் முத்திரை போடப்பட்டவர்களுடைய தொகையைக் கேட்டேன்; இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரை போடப்பட்டவர்கள், ௱௪௰௪௲. பேர்.

௫. யூதா கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள். ௰௨௲. ரூபன் கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள். ௰௨௲. காத் கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள். ௰௨௲.

௬. ஆசேர் கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள். ௰௨௲. நப்தலி கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள். ௰௨௲. மனாசே கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள். ௰௨௲.

௭. சிமியோன் கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள். ௰௨௲. லேவி கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள். ௰௨௲. இசக்கார் கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள். ௰௨௲.

௮. செபுலோன் கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள். ௰௨௲. யோசேப்பு கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள். ௰௨௲. பெஞ்சமீன் கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள். ௰௨௲. பேர்.

௯. இதுகளுக்குப்பிறகு நோக்க, சகல சாதிகளிலும் கோத்திரங்களிலும் சனங்களிலும் பாஷைகளிலுமுள்ளவர்களில் ஒருவனும் எண்ணக்கூடாத திரள் கூட்டம், * வெள்ளை நிறமுள்ள அங்கிகளைத் தரிப்பிக்கப்பட்டவர்க

ளாய்

ருமெந்துஜநங்களுக்குள் நின்றதோர் திரளானவர்கள்
வர்களுமாய் சிங்காசனத்துக்கு முன்பாகவும் ஆட்டுக்குட்
டிக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்.

* ௩: ௫.

௰. அவர்கள் மகாசத்தமாய்: * சிங்காசனத்தின்மேலுக்
கார்ந்திருக்கிற எங்கள் பராபர
னுக்கும் ஆட்டுக்குட்டிக்கும் இரட்சணியமுண்டாகக்கடவதென்று
கூப்பிட்டார்கள். * சங்கீ. ௩: ௯. யேசா. ௪௩: ௰௧.

௰௧. * எல்லாத்தூதரும் சிங்காசனத்தையும் மூப்பரை
யும் நாலு ஜீவஜந்துக்களையுஞ்சூழநின்று சிங்காசனத்துக்
கு முன்பாக முகங்குப்புற விழுந்து பராபரனைப்
பணிந்துகொண்டு: * ௫: ௰௧, ௰௪.

௰௨. ஆமென், எங்கள் பராபரனுக்குத் துதியும் மகி
மையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்ல
மையும் பெலனுமானவை என்றென்றைக்கும் சதாக
ாலங்களிலும் உண்டாகக்கடவது, ஆமென் என்
றார்கள்.

௰௩. அப்போது மூப்பரிலொருத்தன் என்னுடனே: வெள்
ளை நிலையங்கிகள் தரிக்கப்பட்ட இவர்கள் ஆர், எங்
கேயிருந்து வந்தார்களென்று சொல்லிக் கேட்
டான்.

௰௪. நான் அவனுடனே: ஐயா, நீர் அறிவீரென்
றேன். அப்போ அவன் எனக்குச் சொன்னதாவது: பெ
ரிதான உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள் இவர்கள்தா
ன், இவர்கள் தங்கள் அங்கிகளைத் தப்பி தங்கள் அங்
கிகளை ஆட்டுக்குட்டியின் * இரத்தத்திலே வெளுத்தார்
கள். * ௭: ௫. ௧. யோவா. ௧: ௭.

௰௫. ஆனபடியால் அவர்கள் பராபரனுடைய சிங்காசனத்துக்கு
முன்பாகயிருந்து அவருக்கு இரவும்பகலும் அவருடை
ய தேவாலயத்திலே ஆராதனை செய்கிறார்கள், சிங்
காசனத்தின்மேல் உட்கார்ந்தவர் அவர்கள்மேலே வாச
மாயிருப்பார்.

௰௬. * இனிப்பசியுமாயிரார்கள், இனித்தாகமுமாயிரார்
கள், அவர்கள்மேலே வெய்யிலாகிலும் யாதொரு உஷ்ண
மாகிலும் படுவதுமில்லை.

* யேசா. ௪௯: ௰.

௰௭. ஏனென்றால் சிங்காசனத்தின் நடுவிலிருக்கிற ஆட்டுக்குட்
டி * அவர்களை மேய்த்து, அவர்களை ஜீவனுள்ள நீரூற்
றுகளண்டைக்குக் கூட்டிக்கொண்டுபோம், ** ப
ராபரனானவர் கண்ணீரையும் அவர்கள் கண்களிலி
ருந்தெல்லாம் துடைப்பாரென்றான்.

* சங்கீ. ௨௩: ௧. ௨. ** ௨௧: ௪. யேசா. ௨௫: ௮.

௮. அதிகாரம்.

ஏழாவது முத்திரை திறக்கப்பட்டது.

அவர் ஏழாவது முத்திரையைத் திறந்தபோது, வானத்தி
லே அரைமணிநேரமளவும் அமைச்சலுண்டாச்சுது.

ஏழு எக்காளத்தொனிப்புகளுக்கு ஆயத்தப்படுகிறது.

௨. பின்னையும் பராபரனுக்கு முன்பாக நின்ற விசேஷ ஏழு தூதரைக் கண்டேன். அவர்களுக்கு ஏழு எக்காளங்கள் கொடுபட்டுது.

௩. தூபங்காட்டும் பொற்கலசத்தைப் பிடித்திருக்கிற வேறொருதூதனும் வந்து பலிபீடத்தின் மேலே நின்றான். அவனுக்கு ஆசனத்துக்கு முன்பாகவிருக்கிற பொற்பீடத்தின்மேல் எல்லாப் பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடே கொடுக்க அநேகஞ் சுகந்தவர்க்கங்கள் தரப்பட்டுது. ௫ ரூ: ௮.

௪. அப்படியே பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடே கொடுக்கப்பட்ட சுகந்தவர்க்கங்களின் புகையானது தூதனுடைய கையிலிருந்து பராபரனுக்கு முன்பாக ஏறிற்று. சங். ௱௪௧: ௨.

௫. பின்பு தூதன் தூபகலசத்தை எடுத்துக் கொண்டு அதைப் பலிபீடத்தின் நெருப்பினாலே நிரப்பி பூமியிலே கொட்டினான். அப்பொழுது சத்தங்களும் இடிமுழக்கங்களும் மின்னல்களும் பூமியதிர்ச்சியும் உண்டாச்சுது.

௬. அப்பொழுது ஏழெக்காளங்களைப் பிடித்திருந்த ஏழு தூதர் எக்காளம் ஊதத்தக்கதாக ஆயத்தம்பண்ணினார்கள்.

நாலு எக்காளத்தொனிப்புகள்.

௭. முதலாந்தூதன் எக்காளமூதினான். அப்பொழுது இரத்தங் கலந்த கல்மழையும் அக்கினியும் உண்டாகிப் பூமியிலே கொட்டினது. அதினாலே மரங்களில் மூன்றத்தொருபங்கு வெந்தது. பசும்புல்லெல்லாம் எரிந்துபோச்சுது.

௮. இரண்டாந்தூதன் எக்காளமூதினான். அப்பொழுது அக்கினியாய் எரிகிற பெரிய மலைபோன்றதொன்று சமுத்திரத்திலே கொட்டினது. அதினாலே சமுத்திரத்தில் மூன்றத்தொருபங்கு இரத்தமாச்சுது.

௯. சமுத்திரத்திலிருந்த சீவனுள்ள சிஷ்டிகளில் மூன்றத்தொருபங்கு செத்துது. கப்பல்களில் மூன்றத்தொருபங்கும் அழிந்தது.

௰. மூன்றாந்தூதன் எக்காளமூதினான். அப்பொழுது வானத்திலிருந்து தீவட்டியைப்போல எரிகிற பெரிய நட்சேத்திரம் விழுந்தது. அது ஆறுகளில் மூன்றத்தொருபங்கின் மேலும் நீரூற்றுகள் மேலும் விழுந்தது.

௰௧. அந்தநட்சேத்திரத்தின் நாமம் எட்டியென்னப்படும். அதினாலே தண்ணீர்களில் மூன்றத்தொருபங்கு எட்டிக்கசப்பாச்சுது. தண்ணீர்கள் கசப்பானபடியால மனுஷரில் அநேகர் செத்தார்கள்.

௰௨. நாலாந்தூதன் எக்காளமூதினான். அப்பொழுது சூரியனில் மூன்றத்தொருபங்கும் சந்திரனில் மூன்றத்தொருபங்கும் நட்சேத்திரங்களில் மூன்றத்தொருபங்கும்

சேத

சேதப்பட்டது; அதுகளிலே மூன்றாம்பங்கு இருளாகவும், பகலும் அந்தப்படியே இராவும் மூன்றாம்பங்கு பிரகாசமற்றுப்போகவுந்தானே.

௰௩. அப்போ நடுவானத்திலே பறக்கிற ஒரு தூதனைக் கண்டேன். அவன் பெரிய சத்தத்துடனே: எக்காளமூதப்போகிற மூன்று தூதருடைய மற்ற எக்காளசத்தங்களால் பூமியிலே குடியிருக்கிறவர்களுக்கையோ, ஐயோ, ஐயோ என ஆரவாரிக்கக்கேட்டேன்.

௯. அதிகாரம்.

ஐந்தாம் எக்காளத்தொனிப்பு.

ஐந்தாந்தூதன் எக்காளமூதினான்; அப்போ * வானத்திலிருந்து பூமியிலே விழுந்த ஒரு நட்சத்திரத்தைக் கண்டேன்; அதுக்குப் பாதாளத்துரவின் திறவுங்கோல் கொடுக்கப்பட்டது. * ௮: ௰.

௨. அது பாதாளத்துரவைத் திறந்தது; அப்போ பெருஞ்சூளையின் புகையைப்போலே ஒருபுகை துரவிலிருந்தெழும்பி; துரவின் புகையால் சூரியனும் ஆகாசமும் அந்தகாரப்பட்டது.

௩. அந்தப் புகையிலிருந்து வெட்டுக்கிளிகள் பூமியின் மேலே புறப்பட்டு வந்தது; அதுகளுக்குப் பூமியிலுள்ள தேள்களுக்கு உண்டாயிருக்கிற அதிகாரத்தைக் கொத்த அதிகாரங்கொடுக்கப்பட்டது.

௪. அதுகள் * பராபரனுடைய முத்திரை நெத்திகளிலே இல்லாத மனுஷரைமாத்திரமே ஒழிய பூமியின் புல்லையாகிலும் ஒரு பச்சைப்பூண்டையாகிலும் ஒரு மரத்தையாகிலும் சேதப்படுத்தவேண்டாமென்று அதுகளுக்குச் சொல்லப்பட்டது; * ௭: ௩.

௫. அவர்களைக் கொல்லவல்ல, ஐந்துமாதம் உபாதிக்க அதுகளுக்கதிகாரங்கொடுக்கப்பட்டது; அதுகளின் வாதைத் தேள் மனுஷரைக்கொட்டும் போதுண்டாகும் வாதையாயிருக்கும்.

௬. அந்நாட்களிலே மனுஷர் மரணத்தைத் தேடி அதைக்காணாதிருப்பார்கள்; சாக ஆசைப்படுவார்கள்; ஆனாலும் மரணம் அவர்களை விட்டோடிப்போம்.

௭. அந்த வெட்டுக்கிளிகளுடைய ரூபம் யுத்தத்துக்காயத்தமான குதிரைகளுக்கொப்பாயிருந்தது; அதுகளின் தலைகளின்மேலே பொன்னுக்கொப்பான கிரீடங்களைப்போலவும்; அதுகளின் முகங்கள் மனுஷர் முகங்களைப்போலவுமாயிருந்தது.

௮. அதுகளுக்குப் பெண்களுடைய கூந்தல்களைப் போலே கூந்தல்களுண்டாயிருந்தது; அதுகளின் பல்லுகள் சிங்கங்களின் பல்லுகளைப்போலிருந்தது.

௯. அதுகளுக்கு இருப்புமார்க்கவசங்களைப்போலே மார்க்கவசங்களிருந்தது; அதுகளுடைய செட்டைக

கின் இரைச்சல் யுத்தத்துக்கு ஓடுகிற அநேகங் குதிரை
கள் பூண்ட ரதங்களின் இரைச்சலைப்போலிருந்தது.

௰. அதுகளுக்குத் தேள் வால்களுக் கொப்பான
வால்களும், அதுகளின் வால்களிலே கொடுக்குகளு
மிருக்குது; அதுகளின் அதிகாரம் மனுஷரை ஐந்து மாதத்துச்
சேதப்படுத்துவதாமது.

௰௧. அதுகளை * பாதாளத்தின் தூதன் ஆண்டுகொள்ளு
மொரு ராசாவாகவிருக்கிறான், அவனுக்கு எபிரேயிலே
அபத்தோனென்றும் கிரேக்கிலே அப்பொல்லி
யோனென்றும் பேருமுண்டு. * க: வசன.

௰௨. * ஒரு ஐயோ போச்சுது; * இதோ இனிமேல் இர
ண்டையோக்களுக்குப் பிறகு வருகுது. * அ: ௰௩.

ஆறும் எக்காளத்தொனிப்பு.

௰௩. ஆறாந்தூதன் எக்காளந் தொனித்தான், அப்போ
பராபரனுக்கு முன்பாக இருந்த பொற்பீடத்தின்
நாலு கொம்புகளிலுமிருந்துண்டான ஒரு சத்தம்
எக்காளத்தைப் பிடித்திருக்கிற ஆறாந்தூதனுடனே:

௰௪. ஐப்பிராத்தென்கிற பெரிய ஆற்றண்டையிலே
கட்டப்பட்டிருக்கிற நாலு தூதரை அவிழ்த்துவிடு என்
றுரைக்கக் கேட்டேன்.

௰௫. அப்போ அந்த மனுஷரில் மூன்றிலொரு பங்கைக்
கொல்ல, ஒருமணிநேரத்துக்கும் ஒருநாளுக்கும் மாதத்துக்
கும் வருஷத்துக்கும் ஆயித்தப்பட்டிருந்த நாலு
தூதர் அவிழ்க்கப்பட்டார்கள்.

௰௬. குதிரைச்சேனையின் தொகை
இருபதுகோடியாயிருந்தது; அதுகளின் தொகையைக்
கேட்டேன்.

௰௭. நான் குதிரைகளையும் அதுகள் மேலிருந்தவர்
களையுந் தெரிசனத்திலே கண்ட வண்ணமாவது:
அக்கினியும் பதுமராகமும் கெந்தகமுமான மார்க்கவசங்
கள் அவர்களுக்குண்டாயிருந்தது; குதிரைகளின்
தலைகளோ சிங்கங்களுடைய தலைகளைப்
போலிருந்தது; அதுகளின் வாய்களிலிருந்து அக்கினியும்
புகையும் கெந்தகமும் புறப்படுகுது.

௰௮. அதுகளின் வாய்களிலிருந்து புறப்பட்ட அக்கினி
புகை கெந்தகமென்கிற இம்மூன்றினாலும் மனுஷரில் மூன்றி
லொருபங்கு கொன்றுபோடப்பட்டுது.

௰௯. ஏனென்றால் அதுகளுடைய அதிகாரங்கள் அது
களின் வாயிலிருக்குது; ஏனென்றால் அதுகளின் வால்கள்
பாம்புகளின் சாயலாயிருந்து, தலைகளுள்ளதுகளா
யிருக்குது; இதுகளால் சேதப்படுத்துகுது.

௨௰. ஆகிலும் இந்த வாதைகளாலே கொல்லப்ப
டாதிருக்கிற மற்ற மனுஷர், தாங்கள் பிசாசுகளையும், *
பார்க்கவுங் கேட்கவும் நடக்கவுமாட்டாத பொன்
வெள்ளி செம்பு கல்லு மரமுமான விக்கிரகங்களை
யும் பணிந்து கொள்ளாதபடிக்குத் தங்கள் கை
யிட்டகிரியைகளை விட்டுத் திரும்பினதுமில்லை.

* சங்கீ. ௱௰௫. ௪—௭.

௨௧. தங்கள் கொலைபாதகங்களையுந் தங்கள் சூனியங்களையுந் தங்கள் வேசித்தனங்களையுந் தங்கள் களவுகளையும் விட்டுக் குணப்படவுமில்லை.

௰. அதிகாரம்.

கடைசி உபத்திரவங்களாவதுவும் விசேஷப் போதகத்தைக் குறித்த பிரமாணமாய்ச் சொல்லப்பட்டதாகுதல்.

ஆனால் மேகத்தைச் சூழ்ந்திருந்து வானத்திலிருந்திறங்கி பெலமுள்ள வேறொரு தூதனைக் கண்டேன், * அவர் சிரசின்மீதில் வானவில்லிருந்தது, ** அவருடைய முகஞ்சூரியனைப் போலவும், *** அவருடைய கால்கள் அக்கினித் தூண்களைப் போலவுமிருந்தது. * ௬: ௩. ** ௰௩. ௰௭: ௨. *** ௧. ௰௫.

௨. அவர் திறக்கப்பட்டிருக்கிற சின்னப் புஸ்தகத்தைத் தம்முடைய கையிலே பிடித்திருந்து, தம்முடைய வலது பாதத்தைச் சமுத்திரத்தின் மேலும் இடது பாதத்தைப் பூமியின் மேலும் வைத்து,

௩. சிங்கங் கெர்ச்சிக்கிறாப்போலே மகா சத்தமாய்க் கூப்பிட்டுக் கொண்டிருந்தார், கூப்பிட்ட போது ஏழு இடிமுழக்கங்கள் சத்தங்களை உரைத்தது.

௪. ஏழு இடிமுழக்கங்கள் தங்கள் சத்தங்களை உரைத்த போது நான் எழுதவேணுமென்றிருந்தேன், ஆனால் வானத்திலிருந்து என்னோடே: ஏழு இடிமுழக்கங்கள் உரைத்ததுகளை நீ எழுதாமல் * முத்திரித்துப் போடு என்று சொல்லுகிற சத்தத்தைக் கேட்டேன்.
* தானி. ௰௨: ௪.

௫. நான் சமுத்திரத்தின் மேலும் பூமியின் மேலும் நிற்கக்கண்ட தூதனானவர் * தம்முடைய கையை வானத்துக்கேறெடுத்து: * தானி. ௰௨: ௭.

௬. இனிக் காலஞ் செல்லமாட்டாது. * ஏழாந் தூதன் எக்காளம் ஊதப்போகிற சத்தத்தின் நாட்களிலே பராபரனுடைய இரகசியம் அவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்கு விசேஷமாய் அறிவித்தபடி நிறைவேறுமென்று, * ௰௧: ௰௫.

௭. வானத்தையும் அதிலுள்ளதுகளையும் பூமியையும் அதிலுள்ளதுகளையும் சமுத்திரத்தையும் அதிலுள்ளதுகளையும் சிருஷ்டித்தவராகிய என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிழைக்கிறவர் பேரிலே ஆணையிட்டார்.

௮. நான் வானத்திலிருந்து பிறக்கக் கேட்ட சத்தம் மறுபடியும் என்னுடனே பேசி: சமுத்திரத்தின் மேலும் பூமியின் மேலும் நிற்கிற தூதர் கையிலிருக்குந் திறக்கப்பட்ட * சின்னப் புஸ்தகத்தைப் போய் வாங்கிக்கொள் என்றது. * ௨. வசனம்.

௯. அப்போது நான் தூதர் அண்டைக்குப் போய், அவருடனே: அந்தச் சின்னப் புஸ்தகத்தை எனக்குத் தாருமென்றேன். அப்போது அவர் என்னை நோக்கி: * அதை வாங்கிப் புசித்துப் போடு, அது உன் வயத்தைக் கசக்கப்பண்ணும், உன் வாயிலோவென்றால் அது தேனைப் போல மதுரமாயிருக்குமென்றார். * எசேக். ௨: ௮---௩: ௧---௩.

ய. நான் அந்தச் சின்னப் போஸ்தகத்தைத் தூதனுடைய கையிலே வாங்கி அதைப் பட்சித்துப்போட்டேன்; அது என் வாயிலே தேனைப்போலே மதுரமாயிருந்தது; நான் அதைப் பட்சித்துப்போட்டபோதோவென்றால், என் வயிறு கசந்தது.

யக. அப்போ அவன் என்னுடனே: நீ மறுபடியும் அநேக ஜனங்களுக்கும் ஜாதிகளுக்கும் பாஷைக்காரருக்கும் ராசாக்களுக்கும் முன்பாகத் தீர்க்கதரிசனஞ் சொல்லவேண்டியதென்றான்.

யக. அதிகாரம்.

கடைசி உபத்திரவங்களின் காலமும் அதிலே விளங்குகிற சாட்சியும்.

பின்பு கோலுக்கு ஒத்த அளவுகோலானது எனக்குக் கொடுக்கப்பட்டது; தூதனானவர் நின்று என்னை நோக்கி: நீ எழுந்து பராபரனுடைய தேவாலயத்தையும் பலிபீடத்தையும் அதிலே பணிகிறவர்களையும் அளந்து பார்; * ய: க.

உ. தேவாலயத்துக்குப் புறம்பே இருக்கிற பிராகாரத்தை அளவாமல் அதைப் புறம்பாக்கிப்போடு; ஏனென்றால் அது அஞ்ஞானிகளுக்குக் கொடுக்கப்பட்டது; அவர்கள் பரிசுத்த பட்டணத்தை* நாற்பத்திரண்டு மாதம் பாழாக்கிப்போடுவார்கள். * யங: ரு.

ங. என்னுடைய இரண்டு சாட்சிகளுக்கும் அதிகாரங் கொடுப்பேன்; அவர்கள் இரட்டு உடுத்திக்கொண்டு ஆயிரத்திருநூற்றறுபது நாள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்களென்றார்.

ச. *பூமியின் தம்பிரானுக்கு முன்பாக நிற்கிற** இரண்டு ஒலிவமரங்களும் இரண்டு விளக்குத்தண்டுகளும் இவர்கள்தானே. * உ. தெச. உ: ச.
** சகரி. ச: ங. ஙா: யஉ. யச.

ரு. அவர்களுக்கு ஒருவன் பொல்லாப்புச் செய்ய மனதாயிருந்தால், அக்கினி அவர்கள் வாயிலிருந்து புறப்பட்டு அவர்கள் சத்துருக்களைப் பட்சித்துப்போடும்; அவர்களுக்கு ஒருவன் பொல்லாப்புச் செய்ய மனதாயிருந்தால், அவன் இப்படி மடியவேணும்.

சா. தங்கள் தீர்க்கதரிசன நாட்களிலே* மழை பெய்யாதபடிக்கு வானத்தை அடைக்கிறதற்கு அவர்களுக்கு அதிகாரமுண்டு;** தண்ணீர்களை இரத்தமாக மாற்றவும், தாங்கள் நினைக்கும்போதெல்லாம் பூமியைச் சகலவித வாதையாலும் அடிக்கவும் அவர்களுக்கு அதிகாரமுண்டு. * க. ராசா. யஎ: க. ** உ. மோ. எ: யஎ.

எ. அவர்கள் தங்கள் சாட்சியை முடித்திருக்கும்போது, பாதாளத்திலிருந்தேறுகிற* மிருகமானது அவர்களோடே யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயித்து அவர்களைக் கொன்றுபோடும். * யங: க. எ.

அ. அவர்கள் உடல்கள், நம்முடைய கர்த்தரும் சிலுவையிலே அறையுண்டதும், ஞானார்த்தமாய்ச் சோதோமும் எகிப்தும் என்னப்படுகிறதுமான மகா பட்டணத்தின் வீதியிலே கிடக்கும்.

௯. சனசந்ததிகளும் கோத்திரங்களும் பாஷைக்காரரும் ஜாதிக்காரருமான பலபேர் அவர்களுடைய உடலுகளை மூன்றரைநாளளவும் பார்ப்பார்கள்; அவர்களுடைய உடலுகளைக் கல்லறைகளில்வைக்கவொட்டார்கள்.

௰. பூமியின்மேற் குடியிருக்கிறவர்கள் அவர்களி னிமித்தஞ் சந்தோஷமும் பூரிப்புமாயிருந்து, இரண்டு தீர்க்கதரிசிகள் பூமியின்மேல் குடியிருக்கிறவர் களை வாதைப்படுத்தினார்களென்று, ஒருவர்க்கொரு வர் காணிக்கைகளை அனுப்புவார்கள்.

௰௧. ௩½ மூன்றரை நாளுக்குப்பிறகு பராப ரனிடத்திலிருந்து சீவனுடைய ஆவி அவர்களுக்குள் பிர வேசித்தது; அப்போது அவர்கள் காலூன்றி நின் றார்கள்; அவர்களைப் பார்க்கிறவர்கள் மேலே மகாபயமிறங்கிற்று.

௰௨. இங்கே ஏறிவாருங்களென்று வானத்திலி ருந்து சொல்லுகிற ஒரு பெரிய சத்தத்தை அவர் கள் கேட்டு, ஒரு மேகத்திலே வானத்துக்கு ஏறினார் கள்; அவர்கள் சத்துருக்கள் அவர்களைப் பார்த்தார்கள்.

௰௩. அந்நேரத்திலே மகா பூமி அதிர்ச்சியுண் டாச்சுது; பட்டணத்தில் பத்திலொரு பங்கு விழுந்தது; மனு ஷரிலே ஏழாயிரம்பேர் பூமி அதிர்ச்சியினால் அழிந்தார்கள்; அப்போ மற்றவர்கள் பயமடைந்து பரமண்டலத் துடைய பராபரனுக்கு மகிமையைச் செலுத்தினார்கள்.

௰௪. † இரண்டாம் ஐயோ போச்சுது; இதோ மூன் றாவது ஐயோ சீக்கிரமாய் வரும். † ௮: ௰௩. ௯: ௧௨.

ஏழாம் எக்காளத்தொனிப்பு.

௰௫. † ஏழாந்தூதன் எக்காளம் ஊதினான்; அப்போ மோக்ஷத்திலே ‡‡ இராச்சியங்கள் நம்முடைய கர்த்தரை யும் அவருடைய கிறீஸ்துவையுஞ் சேர்ந்தது; அவர் என்றென்றைக்கும் ஆளுவாரென்கிற ராசரீக சம் பண்ணுவாரென்று அறைகிற ‡‡‡ மகா சத்தங் கள் வானத்தில் உண்டாச்சுது. † ௰: ௯. ௭.
‡‡ ௰௨: ௰. ‡‡‡ ௰௯: ௬. தானி. ௭: ௰௪.

௰௬. அப்போ பராபரனுக்கு முன்பாகத் தங்கள் ஆ சனங்களின்மேல் உட்கார்ந்திருக்கிற இருபத்துநாலு மூப்பர்களும் குப்புற விழுந்து பராபரனைப் பணிந்து கொண்டு; † ௪: ௰.

௰௭. † இருக்கிறவரும் இருந்தவரும் வரப்போறவ ருமாயிருக்கிற சருவத்துக்கும் வல்ல பராபரனாகிய ஆண்டவரே! தேவரீரை ஸ்தோத்திரிக்கிறோம்; ஏனெனில் உம்முடைய பெரிய வல்லமையைக் கர்த்துக் கொண்டு ராசரீகம் பண்ணினீர். † ௧: ௮.

௰௮. சாதிகள் கோபித்தது; ஆனால் உம்முடைய கோபம் வந்தது; மரித்தோர் நியாயந்தீர்க்கப்படவும், தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்கும் பரிசுத்தவான்களுக்கும் உம்முடைய நாமத்துக்குப் பயந்த சிறியோர்க்கும் பெரியோர்க்கும் பலனை அளிக்கவும், பூமியைக் கெடுக்கிறவர்களைக் கெடுக்கவும், காலம் வந்ததென்றார்கள். † ௰௯: ௨. ௫.

௰௯. அப்பொழுது பரலோகத்திலே * பராபரனுடைய தேவ லாலயந்திறக்கப்பட்டு அவனுடைய தேவாலயத் திலே அவனுடைய உடன்படிக்கைப்பெட்டகங் காணப் பட்டுது; ** மின்னல்களும் சத்தங்களும் இடிமுழக்க ங்களும் பூமியதிர்ச்சியும் பெருங்கல்மழையும் உண்டாச் சுது. * ௰௫: ௫. ** ௰௬: ௰௮. ௨௰.

௰௨. அதிகாரம்.

சபையின் சத்துருக்களைக் காண்பிக்கிறதுகொண்டு ரசித அபிஷேகம் பண்ணின வலுசர்ப்பமென்ற பிசாசானதும் முதுக்காண்பிக்கப்பட்டது.

ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட் டுது; சூரியனை அணிந்திருந்த ஒரு ஸ்திரீ இருந்தாள்; அவள் பாதங்களின்கீழே சந்திரனும் அவள் சிரசின் மேலே பன்னிரண்டு நட்சத்திரங்களின் கிரீடமுமிருந் தது.

௨. அவள் கெர்ப்பவதியாயிருந்து * வேதனைப்பட்டு ப் பெறுகிறதற்கு அலறினாள். * ௧. மோ. ௩: ௰௬.

௩. அப்பொழுது வேறொரு அடையாளம் வானத்திலே காணப்பட்டுது; இதோ, ஏழுதலையும் பத்துக்கொம் புமுள்ளதாயும் ஏழுதலையின்மேல் ஏழு முடியுமுள்ள சிகப் பான பெரிய வலுசர்ப்பமிருந்தது.

௪. அதின் வால் வானத்தினுடைய நட்சத்திரங்க ளில் மூன்றாம் பங்கை இழுத்து, அதுகளை பூமி யிலே தள்ளிற்று; பெறப்போகிற ஸ்திரீயினுடைய முன்னே அவள் பெற்றபோது அவளுடைய பிள்ளையைப் பட்சிக்கும்படி அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது.

௫. அவள் * சகல ஜாதிகளையும் இருப்புக்கோ லால் ஆளப்போகிற ஆண்பிள்ளையைப் ** பெற்றாள். அவளுடைய பிள்ளை பராபரனிடத்துக்கும் அவர் சிங்காசனத்துக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டுது.
* சங்கீ. ௨: ௯. ** ஏசா. ௬௬: ௭. சகரி. ௬: ௰௨.

௬. ஸ்திரீயோவெனில் வனாந்தரத்துக்கு ஓடிப் போனாள்; அங்கே அவளை * ஆயிரத்திருநூற்றறுபது நாள் போஷிப்பதற்கு பராபரனால் ஆயத்தம்பண் ணப்பட்ட இடம் அவளுக்குண்டு. * ௰௧: ௩.

௭. வானத்திலே யுத்தமுண்டாயிற்று; * மிகாவேலும் அவனுடைய தூதரும் வலுசர்ப்பத்தோடே யுத்தம் பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதின் தூதரும் யுத்தம் பண்ணினது. * தானி. ௰௨: ௧.

௮. சிறிதும் அதுகள் மேற்கொள்ளாமலும் அதுகளு டைய இடம் அப்புறம் வானத்திலே காணப்படாமலும் போயிற்று.

௯. லோகமனைத்தையும் மோசம் போக்கிறதும் பிசாசு சாத்தான் என்னப்பட்டதுமான * பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டுது; பூமி யிலே தள்ளப்பட்டுது; அதின் தூதரும் அதுடனே தள்ளப்பட்டார் கள். * ஆதி. ௩: ௧.

X 2 ௰. வான

௰ வானத்திலே ஒருபெரிய சத்தமானது: * இப்போது ரக்ஷிப்பும்வல்லமையும்ராச்சியமுமநம்முடையபராபரனையுமதிகாரமவருடைய கிறிஸ்துவையுஞ் சேர்ந்தது; ஏனென்றால் இரவும்பகலுமநம்முடைய சகோதரரைப் பராபரனுக்கு முன்பாகக் குற்றஞ்சாட்டுகிறகுற்றஞ்சாட்டினது கீழேத்தள்ளுண்டுபோச்சதென்றதை; * ௰௨: ௰. ** யோபு. ௧: ௯. ௨: ௫.
சகரி. ௩: ௧.

௰௧. அவர்கள் அந்த ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலுந்தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயிச்சு, மரணபரியந்தம் தங்கள் சீவனைச் சிநேகியாதிருந்தார்கள்.

௰௨. ஆகையால், வானங்களே, அதுகளில் வாசமுமானவர்களே, மகிழுங்கோள்; பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே, உங்களுக்கு ஐயோ, ஏனென்றால் பிசாசு தனக்குக் கொஞ்சக் காலமுண்டென்றறிந்து மகாகோபமுள்ளவனாய் உங்களண்டைக்கிறங்கிவந்திருக்கிறான்.

௰௩. தான் பூமியிலே தள்ளுண்டதைக் வலுசர்ப்பங்கண்டு, ஆண்பிள்ளையைப்பெற்ற ஸ்திரீயைப் பின்தொடர்ந்தது.

௰௪. ஆனால் அந்த ஸ்திரீக்கு தான் * ஒருகாலமும் காலங்களும் அரைக்காலமும் சம்போஷிக்கப்படும் வனாந்திரத்தில் தன்னிடத்துக்குப், பாம்பின் முகத்துக்கு விலகிப் பறந்துபோகத்தக்கு, அவளுக்குப் பெருங்கழுகின் இரண்டு செட்டைகள் கொடுபட்டுது.
* தானி. ௭: ௨௫. ௰௨: ௭.

௰௫. அப்போ ஸ்திரீயை வெள்ளங்கொண்டுபோகப்பண்ணவேண்டுமென்று சர்ப்பமானது அவள்பின்னாகத் தன்வாயிலிருந்து நதிபோலத் தண்ணீரை ஊற்றிவிட்டது.

௰௬. ஆனால் பூமி ஸ்திரீக்குச் சகாயஞ்செய்து, பூமிதன் வாயைத்திறந்து வலுசர்ப்பந்தன்வாயிலிருந்து ஊற்றிவிட்டநதியை விழுங்கிற்று.

௰௭. அப்போ வலுசர்ப்பம் ஸ்திரீயின் மேலே கோபமாயிருந்து, பராபரனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடக்கிறவர்களும் யேசுக்கிறிஸ்துவின் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய வித்திலே மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப்போச்சுது.

௰௩. அதிகாரம்.

பத்துக்கொம்புள்ளமிருகமென்கிற சத்துரு.

நான் கடற்கரை மணலின் மேல் நின்றேன், அப்போ ஏழுதலையும் ** பத்துக்கொம்புமுள்ள கொம்புகள் மேலே பத்து முடியுந் தலைகளின் மேலே தூஷண நாமமுமுள்ள ஒரு மிருகம் சமுத்திரத்திலிருந்தேறுகிறதைக் கண்டேன். * ௰௭: ௩. ௯. ௰௨. ** தானி. ௭: ௭.

௨. நான் கண்ட அந்த மிருகம் சிறுத்தைக்கொப்பாயிருந்தது; அதின் கால்கள் கரடியின் கால்களைப்போலும், அதின் வாய் சிங்கத்தின் வாயைப் போலுமிருந்தது

ஜிராஜாக்களுக்குச் சம்பந்தமான வல்லமையையுடைத்தான ஊசு
னாதனுடைய பெரிய அதிகாரத்தையுங்கொடுத்தது.

௩. அந்தப்படிக்கு ஸ்திரீ ஜசையொ காயமாய் அடிக்
கப்பட்டுக்கிடந்தாள்; அதின் அடையாளமாய்
காயமும் ஆச்சரியப்பட்டது; பூலோகத்தாரெல்லாரும்
மிருகத்தைப் பின்பற்றுகிறவர்களாய் ஆச்சரியப்
பட்டது.

௪. மிருகத்துக்கு அதிகாரங்கொடுத்த வலுசர்ப்பத்தை
பணிந்துகொண்டு மிருகத்துக்குக் கொத்தவர்; அந்த
வேளையிலே பணிந்து கொண்டதுதான் ஆசிர்வாதத்
துயமயணிந்து கொண்டார்கள்.

௫. பெருமைகளையும் தூஷணங்களையும் பேசும்
வாயும் அதுக்குக் கொடுக்கப்பட்டது; நாற்பத்திரண்டு மாதம்
வரையிலும் அதுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

* தானி. ௭: ௨௫. * * ௰௩: ௨.

௬. அது பராபரனுடைய நாமத்தையும் அவனுடைய
கூடாரத்தையும் வானத்திலே வாசமாயிருக்கிறவர்களை
யுந்தூஷணிக்கிறவாயை அவனுக்குத் தூஷணமாகத்
திறந்தது.

௭. பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்
களை ஜெயிக்கும்படிக்கு அதுக்கு அளிக்கப்பட்டது; எல்லாக்
கோத்திரம் பாஷை சாதிகளின் மேலும் அதுக்கு அதிகாரங்
கொடுக்கப்பட்டது. * ௰௧: ௭. தானி. ௭: ௨௧.

௮. லோகத்தோற்ற முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்
குட்டியின் ஜீவபுஸ்தகத்திலே பேரெழுதப்படாத
பூமியின் குடிகளெல்லாரும் அதைப்பணிந்து கொள்
ளுவார்கள். * ௩: ௫. ௰௭: ௮.

௯. யாதொருவனுக்குக் காதிருந்தால் கேட்கக்
கடவான்.

௰. ஒருத்தன் சிறைப்பிடித்தால் சிறையாகப் பட்டுப்
போவான்; * ஒருத்தன் பட்டயத்தால் கொல்லுவான்
அவன் பட்டயத்தாலே கொல்லுண்ணவேண்டியது;
** இங்கே பரிசுத்தவான்களுடைய பொறுமையும் விசு
வாசமுமிருக்குது. * மத். ௨௬: ௫௨. ** ௰௪: ௰௨.

வெள்ளாட்டுக்குட்டியைப்போலே இரண்டு கொம்புள்ள
மிருகத்தின் விசேஷம்.

௰௩: ௰௬. ௰௪: ௨௰.

௰௧. வேறொரு மிருகம் பூமியிலிருந்தேறக் கண்டேன்; அது ஆட்டுக்குட்டியைப்போலே இரண்டு
கொம்புள்ளதாயிருந்து வலுசர்ப்பத்தைப்போலே
பேசி; * மத். ௭: ௰௫.

௰௨. முதலாம் மிருகத்தின் அதிகாரத்தையெல்லாம்
அதின் முன்பாக நடப்பித்து; பூமியையும் அதிலே குடியிருக்
கிறவர்களையுஞ் சாவுகாயமாறின முதலாம் மிருகத்
தைப் பணியப்பண்ணினான்;

௰௩. மனுஷருக்கு முன்பாக அக்கினியையும் வானத்தி
லிருந்து பூமியிலே இறங்கப்பண்ணத்தக்க * மகா அடை
யாளங்களைச் செய்து; * மத். ௨௪: ௨௪. ௨. தெச. ௨: ௯. ௰.

௰௪. மிரு

௰௪. மிருகத்தின்முன்பாகச் செய்யத்தக்கதாகக் கொடுக்கப்பட்ட அடையாளங்களினாலே பூமியின்மேல் குடியிருக்கிறவர்களை மோசம்போக்கி/ பட்டயத்தால் அடிப்பட்டும் பிழைத்த மிருகத்துக்குச் சொரூபம் பண்ணவேண்டுமென்று பூமியின்மேல் குடியிருக்கிறவர்களுக்குச் சொல்லுகிறது.

௰௫. மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும்/ மிருகத்தின் சொரூபத்தை வணங்காதவர்கள் எவர்களோ அவர்கள் கொல்லப்படும்படிக்குச் செய்யவும் மிருகத்தின் சொரூபத்துக்கு ஆவியைக் கொடுக்க அதுக்குச் சத்துவம் அளிக்கப்பட்டது.

௰௬. அது சிறியோர் பெரியோர் ஐசுவரியவான்கள் தரித்திரவான்கள்/ சுயாதீனக்காரர் அடிமைகளாகிய யாவரையும்/ தங்கள் வலதுகைகளிலேயாவது நெற்றிகளிலாவது முத்திரை அடையத்தக்கதாகப் பண்ணிக்கொள்ளவும்/

௰௭. அந்த முத்திரையுடையவனாகவாவது மிருகத்தின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது உடையவனேயல்லாமல் வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங் கூடாதபடிக்குச் செய்கிறது.

௰௮. இங்கே ஞானமிருக்கிறது/ புத்தியையுடையவன் மிருகத்தின் இலக்கத்தைக் கணக்குப்பார்க்கக்கடவன்/ அது ஒரு மனுஷனுடைய இலக்கமாயிருக்குது/ அதினுடைய இலக்கம் ௬௱௬௰௬. * ௰௭: ௬.

௰௪. அதிகாரம்.

சபைபிரசங்கத்துக்களைச் செய்யப்படுவீர்.

இதோ நான் சீயோன்பருவதத்தின்மேல் ஆட்டுக்குட்டியையும் அவனுடனே அவனுடைய பிதாவின் நாமந் தங்கள் நெற்றிகளிலே எழுதப்பட்டிருந்த * * நூற்று நாற்பத்து நாலாயிரம் பேரையும் நிற்கக்கண்டேன்/

* சங். ௨: ௬. ** ௭: ௪.

௨. * வெகுஜலங்களின் இரைச்சலைப்போலவும்/ பெரிய இடிமுழக்கத்தைப்போலவும் ஒரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக்கேட்டேன்/ இசைக்காரர் தங்கள் மண்டலங்களை வாசிக்கிற சத்தம்போலே ஒரு சத்தத்தைக் கேட்டேன்

* ௰௯: ௬.

௩. அவர்கள் சிங்காசனத்துக்கு முன்பாகவும் நாலு ஜீவஜந்துக்கு மூப்பர்களுக்கு முன்பாகவும் * புதுப்பாட்டைப் பாடினார்கள் பூமியிலிருந்து கொள்ளப்பட்ட அந்த நூற்று நாற்பத்து நாலாயிரம்பேரல்லாமல் மற்ற ஒருத்தரும் அந்தப் பாட்டைக் கற்றுக்கொள்ளக்கூடாதிருந்தது. * ௫: ௰.

௪. ஸ்திரீகளோடேகூட அசுத்தப்படாதிருந்தவர்கள் இவர்கள்தான். ஏனெனில் * கன்னியாஸ்திரீகளாயிருக்கிறார்கள்/ * * ஆட்டுக்குட்டி எங்கே போனாலும் அதைப் பின்செல்லுகிறவர்கள் இவர்கள்

தான்

தான. தேவர்கள் மனுஷரில் நின்று பராபரனுக்கு மகிமை கூட
நிற்கிறதுக்கும் நல்லவர்களாகக் கொள்ளப்பட்டார்
கள். * ௨. கொரி. ௰௧: ௨. * மத். ௰௯: ௨௮.

௫. தேவர்களாயிருக்கிறவர்கள் படைக்கப்பட்ட
ஏழைகளாயிருக்கிற பராபரனுடைய சனத்துக்கு முன்பாக
ப்ரசன்னவர்களாயிருக்கிறார்கள். * எபி. ௫: ௨௭.

செய்யப்படுகிறதுக்கு விசேஷங்கள்.

௬. தேவதூதர்கள் நல்லவர்களாகப் படைக்கப்பட்
டார்கள். அவர்களுக்குள்ளே கெட்டுப்போனவர்கள்
தங்கள் சாத்தானுக்குச் சேர்ந்து அக்கிரமங்களை
நடப்பித்து தேவனுக்கு விரோதமாய்ச் செய்த
அக்கிரமத்தால் நரகத்துக்குப் போனார்கள்.

௭. அவர்கள் மனசாட்சியைக் கெடுத்துப் பராபரனுக்
குப் பயந்து நடக்காமல் மனுஷரை மோசம்பண்ணினார்கள்.
ஏனெனில் அவர்கள் தேவனுடைய வசனத்தை அறிந்து
கொண்டும் அதற்குக் கீழ்ப்படியாமல் தங்கள் இஷ்டப்படி
நடந்து கொண்டார்கள்.

* ௨பே. ௨: ௪. யூதா: ௬.

௮. தேவதூதர்களின் சேனை: * மகா பட்டண
மாகிய பராபரனுடைய ராச்சியத்திலே [illegible]
நடந்து சுத்தமாயிருக்கிற வசனத்தின் படியே
செய்கிறதுக்குக் கொடுக்கப்பட்டுச் சேனைகள்.

* எபி: ௨. ௩. தேச. ௨௪: ௬.

௯. துஷ்டதூதர்களாகிய பிசாசுகள் மகா
கர்வமாய் உலகத்திலே நின்று மனுஷரை ஏமாற்றி
கொடுமையாய்ப் பண்ணி தங்கள் பாவத்திலே
விழுந்தவர்களும் அவர்களுடைய சாபத்துக்குக் காரண
ராவார்.

௰. அவர்கள் பராபரனுடைய கோபத்தின் பாத்திர
ங்களாயிருக்கிறவர்கள் அவர்களுடைய
ஆக்கினை முடிவுவரைக்கும் நிலைக்கும். பரிசுத்ததூதர்
களுக்கு முன்பாக அவர்கள் தண்டிக்கப்படுவார்கள்
அக்கினியிலே சேர்க்கப்படுவார்கள்.
* சங்கீ. ௭௫: ௯.

௰௧. அவர்கள் தங்களுடைய பாவங்களை விட்டு
மனந்திரும்புகிறதில்லை. மனஸ்தாபத்தை
யும் பரிசுத்தத்தையும் அவர்கள் விரும்ப
மாட்டார்கள். அவர்களுடைய நாமத்தை முத்திரை
யாகக் குறித்துக்கொண்டு அவர்களுக்கு
நேசமாக மன்னிப்பு கொடுக்கிறதில்லை.

* ௰௬: ௩. மத். ௬: ௨௪.

௰௨. அங்கே பரிசுத்தவான்களுடைய போதனை
யினாலே இங்கே பராபரனுடைய கிருபை [illegible] யின
யேசுவின் சுவிசேஷ வசனத்தைக் கேட்டு [illegible]
அவர்கள் உண்டாவார்கள். * ௧கொ. ௧௧. ௭. ௧௩. ௩௰ [illegible].

௰௩. வானத்திலிருந்துண்டாகிற ஒரு சத்தத்தைக் கேட்டேன்; அது என்னோடே சொன்னதாவது: நீ எழுது, இதுமுதல் கர்த்தருக்குள் சாகிறமரித்தோர் * பாக்கியவான்களென்றது. ஆம், தங்கள் வேலைகளை விட்டிளைப்பாறுவார்களென்று ஆவியானவர் சொல்லுகிறார்; அவர்களுடைய கிரியைகள் அவர்களுடனே கூடப் பின்செல்லுகிறதென்றது.

* லூக. ௨௩: ௪௩.

*பயிராகத்துக்குக் கனமேலே அறுக்கும் ஊசிகளை காண்பிக்கிறது.

௰௪. பின்பு நான் பார்த்தேன், வெண்மேகத்தையும், அந்த மேகத்தின்மேல் மனுஷகுமாரனுக்கொப்பானவர் தம்முடைய சிரசின்மேல் பொற்கிரீடத்தையும் தமது கையில் கூர்மையான அரிவாளையும் உடையவராய் உட்கார்ந்திருக்கக் கண்டேன்.

* க: ௰௩. தானி. ௭: ௰௩.

௰௫. வேறொரு தூதன் தேவாலயத்திலிருந்து புறப்பட்டு மேகத்தின்மேல் உட்கார்ந்தவரை நோக்கி: *உமது அரிவாளை நீட்டி அறு; அறுக்கிறதற்கு உமக்குக் காலம் வந்தது; பூமியின் பயிர் முதிர்ந்ததென்று மகா சத்தமாய்க் கூப்பிட்டான்.

* யோவே. ௩: ௰௩.

௰௬. அப்போது மேகத்தின்மேல் உட்கார்ந்தவர் தமது அரிவாளைப் பூமியின்மேல் போட்டார், பூமி அறுக்கப்பட்டது.

௰௭. வேறொரு தூதனும் தானும் கூர்மையான அரிவாளைப் பிடித்து, வானத்திலுள்ள தேவாலயத்திலிருந்து புறப்பட்டுவந்தான்.

௰௮. அக்கினியின்மேல் அதிகாரமுள்ள வேறொரு தூதனும் பலிபீடத்திலிருந்து புறப்பட்டுவந்து, கூர்மையான அரிவாளைப் பிடித்திருக்கிறவனை நோக்கி: உன் கூர்மையான அரிவாளை அனுப்பிப் பூமியின் திராட்சச்செடியின் குலைகளை அறு, அதின் பழங்கள் முதிர்ந்ததென்று மகா சத்தமிட்டான்.

௰௯. அப்போது அந்தத் தூதன் தன் அரிவாளைப் பூமியிலே போட்டு, பூமியின் திராட்சப்பழத்தை அறுத்து, தேவனுடைய கோபத்தின் பெரிதான ஆலையிலே போட்டான்.

௨௰. * அந்த ஆலை பட்டணத்துக்குப் புறம்பே மிதிக்கப்பட்டது; ஆலையிலிருந்து ஆயிரத்தறுநூறு ஸ்தலக்கணக்குத் தூரத்துக்கு ரத்தம் புறப்பட்டு, குதிரைகளின் கடிவாளங்கள்மட்டும் வந்தது. * ௰௯: ௰௫.

௰௫. அதிகாரம்.

ஏழு வாதைகளுக்கு ஏழு தூதர் ஆயித்தம்.

நான் வானத்திலே பெரிதும் ஆச்சரியமுமான வேறொரு அடையாளமாகிய ஏழு கடைசி வாதைகளையுடைய

ஏழு

ஏழு தூதரைக் கண்டேன்; ஏனெனில் அதுகளால் பராபரனுடைய கோபம் முடிந்தது.

௨. நான் * அக்கினி கலந்த கண்ணாடிக் கடலைப் போலொன்றைக் கண்டேன்; மிருகத்துக்கும் அதின் சுரூபத்துக்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்துக்கும் மேலாக ஜெயங்கொண்டவர்கள் கண்ணாடிக் கடலண்டையிலே நின்று பராபரனுடைய சுரமண்டலங்களைப் பிடித்துக்கொண்டு நிற்கக் கண்டேன். * ௪: ௬.

௩. அவர்கள் பராபரனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியின் பாட்டையும் பாடி: சர்வவல்லமையுள்ள பராபரனாகிய கர்த்தாவே! உம்முடைய கிரியைகள் பெரிதும் ஆச்சரியமுமானதுகள்; பரிசுத்தருடைய ராசாவே! உம்முடைய வழிகள் நீதியும் சத்தியமுமானதுகள்.
* ௨. மோ. ௰௫: ௧. ௱.

௪. * கர்த்தாவே! ஆர் உமக்குப் பயப்படாமலும் உம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருப்பான்? ஏனெனில் தேவரீர் ஒருவரே பரிசுத்தமுள்ளவர்; எல்லாச் சாதிகளும் வந்து உமக்கு முன்பாகப் பணிவார்கள்; அதேதென்றால் உம்முடைய நீதித்தீர்ப்புகள் வெளியரங்கமாச்சுதென்பார்கள். * யெரே. ௰: ௭.

௫. இதுகளுக்குப் பிறபாடு நான் கண்டதாவது: இதோ, * சாட்சியினுடைய கூடாரத்தின் தேவாலயம் திறக்கப்பட்டது; * ௰௧: ௰௯.

௬. ஏழு வாதைகளையுடைய அந்த ஏழு தூதரும் சுத்தமும் மினுக்குமான பட்டுவஸ்திரந் தரித்து மார்புகளிலே பொற்கச்சைகளைக் கட்டிக்கொண்டவர்களாய்த் தேவாலயத்திலிருந்து புறப்பட்டார்கள்.

௭. அப்போது நாலு சீவசெந்துகளில் ஒன்றானது என்றென்றைக்கும் சீவிக்கிற பராபரனுடைய கோபத்தால் நிறைந்த ஏழு பொற்கலசங்களை அவ்வேழு தூதருக்குக் கொடுத்தது.

௮. * பராபரனுடைய மகிமையினாலேயும் அவருடைய வல்லமையினாலேயும் தேவாலயம் புகையினால் நிறைந்தது; ஏழு தூதருடைய ஏழு வாதைகளும் முடியுமட்டாக ஒருத்தரும் தேவாலயத்துக்குள்ளே பிரவேசிக்கக் கூடாதிருந்தது. * யெசா. ௬: ௪.

௰௬. அதிகாரம்.

சனப்பிரசங்கங்களுக்குமேலே ஊற்றப்படுகிற
கள ஏழு கோபக்கலசங்களினாலே
உக்கிரமையினாலாக்கினை விதிக்கப்பட்டது.

அப்போது தேவாலயத்திலிருந்து உண்டாகிற ஒரு பெரிய சத்தம் அந்த ஏழு தூதரை நோக்கி: நீங்கள் போய் பராபரனுடைய கோபக்கலசங்களைப் பூமியின்மேலே ஊற்றுங்கோள் என்று சொல்லக் கேட்டேன்.
* ௰௫: ௭.

௨. முதலாந் தூதன் போய் தன் கலசத்திலுள்ளதைப் பூமியின்மேல் ஊற்றினான்; அப்பொழுது *மிருகத்தின் முத்திரையை உடையவர்களும் அதின் சொரூபத்தை வணங்குகிறவர்களுமாகிய மனுஷரில் ††பொல்லாத கொடும்புண் உண்டாச்சுது. *௰௩: ௧௬—௰௭.

†† ௨. மோ. ௯: ௰. ௰௧.

௩. இரண்டாந் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் *சமுத்திரத்திலே ஊற்றினான்; அப்பொழுது அது செத்தவனுடைய இரத்தம்போலாகிச் சமுத்திரத்திலுள்ள ஜீவபிராணியாவுமாண்டது. * ௨. மோ. ௭: ௰௭—௨௧.

௪. மூன்றாந் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆறுகளிலும் நீரூற்றுகளிலும் ஊற்றினான்; அப்பொழுது அவைகள் இரத்தமாச்சுது.

௫. அப்போது ஜலங்களின் தூதன்: *இருக்கிறவரும் இருந்தவருமாயிருக்கிற பரிசுத்தரே, நீர் இப்படி நியாயந்தீர்க்கிறதினாலே நீதியுள்ளவர்.

* ௧: ௪. ௰௧: ௰௭.

௬. ஏனெனில் *பரிசுத்தவான்களுடைய இரத்தத்தையும் தீர்க்கதரிசிகளுடைய இரத்தத்தையும் சிந்தினார்கள்; இரத்தத்தை அவர்களுக்குக் குடிக்கக்கொடுத்தீர்; ஏனெனில் அதற்கு அவர்கள் பாத்திரராயிருக்கிறார்களென்று சொல்லக்கேட்டேன். * ௰௭: ௬.

௭. வேறொருவன் *பலிபீடத்திலிருந்து: ஆமாம் சர்வவல்லமையுள்ள கர்த்தராகிய தேவனே, உம்முடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகளென்று சொல்லக்கேட்டேன். * ௬: ௯. ௰.

௮. நாலாந் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் சூரியனின்மேல் ஊற்றினான்; அப்போது அதினால் மனுஷரைச் சுடுகிறதுக்கு அதுக்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது.

௯. அப்படியே மனுஷர் மகா உஷ்ணத்தினால் தகிக்கப்பட்டு, இந்த வாதைகளின்மேல் அதிகாரமுள்ள தேவனுடைய நாமத்தைத் தூஷணித்து, அவருக்கு மகிமையைச் செலுத்தத்தக்குக் குணப்படாதே போனார்கள்.

௰. ஐந்தாந் தூதன் தன் கலசத்திலுள்ளதை மிருகத்தினுடைய சிங்காசனத்தின்மேல் ஊற்றினான்; அப்போது அதின் ராச்சியம் இருளாய்ப்போச்சுது; அவர்கள் தங்கள் நாவுகளை வருத்தத்தினாலே கடித்துக்கொண்டு,

௰௧. தங்கள் வருத்தங்களினிமித்தமும் தங்கள் பருக்களினிமித்தமும் பரமண்டலத்துடைய தேவனைத் தூஷணித்து, *தங்கள் கிரியைகளை விட்டுக் குணப்படாதே போனார்கள். * ௯: ௨௰. ௨௧.

௰௨. ஆறாந் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஐபிராத் என்கிற பெரிய ஆற்றின்மேல் ஊற்றினான்; அப்போது சூரிய உதயத்திலிருந்து *வரப்போற ராசாக்களுக்கு வழி ஆயத்தமாகும்படிக்கு அதின் தண்ணீர் வற்றிப்போச்சுது. * ௯: ௰௪—௰௬.

௰௩. அப்போது வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கொப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்படக்கண்டேன்.

௰௪. ஏனென்றால் அதுகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகளாயிருந்து, அதுகள் ராசாக்களைச் சேர்த்து, பூமிக்கும் பூச்சக்கரமனைத்துக்கும் மேலான ராசாக்களை * சர்வத்துக்கும் வல்ல பராபரனுடைய பெரிதான அந்த நாளின் யுத்தத்துக்குக் கூட்டிச்சேர்க்க அவர்களண்டைக்குப் புறப்பட்டுப்போகுது. * ௧௯: ௰௯—௰௯.

௰௫. இதோ! * திருடனைப்போலே வருகிறேன்! விழித்துக்கொண்டிருக்கிறவனும்! ** தன் நிருவாணத்தைப் பிறர் காணத்தக்கதாய் நிருவாணியாய் நடவாதபடிக்குத் தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவனும் பாக்கியவான். * மத். ௨௪: ௪௩. ௪௪. ௧. தெச. ௫: ௨. ௩. ** ௩: ௰௮.

௰௬. அவைகள் எபிரேயிலே அர்மகெத்தோனென்னப்பட்ட தலத்திலே கூட்டிச்சேர்த்தது.

௰௭. ஏழாந்தூதன் தன் கலசத்தை ஆகாசத்தில் ஊற்றினான், அப்போ பரமண்டலத்துத் தேவாலயத்திலே சிங்காசனத்திலிருந்து: * ஆயிற்றே என்கிற பெரிய சத்தம் புறப்பட்டுது. * ௨௧: ௬.

௰௮. சத்தங்களும் இடிமுழக்கங்களும் மின்னல்களும் உண்டாயிற்று; * மகா பெரிய அதிர்ச்சியும் உண்டாச்சுது, அப்படிப்பட்டதும் அத்தனை பெரிதுமான பூமியதிர்ச்சி மனுஷர் பூமியின்மேல் இருந்தது முதல் உண்டானதில்லை. * ௰௧: ௰௯. ௮. ௫.

௰௯. அப்போ மகா பட்டணம் மூன்று பங்காய்ப் பிரிந்தது, சாதிகளுடைய பட்டணங்களும் விழுந்தது; மகா பாபிலோனுக்கு * பராபரனுடைய உக்கிர கோபமாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கத்தக்கதாக அது அவருக்கு முன்பாக நினைக்கப்பட்டுது. * ௰௪. ௮—௰.

௨௰. * தீவுகளெல்லாம் அகன்றுபோச்சுது, பருவதங்களும் காணப்படாமற்போச்சுது. * ௬: ௰௪.

௨௧. தாலந்து நிறையான மகா * கல்மழையும் வானத்திலிருந்து மனுஷர்மேல் விழுந்தது, அந்தக் கல்மழையின் வாதையினிமித்தம் மனுஷர் பராபரனைத் தூஷணித்தார்கள், ஏனென்றால் அதின் வாதை மிகவும் பெரியதாயிருந்தது. * ௰௧: ௰௯.

௰௭. அதிகாரம்.

மிருகத்தின்மேலே ஏறியிருக்கிற ஸ்திரீயான
மகா வேசியினுடைய ஆக்கினையும் இ
ன்னும் அதைக்குறித்த வெளிப்படுத்தலும் காண்பி
க்கப்பட்டது.

ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் வந்து, என்னோடே சொன்னதாவது: வா! * திரளான தண்ணீர்களின்மேலே உட்கார்ந்திருக்கிறவளோடே பூமியின் ராசாக்கள் ** வேசித்தனம் பண்ணினார்களே, அவள் வேசித்தன மதுபானத்தால் பூமியின் குடிகளும் வெறிக்கப்பட்டார்களே!
* எரே. ௫௧: ௰௩. ** ௰௮: ௩. ௰௯: ௨.

௨. அந்த மகா வேசியின் ஆக்கினையை உனக்குக் காண்பிக்கிறேனென்று சொல்லி,

௩. ஆவிக்குள் என்னை வனாந்தரத்திலே கொண்டு போனான்; அப்பொழுது தூஷணநாமங்களால் நிறைந்ததுமாய், ஏழுதலைகளையும் பத்துக்கொம்புகளையுமுடைய சிவப்பான மிருகத்தின் மேல் ஒரு ஸ்திரீ ஏறியிருக்கிறதைக் கண்டேன்.

௪. அந்த ஸ்திரீ * இரத்தாம்பரமும் சிகப்பான உடையுந்தரித்து, பொன்னினாலும் இரத்தினங்களாலும் முத்துகளாலும் அலங்கரிக்கப்பட்டு, வேசித்தனத்தின் அருவருப்புகளாலும் அசுத்தத்தாலும் நிறைந்த பொற்பாத்திரத்தைத் தன் கையிலே பிடித்திருந்தாள்.

* ௰௮: ௰௬.

௫. அவள் நெற்றியிலே: வேசிகளுக்கும் பூமியின் அருவருப்புகளுக்கும் தாயாகிய * மகா பாபிலோனென்னும் ** இரகசியமான நாமம் எழுதியிருந்தது.
* ௰௭: ௰௬. தானி. ௫: ௨௭. ** ௨. தெச. ௨: ௭.

௬. அந்த ஸ்திரீ * பரிசுத்தவான்களின் இரத்தத்தாலும் இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தாலும் வெறிகொண்டிருக்கிறதைக் கண்டேன்; அவளைக் கண்டு மிகுதியும் ஆச்சரியப்பட்டேன். * ௰௮: ௨௪.

௭. அப்பொழுது தூதனானவன் என்னோடே சொன்னதாவது: ஏன் ஆச்சரியப்படுகிறாய்; நானந்த ஸ்திரீயினுடையும், அவளைச் சுமந்திருக்கிற ஏழுதலையும் பத்துக் கொம்புமுடையதான மிருகமுடைய இரகசியத்தை உனக்குச் சொல்லுவேன்.

௮. நீ கண்ட மிருகம் முன்னிருந்தது, இப்போ இல்லை; அது அபிஸ் என்னும் * பாதாளத்திலிருந்து ஏறி வந்து, ** அழிவுக்குப் போகப்போகுது. லோகத் தோற்றமுதல் சீவபுஸ்தகத்திலே பேரெழுதப்படாத பூமியின் குடிகள் முந்திமிருகத்தை, அது இருந்ததென்றும், அதுயிருந்தாலும் இப்போ இல்லாததென்றும் பார்த்து, ஆச்சரியப்படுவார்கள்.

* ௰௧: ௭. ** ௰௯: ௨௰.

௯. * ஞானமுள்ள சிந்தை இங்கே தான் ** அந்த ஏழு தலைகள் ஸ்திரீ உட்கார்ந்திருக்கிற ஏழுமலைகளாயிருக்குது. * ௰௩: ௰௮. ** ௰௩: ௧.

௰. ஏழு ராசாக்களுண்டு, ஐந்துபேர் விழுந்தார்கள், ஒருத்தனிருக்கிறான், மற்றவன் இன்னம் வந்ததில்லை; அவன் வரும்போது கொஞ்சக்காலம் இருக்கவேண்டியது.

௰௧. இருந்ததும் இல்லாதிருக்கிறதுமாகிய மிருகம் எட்டாவதும் அவ்வேழிலொன்றுமாயிருந்து, அழிவுக்குள் போகுது.

௰௨. நீ கண்ட * பத்துக்கொம்புகளோவென்றால் இன்னம் ராசரிகம் பெறாதவர்கள், மிருகத்துடனே கூட ஒருமணித்தியாலம் ராசாக்களாக அதிகாரம் பெறப்போறபத்துராசாக்களாயிருக்கிறார்கள்.

* ௰௩: ௧. தானி. ௭. ௨௪.

௰௩. இவர்களுக்கு ஒரே நினைவிருக்குது; தங்கள் வல்லமையையும் அதிகாரத்தையும் மிருகத்துக்குக் கொடுப்பார்கள்.

௰௪. இவர்கள்

௰௪. இவர்கள் ஆட்டுக்குட்டியுடனே யுத்தம்பண்ணுவார்கள். ஆட்டுக்குட்டி அவர்களை ஜெயிக்குமேனென்றால் அது கர்த்தாக்களுக்குக் கர்த்தாவும் ராசாக்களுக்கு ராசாவுமாயிருக்குது; அதோடேகூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களுந் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் விசுவாசமுள்ளவர்களுமாயிருக்கிறார்கள் என்றான்;

* ௰௯: ௰௬.

௰௫. பின்னும் அவன் என்னுடனே சொன்னது: அந்த வேசி உட்கார்ந்திருக்கிறதாகக் கண்டாயே அந்த தண்ணீர்களே அதுகள் சனசதளங்களும் திரள்களுஞ் சாதிகளும் பாஷைகளுமாமே.

௰௬. நீ மிருகத்தின் மேலே கண்ட பத்துக் கொம்புகளுமே, இவர்கள் வேசியைப் பகைத்து அவளைப் பாழும் நிருவாணமுமாக்கி, அவளுடைய மாம்சத்தைத் தின்று, அவளை நெருப்பினால் சுட்டெரித்துப் போடுவார்கள்.

௰௭. ஏனென்றால் தாம் நினைத்ததை அவர்கள் செய்யவும், ஏகநினைவாயிருக்கவும் பராபரனுடைய வாக்குகள் நிறைவேறுமட்டும் தங்கள் ராட்சியத்தை மிருகத்துக்குக் கொடுக்கவும் வேணுமென்று பராபரன் அவர்கள் இருதயங்களிலே கொடுத்தார்.

௰௮. நீ கண்ட ஸ்திரீயானவள் பூமியின் ராசாக்களின்மேலரசாட்சி பண்ணிக்கொண்டிருக்கிற மகா பட்டணமானவள் என்றான்.

௰௮. அதிகாரம்.

மகா வேசியின்மேலே நேரிடும் ஆக்கினையின் பிரஸ்தாபம்.

இதுகளுக்குப்பிறகு மகா அதிகாரமுள்ள வேறொரு தூதனை வானத்திலிருந்திறங்கக் கண்டேன்; அவனுடைய மகிமையினாலே பூமி வெளிச்சமாச்சுது.

௨. அவன் மகா சத்தத்துடனே வலுவாய்க் கூப்பிட்டுச் சொன்னதாவது: * மகா பாபிலோன் விழுந்தது விழுந்தது; ** அது பிசாசுகளின் குடியிருப்புக்குமா அசுத்த ஆவியின் காவலுமாய் அசுத்தமும் அருவருப்புமான சகல பட்சியின் காவலுமாய்ப்போச்சுது.

* ௰௪: ௮. ஏசா. ௨௧: ௯. ** ஏசா. ௰௩: ௨௧. ௨௨. எரே. ௫௰: ௩௯. ௪௰. ௫௰௧: ௩௭.

௩. ஏனென்றால் * அவளுடைய வேசித்தனத்தின் உக்கிரமான மதுபானத்திலே எல்லா சாதிகளுங் குடித்து, பூமியின் ராசாக்களும் அதுடனே வேசித்தனம்பண்ணி, பூமியின் வியாபாரிகள் அதினுடைய போக விசாரத்தின் வலுமையினால் ஐசுவரியவான்களானார்கள் என்றான். * ௰௭: ௧. ௨.

௪. பின்னும் வேறொரு சத்தம் வானத்திலிருந்துண்டாகிறதைக் கேட்டேன்; அது உரைத்ததாவது: * என் சனமே, நீங்கள் அதின் பாவங்களுக்குடந்தைய

காமலும்

காமமும அதின வாதைகளிலொன்றும் பெறாமலுமிருக்கப்
படிக்கு/ அதிலிருந்து புறப்படுங்கோள்.

யெச. ௪௮: ௨௰. யெரே. ௫௧: ௬. ௪௫.

௫. ஏனெனில் * அதின பாவங்கள் வானபரியந்தம் எட்டிச்சேர்ந்துபோச்சுது/ அதின அக்கிரமங்களை பராபரன் நினைவுகூர்ந்தார். * யெரே: ௫௧: ௯.

௬. * அது உங்களுக்குக் கொடுத்ததுபோலே நீங்களும் அதுக்குக் கொடுங்கோள்/ அதின கிரிகைகளின்படி அதுக்கு இரட்டிப்பாகக் கொடுத்து இருங்கோள்/ அது உங்களுக்கு வார்த்த பாத்திரத்திலே அதுக்கு இரட்டிப்பாக வாருங்கோள். * சங். ௱௩௭: ௮.

யெரே. ௫௰: ௰௫. ௨௯.

௭. * எத்தனைக்குத் தன்னை மகிமைப்படுத்தி மோகவிகாரமாயிருந்ததோ/ அத்தனைக்கு வாதையையும் துக்கத்தையும் அதுக்குக் கொடுங்கோள்/ ஏனெனில் * * தன்னிருதயத்துக்குள்ளே ராசாத்தியாய் உட்கார்ந்திருக்கிறேன் நான் வெதவையல்ல/ நான் துக்கங் காணுவதில்லையென்கிறது. * யெசா. ௪௭: ௭—௫. * *

யெசா. ௪௭: ௭—௰.

௮. இதினிமித்தியம் ஒரேநாளிலே அதின வாதைகளாகிய சாவும் துக்கமும் பஞ்சமும் வந்து/ அது * அக்கினியாலே சுட்டெரிக்கப்படும். ஏனெனில் அதைத் தாயந்தீர்க்கிற பராபரனாகிய கர்த்தர் பெலமுள்ளவர்.

* ௰௭: ௰௬.

௯. * அதோடே வேசித்தனம்பண்ணி மோகவிகாரமாய் வாழ்ந்த பூமியின் ராசாக்கள் அது வேகிற புகையைக் காணும்போது அதுக்காக அழுது அதின்மேல் புலம்பி/ * ௰௭: ௧.

௰. அதின வாதையின் பயத்தினாலே தூரத்திலே நின்று ஐயோ ஐயோ மகாப்பட்டணமாகிய பாபிலோனே/ வல்லமையான பட்டணமே/ ஒருமணிநேரத்திலே உனக்கு ஆக்கினை வந்ததே என்பார்கள்.

௰௧. பூமியின் வியாபாரிகளும் அழுது/ தங்கள் சரக்குகளாகிய பொன்னும் வெள்ளியும் ரத்தினமும் முத்தும்/ உயர்ந்தவிலைப்பட்டுவையும் ரத்தாம்பரமும் பட்டும் சிகப்பாடையும்/

௰௨. சகல வாசினைக்கட்டையும் தந்தத்தாலுண்டானதுகளும்/ விலையுயர்ந்த மரமும் வெண்கலமும் இரும்பும் வெண்கல் ஆகிய சகலவித தட்டுமுட்டுகளும்/

௰௩. சுருவாப்பட்டையும் சுகந்தங்களும் சுகந்த தயிலமும் தூபவர்க்கமும்/ திராட்சரசமும் எண்ணெயும் மெல்லிய மாவும் கோதுமையும்/ மிருகசீவன்களும் ஆடுகளும் குதிரைகளும் ரதங்களும் அடிமைகளும் மனுசருடைய சீவன்களுமாகிய சரக்குகளை இனியொருவனும் கொள்ளாததினாலே அதுக்காகத் துக்கிப்பார்கள்.

௰௪. உன் ஆத்துமம் இச்சித்த பலன்கள் உன்னைவிட்டு நீங்கிப்போச்சுது/ கொழுத்தவைகளும் சம்பிரமமானது

களும

சீருமானவைகளெல்லாம் உன்னைவிட்டுப் போச்சுது; அதுகளை நீ காணாய்.

௰௫. அதினால் ஐசுவரியவான்களான இதுகளின் வியாபாரிகள் அதின் வாதையின் பயத்தினாலே தூரத்திலே நின்று:

௰௬. ஐயையோ: உயர்ந்த விஸ்திர பட்டுவஸ்திரத்தாம்பரமுஞ் சிகப்பாடையுந் தரித்து, பொன்னினாலும் இரத்தினங்களினாலும் முத்துகளினாலும் மினுக்கிக் கொண்டிருந்த மகா பட்டணமே, ஏகநேரத்திலே இவ்வளவு ஐசுவரியம் பாழாய்ப் போச்சுதே யென்று அழுது துக்கப்படுவார்கள்.

௰௭. * சகல கப்பல் எஜமான்களும் கப்பல்களிலே வருகிற கூட்டமும் மாலுமிகளும் கப்பலோட்டுகிறவர்கள் யாவரும் சமுத்திரத்திலே தொழில் பண்ணுகிற யாவரும் தூரத்திலே நின்று, * எசே. ௨௭: ௨௯—௩௬.

௰௮. அதின் அக்கினியின் புகையைப் பார்த்து: இந்த மகா நகரத்துக்குச் சமமான பட்டணம் எது என்று சத்தமிட்டு,

௰௯. தங்கள் தலைகள்மேல் புழுதியைப் போட்டுக் கொண்டு: ஐயையோ: மகா பட்டணமே; சமுத்திரத்திலே கப்பல்களையுடையவர்களெல்லாம் அதின் உச்சிதத்தினாலே ஐசுவரியவான்களானார்களே; ஏகநேரத்திலே அது பாழாய்ப் போச்சுதே யென்று அழுது துக்கப்படுவார்கள்.

௨௰. * வானமே! பரிசுத்த அப்போஸ்தலரே! தீர்க்கதரிசிகளே! அதைக் குறித்து மகிழுங்கள்; ஏனெனில் உங்களுக்காகத் தேவன் அதினிடத்தில் * தீர்க்கவாக்கை நிறைவேற்றினார். * ஏசா. ௪௪: ௨௩.

௨௰௧. அப்பொழுது ஒரு பலவானான தூதன் பெரிய ஏந்திரக்கல்லைப் போலொரு கல்லை எடுத்து: * சமுத்திரத்திலே எறிந்து, இப்படியே பாபிலோனென்னும் பெரிய பட்டணம் வேகமாய்த் தள்ளுண்டு, இனி காணப்படாமற் போம்.

* யெரே. ௫௧: ௬௩. ௬௪.

௨௰௨. இனி சுரமண்டலக்காரர் கீதவாத்தியக்காரர் நாகசுரக்காரர் எக்காளக்காரருடைய சத்தம் உன்னிலே கேட்கப்படுவதில்லை; இனி எந்தத் தொழிலாளியும் உன்னிலே காணப்படுவதில்லை; இனி எந்திரத்தின் சத்தம் உன்னிலே கேட்கப்படுவதில்லை.

௨௰௩. இனி விளக்கு வெளிச்சம் உன்னிலே பிரகாசிப்பதில்லை; இனி மணவாளன் மணவாட்டியினுடைய சத்தம் உன்னிலே கேட்கப்படுவதில்லை; ஏனெனில் பூமியின் பெரியோர்கள் உன்னுடைய வியாபாரிகளாயிருந்தார்கள்; உன் சூனியத்தினால் எல்லா ஜாதிகளும் மோசம் போனார்கள்.

௨௰௪. * தீர்க்கதரிசிகளும் பரிசுத்தவான்களும் ரத்தமும் பூமியின்மேல் கொலையுண்டவர்களெல்லாருடைய ரத்தமும் அதுகளினிடத்திலே கண்டுபிடிக்கப்பட்டதென்றான். * யோவா: ௯.

௰௯. அதி

௰௯. அதிகாரம்.

மகா வேசியின்மேலே [illegible] பராபரனை [illegible].

இதற்குப்பிறபாடு * வானத்திலே திரளான கூட்டமாகிய ஜனங்கள் சத்தமாக ஏகசத்தத்தைக் கேட்டேன்; அவர்கள் சொன்னதாவது: ** அல்லேலூயா; [illegible] ஜெயமும் மகிமையும் கனமும் வல்லமையும் நம்முடைய பராபரனுக்கு உண்டாவதாக.

* ௰௮: ௨௰. ** ௰௧: ௰௫—௰௮.

௨. ஏனெனில் தன் வேசித்தனத்தினாலே பூமியைக் கெடுத்த மகா வேசிக்கு அவர் நியாயத்தீர்ப்புச் செய்து, தம்முடைய ஊழியக்காரருடைய இரத்தத்துக்காக அவளைப் பழிவாங்கினபடியினாலே; * அவருடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமுள்ளதுகளாயிருக்கிறது. * ௰௬: ௭.

௩. மறுபடியும் அல்லேலூயா; * அதினுடைய புகை சதாகாலங்களிலும் எழும்புகிறதென்றார்கள். * ௰௪: ௰௧.

௪. * இருபத்துநாலு மூப்பரும் நாலு ஜீவன்களும் வீழ்ந்து: ஆமென்! அல்லேலூயா என்று சொல்லி, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்திருக்கிற பராபரனைப் பணிந்துகொண்டார்கள். * ௪: ௪. ௰.

௫. பின்னையும்: நம்முடைய பராபரனுடைய அடியார்களே, அவருக்குப் பயப்படுகிற சிறியவர்களும் பெரியவர்களுமாகிய நீங்களெல்லாரும் அவரைத் துதியுங்களென்று ஒரு சத்தம் சிங்காசனத்திலிருந்து புறப்பட்டது.

௬. அப்பொழுது திரளான சனங்களின் சத்தமாகவும், திரளான தண்ணீர்களின் இரைச்சலாகவும், பெலத்த இடிமுழக்கமாகவும்: அல்லேலூயா, ஏனெனில் [illegible] சர்வவல்லபராபரனாகிய கர்த்தர் * ராச்சியம்பண்ணினார். * ௰௧: ௰௭.

௭. நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்கு மகிமையைச் செலுத்தக்கடவோம்; ஏனெனில் ஆட்டுக்குட்டியினுடைய கலியாணம் வந்தது, * அவருடைய மனைவி தன்னைச் சிங்காரம்பண்ணினாள் என்று [illegible] சத்தத்தைக் கேட்டேன்.

* சங். ௯௭: ௧—௰௬.

௮. சுத்தமும் மகிமையுமான உயர்ந்த மெல்லிய வஸ்திரத்தைத் தரித்துக்கொள்ளும்படி அவளுக்குக் கொடுக்கப்பட்டது. அந்த உயர்ந்த மெல்லிய வஸ்திரம் * பரிசுத்தவான்களுடைய நீதிகள். * ஏசா. ௬௧: ௰.

௯. பின்னும் அவன் என்னுடனே: ஆட்டுக்குட்டியினுடைய கலியாணவிருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்களென்று எழுது என்றான். பின்னையும் என்னுடனே: * இவைகள் பராபரனுடைய சத்தியமான வசனங்களென்று சொன்னான். * ௨௧: ௫.

௰. அப்பொழுது * அவனைப் பணிந்துகொள்ள அவன் பாதங்களின் முன்பாக விழுந்தேன். அதற்கு அவன் என்னு

டனே

டேன்: அதைச்செய்யாதபடிக்குப்பார்; நானுன்னோடும் இயேசுவின் சாட்சியையுடைய உன் சகோதரரோடும் ஒருத்த ஊழியக்காரனாயிருக்கிறேன்; பராபரனைப் பணிந்துகொள்; ஏனென்றால் இயேசுவின் சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்குதென்றான். * உஉ: ௯. ௰.

ம்ருகத்தின் மேலுங் கள்ளத் தீர்க்கதேரிசியின் மேலும் ஜெயங்கொண்டதுக்கணம்.

௰௧. பின்னையும் வானந் திறந்திருக்கிறதைக் கண்டேன்; இதோ * ஒரு வெண் குதிரையிருந்தது; அதின் மேலிருந்தவர் ** உண்மையுஞ் சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர்; அவர் நீதியாய்க் குற்றந்தீர்த்து யுத்தம் பண்ணுகிறார். * ௭: உ ** ௧: ரு ௩: ௰௪.

௰௨. * அவருடைய கண்களோ வெரிகிற அக்கினித் தொழுந்து போலவும்; அவர் சிரசின் மேல் அநேக முடிகளுமிருந்தது; எழுதப்பட்ட ஒரு நாமம் அவருக்கிருந்தது; அதை அவர் மாத்திரமேயொழிய பின்னை ஒருத்தருமறிந்ததில்லை. * ௧: ௰௪.

௰௩. அவர் * இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரந் தரித்திருந்தார். அவருடைய நாமம் ** பராபரனுடைய வாக்குத்தன்னப்படும். * யெசா. ௬௩: ௩—௬. ** யோவ. ௧: ௧.

௰௪. * வானத்திலுள்ள சேனைகள் வெண்மையுஞ் சுத்தமுமான உயர்ந்த விலைப்பிடைவை தரித்துக்கொண்டவர்களாய் வெண் குதிரைகளின் மேலிருந்து அவரைப் பின்சென்றது. * ௰௭: ௰௪.

௰௫. * அவருடைய வாயிலிருந்து கூர்மையான ஒரு பட்டயம் அவர் அதினாலே சாதிகளை வெட்டத்தக்கதாக புறப்படுகுது; ** அவர் இருப்புக் கோலால் அவர்களை ஆளுவார்; அவர் சருவத்துக்கும் வல்ல பராபரனுடைய உக்கிரமுங் கோபமுமென்கிற மதுபான ஆலையை மிதிக்கிறார். * ௧: ௰௬. உ. தெச. உ: ௮. ** சங்கீ. உ: ௯.

௰௬. * இராசாதிராசாவுங் கர்த்தாதிகர்த்தருமென்னும் எழுதப்பட்ட நாமம் அவருடைய வஸ்திரத்தின் மேலும் தொடையின் மேலும் அவருக்கிருந்தது. * ௰௭: ௰௪.

௰௭. அப்போ ஒரு தூதன் சூரியனுக்குள் நிற்கக்கண்டேன்; அவனும் வானத்தில் பறக்கிற சகல பட்சிகளைப் பார்த்து:

௰௮. * நீங்கள் இராசாக்களுடைய மாம்சங்களையுஞ் சேனைத்தலைவருடைய மாம்சங்களையும் பெலவான்களுடைய மாம்சங்களையுங் குதிரைகளின் மாம்சங்களையும் அதுகள் மேலிருக்கிறவர்களின் மாம்சங்களையும் தன்னிச்சைக்காரர் அடிமைகளாகிய சிறியோர் பெரியோருமாகிய எல்லாருடைய மாம்சங்களையுந் தின்னக்குக் சேருங்கள்; மகா பராபரனுடைய விருந்துக்கு வந்து கூடுங்கோளென்று மகா சத்தமாய்க் கூப்பிட்டான். * எசே. ௩௯: ௰௭—௨௰.

௰௯. பின்பு ம்ருகமும் பூமியின் இராசாக்களும் அவர்கள் சேனைகளும் குதிரையின் மேலிருக்கிறவரோடும்

அவருடையசேனையோடும யுத்தம்பண்ணும்படிக்கு கூடிக்கொண்டுவந்திருக்கக்கண்டேன.

உய. அதலால மிருகமும அதின்முன்னாக அற்புதங்களைச்செய்து அதின முத்திரையை உடையவர்களையும அதின சுருபத்தைப் பணிந்தவர்களையும * மோசம்போக்கின ** கள்ளத்தீர்க்கதரிசியும பிடிபட்டு இவர்களிருவரும உயிரோடே கெந்தகமாய் எரிகிற அக்கினிக்கடலிலே தள்ளுண்டுபோனார்கள். * யங: க—ய. ** யங. யக. மு.

உக. மற்றவர்களோவென்றால குதிரையின்மேலிருந்தவருடைய வாயிலிருந்து புறப்பட்ட பட்டயத்தால கொல்லப்பட்டார்கள்; எல்லாப்பட்சிகளும அவர்களுடைய மாம்சங்களினாலே திருப்தியடைந்தது.

உய. அதிகாரம்.

வலுசர்ப்பத்தின மேலுண்டாகும சிக்ஷணைகள்.

பாதாளத்தின * திறவுகோலையும பெரியசங்கிலியையும கையிலே பிடித்துக்கொண்ட ஒருதூதன வானத்திலிருந்து இறங்கக்கண்டேன. * க: யஅ.

உ. அவன * பிசாசுஞ்சாத்தானுமான பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தைப்பிடித்து அதை ஆயிரமவருஷமளவுங் கட்டிவைத்து, * யஉ: கூ. மு.

ங. அந்த ஆயிரம வருஷம் நிறைவேறுமட்டுக்கும ஜாதிகளை மோசமபோக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளி அடைத்து, அதின்மேல முத்திரைபோட்டான; அதுக்குப்பிற்பாடு அதுகொஞ்சக்காலம விடுதலையாகவேண்டியது.

ச. நான ஆசனங்களைக்கண்டேன; அவைகளின்மேல உட்கார்ந்தார்கள; அவர்களுக்கு நியாயத்தீர்ப்புக்கொடுக்கப்பட்டது; யேசுவினுடைய சாட்சியினிமித்தமும பராபரனுடைய வசனத்தினிமித்தமும சிரச்சேதம்பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும மிருகத்தையாகிலும அதின சுருபத்தையாகிலும பணியாமலும தங்கள நெற்றியிலாகிலும கைகளிலாகிலும அதின முத்திரையை உடையவர்களாக குறிக்கொள்ளாமலுமிருந்தவர்களையுங்கண்டேன; அவர்கள பிழைத்து கிறிஸ்துவோடேகூட ஆயிரமவருஷம ராசரீகம பண்ணினார்கள.

ரு. மரித்தமற்றவர்களோவென்றால ஆயிரமவருஷம நிறைவேறுமட்டாகத்திரும்ப உயிர் அடைந்ததில்லை; இது முதலாம உயிர்த்தெழுந்தல.

சா. முதலாம உயிர்த்தெழுந்தலுக்குப் பங்குள்ளவன பாக்கியவானும பரிசுத்தவானுமாயிருக்கிறான; இவர்கள்மேல * இரண்டாம மரணத்துக்கு அதிகாரமில்லை; இவர்கள ** பராபரனுக்குங் கிறிஸ்துவுக்கும முன்பாக ஆசாரியராயிருந்து அவரோடேகூட ஆயிரம வருஷம ராசரீகம்பண்ணுவார்கள.

* ௨: யக. ** ரு: ய.

எ. ஆயிரம

௭. ஆயிரம் வருஷம் நிறைவேறின போதோவென்றால், சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி

௮. பூமியின் நாலு திக்கிலுமுள்ள சாதிகளாகிய* கோகுவையும் மாகோகுவையும் மோசம் போக்கும்படிக்குப் புறப்பட்டு, அவர்களை யுத்தத்துக்குக் கூட்டிச் சேர்க்கிறதற்குப் புறப்படும்; அவர்களுடைய தொகை சமுத்திர மணலத்தனையாயிருக்கும். * எசேக். ௩௮: ௩௯: அதி.

௯. அவர்கள் பூமியினுடைய விசாலத்தின் மீதிலேறி வந்து, பரிசுத்தவான்களுடைய பாளயத்தையும் பிரியமான பட்டணத்தையும் வளைந்து கொண்டார்கள். ஆனாலும் பராபரனாலே வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப் போட்டுது.

௰. அவர்களை மோசம் போக்கின பிசாசோவென்றால், *மிருகமுங் கள்ளத் தீர்க்கதரிசியுமிருக்கிற அக்கினியுங் கெந்தகமுமான கடலிலே தள்ளுண்டுது. அங்கே **என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ராவும் பகலும் வாதிக்கப்படும். * ௰௯: ௨௰. ** ௰௪: ௰. ௰௧.

மரித்தோருக்காயத் தீர்வை.

௰௧. நான் பெரிய வெள்ளை ஆசனத்தையும் அதின் மேலே உட்கார்ந்தவரையுங் கண்டேன்; அவருடைய முகப்பார்வையாலே பூமியும் வானமும் விலகியோடி, அதுகளுக்கிடங் காணப்படாதே போச்சுது.

௰௨. மரித்தோராகிய சிறியோர் பெரியோரையும் பராபரனுக்கு முன்பாக நிற்கவுங் கண்டேன். அப்போது* புஸ்தகங்கள் திறக்கப்பட்டுது; ** சீவனுடைய புஸ்தகமாகிய வேறே புஸ்தகமுந் திறக்கப்பட்டுது; அப்போ மரித்தோர் புஸ்தகங்களில் எழுதப்பட்டதுகளாலே தங்கள் கிரிகைகளின்படியே நியாயந் தீர்க்கப்பட்டார்கள். * தானி. ௭: ௯, ௰. ** ௩: ௫.

௰௩. சமுத்திரந் தன்னிலுள்ள மரித்தோரைத் தந்தது; மரணமும் பாதாளமுந் தங்களிலுள்ள மரித்தோரைத் தந்தது; அவரவர் தங்கள் கிரிகைகளின்படியே நியாயந் தீர்க்கப்பட்டார்கள்.

௰௪. மரணமும் பாதாளமும் அக்கினிக் கடலிலே தள்ளுண்டுது. இது இரண்டாம் மரணமாயிருக்குது.

௰௫. எவனுஞ் சீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதே போனால் அக்கினிக் கடலிலே தள்ளுண்டான்.

௨௧. அதிகாரம்.

யோவானுக்குக் காண்பிக்கப்பட்ட புது யெருசலேமின் தெரிசனை.

நான் * புது வானத்தையும் புது பூமியையுங் கண்டேன்; ஏனென்றால் முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போச்சுது; சமுத்திரமுமினி இல்லை. ௨. பேது. ௩: ௰௩.
* யெச. ௬௫: ௰௭.

௨. யோவானாகிய நான் புருஷனுக்கலங்கரிக்கப்பட்ட மணவாளியைப்போல ஆயத்தமான * புதிய எருசலேமென்கிற பரிசுத்த பட்டணம் பராபரனிடத்திலிருந்து வானத்திலிருந்திறங்குகிறதைக் கண்டேன். * ௩: ௰௨.

௩. சிங்காசனத்திலிருந்துண்டான ஒரு பெரிய சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ * மனுஷரிடத்திலே பராபரனுடைய கூடாரம்; அவர்களிடத்திலே வாசமாயிருப்பார்; அவர்கள் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள்; பராபரன் தாமே அவர்களோடே கூடவிருந்து அவர்களுடைய பராபரனுமாயிருப்பார். * எசே. ௩௭: ௨௭. சக: ௩௫.

௪. * சகலமான கண்ணீரையும் பராபரன் அவர்கள் கண்களிலே துடைப்பார்; இனி மரணமுமில்லை; இனித் துக்கமாகிலும் அலறுதலாகிலும் வருத்தமாகிலுமிராது; முந்தினவைகள் ஒழிந்துபோய் விட்டுப்போனவைகளாகுது. * ௭: ௰௭. ஏசா. ௨௫: ௮.

௫. சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவர்: இதோ எல்லாவற்றையும் புதிதாக்குகிறேன் என்றார். அவர் என்னுடனே: இந்த * வசனங்கள் சத்தியமும் உண்மையுமானதுகளென்றெழுது என்றார்.

* ௰௯: ௯. ௨௨: ௬.

௬. பின்னும் அவர் என்னை நோக்கி: ஆயிற்று; * நான் அல்பாவும் ஒமேகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன்; ** தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீருள்ள ஊற்றிலே இலவசமாகக் கொடுப்பேன்.
* ௰௬: ௰௭. ** ௨௨: ௰௭. ஏசா. ௫௫: ௧.

௭. ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரிப்பான்; * நான் அவனுக்குப் பராபரனாயிருப்பேன், அவன் எனக்குக் குமாரனாயிருப்பான். * சகா. ௮: ௮.

௮. * பயமுள்ளவர்களுக்கும் அவிசுவாசிகளுக்கும் அருவருப்பானவர்களுக்கும் கொலைபாதகருக்கும் வேசிக்கள்ளருக்கும் சூனியக்காரருக்கும் விக்கிரகாராதனைக்காரருக்கும் பொய்யர் அனைவருக்கும் ** இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே அவர்களுடைய பங்கு கிடைக்குமென்றார்.
* ௨௨: ௰௫. ௧. கொ. ௬: ௯. ௰. ** ௰௯: ௨௰.

௯. பின்பு கடைசியான ஏழு வாதைகளால் நிறைந்த ஏழு கலசங்களையுடைய ஏழு தூதர்களில் ஒருவன் என்னிடத்தில் வந்து: வா, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிப்பேனென்று என்னோடே சொல்லி, * ௰௬: ௭.

௰. பெரிதும் உயரமுமான ஒரு மலையின்மேல் என்னை ஆவிக்குள்ளாகக் கொண்டுபோய், பராபரனிடத்திலிருந்து வானத்திலிருந்திறங்கின பராபரனுடைய மகிமையையுடைய அந்த நகரமாகிய பரிசுத்த எருசலேமென்கிற மகா பட்டணத்தை எனக்குக் காண்பித்தான்.

௰௧. அதின் வெளிச்சம் பளிங்கொளிவுள்ள ஸ்படிகத்தைப்போல மிகவும் விலையேறப்பெற்ற * இரத்தினக் கல்லுக்கொப்பாயிருந்தது. * ௨௨: ௫.

யஉ. அது பெரிதும் உயரமுமான மதிலையும் பன்னிரண்டு வாசல்களையும் வாசல்களின்மேல் பன்னிரண்டு தூதர்களையும் இஸ்றவேல் புத்திரருடைய பன்னிரண்டு கோத்திரங்களுடைய நாமங்கள் அவைகளின்மேல் எழுதப்பட்டிருக்கிறதையுமுடையதாயிருந்தது. * எசே. சஅ: ஙக——ஙச.

யங. கிழக்கே மூன்று வாசல், வடக்கே மூன்று வாசல், தெற்கே மூன்று வாசல், மேற்கே மூன்று வாசலுமிருந்தது.

யச. பட்டணத்து மதிலுக்கு * பன்னிரண்டு அஸ்திவாரங்களுண்டு, அவைகளின்மேல் ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலருடைய நாமங்களுமிருந்தது.

* எபே. உ: உய.

யரு. என்னுடனே பேசினவன் * பட்டணத்தையும் அதின் வாசல்களையும் அதின் மதிலையும் அளக்கும்படிக்கு ஒரு பொற்கோலைப்பிடித்திருந்தான்.

* சகரி. உ: க. உ.

யசா. அந்தப்பட்டணம் சதுரமாயிருக்கிறது, அதின் அகலமெத்தனையோ நீளமுமத்தனையே. அவன் அந்தக்கோலினாலே பட்டணத்தைப் பன்னீராயிரம் ஸ்தாதியாக அளந்தான், அதின் நீளமும் அகலமும் உயரமும் சரியாயிருக்கிறது.

யஎ. தூதனுக்கிருந்த மனுஷனுடைய அளவின்படியே அவன் அதின் மதிலை நூற்றுநாற்பத்துநாலு முழமாக அளந்தான்.

யஅ. அதின் மதிலுடைய கட்டிடம் யஸ்பியும் பட்டணந் தெளிவுள்ள கண்ணாடிக்கொப்பாய் சுத்தப்பொன்னுமாயிருக்குது.

யகூ. பட்டணமதிலின் அஸ்திவாரங்களோ * சகல ரத்தினங்களினாலே யலங்கரிக்கப்பட்டிருந்தது. முதல் அஸ்திவாரம் யஸ்பி, இரண்டாவது நீலக்கல், மூன்றாவது சல்கெதோன், நாலாவது மரகதம்.

* யெச. ருச: யக. யஉ.

உய. ஐந்தாவது கோமேதகம், ஆறாவது சேமையு, ஏழாவது கல்கெதோனிசு, எட்டாவது பெரில்லு, ஒன்பதாவது புஷ்பராகம், பத்தாவது வைடூரியம், பதினொராவது பதுமராகம், பன்னிரண்டாவது அமேதிஸ்து.

உக. பன்னிரண்டு வாசல்களும் பன்னிரண்டு முத்துகளாயிருந்தது, வாசல்களில் ஒவ்வொன்றும் ஒரே முத்தாயிருந்தது, பட்டணத்து வீதியானது தெளிவுள்ள கண்ணாடியைப்போல சுத்தப்பொன்னாயிருந்தது.

உஉ. அதிலே தேவாலயத்தைக் கண்டேனில்லை, ஏனென்றால் சர்வத்துக்கும் வல்லவராகிய கர்த்தராகிய தேவனும் ஆட்டுக்குட்டியுமதற்கு ஆலயம்.

உங. * பட்டணத்துக்கு பிரகாசிக்க சூரியனும் சந்திரனும் அதுக்கு வேண்டுவதில்லை, தேவனுடைய மகிமை அதைப் பிரகாசமாக்கினது, ஆட்டுக்குட்டியானவர் அதுக்கு விளக்கு. * உஉ: ரு. யெசா. சய: யகூ. உய.

௨௪. * ரெக்ஷிக்கப்படுகிற சாதிகள் அதின் வெளிச்சத்தில் நடப்பார்கள், பூமியினுடைய ராசாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள் கொண்டுவருகிறார்கள். * சங். ௭௨: ௰௧. யெசா. ௬௰: ௩.

௨௫. * அதின் வாசல்கள் நாள்தோறும் பூட்டப்படாதிருக்கும்; அங்கே ** ராவில்லை.

* யெசா. ௬௰: ௰௧. ** ௨௨: ௫.

௨௬. சாதிகளுடைய மகிமையையும் கனத்தையும் அதற்குள் கொண்டுவருவார்கள்.

௨௭. தீட்டுப்படுத்துகிறதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதற்குள் பிரவேசியாமல், ஆட்டுக்குட்டியின் * சீவ புஸ்தகத்திலெழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதற்குள் பிரவேசிப்பார்கள். * ௩: ௫. ௨௰: ௰௨.

௨௨. அதிகாரம்.

அப்பாலும் புது யெருசலேமின் தெரிசனை.

பின்னையும், * பராபரனும் ஆட்டுக்குட்டியுமிருக்கக்கும் ஆசனத்திலிருந்து புறப்பட்டுவருகிற, பளிங்குப் போலத் துலக்கமான சீவத்தண்ணீரின் சுத்தநதியை எனக்குக் காண்பித்தான். * எசே. ௪௭: ௧—௰௨.

௨. அதின் நடுவீதியிலும் நதியின் இருகரையிலும், பன்னிரண்டு விதக்கனிகளைத் தந்து, மாதந்தோறுந் தன் கனியைக் கொடுக்கிற * சீவவிருட்சமிருந்தது, அந்த விருட்சத்தின் இலைகள் சாதிகள் ஆரோக்கியமடைவதற்கானதுகள். * ௨: ௭. ௧. மோ. ௨: ௯.

௩. இனிச் சாபமுமில்லை, பராபரனும் ஆட்டுக்குட்டியுமிருக்கும் ஆசனம் அதிலேயிருக்கும்.

௪. அவருடைய ஊழியக்காரர் அவருக்கு ஆராதனை செய்து, * அவருடைய முகத்தைத் தெரிசிப்பார்கள், ** அவருடைய நாமம் அவர்கள் நெற்றிகளிலிருக்கும். * மத். ௫: ௮. ** ௩: ௰௨. ௰௪: ௧.

௫. * அங்கே ராவில்லை, அவர்களுக்கு விளக்குக்கும் சூரியனுடைய வெளிச்சமுந் தேவையில்லை, ஏனென்றால் பராபரனாகிய கர்த்தர் அவர்களை வெளிச்சமாக்குவார், ** என்றென்றைக்கும் முடியாச் சதாகாலங்களிலும் ராசரீகம் பண்ணுவார்கள். * ௨௧: ௨௩.

௨௫. ** தானி. ௭: ௨௭.

பொஸ்தகத்தின் முடிவு.

௬. அவர் என்னுடனே சொன்னதாவது: * இந்த வசனங்கள் உண்மையுஞ் சத்தியமுமானதுகள், ** சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியதுகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்படிக்கு, பரிசுத்த தீர்க்கதரிசிகளுடைய பராபரனாகிய கர்த்தர் தம்முடைய தூதனையனுப்பினார். * ௨௧: ௫. ** ௧: ௧.

௭. இதோ

எ. இதோ சீக்கிரமாய் வருகிறேன்; இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசனவாக்கியங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவானென்றார். ௩: ௩.

அ. யோவானாகிய நான் இவைகளைக் கண்டு கேட்டேன்; நான் கேட்டுக் கண்டபோது இவைகளை எனக்குக் காண்பித்த தூதனுடைய பாதங்களின் முன்பாகப் பணியவிழுந்தேன். * ௰௯: ௰.

கூ. அதற்கு அவன் என்னுடனே: அதைச்செய்யாதே; பாத்திரனான உன் சகோதரராகிய தீர்க்கதரிசிகளோடும் இந்தப்புஸ்தகத்திலுள்ள வசனங்களைக் கைக்கொள்ளுகிறவர்களோடும் நான் உடனூழியக்காரனாயிருக்கிறேன்; பராபரனைப் பணிந்துகொள்ளென்றான்.

௰. அவர் என்னுடனே சொன்னதாவது: இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசனவாக்கியங்களை முத்திரைபோடாதே; ஏனென்றால் * காலஞ்சமீபமாயிருக்கிறது. * ௧: ௩.

௰௧. * அநியாயஞ் செய்கிறவன் இன்னம் அநியாயஞ் செய்யட்டும்; அழுக்காயிருக்கிறவன் இன்னம் அழுக்காகட்டும்; * * நீதியுள்ளவன் இன்னம் நீதியாகட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னம் பரிசுத்தமாகட்டும்.

* ௨. தீமோ. ௩: ௰௩. * * ௨. கொரி. எ: ௧.

௰௨. இதோ சீக்கிரமாய் வருகிறேன்; * அவனவன் கிரியைக்குத்தக்கபடி அவனவனுக்குச் சம்பளங் கொடுக்க நம்முடைய பலன் நம்மோடேகூட வருகிறது. * ஏசா. ௪௦: ௰.

௰௩. * நான் அல்பாவும் ஓமேகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேனென்றார்.

* ௧: அ. ௰௧. ௨௧: ௬.

௰௪. ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரம்பெறுவதற்கும், வாசல்களின் வழியாய் நகரத்தில் பிரவேசிப்பதற்கும், அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்.

௰௫. * நாய்களும் சூனியக்காரரும் வேசிக்கள்ளரும் கொலைபாதகரும் விக்கிரகாராதனைக்காரரும் பொய்யையிச்சித்து நடப்பிக்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள். * ௨௧: அ.

௰௬. இயேசுவாகிய நான் சபைகளுக்காகச் சாட்சியிடும்படிக்கு உங்களிடத்தில் நம்முடைய தூதனை அனுப்பினேன்; * நாம் தாவீதின் வேரும் வம்சமுமாய், * * பிரகாசமுள்ள விடிவெள்ளியுமான நட்சத்திரமுமாயிருக்கிறேனென்றார். * ௫: ௫. * * ௨. பேது. ௧: ௰௯.

௰௭. ஆவியும் மணவாட்டியும்: வாருமென்கிறார்கள். கேட்கிறவனும்: வாருமென்பானாக. * தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கக்கடவான்.

* ௨௧: ௬. யோவா. எ: ௩௭.

௰௮. இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசனவசனங்களைக் கேட்கிறவனுக்கெல்லாம் நான் சாட்சியாய் எச்சரிக்கிறதாவது: யாதொருவன்

அதுகளோடே கூட்டினால், அவன்மேலே பராபரன் இந்தப்புஸ்தகத்திலே எழுதப்பட்ட வாதைகளைக் கூட்டுவார்.

௰௯. யாதொருத்தன் இந்தத் தீர்க்கதரிசனபுஸ்தகத்தின வார்த்தைகளில் நின்று எடுத்துப்போட்டால், பராபரன் ஜீவபுஸ்தகத்திலும் பரிசுத்த பட்டணத்திலும் இந்தப்புஸ்தகத்திலே எழுதப்பட்டதுகளிலும் அவன் பங்குகளை எடுத்துப்போடுவார்.

௨௰. இதுகளைச்சாட்சியக்கவிளம்புகிறவர்: ஆம், சீக்கிரமாய் வருகிறேன் ஆமென் என்கிறார். ஆம், கர்த்தராகிய யேசுவே, வாரும்.

௨௧. நம்முடைக்கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினுடைய கிருபை உங்களனைவரோடுங்கூடயிருப்பதாக.

ஆமென்.

முற்றுமுற்றும்.

ஞாயிறுக்கிழமைகளிலும் மற்ற பண்டிகைநாள்க ளிலும் வாசிக்கப்பட்ட சுவிசேஷமாவதும் நிருபங்களும் [illegible] வசனங்கள்.

கிறிஸ்துவருகையின *Advent.*

௧. ஞாயிறுக்கிழமை. மத். ௨௧: ௧—௯.
ரோ. ௰௩: ௰௧—௰௪.
௨. — — லூக். ௨௧: ௨௫—௩௬.
ரோ. ௰௫: ௪—௰௩.
௩. — — மத். ௰௧: ௨—௰.
௧. கொரி. ௪: ௧—௫.
௪ — — யோவா. ௧: ௰௯—௨௮.
பிலி. ௪: ௪—௭.

கிறிஸ்துவினுடைய பிறப்பின *Kristi Fødsels*

௧. பண்டிகை — லூக். ௨: ௧—௰௪. *1ste Juledag*
தீத்து. ௨: ௰௧—௰௪.
௨: ஸ்தேவானுடைய பண்டிகை. மத். ௨௩: ௩௪. முதல். *2den Juledag*
அப். நட. ௬: ௮.—முதல்.
௭: ௫௪—முதல்.
சுவிசேஷகனாகிய யோவானுடைய பண்டிகை.
யோவா. ௨௧: ௨௰—௨௪.
௧ யோவா. ௧: ௰௪—௰௫.
கிறிஸ்துபிறந்தபின் வருகிற ஞாயிறு. லூக். ௨: ௩௩. ௪௰. *Söndag efter Juul*
கலா. ௪: ௧—௭.

வருஷப்பிறப்பின.

பண்டிகை. — — லூக். ௨: ௨௧. *Nyaars Dag*
கலா. ௩: ௨௩—௨௯.
பின்வருகிற ஞாயிறு. — மத். ௨: ௰௩—௨௩.
௧. பேது. ௪: ௰௨—௰௯.

கிறிஸ்துவினமகிமைவிளங்கின

பண்டிகை — மத். ௨: ௧—௰௨.
ஏசா. ௬௰: ௧—௬.
௧. ஞாயிறு. — லூக் ௨: ௪௨—௫௨.
ரோ. ௰௨: ௧—௬.
௨. — — யோவா. ௨: ௧—௰௧.
ரோ. ௰௨: ௭—௰௬.
௩. — — மத். ௮: ௧—௰௩.
ரோ. ௰௨: ௰௭—௨௧.
௪. — — மத். ௮: ௨௩—௨௭.
ரோ. ௰௩: ௮—௰.
௫. — — மத். ௰௩: ௨௪—௩௰.
கொலோ. ௩: ௰௨—௰௭.
௫௫: மரி பரிசுத்தாக்க [illegible]
பண்டிகை. — — லூக். ௨: ௨௨—௩௨.
மல்கி. ௩: ௧—௪.

கிறிஸ்து வின் மகிமையின் [illegible] பண்டிகையின்

ஞா. ஞாயறு. — — [illegible]

[illegible]

கிறிஸ்து பாடுபட்டதைத் தியானிக்க [illegible]

[illegible]

ஞாய. நாளாக்ரு ஞாயறு. [illegible]

[illegible]

[illegible] — — ஞா. [illegible]

[illegible]

ஞாய. — — [illegible]

ஞா. [illegible]

[illegible]

கிறிஸ்து பாடுபட்டதைத் தியானிக்க [illegible]

க. ஞாயறு. [illegible]

[illegible]

ஞா. [illegible]

[illegible]

உ. — — [illegible]

[illegible]

[illegible]

ங. — — [illegible]

ஞா. [illegible]

[illegible]

ச. — — [illegible]

[illegible]

[illegible]

ரு. — — ஞா. [illegible]

[illegible]

[illegible]

[illegible] மரியாளுக்கு [illegible]

பண்டிகை — ஞா. [illegible]

[illegible]

[illegible]

ஞா. ஞாயறு — — ஞா. [illegible]

[illegible]

[illegible]

[illegible]

பெரிய வியாழக்கிழமை [illegible]

[illegible]

கிறிஸ்து மரித்த

பெரிய வெள்ளிக்கிழமை. [illegible]

[illegible]

[illegible]

[illegible]

பாடுபட்ட சரித்திரம்.

கிறிஸ்து உயிரோடெழுந்த

க. பண்டிகை [illegible]

[illegible]

உ. — — ஞா. [illegible]

[illegible]

ங. நாள் ஞா. [illegible]

[illegible]

கிறி

கிறிஸ்துஉயிரோடெழுந்த பண்டிகைக்குமே
பின்வருகிற

க. நாயறு. — — யோவ. உ௰: ௰௯—௩௧.
க. யோவ. ரு: ச—௰.
உ. — — யோவ. ௰: ௰௧—௰சா.
க. பேது. உ: உக—உரு.
ங. — — யோவ. ௰சா: ௰சா—உங.
க. பேது. உ. ௰௧—உ௰.

வைகாசி மீ ரு யாதுவானதோடேகூடிய பண்டிகைக்கு

பண்டிகைக்கு யேசா. ருரு: சா. எ.
மக. ங: உ—௰.

கிறிஸ்துஉயிர்த்தெழுந்தபின் வருகிற

ச — — மத். உஉ: ௰சா—உ௰.
யோவ. ௰சா: ரு—௰ரு.
௰எக. க: ௰எ—உக.
ரு. — — யோவ. ௰சா: உங—உஅ.
௰எக. க: உஉ—உஎ.

கிறிஸ்துபரமண்டலத்துக்கேறின

பண்டிகை மாற்கு. ௰சா: ௰ச—உ௰.
அப்போஸ். சா: க—௰க.

பின்வருகிறநாயறு. யோவ. ௰ரு: உசா—
௰சா: ச.
க. பேது. ச: எ—௰க.

பரிசுத்தஆவியின

க. பண்டிகை யோவ. ௰ச: உங—ஙக.
அப்போ. உ: க—௰க.
உ. — — யோவ. ங: ௰சா—உக.
அப். ௰: சஉ—சஅ.
ங. நாள — — யோ. ௰: க—௰.
அப். அ: ௰ச—௰எ.

பரிசுத்ததிரித்துவத்தின

பண்டிகை யோவ. ங: க—௰ரு.
வெளி. ௰ச: ஙங—ஙசா.
லூா. ௰சா: ௰௯—ஙக.
க. நாயறு. — — க. யோ. ச: ௰சா—உக.
லூா. ௰ச: ௰சா—உச
உ. — — க. யோ. ங: ௰ங—௰அ.
லூா. ௰ரு: க—௰.
ங. — — க. பேது. ரு: சா ௰க.

ஸ்நானகனாகிய யோவானுடைய

பண்டிகை யேசா. சசா: க—ரு.
லூா. க: ருஎ—அ௰.

திரித்துவத்தின

சா. நாயறு — — லூா. சா: ஙசா—சஉ.
ரோ. அ: ௰அ—உங.

அம: மரியாளானவள் எலிசபேத்தைச்சந்தித்தது

பண்டிகை யேசா. ௰க: க ௰.
லூா. க: ஙகூ ருசா.

திரித்துவத்தின

ரு. — — லூா. ரு: க ௰க.
க. பேது. ங: அ ௰ரு.
சா. — — மத். ரு: உ௰—உசா.
ரோ. சா: ங ௰க.
எ. — — மாற்கு. அ. க கூ.
ரோ. சா: ௰கூ உங.

௮. ஞாயிறு. — — மக. எ: ௰௫. ௨௧.
சிஷ ௪: ௰௨ ௰௪.
௯. — — ஞா. ௪சு: க ௯.
க. ந்கஷ. ௰: சு ௰௩.
௰. — — ஞா. ௯: ௪க ௭௪.
௪. ந்கஷ. ௰௨: க ௰௧.
௰௧. — — ஞா. ௰௪: ௯ ௰௬.
க. ம்கஷ. ௰௫: க ௰.
௰௨. — — மிது. எ: ௩க ௩எ
௨. ந்கஷ. ௩: ௯ ௮.
௰௩. — — ஞா. ௰: ௨௩ ௩எ.
க. ஷ. ௩: ௰௫ ௨௨.
௰௪. — — ஞா. ௰எ: ௰௯ ௰௪.
க. ஷ. ௫: ௰சு ௨௯.
௰௫. — — மக. சு: ௨௯ ௩௪.
கு. ௫: ௨௫ ௯: ௰.
௰௬. — — ஞா. எ: ௰௯ ௰எ.
ஏ. ஷ. ௩: ௰௩ . ௮.
அற. மீனாயேலானக்கு வருடைய
பண்டிகை. ௰௮. ௰௨: ௯ ௰
அஷ. ௰௨: எ ௰௨.
ஸ்ரீஸ்ரீதநுவத்தா
௰எ. ஞாயிறு. — — ஞா. ௰௪: க ௰௧.
ஏஷ. ௪: க சு.
௰௮. — — மகு ௨௨: ௩௯ ௪சு.
௪. ஞெ. ௪: ௯ ௮.
௰௯. — — மக. ௯: க ௮.
ஏஷ. ௪: ௨௨ ௨௮.
௨௰. — — மக. ௨௨: க ௰௪.
ஏஷ. ௫: ௰௫ ௨௧.
சகலஅர்:
பண்டிகை. — — மத. ௫: க ௰௨.
அஷ. எ: க ௰௨.
ஸ்ரீஸ்ரீதநுவத்தா
௨௧. ஞாயிறு. — — யோக. ௯: ௪சு ௫௪.
ஏஷ. சு: ப ௰எ.
௨௨. — — மத. ௰௮: ௨௩ ௩௫.
பிலு. க: ௩ ௰க.
௨௩. — — மக. ௨௨: ௰௫ ௨௨.
பிலு. ௩: ௰எ ௨௧.
௨௪. — — மக. ௯: ௰௮. ௨சு.
கோஷ்டி. க: ௯ ௰௪.
௨௫. — — மக. ௨௪: ௰௫ ௨௮.
க ஷெச. ௪: ௰௩ ௰௮.
௨சு. — — மக. ௨௫: ௩க ௪சு.
௨. ஷ. ௩: ௩ ௰௩.
௨எ. — — மக. ௨௫: க ௰௩.
க. தேச. ௫: ௩ ௰க.
௨. தேச. ௪: ௩ ௰.
௨. ஷ. ௩: ௩ எ.
சேமா. ௩: ௨க ௨௯